நிறம் மாறும் நிலவே

- க்ளோரியா

eBook Published by Penmai.com

www.MyAngadi.com/eBooks

நிறம் மாறும் நிலவே...

எழுத்தாளர்

Gloria – க்ளோரியா

eBook Published by MyAngadi

eBooks are available at
www.MyAngadi.com/ebooks/

கதைக்கு முன் சில வரிகள்: காதல்
யோசிக்க நொடி நேரம் கொடுக்காமல் உள்ளே வந்து... யோசிக்க வைக்காமலே வாழ வைக்கும்... வித்தைக்காரன் கையில் இருக்கும் மந்திரக் கோல் போன்றது... காதல் என்றால் என்ன..? என்று குழந்தைக்கிட்ட கேட்டா கூட, அது நாலு வரியில நறுக்குன்னு கருத்து சொல்லும் காலம் இது... என் கதையின் கேரக்டர்ஸ் என்ன சொல்லுறாங்க என்று பார்ப்போமா...!!

ஜனார்த் : என் உலகம் ஷைலஜா தான்.. அவள் என் சுவாசம் போன்றவள்.. அவளை தக்க வைத்துக் கொள்ள.., எந்த எல்லைக்கும் போவேன்... யாரை கொல்ல வேண்டி வந்தாலும் தயங்காமல் செய்வேன்.. இந்த உணர்வுக்கு பெயர் காதல் என்றால் **'YES I LOVE SHAILAJA...'** என்று மென்மையான காதலை கூட வன்மையாக சொல்பவன்.. உணர்வுகளை வெளிப்படுத்த தெரியாதவன்... கடினமானவன். நெருப்பை போன்றவன்.

ப்ரிதீவ் : ஒரு மனிதனின் நிம்மதியை நிர்ணயம் செய்வது வீடு.. வீட்டில் நிம்மதி இருந்தா தான், எந்த ஒரு காதலும், உறவும் நிலைக்கும்.. காலம் முழுக்க ஒரு பெண்ணால் நிம்மதியை நிலைக்க வைக்க முடிந்தால்.. கண்டிப்பா அந்த பெண் மேல் காதலும் நிலைக்கும்.. அப்படி நிலைக்க வைக்கும் ஒரு பெண் கிடைத்தால்...? **'YES I TRY TO LOVE HER...'** என்று காதலையும், குடும்பத்தையும் முடிச்சுப் போட்டு பார்ப்பவன்.. பிடிவாதக்காரன். நிலத்தின் தன்மை கொண்டவன்.

ஷைலஜா : காதல் அழகானது... ரசிக்க வைப்பது.. முகம் தெரியாத

ஒருவனை மணப்பதை விட, முகம் தெரிந்த ஒருவனை காதலிப்பதில் தவறு என்ன...? ஆனால் காதலில் மனங்கள் ஒன்று படலாம்.. உணர்வுகள் ஒன்று படாது.. உணர்வுகள் காயப்படாத வரை காதல் நல்ல விஷயமே... என்று காதலில்... மனமும், உணர்வும் பிரிக்க முடியாத பந்தம்.. இரண்டும் ஒன்றுபட்டால் தான் காதல் என்று புரிந்து கொள்ள முடியாமல், தன்னையும் குழப்பி, கூட இருப்பவர்களையும் குழப்பி விடுபவள்... அவசரக்காரி.. நீரை போன்றவள்.

யாமினி : காதல் சுத்த டுபாக்கூர்.. பெத்தவங்களுக்கு தெரியாதா, பிள்ளைகளுக்கு என்ன வேண்டும் என்று.. தன்னையும் வருத்தி, பிறரையும் வருத்தும் காதல் எனக்கு வேண்டாம்... காதல்... அது சிரிப்பில் ஆரம்பிச்சு.. கண்ணீரில் முடிவது.. தற்காலிக சந்தோஷத்தை கொடுத்து விட்டு, நிரந்த வலியை கொடுக்கும்... முட்டாள்களின் சொர்க்கம்.. என்று அழுத்தமாக சொல்பவள்... தான் நினைப்பது மட்டுமே சரி என்று நினைக்கும். அழுத்தக்காரி .. காற்றின் குணம் கொண்டவள்.

இவர்கள் நால்வரில் யாருடைய கருத்து நிலைத்து... எப்போ யார்.. யாருடைய கருத்தை சரி என்று ஏற்று.. அதன் படி முடிவெடுத்து.. அதனால் வரும் விளைவுகளை எப்படி எதிர் நோக்கினார்கள் என்று நால்வருக்குள் நடக்கும் கயிறு இழுக்கும் போட்டியே இந்த கதை...!

என் இதயத்தில் இருப்பதை உன்னால் படிக்க முடிந்தால்
உனக்கு என் கண்ணீரின் அர்த்தம் புரியும்

மனதில் உற்சாகம் இருந்தால், உச்சி வெயில் கூட குளிர்ச்சியாய் தலையில் இறங்கும்...! கருங்கல் பாதை கூட பூ மெத்தையாய் இருக்கும்...!! அப்படி ஒரு மனநிலையில் இருந்தான் ப்ரிதீவ்..., கைகள் தன் இயல்பாய் காரைக் கையாள, கண்களோ நொடிக்கு ஒரு தடவை பக்கத்து இருக்கையில் இருந்த கல்யாண பத்திரிக்கைகளை தடவித் தடவி மீண்டது... உச்சந்தலையில் ஏறிய மகிழ்ச்சி, வாய் வழியே

சீட்டியாக வெளி வந்தது... கையிலோ கார் மின்னல் வேகத்தில் பறந்தது.

பகல் பத்து மணி வெயில் கூட பனிப்பொழிவாய் அவன் கண் எதிரே விரிந்தது...! வேர்வையில் வெந்து எரிச்சலுடன் பாதையைக் கடந்தவர்கள் அனைவரும், அவன் கண்ணுக்கு பனிச்சறுக்கு விளையாடுபவர்களை போல் தெரிந்தனர்...!! இருக்காதா பின்னே... இன்னும் இருபது நாளில் திருமணம்... அதுவும் அவன் பிடித்திருக்கு என்று கை காட்டிய பெண்...!

அவன் விருப்பம் ஒன்றே போதும் என்று சின்ன முணுமுணுப்பு கூட இல்லாமல், பெற்றோர் சம்மதம் சொல்லி, எங்கேயும் சிறு தடங்கல் இல்லாமல்... இதோ பத்திரிக்கை வரை வந்து விட்டதே..., பின் சந்தோஷத்துக்கு கேட்கவா வேண்டும்...! மனம் முழுவதும் அவளின் மாய ஓவியம்... அவள் தான் ஷைலஜா....!

செல்லின் ஓசை, அவனுள் மலர்ந்திருந்த மன ஓவியத்தை, புகையாய் ஊதிக் கலைக்க... எரிச்சலுடன் அதை எடுத்தவன், முகம் மலர ஸ்பீக்கரை ஆன் செய்தப்படி... காரை ஓட்டிக் கொண்டே தன் பேச்சை தொடர்ந்தான்.

“டேய் ரகு..., என்னடா மச்சி.., இன்னைக்கு தான் உனக்கு என்னோட நியாபகம் வந்துச்சா ...?”

“மாப்ஸ்..., இது நான் கேட்க வேண்டிய கேள்வி.... ஏண்டா, இதுவரைக்கும் உன்னோட காதலைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி இருக்குறியா...? எதுவுமே சொல்லாம, திடீர்னு கல்யாணம் வரைக்கும் வந்துட்டியே... நியாயமாடா...? இப்போ கூட உங்க அம்மா சொல்லித்தான் எனக்கு தெரியுது...”

“ஸ்டாப்... ஸ்டாப்... உன்னோட குதிரை தாறுமாறா ஓடுது.., அடக்கு... நீ ஆஸ்திரேலியா போய் உட்கார்ந்துக்கிட்டு, நான் எதுவும் சொல்லலைன்னா எப்படி...? உனக்கே தெரியும்.., எனக்கு லவ்ல எந்த நம்பிக்கையும் இல்லை.. திருமணம் என்பது ஒரு ஜென்டில்வுமன் அன்ட் மென் அக்ரிமெண்ட் அவ்ளோ தான்...!! பரஸ்பரம் நம்பிக்கை தேவை... ஆனா லைப் ஃபுல்லா கூட வர பொண்ணு, எங்க குடும்பத்தோடு ஒத்து போறவளா இருக்கணும்னு நினைச்சேன்... அப்படிப்பட்ட பொண்ணு தான் ஷைலு...,

நம்ப கஃபே பக்கத்துல இருக்குற காலேஜ் பொண்ணு...

ஃபிரெண்ட்சோட கஃபேக்கு வருவா.. கொஞ்சம் கொஞ்சமா அவளை கவனிக்க ஆரம்பிச்சேன்... ஏனோ எனக்கு செட் ஆவான்னு தோணுச்சு... உனக்கே தெரியுமே, அம்மா அப்பா லவ் மேரேஜ் செஞ்சதால, உறவுகளே இல்லாம, தனித்தீவா இருக்கிறோம்.... ஃபிரெண்ட்ஸ் தான் உறவு.. ஆனா இப்போ ஷைலு குடும்பமே எங்களுக்கு சொந்தமாக போகுது.. அருமையான மனிதர்கள்... எப்படி நழுவ விடுவது...? அம்மாக்கிட்ட சொன்னேன்... அவங்களுக்கும் பிடிச்சு போய்..., இப்போ எல்லாம் முடிஞ்சு பத்திரிகையை கையில கொடுத்துட்டாங்க... வாங்கியதில் இருந்து மனசு பரபரன்னு இருக்குடா..."

"மாப்ஸ்... மச்சக்காரண்டா நீ... என்னவோ முறுக்கு கேட்டேன், சுட்டுக் கொடுத்தாங்க என்பது போல சொல்லுற...! சரிடா.. பொண்ணு எப்படி...? சிஸ்டர் போட்டோ இருந்தா அனுப்புடா..."

"ஹா... ஹா... 'பொண்ணு பார்வைக்கு லட்சணமா... பார்க்கும் போதே மனசுல ஒட்டிக்குற மாதிரி இருக்குறா'ன்னு அம்மா சொன்னாங்க... அக்காவோ.., 'பொண்ணு சுமார் தான்'ன்னு சொன்னா... அப்பா..., 'குடும்பம் நடத்த இந்த அழகு போதும்'ன்னு சொன்னார்... ஆனா எனக்கு அவ பேரழகியா தெரியுறா...." என்றவன் கண்கள், கனவில் மின்னியது.

"டேய்... டேய்... போதுண்டா... போன் நனைஞ்சிடுச்சு... மரியாதையா பத்திரிக்கையையும், பொண்ணு போட்டோவையும் அனுப்பி வை... ரொம்ப வழியாதே.."

"அடிங்... சரி அனுப்பி வைக்குறேன். ஒழுங்கா கல்யாணத்துக்கு வந்து சேர்..."

"ப்ரிதீவ்... விளையாடதே மாப்ளே..., நான் என்ன பக்கத்து ஊரிலா இருக்கேன்.., உடனே கிளம்பி வருவதற்கு....!! அதுவுமில்லாம லீவ் கிடைக்கணும்... நீ வேற இருபது நாளில் கல்யாணம், வந்து சேர்ன்னு சொல்லுற...?"

"மச்சி..., என்னடா இப்படி சொல்லுற...? எனக்கு இருக்குற ஒரே பெஸ்ட் ஃபிரெண்ட் நீதான்...! நீயே வரலைன்னா எப்படி...? ஓ... புரியுது புரியுது... டேய்... பிசுநாறி.. நானே டிக்கெட் அனுப்புறேன், வந்து தொலை... அதுக்கு தானே என்னென்னவோ காரணம் சொல்லுற.."

“ஹ... ஹா... இப்போ சொன்ன பார், குட் ஐடியா... முதலில் அதை செய்.. சீக்கிரம் டிக்கெட் போடு... நீ இன்னும் மாறவே இல்லேடா.., அதே பிடிவாதம்... ஒண்ணு வேணு முடிவு பண்ணிட்டா, எதையாவது செஞ்சு காரியத்தை சாதிக்கிறதும்..., வேண்டாம்னா வன்மம் வைக்குறதும்..! இன்னும் குழந்தை தான் நீ...! சிஸ்டர்கிட்ட இந்த குணத்தை காமிக்காதேடா... கொஞ்சம் மூட்டை கட்டி வை....”

“அது” என்றவன் செல்லில் இரண்டாவது அழைப்பு வந்தது... ஷைலஜா லைனில் காத்திருப்பதாக காட்ட... “மச்சி... ஷைலு தான் கூப்பிடுறா, நான் உன்கிட்ட அப்புறம் பேசுறேன்...” என்றவன்..., எதிர்முனை “பாவி” என்று அலற அலற அதை கட் செய்து விட்டு.. ஷைலஜாவின் அழைப்புக்குக் காதைக் கொடுத்தான்.

மனம் படப்படக்க உற்சாக குரலில் “ஷைலு...” என்றான். நிச்சயத்தின் போது கூட... கேட்கும் கேள்விக்கு மட்டுமே பதில்... அதுவுமில்லாமல் இடக்காக பதில் சொல்வது என்று இருந்தவள்... இப்போது அவளே கூப்பிடுகிறாள் என்றால், உற்சாகத்திற்கு கேட்கவும் வேண்டுமா...! .

மனம் பூரிக்க எதிர்முனை குரலுக்கு காத்திருந்தான்... மௌனம் நீள.. “ஷைலு..., என்ன விஷயம் சொல்லுமா...” என அவளை பேச தூண்டினான்.

“அது” என்று சில நொடி தயங்கியவள்... தடுமாறி “நா.. நான் உங்கக்கிட்ட பேசணும்....” என்று சொல்லி முடித்தாள்.

சட்டென பிறந்த குறும்புடன்... “இப்போ பேசிக்கிட்டு தானே இருக்க.. பேசு..” என்று சொல்லியப்படியே, காரை தன் கஃபே பார்க்கிங்கில் நிறுத்தி விட்டு இறங்கியவனின் பார்வை, கஃபேவை அளவெடுத்தது.

அவனின் மனமோ, நிச்சயத்தின் போது, ‘என்ன.. அந்த காஃபி கடை உங்களுதா’ என்று கஃபேவை காப்பி கடையாக மாற்றி, ஆச்சரிய பார்வையில் விழிகள் விரிய கேட்ட முகம் நினைவில் வந்து சிரிப்பைக் கொடுக்க, அதை மறைக்காமல்,...

“ஷைலு..., சொல்லும்மா... பேசணும்னு சொன்னே, இப்போ பேச வார்த்தையை எண்ணிக்கிட்டு இருக்குறே போல... என்ன பேசணும், எதுவாக இருந்தாலும் சொல்லுமா.....”

“அது... அது... நா... நான்... உங்கக்கிட்ட நேர்ல பேசணும்...” என்றவள்

குரல் பதட்டத்தை காட்டியதோ..! ஏதோ ஒன்று மனதை நெருட.. கடிகாரத்தைப் பார்த்தவன்...

“ஷைலு..., மணி பத்தாக போகுது.. இப்போ நீ எங்க இருக்க... எங்க பார்க்கலாம்னு சொல்லு, நானே வரேன்.”

“இல்ல... இல்ல... இப்போ வேண்டாம்... எனக்கு வேற ஒரு முக்கியமான வேலை இருக்கு... நீங்க எங்க இருக்கீங்க...”

“என்னை சந்திக்கறதை விட முக்கியமான வேலை இருக்கா என்ன...? நான் கஃபேல இருக்கேன்... அதான் உன் பாஷையில் காப்பி கடை...”

“எத்தனை மணி வரை இருப்பீங்க...”

“ஷைலு..., நான் நைட் பத்து மணி வரைக்கும் இங்க தான் இருப்பேன்... உனக்கு என்ன பிரச்சனை...”

‘பிரச்சனையா...!! இவருக்கு எப்படி தெரிந்தது...? என்று மனதிற்குள் குழம்பியவளாக,... “ அதெல்லாம் ஒண்ணும் இல்ல.. உங்களை பார்க்கணும். ஈவ்னிங் சிக்ஸ் தேர்ட்டிக்கு நான் அங்க வரேன், எங்கேயும் போய்டாதீங்க... எனக்காக காத்திருங்க..” என்றவள், அவன் பதிலை எதிர் பார்க்காமல் கட் செய்தாள்.

‘எனக்காக காத்திருங்கள்’ என்று சொன்ன அவள் வார்த்தையே கோவில் மணி போல ஆயிரம் எதிரொலியை அவன் மனதில் எழுப்பி, அவனை சிறகில்லாமல் பறக்க வைத்தது. அதுவே அவன் கனவை தொடரவும் வைத்தது.

ப்ரிதீவ் அழகன்.. கலகலப்புக்கு பஞ்சம் இல்லாதவன்... தான் இருக்கும் இடத்தை புன்னைகையால் நிரப்பி, சோகத்தை விரட்ட தெரிந்த வித்தைக்காரன்.. பேச்சில் வசியம் செய்யும் மாயக்காரன்... நல்லவனுக்கு நல்லவன்... நட்புக்கு தோள் கொடுப்பவன். அவனிடம் இருக்கும் அத்தனை நல்ல விஷயங்களையும் அடித்து நொறுக்கும் ஒரே கெட்ட விஷயம்... அவனின் பிடிவாதம்... அது பெற்றோருக்கு செல்லப்பிள்ளை என்பதால் கூட இருக்கலாம்.

பொன் அந்தி மாலை...தன் ஒளிக்கரங்களை சுருக்கி, மேகத்துக்கு தங்க வர்ணம் பூசியப்படி, தான் வரைந்த ஓவியத்தின் அழகில் மெய் மறந்து, தயங்கி தயங்கி உலகின் மறு பகுதிக்கு ஒளி வெள்ளம் அனுப்பும் கடமையும் அழைக்க, மெல்ல மெல்ல இன்றைய நாளுக்கு பிரியா விடை

கொடுக்க ஆரம்பித்த சூரியன்... மெல்ல மேற்கில் மறைய முயற்சித்தான். மறுபுறமோ... 'டேய் மடையா, நீ போனா தான் நான் வர முடியும்' என்பது போல் நிலவு முகம் காட்ட தவித்தது.

உங்கள் விளையாட்டை தான், தினமும் பார்க்கிறோமே என்று கடல் அலைகள் ஒன்றையொன்று தொட்டுவிடும் ஆர்வத்துடன் அலை பாய்ந்த இனிய கடற்கரை... 'அப்பா... அடிக்குற வெயிலுக்கு இதுதான் சொர்க்கம் என்று மக்கள் குவியல் குவியலாய் குமிய ஆரம்பித்தனர்.. அங்கே படகின் ஓரத்தில் எதிரெதிர் திசையில் வெறித்தப் பார்வையுடன் அமர்ந்து இருந்தனர் ஷைலஜாவும், அவளது தோழி யாமினியும்...!

உலகத்து சோகம் அனைத்தையும் குத்தகைக்கு எடுத்தது போல், ஷைலஜாவின் அழுது வீங்கிய முகம் இருந்தது. இன்றோடு தன் உலகம் முடிவுக்கு வந்து விட்டதோ என்று தவித்தாள்... ஓங்கி ஆர்ப்பாட்டத்துடன் பொங்கி எழும் கடல் அலைக்கு ஒப்பாக அவள் உள்ளம் தவித்தது... சிறு வயதில் கடற்கரைக்கு வரும் போது, அலைகள் ஒன்றை ஒன்று தொட முயற்சிப்பது, கண்ணாமூச்சு விளையாட்டு போல் தோன்றும்... அலைகளின் விளையாட்டை நேரம் காலம் இல்லாமல் ரசிக்க தோணும்... கூடவே விளையாடும் வயது அது... பருவ வயதிலோ, கடலரசன் தன்னை தேடி அலைகளை அனுப்புகிறான் என்று உருவகப்படுத்தி.. நீரில் கால்களை நினைத்து... அவனுக்கு பதில் செய்தி அனுப்பி விட்டதாக ஆனந்தத்தில் ஆர்பரிக்கும் மனசு ...!

ஆனால் இப்போதோ அனைத்தையும் இழந்து, பரிதவிப்புடன் தான் இழந்ததை தேடி, கரையை கடக்க முடியாமல், நீர் குமிழாய் மறைந்து போகிறதோ இந்த அலைகள் என்று எண்ணி... தானும் அது போல மறைய வேண்டியது தானோ... தன் உலகம் ஒரு நாளில் முடிந்து விட்டதா... தன் ஆசை கனவுகள் எல்லாம் கலைந்து விட்டதா... காலையில் பத்திரிக்கையுடன் கிளம்பும் போது இருந்த துள்ளல் துடிப்பு எல்லாம் அடங்கி விட்டதே... 'ஜனா' என்ற இரண்டு எழுத்து என் வாழ்வை மாற்றிப் போட்டு விட்டதே... அவன் சொல்வது போல் நான் சுயநலவாதியா...? என்று பரிதவித்து அமர்ந்து இருந்தாள் ஷைலஜா.

"ஷைலு..., நீ போய் அவரைப் பார்த்தியா..." என்றாள் முதலில் பேச்சை கலைத்த யாமினி... ஆம் என்பது போல் தலை அசைத்தவளைப் பார்த்து கோபம் மேலோங்க..

"உனக்கு அறிவு இருக்கா இல்லையா... ஏண்டி இப்படி

பண்ணுற...? அவர் வேண்டாம்னு முடிவு எடுத்துட்டு, வேற ஒருத்தரோட கல்யாணத்துக்கும் சம்மதிச்ச பின்னாடி, இப்போ எந்த தைரியத்துல அவரைப் போய் பார்த்த... காலையில நான் அவ்வளோ சொல்லியும் நீ கேட்கலை... ஏண்டி இப்படி பண்ணுற... என்ன, அந்த ராஸ்கல் காலைப் பிடிச்சு அழுதானா...?"

அமைதியாக கடல் அலைகளை வெறித்துப் பார்த்தவள், பேசாமல் இருக்க... கடும் கோபத்துடன்... "சனியனே... வாயைத் திற.. எனக்கு இருக்குற கோபத்துக்கு கழுத்தைப் பிடிச்சு நெறிச்சிடுவேன்... படிக்கும்போதே லவ்... ஏண்டி உன்னோட வாழ்க்கையை நீயே சீரழிச்சிக்குற...? லவ் மேரேஜ் பண்ணிக்கிட்ட என்னோட அக்கா என்ன கதி ஆனான்னு தெரிஞ்சும்..., நான் அவ்ளோ சொல்லியும் கேக்கலை... சரி, அவர் சரி வர மாட்டார்னு நீயே ஒதுக்கியதும், நான் எவ்ளோ சந்தோஷப்பட்டேன்... இப்போ எதுக்கு திரும்பி அவரைப் போய் பார்த்த...? அவன் வர சொன்னானா...?"

இல்லை என்று தலை அசைத்தவளைப் பார்த்து, கண்களில் எரிச்சல் மின்ன... "நீயா போய் பார்த்தியா... என்னத் தாண்டி செய்யப் போற.. சொல்லித் தொலையேன்... இப்போ கொஞ்ச நாளா நீ பண்ணுற வேலைக்கு, உன்னை விட்டு விலகவும் முடியாம, ஒரு நல்ல ஃபிரெண்டா கூடவே இருக்கவும் முடியாம எரிச்சலா இருக்கு.." என்றவள், எழப் போக,...

அவளை கைப் பிடித்து அமர்த்திய ஷைலு, "நான் ப்ரிதீவ்வை பார்க்க போறேன்... நீயும் கூட வரியா மினி...?"

"அவரைப் பார்க்க, நான் எதுக்குடி உன் கூட வரணும்..."

"ப்ளீஸ் மினி... ப்ரிதிவ் கிட்ட இந்த கல்யாணத்தை நிறுத்த சொல்லணும்... எனக்கு தனியா போற தைரியம் இல்ல, துணைக்கு நீயும் கூட வாடி..."

ஷைலு சொன்ன செய்தியை உள்வாங்கியவாறே.. ஒரு நொடி திகைத்தவள், மறுநொடி கோபமாக...

"ஷைலு.., என்ன முட்டாள் மாதிரி பேசுறே... இப்போ ஏன் இந்த கல்யாணத்தை நிறுத்தணும்...? ஜனா உனக்கு சரி வர மாட்டார் என்று யோசிச்சு முடிவு பண்ணித்தானே, இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்ட... இப்போ போய்...! வேணாம்டி... ஜனாவை விட ப்ரிதிவ்

எல்லா வகையிலும் பெட்டர் சாய்ஸ்... சொல்லுறதை கேளு... வா வீட்டுக்குப் போவோம்...” என்று கண்டிப்புடன் பேசினாள்.

அவ்வளவு பேசியும் அசையாமல் கல் போல் அமந்து இருந்தவள் மேல், டன் கணக்கில் வெறுப்பு கிளம்பியது.

“ஏய்... அப்படி தெய்வீக காதல்னா ஏண்டி நிமிஷத்துக்கு நிமிஷம் மனசை மாத்திக்கிட்டு சாவடிக்கிறீங்க... ஷைலு.., இங்க பார்... ப்ரிதீவ்வை இன்னைக்கு பார்க்க வேண்டாம். அவசரத்துல எடுக்குற முடிவு சரி வராது.. ரெண்டு நாள் பொறுமையா யோசி... அப்புறமும் உன் முடிவுல நீ நிலையா இருந்தா, நானே கூட்டிட்டுப் போறேன்... ஓகேவா” என்றாள் கெஞ்சுதலாக...

“இல்லை.... இன்னைக்கே சொல்லிடுவோம் மினி...”

“இன்னைக்கே பேசுற அளவுக்கு அப்படியென்ன குடி மூழ்கிடுச்சு...?” என பல்லைக் கடித்தவளிடம், தன் கையில் இருந்த பையைக் கொடுத்தாள் ஷைலஜா.

புரியாதப் பார்வைப் பார்த்தப்படி அதை வாங்கியவள், உள்ளே பார்வையை வீச, பட்டுப் புடவையையும், நகைகளையும் பார்த்தவள், புருவம் இடுங்க... “என்னடி இது புடவை நகை...? நிச்சயப் புடவையா...? ப்ரிதீவ்கிட்ட கொடுக்கப் போறியா...? இல்லையே அது வேற கலராச்சே...! என்னத்தாண்டி சொல்ல வர... உயிரை வாங்காம சீக்கிரம் சொல்லி தொலை...”

“நாளைக்கு காலையில பத்து மணிக்கு, ஜனா வீட்டு பக்கத்துல இருக்குற அங்காளம்மன் கோவில்ல எங்களுக்கு கல்யாணம்... அதான் ப்ரிதீவ்கிட்ட இப்போவே பேசணும்னு சொல்லுறேன்..” என்றாள், யாருக்கோ கல்யாணம் என்ற பாவனையில்.

“ஹே.. என்ன சொல்லுறே...! கல்யாணமா...! என்று அதிர்ந்து,... வார்த்தைக்கு தடுமாறியவளாக கடலை வெறித்தாள்.

அப்படியும் கோபம் குறையாதவளாக “முட்டாள்... முட்டாள்... உன்னோட அம்மா, தங்கைங்க.. எதையும்.. யாரைப் பற்றியும் நீ யோசிக்கலையா...? யோசிக்காம உளறிக்கிட்டு இருக்க. ”

“இங்கே பாரு... ஜனா உன்னை மிரட்டுறாரா, சொல்லு... இல்ல... இதுல ஏதோ இருக்கு... நேத்து வரைக்கும் அவனைப் பிடிக்கலைன்னு

சொல்லிட்டு, இன்னைக்கு ஏண்டி அவசரப்படுறே...! இது சரியில்லை ஷைலு... ராஸ்கல் புடவை நகைன்னு எல்லாம் கொடுத்து விட்டுருக்கான்... ஏன், உன்னோட வீட்டில் இருந்து துரைக்கு ஒரு தூசி கூட வேண்டாமா...? அப்போ, அஞ்சரை அடிக்கு உயரமா உன்னை வளர்த்து விட்டு இருக்காங்களே... நீயும் உங்க அப்பா அம்மாவுக்கு சொந்தமானவ தான்.., அது மட்டும் அவனுக்கு வேண்டுமா... என்ன லாஜிக் இது.."

"மினி..., ப்ளீஸ்... நான் ஏதும் பேசுற மனநிலையில் இல்லை... இதை எப்படி ப்ரிதீவ் கிட்ட சொல்லுறதுன்னு மட்டும் தான் யோசிக்கிறேன்... என்னை வேறு எதுவும் கேட்காதே... ஆறரைக்கு அவரை பார்க்க வரேன்னு சொன்னேன்... மணி ஆகிடுச்சு, கிளம்பு..." என்றவள் எழ...

கூடவே எழுந்த மினி,... என்ன செய்வது என்று புரியாத பாவனையில்..."ஷைலு..., உன்னிடம் ஒண்ணே ஒண்ணு கேட்கணும்... நீ ஜனாவை.., விருப்பப்பட்டு தான் கல்யாணம் பண்ணிக்கப் போறியா...? உன் கண்ணுல வெறுப்பு மட்டும் தானே தெரியுது" என்றாள் குரல் உடைய,

கீழ்வானில் தன் கடைசி ஒளிக் கரங்களை உள்ளிழுத்தவாறே மறையும் சூரியனை வெறித்தப்படி.. "மினி.., உண்மையை சொல்லணும்னா, இந்த நொடி உலகத்திலேயே நான் அதிகம் வெறுக்கும் ஒரே நபர் ஜனா தான்... இன்னைக்கு காலையில கூட என் மனதின் ஓரத்தில் இருந்த காதல் இப்போ செத்துடுச்சு..."

"என்னடி என்ன சொல்லுறே...? அப்படி பிடிக்காதவனை ஏன் கட்டணும்...? அவன் உன்னை ப்ளாக்மெயில் பண்ணுறானா...? சொல்லு... அப்பாக்கிட்ட சொல்லலாம், அவர் போலீஸ்தானே, சரி பண்ணிடுவார்டி..." என்றவள் வழி கிடைத்த உற்சாகத்துடன் குதிக்க...

"உங்க அப்பா போலீஸ் தான்... ஆனா, உங்க அக்கா வாழ்க்கைக்கு அவரால் என்ன செய்ய முடிஞ்சுது...? சரி செய்ய முடியாத சில விஷயங்கள் வாழ்க்கையில இருக்கு... நானும் அப்படித்தான்... காதலிக்குறதுக்கு முன்னாடி ஆயிரம் தடவை யோசிக்கலாம்.., ஆனா காதல் வந்த பின்னாடி... எது பெட்டர் சாய்ஸ்ன்னு யோசிச்சு இருக்கக்கூடாது... இப்போல்லாம் தப்புக்கு உடனே உடனே தண்டனை கிடைக்குது... என் தப்புக்கு, என் காதலை பலிக்கொடுத்து.. காதலனை கைப்பிடிக்க போறேன்..." என விரக்தியாகப் பேசியவளைப் பார்த்து, மனம் தாங்காமல்...

“ஷைலு... என்னடி இது... ரெண்டு பேருக்கும் நிம்மதி இருக்காதே... ஏண்டி இப்படி ஒரு வாழ்க்கை...?. ஜனா என்னன்னு தாண்டி உன்னை மிரட்டுறார்.. நான் வேணா பேசிப் பார்க்கவா...”

“வேண்டாம் மினி... முதலில் இப்போ நாம ப்ரிதீவ்வை பார்க்கப் போகலாம்... இனி பேசி லாபம் இல்லை... வறண்ட வாழ்க்கையை தான் வாழணும்னு எனக்கும் ஜனாவுக்கும் விதிச்சு இருக்கு... ஏற்கனவே நாங்க பேசி முடிவு எடுத்து விட்டோம்... இனி பேச ஒண்ணும் இல்லை..”

அவள் மனம், ‘எங்கே பேசி முடிவு எடுத்தோம்..? என்னைத்தான் அவன் பேசவே விடலையே..! அவனோட முடிவுகளை என் மேல் திணித்து விட்டானே... என்னால் அதன் பாரம் தாங்க முடியுமா...? இனி காலம் முழுவதும் இந்த தவிப்பு என்னைத் தொடருமா...?’ என்று தவித்தப்படி
விலகி செல்பவளை பரிதவிப்புடன் தொடர்ந்தது விதி...!!

எப்போதும் அழுகிறேன்,
மனதை வெளிபடுத்த முயன்று தோல்வி அடைகிறேன்..
இருந்தும் எப்போதும் சிரித்து கொண்டு இருக்கிறேன்
ஆனால் உள்ளுக்குள் இறந்து கொண்டு இருக்கிறேன்..

காத்திருப்பு போல் இம்சை தருவது வேறு எதுவும் இல்லை... வயிற்றுக்குள் இனிய சங்கடம் மெதுவாய் உருளும்... அது இனிய நினைவுகளை கொடுக்கும்.. அதே நேரத்தில் தேவை இல்லாத பயத்தைக் கிளப்பி... நிலையில்லாமல் உலவ வைக்கும்... அப்படித்தான் தான் உலவிக்கொண்டு இருந்தான் ப்ரிதீவ்...

ஆறு மணியில் இருந்தே தவிக்க ஆரம்பித்தான்... மனதுக்குப் பிடித்தவர் அருகில் இருந்தால் ஒரு நாள், ஒரு நொடியாய் போகும்... அதே அவர் வரவை எதிர்நோக்கும் போதோ... ஒவ்வொரு நொடியும் ஒரு யுகமாய் கழியும்.. என்னவொரு இனிய அவஸ்தை இது என்று...? புரியாமல் நடை போட்டான்.

அவன் மனம் முழுவதும் ஷைலுவின் பிம்பம், நிழற்படமாய் விரிந்தது... இரண்டு மாதங்களுக்கு முன் அவளை முதன்முதலாய் பார்த்த தினம், இன்றும் அவன் மனதில் பசுமையாய் காட்சியளிக்க... அவள் உருவமோ கல்வெட்டாய் பதிந்து இருந்தது... அவளின் நினைவுகள் அவனை

அலைக்கழித்தது.

அந்த நாள்... அவன் கஃபே வந்தப்போதே ரொம்ப லேட். இன்னொரு ஃபிராஞ்ச் ஆரம்பிக்கும் வேலை கழுத்தை நெறிக்க... வந்தவன் கடகடவென அன்றைய கணக்கு வழக்கைப் பார்க்க ஆரம்பித்தான்... அவன் கவனத்தை செல்லின் ஒலி கலைக்க... அதில் தன் தாயின் எண்ணைப் பார்த்துதும், அதை எடுத்து காதுக்கு கொடுத்தாலும்... கவனம் தன்னை மீறி எதிரே இருந்த லாப்டாப்பில் பதிய... அதை தவிர்க்கும் பொருட்டு தன் அறையில் இருந்து வெளியே வந்தான்.

பேசிக்கொண்டே ஒரு மேஜையின் முன் அமர்ந்தவன்... பேராிடம் 'ஒரு காஃபி' என்று சைகை செய்து விட்டு, தன் பேச்சைத் தொடர்ந்தான். "ப்ளீஸ்... அம்மா, இன்னைக்கு வேலை அதிகம். அதான் மதியம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வர முடியலை... தேவையில்லாம நீ ஏன் ஓவரா கற்பனை பண்ணுற..."

"இல்லைடா ராஜா..., காலையில உன்கிட்ட பொண்ணுங்க போட்டோ காட்டினேனே, அதுக்கு கோவிச்சிக்கிட்டியோன்னு நினைச்சேன்.." என்றார் ப்ரிதீவின் தாயார் சகுந்தலா.

"இதுல கோபப்பட என்னம்மா இருக்கு...?, நான் என்ன கல்யாணமே வேண்டாம், சாமியாரா போகப் போறேன்னா சொன்னேன்...! நீங்க காமிச்ச எந்த பொண்ணுமே எனக்கு பிடிக்கலைம்மா... அந்த பொண்ணுங்ககிட்டே ஏதோ மிஸ்ஸிங்...மா"

"மிஸ்ஸிங்கா..., என்னடா... மிஸ்ஸிங்...? எனக்கு ஒண்ணும் புரியல. எல்லாரும் பார்க்குறதுக்கு மகாலக்ஷ்மி மாதிரி தான் இருக்காங்க.. என்ன, கொஞ்சம் மாடர்னா, காலத்துக்கு ஏத்தாப்போல இருக்காங்க.. அவங்ககிட்டே ஒண்ணும் மிஸ் ஆகலை... நீதான் கல்யாணத்தை தள்ளிப் போட சாக்குப்போக்கு சொல்லுற"

"ஊப்.. ஹய்யோ அம்மா.. புடவை கட்டுனா எல்லா பொண்ணும் மகாலஷ்மி தான்... மாடர்ன் டிரஸ் போடுறது தப்பு இல்லை... நான் எதிர் பார்க்குறது என்னன்னு உனக்கு எப்படி சொல்ல....!" என்றவனின் பேச்சை, பக்கத்து டேபிளில் இருந்த பெண்களில் ஒருத்தியின் கிண்டலான குரல் தடை செய்தது...

அவன் நிமிர்ந்து அவர்களைப் பார்க்க.., எதிரே அமர்ந்து இருந்தவள் "ஹே... நிலா... அவதான் வீட்டுப் பறவைன்னு உனக்கு தெரியுமே.... கடவுளே வந்தாலும், வீக்கெண்டுல வெளியே வரமாட்டா.." என்றவள்,

தன் அருகில் இருப்பவளின் தோளைத் தட்டி சொல்லி விட்டு, ஜோக் சொன்னது போல் சத்தமாக சிரிக்க...

அங்கே இருந்த அவர்கள் நால்வரையும் பார்த்த உடனேயே, பக்கத்து கல்லூரி மாணவிகள் என்று கண்டுக்கொண்டான்... அதில் மூவர் அவனுக்கு முகம் தெரிய அமர்ந்து இருக்க, ஒருத்தியின் முதுகு தான் தெரிந்தது. அவளைப் பற்றி தான் பேசிக்கொண்டு இருந்தனர் போல... அம்மாவிடம் பேசிவிட்டு, உடனே போனை கட் செய்தவன், ஏனோ அவர்கள் அறியாமல் அவர்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

“மினி..., போதும்... வாரம் முழுவதும் உங்க கூட தானே காலையில் இருந்து சாயங்காலம் வரை குப்பைக் கொட்டுறேன்... வீக்கெண்டுல மட்டுமாவது முழுநேரமும் என்னோட குடும்பத்துடன் இருக்கணும்னு நினைக்கிறேன், அதுல என்ன தப்பு..”

அந்த மினியைப் பார்த்தவன், ‘ஷ்ஷப்பா... பேருதான் மினி, ஆனா ஆளு பீரோ சைஸ்ல இருக்கு... ஆளும் குரலும்...!! இந்தப் பொண்ணு முகம் காட்ட மாட்டேங்குதே, பேர் என்னவா இருக்கும்’ என்று யோசித்தவன் மேலும் அவர்கள் பேச்சைக் கவனித்தான்.

“என்னப்பா இது... நம்ப நிலாவுக்கு நாளைக்கு தானே பிறந்த நாள்... நாளைக்கு ஒரு நாள் எங்க கூட வாடி.. ப்ளீஸ் நீ இல்லேன்னா போர் அடிக்கும்ப்பா.” என்றாள் மற்றவள்.

“ஏய் சஞ்சு... விடுடி, ஏன் கெஞ்சுற..!! அம்மா நமக்குன்னா வர மாட்டாங்க...” என எரிச்சல் குரலில் சொன்ன மினியை முறைத்தான் ப்ரிதீவ்.

‘இந்த பீரோ.. இது பீரோ புல்லிங் பண்ணவும், ஊர் சுத்தவும் என்ன மாதிரி பேசுது பேய்..’ என்று நினைத்தவன், தலையில் கை வைத்தப்படி அமர்ந்து இருந்தவளைப் பார்த்ததும் மனம் தவித்தது. நேரம் ஆக ஆக அவள் முகம் பார்க்க ஆசை கொண்டது உள்ளம்... இது என்ன புதுவகை குழப்பம் என குழம்பினான்... அவள் அமைதியே, அவள் சோகமாக இருக்கிறாள் என்பதை உணர்த்த, புரியாத தவிப்பு அவனை வாட்ட துவங்கியது.

“மினி.., சஞ்சு.., விடுங்கப்பா. அவளைக் கட்டாயப்படுத்த வேண்டாம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இவளை இங்கே கூட்டிட்டு வருவதே பெரிய பாடு... அவளை பத்தி தெரிஞ்சும், நாம இப்படி பிளான் போட்டு இருக்கக்கூடாது விடுங்கடி... இதெல்லாம் சரி தான்..

நாளைக்கு இவளுக்கு கல்யாணம் ஆன பிறகு, ஒரு வாரமா உங்க முகத்தைப் பார்த்துட்டேன்னு சொல்லி, வீக்கெண்டு அம்மா வீட்டுக்கு வந்துடுவாளோ..!" என்று சொல்லிய நிலா, மற்றவர்களுடன் சேர்ந்து சிரிக்க...

"போதும் நிலா... என்ன.. இன்னைக்கு என்னை ஓட்டுவது என்று முடிவாகிடுச்சா...? இப்போ என்ன.., எனக்கு கல்யாணம் ஆனா, என்ன பண்ணுவேன்னு தெரியணும், அவ்வளவுதானே.. சிம்பிள் பொறந்தவீடு புகுந்த வீடு ரெண்டுத்தையும் வீக்கெண்டுல ஒண்ணு சேர்த்துடுவேன்... பிரிச்சுப் பார்த்தா தானே பிரச்னை.. எனக்கு என் குடும்பம் தான் முக்கியம் போதுமா..."

"ஆமாண்டி... கட்டிக்கப் போறவன் அனாதையாக இருந்தா, இன்னும் வசதியா இருக்கும்.. அப்படித்தானே ஷைலு" என்று பேச்சில் நக்கலையும், பார்வையில் கோபத்தையும் அள்ளி வீசினாள் மினி.

அது மற்றவளை கோபம் கொள்ள வைக்க, நாற்காலியை பின்னுக்கு தள்ளிவிட்டு எழுந்த ஷைலு.. "ஆமா அப்படித்தான்.. அதுக்கு என்னங்குறே...? அப்படியே இருந்தாலும், அதுல உனக்கு என்னடி பிரச்சனை... வரவர நீ உன் லிமிட்டை தாண்டுற, நல்லா இல்ல மினி" என்று கோபத்தை உள்ளடக்கிய குரலில் சொன்னவள், அவ்விடத்தை விட்டு விலக...

"ஏய் ஷைலு... நில்லுடி.. ப்ளீஸ்..." என்று கூப்பிட்டப்படி, அவளை பின் தொடர்ந்து போனாள் சஞ்சனா.

அங்கு நடப்பதைக் கண்டு ஒரு நொடி திகைத்து போனான் ப்ரிதீவ்... அவள் பெயர் ஷைலுவா... ஐயோ..!! அவள் முகம் பார்க்கவில்லையே என்று பதறியது அவன் மனம்...!

"மினி, என்னடி இப்படி பண்ணிட்டே... நம்ப செட்ல நீயும் ஷைலுவும் தான் க்ளோஸ்... ஆனா இப்போல்லாம் உங்களுக்குள்ள தான் அடிக்கடி சண்டை வருது...." என்று சோகமாக புலம்பியவாறே பில்லுக்கு உரிய பணத்தை நிலா வைக்க... இருவரும் எழுந்தனர்.

"விடுடி.. அவளை ரெண்டு நிமிஷத்தில் சமாதானம் செய்துடுவேன்..." என்றப்படி விலகியவர்களையே பார்த்தபடி அமர்ந்து இருந்தான்... 'மனமோ, அந்த முகம் தெரியாதவளுக்காக தவித்தது. பாவம் அவள் மனம் நோகும்படி பேசி விட்டாளே என்று யோசித்தவனின் விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தது....!

அந்த அவள், அவன் மேஜையை நோக்கி வந்துக்கொண்டு இருந்தாள்... அவன் கண்களுக்கு அவள் முகம் பிரகாசமாகவும், மற்ற இடங்கள் ஒளி மங்கியும் தெரிந்தது.... சிறு புன்னகையுடன் வந்தவளின் முகம், அவன் மனதில் ஆழமாக பதிந்தது... அவள் அமர்ந்து இருந்த நாற்காலியின் பின்புறம் மாட்டி இருந்த பையை எடுக்கவும்...அவள் பின்னே வந்த மினி...

“இதை சொன்னா உனக்கு கோபம் தான் வருது. எல்லாத்திலேயும் அவசரம்... கொஞ்சம் கூட பொறுமை இல்லை... உனக்கெல்லாம் பட்டா தான் புத்தி வரும்... வா எடுத்துக்கிட்டியா... கடைக்கு வேற போகணும்...” என்று பேசிக்கொண்டே வெளியேறியவர்களின் குரல் தேய... அவன் மனமோ ஷைலுவின் முகத்தை ஓவியமாய் மனதில் தீட்டிக் கொண்டது...!

அதற்கு பின் அவர்களை தொடர்ச்சியாக கவனித்ததில்... அவன் அவர்களை பற்றி அறிந்துக் கொண்டது... அவர்கள் நால்வரும் பக்கத்தில் இருக்கும் உமன்ஸ் காலேஜில்... M.sc ஹோம் சைன்ஸ் ஃபைனல் இயர் ஸ்டூடன்ஸ்.. வாரத்தில் ஒரு நாள், ஒவ்வொரு வெள்ளியும் ஒருவரின் ட்ரீட் என்று நால்வரும் இங்கே வருவது வழக்கம், என்பது வரை அறிந்தவன்.. ஒவ்வொரு வெள்ளியும் அவளுக்காக காத்திருந்து, அவளைப் பார்த்தான்.

பார்க்கப் பார்க்க ஷைலுவின் மென்மையான குணம், அமைதி , குடும்பம் என்ற அமைப்பின் மீது அவளுக்கு இருந்த பற்று, தன் குடும்பத்தின் மீது அவளுக்கு இருந்த பாசம்... திருமணம் ஆனாலும் எல்லோரையும் ஒன்று சேர்த்து பார்க்க நினைக்கும் மனசு... எல்லாம் சேர்ந்து அவளை, அவன் கண்ணுக்கு பேரழகியாகக் காண்பித்தது... தோழிகளுடன் பாராட்டும் நட்பு.. அதிராமல் பேசும் பேச்சு என மொத்தமாக அவளை பிடித்தது... அவளை விட அவள் மனசு அவனுக்கு அழகாக தெரிந்தது...

பலவிதத்திலும் நிறை குறைகளை யோசித்து இவளை மணந்தால் வீட்டில் அமைதி நிலைக்கும்.. தன் தாயின் ஆசைக்கு ஏற்றப் பெண் என்று தோன்ற... மேலும் அவளைப் பற்றி விவரங்கள் சேகரித்தவன், அதன் பின் தன் அம்மாவிடம் சொல்ல... அன்றே அவர்கள் ஷைலுவின் அப்பா கோபிகிருஷ்ணனை அவர் அலுவலகத்தில் சந்தித்தனர்.

இவன் மனதில் ‘அவர்களை விட நாம் பலமடங்கு வசதி, மறுப்பு சொல்ல என்ன இருக்கு’ என்றே நினைத்தான்... ஆனால் அவரோ, தன் பெண்ணிடம் கேட்பதாகவும், அவளுக்கு விருப்பம் இருந்தால் மட்டுமே

இது நடக்கும், இல்லையென்றால் இல்லை... தன் மகள் வாழ்க்கையை அவள் விருப்பம் போல அமைத்து கொடுப்பது தான் தன் கடமை, என்றும் சொல்லி விட்டார்... அவரின் இந்தக் குணம் ப்ரிதீவை மேலும் ஈர்த்தது...!

ஷைலு சம்மதம் சொல்ல எடுத்துக் கொண்ட ஒரு வாரமும்... ப்ரிதீவ் தான் தவித்துப் போனான். அவள் மேல் காதல் என்று எல்லாம் உணரவில்லை... குடும்பப் பற்று உள்ளவள், தனக்கு மனைவியாக வந்தால் நல்லது என்ற எண்ணம்... அவன் மனதில் இருந்த அத்தனை எதிர்ப்பார்ப்புகளையும் பூர்த்தி செய்பவளாக இருந்தாள்...

அவள் சம்மதம் சொல்லி... நிச்சயமும் நடந்தது முதல், அவள் மேல் ஒருவித உரிமை உணர்வு... பாசம் அலை அலையாக கிளம்பி அவனை ஆட்டுவித்தது... அவளுக்காக காத்திருக்க கூட இயலாமல் அவனை தவிக்க வைத்தது... கடிகார முட்கள் தான் சதி செய்கிறதோ என்று அதை சோதித்துப் பார்த்தான்...

கடை இருக்கும் தெருவின் முன்பே வண்டியை நிறுத்திய மினி, கடைசியாக ஒரு முறை பேசிப் பார்த்து விடுவோம் என்ற பாவனையில் "ஷைலு..., சொன்னா கேளு, வேண்டாம்.. திரும்பி போய்டலாம். நீ ஏதோ தப்பா முடிவெடுத்து செய்யுற மாதிரி இருக்கு. உன்னோட தப்புக்கு, நானும் உடந்தையா இருக்கிறேனோன்னு உறுத்தலா இருக்கு... நீ ஜனாவை கல்யாணம் செஞ்சுக்கோ, ஆனா நாளைக்கே வேண்டாம். கொஞ்சம் பொறுமையா யோசிச்சு..." என்று பேசி முடிப்பதற்குள்...

"நிறுத்துறியா... கூட வரியான்னு தான் கேட்டேன்.., குழப்ப வரியான்னு கேட்கலை... வண்டியை உள்ளே விடுறியா, இல்லே நான் இறங்கிப் போகவா" என்று கறார் குரலில் சொன்னவளை, விழியிடுங்கப் பார்த்தவள்..

"உன்னையெல்லாம் திருத்த முடியாது..." என்றப்படி ப்ரிதீவின் கஃபே வாசலை நெருங்கினார்கள் யாமினியும், ஷைலுவும்... முகம் முழுக்க புன்னகையுடன் நின்றவனைக் கண்டதும், யாமினியின் உள்ளம் பதறியது... 'கடவுளே.., நல்லா, ஐயங்கார் பேக்கரி பன்னு மாதிரி இருக்கானே.. சேதி தெரிஞ்சா காத்து போன பலூனா சுருங்கிடுவானே' என்று நினைத்தப்படி, அவன் அருகில் வண்டியை நிறுத்தினாள் யாமினி.

தூரத்திலேயே ஷைலுவின் வண்டியை கண்டவன் முகம் மலர... அதை யாமினி ஓட்டி வருவதைக் கண்டதும் முகம் சுருங்கியது. 'சே இவளுக்கு கொஞ்சம் கூட மூளையே இல்லை.. ஏன் தான் எங்க போனாலும் இந்த பீரோவை உருட்டிட்டு போறாளோ...' என்று நினைத்தப்படி, வேண்டா வெறுப்பாக ஒரு புன்னகையை சிந்த...

அவன் முகப்பாவனைகளை உற்றுக் கவனித்தப்படி வந்த யாமினி, கடுப்பின் உச்சிக்கே போனாள்... 'அடிங் கொய்யாலே... தெளசன்ட் வாட்ஸ் பல்பு மாதிரி இருந்த முகம், என்னைப் பார்த்ததும் ஃப்யூஸ் போன பல்பு மாதிரி இருண்டு போகுது... இதுக்கு போய் பாவம் பார்த்தேனே...! டேய் பன்னு, இத்தோட சிரிப்பை மறந்துடுடா ராசா..' என்று எண்ணியப்படி, அவளும் ஒரு சிரிப்பை உதிர்க்க, அவளைக் கண்டு கொள்ளாமல் அவன் பார்வை ஷைலுவை தழுவியது.

முகம் மலர... "ஒரு லட்சம் நல்வரவு தேவியர்களே...!" என்று ஆங்கில பாணியில் குனிந்து நிமிர்ந்து சொன்னவனின் பார்வை, ஷைலுவின் முகத்தில் படிய.. ஒரு நொடி திகைத்தவன்...

"வாங்க உள்ளே போய் பேசலாம்.." என்று சொல்லியப்படி, தன் அறைக்கு அழைத்து சென்று, அவர்களை உட்கார வைத்துவிட்டு... இண்டர்காமை எடுத்தவன்..

"ரெண்டு காப்பச்சினோ, ஒரு கோல்ட் காபி... ரெண்டு வெஜ் இல்ல ஒரு வெஜ் பஃப், ஒரு எக் பஃப்.. உடனே என்னோட ரூமுக்கு அனுப்புங்க.." என்றவன், தன் இருக்கையில் அமர...

இந்தளவுக்கு அவன் தங்களை தெரிந்து வைத்து இருக்கிறானா..! என்று வியந்த யாமினி, வியப்பான பார்வையை வீச.. ஷைலுவோ "இல்ல.. அதெல்லாம் வேண்டாம் சார்... நேரம் ஆகுது... பேசிட்டு, நாங்க கிளம்புறோம்..." என தயங்கி தயங்கி சொன்னவளைப் பார்த்தவன்..

"கூட ஒரு அஞ்சு நிமிஷத்தில் என்ன ஆகிடும்" என சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, அவன் கேட்டது வந்து சேர.. அவற்றை எடுத்துக்கொள்ள சொன்னவன்... ஜன்னல் வழியே நீண்ட தெருவில் பார்வையை அலைய விட்டவாறே காஃபியை குடிக்கத் தொடங்கினான்.

முதலில் சிறிது தயங்கினாலும், பின் இருவரும் சாப்பிட.. ஷைலுவோ எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று யோசித்தப்படி, வெஜ் பஃப்சை எடுத்துக் கடித்தாள்... சாப்பிட ஆரம்பித்ததும் தான்,

முதல்நாள் இரவில் இருந்தே, காலியாக இருந்த வயிறு தன் இருப்பை உணர்த்த, மற்ற நினைவுகளை ஒதுக்கி விட்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

அவர்கள் சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருந்தது போல.. அவர்கள் எதிரில் வந்து அமர்ந்து, டேபிள் வெயிட்டை உருட்டிய வாறே ஷைலுவை உற்றுப் பார்த்தபடி.. "வெல்.. அவர் பேர் என்ன ஷைலஜா..." என்றான் நிதானமாக...

இப்படி ஒரு கேள்வியை எதிர்பாராதவள், பயம் தூக்கியடிக்க.. உதடுகள் தந்தி அடிக்க ஆரம்பித்தது.. "அ...அ...அது..."

"கூல் கூல் ஷைலஜா... காலையில நீங்க போன் பண்ணும்போதே, கொஞ்சம் ஒட்டாம பேசின மாதிரி இருந்தது... இப்போ அழுது வீங்கிய உங்க முகம், 'சார்' என்ற அழைப்பு... கூட்டிக் கழிச்சுப் பார்த்தேன்... நானும் எத்தனை கதை, சினிமா பார்த்திருப்பேன்..." என்றவனின் உதடுகள், சிரிப்பை சிந்தினாலும், முகமோ வேதனையில், 'அப்படித்தான் என்று சொல்லி விடாதே' என்ற எதிர்பார்ப்பில் சுருங்கி கிடந்தது.

நிமிர்ந்து அவனைப் பார்த்தவள் மீண்டும் தலை குனிய... "அப்புறம் ஏன் ஷைலஜா இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டீங்க... உங்க அப்பா உங்க விருப்பத்துக்கு எதிரா நடக்கிறவர் இல்லையே... நீங்க செஞ்சது... இதில் நான்..." கோபத்தை கட்டுப்படுத்துவது போல அமைதியாக இருந்தவன்... அந்த அமைதியே அவனை வெறுப்பேற்ற...

"ஷைலஜா... உங்க அவ... அவர்... ரொம்ப கெட்டவரா..."

திடுக்கிட்டு.. "இல்லை.. இல்லை... அப்படியெல்லாம் இல்லை.. ரொம்ப நல்லவர்..." கண்ணோரம் கலங்கி, ஒரு சொட்டு நீர் நிலத்தில் விழ தயாராய் நிற்க..

"இல்லே, யாரோட கட்டாயமும் இல்லாம, நம்ம கல்யாணத்துக்கு நீங்க சம்மதிச்சீங்க, ஆனா திடீர்ன்னு இப்போ வந்து இப்படி...! அதான் அப்படி கேட்டேன்.. ஒருவேளை, நீங்க ரெண்டு பேரும் அப்போ கொஞ்சம் ஊடல்ல இருந்தீங்களா என்ன... ஆக மொத்தத்துல, சுலபமா என்னை பலி கொடுத்துட்டிங்க... அவருக்கு உங்களை ரொம்ப பிடிக்குமோ... ரொம்ப பொசஸ்ஸிவ்வா இருப்பாரோ... "

தன்னை மீறிய மெல்லிய சிரிப்புடன், ஆம் என்று தலை அசைத்தவளைப் பார்த்து கோபம் பொங்க... "நல்லவர்னு

சொல்லுறீங்க, உங்க மேல அன்பாகவும் இருக்கிறவர், அப்புறம் என்ன தான் உங்க பிரச்சனை... எதுக்கு மொதல்ல அவரை வேண்டாம்னு சொன்னீங்க?" என்று குரல் உயர்த்தி கத்தியவனைப் பார்த்தவள்..

'அந்த நல்லவன் என்பது தானே என்னோட பிரச்சனையே... வெளியே கூட சொல்ல முடியாமல் தவிக்கிறேனே...' என்று தன்னுள் குமுறியவள், கண்ணீர் வடிய "என்னை மன்னிச்சிடுங்க.. ப்ளீஸ்"

அவள் அழுகை உள்ளத்தை உலுக்க.. தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன் "பரவாயில்லை சொல்லுங்க... உங்க அவர் பேர் என்ன..? என்ன வேலை பார்க்கிறார்..?"

"அது... அவர் பெயர் ஜனார்த்.. டிஸ்போசபிள் பிளாஸ்டிக் கப் அண்ட் ப்ளேட் செய்யுற எக்ஸ்டூடர் (extruder) பிளான்ட் யூனிட் ஒண்ணு சின்னதா வச்சு இருக்கார்.."

"ம்ம்... இப்போ தான் வளர ஆரம்பிச்சு இருக்கார் போல... என்ன படிச்சு இருக்கார்..."

"B.A ஹிஸ்டரி..."

"ஆங்... இந்த காலத்துல ஹிஸ்டரியா... ஆச்சரியம்தான்... ஏன் அதுக்கு மேல படிக்கலை...?"

"அது... ஜனா.. அவர் இருந்த ஆசிரமத்துல... ஏதாவது ஒரு டிகிரி வரை தான் படிக்க வைப்பாங்கன்னு சொன்னார்.."

"வாட்.. ஷைலு.., அவருக்கு அம்மா அப்பா இல்லையா... இப்படி ஒருத்தரை எப்படி நீங்க ஏமா..." ஏமாத்துனீங்க என்று கேட்க வந்து, பாதியில் நிறுத்தி, முகம் சுருங்க அவளைப் பார்த்தவன்...

"பார்வைக்கு ரொம்ப சுமாரா இருப்பாரோ..." என்றவனின் குரலில் இருந்த நக்கல் புரிய... ஷைலு கண்கலங்கி அமைதியை கடைப்பிடித்தாள்... அவளின் வேதனையைக் கண்டு, மனம் தாளாத யாமினி..

"அதெல்லாம் பார்வைக்கு நல்லா கறேர்னு கருப்பண்ணசாமி மாதிரி இருப்பார். அதை பத்தி உங்களுக்கு என்ன..? நாங்க சொல்ல வந்தது, இப்போ இவளுக்கு இந்த கல்யாணத்துல விருப்பம் இல்லை. அவ்வளவே. ஷைலு நீ கிளம்புடி...."

“நீங்க சும்மா இருக்கீங்களா… யாமினி.., நான் உங்கக்கிட்ட பேசலை… ஷைலஜா…, உங்கக்கிட்ட நிச்சயமா நான் இதை எதிர்பார்க்கலை… வசதி, அழகு, அந்தஸ்து, எல்லாத்திலும் பெட்டரா ஒருத்தன் கிடைச்சா, விரும்பினவனை வேண்டாம்னு சொல்லுவீங்களா…? அவரோட மனநிலையை கொஞ்சமும் யோசிக்கலையா.. அவருக்கு எல்லாமா இருக்க வேண்டிய நீங்களே, அவரை கை விடலாமா..?”

‘கடவுளே… இதே கேள்வியை தானே அவனும் கேட்டான்.. இப்போ இவனுமா’ என்று மனதிற்குள் மருகியவள், பேச இயலாமல் “சார் ப்ளீஸ்…”

தனக்காக, தன் நிலைக்காக, கோபப்படாமல்… இன்னொருவன் நிலைக்காக வருந்தும் ப்ரிதீவின் மனம் பிரமிப்பைத் தர… கூடவே தன் தோழி கண் கலங்குவது பொறுக்காமல்… “என்னடி ப்ளீஸ்… சும்மா கெஞ்சிக்கிட்டு இருக்குறே… சார்.., கல்யாணம்னு வரும்போது இதை எல்லாம் எல்லா பொண்ணுங்களும் பார்ப்பாங்க… அதை விடுங்க.. இவ இப்போ முட்டாள்தனமா குழப்பிக்கிட்டு இருக்குறா… காதலிக்குறதுக்கு நல்லவன் போதும், ஆனா கல்யாணம்னு வரும்போது அது மட்டும் போதாது சார்.. நீங்க கொஞ்சம் இவளுக்கு புரியும்படி சொல்லுங்க.” என்றாள் தன்மையாக

“நிறுத்து மினி…, என்றவள், இவன் பக்கம் திரும்பி.. சார், நான் இப்போ யோசிச்சதால தான் இங்க வந்து இருக்கேன்…”

“என்னடி வந்து இருக்க..? முட்டாள்தனமா முடிவெடுத்து..” என்று கோபத்தில் கத்திய மினியை வெறித்தவன்

“வேற என்ன எதிர்பார்க்குறீங்க மினி.. என்னையும் ஏமாற்றி, ஜனாவையும் ஏமாற்றி பொய்யா வாழ்ந்து இருக்கணுமா… என்னை பார்த்தா உங்களுக்கு எப்படி தெரியுது.”

“சார், என் பெயரை சுருக்க வேண்டாம்… யாமினின்னே கூப்பிடுங்க. திருமணம் என்பது வாழ்க்கை முழுவதும் வருவது, அதுக்கு காதல் மட்டும் போதாது.. அது மட்டுமில்லாமல்… இது காதலும் இல்லை அப்படி நினைச்சு இவ தான் குழப்பிகிட்டு இருக்கிறா ”

மனதுக்குள் ‘எருமை, இதுதான் இவளை பேசியே கெடுக்குது’ என்று நினைத்தவன்.. “யாமினி, நான் ஷைலஜாகிட்ட பேசணும்.. தனியா… கொஞ்சம் ப்ளீஸ்.. எங்க கிச்சன் எப்படி இருக்குன்னு பார்த்துட்டு வாங்களேன்…” என்றான் நிறுத்தி நிதானமாக.

“சார், அவ..”

“ப்ளீஸ் ஷைலஜா... நான் உங்க கூட கொஞ்சம் தனியா பேசணும்..”

ஒன்றும் பேசாமல் அவமானத்தில் முகம் சுருங்க அவனை முறைத்தவள்... “ஷைலு, நான் வரேன்” என வேகமாக வெளியேறி, அங்கிருந்த மேஜையில் அமர்ந்தவளின் வாய் மட்டும் முணுமுணுத்துக் கொண்டு இருந்தது...

“ஷைலஜா, முடிஞ்ச விஷயங்களை ஏன் எதுக்குன்னு ஆராய்ச்சி பண்ண விரும்பலை... ஒரே ஒரு சந்தோஷம் மட்டுமே.. அவரை மனசுல வச்சுக்கிட்டு, என்னை கல்யாணம் பண்ணி, பொய்யான ஒரு வாழ்க்கை வாழ்ந்திருந்தா மூணு பேர் லைஃப்பும் போய் இருக்கும்... இப்போவாவது ரியலைஸ் பண்ணுனீங்களே... என்னை உங்க ஃபிரெண்டா நினைச்சுக்கோங்க.. நானே உங்க அப்பாகிட்ட பேசுறேன்... முடிஞ்சா, ஏற்கனவே குறிச்சிருக்கற அதே நாள்ல உங்க கல்யாணத்தை நடத்தலாம்... ஓகே..”

“இல்லை வேண்டாம்... நாங்க நாளைக்கே கல்யாணம் செஞ்சுக்க முடிவு செஞ்சு இருக்கோம்...” என்று முகம் பார்க்காமல் சொன்னவளை கண்டவன் முகத்தில் ஒரு நொடி வெறுப்பு மின்னி மறைந்தது..

“ஷைலஜா, பார்க்கிற அத்தனையும் உண்மை இல்லைன்னு ஒரு நொடியில புரிய வைச்சுட்டீங்க... உங்கக்கிட்ட எனக்கு பிடிச்சதே, உங்களுக்கு உங்க குடும்பத்தின் மேல் இருந்த பாசம் தான் காரணம்... ஆனா நீங்க சே... உங்க அப்பாவை பற்றி ஒரு நிமிஷம் நினைச்சுப் பார்த்தீங்களா..? சாதாரண சூப்பர்வைசர்... உங்களை எப்படி வளர்க்கிறார்னு உங்களுக்கே தெரியும்..., பெண் பிள்ளைகளை பாரமாக நினைக்காம, உங்களுக்கு பிடிச்ச வாழ்க்கையை அமைச்சு தரணும்னு நினைக்கிற உங்க அப்பாவுக்கு, நீங்க செய்யுறது துரோகம் இல்லையா...? உங்களுக்கு அப்புறம் ரெண்டு தங்கச்சிங்க இருக்காங்க.. நீங்க இப்படி செய்தா அவங்க வாழ்க்கை என்ன ஆகும்...?”

“சார், அவங்க ரெண்டு பேரும் சின்னப் பிள்ளைங்க... அவங்க கல்யாணம் வரும்போது, எல்லோருக்கும் என்னோட விஷயம் மறந்து போய் இருக்கும்...”

கோபத்தை உள்ளடக்கிய குரலில்... “அந்த சாரை கட் பண்ணுங்க.. கால் மீ ப்ரிதீவ்... முட்டாள்தனமா பேசாதீங்க.. ஷைலு..., இப்போ இந்த

திருட்டு கல்யாணத்துக்கு என்ன தேவை வந்துச்சு...? அவருக்கும் யாரும் இல்லைன்னு சொல்லுறீங்க... உங்க அப்பாவும் கண்டிப்பா மறுப்பு சொல்ல போவதில்லை என்ற பட்சத்தில், எதனால் இப்படி அவசர கல்யாணம் செய்யணும்?..."

"சா... ப்ரிதீவ்... போதும். நான் வந்தது உங்கக்கிட்ட மன்னிப்பு கேட்க மட்டும்தான்... என்னை மன்னிச்சிடுங்க..." என்று எழுந்தவளை, ஏதோ முடிவு செய்தவன் போல அவளை தடுத்து நிறுத்தினான்.

"ஷைலஜா.., ஓகே நீங்க முடிவு பண்ணிட்டிங்க... இனி நான் சொல்வதை கேட்க போவது இல்லை. நாளைக்கு, எங்கே எத்தனை மணிக்கு கல்யாணம்னு சொல்லுங்க... நானும் வரேன்.."

அவளோ அவனை சந்தேகமாக பார்க்க... "என்ன அப்படி சந்தேகமா பார்க்குறீங்க... அடுத்தவனை விரும்புறீங்கன்னு தெரிஞ்சும், நீங்க தான் வேணும்னு பிடிவாதம் பிடிக்க, நான் முட்டாள் இல்லை... உங்க கல்யாணத்துக்கு வரேன்... காரணம்... நீங்க எனக்கு பிடிச்ச பொண்ணு... யாருமே இல்லாம, உங்க கல்யாணம் நடக்க வேண்டாம்.. ப்ளீஸ் நான் வரேனே..! என்னை நம்புறீங்கன்னா ஓகே சொல்லுங்க "

திருமணம் நடக்கும் இடம், நேரம் எல்லாவற்றையும் சொன்னவள்... "ஆனா நீங்க வர வேண்டாம்.. அவருக்கு தெரிஞ்சா... சரி வராது... ப்ளீஸ்"

"கோவில்ல தானே கல்யாணம்... உங்க கல்யாணத்துக்கு நான் வரலை.. கோவிலுக்கு யார் வேணும்னாலும் வரலாமே... என்னை நல்ல நண்பனா கூட ஏத்துக்க மாட்டீங்களா?.. நிஜத்துல, உங்களை விட உங்க குடும்பத்தை எனக்கு பிடிக்கும் ஷைலஜா"

என்ன பதில் சொல்வது என்று புரியாமல் தலை அசைத்தவள்... வருகிறேன் என்று கூட சொல்லாமல் கிளம்பினாள்... படியிறங்கி செல்லும் இருவரின் முதுகையும் வெறித்தப்படி அமர்ந்து இருந்தான் ப்ரிதீவ்.

உன் கண்ணீருக்கு தகுதி உள்ளவர்கள் யாரும் இல்லை அப்படி ஒருவனை நீ கண்டு கொண்டால், அவன் ஒரு பொழுதும் உன்னை அழவிட மாட்டான்..

மலையைத் தூக்கி தோளில் சுமந்தது போன்ற களைப்பு ஷைலுவை வாட்டியது. மனதின் பாரம் அவளை அப்படி எண்ண வைத்ததோ என்னவோ...! மனதில் நிலவிய குற்ற உணர்வு கால்களை பின்னுக்கு இழுக்க, எப்போதும் துள்ளும் மானாய் வீட்டினுள் நுழைபவள், தயங்கி தயங்கி உள்ளே வர,... அவளை முதலில் கண்டது அவள் தாய் பார்கவி.

அவளைப் பார்த்ததுமே, அவர் விழிகள் முறைப்பாய் கடிகாரத்தை ஒரு முறை தீண்டி விட்டு மீண்டது. .

தாயின் பார்வையே அவளை பல கேள்விகள் கேட்க, அதற்கு பதில் சொல்ல இயலாதவளாய் தலைக் குனிந்தாள் ஷைலு.

“கண்ணம்மா..., இந்த ஸ்பெஷல் கிளாஸ் எல்லாம் கொஞ்சம் நாளைக்கு மூட்டை கட்டி வை..., கல்யாண தேதி நெருங்குது, இப்பவும் வீட்டுக்கு லேட்டா வந்தா எப்படி...? நான் காலையில அத்தனை தடவை சொல்லி அனுப்பியும், வழக்கமாக வர நேரத்தையும் தாண்டி வந்தா, என்ன அர்த்தம்...? உன் மனசுல என்ன தான் நினைச்சிக்கிட்டு இருக்க...”

கண்ணு, கண்ணம்மா என்று பார்கவி எப்போதும் மகளை கொஞ்சலாக தான் அழைப்பார்... கோபம் வரும் போது, ‘கண்ணம்மா’ என்று சற்று அழுத்திக் கூப்பிடுவார்... அதுவே ஷைலுவை கலங்க செய்து விடும்... இப்போதும் அதுவே நடக்க, தாய் மனது பதறியது.

பார்கவியின் ஐந்து வருட காத்திருப்பின் பரிசு ஷைலு.., அவரின் உயிர் அவள். ஒற்றை மகவாய் நின்று விட்டாளே என்று வருந்தி... ஆறு வருடம் கழித்து வேண்டி கிடைத்தவள் பதினைந்து வயது சிந்துஜா... வேண்டாமலேயே அடுத்த மூன்று வருடத்தில், வால் பிடித்து வந்தவள், பன்னிரெண்டு வயதாகும் கடைக்குட்டி ஸ்ரீஜா... இருவரும் இரட்டை வால்.. பார்கவி, கோபிகிருஷ்ணன் தம்பதியினரின் உலகமே, இந்த முப்பெரும் தேவியர் தான்..!

“இப்போ என்ன சொல்லிட்டேன்னு கண்ணை கசக்குற, உன்னோட நல்லதுக்குத் தான் சொல்லுறேன் கண்ணு”

கோபிகிருஷ்ணன் “பவிம்மா..., அவ கையைப் பாரு... புள்ள கடைக்குப் போயிட்டு வந்து இருக்கா போல... கல்யாணப் பொண்ணு, அதுக்கு

தேவைன்னு நிறைய இருக்குமே... நீ இப்படி வாசலிலேயே நிற்க வச்சு கேட்டா..., புள்ள என்ன செய்யும்...!" என்றவாறே மனைவியை தாண்டி மகளை நெருங்கியவர்... அவள் கையைப் பற்றி உள்ளே அழைத்து வந்து..., தன்னுடன் சோஃபாவில் அமர்த்தி, மடி சாய்த்து, ஆறுதலாக தலையை கோதி விட ஆரம்பித்தார்.

அந்த நேர மனநிலைக்கு அந்த ஆறுதல் ஷைலுவுக்கு மிகவும் தேவைப் பட்டது... 'இவர்களையா நான் ஏமாற்றுகிறேன்' என்ற உணர்வே கண்ணீராய் இறங்கி... கோபியின் மேல் சிதறியது.

அவள் கண்ணீரை உணர்ந்ததும், கோபம் தலைத் தூக்க... "பவிம்மா... பார்த்தியா.., பிள்ளைய இப்படியா நோகடிப்ப.. நம்ம பிள்ளைங்க மேல நமக்கு நம்பிக்கை இல்லைன்னா எப்படி?..."

"நீங்க என்ன..." என்று பார்கவி கோபத்தில் குரல் உயர்த்த.., அதை பார்த்த சிந்து, நிலைமையை சீராக்கும் பொருட்டு...

பாடம் ஒப்பிப்பது போல "'பொம்பளை பிள்ளைகளை ஒரு களங்கம் இல்லாம, நல்ல படியா கட்டி வெச்சு, அது சந்தோஷமா வாழுறதைப் பார்க்குறது தான் பெத்த தாயின் வேண்டுதலா இருக்கும்... அது தான் இப்படி கட்டுப்பாடு விதிக்கும்... பிள்ளைகளை கண்டிச்சு வளர்க்குறது தப்பா...? இன்னும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும், உங்களுக்கு பொம்பளை மனசு புரியாதுங்க' இந்த கண்ணாம்பா டைலாக் தானேம்மா சொல்லப் போற.. மனசுல ஆணி அடிச்சா மாதிரி பதிஞ்சிடுச்சு... இல்லப்பா.." என்றவள்,

அவருக்கு ஹைஃபை கொடுத்தவரே அவரின் மறுபுறம் அமர்ந்து.. "ஹே லூசு அக்கா... கொஞ்சம் சான்ஸ் கிடைக்கக் கூடாதே.. என் இடத்தை பிடிச்சுடுவே... எழும்பு.." என்று அவளை தள்ளி விட்டு, தந்தையின் மடியில் இடம் பிடித்தாள்.

சோர்வாக அமர்ந்த ஷைலுவிடம்... கேள்வியாக "அக்கா, இன்னும் அந்த பையை அப்படி இறுக்கிப் பிடிச்சுக்கிட்டு இருக்கே, பையை இப்படி கொடு, என்னத் தான் அள்ளிக்கிட்டு வந்தேன்னு பார்ப்போம்.." என கையை நீட்ட

திடுக்கிட்டவளாக ஒரு நிமிடம் அதிர்ந்து.. தப்பிக்கும் நோக்கில் "சும்மா வேலையைப் பார்த்துட்டு போடி..." என கடுப்பாக சொல்லி விட்டு, பையுடன் வேகமாக அறையை நோக்கி திரும்பினாள்.

ஆராயும் பார்வையுடன் “கண்ணு..., சாப்பிட்டுட்டுப் போ..!”

“இல்லேம்மா... ஃபிரெண்ட்ஸ் கூட சாப்பிட்டேன்... தலைவலிக்கிற மாதிரி இருக்கு... நான் கொஞ்ச நேரம் படுக்குறேன்..” என முகம் பார்க்காமல் சொல்லி விட்டு சென்றவளை பார்த்த பார்கவியின் முகம் சுருங்கியது.

“இப்ப நான் என்ன கேட்டுட்டேன்... மூஞ்சியை இப்படி தூக்கி வச்சிக்கிட்டு போறா, என்ன பிள்ளைகளோ...! இவ சரி இல்லைங்க, நிச்சயதார்த்தம் முடிஞ்சதிலேர்ந்து ரொம்ப குழப்பமாகவே இருக்கா... அதிலும் நேத்து பத்திரிக்கையை பார்த்ததில் இருந்து... இவ ஆளே சரி இல்லைங்க... எனக்கு ரொம்ப சந்தேகமா இருக்கு... ஒரு வேளை இந்த கல்யாணத்துல விருப்பம் இல்லாம...”அவர் முடிக்கும் முன்

“பவி..., போதும் நிறுத்து. இப்போ என் பெண்ணை சந்தேகப்படுறியா... என்ன..?” என்று முகம் சிவக்க கோபமாய் குரல் உயர்த்திய கோபியை பார்த்து திகைத்து நின்றார் பார்கவி.

இது தான் கோபி.. தன் பெண்களை யாரும் ஒரு வார்த்தை சொல்லக் கூடாது, அது மனைவியே ஆனாலும் சரி... அவ்வளவு நம்பிக்கை, பாசம் தன் மக்களின் மீது...!

“அப்பா... கூல் கூல்... நாங்க உங்க பொண்ணுங்க... அன்பைக் கொட்டி வளர்க்கும் பிள்ளைகள் வழி மாறிப் போக மாட்டாங்க, சரியா அப்பா... டையலாக்கில் அம்மாவோடு போட்டி போடாதீங்க... இந்த அம்மா காஷ்மீர்ல பிறக்க வேண்டியவங்க, எப்ப பார்த்தாலும் வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்காங்க.. வாங்க நாம சாப்பிட போகலாம்.. ப்ளீஸ்.. ப்ளீஸ்.. ” என்ற ஸ்ரீஜா அவரை தள்ளிக் கொண்டு போக...

“அடிப்பாவிங்களா... எல்லாம் அப்பனை கைக்குள்ளே போட்டு வச்சு இருக்குதுங்க... ஒண்ணாவது அம்மாவை தேடுதா...” என்று பெருமையாக அலுத்தபடி, உறங்கும் ஷைலுவை எட்டிப் பார்த்தார்.

அவள் உறக்கத்தைக் கலைக்க மனம் இல்லாமல், நாளைக்கு இவளிடம் தனிமையில் பேசி, என்ன பிரச்சனை என்று தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தவர்... தன் முடிவு கால தாமதமானது என்பதை உணராமல், மற்றவர்களை கவனிக்க சென்றார்.

உறங்கும் பாவனையில் வெளியே நடந்தவைகளை கவனித்துக் கொண்டு இருந்தவளின் உடல் அழுகையில் குலுங்கியது.

‘அப்பா..., அன்பும், அரவணைப்பும் இருந்தா, பிள்ளைகள் வழி மாற மாட்டாங்க என்று சொல்லும் உங்களுக்கு, வழி மாற சந்தர்ப்பமும், சுழ்நிலையுமே போதும் என்று புரியலையா... எல்லோரும், நான் அவங்க அவங்களுக்கு நம்பிக்கை துரோகம் செஞ்சிட்டேன்னு சொல்லுறாங்க.. ஆனா உண்மையில் உங்களுக்கு தான் செஞ்சு இருக்கேன்.’ என்று தவிப்புடன் அழுதவள், தங்கைகளின் வரவை உணர்ந்து, மூச்சைப் பிடித்துக் கொண்டு படுத்து இருந்தாள்.

அவர்களின் சலசலப்பு அடங்கி, சீரான மூச்சு கேட்கவும்... ஷைலுவின் விழிகள் மடை திறந்தது... தவறுகளை எண்ணி எண்ணி அழுத அழுகை கேவல்களில் முடிந்தது.

தலையணை அடியில் இருந்த போன், ஓசையே இல்லாமல் அதிரவும்... ஒரு நிமிடம் விழிகளை இறுக மூடியவள்... போனை எடுத்து, கோபத்தை அடக்கிய மெல்லிய குரலில் “ம்ம்ம்... சொல்லுங்க..”

“ஷைலஜா..., வீட்டுக்குப் போய்ட்டியா..”

“என்ன கேள்வி இது..? மணி பதினொன்றை ஆகுது.. இந்நேரத்துக்கு ரோட்லையா இருப்பாங்க..!”

“என்னம்மா.., நீ கோபமா இருக்கியா...? அழுதியா என்ன...” என்ற வழக்கமான கேள்வி, வழக்கமான கோபத்தைக் கிளற, போனை எட்ட வைத்து வெறித்துப் பார்த்தவள்..

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை, தங்கச்சிங்க முழிச்சிக்கப் போறாங்க... நான் போனை வைக்கிறேன். ”

“இப்போ முழிச்சா என்ன ஷைலஜா..!, இப்படி பேசாதேன்னு உனக்கு ஆயிரம் தடவை சொல்லிட்டேன். நாம என்ன தப்பா பண்ணுறோம்..? ஏன் இப்படி ஒளிஞ்சு மறைஞ்சு பேசணும்..? என் பொண்டாட்டிக்கிட்ட பேச கூட, நான் பயப்படணுமா...?”

“இன்னும் நம்ம கல்யாணம் நடக்கலை... அது ஒழுங்கா நடக்கணும்னா போனை வைங்க...” என பல்லைக் கடித்த படி பேசினாள்.

“ஷைலஜா..., இன்னைக்கு நான் உன்னை கார்னர் பண்ணி, கல்யாணத்துக்கு சம்மதிக்க வைச்சதா நீ நினைக்கிற..! எனக்கு வேறு

வழி தெரியலைம்மா.. உன்னை இழந்துடுவேனோங்கற பயத்துனால தான் அப்படி செய்தேன்.. ஆனா, இதெல்லாம் நம்ம நல்லதுக்குன்னு நீயே பின்னாடி புரிஞ்சுப்பே. கொஞ்ச நாளா என் மேல நீ ரொம்ப கோபமா இருக்க. தப்புத்தப்பா முடிவெடுக்குற. உனக்கு ஏன் கோபம் வருதுன்னு கூட எனக்கு புரியலை...!

நான் பேசுறது, செய்யறது எல்லாம் நம்மோட நல்ல வாழ்க்கைக்காக தான்னு, ஏன் உனக்கு புரியவே இல்லை?... நமக்காக தானே போராடுறேன்.. உன் பிரச்சனை என்னன்னு சொன்னா தானே எனக்கும் புரியும். நான் ஏதாவது தப்பு செஞ்சேனா? அதையாவது சொல்லு...! ஏம்மா இப்படி செய்யறே..."

அவனின் பேச்சு, அவளை ஒரு நிமிடம் தலையில் கை வைத்து மலைத்துப் போக செய்தது... 'தெய்வமே.. செய்யறது எல்லாம் செஞ்சிட்டு, இப்படி எதுவும் நடக்காத மாதிரியே பேசிக் கொல்றானே...!'

"என்னோட நிலைமையை சொன்னா மட்டும், உங்களுக்கு அப்படியே உடனே புரிஞ்சிடுமோ. முதல்ல போனை வைங்க. திரும்பவும் கூப்பிட்டீங்கன்னா..., நாளைக்கு கல்யாணம்னு ஒண்ணு நடக்காது. உங்களால ஆனதைப் பார்த்துக்கோங்க" என்று போனை கட் செய்தவளின் மனம் பேரிரைச்சலாய் இரையும் கடந்த காலத்திற்குள் நிசப்தமாக நுழைந்தது.

மறுபுறம் ஒலியிழந்த போனை வெறித்துப் பார்த்த படி அமர்ந்து இருந்தான் ஜனா... இருபத்தியேழு வயது.. ஆழ்ந்த கருமை நிறம், அளவிற்கு அதிகமான உயரம், முரட்டுத்தனமான முகம்... அதற்கு நேர் எதிரான.. நல்ல குணம்... இத்தனையும் தாண்டி பிறரை ஊன்றி கவனிக்க வைக்கும் ஏதோ ஒன்று அவனிடத்தில் இருந்தது.

ஜனா..., அவனின் உலகம் ஷைலு, அவளை பார்க்கும் போது மட்டும் நெஞ்சுக்குள் பனியாய் உருகுபவனுக்கு, மனதில் உள்ளதை சரியாக வெளிப்படுத்த தெரியாது. இந்த உலகில் அவன் விரும்பும் மூணு விஷயம்... ஷைலஜா... ஷைலஜா... ஷைலஜா...!! அவன் நினைவு அவளை சுற்றியே...! அவளைப் பார்த்த முதல் தினம்.. அவன் நினைவுகளை பின்னோக்கி இழுத்தது.

ஜனாவின் வாழ்க்கை கடினமானது... அனாதை என்ற ஒரு வார்த்தை அவனை இந்த சமுதாயத்தை விட்டு ஒதுங்கி இருக்க வைத்தது... சிறு வயதில் 'ஏன் இப்படி..!! நாங்கள் என்ன தப்பு செய்தோம்...?' என்று

தவித்தவனுக்கு ஒரே ஆறுதல் ஃபாதர் அடைக்கலம்..., அவரால் மூன்று வேளை உணவும், ஏதோ ஒரு படிப்பும் மட்டுமே கொடுக்க முடிந்தது. அங்கே அவன் மட்டும் இல்லையே.. அவனைப் போல பலர் இருக்கிறார்களே... ஆசையை சுருக்க வேண்டியது இல்லை.. ஆசையே கூடாது என்பது தான் அவர்களுக்கு விதிக்கப்பட்டது...!

யாரோ ஒருவர் வேண்டாம் என்று ஒதுக்கியது..., இவர்களுக்கு அத்தியாவசியத் தேவையானது... அதுவே, இந்த சமுதாயம் எங்களை ஏன் ஒதுக்கியது என்ற வேதனையை கோபமாக மாற்றியது... நீங்கள் என்ன என்னை ஒதுக்குவது, நான் உங்களை ஒதுக்குகிறேன் என்ற மனோபாவத்தை வர வைத்தது...!

வாழ்வில் விரைவாக உயர வேண்டும்... ஆனால் குறுக்கு வழி கூடாது... குறைந்த முதலீட்டில் சுலபமாக நிறைய பணம் வருவது, அவனுக்கு தெரிந்த ஒரு வழி... பிளாஸ்டிக்...!! சுற்றுச்சூழல் கேடு...?அதனால் எனக்கு என்ன..??. பொய் சொல்லவில்லை, திருடவில்லை... நல்ல வருமானம் வருது... அது போதுமே என்பது அவன் எண்ணம்...!

மேன்ஷனில் ஒரு தனியறை எடுத்து தங்கியவன்.., தன் விருப்பம் போல் இருந்தான்... கிடைத்த சம்பாத்தியத்தில் நல்ல உணவு... உடை அவ்வளவே..! தன் தேவை போக, மீதியை ஃபாதரிடம் கொடுத்து விடுவான்...

நாளையைப் பற்றிய கவலை இல்லை... தப்பு வழிகளுக்கு போனதில்லை.. தெரியவும் தெரியாது... கற்றுக்கொள்ள விருப்பம் இல்லை. அவன் யூனிட்டில் வேலை பார்ப்பவர்களிடம் கூட, ஒரு வார்த்தை அதிகம் பேசியது இல்லை..., அவன் உலகில் அவன் மட்டுமே, அதில் யாருக்கும் இடம் இல்லை... எல்லாம் ஷைலஜாவை பார்க்கும் வரை...!

இரண்டு வருடம் முன்பு...

அந்த மாலில் இருந்த ரெஸ்டாரன்ட்டில் உணவை முடித்தவன், ஒரு காஃபியுடன் வெளியே இருக்கும் நாற்காலியில் அமர்ந்தபடி வேடிக்கைப் பார்த்தான்..

எவ்வளவோ ஜனங்கள், முகம் பூரிப்பில் மின்ன சுற்றிக்கொண்டு இருப்பதைப் பார்த்து, 'அப்படி என்ன தான் வாங்குவார்களோ' என்ற யோசனையுடன், பார்வையை சுழற்றியவன் கண்களில், தனக்கு அருகில் முகத்தில் தவிப்புடன், அடிக்கடி

ஃபோனைப் பார்த்தவாறே எரிச்சலுடன் நின்றிருந்த ஷைலு பட...

‘ச்சே.. எவனுக்கு காத்திருக்கோ, இதுங்கள பெத்து, மேய விட்டு இருக்காங்க பாரு’ என்று முகம் சுளித்து விட்டு, தன் வேலையை தொடர்ந்தான்.

“டேய் மாமு.. செம ஆளுடா... சும்மா கும்முன்னு இருக்கா... அவளோட டிரஸ் கலர், அவ நிறத்தை எடுப்பா காட்டுது பார்... பச்சைக்கிளி மாதிரி இருக்கா.. பயந்த பட்சி மாதிரி தெரியுது... ஒரு பிட்ட போட்டு வைக்கலாமா..” என்று பின்னிருந்து வந்த இளவட்டங்களின் கிசுகிசுப்பு கவனத்தை கவர்ந்தது.

‘யாரை பேசுறாங்க..?’ என்று பார்வையை சுழற்றியவனின் பார்வை, மீண்டும் ஷைலஜாவிடம் வர... அவள் உடையின் நிறம், அவளைத் தான் என்று உறுதிப்படுத்தியது.

‘லூசா இருக்குமோ... மத்தவனுங்க எப்படி பார்க்கறாங்கன்னு கூட புரியாம, பேக்கு மாதிரி நிற்குது... எனக்கென்ன.. எக்கேடோ கெட்டுப் போகட்டும்...’ என்று நினைத்தவன் கிளம்ப.. அவள் தவிப்பான பார்வையுடன், போனை காதில் வைப்பதும், எடுப்பதுமாக.. மற்ற எதிலும் கவனம் இல்லாமல் இருப்பதைக் கண்டவன்..

‘இந்த பெண் போகும் வரை இங்கேயே இருப்போம்., இவனுங்க ஏதாவது வம்பு பண்ணப் போறாங்க. ஏற்கனவே... பயந்த மாதிரி இருக்கு’... என்று எண்ணியவாறே, அங்கேயே அமர்ந்துக்கொண்டு பார்வையால் அவளை தொடர்ந்தான்.

ஷைலுவோ தவிப்புடன்.., ‘கடவுளே, இந்த மினியை நம்பி வந்தது தப்பா போச்சு... அக்கா பையனுக்கு கிஃப்ட் வாங்கணும்னு, வர சொல்லிட்டு, இப்படி கழுத்தை அறுக்கறாளே..’ என்ற புலம்பலுடன் பார்வையை சுழற்ற...

பழக்கம் இல்லாத புது இடம்.. அவள் பயப் பார்வை வட்டத்தில் ஜனா வர.. அவனும் அவளைக் கவனிப்பது தெரியவும்.. ‘கடவுளே, இவன் என்ன...? என்னையே குறுகுறுன்னு பார்க்கிறான், பார்த்தாலே பயமா இருக்கே... பார்வையே சரி இல்லையே... கருவாப்பையன்.. இவன் கண்ணை நோண்டினா என்ன?’

‘இவ ஒருத்தி... இந்த இடத்தை அடையாளமாக சொல்லி, இங்கே நிற்க சொல்லுறா.., இவன் ஏதாவது வம்பு செய்தா, என்ன பண்றது..?

பின்னாடி இருக்குற பசங்க, டீசன்ட் லுக்கோட இருக்காங்க... அவங்ககிட்டே ஹெல்ப் கேட்க வேண்டியது தான்..' என்று நினைத்தபடி போனை எடுத்தவள்...

"ஏய் எருமை.. எங்க இருக்க... நீ கூப்பிட்டேன்னு, வந்தேன் பாரு.. என்னை அடிக்கணும்... இன்னும் எத்தனை தரம், தோ.. தோன்னு.. சொல்லுவே.. என்னது...? இப்போத்தான் கிளம்புறியா... மவளே, உன்ன... நான் வீட்டுக்கு போறேன்டி.."

"ரொம்ப தாஜா பண்ணாதே... சரி... சரி... ஓகே... சரியா இருபது நிமிஷம் தான் காத்திருப்பேன்.. நீ வரலை நான் கிளம்பிடுவேண்டி..." என்றவள் பார்வையில், மீண்டும் ஜனா பட... அவனை கவனிக்காதது போல பார்வையை வேறு பக்கம் திருப்பியவளை, எல்லாத்தையும் மறக்க வைத்தது அங்கே நடந்தது... அவளின் கவனம் தூரத்தில் இருந்து ஓடி வந்த பையன் மீது படிய... அவன் அவளை தாண்டிச் செல்லும் போது பிடித்து இழுத்தவள்....

"டேய் என்ன வேலைடா பண்ணுற...? முளைச்சு மூணு இலை விடலை, அதுக்குள்ளே திருட்டா...?" என்று திமிறி ஓட முயன்றவனை, பிறரின் கவனத்தை ஈர்க்காமல், இன்னும் ஒதுக்கமாக கொண்டு வந்தாள்.

"டேய்.., உன்னோட பெயர் என்ன..? என்னடா இது..? இந்த வயசுல இது தப்பு இல்ல.." என்றவளைப் பார்த்து முறைத்தவன்

"விடுக்கா... பசி வந்தா எதுவும் தப்பு இல்ல... விடு... அண்ணாத்த பார்த்துட்டா வம்பா போய்டும்..."

பசி என்ற ஒரு வார்த்தை அவளை பேச்சிழக்க வைக்க... "டேய் தம்பி, உன் பேர் என்ன..? உன் அம்மா, அப்பா உன்னை இப்படி திருட விட்டுட்டு என்ன பண்ணுறாங்க.."

தம்பி என்ற வார்த்தை அவன் பதட்டத்தை குறைத்ததோ என்னவோ.. தலை குனிந்தவரே "அவங்க இருந்தா எனக்கு ஏன் இந்த நாய் பிழைப்பு?... நான் பொறந்ததுமே, என்னை குப்பைத் தொட்டில போட்டுட்டாங்க... பேரு சுரேஷ், யாரு வச்சான்னு தெரியாது... என்னை விடுக்கா... அப்புறம் உனக்கு தான் வம்பு" என்றவன் பிடியை விலக்கப் பார்க்க...

ஷைலுவின் மனமோ தவிக்க துவங்கியது... 'பத்து வயது இருக்குமா..? கவலை இல்லாமல் விளையாடும் பருவம்.. ஆனால் ஏன் இப்படி முப்பது

வயது அனுபவத்தை சுமக்கிறான்' என்று வருந்தியவள்...,

"தம்பி, அனாதையாக இருந்தா, திருடனாத்தான் ஆகணுமா...? எத்தனை பேர் தன்னை தானே செதுக்கி, கஷ்டப்பட்டு உழைச்சு, வாழ்க்கையில ஜெயிச்சு இருக்காங்க தெரியுமா..? ஏதாவது நல்ல ஆசிரமமா பார்த்து சேர்ந்து இருக்கலாம் இல்ல.." என்றவளை, பைத்தியக்காரியைப் பார்ப்பது போல பார்த்தான்.

"யக்கா.. முதல நீ உன்னோட வாழ்க்கையைப் பாரு... இப்படி லூசு வேலை பார்க்காதே.." என்று ஓடப் போனவனை பிடித்து இழுத்தவள்...

"டேய், அங்க ஒரு லேடி கான்ஸ்டபிள் நிற்கிறாங்க... வா அவங்கக்கிட்ட உன்னை ஒப்படைக்கிறேன்... உன்னை நல்ல ஆஸ்ரமத்தில் சேர்த்து விடுவாங்க..." என்று அவனை இழுக்க

கையை உதற முயன்றவாறே... "லூசாக்கா நீ.." என்றவனை, கோபமாக முறைத்துக் கொண்டு இருக்கும் போதே...

"சுரேஷ்.." என்ற மெல்லிய அழைப்பு, கவனத்தைக் கலைக்க மெல்ல திரும்பியவள்... 'ஆகா.. இவனா..!' இவனை இழுத்த வேகத்தில், இந்த கருவாப்பையன் டேபிள் பக்கத்தில் வந்துட்டோம் போலவே.. இவன் இவனுக்கு தெரிந்தவனோ..' என்ற யோசனையுடன் பார்க்க

அவளைப் பார்த்து முகம் மலர சிரித்தவன்... நீண்ட நாள் கழித்துப் பார்ப்பது போல சிரித்தவாறே, ஆனால் தாழ்ந்த குரலில்.. "ஹாய் மிஸ்..., அந்த பையன் கையை விடாதீங்க.. என்னை தெரிந்தது போல ஒரு பத்து பதினைஞ்சு நிமிஷம் சிரிச்சுப் பேசிக்கிட்டு இருங்க.."

முகம் சுருங்க.... "ஹே.. மிஸ்டர்.. என்ன கொழுப்பா?.."

சிரித்தப்படி... "சரிதான்... இந்த பையனைக் காப்பாத்தணும்னு நினைச்சா, நான் சொன்னதை செய்யுங்க" என்றவனைப் புதிராக பார்த்தவள்..., சுரேஷையும் திரும்பி ஒரு பார்வை பார்த்து விட்டு, ஒரு முடிவுடன் அவன் சொன்னதை செயல்படுத்தினாள்.

ஒரு பத்து நிமிடம் போய் இருக்கும்.. அவன் போனில் மெசேஜ் டோன் கேட்க.. அதைப் பார்த்தவன் முகம் மலர... "அப்புறம்.." என்று சொல்லிக் கொண்டே எழுந்து சுரேஷை பிடித்துக்கொண்டு இருந்த ஷைலுவின் கரத்தைப் பிடிக்க... அவளோ அதிர்வில் தன் பிடியைத் தளர்த்த.. சுரேஷ் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மின்னலாய் ஓடி

மறைந்தான்.

அவனை பிடிக்க முயற்சித்த ஜனா, அது முடியாமல்... புலம்பியப்படி ஷைலுவின் கரத்தைப் பற்றியவன்... வர மறுத்த அவளை இழுத்துக் கொண்டு லிப்ட்டினுள் தள்ளியப்படி, கீழ் தளத்தின் எண்ணை அழுத்தினான்.

“ஏய்... கையை விடு ராஸ்கல்... இவ்ளோ கூட்டம் இருக்கு.. அப்போ கூட கொஞ்சமும் பயமோ தயக்கமோ இல்லாம கையப் பிடிக்கிற..? நான் அப்போவே சந்தேகப்பட்டேன்... மரியாதையா என்னை விட்டுடு... இல்ல, நான் கத்துவேன்..” என்று மிரட்டலாக மெல்லிய குரலில் சொன்னவளைப் அலட்சியமாக பார்த்தவன்...

சுற்றி கூட இருந்தவர்களைப் பார்த்து விட்டு, அவள் புறம் குனிந்து... “நல்ல சத்தமா கத்துங்க...” என்றவனை பார்த்து, வாய் அடைத்துப் போய் பேச இயலாமல் தவித்தவள். லிப்ட் நிற்கவும், மால் வாயில் நோக்கி வேகமாக நடந்தாள்... அவனை விட்டு விலகி நடந்தவளின் நடைக்கு ஈடு கொடுத்து நடந்தவன்...

“மிஸ்.. நான் சொல்லுறதை கொஞ்சம் கேட்குறீங்களா...? வந்த இடத்தில ஏன் இப்படி ரிஸ்க் எடுக்குறீங்க...? இதெல்லாம் ஒரு குரூப்.. இந்த மாதிரி சின்னப் பிள்ளைகளை வச்சு, திருட்டு வேலையை செய்யுறவங்க... துரத்தில் இருந்து, இவங்களை கண்காணிச்சிக்கிட்டே இருப்பாங்க... லேடிஸ் கிடைச்சா விடுவாங்களா... நீங்க ஏன் வலிய போய் வம்புல மாட்டணும்... அதான் நான்... ”

நிறுத்தும்படி கை காட்டியவள்.. “சார்..., என்னைப் பார்த்தா முட்டாள் போல தெரியுதா... ரொம்ப புத்திசாலித்தனமா பேசாதீங்க... நீங்க சொல்லுறது உண்மையா இருந்தா, அந்த பையனை காப்பாத்தி இருக்கணும்... நான் போலீஸ்கிட்ட போறேன்னு தானே சொன்னேன்..., கடைசில இப்படி விட்டுட்டோமே..” என குரலில் வேதனை மண்ட சொன்னவளைப் பார்த்தவன்

“இங்க பாருங்க, நீங்க சொல்லுற போலீஸுக்கு இங்க தான் டூட்டி.. இங்க இப்படி நடக்குதுன்னு அவங்களுக்கு தெரியாதா...? அவங்களுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு எதுக்கு..?”

“என்னது... அவங்களுமா..!”

“சில மேல் அதிகாரிகள் துணை போகும்போது.. கீழே இருக்குறவங்க

கண்டுக்காம தான் இருப்பாங்க.. அந்த குரூப்கிட்ட மாட்டி இருந்தா, நீங்க என்ன கதி ஆகி இருப்பீங்களோ...!"

'ஆங்' என விழி விரித்தவள்... பின் சந்தேகமாக "அது... அது... என் மேல உங்களுக்கு என்ன அக்கறை.."

"நீங்க தானே சொன்னிங்க.., அனாதைங்க திருடனா தான் ஆகணுமா என்ன...? தன்னைத் தானே செதுக்கினவங்களும் இருக்காங்கன்னு சொன்னீங்க இல்ல, அதுல நானும் ஒரு ஆள்..." என்றவனை வியப்பாக பார்த்தாள்.

"நானும் அந்த பையன் போல அனாதை தான்... இது ஒண்ணு போதுமே, அவனுக்கு உதவி செய்ய... நீங்க அந்த பையன் கூட பேசவுமே எனக்கு விஷயம் புரிஞ்சிடுத்து. அதான் எங்க ஃபாதர்க்கு உடனே மெசேஜ் அனுப்புனேன், அவரும், அவருக்கு தெரிந்த டிஎஸ்பி கூட இங்கே வரேன்னு சொன்னார். அதுவரைக்கும் அவங்க சொன்னதை தான் செஞ்சேன்... அவங்க அந்த பையனை பார்த்துட்டேன்னு மெசேஜ் வந்ததுக்கு அப்புறம் தான், அவனை விட வச்சேன்.. போதுமா.."

விழிகள் மரியாதையுடன் அவன் மேல் பதிய... "சார்..."

"என்ன, உனக்கு சோஷியல் சர்வீஸ்ல ரொம்ப ஆர்வமோ...? வீக்லி ஒன்ஸ் ஏதாவது அனாதை இல்லத்துக்கோ, இல்ல முதியோர் இல்லத்துக்கோ போய் சேவை செய்றது... பிறந்தநாள் கொண்டாடுவது... பிளட் டொனேட் ... இப்படி ஏதாவது .."

"ஐயோ... அப்படியெல்லாம் இல்லை... இந்த மாதிரி ஹோம் எல்லாம் எங்க இருக்குன்னு கூட எனக்கு தெரியாது.. அப்பா குடுக்குற ஐநூறு ரூபா பாக்கெட் மணிக்கு..., என்ன சேவை செய்ய முடியும்...? கஷ்டமான விஷயங்களை கேட்டா, ஒரு நிமிஷம் வருத்தப்பட்டுட்டு, அடுத்த நிமிஷமே மறந்து போற சாதாரண பொது ஜனம் தான் நான்.."

"ஹா.. ஹா... அப்போ சமீபத்துல... இது சம்பந்தமா ஏதாவது படிச்சீங்களா.., இல்லே ஸ்பீச் ஏதாவது கேட்டீங்களா?.."

அசடு வழிய சிரித்தவளைப் பார்த்தவன்... 'யாருக்காக காத்திருகீங்க?' என்று கேட்க வாய் எடுக்க.. அதற்குள் அவளுக்கு போன் வரவும், பேசி விட்டு முகம் மலர...

“சார்.., நான் கிளம்புறேன் என் ஃபிரெண்ட் வந்துட்டா, அந்த சைடு பார்க்கிங்ல இருக்கா, நான் கிளம்புறேன்..” என்றவள் விலக..

ஒரு நொடி திகைத்தவன்... “மிஸ், உங்க பேர் சொல்லவே இல்லையே..”

அவன் புறம் திரும்பியவள்,.. “பேர் எதுக்கு...?” என்ற கேள்வியுடன் விலகினாள்..

அடுத்து வந்த ஒரு வாரம் முழுவதும், பார்க்கும் அனைவரிடமும் இந்த நிகழ்வுகளை சலிக்கும் வரை வாய் வார்த்தைகளால் வாரி இறைத்தாள்... இறைத்தவைகளை குப்பைகளாய் ஒதுக்கி விட்டு, அவனை மறந்து இயல்பு வாழ்க்கைக்கு அவள் திரும்பிவிட.

அவள் போவதை தோள் குலுக்கி விட்டுப் பார்த்த ஜனாவோ, அவள் நினைவுகளை மனதின் மூலையில் விதையாய் போட்டு வைக்க, அது முளை விட்டு மெல்ல மெல்ல தனது வேர்களை இதயம் முழுவதும் படர விட்டது!

ஒரு புன்னகை ஆயிரம் கண்ணீர் துளிகளையும், ஓர் உடைந்த இதயத்தையும் மறைத்து வைத்து இருக்கிறது

நாட்கள் மின்னலாய் மறையும் காலம் இது... படிக்கும் பருவம் என்றால் கேட்கவே வேண்டாம்..., நாட்கள் சடுதியில் நழுவியது ஷைலுவுக்கு...! மூன்று மாதம் மூன்று நிமிஷமாக கழிய..., அவள் நினைவலைகள் ஜனாவின் நினைவுகளை, கொஞ்சம் கொஞ்சமாக பின்னே கொண்டு போய்... அவன் நல்லவன் என்பதில் நிறுத்தி..., பின் அவனை மறந்தும் விட்டாள்.

அன்று புதன்கிழமை... ஒரு அரசியல் தலைவரின் கைதை முன்னிட்டு, கல்லூரிக்கு அரை நாள் விடுப்புக் கிடைக்க... சஞ்சனாவும், மினியும் அவர்கள் தோழிகளுடன்..., சக தோழி வீட்டில் கூட முடிவு செய்ய... நிலாவோ சர்ச்சுக்கு போக வேண்டும் என்பதால், அவர்களுடன் வரவில்லை என்றவள், ஷைலுவை துணைக்கு அழைக்க... அவள் தயங்கவும், நிலாவே பார்கவியிடம் போன் மூலம் அனுமதி கேட்டு அழைத்து சென்றாள்.

சர்ச்சின் பிரமாண்ட தோற்றம் ஷைலுவுக்கு ஒரு வித மலைப்பை தந்தது.

அதன் அமைதியோ புரியாத சாந்தமான உணர்வைக் கொடுக்க... நிலா சிலுவை இட்டு முழங்காலில் நின்று, தன் ஜபத்தை தொடர்ந்தாள்... தானும் அதே போல் முழங்காலிட்டு கண்ணை மூடினாள் ஷைலு... 'கடவுள்' யாராக இருந்தால் என்ன...? வேண்டிக்கொள்ள மனம் தானே தேவை...!! எனவே தன் வேண்டுதல்களை கடைப்பரப்பி... 'இதெல்லாம் நீ எனக்கு செய்தால், நான் பதிலுக்கு உனக்கு இன்னதெல்லாம் செய்கிறேன்' என்று யேசுவுடன் நட்புக் கரங்களை குலுக்கி... ஒப்பந்தங்கள் போட ஆரம்பித்தாள்.

கால்முட்டி போடும் பழக்கம் இல்லாத காரணத்தால் கால் வலி எடுக்க... மெல்ல ஒரு கண்ணைத் திறந்து நிலாவைப் பார்த்தவள்.., 'அடிப்பாவி அசையாம இருக்காளே... எனக்கு ஸ்கூலில் கூட முட்டிப் போட்டு பழக்கம் இல்லையே'.. என எண்ணியப்படி, கோவிலை சுற்றி தன் பார்வையை ஓட்டினாள்.

சின்ன சின்ன ஓசைகள் கூட பிரமாண்டமாக கேட்கும் வித்தையை ரசித்தவள். தானும் அதேபோல ஓசை எழுப்பி, அந்த ஒலியின் பிரமாண்டத்தை ரசித்தாள். அங்கே இருந்த பேரமைதியை சிலரின் வரவு கலைக்க.. பார்த்த வரை, கல்யாண ஏற்பாடுகள் நடக்கின்றது என்பது புரிந்தது. கால் வலியை மறந்தவளாய் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

எதிர்ப்புற வரிசையில் அமர்ந்து இருந்த ஜனாவோ.., கண்ணிமைக்காமல் இவளையே பார்த்துக்கொண்டு இருந்தான். இவளின் அத்தனை நடவடிக்கைகளும், அவன் முகத்தில் புன்னகையை தோற்றுவித்தது...

'என்னைப் பார்ப்பாளா..., பார்த்தாலும் அடையாளம் கண்டுக் கொள்வாளா' என்று அவன் மனதில் ஏக்கம் வந்தது.

ஜனாவுக்கு, ஷைலுவை முதலில் பார்த்த அன்று பெரிய பாதிப்பு இல்லை என்றாலும்.., அன்று இரவு... 'அந்த பெண்ணுக்கு எவ்வளவு தைரியம்' என்று நினைத்துக்கொண்டே.., அவள் முகத்தை நினைவில் கொண்டு வர.., அது நான் போகவே மாட்டேன் என்று இரவு முழுவதும் அடம் பிடிக்க... அதுவே ஒவ்வொரு இரவும் தொடர்ந்த்து. அவன் இரவுகளை ரசிக்கவும் வைத்தது... அதன் விளைவு, அடுத்த சனிக்கிழமை, கால்கள் அவன் அனுமதியின்றியே அந்த மால் நோக்கி போனது.

காரணம் புரியாமலேயே, அவனது வார இறுதி நாட்கள் கரைவது, அந்த மாலில் தான் என்றாகி விட்டது... மற்ற நேரங்களிலும் அவன் பார்வை,

அவள் எங்காவது தென்படுகிறாளா என்று தேட தொடங்கியது... ஏன் தேடுகிறோம் என்று தெரியாமல் தேட தொடங்கியவனின் தேடலும் முடிவுக்கு வந்தது... அதற்கு காரணம் சுரேஷ்...!

அவன் வளர்ந்த இல்லத்தில், ஃபாதர் அடைக்கலத்தின் பொறுப்பில் சுரேஷ் இருந்தான். படிப்பு வாசனை கொஞ்சமும் இல்லாமல் இருந்தவனுக்கு, அடிப்படையில் இருந்து எல்லாம் ஆரம்பிக்க வேண்டி இருக்க, அவனுக்கு ஆகும் செலவுகளும் அதிகம் ஆனது... எனவே ஜனா அந்த பொறுப்பை ஏற்று இருந்தான்... இல்லத்திற்கு சென்று சுரேஷைப் பார்க்க, ஃபாதர் அனுமதிக்கவில்லை... மற்ற பிஞ்சுகள் மனதில் ஏக்கம் படர்வதை அவர் விரும்புவதில்லை...!

பொதுவாக எல்லோரையும் பார்க்க வரும்போது மட்டும் வந்தால் போதும் என்று சொல்லிவிட... அவனுக்கு டியூஷன் வைக்க ஆகும் பணத்தை..., ஃபாதரை சர்ச்சில் பார்த்து கொடுத்தவன், பேசிவிட்டு கிளம்புகையில்... ஓரக் கண்ணால் தன் அருகில் இருந்தவளை அளவெடுத்துக் கொண்டு இருந்த ஷைலு அவன் பார்வையில் பட்டாள்.

அங்கேயே உறைந்து நின்றவன், அப்படியே அமர்ந்தும் விட்டான். மனமோ, ஒரு முறையாவது என்னைப் பாரேன் என்று மானசீகமாக அவளிடம் கெஞ்சத் துவங்கியது.

கொஞ்ச நேரத்தில் அலைப்பாய்ந்த அவளது விழிகள், இருமுறை அவனைத் தழுவி சென்றும்... அவள் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை என்பதை கண்டுக் கொண்டவன்..,. அவள் தன்னை மறந்து விட்டாளா என்ற கோபம் வர... ஏன் இந்த கோபம்.. ? என்று யோசிக்கத் துவங்கினான்...!

நிலாவை நோக்கி வந்த சிஸ்டர் ஒருவர், அவளிடம் ஏதோ சொல்லிவிட்டுப் போக... அவள் ஷைலுவிடம் "டி... சிஸ்டர் என்னை மாஸ்ல பாட்டு பாட கூப்பிடுறாங்க, நான் போறேன்.. மாஸ் ஆரம்பிக்கும் வரைக்கும் இங்கேயே சுற்றிப் பாரு.... ஒரு முக்கால் மணி நேரம் தான் ப்ளீஸ்..."

"அது பா... நேரம்..."

"நோ... ஒண்ணும் சொல்லிடாதே ஷைலு... இப்படி மத்தவங்க கல்யாணத்துக்கு நான் பாடினா, நாளைக்கு என் கல்யாணத்துக்கு வேற யாராவது பாடுவாங்க.. உனக்கு கூட பாரு, எவ்வளவு லக்..., முதல்

தடவையே கல்யாண மாஸ் பார்க்கிற... உனக்கு நல்ல 'ஹஸ்' கிடைப்பார்.. ப்ளீஸ்டி..."

"ச்சீ.. போடி... அம்மா..., தேடுவாங்களேன்னு யோசிச்சேன். நான் வெளியே போய், பொண்ணு மாப்பிள்ளை வருவதை பார்க்கிறேன்.." என்றவள் சர்ச் வாசலுக்கு வந்தாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ.." என்ற குரலுக்கு திரும்பியவள், ஜனாவை கண்டதும், விழிகள் ஒரு நொடி யோசனையை கடன் வாங்கி, பின் மலர்ந்து "சார்... நீங்களா.."

"ம்ம்ம் நான் ஜனார்த்... என்ன, அதுக்குள்ளே என்னை மறந்துட்டிங்களா...?"

"அய்யோ சார்ர்ர்ர்... எப்படி முடியும்... அதெல்லாம் மறக்கலை.."

"இப்போ சர்ச்சுக்குள்ள என்னை பார்த்த மாதிரியே காட்டிக்கலையே.."

"என்னது...!! நீங்க உள்ள இருந்தீங்களா... சாரி நான் கவனிச்சு பார்த்து இருக்க மாட்டேன்... எங்க இந்த பக்கம்?.."

"இது நான் கேக்க வேண்டியது... இந்த சர்ச் ஹோம்ல தான் நான் வளர்ந்தேன்... ஒண்ணு சொல்லவா.. சுரேஷ் இங்க தான் இருக்கான்..."

"நிஜமாவா.. சூப்பர்.. உங்களுக்கு பெரிய மனசு.. ரொம்ப தேங்க்ஸ் சார்.."

"ஹே எதுக்குங்க தேங்க்ஸ்... சரி நீங்க கிறிஸ்டியனா...? " என்று ஆர்வம் மேலோங்க கேட்டான்.

"ம்ம்ஹூம்... என் ஃபிரெண்ட் நிலாதான் கிறிஸ்டியன்..., உள்ளே இருக்காளே, அவ தான்... சஞ்சனாவும் அவளும் கஸின் சிஸ்டர்ஸ்..."

'யார் சஞ்சனா..?' என்ற கேள்வியை அவன் முகத்தில் பார்த்தவள் ..

அசடு வழிய "சஞ்சனா என்னோட இன்னொரு ஃபிரெண்ட்... இன்னொருத்தி மினி... நாங்க நாலு பேரும் ரொம்ப க்ளோஸ்..."

"அப்படியா... சர்ச்சுக்கு எல்லாம் வரீங்களே...! ஒண்ணும் சங்கடமா இல்லையா.."

"சங்கடமா...! எதுக்கு...? சார்..., நமக்கு மேல ஒரு சக்தி இருக்கு,

அதற்கு பேர் கடவுள்... பேருதான் வேற வேறயே தவிர, எல்லாம் ஒண்ணு தான்... அதை ஏன் பிரிச்சுப் பார்க்கணும்னு எங்க அப்பா அடிக்கடி சொல்லுவார்.."

முகம் மலர.. "அப்படியா நைஸ்.."

"ம்ம் எல்லா கடவுளும் ஒண்ணுதான்.... நாம தான் தேவை இல்லாத பிரிவினைகள் வைத்து, அதையே பிடித்துக்கொண்டு, மூர்க்கத்தனமாக இருக்கிறோம்னு எங்க அப்பா சொல்லுவார்..."

"உண்மை தானே.." என்றவனின் கண்கள் பேசும் போது சட் சட்டென மாறும் அவள் முகப்பாவனைகளை ரசிக்க...

"அவ்வளோ ஏன், ஹிந்துக்களுக்கு உள்ளேயே ஹரியும் சிவனும் ஒண்ணு, இதை அறியாதவன் வாயில் மண்ணுன்னு..."

அவள் முடிக்கும் முன்பாகவே "இதையும் உங்க அப்பா சொல்லுவாரா.."

சிரித்தப்படி "சார்ர்ர்ர்..., இது விவேக் சொன்னது.."

"யாரு விவேக்... ஓ.. விவேகானந்தரா...!"

'அட தேவுடா... இது கூட தெரியாதா... நல்லவேலை.., விவேக் உன் அப்பாவான்னு கேக்காம விட்டானே சாமீ'... என் மனதினுள் அலறியவள்

"சார், அவர் ஒரு நடிகர்... உங்களுக்கு தெரியாதா..?"

"ஒ.. அப்படியா.. சாரி... நான் படம் பார்ப்பது இல்ல.. ஹோம்ல படம் பார்க்க அனுமதி இல்ல.. இப்போ என்னவோ எனக்கே விருப்பம் இல்ல.." என்றவனை பாவமாக பார்த்தவள்...

அடுத்து பேச்சை எப்படி நகர்த்துவது என்று புரியாமல், "சார், பொண்ணு வண்டி வருது போல... வாங்க போய் பார்ப்போம்.."

"இன்னும் நீங்க உங்க பேரை சொல்லலையே.."

"பேரா...!!" எனத் தயங்கியவள், பின் புன்னகையுடன்... "'ஷைலஜா'..."

"நல்ல பேரு.."

கண்களை சுருக்கியப்படி... "கொஞ்சம் பழைய பேரு மாதிரி இல்ல.."

“அப்படியா...”

“என்ன அப்படியா...! எனக்கு அப்படித்தான் தோணுது... சார்..., பொண்ணு வந்தாச்சு... நான் கிட்ட போறேன்.. நீங்களும் வாங்க ”

“ஷைலஜா..” என்று அவள் கையைப் பிடித்தவன், அவசரமாக வாசலுக்கு மறுபுறம் கொண்டு வந்து நிறுத்தி...

“ஷைலஜா...., திரும்ப சனிக்கிழமை அந்த மால்ல, அதே இடத்தில பார்க்கலாமா...”

அவன் கையைப் பிடித்ததே அதிர்வைக் கொடுக்க, திகைத்து விழித்தவளாய்... “ஏன்...? நாம ஏன் பார்க்கணும்..?” என்று தடுமாறியப்படியே, அவனையும், கையையும் மாறி மாறிப் பார்த்தவள், கையை உருவிக்கொள்ள முயற்சிக்க, அவள் கேள்வியும் செய்கையும் அவன் முகத்தை இறுக வைத்தது.... மேலும் விடாமல் பிடியை இறுக்கியவன்.. கோவிலினுள் தீவிரமான ஒரு பார்வையை பார்த்தவாறே.., ஒரு முடிவெடுத்தது போல், அவள் கைகளை எடுத்து தன் இரு கரங்களுக்குள் வைத்தவன், அவளின் அலைப்பாயும் விழிகளுக்குள் எதையோ தேடுவது போல...

“ஷைலஜா..., நீங்க என் கூடவே, வாழ்க்கை முழுவதும் எனக்கு துணையா வரணும்னு ஆசைப்படுறேன். யோசிச்சு சொல்லுங்க... இது கட்டாயம் இல்லை... பிடிக்கலைனா கூட பரவாயில்லை... ஆனா... வந்து ஏன் பிடிக்கலைன்னு காரணத்தை மட்டும் சொல்லிட்டு போங்க... நான் வரேன்...” என்று விலக இரண்டு எட்டு வைத்தவன் அதற்கு மேல் முடியாமல்...

அவளிடம் கெஞ்சுவது போல “ஷைலஜா..., பிடிக்கலை என்பதற்கு என்ன காரணம் வேண்டுமானாலும் சொல்லுங்க... ஆனா அனாதைன்னு சொல்லி ஒதுக்கிடாதீங்க...” என்றவனைப் பார்த்து, அவன் சொன்ன செய்தியை ஜீரணிக்கவும் முடியாமல்..., பதில் சொல்ல வார்த்தையும் வராமல் நின்றிருந்தவளை ஒரு கரம் உலுக்கியது...

“ஹே ஷைலு..., அங்க மாஸ் ஆரம்பிக்கப் போகுது, இங்க என்ன பண்ற... ஆமா, சார் யாரு?..” என்று ஜனாவை புரியாமல் கேள்வியாக பார்த்த நிலாவுக்கு ஒரு புன்னகையை தந்தவன், ஷைலுவின் முகத்தைப் பார்க்க..

“இவர்... இவர்... ஜனார்த்.. அந்த ஷாப்பிங் மால்ல... அந்த சின்னப்

பையன்...”

“ஹோ அவரா... சார்.. நீங்களா...! இவ உங்களைப் பத்தி பேசிப் பேசி காதை பஞ்சர் பண்ணிட்டா... தெரியுமா...! உங்களை பார்க்கணும்னு நாங்க ரொம்ப ஆசைப்பட்டோம்...”

முகம் மலர ஷைலுவைப் பார்த்தவன்... “ஒ அப்படியா.. சரி நான் வரேன்..” என ஷைலுவை பார்த்து சொன்னவன் “அப்போ பார்க்கலாமா..” என ஜனா கேட்க பதில் சொல்லாமல் தன் இயல்பாய் அவள் தலை ஆடியது, சிரித்தபடி விலகியவனை கடுப்பாக பார்த்த நிலா...

“என்னடி இது... நான் பேசிட்டே இருக்கேன் கொஞ்சம் கூட மேனர்ஸ் இல்லாம.. இருக்கிறார்.”

“நிலா... சாரிடி. அவர் கொஞ்சம் கூச்ச சுபாவம்...” என்றவள், தனக்குள் அதிர்ந்து... ‘இதை நான் எப்படி சொன்னேன்..? எனக்கு எப்படி தெரியும், அவனுக்கு கூச்ச சுபாவம்னு... இந்த இரண்டே சந்திப்பில் அவரை எந்தளவுக்கு தெரியும்...?’ என்று யோசிக்கையில்

“சரி வா சிஸ்டர் தேடுவாங்க... ஆனா.. ஜனா..., ஆள் கருப்பாக இருந்தாலும், சூப்பரா இருக்கார்... செம ஹான்ட்ஸம்..” என்றவளை முறைத்தவரே பின் தொடந்தாள் ஷைலு.

அடுத்து வந்த இரு நாட்களோ, ஷைலுவின் மனம் தவியாய் தவித்தது. முதலில் ‘எப்படி அவன் காதலிக்கிறேன்னு சொல்லுவான்...?’ என்று கோபத்தில் கொதித்தவள்.., அவன் அந்த வார்த்தையை சொல்ல வில்லையே... எவ்வளவு நாகரீகமாக ‘வாழ்நாள் முழுமைக்கும் துணையாய் வா’ என்று சொன்னான் என்று குளிர்ந்து... ‘அதெப்படி என்னை காதலிப்பான்..’ ‘அவன் லவ் பண்ணினால்.. நானும் பண்ணனுமா.. முடியாது..’ ‘ஏன் பண்ணினால் என்ன... தப்பா...? என்ன குறை அவனுக்கு..’ என்று தனக்கு சாதகமாக யோசித்தது.

கையை பிடிக்கிறான்... மாலுக்கு வர சொல்லுறான்... லவ் பண்ண மாலுக்கு வர சொல்லுவானா...? அதெப்படி என்னை மாலுக்கு வர சொல்லுவான்...? ‘ராஸ்கல்... நான் போக மாட்டேன்’ என்பதில் ஆரம்பித்து.. ‘ஏன்... போகக் கூடாது..?’ ‘போனா என்ன..’ போனா தப்பா’ என்று பட்டிமன்றம் நடத்தி..., ‘நான் போவேன்..’ என்பதில் முடிந்தது.

மனதின் ஓரத்தில் இருந்தவன், மனம் முழுவதும் புகையாய் படர.. ‘ரொம்ப நல்லவன்’ ‘அவனுக்கு யாரும் இல்லை...’ ‘அவனை கல்யாணம் செய்துக்கிட்டால், நானும் அம்மா அப்பாவை பிரிய வேண்டாம்’ ‘கடைசி வரைக்கும் அவங்க கூடவே இருக்கலாம்..’ ‘அவருக்கும் யாரும் இல்லேங்கிறதால, அவரும் எங்க வீட்டுக்கு முத்த மகனாய் இருப்பார்’.. ‘அப்பாவும் மறுக்க மாட்டார்’ என்று அனைத்தையும் தனக்கு சாதகமாக முடிவு செய்தாள்.

அதுவரை எந்த ஒரு விஷயத்தையுமே, சீரியஸாக அணுகிப் பார்த்திராத ஷைலுவின் விளையாட்டுத்தனம், காதலையும் அதைப் போலவே விளையாட்டாகவே எண்ண வைத்தது. சிட்டுக்குருவி போல சிறகடித்துப் பறக்கும் கல்லூரி பருவம் அவளுக்கு..! எந்நேரமும் தன் நினைவில் வாழும் ஒருவன்.., ஜாலியான பைக் டிரைவ்... ஸ்வீட் நத்திங்ஸ் உரையாடல்களில் பொழுதைக் கழிப்பது தான் காதல்...! காதல் என்றால் வெறும் சந்தோஷம் என்று அதை மட்டுமே நினைவில் நிறுத்தினாள்.

அதனால் தான் ஜனா விஷயத்திலும் கூட, அனைத்து விஷயங்களையும் தனக்கு சாதகமாகவே யோசித்தாள்..., ‘அவன் அனாதை, அவனுக்கு யாருமில்லையே.. நாம் அவனை கல்யாணம் செய்துக் கொண்டால், நம் வீட்டோடு இருப்பான்.’ என யோசித்தவள், அவன் அனாதை என்பதையும் கூட கூடுதல் தகுதியாக தான் நினைத்தாள்.

அதன்பின் அவனைப் பார்க்க போவதை நினைத்து படப்படப்பானாள்... அவன் எப்படி ப்ரொபோஸ் பண்ணுவான்..? எப்படி ரியாக்ட் பண்ணனும்..? என்று நடத்திய பல ஒத்திகையில், கண்ணாடியின் பாதரசத்தை உருக வைத்தாள்..

முடிவாக அவன் லவ் சொன்னதும்.. வெட்கப்படாமல் எப்படியும் பதிலுக்கு ‘ஐ லவ் யூ’ சொல்லிடணும் என்று முடிவு செய்துவிட்டு... அவனை முதலில் பார்த்தப்போது, போட்டு இருந்த சுடிதாருடன் கிளம்பினாள்.

வீட்டில் முதல் பொய்யை ஆரம்பித்து வைத்தாள்..., எப்படி அந்த மால்லை அடைந்தோம் என்று புரியாத அளவிற்கு படப்படப்பில் இருந்தாள்... அவனைக் கண்டதும் வெட்கமும் சேர்ந்துக் கொள்ள நடைபின்ன.. தடுமாற்றத்துடன் அவன் எதிரே அமர்ந்தவளுக்கு... அவனின் பூரித்த முகமும்.. மகிழ்ச்சி தெறித்த கண்ணும்.. பல

செய்திகளைச் சொன்னது...

அந்த நொடியில்.., இந்த காதல் முடிவு சரியே என்று மனதார நினைத்தாள்.

வெட்கத்தில் மலர்ந்து காணப்பட்ட அவளுடைய முகத்திலிருந்தே, அவளின் மனம் புரிந்துவிட, அவனுக்கோ உலகமே வசப்பட்ட உணர்வு... நடப்பது நிஜம் தானா என்று நம்ப இயலாமல் தவித்தான்... தன்னை ஒரு நிலைக்கு கொண்டு வந்தவன்..

“தேங்க்ஸ் ஷைலஜா... நீங்க... இல்ல.. நீ வருவேன்னு நினைக்கல...”

வெட்கம் பேச்சை நிறுத்தி வைக்க.. பதில் சொல்ல வார்த்தை இல்லாமல், அவன் முகத்தையும் பார்க்க முடியாமல் தவித்தவள், மனமோ ‘சீக்கிரம் உன் காதலை சொல்லுடா‘ என்று புலம்பியது...!

“ஷைலஜா..., காஃபி குடிப்பியா..?” என்று பதிலை எதிர்பாராமல் எழுந்து சென்றவனைப் பார்வையால் தொடர்ந்தாள்.. காஃபியுடன் வந்து அவளுக்கு ஒன்று கொடுத்தவன்... இமைக்காமல் அவளை பார்த்துக் கொண்டு இருந்தான். அவன் பார்வை அவளை இம்சை செய்ய.. தன் பார்வையை வேறுபுறம் ஓட விட்டவள், தன் அருகே இருந்த குழந்தை ஐஸ்கிரீம் சாப்பிடும் அழகை ரசிக்க ஆரம்பித்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டு இருந்தவன், எதுவும் சொல்லாமல் எழுந்து செல்ல.. எங்கே போகிறான் என்று புரியாமல் பார்த்தாள்... திரும்ப வந்தவன் கையில் ஐஸ்கிரீமைப் பார்த்ததும் திகைத்து விழிக்க...

அவளிடம் ஐஸ்க்ரீமை நீட்டியபடி “என்னை விட இது தான் உன்னை கவர்ந்ததா..! இந்தா... இனியாவது என்னைப் பாரேன்..”

சிணுங்கலாக “நான் ஒண்ணும் இதைப் பார்க்கலை... அந்த குழந்தை.. உங்களை... நான் எப்படி... காஃபி வீணாக போகுமே..” என்று உளற ஆரம்பித்தாள்.

“அதெல்லாம் வீணாகாது, நான் எடுத்துக்கிறேன்... நீ ஐஸ்கிரீம் சாப்பிடு.. சின்ன சின்ன ஆசைகளை கூட ஏன் தடுக்கணும்?..” என்றவன் தன் இயல்பாய் அவள் குடித்த காஃபியை எடுக்க...

ஷைலு தான் தடுமாறி போனாள்... அடுத்த அரைமணி நேரம் பேச்சே இல்லாமல் கழிய...

“ஓகே ஷைலஜா.., உன் போன் நம்பரைக் கொடு..” என்றவாறே அவள்

கையில் இருந்த போனை வாங்கி, அவனே அவன் செல்லுக்கு மிஸ்டு கால் கொடுக்க... அவன் போனைப் பார்த்தவள்.., 'என்ன இது, போன்ல எவ்வளோ அட்வான்ஸ்ட் மாடல்கள் இருக்கு, இவன் இன்னும் இந்த பழைய மாடல் பட்டன் சிஸ்டம் போனை வச்சு இருக்கானே...' என்று விழித்துவிட்டு...,

"என்ன பட்டன் சிஸ்டம் போன் வச்சு இருக்கீங்க.. இது எல்லாம் சிவாஜி காலத்தோட காலாவதி ஆகிடுச்சே... புதுசா டச் ஸ்க்ரீன் வாங்கலாமே.."

"ஷைலஜா, போன் எதுக்கு...? பேசுறதுக்கு தானே...! அதுக்கு ஒரு பச்சை பட்டன், ஒரு சிகப்பு பட்டன் போதும்...! மத்தது எல்லாம் தேவை இல்லாத தலைவலி.. புரியுதா?.." என்றவனை, 'இவனை நிறைய மாற்றணும் போலவே!...' என்பது போல பார்த்தாள்...

"சரி அப்போ அப்புறம் பார்க்கலாம்.. கிளம்பலாமா.." என்றபடியே எழுந்தவனைப் பார்த்து திடுக்கிட்டவள் ..

'அவ்வளோ தானா..! வேற ஒண்ணும் இல்லையா..? என்னை விரும்புகிறேன்னு ஒரு வார்த்தை கூட சொல்லலை.. ஒரு சின்ன ஐ லவ் யூ, அது கூட இல்லை... என்ன இவன்...!' என்று குழம்பியவாறே தலை அசைத்தவள்..

"ஓ கிளம்பலாமே.. எங்க அம்மா தேடுவாங்க.." என தடுமாற்றத்துடன் எழ...

அவள் வார்த்தை பிரேக் போட்டது போல் ஒரு நொடி அவனை நிறுத்தி வைத்தது. 'என்னது இது.. என் கூட இருக்கும்போதும், அம்மா நியாபகமா... இவளைப் பார்த்ததில் இருந்து எனக்கு இவளைத் தவிர வேறு எண்ணம் இல்லை. ஆனா இவ.. ச்சே... பாவம் சின்னப் பொண்ணு தானே... அவளுக்கு நானே எல்லாமுமா ஆகணும்னா கொஞ்ச நாள் ஆகும்தான் ' என நினைத்தவன் மீண்டும் அமர்ந்து...

"ஷைலஜா..., கிளம்பலாம்னு சொன்ன உடனே கிளம்பணுமா...? கொஞ்ச நேரம் இருக்கலாம்னு சொல்லலாம் இல்ல... உடனே கிளம்புற... எனக்கு உன் கூடவே இருக்கணும்னு தோணுது.. என் கூட இன்னும் கொஞ்சம் நேரம்இருப்பியா...?"

இப்படி கேட்பவனுக்கு என்ன பதில் தருவது என மனம் யோசிக்கும் முன் அவள் தலை, சம்மதத்திற்கு அறிகுறியாக அசைந்தது.. உடல்

அவன் எதிரே அமர்ந்தது...!

சில நேரங்களில் தைரியம் என்பது கண்ணீரை அடக்கி கொள்வது இல்லை, அதை சிதற விடுவதே...

காதல் என்பது தூரத்துப் பச்சை போன்றது... அது அழகானது... ரசிக்க வைப்பது...! வேறு எதைப் பற்றியும் யோசிக்க வைக்காது.. குறை பார்க்காது...! குறையை கூட நிறையாய் மாற்றும் வித்தை தெரிந்தது...! ஷைலுவின் நிலையும் அப்படித் தான் இருந்தது...! அவளிடம் விருப்பத்தை சொல்லி, சிறகில்லாமல் பறக்க வைத்தவன்... இப்போது காதலால் அவளை தடுமாற வைத்தான்.

கொஞ்ச நேரமே அந்த தடுமாற்றமும்... தன்னைப் பிரிய மனம் இல்லாமல் தான், இருக்க சொல்கிறானோ என்று யோசித்தவளுக்கு, உலகமே வண்ணமயமானது...! கலர் கனவுகளை வாரி இறைத்தது...! நேரமும் சடுதியில் நழுவியது...!

தன்னையே இமைக்காமல் பார்த்தவனின் பார்வை, அவளுக்குள் ஒரு இனிமையான பதட்டத்தை ஏற்படுத்த... மனமோ, 'டேய் ராஸ்கல், ஏண்டா இப்படி பார்க்குறே...? ஆளையே விழுங்குற மாதிரி..!' என்று புலம்பியது... அவனின் பார்வை கொடுத்த சங்கடத்தை தவிர்க்க.., என்ன செய்வதென்றே புரியாமல், அங்குமிங்கும் கண்களை ஓட்டியவாறே நேரத்தைப் பார்த்தவள், ஒருமணி நேரம் கடந்து இருக்க... மெல்ல குரல் எழும்பாமல், "ஏதாவது பேசுங்களேன்..." என்றாள் தடுமாறும் குரலில்.

மேலும் அவளை உற்று நோக்கியவன்.. "என்ன பேசுறது...? எனக்கு கோர்வையா பேச தெரியாது. என்ன பேசணும், எப்படி பேசணும்னும் தெரியாது... அதைவிட, எனக்கு உன்னைப் பார்த்துக்கிட்டே இருந்தாலே போதும்ன்னுதான் தோணுது... உனக்கு பேசணும்னு தோணுச்சுன்னா, நீ பேசு, நான் கேட்கிறேன்..." என்றவனை வியப்பாய் பார்த்தவள்...

அவன் பார்வையின் கேள்விக்கு பதில் சொல்ல இயலாமல், பார்வையைத் திருப்பினாள்... அவன் கண்களில் தெரியும் காதல், அவளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது... அவனைப் பற்றிய நினைப்பில் திளைத்திருந்த அவளது கவனத்தை, அவ்விடத்தைக் கடந்த ஒரு பெண் அணிந்து கொண்டிருந்த புடவை, கலைத்தது.

பளீர் என கண்களை உறுத்தும் ஃப்ளோரசன்ட் மஞ்சள் நிற புடவையில் அவரைப் பார்த்ததும்..., இயல்பான பெண்ணின் குணம் தலைத்தூக்க...

‘கடவுளே, என்ன கலர் இது...! கண்றாவி... இதுல இவ்ளோ நுண்ணிய வேலைப்பாடு வேற செஞ்சு இருக்காங்க... எத்தனை அருமையான வொர்க்!.... இதையே வேற அழகான கலர்ல உள்ள புடவையில செய்திருந்தா, செமையா இருக்குமே... இப்படி சொதப்பி வச்சிருக்காங்க... காசுக்கு பிடிச்ச கஷ்ட காலம்... இவங்க ரசனையில் தீயை வைக்க..’ என்ற அவள் எண்ண ஓட்டத்திற்கு ஏற்ப, அவளின் முகபாவனைகளும் மாற...

“என்ன மேடம்..., என்னைத் தவிர எல்லோரையும் பார்க்குறே... என்னை பார்க்க மாட்டேங்குறே... இந்த தடவை உன்கிட்ட யார் மாட்டினா..?”

ஜனாவின் கேள்வியில் திடுக்கிட்டவள், அந்த பெண்மணி பற்றி தான் நினைத்ததை சொன்னால், என்ன நினைப்பானோ..! என்ற எண்ணத்தில், புடவையின் நிறம் பற்றி தான் நினைத்தவற்றை சொல்லாமல், அந்தப் பெண்மணியை சுட்டிக்காட்டி... “இல்ல, அந்த மஞ்சப் புடவை கட்டி இருக்காங்களே, அந்தப் புடவையில செய்து இருக்கிற எம்பிராய்டரி, ஸ்டோன் வொர்க் எல்லாம் ரொம்ப அருமையா இருக்கு, நுணுக்கமா செஞ்சு இருக்காங்க, அதான் பார்த்தேன்...”

“அப்படியா...! அந்த புடவையா..!” என்று யோசனையாகப் பார்த்தவன்... “சரி, நீ கிளம்பு.. நேரமாகுது.. இன்னொரு நாள் மீட் பண்ணலாம்...”

‘என்னது கிளம்பவா..’ சட்சட்டென மாறும் அவனின் குண இயல்பைக் கண்டு வியந்தவாறே, அவனிடம் தலையாட்டி விடைப்பெற்றவள்.. அவனும் தன்னுடன் வருவான் என்று எதிர்ப்பார்த்து... வெளியே வந்து கொஞ்ச நேரம் காத்திருந்தும், அவன் வரவில்லை என்றதும்... ‘ஆண்டவனே.., காதலியை இப்படி பொசுக்குனு ‘போ’ன்னு சொல்லுற ஆள் இவனா தான் இருப்பான்... பார்க்கிங் வரையாவது கூட வந்து இருக்கலாம்...’ என்று நினைத்தபடி வண்டியை கிளப்பினாள் ஷைலு.

ஷைலுவின் உருவம் மறையும் வரைக்கும் அங்கேயே நின்று இருந்தவன்... இரண்டே எட்டில், அந்த புடவையை அணிந்திருந்த பெண்மணியை நெருங்கி... தன் மனைவிக்கும் அதேபோல் ஒன்று

வாங்க வேண்டும் என்று சொல்லி, அவரிடம் அந்தப் புடவை கிடைக்கும் இடத்தை தெரிந்துக் கொண்டுதான் நகர்ந்தான் ஜனார்த்.

அடுத்து வந்த ஐந்து நாட்களும் தவிப்புடனே கழிந்தன ஷைலுவிற்கு... ஜனாவின் போனை ஆவலுடன் எதிர்ப்பார்த்தாள்... அவன் பக்கத்தில் இருந்து எந்த பிரதிபலிப்பும் இல்லை என்று ஆனதும் கலங்கித் தவிக்க ஆரம்பித்தாள்...

'அவனே வந்தான், காதலை சொன்னான்... சம்மதம் சொன்னதும்..., பதிலே இல்லை என்றால் என்ன நினைக்க...! அவனோட பெயரை தவிர அவனைப் பற்றி ஒன்றுமே தெரியலையே....! தான் எடுத்த முடிவு தவறோ.'. என்று குழம்பி, மனதுக்குள் ஒரு நிலையில்லாமல் மருகினாள்.

அன்று ஸ்ரீஜாவின் பிறந்த நாள்.. எனவே தன் சஞ்சலங்களை மறைத்து, முயன்று கலகலப்பை முகத்தில் கொண்டு வந்தாள்... மாலையில் கல்லூரி முடிந்து வந்ததும், கோவிலுக்கு சென்றுவிட்டு, அப்படியே ஹோட்டலில் இரவு உணவையும் முடித்துவிட்டு வரலாம் என்று வீட்டில் அனைவரிடமும் பேசி முடிவு செய்துவிட்டு...

பெருமுயற்சி செய்து கொண்டு வந்த உற்சாகம் நிலைக்க... கல்லூரிக்குள் அடியெடுத்து வைத்தவளை, செல்லின் ஓசை கலைத்தது... ஜனாவின் எண்ணைப் பார்த்தும், அதுவரை மனதை அழுத்திய பாரம் விலக... மகிழ்ச்சியுடன் அதை எடுத்து காதுக்கு கொடுத்தவள்....

"ஹே.. என்னப்பா ஆளையே காணோம், இப்போத்தான் என் நியாபகம் வந்துச்சா...?.." என்று குரலில் மொத்த மகிழ்ச்சியையும் தேக்கி கேட்க..

"ஷைலஜா.., ஈவ்னிங் மாலுக்கு வந்துடு.... நான் வெயிட் பண்ணுறேன்..."

"இல்ல... என்னால வர முடியாது.. இன்.." எதிர்முனையில் 'பீப்' சவுண்ட் மட்டும் கேட்க.... 'அதுக்குள்ளே வைச்சுட்டானா...! நான் என்ன பதில் சொல்லுறேன் என்று கேட்கும் பொறுமை கூட இல்லையா...? இவனை...' என்று கோபத்தில் அவன் எண்ணை அழுத்த... எடுத்த எதிர் முனையோ...

"என்ன முட்டாள்தனம் பண்ணுற ஷைலஜா... அதான் ஈவனிங்

பேசலாம்னு சொன்னேனே... காலேஜ்ல தானே இருக்குற, கிளாஸ் ஆரம்பிச்சு இருக்குமே.... இப்போ அவசியம் பேசியே ஆகணுமா...? எல்லாம் ஈவ்னிங் கொஞ்சிக்கலாம், வந்து சேரு..” என கடித்து துப்பியவன், இப்போதும் அவளின் பதிலுக்கு காத்திராமல் போனை கட் செய்ய.. போனை வெறித்தவள்...

‘பகவானே.., நியாயமா பார்த்தா, நான்தானே கோபப்படணும்...? இவன் ஏன் இப்படி கொதிக்கிறான்...? எனக்குன்னு வந்து மாட்டுச்சு பாரு, ரொமான்ஸ்னா கிலோ என்ன விலைன்னு கேக்குது ? இருடி.., ஈவ்னிங் உனக்கு கச்சேரி இருக்கு...’ என்று மனதுக்குள் புலம்பியவள்... பார்கவிக்கு ஸ்பெஷல் கிளாஸ் என்ற பொய் மூட்டையை SMS மூலம் அனுப்பிவிட்டு... ‘நான் வரலைன்னு தெரிஞ்சா, பாவம் ஸ்ரீ, சோர்ந்து போய் இருப்பாளே...!

ஆனா இந்த கூமுட்டை இவ்வளோ நாள் கழிச்சு இப்போதான் இறங்கி வந்திருக்கு. இன்னிக்கு அவனை பார்க்க முடியாதுன்னு மெசேஜ் அனுப்பிட்டு தங்கையை கவனிக்கலாம்னா, அப்புறம் இவனை எப்போ பார்க்கமுடியுமோ’..., தங்கையின் முகம் மனதை அலைக்கழிக்க... அதனால் எழுந்த கோபத்தையும் சுமந்துக் கொண்டு ஜனாவை காணச் சென்றாள்.

இவளைப் பார்த்ததும், மலர்ந்து சிரிக்கும் அவன் முகத்தைக் கண்டதும், கோபம் தலைக்கு ஏற... அவனை பேச விடாமல்... “ஜனா, நீங்க செய்றது சரியில்லை.. இப்படி திடீர்னு வர சொன்னா எப்படி...? இன்னைக்கு என் சிஸ்டரோட பிறந்த நாள்.., எவ்ளோ பிளான் போட்டு வச்சு இருந்தோம் தெரியுமா...? பாவம் சின்னப் பொண்ணு... ஏமாந்து போயிருப்பா... இனிமே இப்படி செய்யாதீங்க, சரியா... ஓகே, எதுக்கு வர சொன்னீங்க? நான் சீக்கிரம் கிளம்பணும்” என்றவள், எதிரே இருந்த தண்ணீரைக் குடிக்க...

அவள் குடித்து முடிக்கும் வரை காத்திருந்தவன், அவள் மீண்டும் பேச வாய் எடுக்கும்முன், நிறுத்தும்படி சைகை செய்ய... அவனின் இறுகிய முகம் பீதியைக் கிளப்பியது... அவன் கை மேல் கை வைத்தப்படி... “என்ன ஜனா..?”

அவன் பார்வை, அவள் கைமேல் படிந்தது., மெல்லிய கீற்றாய் கண்ணில் ஓர் ஒளி தெரிய, கோபம் குறைந்த தொனியில்... “ஷைலஜா..., நான் உன்னைவிட அஞ்சாறு வயசு பெரியவனா இருப்பேன்... இப்படித்தான் மரியாதை இல்லாம பேர் சொல்லி

கூப்பிடுவியா...?"

அவனின் கேள்வி திகைப்பைக் கொடுக்க... "இல்ல... அது..." வார்த்தை வராமல் தடுமாறினாள்.

"ஷைலஜா..., இப்போ எல்லோரும் அப்படி கூப்பிடுவது சகஜமா இருக்கலாம், ஆனா நான் வளர்ந்த விதம் அப்படியில்லை... அங்க சின்னவங்களுக்கும் மரியாதை கொடுக்கணும்... மனித வாழ்க்கைக்குன்னு இருக்குற சில நெறிமுறைகள், எந்த சந்தர்ப்பத்திலும் தவறக்கூடாது என்று கட்டுப்பாடான முறையில் வளர்ந்தவன்... நான் மத்தவங்களை அப்படித்தான் நடத்துறேன்... ஆனா யாருமே அதை எனக்கு திருப்பி தரது இல்லை..."

"இந்த யூனிட் ஆரம்பிக்குறதுக்கு முன்னாடி, ஒரு கம்பெனியில வேலைப் பார்த்தேன்... ரொம்ப மரியாதை குறைவா... ப்ச்... ஒண்ணும் சொல்லுறதுக்கு இல்லை... அனாதைங்க தானே, இவங்களுக்கு மரியாதை தேவையில்லைன்னு தான் இந்த மொத்த சமுதாயமும் நினைக்குது இல்ல.., இப்போ இந்த யூனிட்டை நானே சொந்தமா ஆரம்பிச்ச அப்புறம் தான்.. 'சார்' என்ற வார்த்தையையே கேட்குறேன்.

ப்ளீஸ் ஷைலஜா..., நீ என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டா, பொட்டுல அடிச்ச மாதிரி இருக்கு... எனக்கு நீ ரொம்ப முக்கியமானவ.., நீயே பேர் சொல்லி கூப்பிட்டா, கஷ்டமா இருக்கு... வாங்க போங்கன்னு சொல்லு..., இல்லைன்னா உங்க அம்மா, உன்னோட அப்பாவை எப்படி கூப்பிடுவாங்களோ, அப்படி கூப்பிடு... ஓகே.."

'ச்சே பாவம்.. ரொம்ப தாழ்வு மனப்பான்மையில இருக்கிறார் போல.., பாவம், இனி நான் இருக்கேன் கண்ணா உனக்கு' என்று நினைத்தவள்.

'என்னது, அம்மா கூப்பிடுற மாதிரியா.. சின்னதுல மாமான்னு கூப்பிட்டவங்க, நாங்க வளரவும், ஷைலு அப்பான்னு தானே கூப்பிடுறாங்க... இவனை நான் எப்படி...?' என்று யோசித்தவளின் முகத்தை வெட்கம் சூழ..., பேச்சை சுமூகம் ஆக்கும் பொருட்டு....

"இப்போதைக்கு வாங்க போங்கன்னே சொல்லுறேன்... ஆனா எனக்கு இப்படியெல்லாம் எந்த கண்டிஷன்ஸ்சும் இல்லை, நீங்க ஷைலுன்னு கூப்பிடலாம், கண்ணே மணியேன்னு கொஞ்சலாம்... அவ்வளோ ஏன்.., வாடி போடின்னு கூட சொல்லலாம்... சாய்ஸ் இஸ் யுவர்ஸ்..." என்றாள் கொஞ்சலாக.

“நீ என்ன குழந்தையா.., கண்ணு மண்ணுன்னு கொஞ்சுறதுக்கு... நான் நினைச்சது சரியாய் தான் இருக்கு.., இன்னும் குழந்தைத்தனமா தான் இருக்க... உனக்கெல்லாம் பார்த்து பார்த்து பேர் வச்சிருக்காங்க இல்ல, அதான் சுலபமா, உன்னோட பேரைக் கொலை பண்ண தோணுது. நான் ஷைலஜான்னு தான் கூப்பிடுவேன், எனக்கு அப்படித்தான் கூப்பிடப் பிடிக்குது... ஓகே.... போறாததுக்கு இதுல வாடி போடின்னு வேற சொல்லணுமா...?

ஒருபக்கம் பெண்களுக்கு சமஉரிமை கொடுன்னு கோஷம் போடுறீங்க.., அப்புறம் இந்தபக்கம் வந்து, ‘டி’ சொல்லுன்னு கொஞ்சுறீங்க... கேனத்தனமா இல்ல?...” என கண்டிப்புடன் கேட்டவனை, என்ன செய்வது என்பது போல மலைத்துப்போய் பார்த்து... ‘‘ஈ’ என இளித்து வைக்க...

அதிலே மகிழ்ந்தவன்... “ஷைலஜா, உன்னிடம் ஒண்ணு சொல்லணும்..” என்று தயங்கினான்.

‘ஆத்தீ...! தயக்கமா...! இவனுக்கா...! ஏதோ சரி இல்லையே...! ஹய்யோ ராசா, அடுத்து என்ன வெடியைக் கொளுத்தப் போகிறாரோ..’ என்று நினைத்துக்கொண்டே, “என்ன தயக்கம்... சீக்கிரம் சொல்லுங்க... நேரமாகுது, நான் கிளம்பணும்.., ஸ்ரீஜா காத்திருப்பா..”

“இது... இது தான் ஷைலஜா... என்னைப் பொறுத்த வரைக்கும், எனக்கு எல்லாமே நீ தான்...! உனக்கும் அப்படித்தான் நான் இருக்கணும், என்னை விட உனக்கு, உன் குடும்பமும் ஸ்ரீஜாவும் பெருசா?...” என்றான் ஆதங்க குரலில்...

யோசிக்க வைக்க வேண்டிய இந்த கேள்வி, அவளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது... அந்த பொறாமை கூட, அவள் மேலான அன்பில் விளைந்தது தானே...! என எண்ண வைத்தது.

“இங்க பாருங்க... அவ என்னோட தங்கை.. எனக்கு..”

“அதை விடு, எனக்குப் புரியுது... ஆனா என் மனசுக்கு அது புரியலையே...! அது ரொம்ப எதிர்ப்பார்க்குதும்மா... சரி இந்தா...” என்று அவன் நீட்டிய பார்சலை, புரியாதப் பார்வையுடனே வாங்கியவள்...,

“என்னப்பா இது..”

“பிரிச்சுப் பாரு..”

“என்ன...!!!” என்று சிரித்தக்கொண்டே பிரித்தவள், ஷாக் அடித்த உணர்வில் கையை விலக்க... வழவழப்பாக அவள் மடியில் விழுந்தது அந்த மஞ்சள் நிறப் புடவை...! கூடுதல் வேலைப்பாடுகளுடன் ஜொலித்தது...!

கொஞ்சமும் அதிர்ச்சி விலகாமல்.., எச்சிலை விழுங்கியவாறே “என்ன இது...! இப்போ எதுக்கு புடவை...! அதுவும் இந்தப் புடவை!!... இப்போ ஏன்...?”

“அன்னிக்கு, இந்த டிசைன் நல்லா இருக்குன்னு சொன்னியே..!”

‘முருகா.., டிசைன் நல்லா இருக்குன்னு சொன்னது, ஒரு குத்தமா...? என்னடா இப்படி படுத்துறே....?’ என மனதுக்குள் பல்லைக் கடித்தவள்...,

“அதுக்கு இல்ல... இப்போ இவ்வளோ செலவு பண்ணனுமா?...”

“நீ தானே அன்னிக்கு அந்தப் புடவையேயே வச்சக்கண் வாங்காம பார்த்துட்டு இருந்த... நீ ஆசைப்பட்டுட்ட இல்ல அந்த ஒரு காரணத்துக்காக... அது என்ன விலையா இருந்தாலும் கொடுக்கலாம்...” என்றவனின் காதல் அவளது கண்களை கலங்க வைக்க..., இப்போது அவளின் கண்ணுக்கும், மனதுக்கும் அந்த புடவை, கண்களை உறுத்தும் நிறமாக இருந்தும்கூட, ரொம்ப அழகாகவே தெரிந்தது...! அவனை பார்த்த பார்வையில் காதல் வழிந்தது.

‘இது... இந்த இந்த... திகைப்பு...! இந்த சந்தோஷத்தை தான், நான் என்னைக்கும் உன் முகத்தில் பார்க்கணும்... ஷைலஜா.., உன்னோட இந்த சந்தோஷத்துக்காக தான், இந்த அஞ்சு நாளா அலைஞ்சேன்.., இப்போ உன் முகத்துல பார்த்துட்டேன்.., இது போதும்..’ என்று நினைத்தவன்...

“ஷைலஜா..., அடுத்த தடவை வரும்போது, இந்த புடவையை கட்டிக்கிட்டு வரியா...? இந்த புடவையில் உன்னைப் பார்க்கணும்னு ஆசையா இருக்கும்மா..”

திடுக்கிட்டவளாக... “நான் எப்படி இதை கட்டிக்கிட்டு வர முடியும்...?”

“ஏன் கட்டிக்கிட்டு வந்தா என்ன...?”

பெருமூச்சு விட்டவள்... “இந்த புடவை என்ன விலை...?”

“அது எதுக்கு உனக்கு?..”

“அப்பா கொடுக்குற பாக்கெட் மணியே ஐந்நூறு ரூபா தான்... நிச்சயமா அதுல இந்த புடவையை வாங்கியிருக்க முடியாது, சோ இந்தப் புடவை எப்படி வந்துச்சுன்னு, எங்க அப்பா கேட்டா, நான் என்ன சொல்ல முடியும்..?”

“எனக்குப் புரியலை... நான் தானே கொடுத்தேன்.. அதை அப்படியே சொல்ல வேண்டியது தானே...! அதுல உனக்கு என்ன பிரச்சனை...? ”

“நீங்க கொடுத்தீங்கன்னு சொல்லணுமா...? வேற வினையே வேணாம்... என்ன விளையாடுறீங்களா...?”

“இப்போ நீதான் விளையாடுறே... இரு இரு.., என்னைப் பற்றி உன்னோட வீட்டுல சொன்னியா.. இல்லையா...?”

“சொல்லலை...”

“ஏன் ஷைலஜா...”

“அதுக்குள்ள எப்படி சொல்ல முடியும்...? என்னன்னு சொல்ல முடியும்...?”

“இப்படிக் கேட்டா எப்படி...? நான் ஒருத்தரை விரும்புறேன்னு சொல்லு... நான் தான் உன் லைஃப்ன்னு சொல்லு...”

‘குருவாயூரப்பா.... அப்படி சொன்னா, வாடியம்மா குலவிளக்கேன்னு ஆரத்தியை எடுத்துட்டு தான் மறுவேலை பார்ப்பாங்க... எப்படித்தான் இப்படி யோசிக்கிறானோ...’ என்று மனதினுள் அவனை திட்டியவள்..., வெளியில், “இப்போவே வீட்ல சொல்லிடணும்னு என்னப்பா அவசரம்?..” என்று கேட்க

“அவசரம் இல்லையா...? இல்லே... உங்க அப்பா நம்ம காதலை ஒத்துக்க மாட்டாரா?...”

“இங்கப் பாருங்க.. கொஞ்சம் யோசிங்க.. நம்ப விரும்ப ஆரம்பித்து, இது நம்மோட ரெண்டாவது மீட் தான்... நமக்கே இன்னும் ஒருத்தரை பற்றி ஒருத்தர் சரியா தெரியாது, இதுல அவங்கக்கிட்டே போய் என்னன்னு

சொல்லுவேன்...? அது மட்டுமில்லாம பயமா வேற இருக்கு... கொஞ்சம் என்னை புரிஞ்சிக்கோங்கப்பா... கொஞ்ச நாள் போகட்டும், நானே சொல்லிடுவேன்..."

"என்ன பயம்...! அப்போ அது வரைக்கும் பொய்யிலேயே காலம் தள்ளுவியா...? நாம என்ன திருட்டுத்தனமா பண்ணுறோம்....? வீட்டுல சொல்லி, அவங்க பதிலும் தெரிஞ்சுக்கிட்டா, உறுத்தல் இல்லாம இருக்கலாமே...!

சரி விடு... கொஞ்ச நாள் போகட்டும்... அதுக்காக என்னை ரொம்ப நாள் காத்திருக்க வைச்சுடாதே... இப்போ இந்த புடவையை நான் என்ன பண்ணுறது..? எனக்குப் புடவை கட்டும் பழக்கம் இல்லையே...!" என கேலியாக புருவம் உயர்த்தியவனைப் பார்த்தவளின் கற்பனை விரிய..., அதில் அவனை புடவையில் கண்டவளுக்கு, சிரிப்பு பீறிட்டுக் கிளம்பயது... அடக்க முடியாமல் சிரித்தவளை, இமைக்காது ரசித்தன அவன் விழிகள்...!

அவளின் மகிழ்ச்சி அவனையும் மகிழ்விக்கும் என்று தன் சின்ன சின்ன செயல்களால் உணர்த்தினான்.

"கொஞ்ச நாளைக்கு இது உங்கக்கிட்டயே இருக்கட்டும்... அப்புறமா நானே வாங்கிக்குறேன்.."

"கொஞ்ச நாளுன்னா, எவ்வளோ நாள்.."

"சாரே..., எனக்கும் ரொம்ப நாள் பொய்யில் காலம் தள்ள முடியாது.."

தன் கைக் கடிகாரத்தை பார்த்தவன்.., அவள் சொன்ன நேரம் நீண்டு, கடந்தும் போய்விட, கிளம்பும் நினைவே இல்லாமல் அவள் இருக்கக்கண்டு மனதுக்குள் மகிழ்ந்தான்.. அவனுக்கு அவளை அவள் குடும்பத்தில் இருந்து பிரிக்கும் எண்ணம் இல்லை... அவளின் எல்லாமுமாக தானே இருக்க வேண்டும், மற்ற அனைவரும் அவனுக்கு அடுத்ததாக மட்டுமே இருக்க வேண்டும், அவ்வளவே...!

"ஷைலஜா..., கிளம்பு, உன்னோட தங்கை காத்திருப்பா... நேரமாகிடுச்சு..."

"அய்யய்யோ... ஆமா உங்கக்கிட்ட பேசிட்டு இருந்ததுல நேரம் போய்டுச்சு.. மறந்தே போயிட்டேன்... நல்லா கத்தப் போறா.." என்று கிளம்பியவள்

“ஆங்.. உங்கக்கிட்ட ஒண்ணு கேட்கணும், நீங்க என்ன வேலை செய்யுறீங்க...? அப்பாக்கிட்ட சொல்லும்போது தேவைப்படுமே ”

முகம் மகிழ்ச்சியில் பிரகாசிக்க... “டிஸ்போசபிள் பிளாஸ்டிக் கப் அண்ட் ப்ளேட் செய்யுற யூனிட் வச்சு இருக்கேன்...”

“பிளாஸ்டிக்கா..” என்று முகம் சுருக்கியவளைப் பார்த்து..,

“ஷைலஜா..., எதுவும் சொல்லிடாதே... நான் செய்யலைன்னாலும் வேற யாராவது செய்யத் தான் போறாங்க... எல்லாருமே ஏதோ ஒரு ரூபத்துல, நாள் முழுக்க பிளாஸ்டிக் பயன்படுத்துறோம்... அப்புறம், அதை தயாரிச்சா மட்டும் தப்பா...? அதை ஒழிக்கணும்னா, எல்லோருக்குமே அந்த உணர்வு இருக்கணும்.., யாரோ ஒருத்தருக்கு மட்டும் இருந்தா போதாது...! பேங்கே, எதிர்ப்பு தெரிவிக்காம லோன் கொடுத்ததுல தான் ஆரம்பிச்சேன்... என்னைக்காவது கவர்மெண்ட் தடை செய்தா, அப்போ வேணும்னா, பிழைக்க வேறு வழி தேடிக்குவேன்... போதுமா... நேரம் ஆகுது, நீ கிளம்பு...”

‘ஏசுவே.. இப்படி பேச விடாம, வாயை அடைக்குறானே... பிடிவாதக்காரா...’ என்று நினைத்தப்படியே நின்று இருந்தவளைப் பார்த்தவன்.., “என்ன கிளம்பலையா?...” என்க

“இதோ கிளம்பிட்டேன்.. நீங்க வரலையா?...”

“இன்னும் கொஞ்ச நேரம் இங்க இருந்துட்டு, நைட் டிஃபன் இங்கேயே எங்கயாவது முடிச்சிட்டு கிளம்புவேன்... சீக்கிரமாவே போய், மேன்ஷன்ல என்ன செய்யப் போறேன்..? அங்க எனக்காக யார் காத்திருக்கப் போறா...”

“பார்க்கிங் வரைக்கும் கூட வரலாம் இல்ல..”

“ஏன்.., உங்களுக்கு பார்க்கிங்க்கு போக வழி தெரியாதா...?” என ஆழ்ந்த பார்வையுடன் கேட்க.., ‘தெரியாது’ என்பது போல, இடமிருந்து வலமாக தலை அசைத்தவளைப் பார்த்து, அவள் எண்ண ஓட்டம் புரிய.., எழுந்து அவளுக்கு துணையாக நடந்தான்.

ஷைலஜா காலம் கடந்து பிறந்ததால், செல்லமாக வளர்க்கப்பட்டவள். யோசித்து முடிவு செய்யும் பக்குவமும் இல்லாதவள்... முரட்டுத்தனமான ஒரு ஆண்மகன், தன்னிடம் காதலை கெஞ்சுதலாக கேட்கவும், தலை சுத்திப் போய், காதலை அங்கீகரித்தாலும்... அவள் கண்களுக்கு..., அவன் அன்புக்கு ஏங்கும் சிறுவனாக தான் தெரிந்தான்... கோபம்,

மகிழ்ச்சி, நெகிழ்ச்சி என சட்சட்டென மாறும் அவன் குணாதிசியம் அவளுக்கு சுவாரசியமாக இருந்தது... கூடவே பார்கவியின் வளர்ப்பு..., 'கோணலாய் இருந்தாலும் என்னுடையது' என்ற மனோபாவம், அவன் மீதான காதலை அதிகப்படுத்தியது.

அடிக்கடி அசட்டுத்தனமாக ஏதாவது செய்துவிட்டு, திருதிருவென முழிக்கும் அவள், அவனுக்கு அறியாப்பெண்ணாய் தெரிய... தான்.., தான் மட்டுமே அவளை வழி நடத்த முடியும்... அவள் தனக்கு மட்டுமே சொந்தம் என்ற நினைப்பு... 'அவள் சந்தோஷத்துக்காக' என்று சொல்லி சொல்லியே, தன் சந்தோஷத்தை அவள் மீது திணித்துக்கொண்டு இருந்தான் ஜனா ...

பொம்மையையே கண்ணால் கூடப் பார்த்திராத ஒரு குழந்தையின் கையில், அதற்கே சொந்தமாக ஒரு பொம்மை கிடைத்தால் என்ன ஆகும்..? இப்போது அப்படித் தான் இருந்தான் ஜனா... 'அவள் தனக்கே தனக்கென்று வேண்டும்.. அதற்காக தான் எந்த ஒரு எல்லைக்கும் போகத் தயார்' என்று நினைத்தவன், தனக்கு இப்போது கிடைத்துள்ள அந்த உயிருள்ள பொம்மைக்கும், ஒரு மனது உண்டு என்பதை மறந்து போனான். தன் விருப்பம், தன் ஆசை என்று.... 'தான்' என்ற ஒன்றை அவள் மீது திணித்தான்...! அன்பால் மூழ்கடிப்பதாய் நினைத்தான்...

ஷைலு அவன் சுவாசமாகவே மாற... ஆரம்பத்தில் கொஞ்சம் தடுமாறினாலும், அவளும் அவனை நேசித்தாள்.. மேம்போக்கான இவளும்... முரட்டுத்தனமான அவனும்... இணைந்து காதலில் அடியெடுத்து வைத்தனர்... அடுத்து வந்த இரண்டு மாதமும் மின்னலை போல மறைய... அவர்களுக்குள் தோன்றிய முதல் விரிசல், தன் அடையாளத்தை பலமாகவே பதித்தது...!

06

இதயத்தின் வேதனைகளை உதடுகள் வெளிப்படுத்த இயலாத பொது,
ஒரு துளி கண்ணீர் அதை சுலாபமாக வெளிபடுத்திவிடும்

ஜனாவுக்கு, அவனுடைய காதலில் எந்த குழப்பமும் இல்லை... ஷைலு ஒரு குழந்தை... அதிலும் நல்லது கெட்டது தெரியாத குழந்தை.., அனைத்தையும் தானே சொல்லிக் கொடுத்து அரவணைக்க வேண்டியவள், அவ்வளவே...!

ஷைலுவிற்கோ ஒவ்வொரு சந்திப்பும், ஒவ்வொரு உணர்வைக் கொடுத்தது... வாரம் ஒரு முறை என்று இருந்த சந்திப்பு மாறி..,

வாரத்திற்கு இரு நாட்கள் என்று ஆகி, வீக்கெண்டு தவிர தினமும் சந்திக்கும் நிலை வரை முன்னேறியது .

ஜனாவுடனான காதல், அவளுக்கு பல அனுபவங்களை தந்தது... ஒரு முறை, கையில் வளையல் அணியாமல் இருக்க, ஏன் என்று கேட்டவனிடம்... தான் போட வைத்து இருந்ததை சிந்து எடுத்துக் கொண்டாள் என்று சொல்லவும்.., அடுத்த நொடியே.., அணிந்திருந்த உடைக்கு மேட்சாக வளையலோடு வந்து நின்று மகிழ வைத்தான்.

அவர்கள் எப்போதும் சந்திக்கும் மாலில், பார்த்தவுடன் நட்புடன் புன்னகை செய்யும் அளவிற்கு அங்கே பல முகங்கள் பழக்கமாகின... அந்த பழக்கம் கொடுத்த நெருக்கத்தில், அவர்களிடம் பேச வருபவர்களுக்கு, ஷைலுவை மனைவி என்றே அறிமுகப் படுத்தினான். அவன் அப்படி தான் நினைக்கிறான் என்று தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தி நெகிழ வைத்தான்.

ஒருநாள் இருவரும் தங்களின் சிறுவயது கதைகளை பேசிக்கொண்டு இருக்கும்போது, குழந்தைப் பருவத்தில் தான் ஆசையாக வைத்து இருந்த, தோளில் மாட்டும் வாட்டர் பாட்டிலை, குட்டி தங்கை ஸ்ரீஜா விளையாடும்போது உடைத்துவிட, அதற்காக தான் மூன்று நாட்கள் அழுத கதையை, ஷைலு கண்கள் விரிய சொல்லியதற்கு, அடுத்த சந்திப்பில், அதேபோல் ஒரு பாட்டிலோடு வந்து அதிர்ச்சி கொடுத்தான்... வாட்டர் பாட்டில் எடுத்து செல்ல அவள் என்ன குழந்தையா என்று கேட்டதற்கு, 'ஆமாம், எனக்கு நீ குழந்தை தான்..!' என்று சொல்லி திகைக்க வைத்தான்.. அதை ஏன் உபயோகிக்க வில்லை என்று வேறு கேள்விகளால் திணறடித்தான்.

அதேபோன்ற இன்னொரு சந்திப்பில், குடித்த காஃபிக்கு தானே தான் பணம் கொடுப்பேன் என்று சொல்லி, பில்லை கட்டிவிட்டு மீதி சில்லறையுடன் வந்து அமர்ந்தாள்... அதை பர்ஸ் உள்ளே வைக்க போகும்போது, அவர்கள் அதிகப்படியாக பத்து ரூபாய் கொடுத்து இருப்பதை கண்டதும்..., திரும்ப கொடுத்துவிட எண்ணியபடி, ஜனாவிடம், காஷியர் பத்து ரூபாய் அதிகம் கொடுத்து விட்டதை சிரித்தபடி சொல்ல...

அடுத்த நிமிஷமே, பேசவே இடம் கொடுக்காமல், அவளின் கையைப் பிடித்து இழுத்து சென்றவன்..., அந்தக் காஷியர் அதிக பணம் தந்ததை சொல்லி, அவரிடம் கொடுத்து விட்டு, கூடவே ஷைலுவிடம் 'கவனிக்காமல் வாங்கி போய் விட்டேன்' என்று அவரிடம் சாரி கேட்க

சொல்ல... அங்கிருந்தவர் அனைவரின் பார்வையும் கிண்டலாக தன் மேல் பதிய, அவமானத்தில் நெளிந்தவளிடம்...,

அடுத்தவர் பணத்துக்கு ஆசைப் படக்கூடாது.. அப்படி வரும் பணம் நிலைக்காது என்று பாடம் எடுத்து, 'அடுத்தவர் பணத்துக்கு ஆசைப்படாத அவன் மனதை எண்ணி மகிழ்வதா.. அல்லது குழந்தையை கண்டிப்பது போல நாலு பேர் எதிரில் கண்டித்து அவமானப்படுத்தியதை நினைத்து வருந்துவதா' என்று புரியாமல் குழம்ப வைத்தான்

எப்போதும் மாலிலேயே சந்திக்கிறோமே, வேறு இடத்திற்குப் போகலாமா என்று ஒரு முறை கேட்டதற்கு, அவனுடைய யூனிட்டுக்கு அழைத்துப் போய்.., 'இது எக்ஸ்ட்ரூடர் ' 'இது மோல்டிங் மிஷின்' 'இது ப்ளாஸ்டிக் க்ரான்யூல்ஸ்' என்று கிளாஸ் எடுத்துவிட்டு, கூட வேலை செய்பவர்களுடன் சேர்ந்து கப்புகளை அடுக்கி பேக் செய்வதில் ஆழ்ந்துபோய், இவளை அம்போவென விட்டு, எரிச்சலில் நெளிய வைத்தான்... அதன்பிறகு 'வேறு இடத்திற்கு போகலாமா..?' என்று கேட்க அவள் என்ன முட்டாளா..!

ஒரு முறை இவனை பார்த்துக் கொண்டே, எதிரில் டெலிவரி ட்ரக் வருவதை கண்டும், அது அருகில் வருவதற்குள், தான் சென்று விடலாம் என்று சிறு அசட்டுத்தனத்துடன் வண்டியை எடுப்பதில் அவள் முனைப்பாக இருக்க... இவளை தடுக்க வந்து தள்ளி விட்ட ஜனா, மயிரிழையில் உயிர் பிழைத்தான்.

அதைப் பார்த்து அதிர்ச்சியுற்று.., "ஏன் இப்படி ஆபத்தை தேடி வாங்குறீங்க, அப்படியே எனக்கு அடிப்பட்டு இருந்தாலும், வெறும் சிராய்ப்போடு போய் இருக்கும், ஆனா நீங்க நடுவுல வந்து, ஏன் இப்படி...?" என்று பதறியவளுக்கு, பதில் ஒன்றும் சொல்லாமலே, வெறும் புன்னகையை கொடுத்து... ஒரு மாதம் கையை தொட்டிலில் தூங்க வைத்து, அவளை காதலில் கரைய வைத்தான்... அவனின் அபரிமிதமான காதலே, அவன் மீதான குறைகளை, கடுகை போல் அவளுக்கு தெரிய வைத்தது... ஷைலுவுக்குள் அவன் மீதான காதல் அழுத்தமாக பதிய ஆரம்பித்தது.

இரவுகளிலும் கூட தொலைப்பேசி அமைதியாக இருப்பதை அவன் விரும்பவில்லை..., செல்லுக்கு அதிக பில் கட்டுவதை பொருட்படுத்தவே இல்லை... அவனுக்கு அவள் குரலை கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் ... மற்ற யாரைப் பற்றியும் அவன்

கவலைப் படுவதாய் இல்லை... ஆனால் ஷைலுவுக்கு.. அம்மா, அப்பா, தங்கைகள், தோழிகள், என்று பல நபர்களின் மீதும் விருப்பம் இருந்தது..., அந்த விருப்பங்களினால் சில இடைஞ்சல் இருந்தது... அது ஒன்றே ஜனாவை குழப்ப போதுமானதாகவும் இருந்தது...!

அவர்கள் காதல் வெற்றிகரமாக இரண்டாவது மாதத்தை கடக்க... அந்த இரண்டு மாதங்கள் ஷைலுவிற்கு புரியவைத்தது இதுதான்..., ஜனாவிற்கு அவள் மேல் கரை காணாத காதல்.. அதை வார்த்தையால் வெளியே சொல்ல தெரியாது... 'ஐ லவ் யூ' என்பது அவன் அகராதியில் கெட்ட வார்த்தை, அதை சொல்லவே மாட்டான் என்பது நன்றாகவே புரிந்தது.

ஜனாவின் காதலும், அவனுடனான சந்திப்புகளும் ..., அவள் படிப்பில் தடைக் கல்லை எழுப்பியது... நாள் முழுவதும் காதல் கனவிலேயே இருந்தவள்.., கடைசி வருட படிப்பு முடிய இன்னும் ஒன்றரை மாதமே இருக்க... முனைந்து தன் கவனத்தை படிப்பில் திருப்பினாள் ஷைலு. அவள் எடுக்கும் மதிப்பெண் தானே அவள் M.Sc கனவை நனவாக்கும்... எனவே ஒரு மாதம் சந்திக்க வேண்டாம் என்று ஜனாவிடம் பேசி முடிவெடுத்து, அதை கடைப்பிடிக்க ஆரம்பித்தவர்களால், அதை தொடரத்தான் முடியவில்லை.

அதுவரை எந்த குழப்பமும் இல்லாமல் இருந்த ஜனா குழம்பித் தவித்தான்... அவனால் ஒரு வாரம் கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை... அவர்களை பிரிக்க, ஒரு கும்பலே கூடி சதி செய்வதாய் எண்ணி தவித்தான்... ஷைலு தன்னை விட்டு பிரிந்து விடுவாளோ...! அவள் அப்பாவுக்கு இந்த காதல் பற்றி தெரிந்தால், எந்த ஒரு சாதகமான அம்சங்களும் இல்லாத தன்னை எப்படி ஏற்றுக் கொள்வார்...?

இப்படி பல கேள்விகள் மனதில் எழும்ப, ஏதேதோ எண்ணி குழம்பியவன், அதற்கு மேல் பொறுக்காமல்.. ஷைலுவை சந்திக்க வேண்டும் என்று கேட்க... அவளுக்கும் அவனைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பு அதிகம் இருந்ததால், அவன் அழைத்தவுடனே மறுக்காமல் சென்றாள்... அவர்களின் முதல் ஊடலும் பிரிவும் கூடவே வந்தது...

ஒரு வார பிரிவே, அவளைக் கண்டு பல யுகங்கள் ஆன உணர்வை கொடுத்தது ஜனாவிற்கு..!

"ஷைலஜா..., இனி இந்த ஐடியா சரி வராது..., உன்னைப் பார்க்காமல்

இருக்குறது எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு...”

“எனக்கும் தான்... ஆனா என்ன செய்ய...! பரீட்சை நெருங்குது, படிக்கணும்ப்பா..”

“படி... அதுக்காக என்னை ஏன் பார்க்காம இருக்கணும்..?”

“டெய்லி இங்க வந்துட்டு, திரும்ப வீட்டுக்கு போக எவ்ளோ லேட் ஆகுது தெரியுமா.., டைம் வேஸ்டா போகுதுப்பா... படிக்க நேரம் பத்தலை..”

சிரித்தபடி... “சரி, அப்போ வீட்டுக்குப் போகாதே... என்னோட வந்துடு... பிராப்ளம் சால்வ்ட்...”

சட்டென வெட்கம் சூழ... “நோ... வே... இருபது வயசுல கல்யாணமா...! என் லட்சியமே M.Sc முடிச்சிட்டு, ஏதாவது வேலைக்கு போகணும்... அதுக்கு அப்புறம் தான் கல்யாணம் எல்லாம்...! ஒரு நாலஞ்சு வருஷம் போகட்டும்... அய்யாவுக்கு அதுக்குள்ளே அவசரமா...?”

“நீ என்ன பிளான் வேணும்னாலும் போடு... என்ன வேணாலும் செய்.. எதுவா இருந்தாலும் என் கூட இருந்து செய்... என்னால் உன்னை விட்டு இருக்க முடியாது ...” என்றான் அழுத்தமாக.

“ப்ச்... என்னப்பா எல்லாத்திலும் கிண்டலா...! இப்போ கல்யாணம் வேண்டாம்னு சொன்னேனே..., அது உங்க காதுல விழலையா, இல்லே புரியலையா...”

“நீ என் கூட வந்திருக்கறதுக்கும், கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்...? நீ இப்போ என் கூட வா... மத்தது எல்லாம் நீ சொன்ன மாதிரி, எப்போ விருப்பமோ அப்போ செஞ்சுக்கலாம்...”

அதிர்வாக... “என்ன உளருறீங்க...? உங்க கூட வரவா...! லிவ்ங் டு கெதரா இருக்கலாம்னு சொல்லுறீங்களா...?” என கோபம் தலைக்கு ஏற கேட்டவளை புரியாத பார்வை பார்த்தவன்..

“நீ சொல்லுறது புரியல... என் கூட வாழ வான்னு, தமிழ்ல அழகா கூப்பிட்டா, அதையே இங்கிலீஷ்ல கேள்வியா கேட்பியா..?”

‘அம்மாடியோவ்.. ஒண்ணும் தெரியாத குழந்தை போலவே குழப்புறானே’... “இங்க பாருங்க, உங்க வார்த்தை விளையாட்டை கொஞ்சம் நிறுத்துங்க... என்னைப் பத்தி என்ன தான் நினைச்சுட்டு

இருக்கீங்க...?"

"ஷைலஜா..., நீ முதலில் என்னைப் பத்தி நல்லா தெரிஞ்சிக்கோ... உன்னோட ஓட்டை சம்பிரதாயம், கலாச்சாரம்... எதிலுமே எனக்கு நம்பிக்கை இல்லை... நீ சமுதாயம்னு சொல்லுறே பாரு, அது, ஒருத்தர் நல்லா இருந்தாலும் பேசும், கெட்டாலும் பேசும்...! என்னை ஒதுக்கிய அத்தனையையும், நானும் ஒதுக்கிட்டேன்..., இந்த சமுதாயத்தையும் சேர்த்து தான்...! இந்த கல்யாணம், கருமாதி எதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை...!

கல்யாணம்னா என்ன..?, நாங்க கணவன்-மனைவி ஆகிட்டோம்னு இந்த சமுதாயத்துக்கு சொல்லுற ஒரு அறிவிப்பு தானே...! எனக்கு தேவை இல்லாத சமுதாயத்துக்கு, நான் எதுக்கு அதை சொல்லணும்...? இருந்தாலும் உனக்காக..., உன்னோட எண்ண ஓட்டம் புரிந்து.., உன் உணர்வை மதிச்சு கல்யாணம் பண்ண ஒத்துக்குறேன்... அது நாளைக்கானாலும் ஓகே.., நாலு வருஷம் கழிச்சு என்றாலும் ஓகே... ஆனா இனிமே நாம பிரிஞ்சு இருக்கிறது என்ற பேச்சுக்கே இடம் இல்லை..." என திட்டவட்டமாக அறிவிப்பு போல, எந்த சலனமும் இல்லாமல் சொல்பவனை அயர்வாக பார்த்தவள்....

"அப்போ உடனே கல்யாணமா...! இப்படி பேசினா எப்படிங்க...? உடனே கல்யாணம்னா, வீட்டில் எப்படி சொல்லுறது...? அப்பா என்ன நினைப்பார்...!"

"அவர் என்ன நினைச்சா எனக்கு என்ன...? நீ என்ன நினைக்கிற, அதை சொல்லு... நீ இன்னும் உங்க வீட்டுல என்னை பத்தி சொல்லலை தானே... ஏன் சொல்லலை...? ஏன்.., உங்க அப்பா என்னை ஏத்துக்க மாட்டாரா...? தெரியுமே...! பெண்ணை பெத்தவங்களே இப்படித் தானே... அவங்க எப்படிப்பட்ட அன்னக்காவடிங்களா இருந்தாலும், வர மாப்பிள்ளை மட்டும், இந்த உலகத்தையே விலை பேசுறவங்களாக இருக்கணுமே இவங்களுக்கு"

கண்கள் விரிய... "இங்க பாருங்க..., எங்க அப்பா மேல அப்படி என்ன கோபம்..? இப்படியெல்லாம் அவரை தப்பா பேசாதீங்க... கேள்வியும் நீங்களே கேட்டு, பதிலும் நீங்களே சொன்னா எப்படி...!"

"என்ன தப்பா பேசிட்டேன்னு சொல்லுற.. என்னைப் பத்தி வீட்டில் சொல்லுன்னா... சொல்ல மாட்டேங்குறே... சரி, எதுவுமே வேண்டாம், என்னோடு வந்துடுன்னா, இப்போ கல்யாணம் வேண்டாம்னு

சொல்லுற... அதுவும் வேண்டாம்னா, சரி என் கூட இரு, அப்புறம் பொறுமையா கல்யாணம் பண்ணலாம்னா... அதுவும் முடியாது.., அப்பாக்கிட்ட எப்படி சொல்லுறதுன்னு சொல்லுற... தெரியாம தான் கேட்குறேன்... எனக்கு எதுக்கு உங்க அப்பாவோட பெர்மிஷன்...?

உன் அப்பா, அம்மா, லொட்டு... லொசுக்கு... எந்த எழவும் எனக்கு வேண்டாம். எனக்கு நீ மட்டும் போதும்...! அதை முதலில் புரிஞ்சுக்கோ..! இல்லே, நீ என்னை கழட்டி விடறதுக்காக, இப்படி வித விதமா யோசிக்கிறியா... என்ன..? அப்போ டைம்பாஸுக்கு தான் என்னை லவ் பண்ணுனியா...? தெரியுமே, இந்த பொம்பளைங்க பிழைப்பே இதானே...! இளிச்சவாயன் எவனாவது கிடைச்சா, நல்லா அனுபவிச்சு, அவன் தலையை மொட்டை போட்டுட்டு.., அப்புறம் கழட்டி விட்டுட்டு போய்ட்டே இருப்பீங்க...”

அவளை உடனே அடைய துடிக்கும் அவன் மனம், அது முடியாது என்று தெரிந்தவுடன்.., அவளின் நிலையை பற்றி சிறிதும் யோசிக்காமல் வார்த்தைகளை சிதற விட...

போதும் என்பது போல கை காட்டியவள்.., உதடு துடிக்க.. பேச்சே வராமல் திணறியவள், பின்பு சமாளித்துக்கொண்டு... “போதும்... போதும்... இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசாதீங்க... நீங்க என்னை பத்தி என்ன தான் நினைச்சீங்க...? நீங்க கூப்பிட்ட உடனே பின்னாடியே வர லோக்கல் பார்ட்டின்னா... ?

இல்ல, உங்களை மாதிரி, கேட்குறதுக்கு ஆளில்லாத நாதி இல்லாதவன்னா..? என்ன நினைக்கறீங்க...? உங்களை விரும்பின பாவத்துக்கு..., என்னல்லாம் பேசறீங்க...! போதும்... எனக்கு இது வேணும்.. எதையும் யோசிக்காமல், நான் செஞ்ச முட்டாள்தனத்திற்கு கிடைச்ச அடின்னு நினைச்சுக்கிறேன்... உங்க திசைக்கே ஒரு கும்பிடு...” என வேகமாக எழுந்தவள், அவனை திரும்பியும் பார்க்காமல் விலகி சென்றாள்.

கட்டுப்படுத்த நினைத்தும், அடங்காமல் கண்ணீர் வடிந்தது ஷைலுவிற்கு... மனம் முழுவதும் ஏமாற்றம்.. கல்யாணம் என்ற உறவை கூட தேவையில்லாத பாரமாக தான் நினைக்கிறான்... அவன் சம்மதிப்பது கூட என் திருப்திக்காக...! ஏதோ தியாகம் செய்வது போல பேசுகிறான்... அப்பா அம்மா தேவை இல்லைன்னு சொல்லுறான்... எழவுன்னு சொல்லுறான்... போதும், இந்த புத்தி கெட்டவன் கூட காலம் முழுவதும் இப்படி போராட முடியாது... என அழுதுக் கொண்டே

வந்தவள்..., அதன்பின் அவனை முற்றிலும் தவிர்க்க தொடங்கினாள்...!

ஷைலு காலையில் தன் வண்டியில் கிளம்பினால், இரண்டு தெரு தள்ளி இருக்கும் மினியின் வீட்டை தாண்டி செல்லும் நேரத்தில், அவளும் தன்னுடைய வண்டியில் சேர்ந்து கொள்வாள்... இருவரும் ஒன்றாகவே கல்லூரிக்கு சென்று திரும்புவார்கள்... ஜனாவின் அறிமுகத்துக்கு பின்..., தோழிகள் இருவரும் வீடு திரும்புவது மட்டும் வெவ்வேறு நேரம் என்று ஆகியது...!

இப்போது ஜனாவை தவிர்க்க வேண்டி..., வண்டி ரிப்பேர் என்று சொல்லி, காலையில் தந்தையுடன் மினியின் வீட்டிற்கு போய், அங்கிருந்து அவளுடன் வண்டியில் சென்றவள்..., மாலையிலும், பள்ளியில் இருந்து வரும் தங்கைகள் வரும்வரைக்கும் மினியின் வீட்டிலேயே இருந்துக்கொண்டு, அவர்களுடன் சேர்ந்து திரும்ப தொடங்கினாள். ஏனெனில் அவளின் கோபம் அந்த அளவுக்கு இருந்தது. அவன் தனக்கு வேண்டவே வேண்டாம் என்ற முடிவில் இருந்தாள்.

அப்படியே அவளை விட்டுவிட்டால் அது ஜனா இல்லையே...! அவளுக்கு பல முறை போன் செய்ய முயற்சித்தும், ஸ்விட்ச் ஆஃப் என்றே வர, நொந்து போனான்... காலை மாலை என இரு வேளையும், அவள் கல்லூரிக்கு போகையில், பின் தொடர ஆரம்பித்தான். எங்காவது அவர்கள் நின்றால், குறுக்கே நெடுக்கே நடந்து, கிடைக்கும் இடைவெளியில் அவள் கவனத்தை ஈர்க்க முயற்சித்தான்... என்ன முயற்சித்தும் பலன் தான் இல்லை... அவள் அவனை கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

தனியே ஜனாவிடம் மாட்டாதவாறு பார்த்துக் கொண்டாள்... ஆரம்பத்தில் ஷைலுவிற்கு எரிமலையாய் பொங்கிய கோபம் கூட, அவன் தொடர் வருகையால் சற்றே மட்டுப்பட்டது... கோபம் அடங்கிய பின், அன்றைய பேச்சுக்களை நினைத்துப் பார்த்தவளுக்கு, மிகவும் அதிர்ச்சி அளித்தது தன் பேச்சே...! அவன் அப்படி பேசினால், அது அவன் குணம்.. தான் ஏன் அப்படி பேசினோம்...!

தான் சொன்ன 'நாதியத்தவன்' என்ற வார்த்தையில் நின்று, அதுவே மனதை பெரும் பாரமாய் உறுத்த தொடங்கியது... அவன் பேசிய பேச்சுக்கள் பனியாய் மறைய... ஆனால் தன் தாயின் வளர்ப்புக்கு, நாம் எப்படி அப்படி ஒரு மனம் நோகும் வார்த்தையை பேசினோம், அவன் பாவம் இல்லையா.. என்று குழம்பி..., நீண்ட ஒன்பது நாட்கள்

இடைவேளைக்கு பிறகு, அவனை சந்திப்பது என்றும், என்ன பேசுவது என்றும் முடிவு செய்தாள்.

அன்று காலை தந்தையுடன் மினி வீட்டுக்குப் போகும் போதே, அவனை நோக்கி மின்னல் பார்வையை வீசி, அவனை உறைய வைத்தவளின் மனம் வகுப்பில் கவனம் இல்லாமல்.., அவனுக்கு தெரிவிக்காமலே மாலையில் மாலுக்கு சென்று, தன்னை தொடர்ந்து வரும் அவனுக்கு இனிய அதிர்ச்சி கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டாள்.

கல்லூரியை விட்டு வெளியே வந்த தோழிகள் நால்வரும்.. வாசலில் நின்று கொஞ்ச நேரம் அரட்டை அடித்தார்கள்... நிலாவும், சஞ்சனாவும் விடை பெற.. ஜனா இருக்கிறானா என்று பார்வையை சுழற்றியவள், மினியிடம் என்ன சொல்லி கம்பி நீட்டலாம் என்று யோசிக்கையில்...

“ஷைலு, நான் சொன்னதும் சட்டுன்னு பார்க்காதே... யதார்த்தமா பார்க்குற மாதிரி பாரு... அங்க டீக்கடைல அய்யனார் சிலை மாதிரி, பிரமாண்டமா ஒரு காரிவண்டி நிற்கிறான் பாரேன்...” என்று மினி சொல்லவும்... திடுக்கிட்டவள்...

‘இவ ஜனாவை தான் சொல்லுறா போல... ஹே அல்லா... அவனா இருக்க கூடாது’ என்று புலம்பியவளின் குரல், தெய்வத்திற்கு கேட்டும் அவர் அதைக் கண்டு கொள்ளவில்லை... அடிக்கடி கூப்பிட்டு தொல்லைப் படுத்தியதால், அத்தனை தெய்வமும் கன்ப்யூஸ் ஆகி, யாரை கூப்பிடுகிறாள் என்று புரியாமல், ஒரு மனதாக இனி அவள் கூப்பிட்டால் போவது இல்லை என்று முடிவு செய்து விட்டனர் போல...!

அவளின் பார்வை வட்டத்தில் ஜனா விழ... தடுமாறியப்படி “மினி..., அது.... நானே உன்கிட்ட... சொல்லணும்...”

“நீ சொல்லுவேன்னு தான் எதிர்பார்த்தேன்... ஒரு வாரமா பின்னாடியே வரான்... முகத்தைப் பார்த்தா ரொம்ப சீரியஸா விரும்புறான் போல...”

“ஆமாண்டி..., சீரியஸா தான் விரும்புறார்...”

“ஹே... அதுக்காக... உனக்கே தெரியும், எனக்கு இந்த லவ் எல்லாம் பிடிக்காது... நீ கூட நோட் பண்ற அளவுக்கு வெளிப்படையா ரூட் விடுறான் பாரேன்... ரொம்ப தைரியம்தான்... ஆனா நா....ன் ஒத்துக்க மாட்டேன்... இவன் என் பின்னாடி சுத்துறது வேஸ்ட்... இன்னைக்கு

குடுக்குற குடுல.. என் திசைக்கே கும்பிடு போட வைக்கிறேன்... ராஸ்கல்.. யார்கிட்ட.."

'அய்யோ இவ என்ன உளறுறா...' என்று நினைத்தவளாக.. "மினி.., அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். கிளம்பு வீட்டுக்குப் போகலாம்..." என்றவள், ஜனாவை கிளம்ப சொல்லி மெசேஜ் அனுப்ப, போனை ஆன் பண்ண... அதற்குள் காலம் கடந்து விட்டது... கீழ் பார்வை பார்த்தபடி அவன் இவர்களை கடந்து செல்ல..

மினி..., "ஹலோ மிஸ்டர்..., உங்களை தான்... இங்க வாங்க.."

'நானா..' என்பது போல தன்னை சுற்றி பார்த்து... தன்னை தான் என்று ஊர்ஜிதம் செய்தவன்... முகம் மலர அவர்கள் அருகில் வந்தான்..

மினியோ குரலில் நக்கல் தெறிக்க... "என்ன, பின்னாடியே சுத்துறீங்க... டீப் லவ்வோ..?."

'சொல்லிட்டியா' என்பதுபோல் ஷைலுவைப் பார்த்தவன், முகம் மலர 'ஆம்' என்பது போல தலை அசைத்தான்.

"மினி.. நான் சொல்..." என தடுக்கும் ஷைலுவை பொருட்படுத்தாமல்...

மினியோ கடுப்பு ஏற... 'திமிரைப் பார்' என நினைத்தபடி... "மிஸ்டர்.., இதெல்லாம் இங்க வேண்டாம்... எனக்கு இந்த லவ்வு கிவ்வு எல்லாம் பிடிக்காது...என்கிட்டே இந்த வேலையெல்லாம் வைச்சுக்காதீங்க.."

ஜனா சற்று கோபமாக... "அதை நீங்க..."

"ஸ்டாப்... நான் பேசும்போது குறுக்கே பேசினாலும் எனக்கு பிடிக்காது... நான் ரொம்ப சகுனம் பார்ப்பேன்..."

கோபத்தில் முகம் இறுக... "அதுக்கு..." என்றான் ஜனா கடுப்பாக...

அவனின் கோப முகம் எரிச்சலை கிளப்ப... 'போனா போகுதுன்னு கொஞ்சம் பாவம் பார்த்தா திமிரை பாரேன்... இருடா, உன்னை சலாம் போட வைக்கிறேன்' என கறுவியவள்...

"இங்க பாரு, எனக்கு பூனை குறுக்கே போனாலே பிடிக்காது... அதுலேயும் நீ.. நீ. டெய்லி குறுக்கால போனா எப்படி...? எனக்கு ரொம்ப மூட் அவுட் ஆகுது.. தயவுசெய்து என் பின்னாடி வராதே... புரியுதா..."

கண்ணை இறுக்கி மூடியவன், சில நொடி நின்றுவிட்டு... “தயவுசெய்து வீட்டுக்கு போன உடனே கண்ணாடியில கொஞ்சம் உன் முகத்தைப் பாரு...” என்றவன் ஷைலுவின் புறம் திரும்பி..

“எல்லாம் உன்னால வந்தது... எனக்கு இது தேவையா... வா..” என அவளை இழுத்துக்கொண்டு போக... ஏதும் சொல்லாமல் திரும்பி திரும்பி பார்த்தபடி அவன் கூட போகும் ஷைலுவை, ‘இங்கே என்னடா நடக்குது?’ என திகைப்பாய் பார்த்துக் கொண்டு இருந்தாள் மினி...!

என்னை மன்னித்து விடு, நான் புன்னகைத்தால் அது என் மனதில் இருக்கும் பயத்தை மறைக்கவே..
என்னை மன்னித்துவிடு, நான் வாய்விட்டு சிரித்தால் அது என் கண்ணீர் துளியை மறைக்கவே..

ஷைலு தவிப்புடன் இருந்தாள்... இரவு முழுவதும், அவன் வழியிலே போய் அவனை தன் பக்கம் திருப்ப என்னென்ன செய்யலாம் என்று இல்லாத மூளையை கசக்கி.. அதே சிந்தனையாய் இருந்து தன் திட்டத்தை மெருகேற்றி வைத்து இருந்தால்... இப்படி எதிர்பாராமல், மினியின் மூலம் பிரச்னை வந்தால், பாவம் அவளும் தான் என்ன செய்வாள்... அவனைப் பார்க்கவே பயம் வர, குனிந்த தலை நிமிராமல் இருந்தவளின் மனம், தன் இயல்பாய் புலம்ப துவங்கியது.

‘சும்மாவே சாமி ஆடுவான்...!! பத்தாததுக்கு இப்போ மினி வேற இவனுக்கு வேப்பிலை அடிச்சு விட்டுட்டா...!! இப்போ எப்படி இவனை மலை இறக்குவேன்... கடவுளே.., கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரி இருக்கே... ஹய்யோ முறைக்கிறானே.., சும்மாவே லிஸ்ட் போட்டு கேள்வி கேட்பான்... இப்போ... அய்யோ மினி... ‘ஓடிப்போனவளுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு..., அகப்பட்டவளுக்கு அஷ்டமத்தில் சனி’ போல ஆகிடுச்சே என் நிலை...!! இப்படி வகையாக மாட்டிக்கிட்டு முழிக்கிறேனே..!

இவனைப் பற்றி அப்பா, அம்மாக்கிட்ட சொல்லவில்லை என்பதற்கே அந்த ஆட்டம் போட்டான்... இப்போ ஏன் ஃபிரெண்ட்ஸ் கிட்ட கூட சொல்லலைன்னு கேட்டா, என்ன பதில் சொல்வேன்...! முன்னே போனா முட்டுவான், பின்னே வந்தா உதைப்பானே...!

ஆண்டவா.., இன்னைக்கு ஒரு நாள் இவனை சமாளிக்க தைரியம்

கொடு.. சத்தியமா என்னால முடியல...! உரலுக்குள்ளே தலையை விட்ட மாதிரியே இருக்கு...! ச்சே.. நான் ஏன் பழமொழியா சொல்லி பினாத்துறேன்...! அவ அவ லவ் பண்ணிட்டு, ஜாலியா ஊர் சுத்துறாளுக, ஆனா என் நிலைமையைப் பாரு' என எண்ணியவள், ஓரக் கண்ணால் ஜனாவைப் பார்க்க..

முகம் இறுக, பார்வையை அங்கே இங்கே விலக்காமல், இவளையே முறைத்துக் கொண்டு அமர்ந்து இருந்தான்.

'கேளுடா கேளு.. 'மினி கிட்ட ஏன் சொல்லை ஷைலஜா...'ன்னு சீக்கிரமா கேளு, உன் அமைதியே பீதியைக் கிளப்புதே...' என புலம்பியவள், நிமிர்ந்து அவனைப் பார்க்க..

"சொல்லு ஷைலஜா..., இப்படி அமுக்குணி மாதிரி வாய மூடிக்கிட்டு இருந்தா என்ன அர்த்தம்...? என்னைப் பார்த்தா, கேனை மாதிரி இருக்கா.."

"இல்ல... நான் மறைக்கணும்னு நினைக்கல... சொல்லுறதுக்குள்ள மினி அவசரப்பட்டு..."

"ஷ்ஷ்ஷ்... இப்போ அது ரொம்ப முக்கியமா... உனக்கு என்ன தான் பிரச்சனை...? என் மேல் என்ன கோபம்...? போனை கூட ஸ்விட்ச் ஆஃப் பண்ணிட்ட...! என் கூட பேச மாட்டேங்குறே... பார்க்கவும் மாட்டேங்குறே... ஒரு வாரமா ஏன் ஏன்னு யோசிச்சு தவிச்சு போயிட்டேன்... உனக்கு என்ன தான் ஆச்சு...? நீ மட்டும் இப்போ என்னைப் பார்க்கலைன்னா, சரி இன்னும் ரெண்டு நாள் பார்த்துட்டு, உன் வீட்டுக்கே வரலாம்னு இருந்தேன்.. இப்போ சொல்லு, என்ன கோபம்...?"

"அங்.....!!" என்ற கேவல் வெளிப்பட, பேச்சே வராமல் திகைத்தவள்... 'என்னிக்கு நான் நினைக்கறதை பேசி இருக்கான்' என சுதாரித்துக் கொண்டு... "என்ன விளையாடுறீங்களா.., அன்னிக்கு எங்க அப்பா அம்மாவை அவ்ளோ பேசுனீங்க... என்னையும் கண்டபடி திட்டுனீங்க... இப்போ என்ன கோபம்னு ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்குறீங்க...? உங்க மனசுல என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க...?"

இதுக்காகவா கோபமாக இருந்தே என்பது போல ஒரு பார்வை பார்த்துவிட்டு, "ஊஃப் காட்(god).." என காற்றை வெளியிட்டு,

ரிலாக்ஸ்டாக பின்னே சாய்ந்தவன்,

“இதானா.. நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்... அதை இன்னுமா நியாபகம் வச்சு இருக்க... இங்க பார் ஷைலஜா, கணவன் மனைவின்னா சண்டை வருவது சகஜம்..., அதையெல்லாம் அந்த நொடியே மறந்துடணும்... அதை விட்டுட்டு இப்படி அதையே தூக்கி சுமந்துட்டே இருப்பியா...”

“ஹேய் ஸ்டாப் ஸ்டாப்... கணவன்..! மனைவியா...? இது எப்போ..” என கேட்ட ஷைலுவின் குரலில், மருந்துக்கும் கோபம் என்பது இல்லை... வெட்கமே நிறைந்து இருந்தது.

அவளின் முக மாற்றமே புத்துணர்வைக் கொடுக்க... “பின்ன இல்லையா..., நான் விளையாட்டுக்கு அப்படி சொல்லுறேன்னு நினைச்சியா என்ன...! என்னிக்கு உன்னை முதல் முதலா பார்த்தேனோ..., அதிலும் உன் முகம் முழுக்க சிரிப்போடு நீ அந்த மாலுக்கு உள்ளே வருவதை பார்த்த அந்த நொடியிலேர்ந்தே, உன்னை என் மனைவியா தான் நினைக்கிறேன்...

நாம சந்திக்கிற இடத்தைக் கூட, நான் ஏன் மாற்றாம இருக்கேன்னு யோசிச்சியா...? அன்னிக்கு பார்த்த உன் முகம் கல்வெட்டாய் என் மனசில் பதிஞ்சு இருக்கு, நாம சந்திக்குற ஒவ்வொரு முறையும் அது எனக்கு நினைவுக்கு வருது.. உனக்கு, நான் எப்படியோ தெரியலை...! ஆனா எனக்கு.., நீ என் மனைவி தான்.. அதை என்னோட மனசுல ஆழமாக பதிச்சிட்டேன்... உனக்காக இந்த உலகத்தையே அழிக்க வேண்டி வந்தாலும் அழிப்பேன்.

தாலின்னு ஒண்ணைக் கட்டினா தான் மனைவியா என்ன...? நீ அப்படித் தானே நினைக்கிற... ! எனக்கு அப்படியில்லை....! என்னைப் பொறுத்த வரைக்கும், இது மனம் சார்ந்த ஒன்று... ஆனாலும் உன்னோட உணர்வுக்கும் மதிப்பு கொடுத்து, இப்போ வரைக்கும் உன்னை விட்டு விலகியும் இருக்கேன்.

உனக்காக கல்யாணத்துக்கும் ஒத்துக்குறேன்... எனக்கு ஒத்து வராத விஷயங்களை கூட உனக்காக ஏத்துக்குறேன்... அதெல்லாம் ஏன்னு உனக்கு புரியுதா...? உன்னை விட்டு விலகி இருப்பது, எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்குன்னு கொஞ்சமாவது உணருகிறாயா...?” என்றான் ஆழ்ந்த குரலில்.

அந்த குரலே திடுக்கிட செய்ய... குப்பென உடல் வேர்த்தவளாக..

பேச்சை மாற்றும் பொருட்டு... "அதுக்காக அப்படி மனசு நோகுற மாதிரி பேசணுமா என்ன ?..."

"ஷைலஜா.., நான் கோபத்தில் ஒரு வார்த்தை சொன்னேன்.. பதிலுக்கு நீ ஒரு வார்த்தை சொன்னே, அவ்ளோ தானே... பேச்சுக்கு பேச்சு சரியாய் போச்சு... அந்த நொடியே அதை மறந்திடணும்.. இப்படி ஒவ்வொரு வார்த்தையையும் பிடிச்சுக்கிட்டு சண்டை போட்டா, நம்ம வாழ்க்கை நரகமா போய்டும்மா..."

கண் கலங்க... "சாரி அன்னிக்கு கோபத்தில் உங்களை 'நாதியத்தவன்னு' சொல்லிட்டேன்.. நா.."

"ஷ்ஷ்.. அதுல என்ன இருக்கு...? கோபத்தில் சொன்னாலும், உண்மையை தானே சொன்னே, நான் இப்போ நாதியத்தவன் தானே..., இனிமேயும் அப்படியே இருந்துட கூடாதுன்னு தான் உன்னை கூப்பிடுறேன்.. நீ மட்டும் என் கூட வந்து இருந்தா, இந்த யாமினி இன்னிக்கு இப்படி பேசி இருப்பாளா..., சொல்லு. ஏன் அவக்கிட்ட என்னை பத்தி சொல்லலை...?"

தொண்டை அடைக்க... 'தெய்வமே, என்னை ஒரு ஃபீல்ல இருக்க விட மாட்டேங்குறானே... இப்படி ட்ராக் மாறிக்கிட்டே இருந்தா, நான் என்ன பண்ணுவேன்...? ஆல் தெய்வம்ஸ், எல்லாரும் எங்க போய் தொலைஞ்சீங்க..' என புலம்பியவள்.... "அது... மினிக்கு லவ்வுன்னா பிடிக்காதுப்பா... அதான் சொல்லலை" என்றாள் விடை கண்டுப்பிடித்த தொனியில்...

"நீ அவளையா லவ் பண்ண சொல்லுற... என்னைப் பத்தி தானே சொல்லப் போறே... ஓகே அதை விடு, நீ என்னோட வந்திருப்பதை பத்தி என்ன முடிவு செய்தே?..."

சற்று நேரம் அமைதியாக இருந்தவள், மெல்ல தொண்டையை செருமி சரி செய்து விட்டு... "இப்போவே வரேன்.."

முகம் மலர.... "வரியா... நிஜமாவா...! என்னால நம்பவே முடியலை... நீயா சொன்ன?.."

"நானே தான் சொன்னேன்... ஆனா ஒரு சின்ன சந்தேகம், உங்க மேன்ஷன்ல லேடீஸை அலவ் பண்ணுவாங்களா?..."

"அது... ஒரு ரெண்டு நாள்ல வீடு..."

“ப்ளீஸ்.. கொஞ்ச நேரம் நான் சொல்லுவதை கேட்டுட்டு, அப்புறமா பதில் சொல்லுங்க... நீங்க அவசர அவசரமாக வீடு பார்த்து, நாலு அலுமினிய பாத்திரம் வாங்கி, அதுல பொங்கி... கொஞ்ச நாளுல அந்த வாழ்க்கை அலுத்து போய்.., நீ... ச்சீ... நான்... ச்சீன்னு சொல்லி, காதலை சாகடிச்சு வெட்டியா வாழுறதுல எனக்கு விருப்பம் இல்லை...

நமக்குன்னு சொந்தமா ஒரு வீடு..., சின்னதாக ஒரு அப்பார்ட்மெண்ட் கூட போதும்... அந்த வீட்டில் ஒவ்வொரு பொருளும்..., சின்ன குண்டூசி முதற் கொண்டு நாமே பார்த்து பார்த்து வாங்கி சேர்த்து வைக்கணும்..., அங்க நம்ம வாழ்க்கையை ஆரம்பிச்சு, கடைசி வரைக்கும் சந்தோஷமா வாழணும்... நமக்கே நமக்குன்னு ஒரு கூடு... கொஞ்சம் வசதி.... நிலையான வாழ்க்கை.. அவ்ளோ தான்... நான் ஆசைப்படுறது இவ்வளவு தான்...!

உங்களுக்கு நிலையான தொழில் இருக்கு..., அது கூடவே நான் சொன்ன மாதிரி, குடும்பம் நடத்துறதுக்கு அடிப்படையா என்னென்ன வேணுமோ, அதையெல்லாம் ரெடி பண்ணிட்டு, தலை நிமிர்ந்து எங்க அப்பாக்கிட்ட வந்து பொண்ணு கேளுங்க... ஒருவேளை அவர் தரமுடியாதுன்னு சொல்லிட்டா, அந்த நிமிஷமே உங்க கையைப் பிடிச்சிக்கிட்டு வெளியே வரேன்... அப்போ..,

நான் தேர்ந்தெடுத்த வாழ்க்கை தப்பு இல்லை.. நான் தேர்ந்தெடுத்தவர் தப்பானவர் இல்லைன்னு வாழ்ந்து காட்டி மத்தவங்களுக்குப் புரிய வைக்க முடியும்... ஆனா இப்போவே உங்க கூட வந்தா, என்ன நடக்கும்?..., நீங்களே சொல்லுங்க! நான் சொன்ன எல்லாத்தையுமே உங்களால் சேர்க்க முடியும்... ஆனா எப்போ...? அதுக்கு லேட் ஆகும்.. குடும்பம், குழந்தைன்னு எல்லா பாரத்தையும் ஒரே சமயத்துல சுமக்கணுமா...? முடியுமா...?

உங்களோட தன்மான உணர்வுக்கு, இந்த அவசர முடிவு சரி வருமா...? நான் தன்மானத்தோட வாழணும்னு நினைக்கிறேன்.., அது தப்பா....?”

முகம் இறுக.., நிறுத்தும்படி கை காட்டியவன்... “நேரம் ஆகிடுச்சு, நீ கிளம்பு...”

“இங்கப் பாருங்க... நான் என்ன சொல்ல வரேன்னா...”

“புரியுது... நீ சொன்ன எது புரியலைன்னாலும்..., காதல் செத்துடும்ன்ற வார்த்தை..., அதை வார்த்தையாக கேட்க கூட எனக்கு பிரியம் இல்லை... வேண்டாம்... நம்மோட நல்ல வாழ்க்கைக்காக தானே

சொல்லுற... நீ சொல்வது போல தன்மானம் முக்கியம்... கொஞ்சம் டைம் எடுப்போம், நீ சொன்ன அத்தனையும் சேர்த்துட்டு, உன்னை கூப்பிடுவேன்... எந்த சாக்கும் சொல்லாம, என் கையைப் பிடிச்சிக்கிட்டு வரணும், புரியுதா..?."

மனதில் இருந்த பாரம் நீங்க.., அதுவே முகத்திலும் பிரதிபலிக்க.., மகிழ்வுடன் தன் கைப்பையுடன் எழுந்தவள், குனிந்து அவன் காதில்... "முட்டாள்... எதுக்குடா கையை பிடிச்சிக்கிட்டு வரணும்... கட்டிப் பிடிச்சிக்கிட்டே வருவேன்.." என்றவள் மின்னலாய் திரும்பி ஓடினாள்.

எப்போதும் மரியாதையை அதிகம் எதிர் பார்க்கும் ஜனாவுக்கு, அவளின் 'முட்டாள்' என்ற அழைப்பு, சிறிதும் கோபத்தை உண்டு பண்ணவில்லை... அவள் பேசி சென்றது, 'ஜிவ்' என்ற உணர்வையும், உரிமையையும் தந்தது... சில சமயம் அவனுடைய ஆசைகள், அவனையும் மீறி பார்வையில் வெளிப்படும்... அதை கூட ஷைலு கண்டும் காணாமல் தவிர்த்து விடுவாள்... பேச்சில் என்றுமே வரம்பு மீறியது இல்லை... ஆனால் இன்றைய அவள் பேச்சு...!!

ஓடும் அவளை துரத்திப் பிடிக்க சொல்லிய மனதை சுற்றுப்புறம் கருதி அடக்கி வைத்தவனின் மனம்.., தன் குழப்பத்தை எல்லாம் கூட்டி வெளியே தள்ளிவிட்டு.. எதிர்கால கனவுகளை பதியன் இடத் தொடங்கியது...!

உலகமே தன் வசமான உணர்வுடன் துள்ளும் மானாய், தன் வீட்டை நெருங்கிய ஷைலு... வாசலிலேயே மினியின் வண்டியை காணவும்... 'அய்யோ.. இவளை மறந்தோமே...' என்ற தவிப்புடன், தயங்கித் தயங்கி மெல்ல உள்ளே வருகையிலே, அவளை பார்த்துவிட்ட பார்கவி...

"என்ன கண்ணு, அசைஞ்சு அசைஞ்சு வர... வா வா... இன்னைக்கு ஸ்பெஷல் கிளாசுக்கு மினி வரலையாமே... அதான் என்ன பாடம் நடத்துனாங்கன்னு உன்கிட்ட கேட்க எம்புட்டு நேரமா காத்திருக்கு, தெரியுமா..?" என்றவர் தன் போக்கில் சொல்லிக் கொண்டே அடுக்களைக்குள் நுழைந்தார்.

அவளையே முறைத்துப் பார்த்துக்கொண்டு இருந்த மினி..., "உன்னோட ஸ்பெஷல் கிளாஸ் சார் இன்னிக்கு ஏதாவது முக்கியமான நோட்ஸ்... பாடம்... சொன்னாரா ஷைலு.?" என்றாள் நக்கல் நிறைந்த அழுத்தமான குரலில்.

படப்படப்பாக... "பாடமா...! இல்ல... இல்ல, முக்கியமா...

எதுவும் இல்லையே...”

பேசவே திணறுபவளை, எரிக்கும் பார்வை பார்த்தவள்... “அப்படியா...! அப்போ நான் கிளம்புறேன்...”

“மினி...” என அழுது விடும் பாவனையில் அழைத்தவளை சட்டை பண்ணாமல், அடுக்களைக்குள் எட்டிப்பார்த்தவள்.., “அம்மா..., நான் கிளம்புறேன்...”

“மினிக்கா என்னதிது... நாங்க ஹோம்வொர்க் முடிச்சதும், கேரம் விளையாடலாம்னு சொல்லிட்டு, இப்போ கிளம்புறீங்க?” என்றாள் சிந்து குற்றம் சாட்டும் குரலில்...

“ஆமா மினி அக்கா... ஷைலு அக்காவும் வந்துட்டா..., செட் போட்டு விளையாடலாம் அக்கா, ப்ளீஸ்... ப்ளீஸ்...” என் ஸ்ரீஜா கெஞ்ச ஆரம்பிக்க

இவள் குரலுக்கு வெளியில் வந்த பார்கவி.. “பரவாயில்லை கொஞ்ச நேரம் இரும்மா... உங்க அம்மாவுக்கு நான் சொல்லிடுறேன்.. அங்கிள் வந்ததும், அவரோட உங்க வீட்டுக்குப் போ...” என்றவர் ஷைலு புறம் திரும்பி

“முகம் கழுவிட்டு வா, காஃபி போட்டு வைக்கிறேன்... வந்ததில் இருந்து மினியும் ஒண்ணும் சாப்பிடலை...” என்றவர் தன் வேலையைப் பார்க்க...

“நான் மாடிக்கு போறேன் ஷைலு..., நாம அங்கே போய் பேசலாம், இவங்க படிக்கட்டும்... டிஸ்ட்ர்ப் பண்ண வேண்டாம்... வா” என முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு சொன்னவள், விடுவிடுவென படியேறினாள்.

‘அடுத்ததா இவளை சமாளிக்கணுமா...?’ என்று மனதினுள் அலுத்தபடி, சாவி கொடுத்த பொம்மையாக, தன் வேலைகளை முடித்து, காஃபியுடன் மாடிக்கு வந்தவள், இவளைப் பார்த்து முகம் திருப்பும் மினியின் தோளில் கை வைத்து தன் புறம் திருப்பி...

“மினி...”

“கைய எடு..”

“மினி...”

“என்னை தொடாதேன்னு சொன்னா உனக்கு புரியாதா...? உன்னைப் பார்க்கவே பிடிக்கலை. வாயைத் திறந்தாலே பொய்... எத்தனை பொய்....! வீட்டுல ஸ்பெஷல் கிளாஸ்..., எங்கக்கிட்ட வீட்டுக்கு தெரியாம சின்னப் பிள்ளைகளுக்கு டியூஷன்... இப்படி இன்னும் யார் யாருக்கிட்டே என்னென்ன சொல்லி இருக்கியோ..! உன்னை மாதிரி ஒரு பொண்ணு இல்லைன்னு தலையில தூக்கி வச்சு ஆடுறாங்களே, உங்க அம்மா..., அவங்களை ஏமாத்த எப்படிடி மனசு வந்துச்சு உனக்கு? ச்சே...”

“மினி..., நான் சொல்லுறதை கொஞ்சம் கேளேன்...”

“என்னடி கேட்குறது...? நீ செய்யுறது சரின்னு உனக்கு தோணுதா...? கொஞ்சமாவது யோசிச்சு இருந்தா, இப்படி காதல் கத்தரிக்காய்னு போவியா...? பெத்தவங்க கிட்ட மறைக்கிற சரி..., அது கூட பயம்னு ஒத்துக்கலாம்... ஃபிரெண்ட்ஸ் கிட்ட கூட சொல்ல முடியலைன்னா, அதுலேர்ந்தே தெரியுதே உன் காதலின் லட்சணம்...!”

“போதும்..., மினி என்னால முடியலை... ஜனாவையும் சமாளிக்க முடியலை... மத்தவங்களையும் சமாளிக்க தெரியலை... அடுத்து என்ன பண்ணுறதுன்னும் புரியலை.... யோசிச்சு யோசிச்சு நானே நொந்து போய் இருக்கேன்...” என்று மடங்கி அமர்ந்து அழ தொடங்கினாள்.

பேசிக் கொண்டே இருந்தவள், திடுமென அழவும், பதறிய மினி.. “ஷைலு.., ஷைலு.., என்னடி இது... நான் உன்னை ஒண்ணும் சொல்லலை.. எதுவும் கேட்கலை.., நீ அழாதே...” என அவளை சமாதானம் செய்ய...

அதுவரை தன் மனதை அழுத்திய பாரத்தை பகிர ஆள் கிடைத்த தெம்புடன்... ஜனாவை சந்தித்தது முதல் இன்று வரை நடந்ததையும்.. ஜனாவின் புரிந்து கொள்ள முடியாத முரண்பாடான குணத்தையும் சொல்லி அழ...

திகைப்புடன் “ஷைலு, லூசாடி நீ..! இவனையெல்லாம் மியூசியம்ல வச்சுப் பார்க்கலாமே தவிர, இவன் கூட குடும்பம் எல்லாம் நடத்த முடியாது.. கையில ஆர்டிஎக்ஸ் பாமை வச்சிக்கிட்டு சுத்துறதும் ஒண்ணு.., இவனை லவ் பண்ணுறதும் ஒண்ணு...”

“இல்லைடி... அவர் ரொம்ப நல்லவர் தெரியுமா... நான்னா அவருக்கு ரொம்ப உயிர்...”

“ம்ம்கும்... அதான் தினமும் வாங்குறாரா... ஏண்டி... இப்படி? ”

“மினி..., அவர் பாவம்டி, எனக்கு தான் அவரை சமாளிக்க தெரியலை... என்னோட உணர்வை, அவருக்கு புரிய வைக்க தெரியலை...”

“அதை தான் நானும் சொல்லுறேன்.., அவரும் நல்லவர்... நீயும் நல்லவள்... ஆனா அவருக்கு நீ பொருத்தம் இல்லை... அவருக்கு, அவருக்கு ஏத்த பக்குவமான பொண்ணுதான் வேணும்... விளையாட்டுத் தனமான நீ தேவை இல்லை... புரியுதா...? நீயும், அவரும் கல்யாணம் பண்ணினா, எலியும், தவளையும் மாதிரி மூச்சு முட்டித்தான் சாவீங்க... அது தேவையா..?”

“என்னால அவரை விட முடியாது மினி... எப்படி இருந்தாலும், எனக்கு அவர் தான்.. தயவுசெய்து புரிஞ்சுக்கோ மினி..”

இப்படி சொல்பவளை, என்ன செய்வது என்பது போல, கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு.., “ஷைலு..., அந்த விருமாண்டியே தான் வேணுமா...? எனக்கு என்னவோ இதுல கொஞ்சம் கூட இஷ்டமே இல்ல... ஆனா இது உன்னோட வாழ்க்கை... யோசனை கேட்டா, சொல்லலாம். ஆனா நீ முடிவே பண்ணிட்ட... உன் முடிவு இது.., அதுல ஒரு அளவுக்கு மேல, நான் குறுக்கிட முடியாது... ஆனா திரும்பவும் சொல்லுறேன், இந்த காதலில் சுத்தமா எனக்கு உடன்பாடு இல்லை... இப்போ நீ என்ன செய்யுறதா இருக்கே.?”

ஜனாவுடன் இன்று பேசியதை சொல்ல... “என்னடி, இப்படி சொல்லி வச்சு இருக்க..! உனக்கு பணத்தாசைன்னு நினைச்சிட்டா...! இல்லே ஒருவேளை, நீ கேட்ட மாதிரி ஜனா சொந்த வீடு வாங்கிட்டா..!”

“மினி..., வேற என்ன செய்யுறதுன்னு எனக்கு தெரியலைப்பா... அவர் தன்மானத்தை, கொஞ்சம் சீண்டி விட்டா, எனக்கான டைம் கிடைக்கும்னு மட்டும் தான் நினைச்சேன்... இப்போதைக்கு எனக்கு தேவை, கொஞ்சம் டைம் அவ்ளோ தான்...! ஜனாவின் இப்போதைய நிலைமை எனக்கு நல்லா தெரியும்... நான் சொன்னதையெல்லாம் செய்ய, எப்படியும் மூணு, நாலு வருஷமாவது தேவைப்படும்... அதுக்குள்ளே நானும் M.Sc முடிச்சிடுவேன்... கொஞ்ச நாள் வேலைக்கு போய், அப்பாவுக்கு ஹெல்ப் பண்ணனும்...

ஒருவேளை அதுக்கு முன்னாடியே ஜனா வீடு வாங்கிட்டா..., எப்படியும் என்கிட்டே சொல்லிட்டு தானே செய்வார்... அதுக்குள்ள

அப்பாக்கிட்டே சொல்லிடுவேன்... ஒருவேளை, நான் கேட்டது எல்லாம் அவர் செய்யலைன்னா கூட பரவாயில்லை..., நிலைமை சரி வரலைன்னா, படிப்பு முடிஞ்சதும் அப்பா அம்மாவோட சம்மதத்தோட கல்யாணம் பண்ணிக்குவேன்... ஜனாவை இங்கேயே இருக்க சொல்லிடுவேன்...

எங்க அப்பா அம்மாவுக்கும் மகன் இல்லாத குறை போயிடும்... எனக்கும் யாரையும் பிரிய வேண்டாம்... யாரும் இல்லாத ஜனாவுக்கும் ஒரு குடும்பம் கிடைக்கும்" என கண்களில் கனவு மின்ன சொன்னவளை, பரிதாபமாக பார்த்தவள்...

"ம்ம்கும் திட்டம் எல்லாம் பிரமாதம் தான்... ஆனா உன்னோட விருமாண்டி, உன்னோட சேர்த்து, உன் குடும்பத்தையும் ஏத்துக்கணுமே...! அவரோ தன்மானம் பார்க்குறவர்னு நீயே தான் சொல்லுறே, அப்புறம் எப்படி, இங்க வந்து இருப்பார்...? அப்படி நடக்கும்னு எனக்கு தோணலையே.. அன்னலட்சுமி ."

அவளின் 'அன்னலட்சுமி' என்ற கிண்டலில்...., மினியின் மில்லியன் டாலர் கேள்வியை கவனிக்க மறந்த ஷைலு...,

"அன்னலட்சுமியா...! வேண்டாம்... பிச்சிடுவேன்.." என்றவளின் குரல், விளையாட்டை கைவிட்டு

"ஒண்ணு உண்மை மினி... இப்போவே 'உன் அப்பா..., அம்மா..., லொட்டு..., லொசுக்கு..., எதுவும் எனக்கு தேவை இல்லைன்னு சொல்லுறார்..."

'பக்' என வயிற்றை பிடித்துக் கொண்டு சிரிக்க தொடங்கினாள் மினி.

அவள் சிரிப்பதை புரியாத பார்வை பார்த்த ஷைலு.. "எருமை... ஏன் சிரிக்குற? நானே சீரியசா பேசிட்டு இருக்கேன்... சொல்லிட்டு சிரிடி..."

"அந்த லொட்டு சிந்துஜாவும்..., லொசுக்கு ஸ்ரீஜாவும் தானே...!! பார்க்காமலே எப்படிடி இவ்ளோ பொருத்தமா பேர் வச்சார் உன்னோட ஆள்.?."

சிரிப்பு ஷைலுவையும் பற்றிக்கொள்ள... அவளும் சிரிக்க ஆரம்பித்தாள். கண்களில் நீர் வடிய சிரிப்பவளை கனிவாக பார்த்து..., "ஷைலு, இப்படி சொல்லுற விருமாண்டியை, எப்படி உன் குடும்பத்தை ஏத்துக்க வைக்கப் போறே.?."

“அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை மினி... இப்போ ஓரளவுக்கு ஜனாவை எப்படி ஹேண்டில் பண்ணுறதுன்னு புரியுது. இவ்வளவு நாளாக அனாதையா தனிமையில் இருந்தவர்.. அவர் மேல அன்பு காட்டுறதுக்கு ஆள் கிடைச்சா, ஈஸியா ஏத்துக்குவார்.. இனி அடிக்கடி அவர்கிட்டே என் வீட்டை பத்தி பேசிப்பேசி, அவரோட மனசுல என் குடும்பத்து மேல ஆசை உண்டாகுற மாதிரி செய்யப் போறேன்... அப்புறம் பாரு”

“என்னவோ நீ நினைக்கிறது எல்லாம் சரியா நடந்தா ஓகே..., ஆனா படிக்கிற வயசுல இது தேவை இல்லாததுன்னு எனக்கு தோணுது... நாளைக்கு நானும் விருமாண்டியை பார்க்க வரேன்.. ஒரு ஃபிரெண்டா உன் கூடவே இருப்பேன், ஓகே... சியர்அப் பேபி” என சொல்லி முடிக்கவும், சிந்துவும் ஸ்ரீஜாவும் வர...

“வாங்கடி லொட்டு லொசுக்குங்களா... ஹோம் வொர்க் முடிச்சாச்சா.?” என்றாள் கிண்டலாக

“மினிக்கா...” என்று அலறும் தங்கைகளுடன் சிறுமிகளாய் மாறி விளையாட துவங்கினர், வாழ்க்கையில் எந்த அனுபவமும் இல்லாத அந்த இளம் பெண்கள்...!!

இதயம் சொல்ல முடியாத வார்த்தைகளை சொல்வது கண்ணீரே..

ஷைலு இன்றைய நவநாகரீக பெண்களின் மறுபதிப்பே... எதையும் யோசித்து செய்யும் பக்குவம் இல்லாதவளே...! யாரையும் ஏமாற்றக் கூடாது, யாருக்கும் கனவிலும் துரோகம் செய்ய நினைக்க கூடாது என்ற பார்கவியின் வளர்ப்பு முறை மட்டுமே, அவளுடைய காதலில் அவளை நிலையாய் நிற்க வைத்தது. ஜனாவை காதலித்தது சரியா தவறா என்றெல்லாம் அவள் யோசிக்கவே இல்லை. ஒரு முறை எடுத்த முடிவை மாற்றாமல், கடைசிவரை வாழ்ந்து தான் பார்த்து விடுவோமே என்று நினைத்தாள்.

மறுநாள் மினியுடன் சென்று ஜனாவை சந்தித்தாள்... முதல் சந்திப்பை போலவே, இந்த சந்திப்பும் மினி, ஜனாவுக்குள் மோதலை கொண்டு வந்தது.. அடுத்து வந்த சந்திப்புகளும் சண்டையில் தான் முடிந்தது... ஏனோ அவர்கள் இருவருக்கும் ஒத்து வரவில்லை...! எந்த உரிமையில் ஜனாவுடன் சண்டை போடுகிறோம் என்று மினி யோசிக்கவில்லை...

காதலர்கள் சந்திக்கும்போது, அவ்வப்போது மினியும் சேர்ந்து கொள்வது வழக்கமாகியது.

ஜனா நல்லவன் தான் என்பதில் மினிக்கு மாற்று கருத்து எதுவும் இல்லை. ஆனால் ஷைலுவிற்கு அவன் ஏற்றவன் இல்லை என்ற எண்ணதில் அவள் உறுதியாக இருந்தாள். இது ஷைலுவிற்கு புரியவில்லையே என்ற ஆதங்கமே ஜனாவின் மீது கோபமாக மாறியது.. அவன் அவளுக்கு எந்த விதத்திலும் பொருத்தம் இல்லை என்பதை, கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் ஷைலுவுக்கு புரிய வைத்து விடும் நோக்கில்.. அவனை வேண்டும் என்றே சீண்ட ஆரம்பித்தாள்.

தோழியின் வாழ்க்கை பற்றிய பயம், வம்படியாக அவனிடம் எரிந்து விழ வைத்தது... யாரிடமும் ஒட்டாத ஜனாவும், மினியுடன் சரிக்கு சரி சண்டை போடும் காரணத்தை யோசிக்கவில்லை...! ஷைலுவிடமும் மினியைப் பற்றி என்றுமே குறையாக பேசியதும் இல்லை... அவர்கள் நட்பை மதித்தான்.

ஷைலு விஷயத்தில், ஜனாவிற்கு இயல்பாக வரும் கோபம் போதாது என்று, அவன் வேண்டும் என்றே கோபப்பட தொடங்கினான்... ஏனென்றால், பதிலுக்கு ஷைலு மரியாதை பன்மையை கைவிட்டு காச் மூச் என்று கத்துவதே காரணம்..! கோபத்தில் அவள் சொல்லும் 'டா' என்ற வார்த்தை அவனை மிகவும் ஈர்த்தது.

இப்போதெல்லாம் கோபத்தில் அவள் மரியாதை இல்லாமல் 'டா' போட்டு பேசுவதை அவன் விரும்ப ஆரம்பித்தான்... அது தங்களுக்குள் ஒரு நெருக்கமான உணர்வை தருகிறது என்றே நினைத்தான்... அதை வெளியே சொல்ல அவனின் ஈகோ தடுக்க... அவளை வேண்டும் என்றே கோபப்படுத்தி ரசிக்க ஆரம்பித்தான்.

அடுத்து வந்த ஒன்றரை வருடமும் கலவையாக போனது ஷைலுவிற்கு... ஜனாவை பொறுத்தவரை, ஷைலு அவனை புரிந்துக் கொள்வதில் ஆரம்ப படியிலேயே இருந்தாள்... ஆனால் அவனைப்பற்றி எல்லாம் தெரியும் என்ற கர்வம் மட்டும் தலை கொள்ளாது இருந்தது...!

தன்னைத் தானே தட்டிக் கொடுத்து திட்டமெல்லாம் பலமாகவே போட்ட ஷைலு..., அவள் எண்ணப்படி அடிக்கடி தன் பேச்சில், அவள் குடும்பத்தை பற்றி பேசினாள், அது அவர்கள் மேல் அவனுக்கு ஒரு பிடிப்பைக் கொண்டு வரும் என்று எண்ணினாள்... ஆனால் ஜனாவை பொறுத்த வரையில், அது எதிர் விளைவையே உண்டு பண்ணியது... 'அதெப்படி அவள் மனதில் அவள் குடும்பத்துக்கு முதல் இடத்தைத்

தரலாம்?' என்று அவனை பொருமை வைத்தது.

இவன் மட்டுமே அவள் மனதில் பதிய வேண்டும் என்றால், அவர்களை நிரந்தரமாக அவளிடமிருந்து பிரிப்பது ஒன்றே சரியான வழி என்று நினைத்தான்... அதற்கான வழியில் இறங்கினான்.

அவள் கண்ணால் பார்ப்பதையே, உடனடியாக அவளுக்கு முன்னால் கொண்டு வந்து வைப்பவன், அவள் வாய்விட்டு கேட்ட ஒன்றை செய்யாமல் இருப்பானா என்று யோசிக்க தவறினாள் ஷைலு.... அப்படி அவள் யோசிக்க தவறியதையே, அவளை, அவள் குடும்பத்தில் இருந்து பிரிக்கும் வழியாக ஜனா தேர்ந்தெடுத்தான்.

அவள் கேட்ட வசதிகள் அனைத்தையும் செய்ய கடுமையாய் உழைத்தான்... ஜூட் பேக்(jute bag) மற்றும் அட்டை கப் அண்ட் பிளேட் செய்யும் யூனிட்களும்.. அத்துடன் இல்லாமல், மளிகை பொருட்கள் ஹோல்சேல் ஏஜென்சி ஒன்றையும் எடுத்தான்... அவளை பார்க்கும் நேரம் மட்டும், தன் சோர்வை வெளிக்காட்டாமல் இருந்தான்.. அவள் ஆசைப்பட்டுக் கேட்ட அனைத்தையும், அடுத்த ஒன்றரை வருடத்தில், தன் கடுமையான உழைப்பால் சாதித்தான்.. பேங்க் லோன் மூலம் மெயின் சிட்டியில் டபுள் பெட் ரூம் பிளாட் வாங்கினான்.

ஷைலு கேட்டபடி ஸ்க்ரீன் முதல் மிக்ஸி வரை, பேச்சு வாக்கில் விசாரிப்பது போல அவளிடமே விசாரித்து, பார்த்து பார்த்து அவளுக்காக வாங்கி சேர்த்தான்... அவன் மனதில் அவளை ராணியாய் வைத்து தாங்க வேண்டும் என்ற எண்ணம்...! அதுவே அவனை சளைக்காமல் உழைக்க வைத்தது... அவள் விருப்பப்படி அனைத்தையும் செய்தவன், இன்ப அதிர்ச்சியாக அவளுக்கு இவற்றைக் காண்பிக்க வேண்டும் என்று அவள் பிறந்த நாளுக்காக காத்து இருந்தான்.

ஏனோ அன்று ஷைலுவிற்கு மனம் முழுவதும் ஒரே பூரிப்பாக இருந்தது. இப்போதெல்லாம் ஜனா தன் பிறந்த நாளை ஆவலுடன் எதிர்பார்ப்பது வேறு, அவளை மகிழ்ச்சியின் உச்சத்திற்கு கொண்டு சென்றது.. அவன் தனக்கு என்ன சர்ப்ரைஸ் வைத்து இருக்கிறான் என்று அறியும் ஆவல் மனதை அலைபாய வைத்தது... நாட்களை எண்ண தொடங்கியது மனது...! 'இன்னும் மூணு நாள் இருக்கே'... என்று யோசித்தபடி வீடு வந்தவளுக்கு..., வீட்டில் இருந்த தந்தையும், தங்கைகளின் குறுகுறு பார்வையும் வித்தியாசமாய் பட, நேரே அடுக்களைக்குள் வந்தவள்...

"அம்மா..., ஒரு காஃபி ப்ளீஸ்... ரொம்ப தலை வலிக்குதும்மா.."

“நான் போட்டு வைக்கிறேன், நீ போய் ஃபிரெஷ் ஆகிட்டு வா கண்ணு...” என்றார் பார்கவி மலர்ந்த முகமாய்...

‘ஏதோ சரி இல்லையே...! கை கால் கழுவாமல் இப்படி அடுக்களைக்குள் வராதே என்று பாட்டு படிப்பாங்களே... அது மிஸ்ஸாகுதே, என்னவாக இருக்கும்..’ என்று யோசித்தவாறே தாய் சொன்னதை செய்தவள், ஹாலுக்கு வரவும், பார்கவி அவளுக்காக காஃபியுடன் காத்திருப்பதை கண்டவளின் பார்வை, தன் இயல்பாய் தங்கைகள் இருந்த இடத்தைப் பார்க்க... காலியாகக் காட்சியளித்த அந்த இடம், ஏதோ செய்தி இருக்கிறது என்று உணர்த்தியது...

எதையும் கண்டுக் கொள்ளாமல்... தந்தையின் அருகே அமர்ந்தவள், வழக்கம் போல அவர் மடி சாயப் போக...

“கண்ணம்மா..., உன்கிட்ட கொஞ்சம் பேசணும், எழுந்து உட்காரு” என்றவரை... ‘என்ன’ என்பது போல் கேள்வியாக பார்த்தாலும், மனம் திடுக்கிட்டது. ‘ஒருவேளை ஜனாவைப் பற்றி தெரிஞ்சு இருக்குமோ..! கேட்டா ஒத்துக்க வேண்டியது தான்’ என நினைத்தபடி, அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு இருந்தாள்.

“இதை கொஞ்சம் பாரு கண்ணம்மா...,” என அவர் நீட்டிய கவரை புரியாமல் வாங்கியவள், அதை பிரித்தப்படியே... “என்னப்பா இது..”

“மாப்பிளை போட்டோ கண்ணு..., பார்த்து பிடிச்சிருக்கான்னு சொல்லு, நல்ல குணம்... அழகா இருக்கார்... நல்ல வசதி..” என்றார் பார்கவி முந்திக் கொண்டு...

கவரைப் பிரித்த கைகள் அப்படியே நிற்க, இருவரையும் திகைப்பாக பார்த்தவள்.. “அப்பா..., இப்போ என்ன அவசரம்...? நான் இன்னும் படிப்பையே முடிக்கலை, அதுக்குள்ளே எதுக்கு கல்யாணம்...? இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமேப்பா ப்ளீஸ்...”

“அதனால என்ன கண்ணம்மா..., படிப்பு முடியுறதுக்கு இன்னும் கொஞ்ச நாள் தானே இருக்கு, கல்யாணம் முடிஞ்சபிறகு கூட படிச்சிக்கலாம்... மத்ததை விடு, பையனுக்கு தங்கமான குணம்... தானா வந்திருக்கற இந்த அருமையான வரனை இப்போ விட்டோம்னா, கொஞ்ச நாள் கழித்து, இப்படி ஒரு பையன் அமையுறது ரொம்ப கஷ்டம்மா..”

“அப்பா..., நான் படிச்சிட்டு கொஞ்ச நாள் வேலைக்கு போகணும், உங்களுக்கு உதவியா இருக்கணும்னு நிறைய ஆசை இருக்குப்பா..

அதனால தான் சொல்லுறேன், இது இப்போ வேண்டாம்ப்பா...”

“அம்மாடி.., முதல்ல போட்டோவைப் பாரு, உனக்கு பிடிக்கலைன்னா விட்டுடு.. ஆனா வேற காரணம்லாம் சொல்லாதே... அப்பாவுக்கு ஹெல்ப் பண்ணனும்னு நீ நினைக்கிறதே, எனக்கு சந்தோஷம்டா.. ஆனா அப்பாவுக்கு எது சந்தோஷம் தெரியமா..., என்னால முடியும் போதே உங்களுக்கு செய்ய வேண்டிய கடமையை செஞ்சு பார்க்கறதுதான்...”

“ஆனா அப்பா..”

“பாரும்மா..., நானே உனக்கு மாப்பிள்ளை தேடிக்கிட்டு தான் இருந்தேன்.. இது அவங்களா தேடி வந்து இருக்காங்க... நல்ல சம்பந்தம்... பையன் பேரு ப்ரிதீவ்..., அம்மா டீச்சர்... அப்பா ரிட்டையர்டு தாசில்தார்... ஒரு அக்கா, அவங்களையும் கட்டிக் கொடுத்துட்டாங்க... பையனும் சொந்தமா தொழில் செய்றான்... பிக்கல் பிடுங்கல் இல்லாத குடும்பம்... நான் நல்லா விசாரிச்சு பார்த்துட்டேன்..”

“இல்லப்பா.. எனக்கு இந்த கல்யாணம் வேண்டாம்...”

படபடப்பாக... “என்னடி சொன்னதையே கிளிப்பிள்ளை மாதிரி திரும்ப திரும்ப சொல்லுறே... ஏதாவது லவ்வு கிவ்வுன்னு உளறப் போறியா...”

“பார்கவி... நிறுத்துறியா...” என பார்கவியை முறைத்தவர் ஷைலுவிடம்

“கண்ணம்மா..., இது உன்னோட வாழ்க்கை..., அது உன் விருப்பம் போல தான் அமையணும்னு ஆசைப்படுறேன்... இப்போ உன் கல்யாணம் முடிஞ்சா தான் என்னால அடுத்ததா சிந்துவுக்கு கொஞ்சம் சேர்த்துட்டு, அவளுக்கு ஒரு வழி பண்ண முடியும்...”

“அப்பா..”

“இரும்மா.. சொல்லுறத முழுசா கேளு.. ஸ்ரீ குட்டிக்கு செய்ய அப்பா உடம்புல தெம்பு இருக்குமான்னு தெரியலை..., அப்போ வேணா என் ரெண்டு மகனுங்க அதை எடுத்து செய்யட்டுமே, எனக்கும் நிறைவாய் இருக்கும்.

கண்ணம்மா.., உடனே பதில் சொல்லாதே.. ஒரு வாரம் டைம் எடுத்துக்கோ, யோசிச்சு சொல்லு... உன் விருப்பம் தான் முக்கியம்...” என்றவர் எழுந்து வெளியே புறப்பட்டு விட...

ஒரு பொம்மையை போல, கையில் கவருடன் எழுந்தவள், அதை தன்

அறை மேஜையில் வைத்துவிட்டு... இந்த விஷயத்தை எப்படி ஜனாவிடம் சொல்வது...? அவனை எப்படி அப்பாவுக்கு அறிமுகப் படுத்துவது என யோசித்தாள்.

'ஓகே இப்போ சொன்னா ஜனா மூட்அவுட் ஆகிடுவார்... அதனால, பிறந்தநாளுக்கு அப்புறம் இந்த விஷயத்தைப் பக்குவமா சொல்லி வீட்டுக்கு கூட்டி வருவோம்' என்று நினைத்தவள்... அதோடு மேஜையில் இருந்த கவரைப்பற்றி சுத்தமாக மறந்து போய், தன் கனவுகளில் மிதக்க ஆரம்பித்தாள்.

அன்றைய தினம் இருபத்தி இரண்டாவது பிறந்தநாள் ஷைலுவிற்கு... பெற்றோரிடம் ஆசீர்வாதத்தையும், தங்கைகளின் வாழ்த்தையும் வாங்கியவள்.. அன்று சனிக்கிழமை ஆனதால் கோவிலுக்கு கூப்பிட்ட பார்கவியிடம்..., 'ஃபிரெண்ட்ஸ் கூட பார்ட்டி, அதனால் மினி வீட்டுக்கு போகிறேன்' என்று பிடிவாதம் பிடித்து கிளம்பி, இரு தெருக்கள் தள்ளி, அவளுக்காக காத்திருந்த ஜனாவை தேடி துள்ளும் மானாய் ஓடினாள்.

தூரத்திலே அவனைப் பார்த்ததும் முகம் மலர நெருங்கியவள்.. "ரொம்ப நேரமா வெயிட் பண்ணுறீங்களா.? நானே மாலுக்கு வந்து இருப்பேனே, நீங்க எதுக்கு இங்க வந்தீங்க...? யாராவது பார்த்துட போறாங்க, வண்டியை எடுங்க" என்று அவசரமாக துப்பட்டாவால் தலையை மூடியவளை முகம் இறுக முறைத்தவன்....

"நீ என்னைப் பத்தி என்னன்னு நினைக்குற...? ரோட் சைட் ரோமியோன்னா...! எதுக்கு இப்போ மூஞ்சியை மூடுறே...?"

"அப்பாஆஆஆ... கடவுளே... இன்னைக்கு என்னோட பிறந்த நாள்... இன்னைக்காவது என்னை திட்டாம இருக்கலாமே ப்ளீஸ்..." என்று அவள் தலை சாய்த்து கேட்ட விதம் சிரிப்பை வரவைக்க..., உட்காரு என்பது போல் தலை அசைத்தவன், வண்டியை கிளப்பினான்.

முதலில் ஷைலுவின் விருப்பப்படி கோவிலுக்கு போனவர்கள்... அங்கிருந்து கிளம்பி, மாலுக்கு போகும் வழியில் போகாமல், வேறு பாதையில் வண்டி போகவும் மனம் குழம்பிய ஷைலு...,

"எங்கேப்பா போறோம்.?." என்ற கேள்விக்கு, அவனிடம் பதிலில்லை என்றதும், திரும்ப திரும்ப இருமுறை கேட்டவள், வாய்க்குள் 'முசுட்டு விருமாண்டி' என புலம்பியவாறு அவன் முதுகில் தலை சாய்த்து, அவனோடு செல்லும் அந்த பயணத்தை ரசிக்க ஆரம்பித்தாள்... அவள்

உணர்வு புரிந்தது போல் அவனும் மெல்லவே போனான்.

‘ரெயின்போ அப்பார்ட்மெண்ட்ஸ்’ என்ற பெயர் தாங்கிய வளைவுக்கு நடுவே வண்டி நுழையவும்... “இங்க யார் இருக்காங்க.?.” என்ற ஷைலுவின் கேள்விக்கு பதில் சொல்லாமல் பார்க்கிங்கில் வண்டியை விட... “சொல்லுங்க...” என்று அவன் தோளை உலுக்க..

மெல்லிய கண்சிமிட்டலுடன் சிரித்தவன், எதுவும் பேசாமல் முன்னே நடக்க, புரியாமல் ஓர் நொடி நின்றவள், அவனை நோக்கி நடையை வேகமாக எட்டிப் போட்டாள்... அவனோ அவனைப் பார்த்து சிரித்தபடி வந்த பெண்மணியுடன் பேச தொடங்கினான்.

“என்ன ஜனா..., இன்னைக்கு வேலை இல்லையா? இந்நேரத்துல இங்க...” என்றவருக்கு பதில் போல

“அது..” என்றபடி திரும்பி ஷைலுவைப் பார்க்க... அதற்குள் அவனை நெருங்கியவள், ‘யார் இவர்?’ என்பது போல கேள்வியாக ஜனாவை பார்த்தாள்.

“அடடே.. ஷைலு பொண்ணா... வா... வா... என்ன ஜனா, இப்போ தான் கூட்டிட்டு வர தோணுச்சா...? என்னப்பா இன்னைக்கு கூட்டிட்டு வந்து இருக்கே..? ஒரு புதன் வெள்ளின்னு நல்ல நாளா பார்த்து கூட்டிட்டு வந்து இருக்கலாம் இல்ல...”

“இல்லேம்மா... இன்னைக்கு ஷைலஜாவோட பிறந்தநாள், அதான் சர்ப்ரைஸ்ஸா....”

“ஹோ அப்படியா... வாழ்த்துக்கள்” என ஷைலுவை நோக்கி சொன்னவர், ஜனாவிடம் ஏதோ ரகசியமாக சொல்லவும், அவனும் தலையாட்ட... அவர் ஷைலுவிடம்... “அம்மாடி, அதோ லிப்ட்டுக்கு லெஃப்ட் சைட் டோர் இருக்கே, அதான் எங்க வீடு... என்றவர் பேசிக்கொண்டே செல்ல...

அறுபதின் முதுமை முகத்தில் தெரிந்தாலும், சாந்தமும் நட்புணர்வும் கொண்ட அவர் பேச்சு ஷைலுவின் மனதை கவர்ந்தது. தன்னை நன்கு அறிந்தது போல பேசியது, சுவாரசியத்தை உண்டு பண்ணியது... மெல்ல ஜனாவிடம்

“யார் இவங்க...? உங்களுக்கு தெரிஞ்சவங்களா...? இவங்க வீட்டுக்கு ஏன் வந்தோம்.?.” என்ற அவளின் கேள்விக்கு பதில் அளிக்காமல், நேராக லிஃப்ட் அருகில் சென்றவன், திறந்து இருந்த லிஃப்டினுள்

நுழைய... புரியாத பார்வை பார்த்தபடி அவனை பின் தொடர்ந்தவளின் மனதில் ஏதோ நெருடலாய் இருக்க, என்னவாக இருக்கும் என்று யோசித்தபடி இருந்தாள்.

முதல் தளத்தில் வெளியேறியவனை பின்தொடர்ந்தவள், அவன் முதல் கதவருகில் நின்று, அருகில் வரும்படி கண்காட்ட, நெருங்கியவளின் கைப் பற்றி

"வெல்கம் டு அவர் நியூ ஹோம்..." என முகம் பளபளக்க சொன்னவன், அவள் கையில் சாவியை பதிக்க, உறைந்து நின்றவள் மனதில் இனம் தெரியாத பாரம் மலையாய் அழுத்தியது.

"ம்ம் திற ஷைலஜா.. என்ன யோசிக்கிற..." என்றவனின் உந்துதலுக்கு ஏற்ப, கைகள் நடுங்க கதவை திறக்கவும்...

"ஷைலஜா..., உள்ளே போகாதே... திலகா அம்மா நம்மை இங்கேயே நிற்க சொன்னாங்க.." என்று அவன் சொல்லி முடிக்கவும், திலகவதி கையில் ஆரத்தி தட்டுடன்... கூடவே இன்னொரு பெண்மணியையும் அழைத்து வந்து, ஆலம் எடுத்து இருவரையும் உள்ளே அனுப்ப..

ஹாலின் உள்ளே நுழைந்ததும், எதிர்புற சுவரைப் பார்த்தவள், மேலும் முகம் சுருங்க ஜனாவை வெறித்தாள்.

அவள் முக மாறுதல்களையே உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தவனின் மனம் சோர்ந்து போனது... 'இவளுக்காக பார்த்து பார்த்து ஒவ்வொன்றும் செய்தும், இவள் முகம் கடுப்பை தானே காட்டுகிறது...' என்று நொந்தான்.

உள்ளே வந்ததும் சந்தோஷத்தில்... பூரிப்பால் குதிப்பாள் என்று மிகவும் எதிர் பார்த்தவனுக்கு, அவளது முகபாவம் கடுப்பை கிளப்ப..

"என்ன ஷைலஜா, பிடிக்கலையா..?" என்றான் சுவற்றை காட்டி..

எதிரே இருந்த ஒருபக்க சுவரில், வால் போஸ்டராக, அவனின் இறுகிய அணைப்பில் முகம் பிரகாசிக்க, மயக்கம் நிறைந்த புன்னகையுடன் அவன் நெஞ்சில் சாய்ந்திருந்த ஷைலுவும் ஜனாவும் அலங்கரிக்க...

அதைப் பார்த்தவள் மனம்... 'பாவி இந்த படத்தை இப்படி ஒரு பக்க சுவரை முழுவதும் அடைச்சு, நட்ட நடு ஹாலில் ஒட்டி வச்சு, மானத்தை வாங்குறானே... அடம் பிடிச்சு இவனை போன் மாத்த வைத்ததுக்கு.. இப்படி ஆப்பை எடுத்து சொருகிட்டானே...!' என்று புலம்பியவளுக்கு,

திலகவதி இவளை தெரிந்தது போல பேசியது ஏன் என்று புரிய வர, முகம் கடுப்பை காட்டியது.

“என்ன வேலை பண்ணி வச்சு இருக்கீங்க...?” என்றாள் பல்லை கடித்தபடி

“நினைச்சேன்...! நான் ரசிச்சு ரசிச்சு ஒண்ணு செஞ்சா உனக்கு பிடிக்காதே... என்ன செஞ்சா தான் உனக்கு திருப்தி வரும்.? நீ ஆசைப்பட்டு கேட்டது அத்தனையும் செஞ்சும்..., உன் முகத்தில் துளி கூட சந்தோஷம் இல்லை... ஏன் ஷைலஜா..? உன்னை என்னால் திருப்தி பண்ண முடியலை... மொத்தத்தில் உன்னைப் புரிஞ்சிக்கவும் முடியலை” என்று மனம் வாட சொன்னவன், அவர்களை விட்டு விலக

ஷைலுவின் முகம் வெளிப்படுத்திய உணர்வுகள், திலகவதிக்கு ஒரு வித திருப்தியை தர... “நில்லு தம்பி... இப்போ ஏன் பிள்ளைய கோபிக்கிற.? இப்படி நாலு பேர் வர இடத்துல, நட்ட நடு ஹால்ல இப்படி ஒரு படத்தை ஒட்டி வச்சா கூச்சமா இருக்காதா...? எந்த பொண்ணுக்கு தான் சங்கடமா இருக்காது...! இதை உங்க ரூம்ல ஒட்டி இருந்தா பரவாயில்லை... முதலில் எனக்கே சங்கடமா தான் இருந்தது...”

‘அப்படியா’ என்பது போல் ஷைலுவைப் பார்த்தவன் “நம்ம வீட்டுக்கு யார் வர போறாங்க... மினி தானே...! அவதானே இந்த போட்டோவை எடுத்தது, அப்புறம் என்ன.?” என்று ‘நான் யோசிச்சு தான் செய்தேன் என்ற பாவனையில்..’ சொன்னவனை, என்ன செய்வது என்பது போல பார்த்தவள், ஏதோ சொல்ல வர.. அவனை யோசனையாக பார்த்தபடி, அவளை பேச விடாமல் தடுத்தார் திலகா.

“ஏன்.. பா... எங்களையெல்லாம் பார்த்தா மனுஷங்களா தெரியலையா...? நாங்க எல்லாம் உங்க வீட்டுக்கு வர வேண்டாமா..? வீடுன்னா நாலு மக்கமனுஷா வருவாங்க, அதை புரிஞ்சிக்கோப்பா... அவ்வளவு ஏன், ஷைலுவோட அப்பா அம்மா எல்லோரும் வருவாங்களே...”

புருவம் இடுங்க “அவங்க எல்லாம் இங்கே ஏன் வரணும்...? அப்படியே வந்தாலும் இதுல என்ன பிரச்சனை.?.”.

பேச்சை வளர்ப்பது சரி இல்லையோ என்ற பாவத்தில்.... “சரி நல்ல நாளும் அதுவுமா எதுக்கு இந்த விவாதம்... விடுங்க இந்த பேச்சை...” என்றவர் ஷைலுவிடம்

“நீ எப்போம்மா கிளம்புற...”

“அது ஆன்ட்டி... அம்மாக்கிட்ட சாயங்காலம் வரேன்னு சொன்னேன்” என்று முகம் வெட்கத்தில் மின்ன சொன்னவளைப் பார்த்தவர்...

“முதன்முதலா சமைக்கிறப்போ நல்ல நேரம் பார்க்கணும்..., பால் காய்ச்சணும்... அதனால இன்னைக்கு இங்க சமைக்க வேண்டாம், உங்க ரெண்டு பேருக்கும் எங்க வீட்டுல தான் மதியம் சாப்பாடு.. வா... என் கூட வந்து கொஞ்சம் ஹெல்ப் பண்ணு..”

ஜனாவோ... “இல்லேம்மா வேண்டாம்.. பரவாயில்லை .., நாங்க ஹோட்டல்ல வாங்கிக்கிறோம்... உங்களுக்கு ஏன் சிரமம்...”

“இதுல என்ன சிரமம்....? அடுத்த வாரம் நாங்க அமெரிக்கா கிளம்புறோம்.. உங்க கல்யாணத்துக்கு இருக்க மாட்டோம்... அதனால இப்பவே உங்களுக்கு நாங்க கொடுக்குற விருந்துன்னு நினைச்சிக்கோ... எதுவும் பேசாதே..” என்றவர், அவன் பதிலை எதிர்பாராமல், ஷைலுவை தன்னுடன் அழைத்து சென்று, தன் கணவருக்கு அறிமுகப் படுத்திவிட்டு.. அவரை கடைக்கு அனுப்பியவர்.. சமையலை ஆரம்பித்த படி ஷைலுவிடம் பேச்சு கொடுத்தார்.

“ஷைலஜா..., ஜனா இந்த வீட்டை வாங்கி ஆறு மாதம் ஆகுது... பாவம் புள்ள, யார் கூடவும் நெருங்கி பழகாம, ஒரு தீவுல இருக்குற மாதிரி தான் இருந்துச்சு அந்த தம்பி... நானே ஆரம்பத்துல அந்த தம்பி கூட நெருங்கி பேச ரொம்ப போராடினேன். ஏதோ இப்போ தான் அம்மான்னு கூப்பிடுற அளவுக்கு வந்து இருக்கான்... முதலில் பழகுறது தான் கஷ்டம்... ஆனா பழகிட்டா ரொம்ப நல்ல பிள்ளைம்மா... நீ தான் புரிஞ்சு நடந்துக்கணும்”

“எனக்கு தெரியும் ஆன்ட்டி..”

“தெரிஞ்சும், உங்க வீட்டில் ஏன் இன்னும் சொல்லாம இருக்குற.?.”

திடுக்கிட்டவளாய்... “உங்களுக்கு எப்படி தெரியும்? அது... சொல்லணும் ஆன்ட்டி... இன்னைக்கு நைட் அப்பாக்கிட்ட பேசிடுவேன்...”

“லேட் பண்ணிடாதே ஷைலஜா.. ஜனா தம்பி உன் மேல உயிரையே வச்சு இருக்குது வீட்டில் இருக்கும்போது, நாள் முழுக்க அந்த போஸ்டரை விட்டு இங்க அங்க நகராது.. அவ்ளோ ப்ரியம் உன் மேல... உங்க கல்யாணத்தை பத்தி கேட்டா.. ‘செய்யணும்’ என்று

சொல்லுவான்.. உங்க அப்பா அம்மா பற்றி பேச்செடுத்தால் தவிர்த்துவிடுவான்.. அவங்களுக்கு இதில் சம்மதமான்னு கேட்டா, பதில் இருக்காது.. அவன் பேச்சில் நீ மட்டும் தான் இருப்ப... இன்னைக்கு கூட அப்படி தானே பேசினான்.. அதான் கேட்டேன்... எதை செய்தாலும் பெரியவங்க அனுமதியோட செய்யுங்க, சரியா...”

“கண்டிப்பா ஆன்ட்டி.. அம்மா அப்பா இல்லாம எந்த முடிவும் எடுக்க மாட்டேன்.. அவர் சார்பா தான் நீங்க இருக்கீங்களே...”

“இல்லடா கண்ணு... நாங்க அடுத்த வாரம் அமெரிக்கா போறோம்.. எங்களுக்கு ரெண்டு பொண்ணுங்க... ரெண்டையும் அங்கேயே கட்டி கொடுத்தாச்சு... பொண்ணு கொடுத்த இடத்தில, இருக்கக் கூடாதுன்னு இத்தனை நாளா அங்கேயே வந்து இருக்க சொல்லி, அவங்க கூப்பிட்டப்போ எல்லாம், சாக்குப்போக்கு சொல்லி இங்கேயே நாளை தள்ளிட்டோம்... இப்போ பேத்தி பெரிய மனுஷி ஆயிட்டா... எங்களுக்கும் தனியா கிடந்து கிடந்து போரடிச்சிடுச்சு... அதான் பிள்ளைகளோட போய்டலாம்னு முடிவு பண்ணிட்டோம்.

ஜனா ரொம்ப நல்ல பையன்... அவன் மனசறிஞ்சு நடந்துக்கோ. உனக்காக அவன் வீடு வாங்கி, எல்லாத்தையும் பார்த்து பார்த்து செஞ்சு இருக்கான்... ஆனா உன் முகத்தில் கொஞ்சம் கூட திருப்தியே இல்லையே.., ஏம்மா.? ரொம்ப எதிர்ப்பார்ப்போட இருந்து, இப்போ உன்னை இப்படிப் பார்த்து, தம்பி முகம் கூட சோர்ந்து போய்டுச்சு...”

கண் கலங்க அவர் கையைப் பிடித்தவள் “ஆன்ட்டி, இந்த வீடு, அந்த சாமான் இதுபோல எதையும் நான் எதிர்பார்க்கலை. அன்னிக்கு ஒருநாள் திடீர்னு அவர், உடனே கல்யாணம்னு சொன்னப்போ..., எனக்கு கொஞ்ச நாள் டைம் தேவைப் பட்டுச்சு... அதனால அப்போ ஏதோ வாயில் வந்ததை சொன்னேன்... அதை சீரியஸா எடுத்துக்கிட்டு இத்தனையும் வாங்கி இருப்பார், அதையும் என்கிட்ட சொல்லாமல்.. எதிலும் என்னை கலக்காமல் செய்வார்னு கொஞ்சம்கூட எதிர் பார்க்கலை ஆன்ட்டி...

இந்த வீடு முழுக்க அவர் மட்டும் தானே இருக்கார்... இதுல நான் எங்கே இருக்கேன்...? ஒவ்வொரு பொருளும் ரெண்டு பேரும் கலந்து பேசி வாங்கி இருந்தா, எனக்கும் சந்தோஷமா இருந்திருக்கும்.. குடும்பம்னா ரெண்டு பேரும் சேர்ந்து தானே முடிவு செய்யணும்....? இப்படி தனியா இவரே எல்லா முடிவையும் எடுத்தா எப்படி.., அப்போ இங்க நான் யாரு.?”

“ஷைலு..” என ஆதரவாக அவள் தோளை தொட

“எதையோ இழந்தது போல பாரமா இருக்கு, ஆனா அது என்னன்னு புரியல ஆன்ட்டி... வலிக்குது...” என கண்ணில் நீர் வடிய சொன்னவளை, திகைத்து போய் பார்த்தார் திலகா.

அதிகமான எதிர்ப்பார்பின் முடிவு கண்ணீரே..

ஷைலுவின் கண்ணீரை எதிர்பாராத திலகவதிக்கு, அவள் நிலைமை மிகுந்த மனக் கஷ்டத்தை கொடுத்தது... படத்தில் பார்த்தவரை அமைதியான அவள் முகமும்... அதில் தெரிந்த வெட்கமும்... பொறுப்புணர்ச்சியும்... அவளை பக்குவமான பெண்ணாக காட்டியது... நேரில் பார்க்கும் ஷைலுவிடம், திருவிழாவில் காணாமல் போன குழந்தையின் பரிதவிப்பும், எதிர்கொள்ள போகும் வாழ்க்கை பற்றிய பயமும் தெரிந்தது... சற்றே சுதாரித்துக் கொண்டவர் அவளிடம்...

“கண்ணைத் துடை ஷைலும்மா... இப்போ எதுக்கு அழுகுறே...? ஒரு பொண்ணோட மிகப் பெரிய ஆசை என்னவாக இருக்கும் தெரியுமா..., கண்ணால் பார்ப்பதை கை கொண்டு வந்து சேர்க்கும் கணவன்... அப்படி ஒரு ஆளா ஜனா உனக்கு கிடைச்சு இருக்கான்.. இது புரியாம கண்ணை கசக்குற...”

“இங்கப்பாரு... அந்த வீடு முழுக்க ஜனா தான் இருக்கான்னு சொன்னியே, அது தப்பு... ஒவ்வொண்ணும் உனக்கு தெரியாம, உன்னை கேட்காம வாங்கி இருக்கான்னு சொல்லுறியே.. தப்பும்மா.. உனக்கு தெரியாம வேணும்னா வாங்கி இருக்கலாம், ஆனா உன்னை கேட்காம வாங்கலை, அந்த அத்தனையிலும் அவன் விருப்பம்னு எதுவுமே இல்லை... உனக்கு பிடிச்சதாதான் பார்த்து பார்த்து வாங்கி சேர்த்து இருக்கான்... யாருக்காக...? உனக்காக..! யாருக்கு கிடைக்கும் இப்படி ஒரு வரம்...! மனசை போட்டு குழப்பிக்காதே ஷைலு...”

“அது இல்ல ஆன்ட்டி... இந்த ரெண்டு வருஷத்துல அவரை என்னால கொஞ்சம் கூட புரிஞ்சிக்க முடியல, சட்டு சட்டுன்னு குணத்தை மாத்திக்கிறார், அதுவே எனக்கு ரொம்ப பயம்மா இருக்கு...” மினிக்கு இந்த காதல் அறவே பிடிக்கவில்லை என்பதால், அவளிடம் தன் குழப்பத்தை சொல்லாமல் இருந்தவள், பகிர்ந்துக் கொள்ள ஆள் கிடைத்த நிம்மதியில், தன் ஆழ்மனதில் இருந்ததை சொல்லி விட்டாள்.

‘என்னது இது...! இந்த புள்ளை ஜனாவை கொஞ்சமும் புரிஞ்சிக்கலை போலவே... இதுங்க வாழ்க்கை எப்படி சுமுகமா போகுமோ’ என ஒரு நொடி மனதினுள் தவித்தவர்.., ஒரு முடிவுடன் “ஷைலும்மா..., வாழ்க்கையை தொடங்க போற எல்லா பொண்ணுக்கும் இந்த பயம் கண்டிப்பா இருக்கும்... கண்டதையும் நினைச்சு, உன்னை நீயே குழப்பிக்காதே... இதுவும் நீச்சல் மாதிரி தான்... தைரியத்தை வர வச்சுக்கிட்டு குதிச்சிடு, தன்னால நீச்சல் வரும்...”

“இல்ல வந்து... அவர்..”

“என்ன இல்ல.. இந்த காலத்து பசங்க போல ஜாலியா இல்லாம எப்பவும் இறுக்கமாவே இருக்கான், அதானே... அம்மாடி, எல்லா பிள்ளைங்களுக்கும் நாளைக்கு என்ன நடக்குங்கற பயம் இல்லை, அதையெல்லாம் அவங்க பெத்தவங்க பார்த்துப்பாங்க... அதனால இந்த பிள்ளைங்களும் ஜாலியா இருக்காங்க...

ஆனா ஜனாவுக்கு அப்படி யாரும் இல்லையே...! யோசிச்சு பாரு.. ஜனா பாவம் இல்லே, சின்ன வயசுல இருந்து, அவனும் மனசுக்குள்ளே எவ்வளவு ஏங்கி இருப்பான்...? அவன் ஆசைப்படுறதை கேட்கவோ, பேசவோ கூட யாருமில்லாம, மனசுக்குள்ளேயே வச்சு புழுங்கி இருப்பானே...! அதுதான் அவனை இந்தளவுக்கு கொண்டு வந்து விட்டிருக்கும்...! அவனுக்கு ஒவ்வொரு நாளும் போராட்டம் தானே... அதான் இப்படி இருக்கான்... அவன் பேச்சு, மூச்சு எல்லாமே நீதாண்டா.. புரிஞ்சுக்கிட்டு அனுசரிச்சு போம்மா...”

மெல்ல சிரிப்பு முகத்தில் படர “தேங்க்ஸ் ஆன்ட்டி”

“இது என் ஷைலுவுக்கு அழகு... அவன் இங்க வந்த இந்த ஆறு மாசத்துல, இப்போ ரெண்டு மாசமா தான் என்கிட்டே சகஜமா பேசுறான், நானும் உங்க வீட்டுக்கு வந்து போறேன்.. அவன் உன்னைப் பத்தி சொன்ன முதல் வார்த்தையே... ‘அவள் என் வாழ்வில் வரமாய் வந்தவ’ன்னு தான் சொன்னான்.

என்னைக் கேட்டா, அவன் தான் உனக்கு கிடைச்ச வரம்...! உன் கையில இருக்கும் களிமண்ணு அவன்... வாழ்க்கையோட நீக்குப்போக்கு தெரிஞ்சு, அதை சிலையா செய்ய போறியா..., இல்லே தண்ணியில கரைச்சு சேறாக ஆக்க போறியான்றது உன் கைல தான்டா இருக்கு...”

“எனக்கு அவரை பிடிக்கும் ஆன்ட்டி...”

அவள் கன்னத்தை தட்டியவர் “அது எனக்கும் தெரியும்டி பெண்ணே, உன்னோட குழந்தைத்தனத்தை விட்டு பொறுப்பா நடந்தா, உங்க வாழ்க்கை நல்லா இருக்கும்மா.. உனக்கும் இன்னும் வயசாகிடலையே, சின்னப் பொண்ணு தானே, போகப்போக உனக்கே அந்த பொறுப்பும், பக்குவமும் வந்துடும்... நீங்க ரொம்ப நல்லா இருப்பீங்க..” என்றவர் அத்துடன் அந்த பேச்சை முடித்து, தன் பேரப்பிள்ளைகள், குடும்பம் என்று பேசிக் கொண்டே சமையலை முடித்தவர்கள்... பின் ஒன்றாக உண்டும் முடித்தார்கள்.

கொஞ்ச நேரம் ஜனா திலகவதியின் கணவருடன் பேசிக்கொண்டு இருந்தவன், அவர்களிடம் சொல்லிவிட்டு கிளம்பும்படி ஷைலுவுக்கு கண்ணைக் காட்ட, அவரோ அவர்கள் கூடவே ஜனாவின் வீட்டுக்கு வந்தார்.

ஜனாவோ அவரை கேள்வியாக பார்க்க... “என்னப்பா பார்க்குற... ஆயுசு முழுக்க அவ கூடத்தானே இருக்க போறே, காலம் முழுக்க பேசிக்கிட்டு தானே இருக்க போறீங்க... ஆனா நான் இனி இவளை எப்போ பார்ப்பேனோ... இன்னைக்கு முழுக்க நான் இவளோட தான் இருப்பேன், நீ போய் செத்த நேரம் கண் அசரு” என்றவர், ஷைலுவிடம் விட்ட இடத்தில இருந்து தன் பேச்சை தொடர்ந்தார்.

கொஞ்ச நேரம் அங்கே இருந்தவன், இருவரும் தன்னை கண்டுக் கொள்ள போவது இல்லை என்று புரிந்தது போல, அவர் சொன்னபடி கண் அசருவதே மேல் என்று உறங்க சென்றான்.

நேரம் கடந்து நாலரையை நெருங்க கடிகாரத்தை பார்த்தவர் “ஷைலு, மணி ஆகிடுச்சு... உங்க அங்கிள் தேடுவார், அவருக்கு காஃபி போடணும், அப்படியே உங்களுக்கும் கொடுத்து விடுறேன்..” என்று சொல்லியபடி கிளம்பியவர், சற்று தயங்கி நின்று..

“ஷைலுமா..., நீ எப்போ கிளம்புவ..”

“ஏன் ஆன்ட்டி....”

“அது வந்து...” என தயங்கியவர், “அம்மாடி ரொம்ப நேரம் இருக்காதே.. பேசிட்டு சீக்கிரம் கிளம்பிடுமா..”

முகம் கறுக்க கண்ணோரம் கலங்க.. “நீங்க தப்பா புரிஞ்சிக்கிட்டீங்க.. நான் இப்போ என் ஃபிரெண்டை வர சொல்லிடுவேன், அவ கூட கிளம்பிடுவேன்...” என்றாள் முறைப்பாக

அவள் முறைப்பு சிரிப்பைக் கொடுக்க... “அசடு..., என்ன சொல்லிட்டேன்னு கண்ணை கசக்குற.. நானும் ரெண்டு பொண்ண பெத்தவ தான்... நீயும் எனக்கு மக மாதிரி தான்... உன்னோட தங்கை வயசுல, எனக்கு ஒரு பேத்தியே இருக்கா... அந்த அக்கறை தான்... உன்னை நான் சந்தேகப்படலை, இருந்தாலும் வயசு புள்ளைங்க, தனிமை வேண்டாம்ன்ற எண்ணம்... காலையிலேர்ந்து உன் கூடவே இருக்கேனே, ஏன்...”

“இது நீ வாழப் போற வீடு... அம்பது அறுபது குடித்தனம் இருக்குற இடம்... ஒருத்தர் ஒரு சொல்லு சொன்னா வருமா... காலையில ஆலம் சுத்த கூட்டி வந்தேனே..., அவ உன்னோட எதிர் வீட்டுக்காரி ராணி... அவ ஒருத்தியே போதும், எல்லோரையும் அம்பலம் ஏத்திடுவா... அதான் அவ வாயை அடைக்க... அவளை வச்சே ஆலம் எடுக்க வச்சேன்.

எதுவும் சொல்லாம, நீ கிளம்புற வரைக்கும் உன் கூடவே இருக்குறதுக்கு எனக்கு தெரியாதா...! உன்னைப் பார்த்ததுமே எனக்கு ரொம்ப பிடிச்சு போச்சு... உன் மேல எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கு... கொஞ்ச நேரம் பேசுங்க, உருப்படியா, கல்யாணம் எப்போன்னு முடிவு பண்ணுங்க.. எது செஞ்சாலும் பெரியவங்கள பெத்தவங்களை ஒதுக்கிடாதீங்க.. நான் வரேன்..” என்று சொல்லிவிட்டு வெளியேறியவரை பார்த்துக்கொண்டு இருந்தவளின் மனம், அவர் பேச்சை மெல்ல அசைப் போட்டு, அதில் இருந்த நியாயத்தை உணர்ந்து, கோபம் குறைய... முகம் புன்னகையை பூசிக்கொள்ள ஆரம்பித்தது. கைகள் தன்னிச்சையாய் மினியின் எண்களை அழுத்தி காதுக்கு கொடுத்தது .

எடுத்த எதிர்முனையோ, இவள் பேச அவகாசம் கொடுக்காமல்..

“ஏண்டி, வீட்டுக்கு வந்துட்டு தானே நிலா வீட்டுக்கு போறதா பிளான்... நீ வீட்டுக்கு வரலையாமே...! லூசு, நான் உங்க வீட்டுல வந்து உட்கார்ந்து இருக்கேன்...” என்றவள்... அந்த பக்கம் “அம்மா, நான் சொல்லலை.. அவ நேரா நிலா வீட்டுக்கு போயிட்டாளாம்..” என்று சொல்லி விட்டு

“ஷைலு, நீ அங்கேயே இரு, நான் வரேன்...” என்றது

பயத்தில் முகம் வெளுக்க “மினி, இப்போ நீ எங்க வீட்டிலையா இருக்க..?”

“ஆமாடி... இரு அம்மா ஏதோ கேட்குறாங்க...” என்றவள் பார்கவி கைக்கு போனை மாத்த

“கண்ணு, என்னம்மா நீ...? மினி வீட்டுக்கு தானே போறேன்னு சொன்ன... ஆனா அவ இங்க வந்து நிக்குறா, மினியை இங்க பார்க்கவும் பயந்துட்டேன் தெரியுமா.”

“இல்லம்மா.. நானும் மினியும் சேர்ந்து தான் நிலா வீட்டுக்கு போறதா இருந்தது... மினி கொஞ்ச நேரம் கழிச்சு வரேன்னு சொன்னா, நான் வீட்டுக்கு தான் வந்தேன், ஆனா அப்புறம் திரும்ப அலையணுமே, அவக்கிட்ட போன்ல சொல்லிக்கலாம்னு இப்படியே நேரா வந்துட்டேன்.” என தட்டுத்தடுமாறி சொல்லி முடித்தாள்.

“என்னவோ கண்ணு... வயசுப்புள்ள.. நாளும் கிழமையுமா வீட்டில் இல்லாம... உன் போக்கே சரி இல்லை, சரி சரி சீக்கிரம் வா...” என்றவர் மினியிடம் போனை கொடுக்க..., அதை வாங்கிக்கொண்டு பார்கவியிடம் விடை பெற்று கொண்டே வெளியே வந்தவள்...

போனை காதுக்கு கொடுத்து.. “ஏண்டி அறிவுக் கெட்டவளே.. நீ விருமாண்டி கூட டூயட் பாட என்னை கோர்த்து விடுவியா...? சரி ஒரு வார்த்தை என்கிட்ட சொல்லிட்டு போய் இருக்கலாம்ல... உங்க வீடு இருக்குற திசை பக்கமே வந்து இருக்க மாட்டேன்... உனக்கு வாழ்த்து சொல்ல வந்தேன் பாரு, என்னை அடிக்கணும்... உங்க அம்மாவை சமாளிக்குறதுக்குள்ளே போதும் போதும்னு ஆகிடுச்சு...”

“மினி.. மினி... சாரிடி நீ வருவேன்னு எனக்கு எப்படி தெரியும்...? செல்லம்ல அம்மாவை சமாளிச்சதுக்கு தேங்க்ஸ் டி..”

“ம்ம்ம்ம் உன் தேங்க்ஸ்சை பாங்க்ல போட்டு வை.. போற வழிக்கு உதவும்.”

“என்னடி உளறுற?..”

“ம்ம்ம் உனக்காக இத்தனை பொய் சொல்லுறேனே.. அதுக்கு சொர்க்கமா கிடைக்கும்...? அதான் சொர்க்கத்துக்கு பாஸ்போர்ட் விசா எடுக்கும்போது புண்ணிய கணக்கு காட்டவாவது உன் தேங்க்ஸ் உதவட்டும்.”

“ஹி ஹி சிரிச்சிட்டேன்... மினி... மினிஈஈஈ...”

“ஏய் இப்போ என்ன..? அடுத்த ஆப்பை ரெடியா வச்சுருக்கியா...? மினி

மினின்னு மென்னிய பிடிச்சிடாதே... தெரியாமத்தான் கேக்குறேன், அந்த இத்துப் போன மாலுல காலையில் இருந்து என்னதாண்டி பண்ணுறீங்க...? போர் அடிக்கலையா..."

"மினி, அதை தான் சொல்ல வந்தேன்... நான் உனக்கு ஒரு வீட்டு அட்ரஸ் எஸ்எம்எஸ் பண்ணுறேன், அங்கே வா..."

"யார் வீடு ஷைலு..,"

"ஜனா வீடு வாங்கிட்டார்.. அந்த அட்ரஸ் தான்." என்றாள் அடங்கிய குரலில். சற்று நேரம் பேச்சு வராமல் இருந்த மினி...

"ஆப்பை அவர் தான் ரெடி பண்ணி வச்சு இருக்காரா..? ஏண்டி நீயா தேடிப் போய் உட்கார்ந்ததும் இல்லாம, என்னை வேற துணைக்கு கூப்பிடுற... இப்போ என்ன செய்யப் போற.?."

"எனக்கு தெரியல மினி.., முதல்ல நீ வா பேசிக்கலாம்.. யாரோ பெல் அடிக்கிறாங்க.." என சொல்லிக்கொண்டே போனை வைத்துவிட்டு கதவை திறக்க... திலகவதியின் கணவர் பாலன் காஃபி ஃப்ளாஸ்க்குடன் நின்றார். வயதானவரை அலைய வைத்து விட்டோமே என்ற குற்ற உணர்வுடன் அவரிடம் பேச.. அவரோ அதெல்லாம் ஒன்றும் இல்லை என்ற பாவனையுடன் ஒரு சின்னப் புன்னகையை கொடுத்து விட்டு கிளம்பினார்.

கையில் ஃப்ளாஸ்க்குடன் திரும்பியவளின் பார்வை சுவற்றில் பதிய.. திலகவதி சொன்ன 'வீடு முழுவதும் நீ தான் இருக்கே' என்ற வார்த்தைக்கான அர்த்தம் புரிந்தது...! ஒவ்வொரு பொருளாக அவளை கவனிக்க வைத்தது... ஜனாவின் அன்பை உணர வைத்தது...! ஒவ்வொரு பொருள் பற்றியும் அவன் அவளிடம் விசாரித்த விதம், நினைவுக்கு வரவும்.. மனம் மகிழ்ச்சியில் தத்தளித்தது.. ஒவ்வொன்றாக மனம் பூரிக்க தடவி தடவி பார்த்தவள்... முழுவதும் நெகிழ்ந்து விட்டாள்... ஜனாவின் மீது கரை காணாத காதல் பொங்கி பிரவாகம் எடுத்தது.... அந்த காதலில் மூழ்கி கரைந்திட மனம் தவித்தது...!

உணர்ச்சி பிழம்புகள் கண்களில் கண்ணீர் முத்துகளாய் கண்ணோரம் திரண்டு நின்றது.. பின்னே ஜனா வரும் அரவம் கேட்டும், அவனின் முகத்தைப் பார்க்கும் சக்தி அற்றவளாய், அடுப்பு மேடையை ஊன்றுக்கோலாக பற்றி நிற்க, அவளை அழைத்தபடி வந்தவன்... "இங்கே தான் இருக்கியா..." என்றபடி அவளை நெருங்கினான்.

அவன் நெருங்கி வர வர மனம் கற்பனை குதிரையில் ஏறி அதன் போக்கில் ஓட... எண்ணங்கள் ஓடும் போக்கு.., முகத்தின் ரத்த ஓட்டத்தை அதிகரிக்க.. படப்படப்பு கூட, அமைதியாக நின்றிருந்தவளின் பின் கழுத்தில் அவன் மூச்சு காற்று படும் நெருக்கத்தில் நின்றவன், மெல்ல "ஷைலஜா..." என்றான்.

அந்த ஒற்றைச்சொல் அழைப்பே மயக்கத்தை கொடுக்க.. நெருக்கம் பதட்டத்தை தர, வேகமாக திரும்பியவள் "மாமா..." என்றாள் திணறலாக...

அவள் பதட்டத்தை கவனத்தில் கொள்ளாதவனாக "ஷைலஜா..., மதியத்துல தூங்கி பழக்கம் இல்லாம, இப்போ தூங்கினது தலை வலிக்குற மாதிரி இருக்கு... ஒரு காஃபி குடிச்சா.." என்றவனின் பார்வை, அருகில் இருந்த ஃபிளாஸ்கில் பட

"அம்மா கொடுத்து விட்டுட்டாங்களா.., ஓகே ஓகே கொஞ்சம் எடுத்துட்டு வா..." என்று சொல்லிவிட்டு விலகி போய் விட...

மனம் ஓங்கார கடல் அலை போல கூச்சல் போட்டது. ஃப்ளாஸ்கில் கை வைத்தவளின் விழிகளில் இருந்து கண்ணீர் ஒரு முத்தாய் திரண்டு நின்றது... ஏன் அழுகிறோம் என்று கூட உணராதவளாக, கைகள் தன் இயல்பாய் காஃபி கப்பை எடுக்க... அடுத்த நொடி என்ன நடக்கிறது என்று உணர்வதற்குள், ஜனாவின் இறுகிய அணைப்பில் இருந்தாள்.

"ஷைலஜா.., கொஞ்சம் முன்னே நீ என்ன சொன்ன..?"

பதட்டத்துடன் கூடிய நடுக்கத்துடன் மெல்ல அவன் புறம் திரும்பியவள், "நான்.. நான்... என்ன சொன்னேன்..?" என்று புரியாத தொனியில் கேட்டவளின் நெற்றியில் மெல்ல முட்டியவன்...

"சொன்னது ஒரு வார்த்தை, அதையும் மறந்துட்டியா.?.."

"ஒரு வார்த்தையா...! என்ன..? நியாபகம் இல்லையே.." அவன் நெருக்கம் நடுக்கத்தைக் கொடுக்க, நெளிந்தபடி சொன்னவளை மேலும் தன் வசம் கொண்டு வந்தவன்... "மாமான்னு சொன்ன.."

"அது... அதுவா... வாய் தவறி.." என்றவள் மேலும் பேச இயலாமல் தவிக்க

"திரும்ப ஒரு தடவை கூப்பிடேன்.. ப்ளீஸ்.."

“இப்போ வேண்டாமே... ப்ளீஸ்.” எனறு அவள் திணற..

“ம்ம்ம்ஹூம்... இப்பவே கூப்பிடு.” என்று அழுத்தமாக சொன்னவன், மேலும் மேலும் காற்றின் இடைவெளியை குறைக்க

“என்னை விடுங்க மாமா...” எனறு பிடியை தளர்த்த முயன்றவளிடம்

“இனி இப்படியே கூப்பிடு...” என்றவனுக்கு அவளை மேலே பேச விட மனம் இல்லை... எண்ணமும் இல்லை..!

தன் முதல் காதல் யுத்தத்தை, இதழ் முத்தத்தில் தொடங்க... முதலில் பயத்தில் பின் வாங்கியவள், பின் நெகிழ்ந்து... சற்று முன்னேறி, யுத்தம் என்று வந்தால், நானும் சளைத்தவள் இல்லை என பதிலடி கொடுக்க ஆரம்பித்தாள்.

தொடங்கிய யுத்தம் பலம் பெற... புத்தம்புதிய அனுபவங்களை நோக்கிய பயணத்தில் அவனோடு பயணிக்க தொடங்கினாள்...! அதுவரை அடக்கி வைக்கப்பட்டு இருந்த இருவரின் உணர்வுகளும் விடுதலை பெற்று பேரலையாக பொங்கி எழ.... விடுதலை கிடைத்த உணர்வில் ஆசைகள் சுதந்திரம் வேண்டி நிற்க... கரங்களோ குடியுரிமை வேண்டி அங்குமிங்கும் அலைபாய்ந்தது... நிமிடங்கள் நொடியாய் நழுவின.

“ஒரு கருவேப்பிலை வாங்க நானும் வரணுமா...? நீங்க வாக்கிங் போகையில் வாங்கிட்டு வந்தா என்னவாம்.?..” என்ற திலகவதியின் குரல் கீழே இருந்து கேட்க... அதுவே ஷைலுவை முதலில் தன் உணர்வுக்கு கொண்டு வந்தது... அதை தொடர்ந்து அவர் சொன்ன ‘உன் மீது நம்பிக்கை இருக்கு’ என்ற வார்த்தையும், இப்போது தான் இருக்கும் நிலையும் நினைவுக்கு வர, உடல் அதிர.. அவனை பிடிவாதமாக உதறி தள்ளினாள். மூச்சு வாங்க, என்ன காரியம் செய்ய இருந்தோம் என்ற குற்ற உணர்வு, பெற்றோரையும் நினைவில் நிறுத்த தவித்துப் போனாள்.

“என்ன ஷைலஜா?..” என அவள் உணர்வு புரியாதவனாக, விலகிப் போனவளை, மீண்டும் தன் அணைப்பில் கொண்டு வந்தான்.

திமிறி விலகியவள்.. “மாமா, நேரம் ஆகிடுச்சு... கிளம்பணும் விடுங்க...”

“ப்ச்... என்ன நேரம் ஆகிடுச்சு?..” என்றவன் தன் வேலையை தொடர

“விடுங்க மாமா... அம்மா தேடுவாங்க...” என்றதும் ஷாக் அடித்தது

போல் விலகியவன்... தன்னை நிதானத்துக்கு கொண்டு வந்து..., இரண்டடி பின்னே வந்து ஒற்றைக் காலை சுவற்றில் ஊன்றி, சாய்ந்து கைக்கட்டி நின்றவன் முகம் இறுக... "எங்க கிளம்புற.?.."

"இது என்ன கேள்வி...? எங்க வீட்டுக்கு தான்.."

"நீ கொடுத்த வாக்கை மறந்துட்டியா ஷைலஜா?.."

திடுக்கிட்டவளாய் அவனைப் பார்த்தவள், புரியாமல் "என்ன வாக்கு.?.."

"மறதி உனக்கு ரொம்ப சுலபமா வருது இல்லை... நீ கேட்டதை செஞ்சா, அடுத்த நொடியே கட்டிப் பிடிச்சிக்கிட்டு என் கூடவே வந்துடுவேன்னு சொன்ன.."

"ஆமா மாமா... இப்போவும் அதை தான் சொல்லுறேன்... அப்பாக்கிட்ட வந்து கேளுங்க... அவர் முடியாதுன்னு சொன்னா, அடுத்த நிமிஷமே உங்க கையைப் பிடுச்சிட்டு வந்துடுறேன்..."

"எதுக்கு தலையை சுத்தி மூக்கை தொடணும்...? அதான் வந்துட்டே இல்லே... இனிமே எங்கேயும் போக வேண்டாம். நான் எதுக்கு அவர்கிட்ட எல்லாம் பர்மிஷன் கேட்கணும்..?"

"ஏனா...??... அவர் எங்க அப்பா...!!"

"அந்த உறவு தான் வேண்டாம்னு சொல்லுறேன்.."

அவனை உற்றுப் பார்த்தவள்... "இதுக்கு மேல இதை பத்தி பேசினா, பிரச்னை தான் வரும்.. நான் கிளம்புறேன்..." என்று சொல்லிவிட்டு, விடுவிடுவென ஹாலுக்கு வந்தவள், கைப்பையை எடுத்துக் கொண்டு கதவருகில் வருவதற்குள், வேகமாக வந்து அவள் தோளைப் பற்றியவன்...

"நான் உன்னை போக விட மாட்டேன் ஷைலஜா... புரிஞ்சுக்கோம்மா நமக்கு யாரும் வேண்டாம்... எனக்கு நீ... உனக்கு நான்... இது மட்டுமே போதும்... நீ என் உயிர்... என் உடமை... அதை நான் ஏன் உன் அப்பன்கிட்ட கேட்டு வாங்கணும்...?"

"போதும்... இதுக்கு மேல பேச வேண்டாம்னு சொன்னேன்..." என ஷைலு வேகமாக கதவை திறக்க

"ஹாய்.. நான் வந்துட்டேன்..." என சொல்லியபடி நின்றிருந்த மினி, இருவரையும் கண்டு முகம் சுளிக்க "ச்சீ..ச்சீ... வாசலில் நின்னுக்கிட்டு

என்ன வேலை பண்ணுறீங்க?..” என்றாள்.

என் இதயம் அழுவதை கண்ணீராய் வெளிப்படுத்தி விடுகிறேன்.. என் உணர்வுகள் மரிப்பதை எப்படி வெளிபடுத்த..

மினியை எதிர்பார்க்காத ஜனாவின் முகம் வாடியது. இந்த கரடி இப்போ ஏன் வந்தது?. என்ற பாவனையில் சுருங்கியது.. ஷைலுவிற்கோ கும்பிட போன தெய்வம் குறுக்கே வந்த தேவதையாக மினி தெரிய, அவள் முகம் பிரகாசத்துக்கு போனது.

இருவர் முகப்பாவனையையும் பார்த்தவள்.. “வாசலிலேயே ரொமான்ஸா..! விளங்கிடும், வழிய விடுங்கப்பா, உங்க வசந்த மாளிகையைப் பார்ப்போம்.” என அவர்களை விலக்கி விட்டு உள்ளே வந்தவள்...

“அம்மாடியோ...! அண்ணா.., உங்களை விருமாண்டின்னு நினைச்சா, பெரிய ரொமான்ஸ் பாண்டியா இருப்பீங்க போல...! ஷைலு, நீ லக்கிடி..! ஏன் இங்கேயே நிக்குறீங்க.. வாடி.., வந்து வீட்டை சுத்திக் காட்டு..”

“யாமினிம்மா.. நீ இப்போ கிளம்பு... நாங்க முக்கியமா பேசணும்., நீ நாளைக்கு வா..” என்று ஜனா கோபமாக சொல்லவும்

“இல்லை... வேண்டாம்... இப்போ எதுவும் பேச வேணாம்... நாங்க கிளம்புறோம். மினி, நீ வா, போகலாம்..” என அவள் கையைப் பிடித்து இழுத்தாள் ஷைலு.

இருவரையும் மாறி மாறிப் பார்த்தவள்... “அய்யே.. நீங்க ரொமான்ஸ் வார்ல லாக் ஆகி நிக்கறீங்கன்னு நினைச்சா, நிஜ வாரா...? ஏண்டி அப்போவே கேட்டேனே..., நீயா ஆப்பை தேடி எடுத்ததும் இல்லாம, எனக்கு வேற பங்கா...! என்ன தாண்டி உங்க பிரச்னை..?”

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை, நீ வா போகலம்..” என கிளம்பியவளை

“உன்னை போக விட மாட்டேன் ஷைலஜா..” என்று தன் பக்கம் இழுத்தான் ஜனா.

“இதான் உங்க பிரச்சனையா...? நேரம் ஆகுது இல்ல, அவ கிளம்ப

வேண்டாமா...? மணி என்ன ஆகுது பாருங்க..” என்று கடிகாரம் தேடி வீட்டின் உட்புறம் பார்வையை வீசியவளின் கண்களில், அப்போது தான் எதிர்புற சுவற்றில் இருந்த படம் பதிய..

‘இது வேறயா... விருமாண்டியோட ஜொள்ளுக்கு அளவே இல்லாம போகுது’ என நினைத்தபடி, ஓரளவு ஷைலுவின் மனநிலையை உணர்ந்தவள், பிரச்சனையின் காரணம் தெரியா விட்டாலும் கூட அவள் அங்கு இருப்பது நல்லதற்கு இல்லை என்று உணர்ந்தவள் போல,

“அண்ணா, சோ சாரி... நாங்க இப்போ கிளம்புறோம், நாளைக்கு வந்து வீட்டை பார்த்துக்குறேன்.. நீ வா ஷைலு..” என்றவள் ஷைலுவுடன் கிளம்ப ஆயுத்தம் ஆக.

“யாமினி..., நீ கிளம்பு... அவ வர மாட்டா..”

“வராம..? இங்க இருந்து என்ன பண்ணப் போறா? சரி ஓகே... அப்போ அவ கிளம்பும் போதே நானும் கிளம்புறேன்... ஏண்டி, உன் வீட்டுக்கு வந்தவளுக்கு சாப்பிட எதுவும் கொடுக்க மாட்டியா... சரி சரி உள்ளே வா” என்று உரிமையோடு உள்ளே போனவள், சட்டமாக சோஃபாவில் அமர்ந்தாள்.

கடுப்பாக “யாமினி..., சொன்னாப் புரிஞ்சிக்கோ.. அவ இப்போ வரலை, நீ கிளம்பு.... நாங்க முக்கியமா சிலது பேச வேண்டி இருக்கு...”

மெல்ல நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தவள் நிதானமாக “இப்போ வர மாட்டாளா? இல்லை இன்னைக்கு வர மாட்டாளா?” என்று பார்வையை ஷைலுவின் புறம் திருப்பியவாறு கேட்டாள் மினி.

ஒரு நிமிடம் ஷைலுவின் முகத்தையே பார்த்திருந்தவன்... பெருமூச்சு ஒன்றை விட்டு தலையை கோதியபடி... “எப்பவுமே வர மாட்டா.. இனி இது தான் அவ வீடு..” என்று அசராமல் குண்டை தூக்கிப் போட்டான்.

கண்கள் விரிய இருவரையும் மாறி மாறிப் பார்த்தவள் “யே.. யே.. என்னடி.. என்ன உளறுறார் இவரு..”

“வா கிளம்பலாம்னு நான் தான் சொன்னேன் இல்ல..”

“கிளம்பலாமா..! இவர் என்ன சொல்லுறார்னு உனக்கு புரியுதா..? ஏன் அண்ணா.., இப்படி பண்ணுறீங்க? வீடு வாங்குனது ஒரு நல்ல விஷயம் அதோட இன்னைக்கு அவ பிறந்த நாள் வேற... இன்னைக்கு கூட அவளை சந்தோஷமா வச்சிருக்க கூடாதா? என்ன தான் சண்டை

உங்களுக்குள்ளே..!”

“என்ன யாமினி, நீயும் இப்படி பேசுற? நான் எங்கே சண்டை போடுறேன்...! இவ தானே, இவ கேட்டதை எல்லாம் செஞ்சா, என் கையப் பிடிச்சுக்கிட்டு வரேன்னு சொன்னா.. இப்போ அதைத்தானே செய்ய சொல்லுறேன்..”

“அவ அப்படி சொன்னா..., அதுக்குன்னு நீங்க வீடு வாங்குனதும் உங்க கூடவே இருந்துட முடியுமா...! இப்போ மட்டும் என்ன.., இப்போவே நீங்க எங்க கூட வாங்க... ஷைலு அப்பாக்கிட்டே விஷயத்தை சொல்லி பொண்ணு கேளுங்க... அதை விட்டுட்டு தத்துப்பித்துன்னு உளறாதீங்க..”

“நான் உளறுறேனா... நீ தான் புரியாம பேசுற.. நான் எதுக்கு அவ அப்பாக்கிட்ட போய் பொண்ணு கேக்கணும்..!”

“பின்ன பெத்தவங்க பர்மிஷன் வேண்டாமா?..” என்றாள் மினி கோபமாக

“எனக்கு யார் அனுமதியும் தேவை இல்லை... என்னால எவன்கிட்டேயும் போய் கை கைக்கட்டி நிக்க முடியாது..”

“எங்கப்பா உங்களுக்கு எவனோவா...! என்ன பேசுறீங்க நீங்க..?” என்று முகம் சிவக்க முன்னே வந்தவளை தடுத்த மினி

“அய்யோ.. நீ வேற.. கொஞ்சம் சும்மா இருடி... அண்ணா.., நீங்க பேசுறது தப்பு.. இவ அப்பாக்கிட்ட பொண்ணு கேக்குறதுல உங்களுக்கு என்ன பிரச்னை?”

“யாமினி.., இதுவரைக்கும் எனக்குன்னு யாரும் இல்லை.. இப்போ எனக்கு எல்லாமே ஷைலஜா தான்... அதையேதான் தான் அவளுக்கும் சொல்லுறேன், ஷைலஜாவுக்கும் யாரும் வேண்டாம், நான் மட்டும் போதும்... இப்போ போய் நான் பொண்ணு கேட்டா..., நான் யாரு, என்னன்னு அவர் கேட்க மாட்டாரா..? என்னைப் பற்றி சொன்னா, நான் அனாதைன்னு சொல்லி காட்டுவார், எப்படியும் சம்மதிக்க மாட்டார்..! அப்படி இருக்கும்போது ஏன் போய் கேக்கணும்? அப்புறம் ஏன் அவமானப்படணும்...?”

தன்மையாக “அண்ணா..., மினியோட அப்பா ரொம்ப நல்லவர், கண்டிப்பா உங்களை வேண்டாம்னு சொல்ல மாட்டார்... நாங்களே உங்களை பத்தி எல்லாம் சொல்லுறோம், நீங்க எதுவும் சொல்ல

வேண்டாம்.. அவர் உங்களை பத்தி எதுவும் சொல்லாம நாங்க பார்த்துக்குறோம், அவர் அதை பத்தி பேச மாட்டார், ஓகேவா.?.”

“நல்லவர் தானே...! அப்போ இந்த இரண்டு வருஷமா, நான் அவ்ளோ சொல்லியும், ஷைலஜா ஏன் அவ வீட்டுல சொல்லலை? நான் சொல்ல சொன்னப்போ எல்லாம் அவ சொல்லலை, இப்போ எனக்கு அவர்கிட்ட பேச இஷ்டம் இல்லை...

அப்படியே பேசினாலும், ‘நான் எங்கே வளர்ந்தேன்.., எந்த முறையில் கல்யாணம் வைச்சுக்கலாம்..? என் சார்பா யாரெல்லாம் வருவாங்க...’ அப்படி இப்படின்னு தேவையில்லாத கேள்வில்லாம் கேட்டு வெறுப்பேத்துவார்... இதெல்லாம் எனக்கு சரி வராது, வேண்டாம்..”

“எது தேவையில்லாத கேள்வி..? ஒரு பெண்ணை பெத்தவன், இந்த கேள்வி கூட கேட்காம, இவரு வந்து கேட்டவுடனே பெண்ணை தூக்கி கொடுத்துடுவாங்களா.? எப்படி லூசுத்தனமா பேசுறார்ன்னு பார் மினி..” என்று கோபத்தில் உதடு துடிக்க கத்தினாள் ஷைலு.

“நீ வேற.. கொஞ்ச நேரம் பேசாம இரு ஷைலு.. நான் அண்ணாக்கிட்டே பேசுறேன்...

அண்ணா, அவ அப்பாவை விடுங்க... நான் கேக்குறேன், நீங்க எந்த முறையில் உங்க கல்யாணத்தை நடத்தப் போறீங்க.. சொல்லுங்க..”

“இதுல சொல்ல என்ன இருக்கு...? நான் ஃபாதர் கிட்டே வளர்ந்தேனே ஒழிய எனக்குன்னு என்ன மதம் இருக்கு...! எல்லாம் ஷைலுவின் விருப்பப்படியே தான்.. அவ எந்த மாதிரி எங்க கல்யாணம் நடக்கணும்னு ஆசைப்படுறாளோ, அதேதான் எனக்கும்..”

“அவ்ளோதானே... அப்போ அவ அப்பா கேட்டா, இதையே சொல்லுங்க... அதுல என்ன பிரச்னை உங்களுக்கு...”

“என்ன.. எப்படி கேட்கணும்னு சொல்லுறே..? உங்க பொண்ணுக்காக என்ன வேணாலும் செய்வேன் என்பது போல டிராமா போட்டு பொண்ணு கேக்க சொல்லுறியா..”

“கடவுளே... ஏன் இப்படி குதர்க்கமா பேசுறீங்க? நீங்க செய்யப் போறத பத்தி சொல்லப் போறீங்க..., இதுல டிராமா எங்கேர்ந்து வந்தது...”

“தேவையில்லாத பேச்சு எதுக்கு மினி, நான் ஓப்பனாவே சொல்லுறேன்.. எனக்கு அவங்க யாரும் வேண்டாம், யாரையும்

என்னால் ஏத்துக்க முடியாது, குறிப்பா ஷைலுவோட குடும்பத்தை...! இந்த ரெண்டு வருஷத்துல அவளுக்காக நான் என்ன என்னவோ செஞ்சிட்டேன்... ஆனா அவ மனசுல அது எதுவுமே பதியலை...

அவளுக்கு முதலும், முடிவுமா நானே... நான் மட்டுமே இருக்கணும்னு நினைச்சேன், அதுவும் நடக்கலை..! இவ இருக்குறதை பார்த்தா, நடக்கவும் நடக்காதுன்னு தெரியுது...! அவளைப் பொறுத்தவரைக்கும், அவளுக்கு எல்லாமே அவ குடும்பம் மட்டும் தான்..! அது எனக்கு பிடிக்கலை...! எனக்கு எல்லாமுமா அவ மட்டும் தான் இருக்கா... அவளுக்கு நான் அப்படி இருக்க முடியலையே...! வாயை திறந்தாலே அப்பா, அம்மா, தங்கச்சிங்க தான்...! அப்போ இவளுக்கு நான் யார்...?

இதையெல்லாம் யோசிச்சா எனக்கு ரொம்ப பயமா இருக்கு.. எங்கே வாழ்க்கையில தோத்துடுவேனோன்னு ஒவ்வொரு நொடியும் பயந்து சாகிறேன். போதும்.., எனக்கும் யாரும் இல்லை... அவளுக்கும் யாரும் வேண்டாம்...! இனியாவது எனக்கு அவ... அவளுக்கு நான் மட்டும் இருக்கேனே..”

என்று தன் பொருளை தக்க வைத்துக் கொள்ளும் குழந்தையின் மன நிலையில், பேசியதையே பேசுபவனை கண்டு வாயடைத்து போன மினி, ‘இது தான் நீ போட்ட பிளானா’ என்பது போல ஷைலுவை முறைக்க, அவளோ பேச்சே வராமல் மலைத்து நின்றாள்.

இந்த பிரச்சனையை கொஞ்சம் ஆறப் போட்டு மெதுவாக பேசுவதே நலம்.., உணர்ச்சி குவியலாக இருக்கும் ஜனாவிடம் இப்போது பேச வேண்டாம் என்று முடிவெடுத்த மினி...

“சரி அண்ணா.. அதுக்காக.. இப்பவே இங்கே இருக்க சொல்லுவீங்களா..! எப்படியும் கல்யாணம் வரைக்கும் அவங்க வீட்டில் இருக்கட்டும்.. அவளோட அப்பா கிட்டே நான் பேசுறேன், அவர் வந்து உங்களை பார்ப்பார்.. அவர் ஒத்துக்கலைன்னா வேணா, உங்க இஷ்டப்படி கல்யாணம் நடத்துங்க. கல்யாணத்துக்கு அப்புறம் ஷைலுவை உங்க ஷைலுவாவே வச்சுக்கோங்க... இப்போ இங்கே அவ இருந்தா, நாலு பேர் நாலு விதமா பேசுவாங்க.. அது தப்பு.. நாங்க கிளம்புறோம்...”

“யாமினி..., யார் அந்த நாலு பேர்...? இவ்ளோ நாள் எங்கே இருந்தாங்க...? எனக்கு யார் என்ன பேசுவாங்க என்று அக்கறை இல்லை.. எனக்கு யாரும் தேவையும் இல்லை.. ஷைலஜாவுக்கும் அது வேண்டாம்... இந்த சாங்கியம், சம்பிரதாயம், சமுதாயம் எல்லாம் சுத்த

ஹம்பக்... எனக்கு இந்த கல்யாணம்னு ஒண்ணை செய்யுறதுல கூட விருப்பம் இல்லை... அது கூட ஷைலுவுக்காக தான் ஒத்துக்கிட்டேன்... அவதான் என்னோட மனைவின்றது எப்போதோ முடிவானது... அதனால் அவ இங்கே இருக்குறதுல என்ன பிரச்சனை...?"

"என்னடி இது?" என ஷைலுவை கடித்து துப்பியவள்.. "கல்யாணத்துல நம்பிக்கை இல்லையா...! இவளைப் பத்தி என்ன நினைச்சிட்டு இருக்கீங்க... இப்போ என்னதான் சொல்ல வறீங்க.., இந்த சமுதாயம் வேண்டாம்னா.. எதுக்கு இங்கே இருக்கீங்க.? செவ்வாய் கிரகத்துல போய் உக்கார வேண்டியது தானே... சமுதாயம், சொந்தபந்தம், மரம் மட்டை எதுவும் இருக்காது... யாரும் எந்த கேள்வியும் கேக்க மாட்டாங்க... உங்களை எல்லாம்..." என்று பல்லைக் கடித்தவள்

"ஏன் ஷைலுவை போட்டு இந்த பாடு படுத்தறீங்க...? ஏண்டி லூசே, உன்னோட அப்பா அம்மா இதைக் கேட்டா, என்ன ஆவாங்கன்னு நினைச்சுப் பார்த்தியா...? தலையா அடிச்சிக்கிட்டேன், இவர் உனக்கு சரி வர மாட்டார்னு.. கேட்டியா என் பேச்சை.. நானும் பொறுமையா கிளிப்பிள்ளைக்கு சொல்லுற மாதிரி சொல்லுறேன், காதுலையே வாங்காம கேனத்தனமா பேசிக்கிட்டு இருக்கார்... கல்யாணத்துல நம்பிக்கை இல்லைன்னு வேற சொல்லுறார்.. உன் வாயில என்ன கொழுக்கட்டையா வச்சு இருக்க... பேசி தொலையேன்" என அதுவரை இருந்த பொறுமை விடுபட, கத்த துவங்கினாள் மினி.

"அவளை ஏன் திட்டுற.? கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க எல்லாம் நல்லா வாழ்ந்துடுறாங்களா என்ன? இதையேதான் ஃபாதரும் சொல்லுவார் , 'நான் தான் இவங்களுக்கு கல்யாணம் பண்ணி வச்சேன், ஆனா இப்போ என்னிடமே வந்து, பிரிய போறோம்னு சொல்லுறாங்க.. ரொம்ப கஷ்டமா இருக்குன்னு' எத்தனை தடவை புலம்பி இருக்கார் தெரியுமா..? கல்யாணம் பண்ணிக்கிட்டு பிரிஞ்சு போறதை விட, பண்ணிக்காம சேர்ந்து வாழுறது நல்லது இல்லையா.?"

"மாமா.., உங்க ஃபாதர் நூறு கல்யாணம் பண்ணி வச்சுருப்பாரா...? அதுல ஒரு பத்து பேர் பிரிஞ்சு இருப்பாங்களா.., மீதி இருக்குற தொண்ணுறு பேர் சேர்ந்து தானே வாழுறாங்க...! பிரிஞ்சவங்களை பத்தி தானே கவலை இருக்கும்.., அதை தான் அப்படி சொல்லி இருப்பார்... ஏன் எல்லாத்தையுமே நெகட்டிவா பார்க்குறீங்க...? நம்மளோடது ஈஸியா முடியுற விஷயம், அதை நீங்களே பிரச்சனை ஆக்காதீங்க ப்ளீஸ்... அப்பா கிட்ட வந்து பேசுங்க.

எங்க வீட்டுல நான் தான் மூத்தப் பொண்ணு... என் தங்கச்சிங்களை கொஞ்சம் நினைச்சுப் பாருங்க... எனக்கு எங்க அப்பா எவ்வளவோ செஞ்சு இருக்கார். நான் வேலைக்கு போய் கொஞ்ச நாள் அவருக்கு உதவியா இருக்கணும்னு நினைத்தேன், இப்போ உங்களுக்காக அதை கூட விட்டுக் கொடுக்க தயாரா இருக்கேன்... பிளீஸ்.., அப்பா கிட்டே வந்து பேசுங்க..” என்று கண்ணீர் வடிய கேட்டவளைப் பார்த்து மினிக்குக் கோபம் தலைக்கு ஏற

“நீ லூசா ஷைலு..., இவர் கிட்ட கெஞ்சிக்கிட்டு இருக்க.. இவர் என்னன்னா சைக்கோ மாதிரி பேசுறார்.. ச்சீ போடான்னு சொல்லிட்டு வருவியா, அதை விட்டுட்டு இப்படி புலம்பிக்கிட்டு இருக்க..”

“யாமினி..., நீ நகரு.. நீ யார் எங்களுக்கு நடுவில் வர? அவ என்னோட மனைவி...! அவக்கிட்ட எப்படி பேசணும்னு நீ எனக்கு சொல்லி தராதே...!

ஷைலஜா, ப்ளீஸ் அழாதே.. என்னையும் கொஞ்சம் புரிஞ்சுக்கோ... உன் தங்கச்சிகளை பத்தி நீ ஏன் கவலைப்படுற? அது உங்க அப்பாவோட பொறுப்பு.. பிள்ளைகளை பெத்த அவர் தானே, அதை பற்றி கவலை படணும்...!

நீ ஏன் அவருக்கு உதவி செய்யணும்னு நினைக்கிற...? பிள்ளைகளை வளர்க்க முடிஞ்சா பெத்துக்கணும்... முடியலேன்னா ஏன் பெத்துக்கணும். இவங்க எல்லாம் இப்படி தான், ஒண்ணு, பிள்ளைகள் தலையில ஏறி சவாரி செய்வாங்க.. இல்லை வேண்டாம்னு தூக்கிப் போடுவாங்க... இதுதானே இந்த பெத்தவங்களோட லட்சணம்... எனக்குத் தெரியாதா?..”

“போதும்... நிறுத்துங்க... எங்க அப்பாவை பத்தி உங்களுக்கு என்ன தெரியும்..? நீங்க அவரோட கால் தூசிக்கு வர மாட்டீங்க... அவரை பத்தி இவ்ளோ பேசுறீங்களே.., போன வாரம் கூட என்ன சொன்னார் தெரியுமா..., எனக்கு மகன் இல்லையேன்னு கவலை இல்லை, ஏன்னா, வரப்போற மருமகன் தான் என் மகன்னு..! அவரைப் போய்.. ச்சே.. சரி, நான் உங்களை ஒண்ணு கேட்கறேன்..., நாளைக்கு உங்களுக்கு பிள்ளை பிறந்தாலும், அந்த உறவும் வேண்டாம்ன்னு அனாதையா தூக்கிப் போடுவீங்களா?... பேசற பேச்சை பாரு...” என்று முகம் சுளிக்க..

ஜனாவுக்கு ஷைலுவின் குடும்பத்தின் மேலோ அல்லது அவள் தந்தை மேலோ எந்த பகையும் இல்லை.. ஆனால் அவர்களின் பாசம் ஷைலுவை தன்னிடம் இருந்து பிரிக்கிறதே என்ற ஆதங்கமே,

கோபத்தை உருவாக்கி அவர்களை எதிரியாய் நினைக்க வைத்தது...! இப்போது அவளின் முக சுளிப்பு வேறு மேலும் கோபத்தை கிளற, அவன் எண்ணத்தை மீறி வார்த்தைகள் வந்து விழுந்தன.

“ஹோ... என் பிள்ளையைப் பத்தி நீ பேசாதே... ஓஹோ இப்பத்தானே புரியுது, இதுதான் விஷயமா, எவன் இளிச்சவாய் கிடைப்பான்னு, மொத்த குடும்பமும் காத்துக்கிட்டு இருந்தீங்களா.? உன்னைப் பெத்தவங்களுக்கு, என்னை மகன் மகன்னு சொல்லி, என் தலையை நல்லா மொட்டை போடும் எண்ணமா...! என்னை வச்சு உன் தங்கச்சிகளையும் கரை ஏத்திடலாம்னு ப்ளான் பண்ணுரிங்களா...? இதெல்லாம் ஒரு பொழைப்பா.. அதான் அனாதைன்னு தெரிஞ்ச உடனே வளைச்சு போட்டுட்டியா நீ..! சரியான தில்லாலங்கடிதாண்டி உன் அப்பன்...! நல்லா வளர்த்து விட்டு இருக்கான். வரிசையா பெத்து போட்டுட்டு.., அதுங்களை செலவில்லாம கரையேத்த இளிச்சவாயன் எவன் கிடைப்பான்னு தேடினாரா...?”

இதைக்கேட்டு ஆத்திரம் தலைக்கேறிய மினி “ச்சே நிறுத்துங்க.... நாக்குல நரம்பு இல்லைன்னா என்ன வேணும்னாலும் பேசுமா..? உங்களை போய் அண்ணேன்னு கூப்பிட்டேனே, என்னை சொல்லணும்..! மனசு முழுக்க சூனியம், சயநலம்.. உங்களை மாதிரி ஒரு ஆளை விரும்புனாளே... இவளை...!! ஏய் எருமை, என்னடி இவன் பாட்டுக்கு வாய் இருக்குன்னு கன்னாபின்னான்னு பேசிக்கிட்டே போறான்.. நீ என்னவோ எருமை மாட்டு மேலே மழை பேஞ்சா மாதிரி, யாருக்கு வந்த விருந்தோன்னு நிக்குறே? ”

“என்னை என்ன பேச சொல்லுற மினி? இதுக்கு மேல இவன்கிட்ட ஒரு வார்த்தை பேசினாலும்..., அது எனக்கு தான் அசிங்கம், வா போகலாம்..” என்றாள் ஷைலு வெறுப்பாக.

“நில்லு ஷைலஜா... உங்க அப்பாவை நான் ஒரு வார்த்தை சொன்ன உடனே உனக்குக் கோபம் வருதா...? உன்னோட அப்பாவை நான் பேசுனா தாங்கலையே..., இதே இந்த யாமினி, இந்த ரெண்டு வருஷத்துல என்னை எவ்வளவு பேசி இருப்பா.. தோ... இப்போ கூட...என்னை மரியாதை இல்லாம தான் பேசுனா.. ஆனா ஒரு தடவை கூட உனக்கு கோபம் வரலையே... ஏன்..? நீ என்னை என்ன வேணா பேசு.. உனக்கு அந்த உரிமை இருக்கு... மத்தவங்களுக்கு என்ன உரிமை இருக்கு...? அவங்க பேசுறதை நீ வேடிக்கை பார்க்குறே, உனக்கு கோபம் வரலைன்னா, அப்போ உனக்கு நான் யாரு?, அதை முதலில் சொல்லு..”

கண் கலங்க நிமிர்ந்து பார்த்தவள்.. “பத்து நிமிஷம் முன்னே வரைக்கும் எல்லாமே நீயா தான் இருந்தே எனக்கு...! ஆனா இனிமே இந்த நொடியில இருந்து நீ எனக்கு வேண்டாம்..” என அவன் முகம் பார்க்காமல் கத்தரிப்பது போல் சொன்னாள்.

“அப்படி சொல்லாதே ஷைலஜா... எப்படி உன்னால அப்படி சொல்ல முடியுது...? அப்போ நீ என்னை சும்மா டைம்பாஸுக்கு லவ் பண்ணியா...? இப்போ உனக்கு நான் தேவையில்லைன்னு என்னை கழட்டி விட்டுட்டியா...? வேற எவனாவது என்னை விட பெட்டரா கிடைச்சா, அவன் பின்னே போயிடுவியா?”

அவன் வார்த்தைகள் சுடுநீரை முகத்தில் அடித்த உணர்வைக் கொடுக்க “ஆமாண்டா அப்படித்தான்... உன்னை நான் கழட்டி விட்டுட்டேன்... போதும் சாமி.. உன்னோட வாழுறது, தெரிஞ்சே நெருப்புல குதிக்கிறத்துக்கு சமம்... ஆளை விடு” என்றவள் மினியை இழுத்துக் கொண்டு வேகமாக புறப்பட்டாள்.

“நில்லு ஷைலஜா.. நான் இல்லாம உன்னால இருக்க முடியுமா? அவசரப்பட்டு போகாதே... இப்போ நீ போய்ட்டா, இனி எந்த ஜென்மத்திலும் உன் முகத்துல முழிக்க மாட்டேன்...”

நின்று திரும்பியவள்.. “இந்த ஜென்மத்திலேயே உன்னை ஏன் பார்த்தோம்னு வருந்துறேன், இதுல அடுத்த ஜென்மம் வேறயா...! இனிமே இந்த ஜென்மத்திலேயே என் முகத்துல முழிக்காதே..” என்றவள் மினியுடன் வேகமாக வெளியேறினாள்.

ஜனாவின் வீட்டில் இருந்து கிளம்பியவர்கள், வந்து அமர்ந்த இடம் அருகில் இருந்த அங்காளம்மன் கோவில் குளக்கரை படிக்கட்டு... மினியின் மடியில் படுத்து கதறி தீர்த்தாள் ஷைலு... ஜனாவின் எண்ணப்போக்கு அவளுக்கு பெரும் தோல்வி உணர்வை கொடுத்தது... அவள் மனதை பெரிதும் பலவீனப்படுத்தி இருந்தது. அவளது அழுகை அடங்கவே இல்லை... மினி சிறிது நேரம் அவளை அப்படியே விட்டவள், மெல்ல

“ஷைலு, எழுந்திரு.. எவ்வளவு நேரம் தான் இப்படி அழுதுக்கிட்டு இருப்பே.. இனிமே என்ன பண்ணலாம்னு ஏதாவது யோசிச்சியா..? ” என்று அவளை நிமிர்த்தினாள்.

அழுகையில் முகம் வீங்கி பரிதாபமாக இருந்தவள் “தெரியலைடி.. ஒரே ஃபிளாங்கா இருக்கு, ஒண்ணுமே புரியலை..” என்றாள் கண்ணீர் வடிய

“ஷைலு, நான் சொல்லுறதை பொறுமையா கேளு, இந்த காதல் கத்தரிக்காய் எல்லாம் நமக்கு சரி வராது... பெத்தவங்க சொல்லுவதை கேப்போம்... இப்பவும் சொல்லுறேன், ஜனா ரொம்ப ரொம்ப நல்லவர்... ஆனா உனக்கு சரி வர மாட்டார்.. நீங்க ரெண்டு பேரும் எதிர் எதிர் துருவம் போல இருக்கீங்க. கொஞ்சம் கூட அண்டர்ஸ்டான்டிங்கே இல்ல.. நீங்க பிரியுறது தான் ரெண்டு பேருக்கும் நல்லது... இந்தா இந்த கவரைப் பிரிச்சு பாரு..” என ஒரு கவரை நீட்டினாள்.

வாங்கியவாறே “என்ன இது..” என பிரித்து உள்ளே இருந்த போட்டோவை எடுத்தவள்.. “யார் மினி இது.?.”

“இவர் தான் ப்ரிதீவ்... உங்க அப்பா உனக்கு பார்த்த மாப்பிள்ளை... இன்னைக்கு உங்க வீட்டுக்கு போனேன்ல, அப்போ உங்க அம்மா கொடுத்தாங்க... நீ இன்னும் கவரை கூட திறந்து பார்க்கலைன்னு சொல்லி வருத்தப்பட்டாங்க... உன்கிட்ட காட்டி என்னை பேச சொன்னாங்க.. அவங்க சொல்லுறாங்களேன்னு வாங்கிட்டேன், ஆனா இதை வாங்கி பையில் வைக்கும் போது கூட, இதைப்பத்தி உன்கிட்ட பேசுற ஐடியாவே இல்லை...

ஜனாவை பத்தி உங்க வீட்டுல பேசச் சொல்லணும்னு தான் நினைத்தேன்... ஆனா இப்போ நிலைமையே தலைகீழா மாறிப் போச்சு... இனிமே அதை பேசுறதுல புண்ணியமே இல்லை... இப்போ இந்த ப்ரிதீவை விட ஒரு பெட்டெர் சாய்ஸ் உனக்கு இருக்காது... உங்க வீட்டுல எல்லோருக்கும் இவரை ரொம்ப பிடிச்சிருக்காம்... உங்க அம்மாவை நேரில் வந்து பார்த்தாராம், என்ன சொன்னாராம் தெரியுமா...?

‘எனக்கு ஷைலுவை பார்த்த உடனே காதல் எல்லாம் இல்லை.. அவ உங்க குடும்பத்தின் மேல் வைத்திருக்கும் பாசம் பிடிச்சிருக்கு.. எங்களுக்கு கல்யாணம் ஆனா, நாளைக்கு அதையே எங்க கிட்டேயும் காட்டுவா.. வீடு நிம்மதியா இருந்தா, வாழ்க்கை நிம்மதியா இருக்கும் என்ற ஆசை தான்.. ஷைலுவை விட உங்க குடும்பத்தை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு... ரெண்டு பேர் சேருவதை விட ரெண்டு குடும்பம் சேர்ந்தா நல்லா இருக்கும்... ஷைலுவை ஃபோர்ஸ் பண்ணாதீங்க.. அவளுக்கா பிடிச்சா ஓகே... இல்லைன்னாலும் பரவாயில்லை, ஃபாமிலி... ஃபிரெண்ட்ஸா இருக்கலாம்...’ன்னு சொன்னாராம்.”

“அது மட்டும் இல்லை, அவங்க அம்மாவும் இப்போ உங்க அம்மா கூட ஃபிரெண்டா ஆகிட்டாங்களாம்... ப்ரிதீவ்வோட அப்பா அம்மா லவ்

மேரேஜ் செய்துகிட்டவங்க... சொந்தக்காரங்க எல்லோரும் ஒதுக்கிட்டாங்களாம்.. அவங்க பெண்ணையும் வெளிநாட்டுல கட்டிக் கொடுத்ததால.., உறவுக்கு ரொம்ப ஏங்குறாங்களாம்..

அதனால தான் சொல்லுறேன் ஷைலு, இங்கே பார்... அழகு வசதி படிப்புன்னு எல்லாத்திலும் இவர்தான் டாப்புல இருக்கார்... நீ தேர்ந்தெடுத்தது தான் சரி இல்லைன்னு ஆகிடுச்சு.. வீட்டுல சொல்லுவதை கேளு.. இதை விட பெட்டெர் சாய்ஸ் வேறு இல்லை... வீட்டுக்குப் போ... உன் அப்பாகிட்டே ஓகே சொல்லு... அது தான் எல்லோருக்கும் நல்லது."

"மினி.. என்னடி சொல்லுற நடந்தது எல்லாம் உனக்கே தெரியும்..., மனசு ரொம்ப வலிக்குதுடி.... எனக்கு இதிலேருந்து வெளியே வரவே கொஞ்சம் டைம் வேணும்..., அதுக்குள்ளே நீ கல்யாணத்தை பற்றி பேசுறே... உடனே எப்படி...!"

"இதுதான் ஷைலு நல்லது... டைம் கிடைச்சா, திரும்ப ஜனா உன்னை குழப்புவார்... லைஃப்ன்றது மேரேஜுக்கு அப்புறமும் அம்பது அறுபது வருஷம் வாழ வேண்டியது... ஜனா போல ஒரு ஆள் கூட அது சான்சே இல்லை..!

நான் சொல்லுறதை கேளு... நல்லா யோசிச்சுப் பாரு. உன் குடும்பமே வேணாம், நீ மட்டும்தான் வேணும்னு சொல்லுற ஜனா எங்கே...! ஆனா நீ கிடைக்கலைன்னாலும் பரவாயில்லை, உன் குடும்பம் வேணும்னு நினைக்கிற ப்ரிதீவ் எங்கே...?" என்று அவளை, பேசியே வழிக்கு கொண்டு வந்தவள், கையோடு ஷைலுவின் தந்தை கோபிகிருஷ்ணனிடம் அவளின் சம்மதத்தையும் சொல்ல வைத்தாள்... ஷைலுவுக்கும் ஜனா மேல் இருந்த கோபம், அவனை பழி வாங்க சொல்ல.. பழிக்கு, திருமணத்தை ஆயுதமாக எடுத்தாள்.

அதன் பின் காரியங்கள் கிடுகிடுவென நடந்தன... ஷைலஜா போனில் இருந்து சிம் கார்டை கழட்டியவள், தன் வாழ்வில் ஜனா என்ற பெயரை மறக்க நினைத்து.. அவன் மீது மனதினுள் கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்தாள். அவள் ப்ரிதீவுடனான திருமணத்திற்கு சம்மதம் சொல்லிய அடுத்த வாரத்திலேயே நிச்சயம் நடந்தது.

மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தவளை மினியின் சமாதானம் சரி பண்ணியது.. யாருக்கோ நிச்சயம் என்ற மனோபாவத்தில் இருந்தவள்.., 'திருமணத்திற்கு பிறகு எல்லாம் சரியாக போகும்.. காதலிக்கிறவங்க எல்லோரும் ஒன்று சேர்வது இல்லையே' என்று எதிலும் ஒப்புதல்

இல்லாத தன் மனதிற்கு, தானே தேறுதலும் ஆறுதலும் சொல்லிக் கொண்டாள் ஷைலு.

அடுத்த மாதத்தில் திருமணம் என்று முடிவு செய்த போதும்..., தன் மனதை ப்ரிதீவ் புறம் செலுத்த தனக்கு நாற்பது நாள் அவகாசம் இருக்கிறது என்று திடமாக நினைத்தாள்.

அந்த எண்ணமும் கல்யாணப் பத்திரிக்கையைப் பார்க்கும் வரையே...! பார்த்த அந்த நொடி அவள் மனதில் இருந்த அத்தனை குழப்பங்களும் விலகி... விடை கிடைத்தது போல தெளிவானாள்... பத்திரிக்கையில் தன் பெயருடன் ப்ரிதீவ்வின் பெயர் இணைந்து இருப்பதைப் பார்த்தவளுக்கு மனம் அருவருத்து போனது.. பெயரையே தன்னால் இணைத்துப் பார்க்க முடியவில்லையே... காலம் முழுவதும் எப்படி எந்த குற்ற உணர்வும் இல்லாமல் அவனுடன் எல்லாவிதத்திலும் ஒன்றி வாழ முடியும்?

எது எப்படி இருந்தாலும், ஜனா இல்லாமல் வாழ்வது கடினம்... காதல் ஒன்றும் விளையாட்டு இல்லை... அது உணர்வோடு பதிவது... ஜனா தன் உணர்வில் பதிந்து விட்டவன்... அவனை விட்டு விலகி, வேறு ஒரு வாழ்வை தான் ஏற்பது முடியாத காரியம்... அவன் இல்லாத வாழ்வு சூனியம்... திட்டுவதற்காவது அவன் கூடவே இருக்கணும்... தன் மனதில் தனக்கே தெரியாமல் ஜனா ஆழ பதிந்திருப்பது புரிய, அவன் மீதிருந்த கோபம் போன இடம் தெரியாதளவுக்கு தன்னையே உணர்ந்தவள்...

'நாளையே ஜனாவைப் பார்த்து பேச வேண்டும்... எப்படியாவது இந்த திருமணத்தை நிறுத்த வேண்டும்... இப்போ கையில் பத்திரிக்கை இருப்பது கூட சாதகமான விஷயம் தான்... இதைக் காட்டியே ஜனாவை தன் வழிக்கு கொண்டு வரலாம்' என்று திட்டமிட்டவள், எப்போது விடியும் என்று எண்ணியபடியே நிம்மதியாக உறங்கினாள்.

அவளுக்கு எதிரான மனநிலையில் இருந்தான் ஜனா... முதலில் அவள் விலகிச் சென்ற போது, அவனுக்கு அலுப்பு மட்டுமே மிஞ்சி இருந்தது... 'இன்னும் உனக்கு உன் குடும்பம் தான் முக்கியமா.. போடி... இந்த மாமனை நீயா தேடி வா.. இந்த முறை நான் இறங்கி வர மாட்டேன்' என்று பிடிவாதமாக இருந்தவனால், பதினைந்து நாள் கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை.

தனக்குள்ளே குழம்ப ஆரம்பித்தான்... 'ரொம்ப கோபமாக இருக்காளோ.. நாம செஞ்சது தான் தப்போ..! அவ குடும்பத்து மேல்

அவளுக்கு இருக்கும் பாசம் தெரிஞ்சும், நான் அப்படி பேசி இருக்க கூடாதோ..! அவ இங்கே வந்த பின்னாடி கொஞ்சம் கொஞ்சமா அவளுக்கே தெரியாம, அவ குடும்பத்தை அவ கிட்டே இருந்து பிரிச்சு இருக்கணும், அவசரப்பட்டு காரியத்தை கெடுத்துட்டேனே..!' என்று யோசித்தவன், உடனே அவள் செல்லுக்கு அழைக்க.. அது மௌனத்தை பதிலாக கொடுத்தது.

'ச்சே என்ன இப்படி செய்றா, மூக்கு மேல கோபம் வருது.. ஓகே விஷயத்தை கொஞ்சம் ஆற போடலாம்.. ஒருவேளை நான் செய்வது உண்மையில் தவறோ.., இல்லை இல்லை.. அவங்க அப்பாவுக்கு பாசத்தை காட்ட இன்னும் ரெண்டு பொண்ணுங்க இருக்காங்க, மனைவி இருக்காங்க... அவங்களுக்கு ஒருத்தருக்கு ஒருத்தர் பாசம் காட்ட அவங்களுக்குன்னு ஒரு குடும்பம் இருக்கு... ஆனா எனக்கு ஷைலஜாவைத் தவிர யார் இருக்கா..? நான் நினைப்பதில் என்ன தவறு...! ஏன் என்னை புரிஞ்சிக்காம நடந்துக்குறா...?' என்று மனதுக்குள்ளேயே குழம்பி தவிக்க தொடங்கினான்.

அவளை சந்திக்கும் தைரியமும் வரவில்லை... அவள் அப்பாவை தான் பேசிய விதம் தவறு என்று அவனுக்கும் புரிந்து தான் இருந்தது. உணர்ச்சி வேகத்தில் வார்த்தையை விட்டுவிட்டு தவித்தான். எப்படியோ ஒரு மாதம் வரை தள்ளியவன், அதற்கு மேல் தாங்க முடியாமல் அவளைப் பார்க்க அவளது கல்லூரிக்கு போனான்.

அன்று அவள் வரவில்லை. தொடர்ந்து அடுத்த நாளும் போனவன், அன்றும் அவள் வராமல் போகவே, குழம்பினான்... ஒருவேளை உடம்பு சரி இல்லையோ என்று யோசித்தவன்... மினியைப் பார்த்தும், அவளிடம் கேட்க மனது இல்லை. ஷைலுவை குழப்பி விடுவது மினி தான் என்று உறுதியாக நம்பினான்.

அடுத்த நாள் விரைவாகவே போனவன்... சந்தித்தது நிலாவையும் சஞ்சனாவையும்...! அவர்களுக்கு இவன் ஷைலுவின் நண்பன் என்றவரை தான் தெரியும்.. இவனைப் பார்த்து ஒரு புன்னகையைக் கொடுக்க, அவர்களை நெருங்கியவன் பேசும் முன் சஞ்சனா பேச துவங்கினாள்.

"ஹலோ ஜனார்த் சார்..., எங்கே ரொம்ப நாளா ஆளை காணோம்... ஷைலுவை பார்க்க வந்தீங்களா.. அவ ரெண்டு நாள் லீவ், புடவை எடுக்க போகணும்னு சொன்னா... இருங்க" என்று நிலாவின் புறம் திரும்பியவள்..

“ஷைலு இன்னைக்கு வருவாளா.?” என்று கேட்டு, அதற்கு நிலாவின் தலை அசைவைப் பெற்றவள்...

“சார், இன்னைக்கு வருவாளாம், வெயிட் பண்ணுங்க வருவா..” எனவும்

அவள் இன்று வருவாள் என்ற செய்தியே அவனை மகிழ வைக்க, முகம் மலர தலை அசைத்து “நான் வெயிட் பண்ணுறேன்... நீங்க கிளம்புங்க” என்றான்.

“ஹலோ சார்.. ஒரு வார்த்தைக்கு, எப்படி இருக்கீங்கன்னு எங்களை கேக்க மாட்டீங்களா...? எப்படித்தான் ஷைலுவுக்கு ஃபிரெண்ட் ஆனீங்களோ... மிராக்கிள்..” என்றாள் சஞ்சனா, அவனை எப்படியும் பேச வைத்து விடும் நோக்கில்.

வாய்விட்டு சிரித்தவன் “எப்படி இருக்கீங்க?” என கேட்டுவிட்டு, ஷைலு வரும் வழியை தவிப்பாக பார்க்க..

இவனை சகஜமாக பேச வைப்பது கஷ்டம் என்ற பாவனையில் சஞ்சனா “ஓகே சார், டைம் ஆகுது, நாங்க கிளம்பறோம்..” என்று சொல்லி கல்லூரியை நோக்கி நடக்க ஆரம்பித்ததும், அவர்கள் முகம் கூட பார்க்காமல் தலை அசைத்தவனின் பார்வை ரோட்டிலே இருக்க... நிலாவுக்கு அவனது நடவடிக்கை சந்தேகத்தை கொடுத்தது... தயங்கி தயங்கி நடந்தவள், ஒரு முடிவெடுத்து அவனை நெருங்கினாள்.

“ஜனார்த் சார்.., நீங்க ஏன் ஷைலுவோட நிச்சயத்துக்கு வரலை.? வருவீங்கன்னு நினைச்சேன்..” என அவன் முகத்தை ஆராய்ந்தபடி சொன்னாள்.

தன் காதில் ஏதாவது தப்பா விழுந்ததோ என்ற பாவனையில் “யாருக்கு நிச்சயம் நடந்தது...?” என்றான் குரல் தடுமாற.

“சார், நம்ப ஷைலுவுக்கு தான், உங்களுக்கு தெரியாதா...? ஆமா, அவ ஏன் உங்கக்கிட்ட சொல்லலை... மாப்பிள்ளை சூப்பரா இருக்கார், அவளுக்கு பெர்ஃபெக்ட் மேட்ச்..” என தன் குதுகலத்தை வார்த்தையால் வடித்தாள் சஞ்சனா.

முகம் வேதனையில் சுருங்க “நிச்சயம் எப்போ நடந்துச்சு.?..” என்றான் உணர்வற்ற குரலில்.

நிலா ஏதோ புரிந்த எண்ணத்தில் “ஒரு இருபது நாள் இருக்கும்... அவளுக்கு அவரை ரொம்ப பிடிச்சிருக்கு..” என்று சொல்லிவிட்டு,

அவன் முகப்பாவனையை கவனித்தவளாக.. “அவ இன்னைக்கு வர லேட் ஆகும்னு நினைக்கிறேன்... நீங்க கிளம்புங்க சார். அவ வந்தா, நான் உங்களுக்கு போன் பண்ண சொல்கிறேன்..”

“ம்ம்” என்றவன் வண்டியை கூட எடுக்க முடியாமல், தளர்ந்த நடையுடன் வண்டியை தள்ளிக்கொண்டு போனான். அவன் போவதை பார்த்துக் கொண்டு இருந்த சஞ்சனா.. “யே என்னடி நடக்குது... இவர்”

“ஷ்... கம்னு இரு.. ஷைலு வரட்டும், பேசிக்கலாம்.” என்ற நிலா திரும்பியும் பார்க்காமல் சஞ்சனாவை இழுத்துக் கொண்டு கல்லூரிக்குள் நுழைந்தாள்.

ஜனாவோ எதையும் நம்ப முடியாமல் தவித்தான். வண்டி பாறையாய் கனக்க அருகில் இருந்த கஃபேவிற்குள் நுழைந்தவன், ஒரு மேஜையில் தலை சாய்த்து அமர்ந்து விட்டான். மனமோ கொந்தளித்தது. ‘என் ஷைலஜாவா...! அவளா...! எப்படி? அவ ‘மாமா’ என்று சொல்லும் போது கூட அவ கண்ணில் அவ்ளோ காதலை பார்த்தேனே, எல்லாம் பொய்யா...! அதுக்குள்ளே என்னை குப்பையாக ஒதுக்கிட்டாளா?

அவளோட அன்பு எனக்கு மட்டும் வேண்டும் என்று நினைச்சதுக்கு இப்படி ஒரு தண்டனையா...! எப்படி அவளால் இப்படி ஒரு துரோகத்தை செய்ய முடிஞ்சுது...? என்னை வேண்டாம் என்று ஒதுக்கி, ஒரே வாரத்தில் அடுத்தவனை கல்யாணம் செய்ய சம்மதிச்சிட்டாளா..! எப்படி? அப்போ அவளுக்கு நான் யார்...?’ என்று தலை வெடித்து விடுமோ என்ற அளவுக்குத் தவித்தவனின் தோளில் ஒரு கரம் படிய மெல்ல நிமிர்ந்தான்.

“ஹாய்... சார்... என்ன ஏதாவது ப்ராப்ளேமா?” என்று தன் தோளை தொட்டு முகம் மலர கேட்டவனைப் புரியாத பார்வை பார்த்தான் ஜனா.

மற்றவன் அவன் எதிரே அமர்ந்த வண்ணம் கையை நீட்டியபடி “ஐ ஆம் ப்ரிதீவ்... இது என்னோட கஃபே... ரொம்ப டென்ஷனா இருக்கீங்க... கூல்.. டென்ஷன்ல எது யோசிச்சாலும் ஓடாது, காலையிலேயே இப்படி டல்லடிச்சா, எப்படி பாஸ்...? ஒரு காஃபி குடிங்க, ஃபிரெஷ் ஆகிடுவீங்க...” என்று சொல்லிவிட்டு, உணர்வில்லாமல் அமர்ந்து இருந்த ஜனாவைப் பார்த்தவன் பின்னே திரும்பி

“பாய்... ஒரு காப்பிசினோ ப்ளீஸ்” என்றவன் “பாருங்க பாஸ், முதலில் இந்த காஃபியைக் குடிங்க, எந்த ஒரு ப்ராப்ளத்துக்கும் ஒரு தீர்வு இருக்கும் ” என்றவனின் பேச்சை, அவனது செல்லின் ஓசை தடை

செய்ய, அதில் ரகுவின் எண்ணைப் பார்த்தவன் முகம் மலர "பாஸ் ஒரு நிமிஷம்.." என்றவன்

"மச்சி.., சொல்லுடா.."

"என்னத்த சொல்லுடா.. நண்பனாடா நீ... உன்னோட ஆள் போன் பண்ணினா, அதுக்குன்னு சொல்லாம கொள்ளாம என் போனை கட் பண்ணுற.. பாவி..."

"ஹா ஹா... விடுடா விடுடா.. மேடம் முதல் தடவையா கூப்பிடவும், கொஞ்சம் எக்ஸைட் ஆகிட்டேன்.. ஈவ்னிங் மீட் பண்ணலாம்னு சொல்லியிருக்கா.. "

"பார்த்துடா ரொமான்ஸ் ராஜா... தாங்கலை..." என்று சொல்லிவிட்டு, சிறிது தயக்கத்துடன் "டேய் மச்சி, நம்ப சதீஷ்கிட்ட பேசினியா?.."

"இல்லை ரகு, அவனுக்கு மெயில் பண்ணேன்.. பதில் இல்லை"

"டேய், அதை சொல்ல தான் போன் அடிச்சேன்... அவன் ஹாஸ்பிட்டல இருக்கான்... அவன் லவர், அந்த பொண்ணு அவனை ஏமாத்திடுச்சு.."

"டேய் என்னடா சொல்லுற, இவனுக்கு கொஞ்சம் கூட அறிவில்லையா என்ன..? காதலிச்ச பொண்ணு ஏமாத்தினா, தற்கொலை தான் முடிவா...? அவளை இவன் காலைப் பிடிச்சு கதற வச்சு இருக்கணும்... பொம்பளை அவளுக்கே அவ்ளோ இருந்தா, நமக்கு எவ்ளோ இருக்கும்னு காட்ட வேண்டாம்...! இவளுக கிட்டயெல்லாம் மயிலே மயிலே இறகு போடுன்னு கெஞ்சிட்டு இருந்தா, 'போடா கேணை'ன்னு சொல்லிட்டு போவாளுக... பிடுங்கி எடுக்கணும்... அந்த பயம் அப்படியே நெஞ்சில நிக்கணும்.. அப்போ, இவன் ஆம்பளை... அதை விட்டுட்டு இப்படி செய்து வச்சு இருக்கானே...! நீ போனை வைடா, நான் அவனை கூப்பிடுறேன்" என்று போனை அணைத்தவன், ஜனாவை மறந்துவிட்டு, தனது கேபினுக்குள் நுழைய,

அவன் சொன்ன வார்த்தைகள் ஜனாவின் மனதில் ஆழ பதிந்து, அடுத்து என்ன செய்ய வேண்டும் என்றும் அவனை திடமாக முடிவு எடுக்க வைத்தது... ஷைலுவை தன் காலைப் பிடித்து கதற வைக்க வேண்டும் என்ற எண்ணம் பேயாட்டம் எடுக்க... அதுவே அவனை ஷைலுவின் வீடு நோக்கி போகவும் வைத்தது.

அரைநாள் கல்லூரி இல்லை, எனவே நிதானமாக கல்லூரிக்கு

கிளம்புகிறேன் என்று வீட்டில் சொல்லியவள், முதலில் செய்ய வேண்டியதாக நினைத்து, ப்ரிதீவை அழைத்து, மாலை அவனுடனான சந்திப்பை முடிவு செய்தவள்...

பின் ஜனாவை எப்படி சமாதானம் செய்து, ப்ரிதீவை பார்க்க அழைத்து செல்வது என்று யோசித்தபடி கல்லூரிக்கு கிளம்புவது போல கிளம்பினாள்... தெருமுனைக்கு வந்து செல்லை உயிர்பித்தவள், அதில் ஜனாவின் எண்ணை அழுத்தி காதில் வைக்க, அப்போது தான் ப்ரிதீவ் கஃபேயில் இருந்து வெளிவந்த ஜனா போனை ஒரு ரிங்கில் எடுத்து யார் என்று தெரிந்ததும் முகம் கடுக்க அமைதியாக இருந்தான்.

“ஹலோ... மா... ஜனா.. நான்.. நான் ஷைலு” என்ன இது பேச்சே இல்லையே என்று தடுமாறி உளறினாள்.

“சொல்லு... நான்தான்... உங்க வீட்டுக்கு தான் வந்துக்கிட்டு இருக்கேன்...” என்றான் நிதானமாக

‘வீட்டுக்கா’ என்று அதிர்ந்தவள், சட்டென வேர்த்து வடிய “இருங்க.. இருங்க... இப்போ எங்கே இருக்கீங்க...? நான் உங்க வீட்டுக்கு தான் வந்துக்கிட்டு இருக்கேன்.. நீங்களும் அங்கே வாங்க, முக்கியமா பேசணும்.. ப்ளீஸ்..” என்று கெஞ்ச துவங்கினாள்.

சற்றுநேரம் அமைதியாக இருந்தவன் “சரி..சீக்கிரம் வா” என்ற மறு பேச்சு இல்லாமல் போனை அணைத்து விட, என்ன நடக்குது என்று திகைத்து நின்றாள் ஷைலஜா.

சற்று யோசித்தவள் முகம் மலர ‘விருமாண்டிக்கு இந்த முறை ரொம்ப கோபம் போல.. ஐயாவுக்கு என்னை தேட ஒரு மாசம் தேவைப்பட்டு இருக்கு... இருடி கைல பத்திரிக்கையோட வரேன்.. அழ விடுறேன் மச்சான் உன்னை’ என்று மனதிற்குள் குதூகலித்தவாறே அவன் வீடு நோக்கி வண்டியை பறக்க விட்டாள்.

ஷைலுவுடன் பேசிவிட்டு, அவளை தன் வீட்டுக்கு வர சொன்னவன் மனதில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து, தேவையானதை முடித்துக் கொண்டு வீடு வரவும், அங்கே காத்திருந்த ஷைலுவை அவன் பார்த்த அந்த நொடி அவர்கள் வாழ்க்கை அதளபாதாளத்தில் விழுந்தது.

பேசி பிரச்சனையை தீர்க்கவும் முடியும்... பேசியே தீர்க்க முடியாத பிரச்சனையாகவும் ஆக்க முடியும்...!

அன்றைய தினத்தின் முடிவு... இருவர் நெஞ்சிலும் இருந்த காதலை கொன்று புதைத்து, அந்த சமாதியில் நின்று மறுநாளே திருமணம் செய்வது என்ற முடிவை எடுத்தார்கள்... அதன் தொடர்ச்சியாக அன்று மாலையே ப்ரிதீவை சந்தித்து தன் திருமணத்தை பற்றி சொல்லி.. எல்லாம் முடிந்தது இதோ விடிந்தால் திருமணம் என்று ஆகிவிட்டது.

ஜனாவுக்கு எப்படியோ... ஷைலுவின் மனம் ரண காயப்பட்டு போனது... நடந்தவைகள் ஒன்று கூட அவளுக்கு நிம்மதியை கொடுக்க வில்லை. ஜனாவை மன்னித்து அவனுடன் வாழ முடியும் என்றும் தோன்றவில்லை.. இனி வரும் வாழ்க்கையும் நிம்மதியைத் தரப் போவது இல்லை என்ற நினைவே கேவலாய் வெளிப்பட, தங்கைகளை திரும்பிப் பார்த்தவள், கண்களை அழுந்த துடைத்தாள்.

ஏன் இப்படி நடந்தது என்று கண்ணீர் வடிய யோசித்தவள் 'என் ஜனா என்று உன்னை எவ்ளோ நம்பினேன்... நீ இப்படி செய்யலாமா...! அவன் முகம் நினைவில் வர, அதற்கு நிகராக கோபமும் வந்தது... அய்யோ கடவுளே, என்னால் இனி அவனோடு வாழ முடியாதே.. என்ன செய்வேன்' என்று தவித்தவளை, திரும்பவும் போனின் அதிர்வு நினைவைக் கலைக்க... பல்லைக் கடித்தவள்

"ச்சே என் உயிரை வாங்காமல் இவன் அடங்க மாட்டான்.. இவனை" என்று புலம்பியபடி போனை எடுத்தவள், யார் அழைத்தது என்று கூட பார்க்காமல்

"உங்களுக்கு கொஞ்சம் கூட அறிவே இல்லையா?.. அதான் நாளைக்கு பலி ஆடு போல கழுத்தை நீட்டுறேன்னு சொல்லிட்டேன்ல.. இன்னும் என்ன..! கூப்பிட ஒரு நேரம் காலம் இல்லையா...? ஏன் இப்படி என்னை சாகடிக்கிறீங்க?.." என்று குமுற

"ஷைலஜா... ஷைலஜா... நான் ப்ரிதீவ்.." என்ற குரலுக்கு திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள்.

11

இதயத்தை உடைத்தால் தான் அது உண்மையான காதல்..

பேந்த பேந்த விழிப்பது என்பார்களே, அந்த நிலையில் இருந்தாள் ஷைலு. முந்தின இரவில் இருந்து உணவு எடுக்காத வயிறு, அதனால் ஏற்பட்ட கிறுகிறுப்பு... மேலும் காலையில் இருந்து அவளுக்கு ஏற்பட்ட மன உளைச்சல்..., போராட்டம்..., எல்லாம் சேர்ந்து, அவளை ஆழ்ந்த

உறக்கத்திற்கு கொண்டு சென்று இருந்தது... மேலும் இது 'ஜனா' மட்டுமே போன் செய்யும் நேரம் என்பதால், நம்பரை பார்க்காமல் எடுத்த தன் மடத்தனத்தை நொந்தவள்... என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்தாள்..

"ஷைலஜா..., நான் ப்ரிதீவ்... நீங்க.. நீங்க என்னை ஜனா..., என்று நினைத்தா திட்டுனீங்க..? ஏன்..? அப்போ இந்த கல்யாணத்துல உங்களுக்கு விருப்பம் இல்லையா...!" என்றான் படப்படப்பாக.

மீண்டும் ஒருமுறை தனது மடத்தனத்தை நொந்தவள், தன் குரலில் கடுமையை ஏற்றி "அது உங்களுக்கு தேவை இல்லாத விஷயம்... இந்த நேரத்தில் எதுக்காக எனக்கு போன் பண்ணுனீங்க ப்ரிதீவ்?.. கொஞ்சம் கூட யோசிக்க மாட்டீங்களா?..."

"சாரி.. சாரி நான் வேறு வழி இல்லாம தான்.."

"என்ன வேறு வழி இல்லாம?..."

"கொஞ்சம் பொறுமையா கேளுங்க ஷைலஜா..., நான் மனசு கேக்காம தான் பேசுறேன். உங்க முடிவை பத்தி திரும்பவும் கொஞ்சம் யோசிங்களேன். உங்க குடும்பத்தை நினைச்சுப் பாருங்க... உங்க முடிவு எத்தனை பேரை பாதிக்கும்?... ஒரு நல்ல ஃபாமிலி ஃபிரெண்டா சொல்லுறேன்.. நான் சொல்வதை கேளுங்க, உங்க அப்பா நிச்சயம் இதை தாங்க மாட்டார்.."

"நீங்க யாரு சார்..., என் குடும்பத்தை பற்றி கவலைப்பட...? தேவை இல்லாத வேலையை விட்டுட்டு, போய் உங்க வழிய பாருங்க."

"உஃப்.... நிறுத்துங்க ஷைலஜா..., உங்களுக்கு யார் மேல கோபம்...? ஏன் இப்படி பண்ணுறீங்க..? உங்க வாழ்க்கைக்காக தானே பேசுறேன்...! உங்க வறட்டு பிடிவாதத்திற்கு, உங்க குடும்பத்தையே பலி கொடுக்க போறீங்களா?."

"ஹலோ சார்... என் குடும்பத்தை பத்தி நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்... அவங்களைப் பார்த்துக்க எனக்கு தெரியும்...!"

"ஏன் கவலைப்படக் கூடாது... உங்க முடிவால அதிகமா பாதிக்கப்பட போறவன் நான் தானே... உங்க அப்பாவும், அம்மாவும் அவமானப்பட்டா அது உங்களை பெத்ததுக்கு தண்டனை... ஆனா இதுல என்னோட தப்பு என்ன இருக்கு, நான் ஏன் அவமானப்படணும்..? நீங்க என்னை கல்யாணம் பண்ணியே தான்

ஆகணும்னு நான் உங்களை ஃபோர்ஸ் பண்ணலையே... அதுவுமில்லாம நிச்சயம் முடிஞ்சதில் இருந்து, உங்க அப்பா என்னை அவரோட மகனா தான் பார்க்கிறேன் என்று சொல்லுவார்...

இதுவரைக்கும் அப்படி தான் என்னை நடத்தியும் இருக்கார்... உங்கக்கிட்ட நான் ஒரு நல்ல ஃபிரெண்டா இருப்பேன்னு சொன்னது கூட வாய் வார்த்தை இல்லை ஷைலு... அது என்னோட ஆழ்மனசில் இருந்து வந்தது..., அதனால் தான் உங்ககிட்ட இப்படி பொறுமையா பேச்சு வாங்கிக்கிட்டு இருக்கேன்..., எனக்கு உங்க குடும்பத்து மேல் இருக்கும் பாசம் கூட உங்களுக்கு இல்லையே!..” என்றவன் குரல் வெறுப்பில் மூழ்கி குளித்தது.

நீங்க இவ்ளோ சுயநலவாதியா இருப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கலை.. கொஞ்சம் கூட யோசிக்கும் தன்மை இல்லாம.. ச்சே...”

அவன் வார்த்தையில் இருந்த வெறுப்பு, ஏற்கனவே நொந்த மனதை மேலும் சுழற்றியடிக்க, தாங்க இயலாதவளாய் “ப்ரிதீவ்... போதும் என்னால முடியலை. ரொம்ப களைப்பா இருக்கு... சில முடிவுகளை யோசிச்சு நிதானமா தான் எடுக்கணும்.. அதே போல சில விசயங்களை யோசிக்காமல் தான் செய்யணும்.. இப்போ என்னோட கல்யாணத்தை பற்றி நான் எடுத்திருக்குற முடிவும் அப்படித்தான்...! நான் நிறைய தப்பு செஞ்சு இருக்கேன், எங்கேயும் எப்பவும் அதோட பின் விளைவுகளை நான் யோசிச்சது இல்லை...”

“குறிப்பா ஜனாவின் இடத்தில் இருந்து ஒரு நாளும் யோசிச்சது இல்லை.. என் காதலை கூட நான் யோசித்து உணர்ந்தது இல்லை... ஆனா இது தான் காதல்.. குறைகள் இருந்தாலும்... குறைகளோடு நான் ஜனாவை மட்டும்தான் விரும்புகிறேன் என்று உணர்ந்த அந்த நொடி....! ஜனாவோட மனசு முழுக்க என் மேல நம்பிக்கையின்மையும், கோபமும் தான் இருக்குன்னு என்னோட காதலை விலையா கொடுத்து புரிஞ்சிகிட்டேன்...!

என்னோட வாழ்க்கையில முதலும் கடைசியுமா ஜனாவுக்காக இதை செய்கிறேன்... என்னைப் பற்றி மட்டும் இல்ல, இப்போ யாரைப் பற்றியும் யோசிக்கும் மனநிலையில் நான் இல்லை... இப்போ என் மனசுல ஒண்ணு தான் இருக்கு... இந்த கல்யாணம் நடக்கணும், அது போதும்... அதுக்கு அப்புறமா நான் வாழுறேனோ இல்லையோ... யார் என்னை கைவிட்டாலும், எந்த நிலையிலும் என் அப்பா, அம்மா என்னை விட்டுட மாட்டங்க...

ஒரு பத்து நாளைக்கு மேல என் மீது கோபத்தை இழுத்து வைக்க அவங்களால முடியாது.. அது மட்டும் நிச்சயம். உங்களைவிட என் அப்பா, அம்மாவை எனக்கு நல்லா தெரியும்..." என்று எப்படியாவது தன் மனதை புரிய வைத்து, அவனை சமாதானம் செய்து விடும் தவிப்பு அவள் பேச்சில் இருந்தது.

"ஷைலஜா..., நீ சொல்லுவது எனக்கு ஒண்ணும் புரியலை... ஆனா தப்பான முடிவு எடுத்து இருக்க... ரெண்டு குடும்பத்துக்கும் அசிங்கம் இல்லாமல், இந்த விஷயத்தை நான் முடிக்க பார்க்கிறேன்.. நீ... பெத்தவங்க பாசத்தை மிஸ்யூஸ் பண்ண பாக்குற... எல்லா தப்பையும் எப்பவும் மன்னிக்க முடியாது ஷைலு, அது ஏன் உனக்கு புரியலை... நான் உங்க ஜனாகிட்டே பேசுறேன் யாருக்கும் பாதிப்பு இல்லாம இதை நல்லப்படியாவே முடிக்கலாம்..., கொஞ்சம் டைம் கொடு..."

"போதும் ப்ரிதீவ்..,. உங்களுக்கு என்னோட பேரண்ட்சை எவ்ளோ நாளா தெரியும்..? இந்த ஒன்றரை மாசமா தானே...! எனக்கு இருபத்திரண்டு வருஷமா தெரியும்... அவங்களை பத்தி நீங்க கவலைப்படாதீங்க... உங்க வீட்டில் வேணும்னா, நான் வந்து மன்னிப்பு கேக்குறேன்... ப்ளீஸ்... ஜனா விஷயத்தை இத்தோட விட்டுடுங்க... அவர்கிட்டே பேசினா அவர் கோபம் அதிகம் ஆகுமே ஒழிய, குறையாது.. பிரச்னை இன்னும் பெருசாதான் ஆகும், விட்டுடுங்க"

"அப்போ... நீ அந்த அளவுக்கு அவர் மனசை உடைச்சு இருக்குற ஷைலஜா..., அப்படித் தானே விடு..., என் வீட்டை பத்தி நீ கவலைப்பட வேண்டாம்... நீ செஞ்ச அதே தப்பை தான், என்னோட அம்மாவும் அவங்க கல்யாணத்துக்கு முதல் நாள் செஞ்சாங்க... அதன் பலனை இன்னும் அனுபவிக்கிறாங்க... அவங்க செய்த பாவம் இன்னமும் அவங்களை துரத்துது போல.. அதான் அசிங்கப்படணும்னு இருக்கு... உன்னையும் அப்படி ஒரு பாவம் துரத்த கூடாதுன்னு தான் பேசுறேன் " என்றான் விரக்தியாக

அதுவரை ப்ரிதீவ் குடும்பத்தை பற்றி யோசிக்காதவளின் மனம் பெரிதும் தடுமாறியது "நான்... நான்... சாரி.. உங்க குடும்பத்தை அசிங்கப்படுத்தணும் என்று நினைக்கலை, எனக்கு வேறு வழி இல்லை.. தெரியாம என்னை அறியாம.. சாரி.."

வெறுப்பாக "விடு... எல்லாத்துக்கும் மன்னிப்பு என்ற ஒரு வார்த்தை மருந்தாகாது... நான் கவலைப்படுவது உன் பெத்தவங்களை நினைத்து தான்... இன்றைக்கு இருக்குற யூத்ஸ் பெரும்பாலும் தவறு செய்வது

பெத்தவங்க இருக்காங்க என்ற தைரியத்தில் தான்... நீயும் அதுக்கு விதிவிலக்கு இல்லை... உன் இஷ்டம் போல செய்... ஆல் தி பெஸ்ட்..”

“தேங்க்ஸ்... என் மேல் இருக்கும் அக்கறைக்கு...”

கோபமாக “உன் மேல் எந்த அக்கறையும் இல்லை உன் குடும்பத்தின் மேல் இருக்கும் அக்கறை, இதை உன் அப்பா எப்படி தாங்குவார் என்றே புரியலை... உன்னையும் திட்ட முடியலை... பிடிவாதக்கார குழந்தை போல இருக்குற... நானும் சில விஷயங்களில் பிடிவாதக்காரன் தான்..”

“ப்ரிதீவ்....”

“பயப்படாதே... அதான் என்னை பிடிக்கலை என்று சொல்லிட்டியே... அப்புறமும் உன்னை கல்யாணம் பண்ண நான் என்ன மடையனா?... விடு. நாளை கோவிலில் பார்க்கலாம்.. பை..”

“ப்ளீஸ்... ப்ரிதீவ், நாளைக்கு நீங்க வர வேண்டாமே..”

“ஏன் ஷைலு, சந்தேகமா...? பயப்படாதே..! என்னால எந்த பிரச்சனை யும் வராது... உனக்கு நல்லது மட்டுமே நடக்கும், என்னை நம்பு.. பை” என்றவன் போனை கட் செய்துவிட..

“ப்ரிதீவ்... ப்ரிதீவ்..” என்று பதறியவளுக்கு ‘பீப்’ சத்தமே பதிலாக கிடைக்க.. திரும்பவும் அவனை அழைக்க முனைய...,

“அக்கா..., இது எத்தனை நாளா நடக்குது.?..” என்று போர்வைக்கு வெளியே தலை நீட்டியபடி கேட்ட சிந்துவை கண்டதும், பயம் தூக்கி அடிக்க..

அய்யோ தன்னையும் அறியாமல் சத்தமா பேசிட்டோமோ...! இந்த குட்டி சாத்தான் எப்போ எழுந்தது என்ற பயத்தில் “அத்... அது.. வந்து சிந்து கண்ணு..”

“பாருடா... எருமை போய் கண்ணாம்மில்ல... நேரந்தான்... என்ன... ஒரே ரொமன்ஸா...” என்று நக்கலாக இழுக்க

‘அய்யோ இந்த குட்டி பிசாசு என்ன என்னத்த கேட்டு தொலைச்சிதோ’ என்ற பதட்டத்தில்

“சிந்து எல்லாம் தெரிஞ்ச மாதிரி சும்மா உளறாதே.”

“தோடா... யார் உளறுறா..? அத்தான் நாளைக்கு வர சொல்லி

கெஞ்சுறதும்..., நீ வேண்டாம்னு பிகு பண்ணுறதும்... சோ.. ப்ரிட்டி... இன்னைக்கே அம்மாவை உன்னால சமாளிக்க முடியலையே, நாளைக்கும்னா கஷ்டம் தான்... சொல்லு... சொல்லு... யாருக்கு அல்வா கொடுக்க போற ப்ரிதீவ் அத்தானுக்கா இல்லை அம்மாவுக்கா.?." என்று கிண்டலாக கேட்டவளை, கொல்ல வேண்டும் போல எழுந்த வெறியை அடக்கிக் கொண்டு...

'நல்ல நேரம்... லூசு அரைகுறையாக தான் கேட்டு தொலைச்சு இருக்கு, கொஞ்ச நேரத்தில் மயக்கம் வர வச்சிட்டா' என்று நினைத்தவள்

"சனியனே.. சனியனே.. ராத்திரியில கூட உயிர வாங்குறா, மரியாதையா தூங்குடி..., வந்துட்டா பெரிய மனுஷியாட்டம் சொம்பை தூக்கிக்கிட்டு நாட்டமை பண்ணுறதுக்கு.." என்று கடித்து குதற.

"ஓஹோ..., உங்க ரொமன்ஸை நாங்க டிஸ்டர்ப் பண்ணிட்டோமோ... அக்கா, என்னிக்கு இருந்தாலும் என் தயவு தேவைப்படலாம், என்னை பகைச்சுக்காதே... அப்புறம் பின்னாடி ரொம்ப வருத்தப்படுவ, அது நாளைக்கா கூட இருக்கலாம்..." என்று ஒரு புருவம் உயர்த்தி தெனாவெட்டாக சொன்ன விதம் கோவத்தை கிளற

"உன் உதவியும் வேண்டாம், மண்ணும் வேண்டாம் போடி குரங்கு" என்று தலையணையை தூக்கி அடிக்க, சிந்துஜா போர்வைக்குள் பதுங்கினாள்.

அதற்கு அப்புறம் எங்கேயிருந்து தூங்குவது.... இரவை பலவித குழப்பத்துடன் நெட்டி தள்ளியவள், காலை விரைவாகவே எழுந்தாள்... ஜனா சொன்னது போல் அவன் கொடுத்த புடவை நகைகளை அணிந்தவள், செல்போனை சுவிட்ச்ஆஃப் செய்து அலமாரியில் பூட்டிவிட்டு...

தனது புத்தகங்களை, சர்ட்டிபிகேட்களை எல்லாம் ஒரு பையில் வைத்தவள் திகைத்து நின்றாள். சில நாட்கள் முன்னால், தன்னுடைய பிறந்த பதிவு சர்ட்டிபிகேட், மற்றும் சிலவற்றை எல்லாம் ஜனா கேட்டு வாங்கும்போது கூட, இது தங்களின் திருமணத்திற்காக என்று,

அவனை சந்தேகப்பட தெரியாத தனது மடத்தனத்தையும்.. ஆக இது அவனின் நீண்ட நாள் திட்டம் என்பதையும் கூட புரிந்து கொள்ள தெரியாத தனது அறியாமையையும் எண்ணி நொந்தவள், அவன் குறிப்பிட்டிருந்த படி தேவையான அனைத்தையும் எடுத்துக்கொண்டு அறையை விட்டு வெளியேறியவளை குழப்பமாகவே பார்த்து கொண்டு

இருந்தாள் ஸ்ரீஜா.

உணவு மேஜைக்கு சென்ற ஷைலு, தலையில் கை வைத்தப்படி நடுங்கும் உடலை கட்டுக்குள் கொண்டுவர போராடியவள்... அடுக்களை நோக்கி "அம்மா கொஞ்சம் காஃபி கொடேன்.." என்று குரல் கொடுக்க..

பார்கவியோ அங்கிருந்தபடி "ஏதேது என் கண்ணம்மாவுக்கு பொறுப்பு வந்துடுச்சு... எழுப்பாமலேயே எழுந்து வந்து இருக்காங்க.!.."

அதற்குள் அரை வாசலுக்கு வந்த ஸ்ரீஜா "அதான் அம்மா அதிசயம்...அக்கா முதல் முறையா தலை சீவிய சீப்பை கூட சுத்தம் பண்ணி வச்சிருக்கா... ஒவ்வொண்ணா பார்த்து அடுக்கி வச்சிருக்கா, என்னன்னு கேளு"

குளியல் அறையில் இருந்து வந்த சிந்து "அம்மா, அவ நைட்டிய கூட தோச்சு போட்டு இருக்கா.. ஒண்ணுமே புரியலை... உலகத்துல என்னமோ நடக்குது மர்மமா இருக்குது.." என்று சத்தமாக குரல் கொடுத்துவிட்டு... ஷைலுவின் காதோரம் குனிந்து

"அப்போ அல்வா அம்மாவுக்கு.. அவுட்டிங் ப்ரிதீவ் அத்தானுக்கா..." என்று கிசுகிசுக்க

பல்லை கடித்தவள்... 'தெய்வமே, எங்கப்பா குதிரில் இல்லைன்னு நானே மாட்டிக்குவேன் போலவே.. என்னைக்கும் இல்லாம இன்னைக்கு இதை எல்லாம் ஏன் பண்ணி தொலைச்சேன்... இப்படி வேர்த்து வடியுதே... இந்த குட்டி பிசாசு வேற நேரம் பார்த்து கோல் அடிக்கிறாளே' என்று எண்ணியவாறு சிந்துவை முறைக்க...

அதுவரை நடக்கும் நிகழ்வுகளை ஹாலில் இருந்து பார்த்துக்கொண்டு இருந்த கோபிகிருஷ்ணன் சிரித்தபடி "ஏய் யாரது என் பொண்ணை கிண்டல் செய்வது?.." என்று சொல்லியபடி ஷைலு அருகில் அமர்ந்தார்.

அவளை மேலில் இருந்து கீழ் வரை கிண்டலாக பார்த்த சிந்து, கிட்சன் புறம் முகத்தை திருப்பி கொண்டு "அக்கா, இது என்ன...? காலேஜுக்கு கல்யாண பொண்ணு போல கிளம்பி போற?..." என

சத்தமாக பார்கவிக்கு கேட்கும்படி கத்தி பேசியவள் இடையில் நிறுத்தி "ஃபேர் வெல் பார்ட்டியா...? இல்லையே காலேஜ் முடிய இன்னும் அஞ்சாறு மாசம் இருக்கே, இப்போ எதுக்கு இந்த அலங்காரம்?..." என்று நக்கலோடு கேட்க... பார்கவியும் முகத்தில் கேள்வியோடு கிச்சன் வாயிலுக்கு வந்து நின்றார்

“அது... அது.. ஒரு ஃப்ரொபஸர் விஆர்எஸ் வாங்கிகிட்டு போறாங்க... அதுக்கு சென்ட்ஆஃப் தர போறோம், போதுமா.. எருமை சும்மா என்னடி கேள்வி கேட்டுட்டு இருக்க?..” என்றாள் படபடப்பாக

“ஓகே அக்கா.. அதுக்கு ஏன் இப்படி டென்ஷன் ஆகுற.... விடு...” என்று சொல்லி ஷைலுவை பெருமூச்சு விட வைத்தவள், அதை நீடிக்க விடவில்லை “அக்கா, இது புது புடவையா... உன்கிட்டே இதை நான் பார்த்தது இல்லையே...” என்று ‘எப்படி கோத்து விட்டேன் பார்த்தியா’ என்பது போல புருவத்தை உயர்த்த...

‘பாவி.. நைட்டு திட்டியதுக்கு இப்போ பழி வாங்கறாளே..’ இப்போ என்ன சொல்வது என்பது போல தவிப்பாக யோசிக்க.. அதற்குள் சிந்துவை விலக்கிவிட்டு உட்கார்ந்திருந்த ஷைலுவை நெருங்கிய பார்கவி, அவளை ஏற இறங்க பார்த்துவிட்டு...

“ஏதுடி இந்த புடவை?... நகை எல்லாம் கூட தங்கம் போல தெரியுது, மாப்பிள்ளை வாங்கி கொடுத்தாரா?..” என்று கோபத்தை அடக்கிய குரலில் கேட்க...

வழி கிடைத்த உணர்வில் ‘ஆம்’ என்பது போல மெல்ல தலை அசைத்தாள் ஷைலு.

“அப்போ... நீ மாப்பிள்ளையை சந்திச்சிக்கிட்டு இருக்கியா..? எங்ககிட்ட ஒரு வார்த்தை சொல்லலை...! ஏன் சொல்லலை...? எப்போதில் இருந்து இப்படி மாறினே ஷைலஜா... என்ன பழக்கம் இது..?. கல்யாணத்துக்கு பின்னாடி அவர் என்ன வேண்டுமானலும் வாங்கி தரட்டும்... கல்யாணத்துக்கு முன்னே அவர் கிட்ட வாங்குவது தப்புன்னு உனக்கு புரியலையா..? நாளைக்கு யாராவது ஒரு வார்த்தை சொன்னா சரி வருமா.. வாங்கி கொடுத்ததை பத்தி ஒரு வார்த்தை எங்க கிட்ட சொல்லாமல்... இப்போ அதை கட்டிக்கிட்டும் இருக்குற.. என்ன நெஞ்சழுத்தம் உனக்கு?... ”

“பவி... விடும்மா.. இந்த காலத்து பிள்ளைங்க... இதை பெரிசு பண்ணாதே...”

“நீங்க கொஞ்சம் சும்மா இருக்கீங்களா..? ஒண்ணு நீங்க கண்டிங்க, இல்லை என்னை கண்டிக்க விடுங்க... கண்ணம்மா..., நிஜமா நீ காலேஜுக்கு போறியா இல்லை, ப்ரிதீவ் மாப்பிளையை பார்க்க போறியா?..” என்றார் அழுத்தமாக..

“நிஜமா நான் அவரை பார்க்க போகல அம்மா.. என்னை நம்பு..” என்று அவர் முகம் பார்க்காமல் சொன்னவள், மேஜையில் முகத்தை பதித்து கவிழ்ந்து சாய்ந்து கொள்ள...

“ஏய் நான் பேசிட்டே இருக்கேன்... நீ பாட்டுக்கு தலைய கவுந்துகிட்டு இருக்குற... இவ்வளோ நகை வேற வாங்கி கொடுத்து இருக்கார், இதெல்லாம் அவங்க அம்மாவுக்கு தெரியுமா...? நாளை பின்ன விஷயம் தெரிஞ்சு, அவங்க என்னை பேசினா, நான் என்னடி பதில் சொல்லுவேன்... எதை பத்தியும் கவலை இல்லாம நீ சீவி சிங்காரிச்சிக்கிட்டு நிக்குற...”

“விடும்மா.. புள்ள சோர்ந்து போறா பாரு... நீ ஏன் அவளை கொஞ்ச நாளா கடிச்சிட்டே இருக்க.. கல்யாணத்துக்கு இன்னும் இருபது நாள் தானே இருக்கு, இதை பெரிசு பண்ணாதே விடு.” என்று தந்தையாக பெண்ணுக்கு ஆதரவு கொடுத்தார் கோபி.

“தாய் அறியாது சூல் இல்லைன்னு சொல்லுவாங்க... இவ சரி இல்லைன்னு தான் கல்யாணத்துக்கு அவசரப்பட்டேன்.. இப்போ ஏதோ தப்பா படுதுங்க.. படபடன்னு வருது.. இவ கொஞ்சமாவது அசங்குறாளா பாருங்க..”

“இப்போ என்னம்மா வேணும் உனக்கு...? அவன் ஒரு பக்கம் உயிர வாங்குறான், நீ ஒரு பக்கம் உயிரை வாங்குறே.. நான் என்ன விருப்பப்பட்டா எல்லாத்தையும் மாட்டிட்டு இருக்கேன்.. ஒவ்வொண்ணும் முள்ளா குத்துது... நீயும் சேர்ந்து வார்த்தையாலே கொல்லுற... இப்போ என்ன, நான் காலேஜ்க்கு போகலை போதுமா..” என்று ஷைலு கத்திக் கொண்டு எழும்ப...

பதறிய பார்கவி... “என்ன கண்ணு.., இப்படி பேசுறே, மாப்பிள்ளை உன்னை கட்டயாப்படுத்தி இதெல்லாம் வாங்கி கொடுத்தாரா?...”

‘இல்லை’ என்பதை போல தலை ஆட்ட... அவளை சந்தேகமாக பார்த்த பார்கவி அவளை நெருங்கி “கண்ணு, இந்த கல்யாணத்தில் உனக்கு விருப்பம் இருக்கா இல்லையா?..”

அவரை திகைப்பாக பார்த்த ஷைலு “அதெல்லாம் ஒண்ணும் இல்லைம்மா எனக்கு இஷ்டம் தான்..”

“இல்லை ஷைலு, நான் உன்னை பார்த்துட்டே தான் இருக்கேன்.. உன் முகத்தில் கல்யாண பொண்ணுக்குரிய மலர்ச்சியே இல்லை... இப்பவும்

ஒண்ணும் கெட்டு போயிடலை... உனக்கு விருப்பம் இல்லைன்னா தெளிவா சொல்லிடு..."

"பார்கவி, என்ன உளறிக்கிட்டு இருக்க.. இப்போ போய் இப்படி பேசுற..! அவளுக்கு விருப்பமில்லைன்னா அன்னிக்கு சம்மதம் சொல்லியிருப்பாளா...? அப்படியே இப்போ எதையோ நினைச்சு மனசு மாறியிருந்தாலும், கல்யாணத்தை நிறுத்தவா முடியும்..? அது எவ்வளோ அசிங்கம் என்று நினைச்சியா..." என்று பதறினார் கோபி

"நான் ஒண்ணும் உளறலை... நானும் இவ வயசை தாண்டி தான் வந்து இருக்கேன். கல்யாணம் என்ற உணர்வு, இவ முகத்தில் துளி கூட இல்லை. ஏதோ கடமைக்கு ஒத்துக்கிட்ட மாதிரி இருக்கு.. அப்போ நான் தான் கல்யாணத்துக்கு அவசரப்பட்டேன்.. இப்போ காலம் கைநழுவி போயிடுச்சுன்னு தோணுது. இவ விருப்பம் இல்லாம கல்யாணம் பண்ணி, கடைசி வரைக்கும் அழுவதை விட.. இப்போ அழுதுட்டு போகலாம்.. எனக்கு என் பொண்ணு சந்தோசம் முக்கியம்... நீ சொல்லுடி..." என்று ஷைலுவை உலுக்க

குற்ற உணர்வும், தான் செய்யப் போகும் துரோகத்தின் அளவும் அழுகையாக பொங்கி வர.. "அப்படி எல்லாம் எதுவும் இல்லைம்மா... நான்... சாரி.. சாரி... ரொம்ப சாரிம்மா... என்று பேச்சே வராமல் அழ ஆரம்பித்தாள்.

அவள் கையைப் பற்றி அமர வைத்த கோபி "கண்ணு, கல்யாண நாள் நெருங்குது இல்ல, அதான் உங்க அம்மாவுக்கு ஒரே படப்படப்பு... உன்னை பிரிய போற டென்ஷனை இப்படி காட்டுறா... உன் அம்மாதானே.. சரியாய் போயிடும்.." என்றவர், பார்கவியை பார்த்து..

"அவளுக்கும் நம்மை பிரியறது கஷ்டம் தானே, அதான் பிள்ளை சோர்ந்து போய் இருக்கு... நீ உன்னையும் குழப்பிக்கிட்டு பிள்ளையும் ஏன் குழப்புற?.." என்ற கோபியையும், பார்கவியையும் மாறி மாறி பார்த்தவள்.. இதற்கு மேல் அங்கிருந்தால் தானே எல்லாத்தையும் உளறி விடுவோம் என்ற பயத்தில்...

"சரிப்பா.. எனக்கு நேரம் ஆகுது, நான் கிளம்புறேன்.." என்று வேகமாக நழுவ..

"கண்ணம்மா, காஃபி கூட குடிக்கலை.. ராத்திரியும் சாப்பிடலை.. ரெண்டு சப்பாத்தியையாவது பிச்சு வாய்ல போட்டுட்டு போ..." என்றார் பார்கவி.

“இப்போ சொல்லு... எனக்கு நேரம் ஆகுது, நான் காலேஜ் கான்டீன்ல சாப்பிட்டுக்கிறேன்...” என்று சிடுசிடுத்து விட்டு கிளம்ப..

“அக்கா” என்று அழைத்த சிந்துவை.., ‘இன்னும் என்னடி...? போதும் என்னை விட்டுடு’ என்பது போல பரிதாபமாக பார்த்தாள். அவளோ ‘அந்த பயம் இருக்கட்டும் என்பது போல்’ “டாட்டா அக்கா” எனவும், கோபத்தில் பல்லை கடித்தவள் விறுவிறுவென வாசல் வரை வந்தாள்.

“கண்ணம்மா, வண்டி சாவியை எடுத்துட்டு போகல...” என சந்தேகத்தோடு எழும்பிய பார்கவியின் கேள்வி, ஷைலுவை கடுப்பின் உச்சிக்கு கொண்டு சென்றது.

“புடவையோடு எப்படி அம்மா வண்டி ஓட்ட முடியும்...? நானும் மினியும் ஆட்டோவில் தான் போறோம், வேணும்னா நீயும் மினி வீடு வரை வா...”

“என்னடி ஆச்சு...? எல்லாத்துக்கும் எரிஞ்சி விழுற.. நான் எதுவும் பேசலை, நீ கிளம்பு” என்றவர் தன் வேலையைப் பார்க்க போக... இனம் புரியாத கோபத்தில் காம்பவுண்ட் தாண்டி வெளியே வந்தவளை கோபியின் மெல்லிய அழைப்பு தடுத்து நிறுத்தியது. திடுக்கிட்டு நின்றவள்...

“என்னப்பா..”

“கண்ணம்மா, அம்மா பேசியதை பெருசா எடுக்காதே... அவ பாவம், அவளுக்கு இந்த வீடு தான் உலகம்..”

“அம்மா சரியாய் தானேப்பா சொல்லுறாங்க நான் தான்.. தப்பு தப்பா...”

“அதை விடும்மா... உன் முகமே சோர்ந்து போச்சு... இந்தா கண்ணு..” என்று கொஞ்சம் பணத்தை நீட்ட...

கேள்வியாக “அப்பா, இப்போ எதுக்குப்பா இவ்வளோ பணம்?..”

“கண்ணு, நீங்க இந்த காலத்துப் பிள்ளைங்க, கல்யாணத்துக்கு முன்னே பார்த்துக்குறது சகஜம்... அது தப்பு இல்லை... ஆனா எல்லா செலவும் மாப்பிள்ளையே பண்ணா அது தப்பா போய்டும் கண்ணு.. இதுல பத்தாயிரம் இருக்கு... நீயும் செலவு பண்ணு... மாப்பிள்ளைக்கு துணிமணி எடுத்து கொடு... அப்புறம் சாயங்காலம் சீக்கிரம் வீடு வந்துடு கண்ணு,... உங்க அம்மாவோட பயமும் நியாயம் தானே!..” என்றவர் புன்னகையுடன் அவளின் தலையை தடவிவிட்டு வீட்டினுள் போக...

கண்ணீர் அருவியாய் வழிந்து.. ஷைலுவிற்கு தான் செய்ய போகும் தவறின் அளவு புரிய..., இதற்கு காரணமான ஜனாவின் மீது மேலும் வன்மம் கூடியது. இதற்கு அவனை பதில் சொல்ல வைத்தே ஆக வேண்டும் என்ற எண்ணம் அழுத்தமாக பதிந்தது.

கலங்கிய கண்களோடு மினி வீட்டின் அருகே இருக்கும் ஆட்டோ ஸ்டான்ட் நோக்கி போனவளின் பார்வையில் மினி, நிலா, சஞ்சனா பட... அய்யோ இதுக்கு முடிவே இல்லையா என்று அலற வேண்டும் போல தோன்றியது... 'இன்னும் எத்தனை கண்டத்தை தான் தாண்டுவேன்?' என்று புலம்பியபடி அவர்களை நெருங்கினாள்.

நெருங்கிய இவளைக் கண்டதும் இருவரும் முகம் திருப்ப.. மெல்ல அவர்கள் அருகில் போனவள் "நிலா...ப்ளீஸ்டி... சஞ்சு... இங்கே பாரேன்" என்றவள் மினியை பார்க்க... அவளோ வேறு புறம் பார்த்தபடி முணுமுணுத்தாள்..

"கல்யாணம் வரைக்கும் வந்த பின்னாடி, எப்படி சொல்லாம இருக்கிறது என்று கூட்டிட்டு வந்தேன்..."

"ஏண்டி..., எங்ககிட்ட சொன்னது உனக்கு பிடிக்கலையா...? அப்போ அவ மட்டும் தான் உன் ஃபிரெண்டா..? அப்படின்னா நாங்க யாருடி... எங்ககிட்டேயே மறைச்சிட்டியே... நான் நேற்று ஜனாவை பார்த்தபோதே உங்க குட்டை கண்டுப்பிடிச்சிட்டேன்... அடுத்த குண்டை இன்னிக்கே போடுவேன்னு எதிர் பார்க்கலை... சரி ஓகே நடந்தை பேசி புண்ணியம் இல்லை.. உனக்கு வேணா நாங்க தேவை இல்லாம இருக்கலாம்... நாங்க உன்னை எங்க ஃபிரெண்டா தான் நினைக்கிறோம்... நேரமாச்சு கிளம்பலாமா.?.." என்று கடுத்த முகத்துடன் சொன்னாள் நிலா..

"போடி.. எப்பவும் நீங்க ரெண்டு பேரும் தான் க்ளோஸ், நாங்க ஒப்புக்கு சப்பாணி இல்ல.." என்று குறைப்பட்டாள் சஞ்சு.

"இவ வேற க்ளோஸ்.. அது இதுன்னு உங்ககிட்ட சொல்லலை என்று சந்தோஷ படுங்க... இது கல்யாணம் வரை வரும் என்று யார் கண்டா...? அம்மணி எனக்கே அவங்க தெய்வீக காதலை பத்தி சொல்லலை... எதிர்பாராம ஆப்பை நானே தேடிப் போய் வாங்கிக்கிட்டேன்... அவங்க காதலோட லட்சணம் அப்படி..." என்று மினி நீட்டி முழக்கி சொல்ல.. நிலா அவளை கேள்வியாக பார்த்து,

"ஏன் ஜனா கெட்டவரா...? இல்லையே, அப்படியொண்ணும்

தெரியலையே...”

“ரெண்டு பேருமே நல்லவங்க தான்... ஆனா ஷைலுவுக்கு இது சரி வராது...”

“கூட இருந்தது நீயாச்சே..! காதல் தப்புன்னு ரெண்டு பேரையும் குழப்பி இருப்ப.. ஓகே ஓகே அதெல்லாம் அப்புறம் பேசலாம், நேரமாச்சு, இப்போ கிளம்பலாம்...” சொன்ன நிலா ஆட்டோவில் ஏற... அவளை பின் பற்றியவர்கள் கோவிலுக்கு போக... அங்கே முகம் முழுவதும் பதற்றம் வழிய வாசலிலே காத்திருந்தான் ஜனா.

ஷைலுவை பார்த்த நொடியில் புதையலை கண்டது போல அவன் முகம் மலர்ந்த விதமே நிலாவுக்கு திருப்தியை கொடுத்தது. ஜனா ஷைலுவை தனியே அழைத்துப் போக... “ஏண்டி, இவ மேல் இவ்வளோ அன்பை வைத்து இருக்கிறார், அவரைப் போய் சரிவர மாட்டார்னு சொல்லுறே...! ஏண்டி அப்படி சொன்னே..? ”

“நான் எப்போ ஷைலுக்கு அவர் செட் ஆக மாட்டார் என்று சொன்னேன்?... இவருக்கு ஷைலு ஒத்து வர மாட்டா... புரியலையா..! ஷைலு கூட நாம இத்தனை பேர் இருக்கோம்... அவர் கூட ஷைலுவை தவிர வேறு யார் இருக்கிறான்னு நல்லா பாரு...

பிரச்சனை இது தான் நிலா.. ஷைலுவை கேட்டா, ஒரு நேரம் உலகத்திலே பிடிச்சது அவ அப்பான்னு சொல்லுவா... அடுத்த நொடி அம்மாவுக்கு மாறி தங்கை, ஃபிரெண்ட்ஸ், ஜனா, என்று அத்தனை பேரையும் சொல்லுவா... இதையே ஜனாவை கேட்டா பதில் என்னவா இருக்கும் தெரியுமா? ஷைலு மட்டும் தான்...!

இவளுக்கு எல்லாரும் வேணும்.... ஆனா அவருக்கோ இவ மட்டும் போதும்...! ரெண்டு பேருமே அவங்கவங்க விருப்பத்தை, ஒருத்தருக்காக ஒருத்தர் மாத்திக்க மாட்டாங்க...! இவளாலேயும் மாற முடியாது... ஜனாவாலும் மாற முடியாது... ஜனா கோபத்தில் விடும் வார்த்தைகளை நீ பார்த்தது இல்லை... அவருக்கு அவரை மட்டுமே நேசிக்கும் பெண் தான் தேவை... எல்லோரையும் நேசிக்கும் ஷைலு இல்லை... நிலா, அது இவளுக்கும் புரியல.. அவருக்கும் புரியல..”

“ஜஸ்ட் மிஸ்... அப்போ அவருக்கு நான் தான் சரியான ஜோடின்னு சொல்லு..” என்று கிண்டலாக சொன்ன சஞ்சுவை

“கேனத்தனமா உளறாதே சஞ்சு..., இரு சித்திக்கிட்டே சொல்லுறேன்...”

என்று மிரட்டிய நிலா, மினியிடம்..

“எனக்கு என்னவோ நீ ஷைலுவை நிறைய குழப்பி விட்டு இருக்கே என்று தோணுது மினி”

“யாரு நா.. குழப்புறேனா? தேவைதான்... என் கூட வா” என்றவள் ஷைலுவிடம் பேசிக்கொண்டு இருந்த ஜனாவை நெருங்கியதும்... “அண்ணா, கல்யாணம்னு முடிவு பண்ணுனீங்க சரி, உங்க சார்பா யாரும் வரலையா... ஒரு ஈ காக்கா கூட காணோம்..”

எரிச்சலாக “உனக்கு தெரியாதா..? எனக்குன்னு யார் இருக்கா..? யாரை கூப்பிடணும்னு நினைக்குற..” என்று எரிந்து விழுந்தவனை கடுப்பாக பார்த்தவள்,

“ஃபாதரை கூப்பிட்டு இருக்கலாம், உங்க யூனிட்ல இருக்குறவங்களை கூப்பிட்டு இருக்கலாமே... உங்களுக்கு மனசு இல்லை.. அவ்வளோ தான்”

“என்கிட்டே அவங்க வேலை செய்றாங்க அவ்வளோதான்... அவங்களை ஏன் கூப்பிடணும்...? அவங்க எனக்கு பழக்கம் இல்லை... ஃபாதர்கிட்டே சொல்லிட்டேன்.., அவருக்கு வேற முக்கியமான வேலை நிறைய இருக்கும். அதை விட்டுட்டு, எனக்காக அவர் எதுக்கு வரணும்...? அதான் வரேன்னு சொன்னவரை கூட வேண்டாம்னு சொல்லிட்டேன்... எனக்கு ஷைலு இருக்கிறாளே... அது தானே முக்கியம்!” என்று ஜோக் போல சொன்னவனை..., பார்த்துக்கோ என்பது போல நிலாவுக்கு கண்ணைக் காட்ட..

நிலா சிரித்த முகமாக “அண்ணா, கல்யாணத்துக்கு என்ன என்ன ஏற்பாடு பண்ணி இருக்கீங்க.?..”

‘நான் ஏன் அதை உனக்கு சொல்லணும்..?’ என்பது போல் பார்த்தவன்... அவள் மலர்ந்த முகம் அவளின் அக்கறையை சொல்ல “இங்கே கல்யாணம் முடிஞ்சதும், பக்கத்துல இருக்குற ரெஜிஸ்டர் ஆபீஸ்ல பதிவு திருமணம் செஞ்சா முடிஞ்சிது..” என்றான் நறுக்கு தெரித்தாற் போல..

“அப்படியா.., ரெஜிஸ்டர் மேரேஜ்னா சாட்சி கையெழுத்து போடணுமே.., ஷைலுவுக்கு நாங்க இருக்கோம், உங்க சைடுல உங்களுக்கு யார் அண்ணா சாட்சி கையெழுத்து போடுவாங்க..? உங்களுக்கு இந்த விவரம் தெரியாதா” என்று கேள்வியாக நிறுத்த...

“ஒ.. ஃபாதர் எல்லா ஏற்பாடும் பண்ணினார், சொல்லவும் செஞ்சார்... ஆனா நான் அதை யோசிக்கலையே..! மனசு முழுக்க இன்னைக்கு ஷைலு வருவாள்னே இருந்துதா... அதான் வேற எதுவுமே தோணலை... இப்போ திடீர்னு ஃபாதரை எப்படி வர சொல்லுறது?...”

“ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை அண்ணா... நாங்க மூணு பேர் இருக்கோம், உங்க யூனிட்ல யார் பெரியவங்களோ, அவங்களை வர சொல்லுங்க... நாலு பேர் ஆகிடுவோம்... பெரியவங்க ஆசீர்வாதமும் கிடைக்கும் இல்ல.. சிம்பிள்”

சற்று யோசித்தவன் முகம் மலர “நான் தேவராஜ் அண்ணனை கூப்பிடுறேன், அவர் தான் யூனிட் ஆரம்பிச்சத்தில் இருந்து என் கூட இருக்கார்” என்றவன் போனை எடுத்துக்கொண்டு ஒதுங்க...

இப்போ என்ன சொல்லுற என்பது போல மினியை பார்த்தவள்... “கண்ணாடி வளையல்னா லேசா சூடு செய்தா, தன்னால வளையும்.., அதை விட்டுட்டு நீங்க அவரை வளைக்கிறேன்னு சொல்லி உடைச்சிக்கிட்டு இருக்கீங்க..” என்றவள் ஷைலுவை பார்க்க... அவளோ இவர்கள் பேச்சை கவனிக்காமல் விழிகளை அலைபாய விட்டு கொண்டு இருந்தாள்.

“ஷைலு, நீ யாரை தேடுற?..” என்ற கேள்விக்கு பதில் சொல்லாமல் யாரையும் இல்லை என்பது போல தலை அசைத்துவிட்டு இவர்களோடு பேச்சில் கலக்க... சற்று நேரத்தில் ‘அண்ணே’ என்ற பெரும் கூச்சலுடன் ஓடி வந்த கும்பல் ஜனாவை சூழ்ந்து கொள்ள, திகைத்து போய் விட்டான்.

“என்ன.. எல்லோரும் வந்து இருக்கீங்க...? வேலை என்ன ஆவறது.. என்ன தேவராஜ் அண்ணே? ”

“யூனிட்டுக்கு அரை நாள் லீவ் விட்டாச்சு தம்பி... உங்களுக்கு கல்யாணம் நடக்கப் போகுது, அதை எப்படி விடுவது..? சாயங்காலம் எல்லோரும் கூட கொஞ்ச நேரம் இருந்து வேலையை முடிப்பாங்க.. அதுக்கு நான் பொறுப்பு... விடுங்க தம்பி, இன்றைய சந்தோஷத்தை பாருங்க...” என்றவர்கள் ஆளுக்கு ஒரு வேலையாக அலங்காரம், மேல் வேலை என்று செய்து நொடியில் அந்த இடத்துக்கு கல்யாண களையை கொடுக்க... ஜனா நெகிழ்ந்துபோய் நிலாவுக்கு கண்களால் நன்றி சொல்ல, மினிக்கு மயக்கம் வராத குறை...!

நிலா அருகில் வந்தவன் “தேங்க்ஸ் நிலா... இதுவும் நல்லா தான்

இருக்கு.. ஆனா எங்க கல்யாணத்துல நானும் ஷைலுவும் மட்டும் ஒவ்வொரு நொடியும் உணர்ந்து செய்துக்கணும் என்று நினைத்தேன்... ப்ச்.. இப்போ வேலை வேற கேட்டு போச்சு" என்றவன்... ஷைலுவின் அருகே போக

இப்போது திகைத்து நிற்பது நிலாவின் முறையானது...! மினி அவள் காதில் "விரு.. விருமாண்டி.. நிலாவோட மூக்கை உடைச்சாண்டி.." என்று ராகம் போட்டு அவள் காதில் பாட, நிலா காதில் புகை வர நின்றாள்.

அய்யர் மணமக்களை மணவறைக்கு வர சொல்லவும்..., ஷைலுவும், ஜனாவும் ஒருங்கே அமர்ந்து அவர் சொல்லும் மந்திரங்களை தொடர... ஷைலுவின் கண்களோ படப்படபோடு கோவிலை வலம் வந்து கொண்டு இருந்தன.. முதலில் அதை பெரிதாக எடுக்காத மினி, இப்போது அவளை யோசனையாக நோட்டம் விட்டாள்... சற்று நேரத்தில் ஷைலுவின் பார்வை நிலைகுத்தி இமைக்காமல் ஒரே இடத்தை வெறிக்க...

மினி அவள் பார்வையை பின்பற்றி பார்க்க, அங்கே மண்டபத்தின் தூணில் கை கட்டி கொண்டு சாய்ந்த வாக்கில் நின்றவாறே ஷைலுவை கூரிய பார்வையால் விழுங்கி கொண்டு இருந்தான்....ப்ரிதீவ்...!

12

ஒருவரை இழக்க விரும்பவில்லை என்பதை முதலில் நமக்கு உணர்த்துவது நம் கண்ணீரே...

இப்போது மிரள்வது மினியின் முறை ஆயிற்று... தூணிற்கு முட்டுக் கொடுப்பது போல நின்றிருந்த ப்ரித்தீவின் முகம் உணர்வே இல்லாமல் இறுகியே இருந்து.., அவன் என்ன நினைக்கிறான், அடுத்து என்ன செய்யப் போகிறானோ என்று பல எண்ணங்கள் அலையாக கிளம்பி... பீதியை உண்டு பண்ண...

மனமோ 'கடவுளே..! இந்த இடம் இவனுக்கு எப்படி தெரியும்..? இந்த அரை லூசு உளறிக் கொட்டி இருக்குமோ...! இவளை கட்டி மாரடிக்க முடியலையே.. இப்போ என்ன செய்வது.. இவ கல்யாணம் முடியம் முன்னே எனக்கு நெஞ்சு வலி வந்திடும் போலவே' என்று போல முழித்தாள்.. அவள் அருகில் இருந்த நிலாவும்..., சஞ்சுவும்..., இவள் ஏன் இப்படி முழிக்கிறா என்ற எண்ணத்தில் கண்களை சுழலவிடவும், அவர்கள் பார்வை வட்டத்தில் ப்ரிதீவ் பட...

அவர்கள் முகமும் பயத்தில் உறைந்தது... நிலா மெல்ல மினியின் கையை சுரண்ட, அவளோ யோசனை பிடிபட்டது போல ஐயரை நெருங்கி..

“சாமி.., எதுக்கு வளவளன்னு இழுக்குறீங்க...? முக்கியமான மந்திரத்தை சொல்லி, சீக்கிரம் கல்யாணத்தை முடிங்க..” என்றவளை ஐயர் கடுமையாக முறைத்து விட்டு தன் மந்திரங்களை தொடர்ந்தார்.

ஏற்கனவே ஓமகுண்டத்தில் இருந்து வரும் புகை கண்ணுக்கு எரிச்சலையும்..., பழக்கம் இல்லாத சூழ்நிலை மனதுக்கு சங்கடமும் கொடுத்தது ஜனாவிற்கு. இன்னும் எவ்வளவு நேரம் என்பது போல தவித்துக் கொண்டு இருந்தவன் ... தப்பிக்கும் வழி கிடைத்த உணர்வில்...

“ஆமா.. சீக்கிரம் ஜெபத்தை முடிச்சிட்டு... அவங்க சொன்னதை செய்யுங்க” என்றவனை ஒருமாதிரியாக பார்த்தவர், ஷைலுவையும் சுற்றி இருக்கும் கூட்டத்தையும் பார்த்துவிட்டு, மேலும் முகம் கடுக்க... மாங்கல்ய தட்டை மினியிடம் கொடுத்து ஆசீர்வாதம் வாங்கி வர சொல்ல... மினி அவசர அவசரமாக எல்லோரிடமும் ஆசீர்வாதம் வாங்கி அட்சதையும் கொடுத்து கொண்டு வந்தாள்.

அதுவரை அமைதியாக நின்றிருந்த ப்ரிதீவ் மினியை நோக்கி வர ஆரம்பித்தான்... அவனை கவனத்தில் கொள்ளாதது போல தட்டை ஐயரிடம் ஒப்படைக்க... மினி தன்னை தவிர்த்த விதம் அவன் மனதில் அடியாக விழுந்தது. ஐயரோ தாலியை ஜனாவின் கையில் கொடுத்துவிட்டு, ‘மாங்கல்யம் தந்துனானே’ என்று மந்திரத்தை ஓத துவங்கினார்.

ஷைலுவோ பயத்தில் கண்களை இறுக்கி மூடிக் கொள்ள... கழுத்தில் உரசும் ஜனாவின் கைகளும் மேலே விழும் அட்சதையும்.. ஏதோ ஒரு நிறைவை கொடுத்தது... மீண்டும் விழிகள் விரித்து... ப்ரிதீவை தேடி அவனில் நிலைத்தது... அவன் அட்சதையை தூவிவிட்டு..

‘ஹேப்பி மேரிட் லைப்... ஃபிரெண்ட்..’ என வாய் அசைவில் சொல்ல.. மளுக் என்று விழிகள் நிறைந்து ஷைலுவுக்கு... பாரம் விலகி, நிறைந்த மனதுடன் அவளும் அதே போல் ‘தேங்க்ஸ் ஃபிரெண்ட்’ என்றாள்.

அவர்களையே கவனித்துக் கொண்டு இருந்த மினி பெருமூச்சு விட்டு இமைக்க மறந்த விழிகளுடன்... ப்ரிதீவ் அருகே வந்தவள்.. நிலைமையை சகஜமாக்கும் பொருட்டு... அவனுக்கு மட்டும் கேக்கும் வண்ணம்

“ஹலோ மிஸ்டர்... ஏதேது இங்கே வானும் மண்ணும் ஃபிரெண்ட்ஷிப் பண்ணுது...! கூடத்தானே நானும் இருந்தேன்...! எனக்கு தெரியாம, இது எப்போ நடந்தது..?”

ஒரு சிலரைப் பார்த்த நொடியில் இருந்து பிடிக்கும்.. சிலரை காரணமே இல்லாமல் வெறுக்க தோன்றும்.. ப்ரிதீவுக்கு மினி அப்படி தான்.. ஏதோ சொல்ல முடியாத கடுப்பு அவளைக் கண்டாலே வந்தது. அவள் மேல் கடுப்பில் இருந்த அவனோ முகம் மேலும் இறுக

“ஒரு பீரோ.. ஓசில கிடைச்சுதுன்னு முட்டை பப்சை உள்ள விட்ட கேப்பில் உருவான நட்பு போதுமா..”

கோபத்தில் பல்லைக் கடித்த மினி “யோவ்... யாரு பீரோ.. உன்னை போய் மதிச்சு பேசுனேன் பாரு.. வெண்ணை வெட்டி... எரிச்சலை ஏத்துற..”

“ஏய்.. உன்னைப் பார்த்தா கூடத்தான் எனக்கு தகதகன்னு எரிச்சல் ஏறுது, அதை வெளியே காட்டிக்கவா முடியும்...? கொஞ்சம் பீரோவை நகத்துறியா..? காத்தே வரலை.” அவனும் பல்லை கடித்தபடி வார்த்தைகளில் பொறி பறக்க விட்டான்.

பேச வார்த்தை கிடைக்காமல் “சீ...போடா..” என்றவள், நிலா அருகே போக அவளோ..

“இங்கே என்னடி நடக்குது? இவர் ஏன் இங்க வந்தார்...? ஒண்ணும் சரி இல்லையே..”

“ம்ம் வேணும்னா இதை நீ போய் கேளு... நான் கேக்க போய் தான் அந்த பன்னு கிட்டே ஆப்பு வாங்கினேன்... வாயை மூடு, எரிச்சல் பண்ணாதே...” என்றவள்.

ஜனா..., ஷைலுவிற்கு..., மெட்டி போட உதவினாள். மெட்டியை அணிவித்துவிட்டு எழுந்தவனின் பார்வையில் ப்ரிதீவ் படவும்... ஒரு மெல்லிய சிரிப்போடு

“ஹலோ சார், நீங்க எங்கே இங்கே..?” என்று வேகமாக நெருங்கி கை குலுக்க... ஜனா தோளில் கைப்போட்ட ப்ரிதீவ்..

“கோவிலுக்கு வந்தேன், இங்க கல்யாணம் நடக்குற மாதிரி இருக்கேன்னு ஒரு ஆர்வத்துல பார்த்தா, அது நீங்க... அதான் அப்படியே நின்னுட்டேன்...”

ஜனா ஷைலுவிடம் “ஷைலஜா... இவர்..” என்று யோசனையாக

“ஐ அம் ப்ரிதீவ்..”

“ம்ம்... சார் தான் ப்ரிதீவ்.. உங்க காலேஜ் பக்கத்துல இருக்குதே ஒரு கஃபே.., அது இவருது தான்..”

ஷைலஜா தடுமாற்றமாக “இவரை உங்களுக்கு தெரியுமா...?”

“ம்ம் நேத்து தான் பழக்கம்”

“எப்படி....இவர் ” என தடுமாறினாள் ஷைலு.

“நேற்று நிலாவைப் பார்த்து பேசின பிறகு ரொம்ப டென்சனாக இருந்தது... அடுத்து என்ன செய்யுறதுன்னு தெரியாம குழம்பி தவித்தேன்... அந்த நேரம் எதுவும் ஓடலை ஷைலஜா..., வண்டி கூட ஓட்ட முடியாத அளவு ஓஞ்சு போயிட்டேன்.

என்ன பண்ணுறதுன்னே புரியாம, பக்கத்துல இருந்த இவர் கஃபேவிற்கு போனேனா.., என்னோட முகத்தைப் பார்த்தவுடனே இவருக்கு என்ன தோணுச்சோ தெரியலை, தானே வந்து ஆறுதலா பேசினார். ஓரளவுக்கு நான் தெளிவிற்கு வந்ததே இவரால் தான்... “என்று குரல் ததும்ப சொல்லிவிட்டு கேள்வியாக “அது சரி உனக்கு ஏன் இப்படி வேர்க்குது?” என்றுவிட்டு பதில் எதிர்பாராமல் ப்ரிதீவுடன் பேச துவங்கினான்.

“கிழிஞ்சுது கிருஷ்ணகிரி... இந்த பன்னு தான் பத்தவச்சு இருக்கு போல...! உன் நேரம் ஏண்டி இப்படி இருக்கு...? விருமாண்டிக்கிட்டே தொங்கிக்கிட்டு கை கொடுத்தாலே கண்டுக்காம போற ஆளு, இந்த ஏழரைகிட்ட எப்படி டைஅப் ஆனார்...! ஆக மொத்தம் உனக்கு ஏழரை ஸ்டார்ட் ஆகிடுச்சு.... ப்ரிதீவ் யாருன்னு உன்னோட விருமாண்டிக்கு தெரியாம பார்த்துக்கோடி..” என்று மினி கவலையாக சொல்ல.

“ஏன் தெரிஞ்சா என்ன?”

“லூசு... லூசு... ப்ரீதீவ் உங்க வீட்டில் உனக்குப் பார்த்த மாப்பிளை... இது மட்டும் ஜனாவுக்கு தெரிஞ்சுது.., அவ்வளவு தான்..! பாவம் டென்ஷன் மண்டைக்கு ஏறி ஒரு வழி ஆகிடுவார்..”

“அப்படியா..” என்றவள் முகம் பூரிக்க... ஜனாவிடம் விடை பெற்று போகும் ப்ரிதீவ்வை புன்னகையோடு பார்த்தாள்.

“என்னடி... அப்படியான்னு இழுக்குற..! இளிக்கிற.. வேண்டாம்.. இங்கே பார், பெரிய பிரச்னையில் கல்யாணம் முடிச்சு இருக்கு... நீ வேற எந்த ஏழரையையும் கூட்டாதே..” என்ற நிலாவை ஒரு பார்வை பார்த்தவள், பேச வாய் திறக்கும் முன் அவர்களை நெருங்கிய ஜனா...,

ரிஜிஸ்டர் ஆபீசுக்கு அழைக்க... அதன் பின் வேலைகள் மளமளவென்று நடந்து... பதிவு திருமணமும் கைத்தட்டல்களுக்கு இடையில் நல்லவிதமாக முடிய, அனைவரும் வெளியே வந்தனர்.

“தேவராஜ் அண்ணே.., இப்போவே நேரம் ஆகிடுச்சு, நீங்க எல்லோரும் வேலைக்கு கிளம்புங்க..” என்று விட்டு... அவர்கள் அதிர்ந்த முகத்தை கணக்கில் எடுக்காமல் நிலா புறம் திரும்பி..

“நேரம் ஆகிடுச்சு, நீங்களும் கிளம்புங்கம்மா...”

பொங்கி வந்த சிரிப்பை அடக்க மினி பாடுபட... ஷைலுவுக்கு ஜூஸ் கொடுத்து கொண்டு இருந்த நிலா கடுத்த முகத்துடன்.. பார்வையை அவன் பின் புறம் ஓட விட்டு..

“அங்கிள்... தேவராஜ் அங்கிள் கொஞ்சம் நில்லுங்க” என்று அவர்கள் நின்றதும் ஜனாவிடம்...

“என்ன.. அண்ணா, வந்தவங்களை சாப்பிட கூட சொல்ல மாட்டீங்களா?”

“ஏன்... மதியத்துக்கு நீங்கெல்லாம் சாப்பாடு எடுத்துட்டு தானே வந்து இருப்பீங்க..., அவங்களும் எடுத்துட்டு வந்து தானே இருப்பாங்க... அதெல்லாம் வீணாக போகாதா..?”

“அய்யோ அண்ணா.. அதைப்பத்தி நீங்க ஏன் கவலைப்படுறீங்க... கல்யாணம்ன்றது லைஃப்ல ஒரு தடவை நடப்பது.., உங்களை மதிச்சு, உங்களுக்காக வந்தவங்களுக்கு, வயிறார சாப்பாடு கூட போட மாட்டீங்களா?”

“ஓ.. அப்படி ஒண்ணை கண்டிப்பா செய்யணுமா.. என்ன?” என்றவனுக்கு நிலாவின் முறைப்பே பதிலாய் கிடைக்க..

“அப்போ எல்லோரும் பக்கத்துல இருக்குற ஹோட்டல் போகலாமா.?.”

“எப்படி...! இப்படி கல்யாண கோலத்திலா? உங்க வீட்டு சாவியைக் கொடுங்க... நாங்க இவங்களை ஹோட்டல்ல சாப்பிட வச்சு அனுப்பிட்டு.. உங்களுக்கும் சாப்பாடு வாங்கிட்டு, உங்க வீட்டுக்குப்

போய் ஆலமெல்லாம் கரைச்சு ரெடி பண்ணி வைக்கிறோம்.. அதுக்குள்ளே நீங்க ரெண்டு பேரும் ஷைலுவோட அம்மா வீட்டுக்கு போயிட்டு வாங்க..”

“நாங்க ஏன் அவங்க வீட்டுக்கு போகணும்? இது சரி இல்லை நிலா..., கொஞ்சம் சொன்னதையெல்லாம் கேட்டா தலைமேல ஏறுறீங்க... நீங்க நினைச்ச மாதிரியெல்லாம் என்னை ஆட்டி வைக்கலாம்னு பார்க்குறீங்களா..? மரியாதையா வேலையைப் பார்த்துக்கிட்டு கிளம்புங்க..” என கோபத்தில் முகம் கடுக்க வெடுவெடுத்தான்.

“என்னம்மா.. நில்ஸ்... நீ... சூடு பண்ணிய கண்ணாடி.. எப்ப்ப்ப்படி.. வளையுது.. பார்த்துக்கோ!” என நிலாவின் காதோரம் சொல்லிவிட்டு மினி சிரிக்க...

அவளை முறைத்துவிட்டு... “நாங்க கிளம்புறது இருக்கட்டும்... பொண்ணை பெத்தவங்க..., பொண்ணைக் காணோம்னு போலீஸ்ல கம்ப்ளைன்ட் பண்ணாம இருக்கவாவது... இவ வீட்டுக்கு நீங்க போய் தான் ஆகணும்...”

“ஏன் நாங்க என்ன தப்பு பண்ணோம்... எதுக்கு போலீஸ்க்கு பயப்படணும்..?”

“எப்படி...! காலையில் காலேஜ் போன பொண்ணை காணோம்னா... என்ன ஏதுன்னு தேடாம சும்மாவா இருப்பாங்க.. போங்க, போய்... இவளைப் பெத்த பாவத்துக்கு.. இவளை தேடி தவிக்கிற சிரமத்தையாவது குறைங்க... எங்களுக்கு கல்யாணம் ஆகிடுச்சு.. இவளை தேடாதீங்கன்னு சொல்லிட்டு வரலாமே..”

சற்று படபடப்பாக யோசித்தவன்.. ஷைலுவின் கை பிடித்தபடி... ஒரு ஆட்டோவை நிறுத்தி, அதில் அவளை ஏற்றிவிட்டு.. நிலாவிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து... “நீ இவங்களை பார்த்துக்கோ... ஆனா என்னோட பைக்..?”

“சாவியைக் கொடுங்க... தேவராஜ் அங்கிள்கிட்ட கொடுத்து வீட்டுக்கு எடுத்து வர சொல்லுறேன்..” என்று சொல்லி தேவராஜிடம் மற்றவர்களை ஹோட்டலுக்கு போக சொல்லிவிட்டு.., ஜனாவையும்.., ஷைலுவையும் வழி அனுப்பி வைத்தவள், சோர்ந்து போய் ரிஜிஸ்டர் ஆபீஸ் வாசலில் இருந்த மர பெஞ்சில் அமர்ந்து விட்டாள் நிலா.

“என்னடி.., ஜனாவைப் பார்த்த ஒரே நாளில் சோர்ந்து போய்ட்ட?”

“ப்ச்.. ஜனாவை சமாளிப்பது ஒண்ணும் பெரிய சிரமம் இல்லை மினி.. ஆனா ஷைலு...! கண்டிப்பா சொதப்புவா.. எங்கேயிருந்து இவரை பிடிச்சா..? அவளை நினைச்சா தான் மலைப்பா இருக்கு... அவளும் சஞ்சுவும் ரெண்டுங்கெட்டானுங்க.”

“அதை நினைச்சு தான், இதெல்லாம் சரி வராதுன்னு இத்தனை நாளா ஷைலுகிட்டே எவ்வளவோ சொல்லி தடுக்கப் பார்த்தேன்.. இப்போ நீயே சொல்லுற, அவ ரெண்டுங்கெட்டான்னு..! அவ லைஃப் என்ன ஆகுமோ...! நினைச்சாலே பயமா இருக்கு..”

“நான் ஜனாவை நினைச்சு பயப்படல.. ஷைலு தானும் குழம்பி.., ஜனாவையும் குழப்பிடுவாளோன்னு பயமா இருக்கு. காலையில இருந்து அவ ஒரு வார்த்தை பேசல... அவ முகத்திலும் கல்யாண மலர்ச்சியும் இல்லை... விடு.. இனி இதில் நாம செய்ய ஒண்ணும் இல்லை... அவ வாழ்க்கை, அவ விதிப்படி நடக்கட்டும். நாம கிளம்புவோம்..” என்றவர்கள் கிளம்பினார்கள்.

ஷைலு வீட்டுக்கு முன் ஆட்டோ நிற்க.. அதில் இருந்து மாலையோடு இறங்கிய ஜனா.., ஷைலுவையும் இறங்க சொல்ல... முதலில் கண்ணீரோடு மாட்டேன் என்பது போல மறுத்து தயங்கி தவித்தவள், பின் தன்னை திடப்படுத்திக்கொண்டு இறங்க... அதற்குள் தெருவே பரப்பரப்பாகி ஒவ்வொரு வீட்டின் முன்பும் தலைகள் தெரிந்து சலசலப்பு உருவாகியது... அவமானத்தில் தலை குனிந்தாள் ஷைலஜா.

பார்கவி தனியே இருக்கும் நேரம் என்பதால், எப்போதும்போல வெளி கேட் பூட்டி இருக்க..

அழைப்புமணியை அழுத்திவிட்டு காத்திருந்த நேரமே உதறலை கொடுத்தது. ஆதரவுக்கு ஜனாவின் கையைப் பிடிக்க போக... அவனோ.. அவள் கையை உதறி விட்டு... ‘எதுக்கு இந்த பயம்’ என்பது போல் முறைத்து... “அவங்க வந்ததும் சொல்லிட்டு கிளம்பு... வெட்டியா பேசிட்டு நிக்காதே.. புரியுதா ?”

என்ன உளறுகிறான் என்பது போல பார்த்தவள், வாயை திறக்கும் முன்பே “யாரது?” என்றவாறே கதவை திறந்த பார்கவி... அடுத்த பேச்சே வராமல் இடி விழுந்தது போல் நின்றவர், அங்கேயே கண்கள் சொருக.. மடங்கி அமர்ந்தவாறே ..

“அய்யோ... அய்யோ...” “ஏண்டி.. ஏண்டி... இப்படி பண்ணினே?” என்று தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தார்.

“பாவி... பாவி.. எங்க தலையில் இப்படி மண்ணை வாரி போட்டுட்டியே... நாங்க உனக்கு என்னடி பாவம் பண்ணினோம்... காலையில் கூட கேட்டேனே... ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமே... மூடி வச்சு கழுத்தறுத்திட்டியே... பாவி... கடவுளே... யார்கிட்டே போய் இந்த அநியாயத்தை சொல்லுவேன்...

உன்னை மலை போல நம்பினாரே அந்த மனுஷன்.. அவர்கிட்ட என்னன்னுடி சொல்லுவேன்..? எப்படி அவர் முகத்தை பார்ப்பேன்... கண்ணு கண்ணுன்னு உன்னை தூக்கி வச்சு கொண்டாடியதுக்காகவா இப்படி செய்தே? சதிகாரி.. பண்ணுறதை எல்லாம் பண்ணிட்டு, ஒண்ணும் தெரியாத மாதிரி, எந்த தைரியத்துல இங்கே வந்த.?” என்றவர் பரபரவென எழுந்து உள்ளே சென்றவர், சாவியோடு வந்து கதவை திறந்து... அந்த வேகத்திலேயே ஷைலுவின் முடியை பற்றி..

“ஏண்டி இப்படி பண்ண... ஏன் பண்ண... உன் தங்கச்சிங்களை நினைச்சுப்பார்த்தியா ? உன்னை தேவதையா தாங்குனோமே, அதுக்கு கூலியாடி?” என்று கன்னத்தில் மாறி மாறி அரை வைக்க..

“விடுங்க அவளை... நீங்க யாரு அவளை அடிக்க.. விடுங்க.. விடுங்கன்னு சொல்லுறேன் இல்ல..” என்று ஜனா பார்கவியிடம் இருந்து அவளை விடுவிக்க...

அவன் பேச்சில் திகைத்த பார்கவி “அய்யா... அவ நான் பெத்த பொண்ணுப்பா.. எனக்கில்லாத உரிமை, நேத்து வந்த உனக்கு வந்துடுச்சா...? யாருடா நீ.. ஒரே நாளுல என் குடும்பத்தை சீர்குலைச்சு போட்டுட்ட..”

“தேவை இல்லாம பேசாதீங்க.... என் பொண்டாட்டியை அடிக்க யாருக்கும்... யாருக்கும் உரிமை இல்ல... அவ மேல ஒரு தூசி படுவதை கூட நான் விரும்பல” என ஷைலுவை அணைக்க

அவளோ “சீ விடுடா” என்று உதறி தள்ளிவிட்டு “அம்மா..” என பார்கவியை நோக்கி ஒரு எட்டு வைக்க... ‘நில்’ என்பது போல கை காட்டியவர், கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துவிட்டு, தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்து... தலைக்கு மேல் கை எடுத்து கும்பிட்டு..

“அய்யா ராசா..., ரொம்ப நல்லது... இன்னைக்கு சொன்ன வார்த்தையை கடைசி வரைக்கும் மறக்காம காப்பாத்து..” என்றவர் விரைவாக வீட்டினுள் நுழைந்து கதவை அடைக்க... பின்னாலே ஓடிய ஷைலு மூடிய கதவின் முன் நின்று

“அம்மா... ப்ளீஸ் என்னை.. மன்னிச்சிடு... கதவை திறம்மா..” என அழ..

“வேண்டாம்... உன் பாசம் வேணா பொய்யா இருக்கலாம்... ஆனா நாங்க உயிரா நினைச்சு தான் உன்னை வளர்த்தோம்... அப்படி வளர்த்த எங்க பொண்ணு இன்னைக்கு செத்துட்டா... மீதி இருக்குற பிள்ளைகளுக்காக நாங்க வாழணும்... போய்டு... என்னை பேச வைக்காதே... என் வாயால் சாபம் கொடுக்க வச்சிடாதே... இனி செத்தாலும் என் முகத்தில் விழிக்காதே..” என்று சொன்னவரின் கதறல் மட்டும் கேக்க...

“அம்மா... அம்மா..” என்று துடித்து அழுதவளை சமாதானம் செய்யவும் முடியாமல், சுற்றி இருந்தவர்கள் பார்வையும் அவமானத்தை கொடுக்க..

“ஷைலஜா.., அதான் அவங்க போக சொல்லுறாங்க இல்ல வா..” என்று வேறு வழி இல்லாமல் அவளை தரதரவென தெரு கேட் வரை இழுத்து வந்தான்.

“விடுடா.. விடு... நீ நினைச்சது நடந்துடுச்சு இல்ல... இப்போ நிம்மதியா?.” என்றவள், பிடிவாதமாக அங்கேயே உட்கார...

“என்ன இது ஷைலஜா, சாக்கடை பக்கத்துல உக்காந்து கலாட்டா பண்ணுறே.? பார் எல்லோரும் வேடிக்கை பாக்குறாங்க வா..”

“சாக்கடையா... அதுக்கும் எனக்கும் என்னடா வித்தியாசம் இருக்கு? என்னை நினைச்சா எனக்கே அருவருப்பா இருக்கு.. நீ இதுக்கு தானே ஆசைபட்ட... செத்தாலும் முகத்தில் முழிக்க வேண்டாம்னு சொல்லுறாங்க.. இப்போ திருப்தியா?”

“ஷைலஜா.. உன்னை வேண்டாம் ‘போ’ன்னு சொன்னவங்களை, உனக்கு வேணும்ன்னு அழுவுறே.. எந்த நிலையிலும் நீ தான் வேண்டும், நீ மட்டும் தான் வேண்டும் என்று தவிக்கும் என்னை உனக்கு புரியலையா?”

“அய்யோ கடவுளே... நான்.... நான்... நான்... அதுமட்டும் தான் உனக்கு தெரியுமா...? உள்ளே என் அம்மா அழுறாங்க... அது உனக்கு கேட்கலையா... இது வரைக்கும் அவங்க கண்ணில் ஒரு சொட்டு கண்ணீரைக் கூட நான் பார்த்தது இல்லை... எங்கப்பாவுக்கு அவங்க தான் மூத்த குழந்தைன்னு சொல்லுவார்... இதெல்லாம் நடக்க கூடாதுன்னு தானே உன் காலை பிடிச்சு அழுதேன்... நீ மனசு இறங்குனியா.. பாரு இன்னைக்கு என்னால அழறாங்க... அது உனக்கு

பெருசா தெரியலை இல்ல... பாவி பாவி.. ”

“தெரியலை ஷைலஜா, தெரியலை... அவங்க அழுவது எனக்கு கஷ்டமா இல்லை... ஏதோ பாரம் விலகிய நிம்மதி தான் இருக்கு.. இனி என் ஷைலஜா எனக்கு மட்டும் தான் என்று குதிக்கணும் போல இருக்கு... இப்போ நான் தாங்க முடியாம தவிக்கிறது உன் அழுகைய பார்த்து தான்...

உன்னை அழவைக்கிற இந்த இடத்தை விட்டு உடனே போகணும் என்ற ஒரு எண்ணம் தான் இருக்கு... உன் அழுகைய என்னால தாங்க முடியலை... நீ அழுதா எனக்கு இங்கே வலிக்குது...” என்று நெஞ்சை தொட்டுக் காட்டி சொன்னவன், அதே வேகத்தில் ஆட்டோவில் ஏறி அமர்ந்து கண்களை துடைத்தான்.

என் புன்னகை துயரத்தை மறைத்தாலும்.. என் சிரிப்பு கண்ணீரை மறைக்க முயலவில்லை ஏன்...

வாழும்போதே... இறந்து விட்டதாக சொல்வதை விட கொடுமையான வார்த்தை வேறு ஏதும் இருக்க முடியாது... அதிலும் ஷைலு அப்படி ஒரு நிலையை அவள் வாழ்நாளில் எதிர்ப்பார்த்தவள் இல்லை... பார்கவி.., கோபி.., இருவருக்குமே ஷைலு தான் உயிர் என்பதில் மற்ற சகோதரிகளுக்கு பெரிய ஆதங்கமே உண்டு..

பொதுவாக அவர்கள் சண்டையின் காரணம் கூட அதுவாக தான் இருக்கும்.. எந்த நிலையிலும் பார்கவி..., அவளை விட்டு கொடுத்தது இல்லை... அவரே இன்று அப்படி பேசவும்... அவரை அப்படி பேச வைக்க காரணமான ஜனாவின் மீது மேலும் வன்மம் மலையளவு கூடியது... ஓய்ந்து போய் சோபாவில் சுருண்டு இருந்தாள்...

வந்ததில் இருந்து ஆளுக்கு ஒரு மூலையில் இருப்பவர்களிடம் என்ன கேட்பது என்று புரியாத பாவனையில் முழித்த தோழிகள் கையை பிசைந்த படி இருக்க... மினி ஷைலுவை நோக்கி ஒரு எட்டு வைத்தாள். அவளை தடுத்த நிலா ‘வேண்டாம்’ என்பதுபோல் தலையை அசைத்து விட்டு ஜனாவிடம்..

“அண்ணா, டேபிளில் சாப்பாடு வைச்சிருக்கேன்.., அவளை சாப்பிட வைங்க... காலி வயிறோட இருந்தா ஒழுங்கா யோசிக்க விடாம, பிரச்சனையை பெருசாக்கிடும். இப்போ அவ கிட்ட நாங்க பேசுறது சரி

வராது, கணவன் மனைவி பிரச்சனையை நீங்க தான் பேசி சரி செய்யணும்... நாங்க கிளம்புறோம்" என்றவர்கள் கிளம்பிவிட... ஷைலுவின் கோபத்தை அது மேலும் கூட்டியது. அறையினுள் சென்றவள் ஒரு மூலையில் சுருண்டு படுக்க..

அவள் பின்னேயே உணவு பொட்டலத்தோடு வந்தான்.. "ஷைலஜா..., சாப்பிட்டு படுத்துக்கோ... கல்யாணம் நடந்த அன்னிக்கே இப்படி சாப்பிடாம அடம்பிடிச்சா என்ன அர்த்தம், ப்ளீஸ் ஷைலு, எழுந்திரி.. வா சாப்பிடலாம்..."

"வேண்டாம் போய்டு... வார்த்தையை விடவேண்டாம்னு பார்க்குறேன்... நீ என்னன்னா கல்யாணம் கருமாதின்னு பேசுற...! பேசாம போய்டு, தேவையில்லாம வாயைப் பிடுங்காதே.."

"வாயைப் பிடுங்குறேனா... போதும் ஷைலஜா, ரொம்ப வரம்பு மீறி பேசுறே... சரியில்லை சொல்லிட்டேன், கொஞ்சம் யோசிச்சுப் பார்... புரியும்."

"யார் நானா? வரம்பு மீறுவதை பற்றி நீ பேசாதே... பாவி... பாவி... நேற்று உன்கிட்ட எவ்வளோ கெஞ்சினேன்.. கொஞ்சமாவது மனசு இறங்குனியா...? இதே அப்பா அம்மாவை தானே என் கண் எதிரே கொண்டு வந்து பிளாக்மெயில் பண்ணினே...! நீ பிறந்ததும் அனாதையா ஆகிட்டா, அது உன் தலை விதி... அதுக்குன்னு இப்போ என்னை ஏண்டா அனாதையா ஆக்குனே..? ஒவ்வொரு நொடியும், ஏன் வாழுறேன்னு நினைக்க வச்சிட்ட இல்ல!"

"ஷைலஜா.. பைத்தியம் மாதிரி பேசாதே... நான் செய்தது எல்லாமே நம்ம ரெண்டுபேரோட நன்மைக்குத்தான்னு எப்போ புரிஞ்சிக்குவ?. முட்டாள்... நான் இருக்கும் போது, நீ எப்படி அனாதையாகுவே?"

"கடவுளே..., நான் என்ன சொன்னாலும்... நீ பேசினதையே தான் திரும்ப திரும்ப பேசுவ... ஒரு நாள் இல்லை ஒரு நாள் என் வேதனை உனக்கு புரியாம போகாது... கண்டிப்பா புரிய வைப்பேன்... ஆனா அன்னிக்கு, நான் உன் கூட இருக்க மாட்டேன்.. போ." என்றவள் மீண்டும் சுருண்டு படுத்து அழ ஆரம்பித்தாள்.

"ப்ளீஸ் ஷைலஜா.. என்னை என்ன வேணா திட்டு.. அடி... ஆனா அழாதே.. வெறும் வயிற்றோடு படுக்காதே... கொஞ்சமாவது சாப்பிடு.. வாங்குன சாப்பாடு வீணா போகுது பார்."

“அட.. சீ.. என் வாழ்க்கையையே வீணாக்கிட்டே... அது உனக்கு பெருசா தெரியலை, எந்த வருத்தமும் இல்லை... ஆனா சாப்பாடு வீணா போய்டும்னு தான் வருத்தமா இருக்கோ... உன் பிச்சைக்கார புத்தி வேறு எப்படி யோசிக்கும்.. போடா...” என்றாள் முகம் சுளிக்க

அவளது உதாசீனம் கொடுத்த வலியை... வார்த்தையாக வடித்தான் “ஆமா சாப்பாடு வீணாக போவது எனக்கு வருத்தமா தான் இருக்கு... நீ ஒரு வேளை சாப்பாட்டுக்கு தவிச்சிருந்தா, அந்த வருத்தம் உனக்கும் புரியும்.. நீ தான் ராணியா பிறந்து ராணியாவே வாழுறியே.., உனக்கெப்படி என் வேதனை புரியும்...?

இப்போவும் சொல்லுறேன்..., நான் இல்லாம, உனக்கு ஏது வாழ்க்கை? அப்புறம் எதை வீணாக்கிட்டேன்னு இப்படி புலம்புறேன்னு எனக்கு புரியலை... உன்னிடம் பேசி போட்டி போட முடியாது.. வீணாக போவதை யாராவது இயலாதவங்களுக்கு கொடுத்துட்டு வரேன்..”

என்று சொல்லியவாறே... கதவை அறைந்து சாத்தி விட்டு போய்... அரைமணியில் திரும்ப வந்து ஆடை மாற்றியவன்..., அவனும் அதே அறையில் மற்றொரு மூலையில் துணியை விரித்துப் படுத்தான்.. அதுவரை அவனை சோர்வாக நோட்டமிட்டு கொண்டு இருந்தவளின் கண்கள்... பசியின் தாக்கத்தில்... உறக்கத்தில் ஆழ்ந்தது.

அங்கே ஷைலுவின் வீடோ கலவர பூமியாக மாறியிருந்தது... நடந்த எதையுமே நம்ப முடியாதவராய் கோபி கிருஷ்ணன் ஓய்ந்து போய்விட்டார்.... பார்கவியோ அழுது அழுது ரத்த அழுத்தம் ஏறி மயங்கி சரிந்தார்.... ப்ரிதீவ் தான் நிலைமையை கையில் எடுத்துக்கொண்டு, அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு, கூடவே இருந்தான்.

மனைவியின் நிலையை கூட உணராத கோபி, சுவற்றையே வெறித்த வண்ணம் இருந்தார்... அவரை தனது தந்தை ராஜேஸ்வரின் பாதுகாப்பிலும், சிறியவர்களை தாய் சகுந்தலாவிடமும் ஒப்படைத்தான்.. சிறியவர்கள் எதுவும் புரியாமல்.. நடந்ததின் விளைவுகள் புரியாமல்.. பெற்றவர்களின் அழுகை மட்டுமே பெரியதாக தெரிய... சகுந்தலாவின் பின்னே ஒடுங்கி போய் அமர்ந்து இருந்தனர்... அன்றைய பொழுது ப்ரித்தீவை அந்த குடும்பத்தில் முக்கியமானவனாகவும்,.. கோபி பார்கவியின் மகனாகவுமே மாற்றியிருந்தது...!

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஷைலுவை பார்கவி எழுப்புவதாக நினைத்தவள் “விடுங்கம்மா ப்ளீஸ் இன்னும் கொஞ்சம்

தூங்கிக்கிறேனே...” என்று அவர் மடியில் தலை வைத்து கைகளால் இடுப்பை சுற்றி வளைக்க.. “ஷைலு, எந்திரி அஞ்சு மணி ஆகுது.”

என்று மீசை முடி கன்னத்தில் உரச ஜனாவின் குரல் கேக்கவும்... அணைப்பில் வித்தியாசம் புரிய.. தூக்கி அடித்த உணர்வில் வெடுக்கென அவனை உதறி தள்ளியவள்...

“நா.. நா... அம்மான்னு நினைச்சேன்” என்று அவன் முகம் பார்க்காமல் சொல்லிவிட்டு பாத்ரூமில் நுழைந்தவளை முகம் கடுக்க பார்த்தான்.

“சே இன்னும் அம்மாவை கட்டிக்கிட்டு தான் அழுவுறா.. எப்போ தான் என்னோட நினைப்பு வருமோ...” என்று கடுகடுத்தபடி அங்கேயே அமர்ந்து இருந்தான்.

பாத்ரூமில் இருந்து வந்து அவனை தாண்டி வாயில் வரை போனவள், நின்று, அவனுக்கு என்ன வேண்டும் என்பது போல கேள்வியாக பார்க்க... அதுவே அவனுக்கு மகிழ்வை கொடுத்தது. அவள் அருகே போனவன்..

அவள் கைகளை தனது கைகளில் எடுத்து மற்ற கையால் தடவியவாறே “ஷைலஜா..., யூனிட்ல வேலைக்கு நடுவுல, தேவா அண்ணாவும், மத்தவங்களும் எப்பவும் அவங்க வீட்டை பத்தி பேசிட்டு இருப்பாங்க.. அப்போ எல்லாம் எனக்கு பெரிசா எதுவும் தோணாது..., ஆனா இந்த இரண்டு வருஷமா எனக்கு நிறைய கனவுகள்.. உன்னை தவிர வேற நினைவே இல்லை.. ஒரு விசேஷம் என்றால்.. எல்லோரும் வடை பாயாசத்தோடு கொண்டாடுவாங்க... அப்போ எல்லாம் எனக்கு ரொம்ப ஏக்கமா இருக்கும்... அதுவும் இல்லாம நேத்திலருந்து டென்சன்ல சாப்பிடவே இல்லை , பசிக்குது.. அதனால..”

“அதனால...”

“திலகா அம்மா..., எல்லா மளிகை சாமானும் வாங்கி அடுக்கி வச்சு இருக்காங்க... நான் நேத்து கொஞ்சம் காய்கறியும் வாங்கி வச்சு இருக்கேன்... இன்னைக்கு நம்ம கல்யாண நாள்.. உன் கையால வடை பாயசத்தோடு சமைக்கிறியா... ப்ளீஸ்...” என கொஞ்சலாக கேட்டான்.

இவனை என்ன செய்வது என்பது போல பார்த்தவள்.. “உலகத்திலேயே கல்யாணம் ஆன அன்னிக்கே பெண்ணை சமைக்க சொன்ன முதல் ஆள் நீங்களாகத்தான் இருப்பீங்க.... சே... நேத்து அவ்வளோ நடந்ததுக்கு அப்புறமும் கொஞ்சம் கூட குற்ற உணர்வு இல்லாம காய்கறி வேற

வாங்குனீங்களா?”

“ஆமா... நாம சண்டை போடுறது புதுசா என்ன? முணுக்குன்னா மூஞ்சியைத் திருப்பிக்கிற ஆள் தானே நீ..”

இவனிடம் பேசி, உள்ள தெம்பையும் கெடுத்து கொள்வதை விட, அவன் கேட்டதை செய்வதே மேல் என்ற உணர்வோடு, பசி வயிற்றை இழுத்து பிடிக்க விரைவாக சமையலை ஆரம்பித்தாள்.. உதவி செய்கிறேன் என்று வந்தவன், அவளுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருக்க.. அவன் உதவியே வேண்டாம் என்று அவனை விரட்டி விட்டு சமையலை முடித்தாள்.

அவள் சமையலை ரசித்து உண்டவன்.. “ஷைலஜா, அருமையா சமைச்சு இருக்க.”

தாயின் நினைவு தாக்க.. “எங்க அம்மா சமையல் இதை விட சூப்பரா இருக்கும்.”

“உன்னையெல்லாம்... என்ன செஞ்சா தகும்? எப்பவும் அவங்க நினைவு தானா...! இனி என்னை தவிர உனக்கு யாரும் இல்லை... அதை மனசுல பதிய வை... அப்படியே கொஞ்சம் என்னை பத்தியும் நினைக்க பழகு..” கையை உதறிவிட்டு எழுந்து போனான்.

‘உன்னை நினைச்சதுனால வந்த வினையைத்தானே இப்போ அனுபவிக்கிறேன்’ என்று எண்ணியவாறு உணவை முடித்து மேஜையை ஒதுக்கிவிட்டு... கவனமாக பெரிய அறையை தவிர்த்து விட்டு சிறிய அறையில் நுழைய போனவளின் பின்னாலேயே வந்தவனை கோபமாக முறைத்து

பல்லைக் கடித்தபடி “எங்கே வரீங்க?.”

“இது என்ன கேள்வி..! நமக்கு இன்னைக்கு தான் கல்யாணம் முடிஞ்சு இருக்கு... எதுக்கு உன் பின்னாடி வரேன்னு உனக்கு தெரியாதா...? முட்டாள் தனமா கேள்வி கேக்குற...”

“உனக்கு கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லையா? மரியாதையா அந்த ரூமுக்கு போ..”

“ஏய்... நான் ஏன் போகணும்? உன்னை ஒரு நொடி கூட பிரிய மாட்டேன்னு ஃபாதருக்கு ப்ராமிஸ் பண்ணி கொடுத்து இருக்கேன்... தெரியுமாடி!”

“என்னது ‘டி’யா?”

“ம்ம்... நீதானே அப்படி கூப்பிடுன்னு சொல்லுவ. இது கூட நல்லாத்தான் இருக்கு. நமக்குள்ளே நெருக்கமா உணர வைக்குது... உரிமையை கூட்டுது இல்ல... என்ன சொன்னாலும், நீயும் எனக்கு மரியாதை கொடுக்குறது இல்லை, அதான்.. நானும் உன் வழிக்கே வந்துட்டேன் ” என்றவன் அவளை தன்புறம் இழுக்க.

அவன் பிடியில் இருந்து விடுபட போராடியபடி “அது எல்லாம் மனசு ஒத்து போனவங்களுக்கு..! நீ கூப்பிட்டா பத்திக்கிட்டு எரியுது... உன்னைப் பார்த்தாலே கொல்லணும் போல இருக்கு..”

“அட.. உன்னால என்னை வெறுக்க முடியுமா.... சொல்லுடி...” என்றவன் மேலும் முன்னேற

“சீ விடுடா.. உன் மேல மனசு முழுக்க கோபம் தான் இருக்கு... மனைவிக்கு பிடிக்கலைன்னு தெரிஞ்சா, ஒதுங்கி போகிறவன்தான் நல்ல ஆண்மகன்... தெரியுமா”

அவள் காதோரம் கன்னத்தை உரசியவன்... “நிறைய சினிமா பார்த்து கெட்டுப் போய் இருக்க... அது எல்லாம் பிடிக்காதவங்களுக்கு.., உனக்குத் தான் என்னை ரொம்ப பிடிக்குமே...”

“இல்லை... பிடிக்காது..” என்றவள் முகம் திருப்ப

“அப்படியா...! அப்போ சோதிச்சு பார்ப்போமா!” என்றவன் சிரித்தபடியே சுலபமாக அவள் எதிர்ப்புகளை தகர்த்தவன், அவள் முகத்தில் முகம் பதித்து, அவளை அணைக்க... நேரங்களை கடந்த அந்த சோதனையின் முடிவில் படுபயங்கரமாக அவனிடம் தோற்று இருந்தாள்.

அழுகையில் நீண்ட இரவின் முடிவு சோம்பலான விடியலாய் விடிய.. ஷைலுவிற்கு தன் மேலேயே கோபமும் ஆற்றாமையும் பொங்கி வந்தது... அந்த இரவு அவளுக்கு புரிய வைத்தது ஒன்றைத்தான்... தேகங்கள் உரசுகையில் மோகங்கள் தீப்பற்றி எரியும்போது, கோபங்கள் பொசுங்கி போவதும்.. மோகத்தீ அணைகையில் கிளம்பும் புகையாய், திரும்பவும் கோபங்கள் கிளம்பும் வித்தை, கூடலுக்கே உரியது என்று...!

மனதின் கட்டுப்பாடுகளுக்கும்... ஆசைகளின் உணர்வுகளுக்கும் உள்ள தூரம் மிகவும் அதிகம் என்றும்... இரண்டும் இரு வெவ்வேறு துருவம் என்றும் புரிய துவங்கியது... அது கணவன் என்ற உரிமையில் வந்ததாக கூட இருக்கலாம்.. தனித்தனி உணவு.. தனித்தனி பெட் என்பது எல்லாம்

கதைகளுக்கு மட்டுமே சாத்தியம் என்ற உண்மை முகத்தில் அறைந்துது...

ஜனாவின் மீது இருக்கும் கோபம் அவன் தொலைவில் இருக்கும் வரைதான்... அவன் அருகாமை எல்லாத்தையும் மறக்க வைக்கும் சக்தி கொண்டது... ஜனாவின் மீது இருக்கும் கோபம் அவள் மனதுக்கு புரிந்த அளவு அவள் உணர்வுகளுக்கு புரியவில்லை.. இது ஜனாவுக்கு நன்கு புரிந்திருந்தது.. எனவே, அவன் கூடவே இருந்து அவனைப் பழிவாங்குவது என்பது தண்ணீரில் எழுதும் எழுத்தைப் போல.. எனவே அவனை பிரிவதே அவனுக்கும்... முட்டாள்தனமாக முடிவெடுக்கும் தனக்கும் சரியாக இருக்கும் என்று பிரிவின் முதல் விதையை மனதில் ஊன்றி வைத்தாள்...

அதிகாலையிலேயே ஜனா தன் வேலையை துவங்க... ஏன் அவன் வாயில் விழ வேண்டும் என்று அவசர அவசரமாக, இருப்பதை வைத்து டிபனை செய்து முடித்தவள்... உணவு மேஜை மேல் வைத்து விட்டு காத்திருக்க.. முகம் மலர வந்தவன் மேஜை முன் அமர..

சுவற்றை பார்த்தபடி "மதியம் என்ன சமைக்க?"

"ஏன் இன்னைக்கு உனக்கு காலேஜ் லீவா என்ன?."

"இருக்கு..., ஆனா இன்னைக்கு எப்படி போக முடியும்?"

தட்டிலே கவனமாக "ஏன், இன்னைக்கு நாள் நல்லா இல்லையா என்ன...? ஏற்கனவே மூணு நாள் மட்டம் போட்டுட்ட.. படிப்பை ஒழுங்கா முடிக்க வேண்டாமா... கிளம்பு.."

"யோசிக்கவே மாட்டீங்களா? நேத்துதான் கல்யாணம் முடிஞ்சிருக்கு... இன்னைக்கே காலேஜ் போனா, மத்தவங்க என்னை பத்தி என்ன நினைப்பாங்க...? இன்னைக்கு ஒரு நாள் விட்டுடுங்க. திங்கட்கிழமையில் இருந்து போறேன்.."

"அடுத்தவங்களை பார்த்து வாழாதே... இன்னைக்கு நீ காலேஜ் போறே, கிளம்பு.. நான் கொண்டு வந்து விடுறேன்..."

பேசாமல் அவன் சொன்னபடி கிளம்பியவளை, கல்லூரி வாசலில் இறக்கிவிட்டு... "ஷைலஜா.. சாயங்காலம் நான் அஞ்சு மணிக்கு கிட்டே தான் வர முடியும்... நீ காத்திரு."

"எனக்கு நாலு மணிக்கு காலேஜ் முடியுது... அவ்ளோ நேரம் என்னால

காத்திருக்க முடியாது... பக்கத்துல தானே வீடு... பஸ்ல வரேன்...”

“ஏன்... உங்கப்பா உன்னை ராணி மாதிரி வண்டியில அனுப்புனார்... நான் கையாலாகாம உன்னை பஸ்ல அலைக்கழிக்கிறேன் என்று அசிங்கப்படுத்தவா? அதுவும் இல்லாம, இந்த இரண்டு வருஷமா, அந்த சாயந்திர நேரத்துல உன் கூடவே இருந்து பழகிடுச்சு... இனியும் அதை மாத்த முடியாது...”

“அதுக்கு..! நான் ரோட்டில் நிக்கணுமா?.”

“ஒண்ணும் வேண்டாம்... நான் வரும் வரைக்கும் ப்ரிதீவ் சார் கஃபேல வெயிட் பண்ணு, கூட மினியை இருக்க சொல்லு...”

“நீங்க என்ன சொல்லுறீங்க...? நான் ஏன் அவர் கஃபேல காத்திருக்கணும்..? மத்தவங்க என்ன நினைப்பாங்க... கொஞ்சம் முன்னே வந்து கூட்டி போவதில் உங்களுக்கு என்ன பிரச்சனை.?.”

“ஷைலஜா, என்னிடம் வேலை பார்ப்பவங்க டெய்லி பேஸிஸில் சம்பளம் வாங்குறவங்க.. அவங்களை காத்திருக்க வைக்க மாட்டேன்... எப்பவும் சம்பளம் கொடுத்துட்டு தான் உன்னை பார்க்க வருவேன்... இப்போ உனக்காக அதை மாத்த முடியாது..”

“நான் மாத்த சொல்லலை.. சம்பளம் கொடுக்குற பொறுப்பை வேறு யார்கிட்டேயாவது கொடுத்துட்டு வாங்க.. ப்ரிதீவ் என்ன நினைப்பார்னு யோசிக்க மாட்டீங்களா?”

“பண விஷயத்தில் மட்டும் இல்லை, வேறு எந்த விஷயத்திலும் உன்னை தவிர வேறு யாரையும் நான் நம்ப மாட்டேன்... ப்ரிதீவ் சார் கிட்டே நான் சொல்லுறேன் அவர் ரொம்ப நல்லவர்... பயப்பட ஒண்ணும் இல்லை..” என்றவன் அவள் பதில் சொல்லும்முன் கிளம்பி விட...

‘பயப்பட ஒண்ணும் இல்லையாமே... மவனே பயம்னா என்னன்னு காட்டுறேன், என் மேல அவ்வளவு நம்பிக்கையா உனக்கு...’ என்று புலம்பியபடி வகுப்பறைக்குள் நுழைந்தவளை கண்டு தலை சுத்தி போனார்கள் தோழிகள் மூவரும்..!

“ஷைலு, என்னடி இது... கல்யாணம் முடிஞ்சு முழுசா இருபத்திநாலு மணி நேரம் கூட ஆகலை...!! அதுக்குள்ளே காலேஜுக்கு வந்து இருக்க..? லூசா நீ..” என்று படபடத்தாள் நிலா.

“நானா இருந்தா மொத்தமா காலேஜுக்கே தலை முழுகிட்டு,

ரொமன்ஸ்ல குளிச்சு இருப்பேன். சரியான தத்திடி நீ...” என்று சஞ்சு புலம்ப

அதுவரை அமைதியாக இருந்த மினி “அண்ணன் போக சொன்னாரா ஷைலு..” என்று கேட்க... கண்களில் நீர் திரள ‘ஆம்’ என்பது போல தலை அசைத்தாள் ஷைலு.

“என்னடி சொல்லுற ?” என்று கோரசாக கூவினர் நிலாவும் சஞ்சுவும்..

“ஹா... ஹா... ஹா...” என வயிற்றை பிடித்துக்கொண்டு சிரித்த மினி, மேஜையில் ஏறி உட்கார்ந்து “ஹா.. ஹா.. சொல்லு சொல்லு நேற்று என்ன நடந்தது... விரிவா சொல்லு பார்ப்போம்..”

“ஹே முண்டம்.. எதைத்தான் கேட்கறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லையா!..” என்று நிலாவும்

“சொல்லுப்பா... சொல்லுப்பா...” என்று சஞ்சுவும் கேக்க...

நிலாவோ “சீ உங்க ரெண்டு பேருக்கும் கொஞ்சம் கூட வெக்கமா இல்லையா...? விவஸ்தை கெட்ட ஜென்மங்களா..” என பொரிந்தாள்.

“யாருக்கு விவஸ்தை இல்லை...! நீங்க விருமாண்டிய பத்தி தெரிஞ்சிக்கிட்டது அவ்வளோ தான்... நீ சொல்லுடி செல்லம்... அண்ணாத்தே நேத்து என்ன ஆப்பை எடுத்து உன் நெஞ்சுல சொருவினார்... சொல்லு கண்ணு..”

“ம்ம்ம்... வடை பாயசத்தோடு சமைச்சு போட சொன்னார், நானும் செஞ்சு போட்டேன்... வயிறு முட்ட கொட்டிக்கிட்டார்... போதுமா!”

“ம்ம்ஹூம்” என்ற சத்தம் மட்டுமே மூவர் வாயில் இருந்தும் வந்தது. சற்று நேரம் கழித்து..

“கொம்புல பூவ சுத்தி... நெத்தியில் பொட்டு வச்சு...
கன்னி பொண்ணு கை வளர்த்த காள மாடு...
காம்பு தொட்ட பால் கொடுக்கும் பசு மாடு...
முட்டுன தும்பவிட்டு வண்டியில் ஏறக்கட்டு..
மண்பட்டு வந்து முகம் காட்டு..
செம்பட்டியில் வித்த செம ரேட்டு..
ஆத்தாடி அன்னலட்சுமி தோத்தாடி பந்தயத்துல...”

என்று மினி ஷைலுவின் தாடையை பிடித்து ராகம் போட்டு பாட

நிலா கோபமாக “அடி எருமை, அவளே நொந்து போய் இருக்கா ஏண்டி இப்படி வெறுப்பேத்துற?.”

“அடிப்போடி... எல்.ஐ.சிக்காரன்கூட அவ்வளோ பாலிசி வச்சு இருக்க மாட்டான்... இந்த அம்மா விருமாண்டிய வளைக்க அத்தனை பிளான் வச்சிக்கிட்டு... விருமாண்டிக்கு ஏத்த அன்னலட்சுமி நான் தான்னு அளந்து விட்டா... பாரு... அண்ணாத்த முதல் நாளே சோத்துலட்சுமியா ஆக்கி உக்கார வச்சுட்டார்...” என்றவளுக்கு ஷைலுவின் கலங்கிய கண்கள் வருத்தத்தை கொடுக்க...

“சாரிடி... சும்மா கிண்டல் பண்ணேன், ஹர்ட் பண்ணனும் என்று நினைக்கலைடி..”

“விடுடி..” என்றவள் அவர்களை ஒதுக்கிவிட்டு தனது இடத்தில் போய் அமர்ந்தவள் அருகில் வந்த நிலா..

“ஷைலு..., அவ கிடக்குறா விடு... பாவம் இதுவரைக்கும் தனியாவே இருந்தவர்.. நீ வரவும், அவருக்குன்னு இருக்குற சின்ன சின்ன ஆசைகளை உன் மூலமாக நிறைவேத்திக்கிறார்... இன்னைக்கு கூட, படிப்பு தானே உன் ஆசை.. அது கெட்டு போய்ட கூடாதுன்னு தானே உன்னை இன்னைக்கே காலேஜுக்கு அனுப்பி இருக்கிறார்..” என்றவளை ஒரு சோக புன்னகையில் ஒதுக்கியவளின் முகத்தில் அன்று முழுவதும் மருந்துக்கும் புன்னகை இல்லை.

சாயங்காலம் நான்கு மணிக்கு எல்லோரும் வீட்டுக்கு கிளம்ப... நிலா ஷைலுவிடம் “ஹே ஷைலு நீ எப்படி வீட்டுக்கு போவே..? மினி கூடவா.. இல்லை அண்ணா வராரா..? இல்லை எங்க கூட பஸ்ல வரியா?.”

“இல்லை அவர் அஞ்சு மணிக்கு வருவார், அது வரைக்கும் ப்ரிதீவ் கஃபேல வெயிட் பண்ண சொல்லி இருக்கார்.....” என்று அசால்ட்டாக சொன்னவளை விழி விரிய பார்த்த மினி

“ஷைலு அவர் யாருன்னு அண்ணாவுக்கு தெரியுமா?.”

“ப்ச்.. தெரியாது.அதுக்கு இப்போ என்ன?.”

“ஷைலு... நீ செய்வது சரி இல்லை... தேவையில்லாத ஏழரையை நீயே இழுத்து விட பாக்குற... இது வாழ்க்கை பிரச்னை... ப்ரிதீவ் யாருன்னு

தெரிஞ்சா, வீண் பிரச்னை தான் வரும். அண்ணன் மனநிலையை யோசிச்சு பாரு..." என நிலா அதட்ட

"அவர் மனநிலையை நான் யோசிக்கணுமா..? ஒரே ஒரு நாள் அவர் என் மனநிலை பற்றி யோசிச்சு இருப்பாரா..."

"அதுக்கு... என்னடி பண்ணப்போற... இதை தான் நான் கல்யாணத்துக்கு முன்னே ஆயிரம் தடவை சொன்னேன்... அப்போ எல்லாம் மூளையை அடகு வச்சு இருந்தியா... இப்போ இப்படி பேசுற, இது சரி இல்லை ஷைலு.. தேவை இல்லாம ப்ரிதீவை இதில் இழுக்காதே... அவனுக்கும் உனக்கும் இனி எந்த சம்பந்தமும் இல்லை, புரியுதா?" என்று மினி கடுகடுக்க

"என்னை சந்தேகப்படுறியா மினி... ப்ரிதீவ் எனக்கு நல்ல ஃபிரெண்ட் மட்டுமே... என் இதயத்தில், விரும்பும் இடமும் ஜனாவுக்கு தான்.... நான் வெறுக்கும் இடமும் ஜனாவுக்கு தான்... இது எனக்கும் ஜனாவுக்கும் நடக்கும் போராட்டம்... என்னை என் போக்கில் விட்டுடுங்க.."

"சரி ஷைலு... இது உன்னோட வாழ்க்கை, உன் பாடு... அதில் ப்ரிதீவ்வை இழுக்காதே... எங்களையும் இழுக்காதே... நீ கஃபேக்கு போக வேண்டாம்... நாம இந்த பீட்சா ஷாப்ல வெயிட் பண்ணலாம்..." என்ற நிலா, ஷைலுவை அங்கே அழைத்துக் கொண்டு போய் நால்வரும் ஒரு மூலையில் அமர...

"காத்திருக்கும் நேரத்துக்கு ஏதாவது சாப்பிடலாம்..." என்றபடி சஞ்சுவும், மினியும் மெனு கார்டை புரட்ட... நிலா ஷைலுவை யோசனையாக பார்த்தபடி அமர்ந்து இருந்தாள்..

"இன்னைக்கு வெள்ளிக்கிழமை, சோ ஒரு வெஜ் பீட்சா சொல்லலாம்.." என்ற மினி திரும்பி "வெயிட்டர்..." என்று கை உயர்த்தி கூப்பிட..

சிரித்தபடி அவர்களை நோக்கி வந்தான் ப்ரிதீவ்...

நான் எப்போதும் இதயம் இல்லாதவள் இல்லை.. நீ என் இதயத்தை உடைத்த பின்.. நான் இதயம் இல்லதவாளாய் இருக்க பழகி கொண்டேன்..

ப்ரிதீவின் புன்னகை நிறைந்த முகம் நிலாவுக்கு எரிச்சலையே உண்டு பண்ணியது... அவனை கண்டதும் பய உணர்வு வந்ததே ஒழிய,

நட்புணர்வு தோன்ற மறுத்தது.. அறிமுகமான சூழ்நிலை அப்படியோ... அவனை பார்க்கவும் எரிச்சல் தான் அதிகமாக கிளம்பியது... ஷைலுவோ என்ன நினைக்கிறாள் என்றே புரியாத பாவனையில் இருந்தாள்... அவனாகவே அவர்கள் அருகில் வந்தவன்...

மினியிடம்..., "பீரோ, வண்டிய கொஞ்சம் தள்ளி பார்க் பண்ணு.." என்றபடி பக்கத்து மேஜையில் இருந்து ஒரு நாற்காலியை எடுத்து வந்து இவர்கள் மேஜைக்கு அருகில் போட்டுக்கொண்டு அமர்ந்தான்... மினி பல்லைக் கடித்தபடி நகர்ந்து அமர்ந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

"ஹாய் ஷைலு.., எப்படி இருக்கீங்க?"

"ம்ம்... நல்லா இருக்கேன்..." என்று தோழிகளை பார்த்தபடி தயக்கமாக சொன்னாள்.

"என்ன மேடம், நேத்து தான் கல்யாணம் ஆச்சு, இன்னிக்கே காலேஜ் வந்துட்டீங்க, சின்சியர் சிகாமணி தான் போங்க... அது என்ன.. அங்கே கஃபேக்கு வராம, இங்கே வந்து இருக்க? ஆனா, நீங்க இங்கே தான் வருவீங்கன்னு எனக்கு தெரியுமே!"

"நா... நான் இன்னைக்கு காலேஜுக்கு வருவேன்னு உங்களுக்கு எப்படி தெரியும்?"

"அஹ்ஹா அது என்ன பெரிய ரகசியமா... காலையிலே தலைவர் ஜனா கஃபேக்கு வந்து சொல்லிட்டு போனாரே!" என்றதும் திடுக்கிட்டவள்

'இவனைப் பார்த்து விவரத்தை சொன்னானா..? அது என்ன, அவனுக்கு இவன் மேல் அப்படி என்ன பாசம்.? யாருன்னே தெரியாதவன் கிட்டே எப்படி இப்படி ஒட்டுறான்..? அவனை புரிஞ்சுக்கவே முடியலையே..? இரு மகனே..., இவனை வச்சே உனக்கு குடைச்சல் தருகிறேன்' என்று கறுவியது ஷைலுவின் மனம்.

திகைப்பாக "அண்ணா சொல்லிட்டு போனாரா? என்னன்னு.?" என்றது மினி.

"ம்ம்... நீ இப்படி கேட்பேன்னு.. ஆளப்பாரு... முந்தரிக்கொட்டை..." என்று அவளை முறைத்து விட்டு

"ஏன் ஷைலு...? நான் உங்களுக்கு ஒரு நல்ல ஃபிரெண்டா இருக்கணும் தானே நினைத்தேன்... அப்புறமும் ஏன் இப்படி? எனக்கு பயந்து அங்க கஃபேக்கு வராம, இங்கே வந்தது, மனசுக்கு எவ்வளோ

கஷ்டமா இருக்கு தெரியுமா? அப்புறம், இதுவும் என்னோட கடைதான்... புதுசா வாங்கியது... சரி எப்படியும் நம்ப இடத்துக்கு தானே வந்தீங்கன்னு மனசை தேத்திக்கிட்டேன்... ஏன் ஷைலு..., நான் உங்களுக்கு நல்ல ஃபிரெண்டா இருப்பேன்னு நம்ப முடியலையா ? ”

சற்றுநேரம் விரல் நகங்களில் இருந்த வார்னிஷை சுரண்டியவள் மெல்லிய குரலில் “அப்படியெல்லாம் எதுவும் இல்லை ப்ரிதீவ்..., நானும் உங்களை பெஸ்ட் ஃபிரெண்டா தான் நினைக்கிறேன்... இதே இந்நேரத்துக்கு உங்க இடத்தில வேறு யாராவது இருந்தா, நான் செஞ்சதுக்கு... என்னை முடிஞ்ச அளவுக்கு அசிங்கப்படுத்தி இருப்பாங்க... ஆனா நீங்க ரொம்ப பெருந்தன்மையா நடந்துக்கிட்டீங்க.... எனக்கு உதவி செய்யணும்னும் நினைச்சீங்க... அப்புறம் எப்படி நான் உங்களை நம்பாம இருப்பேன்.?”

“அப்புறம் ஏன் ஷைலு என்னை தவிர்க்கறீங்க.?.”

“அது நான்..” என்று திருதிருவென விழித்தவளைப் பார்த்தவன், முகம் மலர சட்டென பிறந்த குறும்பில் விழிகள் மின்ன

“வழக்கம்போல இந்த பீரோ குழப்பி விட்டுடுச்சா.?” என்று மினியை சீண்டினான்.

சும்மா இருக்கும் தன்னை சீண்டுவதை பொறுக்க இயலாத மினி “ஏ.. பன்னு.. நான் உன் வழிக்கு வரலை, நீயும் சும்மா என்கிட்டே வம்புக்கு வராதே..” என்றவள் கடுப்புடன் முகத்தை திருப்ப... எதுவும் பேசாமல் நிலாவும், சஞ்சுவும் கிளம்ப ஆயத்தம் ஆனவாறே எதுவும் சொல்லிக் கொள்ளாமல் அந்த இடத்தை விட்டு நகர்வதை கண்டவன்...

“நில்லுங்க சஞ்சு..., மினிக்கு தான் என்கிட்டே கோபம்... உங்களுக்கு என்ன? நீங்க ரெண்டு பேரும் ஏன் ஒண்ணும் பேசாம போறீங்க? வாங்க ப்ளீஸ், கொஞ்ச நேரம் இருங்க... என்றவன் நிலாவைப் பார்த்து,

நிலா, இன்னைக்கு என்னோட ட்ரீட், ஓகே வா..” என்று கூப்பிட்டவனை நிதானமாக பார்த்த நிலா..

“சார்.., நான் யாரையும் சட்டுன்னு நம்புறது இல்லை... சொல்லுறேன்னு கோபிச்சுக்காதீங்க, அதிலும் ஏனோ உங்களை நம்ப தோணலை.. உங்க ஃபிரெண்ட்ஷிப் சரின்னும் என் மனசுக்கு தோணலை, சாரி..” என்று முகத்தில் அடித்தது போல சொன்னவள், சஞ்சுவுடன் இடத்தை விட்டு

அகல... அங்கே சற்றுநேரம் தர்மசங்கடமான அமைதி நிலவியது.

தானே அந்த மௌனத்தை உடைத்தவன் "ஷைலு.., என் மேல என்ன தப்பு இருக்கு ... ஏன் அவங்க அப்படி சொல்லிட்டு போறாங்க...? உங்களுக்கும் என் மேல இப்படி ஏதாவது எண்ணம் இருந்தா, இப்பவே சொல்லிடுங்க.."

"சே... சே... அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை. நிலா கொஞ்சம் கட் அன்ட் ரைட் டைப்... அவ சீக்கிரமே உங்களை புரிஞ்சிக்குவா... அவ எங்களை விட ரெண்டு வயசு பெரியவ.. அவங்க வீட்டுல கொஞ்சம் ஸ்டிரிக்ட், B.Scயோட படிப்பை கூட நிறுத்திட்டாங்க.. சஞ்சு மேலே படிக்கவும் தான் அவளையும் அனுப்புறாங்க... சஞ்சு அவளோட கசின் சிஸ்டர்... பிரச்னை வரக் கூடாது என்பதில் எப்பவும் கொஞ்சம் கவனமா இருப்பா... அதனால தான் எங்கக்கிட்டே கூட கண்டிப்பாவே நடந்துப்பா... நீங்க எதுவும் தப்பா நினைக்க வேண்டாம்..."

"நான் அவங்களைப் பத்திக் கேக்கலை... அது எனக்கு தேவையும் இல்ல... நீங்க என்னைப்பற்றி என்ன நினைக்கிறீங்க ஷைலு.? நட்பு எப்பவும் சந்தேகத்தில் ஆரம்பிக்க கூடாது என்று நினைப்பவன் நான்... உங்களுக்கும் என் மீது சந்தேகம் இருந்தா சொல்லிடுங்க.."

"சே..சே.. என்ன இப்படி சொல்லிட்டிங்க... நான் போய் உங்களை எப்படி சந்தேகப்படுவேன்...? எங்க அப்பாவுக்கு உங்களை ரொம்ப பிடிக்கும்.. நீங்க ரொம்ப நல்லவருன்னு நம்பினார்... அவரோட கணிப்பு எப்பவும் தப்பா போகாது... அந்த நம்பிக்கையில தான், நீங்க எதையும் சரியா புரிஞ்சிக்குவீங்கன்னு நினைச்சுத்தான் என்னோட கல்யாண விஷயத்தை கூட உங்களை தேடி வந்து சொன்னேன்.."

கொஞ்ச நேரம் யோசனையாக அமைதியை தத்து எடுத்தவன், ஆதங்கம் நிறைந்த குரலில் "கேக்குறேன்னு தப்பா நினைக்காதீங்க... உங்க அப்பா மேல இவ்வளோ பாசம் வச்சு இருக்குறீங்க, அப்படியிருந்தும் நீங்க ஏன் இப்படி செய்தீங்க ஷைலஜா... அவங்களோட நிலைமை என்ன ஆகும்னாவது யோசிச்சீங்களா..., நேற்றில் இருந்து அவங்க எப்படி இருக்காங்கன்னாவது நினைச்சு பார்த்தீங்களா...? நீங்க மட்டும் சந்தோஷமா இருந்தா போதுமா..."

"நான் அதைப்பத்தி யோசிக்காம இருப்பேனா... அம்மா அழுவுறதை முதல் தடவையா பார்த்தேன், அதுவும் என்னால அழுதாங்க. அந்த குற்ற உணர்வே என்னைக் கொல்லுது... ஆனா நான் என்ன செய்யுறது.. எனக்கும் வேற வழி தெரியலையே ப்ரிதீவ்... ஆனா நீங்க வேணும்னா

பாருங்க, அவங்களோட இந்தக் கோவமெல்லாம் கொஞ்ச நாள் தான்... அதுக்கப்புறம் 'கண்ணுன்னு' என்னை தேடி ஓடி வந்துடுவாங்க.. நான் இல்லாம அவங்களால ஒரு நாள் கூட... "

"மண்ணாங்கட்டி... நிறுத்துறியா.. உங்களுக்கு எல்லாம் பெத்தவங்க மனசுன்றது என்ன கிள்ளுக்கீரையா? யார் செத்தா என்ன..? வேதனையில் நொந்தா உனக்கு என்ன...? நீ வாழ்ந்தா போதும் இல்ல.. யாரோட உயிரை பற்றியும் கவலை இல்லை...

இப்போ சொல்லுறேன், இந்த ஜென்மத்துல அவங்க உன்னை மன்னிக்க மாட்டாங்க... அதுக்கான மனவலிமை கூட இல்லாம நொடிஞ்சு போய் இருக்காங்க.." என்று முகம் இறுக கடுமையாக பேசியவனை கண்டு குளிரெடுத்தது மினிக்கு.

அதுவரை நன்றாக இருந்தவனின் இந்த மாற்றம் குழப்பத்தைக் கொடுக்க.. சுற்றி இருந்தவர்களின் கவனம் சிதறுவதை கண்டவள், ஷைலுவை பார்க்க... அவளோ கண்களில் நீர் வடிய கேவலுடன்..

"ஏன் அவங்களுக்கு என்ன ஆச்சு? நல்லாதானே இருக்காங்க... அய்யய்யோ நான் உடனே அவங்களை பார்க்கணுமே.." என்று புலம்ப தொடங்கினாள்.

கடுமையாக "போதும்... அவங்களை பார்க்கணும் என்ற எண்ணத்தை இத்தோட மறந்துடு ஷைலு... அவங்க மனசு முழுக்க உன் மேல வெறுப்பு தான் இருக்கு..." என்றவனை இடைமறித்த மினி..

"ப்ரிதீவ் சார்..., என்ன இது..! எல்லோரும் நம்மையே பார்க்கிறாங்க, உங்களுக்கு என்ன ஆச்சு?" என்றதும், தன்னை சுற்றிலும் பார்த்துவிட்டு, தன்னுடைய தனி அறைக்கு அவர்களை அழைத்து சென்றான்.

அதற்குள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு "ஷைலு, நான் கோபப்பட்டதுக்கு சாரி. தப்பை சுட்டிக் காட்டுபவன் தான் நல்ல நண்பனாக இருக்க முடியும்.. அதான் கொஞ்சம் கடுமையா பேசிட்டேன்... நேத்திலேருந்து அவங்க படும் பாட்டை பக்கத்தில இருந்து பார்த்தேனா, அதான் அது கோபமாய் மா..றி சாரிம்மா... நான் இதெல்லாம்தான் நடக்க கூடாதுன்னு நினைச்சேன்.. அதனாலதான் இப்போ என்னையும் மீற... சாரி... ஓகே அதை விடு.."

"நீங்க அவங்க கூட இருந்தீங்களா? ஏன்... எதுக்கு? ப்ரிதீவ்... நான்

உடனே அவங்களை பார்க்கணும், அவங்ககிட்ட மன்னிப்பு கேட்கணும். எங்க அப்பா என்னை புரிஞ்சுக்குவார். வாங்க வீட்டுக்கு போகலாம் ப்ளீஸ்... எனக்கு படபடன்னு இருக்கு... நான் இப்போ போய் நின்னா கூட, திட்டிட்டு என்னை ஏத்துப்பாங்க, எனக்கு தெரியும்.. நான் அவங்களோட உயிர்... வாங்க போகலாம் ப்ளீஸ்.. ப்ளீஸ்...” என்று தன்னையும் மறந்து கெஞ்ச தொடங்கினாள் ஷைலு.

அவளை பரிதாபமாக பார்த்தவன் “ஷைலஜா.., எல்லா தப்புக்கும் மன்னிப்பை எதிர்பார்க்காதே... இது ஒண்ணும் சாதாரண தப்பில்லை, நீ கேட்ட உடனே அவங்க மன்னிக்கிறதுக்கு...! அவங்க உன்னால ரொம்பவே நொந்து போய் இருக்காங்க. நீ செய்த துரோகத்தை தாங்குற சக்தி அவங்களுக்கு இல்லை. நேற்றில் இருந்து உங்க அப்பா ‘அவ ஏன் இப்படி செஞ்சா’ன்னு திரும்ப திரும்ப அது ஒண்ணையே சொல்லிப் புலம்புறார்.

ரொம்பவே மனசொடிஞ்சு போய் எங்க அப்பா அம்மாவோட முகம் பார்க்கும் திராணி கூட இல்லாம, உங்க அப்பாவை கூனிக் குறுக வச்சுட்ட ஷைலு. ஆனா கேள்வி கேட்க வேண்டிய என்னோட அப்பா அம்மா தான் கூடவே இருந்து அவங்களை தேற்றினாங்க... இப்போ அவங்க எங்க வீட்டில் தான் இருக்கிறாங்க..”

“என்ன சொல்லுறீங்க.. உங்க வீட்டுலையா...! ஏன்..? என்ன ஆச்சு...எதுக்கு அங்க இருக்குறாங்க..?”

“நான் தான் சொன்னேனே... மருமகனாய் இருந்தாதான் உறவா... நான் மகனா இருந்துட்டு போறேன்... போகுது விடு.. உன் நிலையும் எனக்கு புரியுது, கொஞ்ச நாள் பொறு. அவங்க கோபம் குறையட்டும்... நானே உன்னையும் ஜனாவையும் கூட்டிட்டு போய் அவங்களோட சேர்த்து வைக்கிறேன்.. ஓகேவா..”

கண்ணீர் மல்க தலையை அசைத்தவள் “ப்ரிதீவ்.. அங்கே யாருக்கும் ஒண்ணும் இல்லையே.? அவங்க ஏன் உங்க வீட்டில் இருக்கணும்?”

“யாருக்கும் ஒண்ணும் இல்லை... பொண்ணு ஓடிப்போனா எவ்வளோ அசிங்கம்? ஒவ்வொருத்தரும் பார்க்குற பார்வையையும், கேட்குற கேள்வியையும் தாங்க முடியாது இல்ல, அதான் கொஞ்ச நாள் ஆறுதலுக்கு எங்க வீட்டில் இருக்கட்டும்னு நினைத்தோம்..”

என்ன பேசுவது என்று தெரியாமல் “தேங்க்ஸ் ப்ரிதீவ்...”

“என்னிடம் தேங்க்ஸ் என்ற வார்த்தையை தான் அதிகம் சொல்லி இருக்க...” என்றவன் பேச்சை மாற்றும் விதமாக..

“அதை விடு... உன் தங்கைங்க இருக்குதுங்களே, அம்மாடியோவ் சரியான வாலுங்க... எனக்கு ரெண்டு அற்புதமான குட்டி தங்கைங்க கிடைச்சு இருக்காங்க.. அதுக்கு நான் தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்... உங்க வீட்டுக்கு மருமகனா வந்து இருந்தா கூட ஒரு இடைவெளி இருந்து இருக்கும்.. இப்போ பார்.... முன்னாடியெல்லாம் உங்க அம்மா என்கூட பேசவே தயங்குவாங்க... இப்போ என்னை கேக்காம எதுவும் செய்யறதில்ல..” என்றான் பெருமையாக.

‘உறவுகளே வேண்டாம் என்று சொல்லும் ஒருத்தன்... உறவுகள் மட்டுமே போதும் என்று சொல்லும் இவன்... கடவுளே... என் வீட்டில் என் இடத்தை ஒரே நாளில் இவன் பறித்து விட்டானே.. அப்போ என் அம்மா அப்பாவுக்கு நான் வேண்டாமா? என்னை ஒதுக்கியே விட்டார்களா? நான் இல்லாம அவர்களால் இருக்க முடியுமா..?

அந்த வீட்டின் ஜீவனே நான் தான் என்று சொல்லுவாங்களே..? இந்த ஒரே ஒரு தவறுக்காக, காலம் முழுவதும் என்னை ஒதுக்கி தண்டனை கொடுப்பாங்களா? இதற்கு நானா காரணம்.? ஜனா தானே...!! இழப்புகள் எனக்கு..., சந்தோஷம் அவனுக்கா..? இது என்ன நியாயம்..? அவன் மட்டும் எப்படி நிம்மதியா இருக்கலாம்..? அத்தனை சீக்கிரம் இந்த நிம்மதியை அவனுக்கு நிலைக்க விட மாட்டேன்...’ என்று மனதுக்குள் குமுறியவளின் முகம் பாறைக்கு ஒப்பாய் இறுகி சவமாய் வெளுத்தது.

அடுத்து வந்த இரு நாட்களும் ஜனாவை பரவசத்தில் ஆழ்த்தியது.. ஒரு நொடி கூட ஷைலுவை பிரிந்தான் இல்லை.. தான் கனவு கண்ட வாழ்க்கை கை சேர்ந்த பூரிப்பில், ஒவ்வொரு நொடியையும் அவள் கூடவே கழித்தான்.. ஆனால் ஷைலு அதற்கு நேர்மாறான நிலையில் இருந்தாள்... புன்னகை மின்னும் ஜனாவின் முகத்தைப் பார்க்கப் பார்க்க, மேலும் மேலும் வன்மம் கூடியது.

இவளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளாமல், அவனை பற்றி மட்டுமே யோசித்தது வேதனையை கொடுக்க.., ஹாலில் இருந்த வால்போஸ்டர் வேறு தன் பங்குக்கு அவளை வருத்தி, அந்த வீட்டையே நரகமாக உணர வைத்தது. . கூடவே அவன் அருகாமை... மனம் ஒப்பாத தாம்பத்யம் என்று மனதளவில் பெரிதாக அடிபட்டு போனாள்.

அந்த ஞாயிறு... அவன் அவளை தன் இல்லத்திற்கு அழைத்து போய்

ஃபாதரை அறிமுகப்படுத்திய போது கூட, யாரோ என்பது போல ஒட்டாத பாவனையில் இருந்தாள்.. 'அக்கா அக்கா' என்று அவளையே சுற்றி வந்த சுரேஷ் கூட அவள் கவனத்தில் பதியவில்லை.

அவள் மனதில் இருந்தது ஒன்று தான், ஜனாவை நிச்சயம் பிரிய வேண்டும், அதற்கு முன், தான் பட்ட வேதனைகளை அவனும் கொஞ்சமாவது அனுபவிக்க வேண்டும். அதுவும் முடியவில்லை என்றால்,அவன் தன்னிடம் நடந்துக் கொண்ட முறைகளை,அவை சரியானவையல்ல என்று அவனைக் கொஞ்சமாவது உணர வைக்க வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருந்ததே ஒழிய, அவனை மன்னிக்க வேண்டும் என்று தோன்றவே இல்லை.

எப்போது திங்கள் வரும் என்று தவம் இருந்தவளுக்கு, கல்லூரியும் ஆறுதல் தரவில்லை... நிலாவும் சஞ்சனாவும் இவளை அறவே தவிர்த்தனர்... தன்னை புரிந்துக்கொள்ள மறுக்கிறார்களே என்ற கோபம் வேறு படுத்தியது.. அந்த கோபத்தையும், இதுவும் ஜனாவால் தான் என்று பழியின் சுமையை அவன் தலையிலேயே ஏற்றி வைத்தாள்... விரக்தியில் மனம் சோர்ந்து போனது.

ஒரு வாரம் இப்படியே கடந்து போனது.. தோழிகளின் வெறுப்பு மனதை சுமையாய் அழுத்தியது.. மினி மட்டுமே அவளுக்கு தோள் கொடுத்தாள். ப்ரிதீவ் ஓரளவு அவள் நிலை புரிந்தது போல கொஞ்சம் கனிவாக நடக்க ஆரம்பித்தான்.. அவள் பெற்றோர் மீது அவனுக்கு இருந்த பாசம்.. அவளுக்கு அவன் மேல் பெரும் மதிப்பை கொடுத்து... அவன் நட்பை தயங்காமல் ஏற்கவும் வைத்தது.

ப்ரிதீவ்க்கு ஷைலு எடுப்பார் கைப்பிள்ளையாக தெரிந்தாள்.. சுயபுத்தி இல்லாதவள்.. பெற்றோர் பாசத்துக்கும்.. ஜனாவின் அன்புக்கும் இடையில் பேலன்ஸ் பண்ண தெரியாமல், தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்புகிறாள்.. எனவே, பேசிப்பேசி அவள் மனதில் உள்ள குழப்பத்தை தெளிவு பண்ண வேண்டும் என்று நினைத்தான்.

மினியை பற்றி பெரிய அபிப்ராயம் அவனுக்கு தோன்றவில்லை.. ஷைலுவின் குழப்பத்தை மினி தான் அதிகம் ஆக்குகிறாள் என்று தோன்றியது.. அதுவே அவன் மனதில் மினி பல படிகள் கீழிறங்கி போகவும் வைத்தது.. ஷைலுவின் வாழ்க்கைக்கு தன்னால் ஏதாவது செய்ய முடியுமா என்று யோசித்தான். அன்றும் அவள் குடும்பத்தை பற்றிய பேச்சு வர..

"பாவம் ஷைலஜா, உன் அப்பா அம்மா.. இந்த பத்து நாளா அவங்க

என்னை தான் ஆதரவா நினைக்கிறாங்க... இது உன்னால் தானே.. உங்க அப்பா என்னை மட்டும் தான் பற்றுக்கோலா நினைக்கிறார்... உன் மொத்த குடும்பமும் என்னை கொண்டாடுறாங்க... இந்த பாசம், பெற்றோரைத் தவிர எந்த சொந்தமுமே இல்லாமல் இருந்தவனுக்கு தான் புரியும்... மகனே இல்லாதவங்களுக்கு மகனாய் இருப்பதும் சந்தோஷமா தான் இருக்கு ஷைலஜா..” என்றவனை கண்களில் பொறாமை மின்ன பார்த்தவள்...

அழுகையில் உதடு பிதுங்க “அவங்க என்னை பற்றி நினைக்கறதே இல்லையா? ஆனா என்னால் அவங்களை மறக்க முடியலையே!”

“ஷைலு, அவங்களும் உன்னை மறக்கலை.. என்ன.. உன்னோட நினைப்பு வந்தாலே, அவங்களுக்கு சந்தோஷத்தை கொடுக்குறதுக்கு பதிலா, வெறும் கோபத்தை தான் கொடுக்குது. நீ செஞ்சது ஒண்ணும் சின்ன தப்பு இல்லையே..”

“அதுக்காக என்னை அப்படியே வெறுத்து ஒதுக்கிடுவாங்களா... அவங்களுக்கு நான் வேண்டாமா..?”

அவள் முகமே அவள் உள்ளத்து சோகத்தை சொல்ல... “ஷைலு, நான் திரும்ப திரும்ப கேட்கிறேனேன்னு தப்பா நினைக்காதே.. ஏன் இந்த அவசர கல்யாணம்...? ஜனாவும் நல்லவராக தானே இருக்கிறார்... அப்புறம் ஏன் அவரை வேண்டாம் என்று முதல்ல முடிவு செஞ்ச...? நான் அவரை ரெண்டே ரெண்டு முறை தான் பார்த்து இருக்கேன், எனக்கு தெரிஞ்சவரைக்கும் அவரை போல ஒரு தங்கமான மனுஷன் கிடைப்பது கஷ்டம்... எப்படி அவரை வேண்டாம்னு முடிவு பண்ண?.”

அவன் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் ஷைலு தலைகுனிய... அவள் நிலை பொறுக்க இயலாத மினி “சார், அதான் தங்கமான குணம்னு நீங்களே சொல்லிட்டீங்களே..., தங்கத்தை கையில் வச்சு இருப்பது ரொம்ப கஷ்டமாச்சே... குணம் மட்டும் தங்கமா இருந்தா வாழ்க்கைக்கு போதாது சாரே... ரொம்ப ரொம்ப நல்லவனை காலம் பூரா கட்டி மேய்க்கறது ரொம்ப கஷ்டம்..” என்றவளை கொன்று விடுவது போல பார்த்தவன்..

“அப்போ உங்களுக்கு எல்லாம் வாழ்க்கைக்கு என்ன தான் தேவை யாமினி? படிப்பு, பணம், அழகு, இதெல்லாம் இருந்து கெட்டவனா இருந்தா கூட சந்தோஷமா வாழ்ந்துடுவீங்க...!! எதுவுமே இல்லாதவன் நல்லவனா இருந்தா கூட வாழமாட்டீங்க, அப்படித்தானே...? உங்களை மாதிரி ஆளுங்களால தான் பசங்க பொண்ணுங்களை

ஏமாத்துறாங்க... தோ பார் நீ.. நீ இனிமேல் பேசாதே..” என்று மினியை கடிந்தவன்

“நீ சொல்லு ஷைலு.. உனக்கு என்னோடு நடந்த நிச்சயத்திலும் விருப்பம் இருந்த மாதிரி தெரியலை... ஏன்னா நீ ஒரு தடவை கூட என்கிட்டே முகம் கொடுத்து பேசலை... அவ்வளவு ஏன்.. ஒரு சிரிப்பு கூட கிடையாது.. அப்புறம் எதுக்கு என்னோடான கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டே.?.”நீ பதில் சொல்லியே ஆக வேண்டும் என்ற பாவனையில் கேட்டான்.

ஷைலுவால் கண்டிப்பாக அவனை சமாளிக்க முடியாது என்று நினைத்த மினி, வேறு வழி இல்லாமல் “அவ எங்கே ஒத்துக்கிட்டா.? இன்ஃபாக்ட் அவ உங்க போட்டோவை கூட பார்க்கலை.. நான் தான் கட்டாயப்படுத்தி அவளை ஒத்துக்க வச்சேன்... சூழ்நிலை அப்படி..” என்று சொன்ன மினியை எரித்து விடுவது போல முறைத்தவன்..

கட்டுக்கடங்காத கோபத்துடன் “ஏய்.. உனக்கு அறிவு இல்ல... நான் உன்னை பேச வேண்டாம்னு சொன்னேன், எதையும் யோசிச்சு செய்ய மாட்டியா..? ஒருவனை விரும்பிட்டு, இன்னொருவனை கல்யாணம் பண்ணினா, அவங்க வாழ்க்கை என்ன ஆகும்னு நினைச்சு பார்த்தியா? மூணு பேரோட வாழ்க்கையும் வீணா போகுமே.. அடுத்தவங்க லைஃப்ல முடிவெடுக்குற உரிமையை உனக்கு யார் கொடுத்தா.?.”

“ப்ரிதீவ்.. அவ ஒண்ணும்..”

“நீ சும்மா இரு ஷைலஜா.., இவ இருக்காளே.., இவளால் தான் நீ வீணாக போற”

“என்ன.. இப்போ எதுக்கு டென்ஷன் ஆகுறீங்க... யார் வாழ்க்கையையும் கெடுக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை... உங்களை விட இவ மேல எனக்கு அக்கறை நிறையவே இருக்கு. காதலிக்கற அத்தனை பேர் காதலுமா சக்சஸ் ஆகுது?

பத்துல எட்டு பெயிலியர் கேஸ் தான்.. அவங்க எல்லாம் வேற ஒருத்தரை கல்யாணம் பண்ணிக்கலையா.., இல்லை நிம்மதியா வாழலையா? பார்க்கப்போனா அவங்க தான் ரொம்ப சந்தோஷமா இருக்காங்க... இன்னைய காலகட்டத்துல காதல் எல்லாம் ஜஸ்ட் பாசிங் க்ளௌட்.. கொஞ்ச நாள் பீல் பண்ணுவாங்க... அதுக்கு அப்புறம் அவங்கவங்க வழியைப் பார்த்துக்கிட்டு போய்டுவாங்க... அதையே நினைச்சுக்கிட்டு, வாழ்நாள் முழுவதையும் வீணாக்க முடியாது.”

“ஏய்.. நிறுத்து... ஃபீலிங் பத்தி நீ பேசாதே.. என்னை பத்தி நீ யோசிச்சியா? இடையில் நீ என்னோட வாழ்க்கையிலும் கேம் ஆடியிருக்க... உனக்கு யார் அந்த உரிமையை கொடுத்தா?”

“இதென்ன வம்பா இருக்கு..! நான் என்னோட ஃபிரெண்டை பத்தி மட்டும் தான் யோசிக்க முடியும், உங்களை பத்தி நான் ஏன் யோசிக்கணும்.?”

“ஏய்... செய்யுறதெல்லாம் செய்துட்டு, நான் ஏன் யோசிக்கணும்னா கேட்குறே...? ஷைலுவுக்கு நீ ஃபிரெண்டு, எனக்கு யாரு..?.. உன் ஃபிரெண்ட்டுக்கு நல்லது செய்யணும்னு நினைச்சே சரி, ஆனா உன் ஃபிரெண்டால பாதிக்கப்படுவானே ஒருத்தன், அவனும் மனுஷன் தானே, யார் எக்கேடு கெட்டா எனக்கென்னன்னு நினைப்பு...! நீயும் உன் யோசனையும்..! நீ யோசிச்ச லட்சணம் ரொம்ப நல்லா இருக்கு...

ஃபிரெண்டு காதலை வெட்டி விடுறது தான் நல்லது செய்றதா? காதல்னா என்னன்னு தெரியுமா? அது கொடுக்கும் வலி புரியுமா? அடுத்தவங்க காதலை சுலபமா பிரிச்சு விடுற, உனக்கெங்கே அதெல்லாம் புரிய போகுது...! நீயும் காதலிச்சு, அது ஃபெயிலியர் ஆனா தான் உனக்கும் புத்தி வரும்...”

“அய்யா சாமி... எனக்கு அந்த நிலைமை வரவே வராது. அதான் நீங்களே சொல்லிட்டீங்களே, காதல்னா வலின்னு...! அந்த கருமம் பிடிச்ச வலி எனக்கு ஒரு நாளும் வேண்டாம்..”

“அடச்சீ.. உனக்கு வேண்டாம்னா போ... அதுக்கு எதுக்கு அடுத்தவங்க காதலில் மூக்கை நுழைக்கிற..? பாவம் ஜனா மாதிரி ஒரு மனுஷனுக்கு, உன்னால் எப்படி துரோகம் செய்ய முடியுது...? நீங்க எதிர்பார்க்குற அளவு பணம் இல்லாதது, பிறந்ததும் அனாதையானது அவர் தப்பா.?.”

இவன் என்ன ஏதேதோ தப்பா புரிஞ்சுட்டு பேசுறானே என்று திகைத்தவள் “இருங்க... இருங்க... நான் ஒரு அர்த்தத்துல பேசுறேன்.. நீங்க ஒரு அர்த்தத்துல புரிஞ்சிக்கிட்டு என்கிட்டே வம்பு வாங்குறீங்க..”

“ஆமா.., உன்கிட்ட வம்பு வாங்க ரொம்ப ஆசை... மரியாதையா பீட்ஸாவை தின்னோமா, பீரோவை ரொப்பினோமான்னு சைலண்டா இரு... தயவுசெய்து நீ குறுக்குல பேசாதே.. நீ வாயை திறந்தாலே கடுப்பா இருக்கு..”

அவனின் அதிகப்படியான பேச்சு கோபத்தை கிளற, தன்னை மறந்த மினி “ஹல்லோ... நான் என்ன உன் காசிலா சாப்பிடுறேன்... விட்டா பேசிட்டே போற...? ஜனா அண்ணா மேல ரொம்பத்தான் பாசம் பொங்கி வழியுது, எங்களுக்கு இல்லாத அக்கறை...! பெருசா பேச வந்துட்டான்...! மூஞ்சியையும் முகரையும் பாரு, ஒண்ணு விட்டேன் பேந்துடும்.. ஏதோ கிண்டலா பேசுறேன்னு நானும் இவ்ளோ நேரமா பொறுமையா இருந்தா, நீயா எதையாவது நினைச்சிகிட்டு ஏழரையை கூட்டுற..! போடா ஹாஃப் பாயில்.. இனி உன்கிட்ட பேசினா கேளு..” என்றவள் ஷைலுவிடம்

“அண்ணா எப்போதாண்டி வருவார்? இந்த அட்டையோட இம்சை தாங்கலை.. நான் வெளியே போறேன்.” என்றவள் வேகமாக வெளியேற...

அந்த இடமே புயல் அடித்து ஓய்ந்தது போல இருந்தது. அதிர்ச்சியில் வாயை கூட மூடாமல் இருந்த ப்ரிதீவ்.. இவர்களின் சண்டையை தடுத்து நிறுத்த முடியாமல், திகைத்து அமர்ந்து இருந்த ஷைலுவிடம்... “சே பொண்ணா இது... இப்படி கத்துது..! லம்பாடி கெட்டா.. எனக்கென்னவோ இவதான் உன்னை யோசிக்க விடாம செய்றான்னு தோணுது... ஷைலு”

“இல்ல... உங்களுக்கு தெரியாது, அவ பாவம்... என்னால ரொம்ப கஷ்டப்பட்டுட்டா... அவளுக்கு ஜனாவை ரொம்ப பிடிக்கும்..” என சொல்லிக் கொண்டு இருக்கும்போதே ஜனாவின் போன் வர..

“ப்ரிதீவ் அவர் வந்துட்டார்... நான் கிளம்புறேன்... தயவு செய்து இனி மினிகிட்டே இப்படி பேசாதீங்க... இதுவே முதலும் கடைசியா இருக்கட்டும்.. எனக்கு அவதான் முக்கியம்.. புரிஞ்சிப்பீங்கன்னு நினைக்கிறேன்” என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டு, ஒரு தலை அசைவுடன் விடை பெற்றாள்.

ப்ரிதீவின் மனது உலைக்களமாக கொதிக்க தொடங்கியது... ‘ஷைலு என்ன லூசா..! அவளோட வாழ்க்கைக்காக பேசினா கோபிச்சுக்குறா.. நான் அந்த பீரோவை ஒரு வார்த்தை சொல்ல கூடாதாமோ... முட்டாள்.. நட்பு என்ற வார்த்தைக்கு கொஞ்சம் கூட அருகதை இல்லாதவளை நம்பி, வாழ்க்கையை வீணாக்கும் இந்த முட்டாளை என்ன தான் செய்றது?

ஜனா..., பார்கவி ஆன்ட்டிக்காகவது இவ ஒழுங்கா வாழணுமே... அதுக்கு மொதல்ல இந்த மினிக்கு ஒரு முடிவு கட்டணும்..

மனசுக்குள்ளே பேரழகின்னு நினைப்பு... இதுல இந்தம்மா காதலிக்கவே மாட்டாங்களாம்... இப்படி பேசுறதுக்குன்னே எவனாவது ஒருவன் லவ்னு இவ பின்னாடி சுத்தி ஏமாத்தி லோலோன்னு நடுரோட்டில் நாயா அலைய விட்டுட்டு போவான். அப்போ தெரியும், காதல்னா என்ன... வலின்னா என்னன்னு...!

அடுத்தவங்க வேதனை புரியாத சனியன்... அது என்ன எவனோ ஒருத்தன் வரது? இருடி நானே உனக்குப் புரிய வைக்கிறேன்... காதல் என்ன என்ன செய்யும்னு... உன்னை என் பின்னாடியே சுத்தவச்சு, நீ தான் என் வாழ்க்கைன்னு காலில் விழ வைக்கிறேன்...

சீ நான் என்ன கோபத்தில் இப்படி கண்டபடி நினைக்கிறேன்.. இருந்திருந்து இந்த மூஞ்சியையா காதலிக்கிறது.. நடிப்புக்குன்னா கூட.... ஊவேக்... சே..

அது என்ன.., நான் என்ன அவளை சீரியசாகவா காதலிக்க போறேன், நடிப்புக்கு தானே... அவ அதுக்கு கூட லாயக்கு இல்லை... இதுக்கு எல்லாம் பாவமே பார்க்க கூடாது.. என்ன பேச்சு பேசுறா...! அவளை கதற வைக்காம விட மாட்டேன்.. என்கிட்ட காதல் பிச்சை கேட்க வைக்கலை, நான் ப்ரிதீவ் இல்லை..' என்று தனது மனதிற்குள்ளாகவே இப்படியும் அப்படியும் யோசித்து போராடியவனின் கைகள், தன் இயல்பாய் ரகுவின் எண்ணை அழுத்த.. எடுத்த எதிர்முனை.

"மச்சி.., எப்படிடா இருக்கிற...? விஷயம் கேள்விப்பட்டேன்.. உன்கிட்ட பேசவே சங்கடமா இருந்தது.. எப்படி மச்சி இருக்கிற.?." என்றான் ரகு

"ம்ம்ம் நல்லாவே இருக்கிறேன்.." என்றவனின் குரலில் இருந்த சோர்வு, ரகுவின் மனதை வாட்ட..

"டேய் சதீஷுக்கு அப்படி சொன்ன.., இந்த ஷைலஜாவை மட்டும் ஏண்டா விட்ட.?."

"ம்ம்ச் விடுடா.. அவ விரும்பி இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கலை.. அவ்ளோ ஏன்.. கல்யாணத்தை நிறுத்தணும்னு சொல்லி என்கிட்டே பேச வந்தப்போ தான் முதல் தடவையா அவ என் முகத்தை பார்த்து கண்ணை பார்த்து பேசினா.. அவ ஜனாவை ரொம்ப லவ் பண்ணுறா.. என்னிடம் எந்த உணர்வும் தோன்றாத பெண்ணை வாட்டி எடுக்க நான் ஒண்ணும் சைக்கோ இல்லை"

“அதுக்கு.. நீ என்னடா பாவம் பண்ணினே..? இதை அப்படியே விட்டுடுவியா..? நீ என்ன இளிச்சவாயா..? யார் அந்த ஜனா..? இவங்களை நீ சும்மா விட்டது தப்பு மச்சான்..”

“ரகு, ஆரம்பத்துல எனக்கும் அதிகமாவே கோபம் இருந்தது.. ஜனா அனாதைன்னு அவ சொன்னப்போ கொஞ்சம் பாவமாவும் இருந்தது.. அவ்ளோ தான்.. கல்யாணத்தை நிறுத்தி இரண்டு பேரையும் அசிங்கப்படுத்தணும்னு தான் போனேன்.. நான் போன அப்புறம் தான் ஜனாவே கோவிலுக்கு வந்தார்... கல்யாணம் முடிஞ்சு கோவிலை விட்டு போகும் வரை நான் அவங்களை தொடர்ந்தேன்.. கல்யாணத்துல வாழ்த்தையும் சொன்னேன்.. அவரை எனக்கு முன்னமே தெரியும்டா..”

“தெரிஞ்சவரா.. எப்படிடா?..”

“அது கூட விதியோட விளையாட்டு தான் போல...! அன்னிக்கு நீ போன் பண்ணப்போ, இங்கே கஃபேல என் எதிரே தான் இருந்தார்..”

“ஓ... “

“நான் ஷைலுவை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுறதுக்கு பல காரணம் இருந்தது.. ஆனா கண்டிப்பா காதல் இல்லை.. ஆனா ஜனா ஷைலுவை ஷைலுக்காகவே விரும்புறார்.. அவர்கிட்ட காதல் மட்டும் தான் இருக்கு.. ஷைலுவை தன் உலகமாகவே பார்க்குறார். அவளை தவிர, வேற யாருமே அவரோட கண்ணுக்கு தெரியலை... அவ மட்டுமே போதும்னு நினைக்கிற ஒரு ஜீவன்... அன்னிக்கு ஷைலு வரும் வரைக்கும் அவர் முகத்தில் இருந்த தவிப்பு.. சான்சே இல்லை.

அதிலும் அவர் ரொம்ப இன்ட்ரெஸ்டிங் கேரக்டர் தெரியுமா.. எல்லோரையும் தலையால் தண்ணி குடிக்க வச்சுட்டார்.. கல்யாணத்துக்கு வந்தவங்களுக்கு சாப்பாடு போடணும்னு கூட தெரியலை.. நீங்க எடுத்துட்டு வந்த மதிய சாப்பாடு வீணாக போகாதான்னு கேக்குறார்..”

“அப்போ வந்தவங்களுக்கு சோறு கூட போட முடியாத கப்பி பையன்னு சொல்லு..”

“அப்படி இல்லைடா.. பொதுவா பார்த்தா, அவங்க ஒவ்வொருத்தரும் எடுத்துட்டு வந்த சாப்பாட்டை, முப்பது பேர் என்று கணக்கு பண்ணினாலும், முப்பது சாப்பாடு வீணா போகுது தானே.. பசியில் வாடுற யாருக்கோ போக வேண்டிய உணவு தானே.. அந்த நிலையில்

கூட அவர் அதைப்பற்றி யோசிக்கிறார்னா, அவரோட சிறு வயது பசி அனுபவங்கள் எப்படி இருக்கும்னு நினைச்சு பாரு. ”

“ஆமா மச்சி.., நீ சொல்லுறது சரிதான்.. நான் அப்படி யோசிக்கலை.. இவரைப்போய் ஏமாத்த அந்த பொண்ணுக்கு எப்படிடா மனசு வந்தது?.”

“எனக்கும் அதுதான் புரியலை... ஆனா ஷைலு மேல தப்புன்னு தோணலை. அவ கூடவே ஒரு குரங்கு குட்டி சுத்துது... அது தான் அவளை குழப்பி விட்டு இருக்கும்..”

“யார்டா அது?”

“அது ஒரு பீரோ மாப்ஸ்.. யானை கட்டி போரடிச்சாங்கன்னு சொல்லுவாங்க இல்ல..., அவங்களால் கூட இவளை கட்டி சோறு போட முடியாது.. அப்படி ஒரு அரவை மிஷின். பார்க்கும்போது எல்லாம் கிரைண்டரை ஓட விட்டுட்டே இருப்பா..”

“பெரிய ட்ரம்மா இருக்கும் போலவே..”

“நீ ஏண்டா அவளை திட்டுற.. அதான் நான் திட்டுறேன் இல்ல..”

“ஒ.. நான் திட்ட கூடாதா.. நீ ரொம்ப நல்லவன்டா.. சரி நீ சொல்லு.. அவளை பத்தி.”

“அவளை பத்தியா.. அவளுக்கு மனசுல, தான் கிளியோபாட்ராவுக்கு கசின் சிஸ்டர்னு நினைப்பு, அம்மணி சொல்லுறா, காதலிக்க எந்த தகுதியும் தேவை இல்லையாம், ஆனா கல்யாணம் பண்ண, படிப்பு, அழகு, துட்டு.. எல்லாம் வேணுமாம்.. என்னமா அளந்து விடுறா தெரியுமா..! பணம் தான் முக்கியமாம். என்கிட்டயே இவ்ளோ பேசுறாளே, ஷைலுவை எவ்வளோ குழப்பி விட்டு இருப்பா ?”

“பெரிய தில்லாலங்கடியா இருப்பா போல, அவளை சும்மா விடாதே மச்சான்..”

“நானும் அதான் நினைக்கிறேன்.. ஆனா அவ லெவலுக்கு நாம இறங்கி போகணுமான்னு யோசிக்கிறேன்..”

“மச்சி, நிச்சயம் அவளை சும்மா விடக்கூடாது. இவளை மாதிரி பொண்ணுங்க இருக்கறதால் தான் சதீஷ் மாதிரி ஆளுங்க பாதிக்கப்படுறாங்க.. இவளுக்கு எல்லாம் தரை அளவு லோக்கலா இறங்கலாம்..”

“அப்போ தப்பு இல்லைங்குறியா..”

“தப்பே இல்லை மச்சி..” என்றவனிடம் சிறிது பேசிவிட்டு போனை வைத்துவிட்டு, தீவிரமாக மனசுக்குள் அலசி ஆராய்ந்து ஒரு முடிவெடுத்தவன்.

எதிரே இல்லாத மினியிடம் “எப்படி.. எப்படி.. நீ காதலிக்கவே மாட்டியா.. உன்னை நான் காதலிக்க வைக்கிறேன்.. நான்தான் உன் உலகம்னு சொல்ல வைக்கிறேன்... பார்ப்போம்டி நீயா இல்லை நானான்னு..! வரேன் பீரோ காத்திரு..” என்றான்

கண்ணீரோடு போராடி வென்று வரும் புன்னகையே உலகில் அழகானது...

மினிக்கோ அடுத்து வந்த நாட்கள் வீக்கெண்டாக போய்விட.. அடுத்து வந்த மூன்று நாட்களும் உலையாக கொதித்தது மனது. ஒரு நண்பனாக ப்ரிதீவை அவளுக்கு மிகவும் பிடித்தது.. எப்பொழுதும் சிரித்துக்கொண்டே தன்னை சுற்றி இருப்பவர்களையும் சந்தோஷப்படுத்தி.. சிக்கலான நிலையை கூட சுமூகமாக கையாண்டு என்று அவனின் சிறப்புகளை எண்ணி அவனை உயர்வாக மதித்து இருந்தாள்..

அவனுக்கு தன் மேல் கடுப்பு இருக்கிறது என்று தெரியும், ஆனா ஏன் என்று தெரியாவிட்டலும் கூட அதை ஷைலுவுக்காக பெரிதுபடுத்தாமல் இருந்தாள்..

அப்படி இருந்தும் தன்னை இப்படி அசிங்கப்படுத்தி விட்டானே என்று தவித்தாள். ப்ரிதீவ் இருக்கும் திசைக்கே கும்பிடு போட்டு போக வேண்டும்.. இந்த நட்பு சரி வராது.. ஷைலுவிடமும் பேசி விட வேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால் அதை செயல்படுத்த தான் இயலவில்லை.. திங்கள் அன்று காலையிலேயே அவளுக்காக கல்லூரி வாசலில் காத்திருந்தான் ப்ரிதீவ்.

அவனை கண்டுக் கொள்ளாமல் தாண்டி போனவளை, மென்மையாக “யாமினி.. ஒரு நிமிஷம்..” என்றான்.

அவள் கண்டு கொள்ளாத பாவனையில் மேலும் முன்னேற, அவளுக்கு குறுக்காக வழி மறித்தவன்.. “யாமினி.. ப்ளீஸ் நான் உன்கிட்ட

பேசணும், ஒரு நிமிஷம் நான் சொல்லுவதை கேள்..”

கடுமையாக பார்த்தபடி “ஓ என் பெயர் யாமினியா..! பீரோன்னு தானே சொல்லுவீங்க, இது என்ன புதுசா.?.”

“ஹேய்.. அது விளையாட்டுக்கு ஃபிரெண்டு என்ற உரிமையில் நான் சொல்வேன், ஏன் நான் உன்னை அப்படி கூப்பிடக் கூடாதா?.”

அவனை சந்தேகமாக பார்த்தபடி “நான் உங்களுக்கு ஃபிரெண்டா? ஏதோ சரி இல்லையே..! உங்களுக்கு இப்போ என்ன வேணும்.?”

“எனக்கு ஒண்ணும் வேண்டாம், ஒரு சாரி மட்டும் சொல்லணும்..”
“ஆங்... அப்படியா..? சரி அப்போ சொல்லிட்டு போங்க..”

“என்ன மினி நீ... இரு இரு நான் ஏன் சாரி சொல்லணும்.? நீயும் தானே தப்பு பண்ணி இருக்க.., என் லைஃப்ல நீ செய்தது சரி இல்லை தானே.. அதுவும் ஜனா விசயத்தில்.. அவர் ஷைலுவுக்கு ஏத்தவர் இல்லைன்னு நீ அவளை தப்பா தானே கைட் பண்ணினே..

ஃபிரெண்டு தப்பு பண்ணா, அதை சரி பண்ண பார்க்கணும்... அதை விட்டுட்டு மேலும் தப்பு செய்ய தூண்ட கூடாது.. அது தப்பு இல்லையா.. உன் பக்கத்தில் இருந்து மட்டும் தானே யோசிச்ச அது தப்பு இல்லையா..? அதான் எல்லாம் சேர்ந்து கோபத்தில் வார்த்தையை விட்டுட்டேன்.. அதுக்கு போய்...”

“இங்கே பாருங்க.. நீங்க நினைக்கிற மாதிரி, ஜனா அண்ணாவை பிடிக்காம நான் அப்படி செய்யல..”

“அதை விடு... எனக்கு புரியுது.. நீ என்னை மன்னிச்சதுக்கு தேங்க்ஸ். ஈவ்னிங் கஃபேல மீட் பண்ணலாம்.. ஓகே.” என சொல்லிவிட்டு அவளை பார்த்தவாறே வேகமாக நடை போட்டான்.

திகைத்தவளாக “ப்ரிதீவ், நான் எப்போ மன்னிச்சேன்.? இது போங்காட்டம்..”

தலையை கோதியபடி “பீரோ, எல்லாம் மன்னிச்சிட்ட, எனக்கு தெரியும்.. இல்லைன்னா பேசியே இருக்க மாட்ட.. பாய்..” என்றபடி ஓடினான்.

“ரௌடி.. சொல்லுறதை கேக்காம போறானே..” என்று சொன்னவளின் மனதில் பாரமாக குற்ற உணர்வு நின்றது.. ‘ஆம்.. ப்ரிதீவ்வின் வாழ்க்கையை பற்றி முடிவு எடுக்க தான் யார்..? அவனை பற்றி நான் ஏன் யோசிக்கவில்லை.. அதுவும் அவன் சொல்லுவது போல, ஜனா

அண்ணன் ஷைலுக்கு பொருத்தம் இல்லை என்பதை அவள் மனதில் பதிய வைத்தது தானே அவள் வாழ்வையே திசை மாற்றி இருக்கு..

ஜனா அண்ணா அவளுக்கு ஏற்றவர்தான் என்ற கோணத்தில் பார்த்திருந்தால்.. அவளுக்கு வேறு விதமான யோசனையை சொல்லி இருப்போமோ.. இல்லை விஷயத்தை பெரியவங்க காதுக்கு கொண்டு போய் இருக்கலாமோ.. அதை தானே ப்ரிதீவ் கோபமாக வெளிப்படுத்தினார்.. இதில் தப்பு என்ன இருக்கு..? என்று தனக்கு தானே சமாதானம் சொன்னவளுக்கு, அவன் மேல் இருந்த கோபம் காணாமல் போய் இருந்தது.

ப்ரிதீவ் செய்த மூளை சலவை நன்கு வேலை செய்தது.. அவன் தவறுகளை மன்னித்து.. அவன் பக்க நியாயங்களை யோசித்து... அவனோடு நட்புக் கரம் நீட்டும் அளவிற்கு மனதளவில் மாற்றத்தை கொண்டு வந்தாள்... பழையபடி ப்ரிதீவ்வை சந்திக்கவும் சென்றாள் .

கல்லூரியில் ஷைலுவின் அமைதியும், அவளின் முக வாட்டமும் மினியின் மனதை உறுத்தியது.

தொடர்ந்து அவளை கவனிக்க... நிலா, சஞ்சனாவின் ஒதுக்கம் புரிந்தாலும், ஷைலுவே அவர்களை சமாதானம் செய்யட்டும் என்று இருந்தாள்.

ப்ரிதீவ் விசயத்தில் அவன் நன்றாக பழகினாலும்.. புதிதாக அவனிடம் ஒரு மாற்றத்தை உணர்ந்தாள்.. அலைபாயும் கண்களில் ஒரு திருட்டுத்தனம் தெரிந்தது.. அவனது விளையாட்டு புத்தியை எண்ணி, அதை கண்டுக் கொள்ளாமல் விட்டாள்.

ஷைலுவின் முகம் மேலும் மேலும் வாட்டம் அடையவும், நிலா சஞ்சனாவின் ஒதுக்கம் அதிகரிக்கவும்... வழக்கம் போல ஷைலுவுக்காக தானே பேச வேண்டியதுதான் என்று முடிவெடுத்து, இரண்டு நாள் பொறுத்து பார்த்தவள்... அவர்கள் தனியே இருக்கும்போது அவர்களை அணுகினாள் .

“ஹாய்.. என்ன ரெண்டு எருமைகளும் ஆடிட்டோரியம் பக்கம் ஒதுங்கி இருக்கீங்க, என்ன விஷயம்..? கூப்பிட்டா நாங்களும் வருவோம் இல்ல... ஏண்டி இப்படி எங்களை விட்டுப் பிரிஞ்சு தனியாவே சுத்திக்கிட்டு இருக்கீங்க.?.”

“அதான் உனக்கு உன் மண்டை கனம் பிடிச்ச அரைலூசு இருக்கே..

அப்புறம் நாங்க என்ன தேவைக்கு.?.” என்று கடுகடுத்த நிலா முகத்தை திருப்ப..

“யே என்னடி.., நாம நாலு பேரும் ஒண்ணு தானே, திடீர்னு ஏன் பிரிச்சு பேசுற.?.”

“ஆமா நீங்க ரெண்டு பேரும் எல்லா விஷயங்களையும், எங்கக்கிட்டேயும் கலந்து பேசி, எங்களையும் சேர்த்துக்கிட்டு தானே செஞ்சீங்க... அதான் எப்பவோ எங்க ரெண்டு பேரையும் ஒதுக்கி விட்டுட்டீங்களே... அப்புறம் என்னடி... இப்போ புதுசா கரிசனம்.?”

“நிலா.., உனக்கென்ன அம்னீஷியாவா...? அதான் அதுக்கு அன்னிக்கே அவளை திட்டிட்டியே, நாங்களும் எங்க பக்கத்தையும் சொல்லிட்டோமே.. நல்லா தானே இருந்தீங்க, இப்போ என்னடி கேடு வந்துச்சு.?”

“உனக்கு ஒண்ணும் தெரியாது பாரு.. அவ கெட்டுப் போறதே உன்னால தான்... அவ வாழ்க்கையை அவளே குழப்பி.. ஒரு வழியா செட்டில் ஆகிட்டா... இப்போ போய் ப்ரிதீவ் கூட பழகுவது சரின்னு உனக்கு தோணுதா...? ஏற்கனவே ஜனா அண்ணா கோபக்காரர்.. அப்படி இருக்க அவ ஏன் வீண் வம்பை தேடுறா.. அது புரியாம நீயும் ஒத்து ஊதுற...”

“நிலா... நீ நம்ப ஷைலுவை சந்தேகப்படுறியா ?.”

“சே.. சே.. அவ நம்ப ஃபிரெண்ட்.. அவளை போய்... உனக்கே தெரியுமே, அவ எதையும் யோசிச்சு செய்ய மாட்டா, நாம சொல்லுறதையும் கேக்க மாட்டா... அவளுக்கும் ப்ரிதீவ்வுக்கும் நடுவுல நல்ல ஃபிரெண்ட்ஷிப் இருக்கலாம்,

ஆனா பார்க்குறவங்க கண்ணுக்கு அப்படித் தெரியாது.. இது புரியாம.. அவ இஷ்டத்துக்கு நடக்குறா... இதை எல்லாம் பார்த்துட்டு, என்னால வாய மூடிட்டு இருக்க முடியாது.. ஏதாவது பேசிடுவேன்.. அப்புறம் வீண் பிரச்னை தான் வரும்..”

“நிலா, அவ புரியாம செய்றான்னு நினைக்கிறியா... இல்லைடி தெரிஞ்சு திட்டம் போட்டு தான் செய்றா.. அதுக்கு காரணமும் இருக்கு. உனக்கு ஜனா அண்ணா பற்றி எதுவும் தெரியாது” என்றவள் ஆரம்பம் முதல் தனக்கு தெரிந்ததை சொல்ல... நிலா சஞ்சு இருவரும் பேச்சே இல்லாமல் திகைத்தார்கள்.

“மினி... ஆனா அண்ணாவைப் பார்த்தா அப்படி தெரியலையே, அவர் ஷைலு மேல ரொம்ப பாசமா தானே இருக்கார்... பாவம்டி அவ..” என்று சஞ்சு கண் கலங்க

“அத்தனை பிரச்சனைக்கும் அவர் ஷைலு மீது வைத்த அதீத பாசம் தான் காரணம்.. கூடவே ஷைலுவின் குணமும் ஒரு காரணம்.. அதனால் தான் ரெண்டு பேருக்கும் செட் ஆகாதுன்னு நினைச்சேன்... ஜனா அண்ணா அளவுக்கு ஷைலுவோட லவ் அவ்ளோ டெப்த் இல்லைன்னு தான் நினைச்சிட்டு இருந்தேன்... கடைசியில் அதுவும் தப்புன்னு ரொம்ப லேட்டா புரிஞ்சிக்கிட்டேன்.. அந்த குற்ற உணர்வே இப்போ என்னை வாட்டுது.. அதனால்தான் எது நடந்தாலும் ஷைலு கூட இருக்கேன்.”

“ப்ரிதீவ் சொல்வது போல நானும் என் பங்குக்கு நல்லது செய்யறதாக நினைச்சு குழப்பி விட்டு இருக்கிறேன்... அன்னைக்கு அவ பத்திரிக்கையோட அவரைப் பார்க்க போன போது என்ன நடந்ததுன்னு தெரியலை.. சும்மாவே ஜனா அண்ணா வார்த்தைகளை கத்தியா வீசுவார்... இப்போ சொல்லவே தேவையில்லை.. என்ன சொன்னாரோ என்ன நடந்ததோ.. அவ ரொம்பவே மனசொடிஞ்சு போய் இருந்தா..”

“இந்த கல்யாணம் கூட அவ விருப்பம் இல்லாமதான் நடந்தது... கிட்டத்தட்ட ஜனா அண்ணா அவளை மிரட்டி கல்யாணம் பண்ணி இருக்கார்... நான் எவ்வளோ கேட்டும், என்ன நடந்ததுன்னு அவ சொல்லலை... ஆனா அண்ணா மேல ரொம்ப கோபமா இருக்கா... அது நிச்சயம்

அவரை வெறுப்பேத்த என்ன வேணும்னாலும் செய்வா.. அதுக்கு தான் அவ ப்ரிதீவ்வை தேர்ந்து எடுத்து இருக்கா... என்ன நடந்து இருந்தாலும் அவளால அண்ணா மேல ரொம்ப நாள் கோபத்தை இழுத்து வைக்க முடியாது.. அதுக்குள்ள அவ எந்த குழப்பத்தையும் செஞ்சிட கூடாது... ”

“நீ சொலுறது சரி தான் மினி... ஆனா ஜனா அண்ணா, ப்ரிதீவ் கிட்ட அவ பழகுறதால அவ மேல சந்தேகப்பட்டா..., அவ லைஃப் என்ன ஆகுறது...?”

“நீ வேற... கடவுளே வந்து சொன்னாலும், ஜனா அண்ணா அவளை சந்தேகப்பட மாட்டார்.. என்ன ப்ரிதீவ் யாருன்னு தெரிஞ்சா கொஞ்சம் கடுப்பாவார்.. இவ அவரை வெறுப்பேத்தலாம் அவ்வளோ தான்... அதில்லாம ஜனா அண்ணாவுக்கு ப்ரிதீவ்வை பிடிக்குது... சோ பெரிய பிரச்னை வராதுன்னு தோணுது..”

“என்னடி உளறுறே.. எப்படி சந்தேகம் வராம இருக்கும்.? அவரை விட்டு இவனை கல்யாணம் பண்ண முடிவெடுத்து இருக்கிறா.. சந்தேகம் வராதா..?”

“ஆமாம், ஆனா அது அவ விரும்பி எடுத்த முடிவு இல்லையே...! அதுக்கு காரணம் ஜனா தானே.. அந்த முடிவுக்கு அவளை தள்ளி விட்டது அவர்தானே. இது அவருக்கு நல்லாவே தெரியும்.. இவளால அவரை விடமுடியாது என்று நல்லா தெரிஞ்சதாலதான் அவளை அப்படி ஆட்டி வைக்கிறார்.. அவளோட காதல் தான் அவளோட பலவீனம்னு ஜனாவுக்கு நல்லா தெரியுது.. அது தெரியாம நான் தான் சொதப்பிட்டேன்..”

“மினி.., எனக்கு ஒண்ணு புரியலை, அவர் ஷைலுவோட அப்பா அம்மாவையே ஏத்துக்காத மனுஷன்.. அவரை விடு.. இப்போ அவர் பிரச்னை இல்லை.. இந்த ப்ரிதீவ்... அவனை எப்படி நம்புறீங்க.. அதிலும் அவன் பாதிக்கப்பட்டவன், ஏதாவது வம்பு வந்தா !! அவன் முகத்தில் கள்ளத்தனம் தான் தெரியுது.. ஆளும் ட்ரெஸ்ஸும் நல்லா பூம்பூம் மாட்டுக்காரன் மாதிரி இருக்கான்.. எப்பவும் ஒரு கோணல் சிரிப்பு, என்னவோ தெரியலை, அவனைப் பார்த்தாலே எனக்கு நல்லவிதமா தோணலை, எரிச்சலா இருக்கு..”

வயிற்றை பிடித்துக்கொண்டு சிரித்த மினி “அவனுக்கு பொருத்தமான பெயர்.. அது சரி நில்ஸ்.., விருப்புக்கும் வெறுப்புக்கும் இடைவெளி கம்மியாமே..! ஷைலுவோட நிச்சயத்தப்போ நல்லவனா தெரிஞ்சவன்.. இப்போ கெட்டவனா தெரியுறானா..? ஆனா அவனுக்கு இவ்வளோ பில்ட்அப் கொடுக்காதே...

அது ஒரு அம்மாஞ்சி... அவன் என்ன ஷைலுவை லவ் பண்ணியா கல்யாணம் செய்ய ஆசைப்பட்டான்? அவன் அம்மாவுக்கு ஒரு தலையாட்டி பொம்மை தேவை.. அதுக்கு ஏத்தமாதிரி பொண்ணு தேடுனான்.. ஷைலு அந்த வகைல பொருந்தி வருவான்னு நினைச்சு இருப்பான், ஆனா அவ அப்படியில்லைன்னு தெரிஞ்சதும் இப்போ அவ மேல கடுப்பு தான் இருக்கும்.. ”

“சரிடி அந்த கடுப்புல அவன் ஏதாவது..”

“நிலா.. ப்ரிதீவ்வால் ஒரு ஈ எறும்புக்கு கூட கெடுதல் செய்ய முடியாது... அதிலும் ஷைலுவோட அப்பா அம்மாவுக்கு வேதனை தரும் எதையும் செய்ய மாட்டான்.. நான் ஆரம்பத்தில் இருந்து அவனை பார்க்கிறேன்.. அவன் அளவுக்கு டீசன்ட் ஆள் கிடைப்பது ரொம்ப கஷ்டம்... அவனுக்கு

நான் கேரன்டீ.. போதுமா...”

“பார்த்துடி அந்த காத்து கருப்புக்கு இப்படி கொடி பிடிக்குற... அவன் உன்னை பிடிச்சுக்க போறான்.. பத்திரம்..”

“சும்மா காமெடி பண்ணாதே நிலா.. அவனுக்கு என்னைக் கண்டாலே சும்மா தகதகன்னு எரியும்.. எனக்கு காதல்னாலே எரியும்.. போடி போய் படிக்குற வழிய பார்.. முதலில் கோபத்தை மூட்டை கட்டி வச்சிட்டு, ஷைலுகிட்ட போய் உங்க ஸ்மைலிங் ஃபேஸ்சை காட்டி, அவளையும் இங்க கூட்டிட்டு வாங்க.. அவ பாவம் ரொம்ப நொந்து போய் இருக்கா.. நான் இங்கேயே வெயிட் பண்ணுறேன் ”

“சரிடி சிடுமூஞ்சி.. அந்த அழுகுணி ராணியோடு வரோம்..” என்று சொன்ன நிலாவும் சஞ்சுவும் அவ்விடத்தை விட்டு போக... யோசனையாக போகும் நிலாவை பார்த்த மினி..

“ஏய்.. நிலா, ஒரு நிமிஷம் இங்கே வாயேன்..” என்றவள் அவர்கள் அருகில் வரவும், நிலாவின் முகத்தை உற்றுப் பார்த்தவள்

“நில்ஸ், இனி நீ ப்ரிதீவ் கண்ணில் படாமல் கொஞ்சம் ஜாக்கிரதையா இரு என்ன..”

நிலா குழம்பிய முகத்துடன் “ஏன்.. எதுக்கு.?.”

“எதுக்கா.. நீ வேற... நம்ம குரூப்பில் நீதான் ரொம்ப அழகு.. பத்தாததுக்கு அக்மார்க் குடும்பக் குத்துவிளக்கு வேற.. அந்த பயபுள்ள எப்பவும் மனச திறந்து வச்சுக்கிட்டு சுத்துறான், அதான் சொன்னேன்.. ஜாக்கிரதையா இரு என்ன” என சொல்லிவிட்டு ஓடியவளை

“அடிப்பாவி...” என்று கத்தியபடி துரத்தினாள் நிலா...

நாட்கள் மெல்ல நழுவின... ஷைலுவின் மனநிலையில் மட்டும் மாற்றம் இல்லை... நிலாவும் சஞ்சுவும் சகஜமாக பேசுவதால் கல்லூரிப் பொழுதுகள் ஆறுதல் அளித்தாலும் மனமோ.. சோர்வைத் தேடி அணைத்தது...

பழக்கம் இல்லாத வீட்டு வேலைகள்..., கல்லூரி..., படிப்பு..., ஜனா..., என அனைத்தையும் தனியே சமாளிக்க தெரியாமல் திணறினாள்... ஜனாவோ அவள் வேதனையை துளியும் உணராமல்... புதிதாய் திருமணம் ஆனவன்.... பிடித்த மனைவி என்று ஒவ்வொரு நொடியையும் அனுபவித்து வாழ்ந்து, ஷைலுவின் வயிற்றெரிச்சலை நன்றாகவே

கொட்டிக் கொண்டான்.

தினமும் சாயங்காலம் ஷைலுவை வீட்டுக்கு கொண்டு வந்து விடுபவன்.. அவளுடன் அரைமணி நேரம் கழித்து விட்டு, திரும்ப வேலையை பார்க்கச் சென்றால், இரவு பத்துமணிக்கு மேல் தான் திரும்புவான்... அன்று ஷைலு அவசர அவசரமாக இரவு உணவு வேலை, மற்ற இதர வேலைகளை முடித்தவள்... மறுநாள் இருந்த அரியர்ஸ் தேர்வின் பயம் துரத்த... களைப்பை கவனத்தில் எடுக்காமல், மனதை ஒருநிலைப்படுத்தி பாடத்தை படிக்க ஆரம்பித்தாள்.

சற்று நேரத்தில் ஜனா வரும் ஆரவாரம் கேக்க... விழிகளை கடிகாரத்தில் பதியவிட்டபடி... 'ஏழு மணி தானே ஆகுது,அதுக்குள்ளே என்ன...?' என்று யோசிக்க.. அதற்குள் வேகமாக அவளை நெருங்கி அருகே அமர்ந்தவன்.., அவள் கையில் இருந்த புத்தகத்தை வாங்கி எட்ட வைத்துவிட்டு...

"ஷைலஜா..., எனக்கு உடனே கேசரி வேண்டும், செஞ்சு தா.." என்றான் கண்களில் எதிர்ப்பார்ப்பு மின்ன...

நாளைய தேர்வுக்கு படிக்க விடாமல் இது என்ன இம்சை என்று நினைத்தவள்

"கேசரியா... இங்க பாருங்க, நாளைக்கு எனக்கு முக்கியமான செமஸ்டர் பரீட்சை இருக்கு... நான் படிக்கணும், இன்னொரு நாள் செஞ்சு தரேன்.." என்று புத்தகத்தை எடுக்க போனவளை தடுத்தவன்..

"இத்தனை நாள் படிக்காததை, இன்னிக்கு ஒரே நாளில் படிச்சு கரைச்சு குடிச்சுடுவியா... எல்லாம் அடுத்த அரியர்ஸ்ல பார்த்துக்கலாம்.. படிச்சு என்ன பண்ண போற... உனக்கு தான் நான் இருக்கேனே... இப்போ எனக்கு கேசரி வேணும், செய்ய முடியுமா முடியாதா?" என்றான் முகம் இறுக

"சொல்லுறதை புரிஞ்சிக்கவே மாட்டீங்களா.?"

"பேசிக்கிட்டு இருக்குற நேரத்துல நான் கேட்கறதை செய்யலாம்.. ஆனா உனக்கு தான் மனசு இல்லை..." என்றவனை இமைக்காமல் வெறித்தவள், எதுவும் பேசாமல் கிட்சனை நோக்கி போக... ஜனாவோ பூரிப்புடன் அவளை பார்த்தபடி இருந்தான்.

அன்று பேப்பர் ப்ளேட் யூனிட்டில் தேவராஜ் அண்ணாவுடன் அன்றைய ஆர்டர் லிஸ்ட்டை பார்த்துக்கொண்டு இருக்க... அப்போது அங்கே

வேலை பார்க்கும் ராம்..., தனது முதல் திருமண நாள் என்று கொஞ்சம் கேசரியை ஜனாவிற்கும் தேவா அண்ணாவுக்கும் கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கும் கொடுக்க... ஜனா சிரித்தபடி அதை வாயில் போட்டுவிட்டு விவரங்களை பார்க்க ஆரம்பித்தான்... அப்போது ஜன்னலுக்கு மறுபுறத்தில் ராம் தன் நண்பனிடம்

“மச்சான்..., முதல் கல்யாண நாள் கைல காசு கூட இல்லை.. அவளுக்கு ஒண்ணுமே செய்ய முடியலைன்னு தவிச்சேண்டா... ஆனா சந்தியா இந்த நாளை மறக்க முடியாம பண்ணிட்டா டா...”

“ஜமாய்... மாப்பிள்ளை..., செம ரொமான்ஸா..” என்ற மற்றவனுக்கு பதிலாக

“நீ வேற.. ரொமான்ஸில் தான் சந்தோஷம் இருக்குன்னு யார் சொன்னது..! இன்னைக்கு கேசரியை செஞ்சு அவளே ஊட்டி விட்டா மச்சான்... என் லைஃப்ல இப்படி ஒரு சுவையான கேசரியை சாப்பிட்டது இல்லைடா.. என்னோட அத்தனை ஏக்கத்தையும் இந்த கேசரி ஈடு கட்டிடுச்சு” என்று கண்கள் சொருக சொன்னவனை யோசனையாக பார்த்த ஜனா...

‘கேசரி சுமாரா தானே இருந்தது... இவன் என்ன இப்படி சொல்லுறான், அதிலும் இவன் முகத்தில் எப்படி இவ்வளோ சந்தோஷம்.?.’ என்று விழிகள் இடுங்க கேள்வியாக அவனையே பார்க்க... “தம்பி... ஊட்டி விட்டது பொண்டாட்டியாச்சே, அதான் பயபுள்ள தலை சுத்தி போய் இருக்கிறான்.. இன்னைக்கு வேலை பார்த்த மாதிரி தான்..” என்று தேவராஜ் புலம்பலாக சொல்ல

சிரித்தபடி கொஞ்சம் பணத்தை அவர் கையில் கொடுத்து “ராம்கிட்ட இதை கொடுங்க... சம்பளத்தில் பிடிச்சுக்கிறேன்... இப்போ வீட்டுக்கு போக சொல்லுங்க” என்றவனுக்கு, அதற்கு மேல் அங்கே இருப்பு கொள்ளவில்லை. அந்த உணர்வு தனக்கும் வேண்டும் என்ற எண்ணம் பேயாக தலைவிரித்து ஆட... உடனே கிளம்பியும் விட்டான். ‘டக்’ என்ற ஓசை கவனத்தை கலைக்க...

ஷைலு கேசரியை அவன் முன் வைத்துவிட்டு அதே வேகத்தில் திரும்ப, அவளை எட்டிப் பிடித்தவன் தன்னருகே இழுக்க...

“இன்னும் என்ன வேணும் உங்களுக்கு.?” என்று கடுப்பாக கேட்டவளை முறைத்தவன்..

“நீ பாட்டுக்கு வச்சுட்டு போனா எப்படி...? ஊட்டி விடு..” என்றான் அதையும் அதிகார தோரணையில்...

“ஊட்டி விடணுமா... விளையாடுறீங்களா.... ஏன் இப்படி இருக்கீங்க..? அடுத்தவங்க உணர்வு புரியாத ஜடம்... அதான் நீங்க கேட்டதை செஞ்சுட்டேனே... இன்னும் ஊட்டி வேற விடணுமா?.”

“ஆமா..”

“முடியாது...” என்றாள் சலிப்பாக

“சின்ன விஷயம் ஷைலஜா.. இதை கூட நான் உன்கிட்ட கெஞ்சி தான் வாங்கணுமா...? இப்போ நீ எனக்கு ஊட்டி விட்டு தான் ஆகணும்... ம்ம்ம்” என்றவனை கொலை வெறியோடு பார்த்தவள், வேறு வழி இல்லாமல் சொன்னதை செய்ய...

கண்ணை மூடியபடி வாயில் வாங்கியவன்... அதை என்ன தான் ரசித்து சாப்பிட்டும்.. எந்த பரவச உணர்வும் வராமல் வெறுத்து போய் ‘போதும்’ என்றவன்

“மண்ணு மாதிரி இருக்கு... ஆசைப்பட்டு உன்கிட்டே ஒண்ணு கேட்டேன், அதைக்கூட முழுமனசோட செய்ய உனக்கு மனசு இல்லை.. இதே உன் குடும்பத்துக்கா இருந்தா, கேட்குறதுக்கு முன்னாடியே செய்து இருப்ப..” என்று தன் கோபத்தை கக்கியவனை.. அவன் எதிர்ப்பார்ப்பு என்ன..? எதற்கு திட்டுகிறான் என்று புரியாமல், அவனின் வீண் குற்றச்சாட்டு கோபத்தை உண்டு பண்ண

“ஆமா என் குடும்பமா இருந்தா செஞ்சு இருப்பேன்.., இப்போ என்னான்றீங்க எனக்கு என் குடும்பம் தான் முக்கியம்... தேவை இல்லமால் அவங்களை இழுக்க வேண்டாம்..”

“என்ன சொன்ன..? என்ன சொன்ன..? உன் குடும்பமா.. எது உன் குடும்பம்..? அதுதான் உனக்கு முக்கியமா... கொன்னுடுவேன் ராஸ்கல்... இன்னும் அந்த நினைப்போடு தான் இருக்கியா ? இந்த நிமிஷத்தில் இருந்து அந்த நினைப்பை அடியோடு மறந்துடு... அவங்களோட திரும்பவும் ஒட்டிக்கலாம்னு நினைச்சா, அது இந்த ஜென்மத்தில் நடக்காது.

அப்புறம் நான் மனுஷனா இருக்க மாட்டேன்... இது தான் உன் குடும்பம்... உனக்கு நான் மட்டும் தான் சொந்தம்..., அதை மனசுல பதிய வச்சுக்கோ... பைத்தியம் போல உன்னையே சுத்தி சுத்தி வரேனே... அது

கொஞ்சம் கூட உன் மனசுல பதியலையா... போதும் ஷைலஜா..., கடந்த காலம்னு ஒண்ணு உனக்கு இல்லை.. உன் வாழ்நாள் முழுவதும் நான்.. நான் மட்டும் தான், முதல்ல அதை மனசுல பதிய வை ”

“அப்போ என்னோட உணர்வுகளுக்கு ஒரு மதிப்பும் இல்லையா..?” என்று ஆற்றாமையுடன் கேட்டவளை வெறுப்பாக பார்த்தவன்

“நீ என்னைக்கு என் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்தே ஷைலஜா? அப்படியிருக்கும்போது எப்படி அதை என் கிட்டேர்ந்து எதிர்பார்க்கிற.?.” என்று மிரட்டுவது போல உறுமிவிட்டு, மீண்டும் வேலைக்கு கிளம்பிவிட... ஷைலஜா அந்த இடத்திலே உறைந்தவளாக நின்று விட்டாள்.

[illegible] - 16

உன் இதயத்தின் கடவு சொல் தெரிந்தால் தான் உன் உள்ளத்தின் கதவை திறக்க முடியும்.. கொடுப்பாயா...

தன் எதிரே இருந்த மினியை வெற்றுப் பார்வை பார்த்தபடி அமர்ந்திருந்தான் ப்ரிதீவ்... அவன் திட்டமிட்டிருந்தபடி, ஒரே ஒரு அடி கூட எடுத்து வைக்க முடிய வில்லை.. ஷைலு.., மினி..., இருவரும் தினமும் வந்தாலும் ஏனோ ப்ரிதீவ்வால் மினியின் முகத்தை நேருக்கு நேர் கூட பார்க்க இயலாமல் தவித்தான்.... அவளிடம் கிண்டலாக பேசினாலும் அதனூடே எப்படி தன் எண்ணத்தை வெளிப்படுத்துவது என்று புரியாமல் சரியான சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தான்.

தான் செய்வது சரியா தவறா என்று உள்ளுக்குள்ளேயே போராடியவன்... ஒவ்வொரு முறையும் தன் முடிவு சரியே என்ற உறுதியை எடுத்தவனால்... அதை செயல்படுத்தத்தான் முடியவில்லை.

அன்றும் அப்படியே... மினியிடம் எப்படி பேச்சை துவங்குவது என்று வழக்கம்போல் தயங்கியபடி தன் யோசனையில் இருக்க.. அவன் பேச்சில் செய்ய முடியாததை, அவன் செய்கை செய்து விட்டது.. அவனது நடவடிக்கைகள் மினிக்கு குழப்பத்தை கொடுத்து, அதைப்பற்றி கேட்கவும் வைத்தது.

ஷைலுவும், மினியும் அன்றைய தேர்வை பற்றி சுவாரசியமாக பேசிக் கொண்டு இருந்தாலும், மினி அடிக்கடி யோசனையாக அவனை பார்வையால் அளந்தாள்... ப்ரிதீவ் அவளிடம் மன்னிப்பு கேட்ட பிறகு என்ன தான் சகஜமாக பேசினாலும்... அவன் பார்வையில் தெரிந்த

ஏதோ ஒரு மாற்றம் அவளுக்குக் குழப்பத்தை உண்டு பண்ணியது... 'இவன் என்ன எப்பவும் திருட்டு முழியோட புரியாத பார்வை வேற பார்க்கிறான்...!' என்று நினைக்கவும்...

அதேநேரம் ப்ரிதீவ்வும் அவளை ஜாடையாக பார்க்க... மினி 'என்ன' என்பது போல ஒரு புருவத்தை உயர்த்த.. சமாளித்து கொண்ட ப்ரிதீவ்

"ஷ்ப்பா... தாய்குலமே... உண்மையிலேயே.. நீங்க எல்லாம் காலேஜ் பொண்ணுங்க தானா... எப்பவும் படிப்பை பத்தியே பேசுறீங்க...!"

"பாருங்க பன்னு.. பொண்ணுங்க நாங்க எப்பவும் இப்படித்தான்... பயங்கர படிப்ஸ், அதனால தான் நாங்க படிப்புல பின்னுறோம்... பசங்க படிப்பை தவிர மத்த எல்லாத்தையும் அலசுறதுனால தான் படிப்புல நொண்டுறீங்க..." என்றாள் மினி கிண்டலாக

அசடு வழிய "ஹி... ஹி... புத்திசாலி பீரோ.. நீ.. சொன்னா அது தப்பா இருக்குமா.." என்று வழிவது போல சொன்னவன் 'ஆம்பளைங்கன்னா உனக்கு அவ்வளோ மட்டமா போச்சாடி பக்கி... இருக்குடி உனக்கு' என மனதுக்குள் கறுவியவாறே....

"அதுசரி... ரெண்டு பேரும் ரொம்ப மூடியா இருக்கீங்க, ஏன்..? செமஸ்டர் ஒழுங்கா செய்யலையா.. ஷைலு?"

"சுமாரா தான் செஞ்சிருக்கேன்.. இத்தனைக்கும் பேப்பர் ஈஸியா தான் இருந்தது.... ப்ச்.. இருந்தும் கோட்டை விட்டுட்டேன்." என்று ஷைலு வருத்தமாக சொல்ல.

கிண்டலாக "ஹே... கூல்... புது பொண்ணு 'எக்ஸாமை ஒழுங்கா செஞ்சேன்' என்று சொன்னா தான் வருத்தப்படணும்... உலகமே தப்பா பேசும்... குடும்ப வாழ்க்கையில இதெல்லாம் ஜகஜமப்பா."

"ஹைய்யோ பெரிய கண்டுப்பிடிப்புதான்... ரம்பம் போடாதீங்க பன்னு... ஏய் ஷைலு, இப்போ என்ன.., அடுத்ததுல பார்த்துக்கலாம்.. ஏதோ ஓரளவுக்கு பண்ணி இருக்க இல்ல, அப்புறம் என்ன..?"

"தேவதைங்களா.. இம்ம்புட்டு நல்லவளுகளா நீங்க..! சரி படிப்பு முடிய நாலு மாசம் தானே இருக்கு, அடுத்து என்ன செய்ய போறதா உத்தேசம்..?"

"வேற என்ன.. வேலை தான் தேடணும்..." என்று சொல்லிய ஷைலுவை ஆச்சரியமாக பார்த்த மினி

“அதுக்கு ஜனா அண்ணன் சம்மதிப்பாரா ஷைலு..?”

“அதானே...! எனக்கு என்னவோ ஜனா உன்னை வேலைக்கு அனுப்புவாருன்னு தோணலை..? அப்புறம் எப்படி..?”

பல்லைக் கடித்தபடி “அவர் சம்மதத்தை யார் கேட்டா...? அது எனக்கு தேவையும் இல்லை...”

“வேணாம் ஷைலு..., எதுவா இருந்தாலும் அண்ணன் கிட்டே கேட்டு செய்.. லூசு மாதிரி உளறாதே... எடுத்து சொன்னா அண்ணன் புரிஞ்சுப்பார்.”

“ஜனாவுக்கு பிடிக்கலைன்னா விட்டுடேன், அப்படியாவது வேலைக்குப் போகணுமா என்ன..? வேலை... வேலைன்னு வாழ்க்கையை கோட்டை விட்டுடாதே ஷைலு” என சொல்லிய ப்ரிதீவின் குரலில் கடுப்பே மேலோங்கி இருந்தது.

“ஆஹான்.. அப்புறம்...! ரொம்ப சுலபமா சொல்லிட்டீங்க... எதுக்காக விழுந்து விழுந்து படிச்சோமாம்... எங்க எதிர்காலத்தை வைத்து எவ்வளோ பிளான் போட்டு இருப்போம்... பொண்ணுங்கன்னா உங்களுக்கு அவ்வளோ மட்டமா.. எப்பவும் ஆண்களுக்கு அடிமையாவே இருக்கணுமா... அவங்க சுயமா சொந்தக் காலில் நின்னா தானே அவங்களுக்கு மதிப்பு... இதெல்லாம் உங்களுக்கு எங்கே புரிய போகுது...! நீங்களும் ஆம்பளை தானே, வேறு எப்படி பேசுவீங்க...?” என்று படபடவென பொரிந்தாள் மினி.

“அய்யோ தெய்வமே... நான் பொண்ணுங்க மட்டம் என்ற அர்த்தத்தில் சொல்லலை... ஜனாவுக்கு விருப்பம் இல்லை போலவே.. பின் ஏன் குடும்பத்தில குழப்பம் வரணும் என்று நினைச்சேன்...”

“ம்ம் அப்படி சொல்லுங்க.. ஜனா அண்ணாவுக்கு புரிய வச்சிட்டு வேலைக்கு போனா தப்பு இல்லை.. ஷைலு, நான் என்ன சொல்லுறேன்னா..”

“ப்ச் விடுங்க.. அதுக்கெல்லாம் இன்னும் டைம் இருக்கு... நான் எப்படியும் வேலைக்கு போறதுன்னு முடிவு செய்துட்டேன்.. இதை வச்சு யாரும் ஆர்க்யூ பண்ண வேண்டாம்.. அதிலும் ஜனாவை பத்தி யாரும் பேச வேண்டாம், எனக்கு கடுப்பா இருக்கு..” என்று கடுத்த முகத்துடன் சொன்னவளை கண்டதும்

‘இவ என்ன எதையும் யோசிக்காம முடிவு எடுக்குறா...? மத்தவங்க

என்ன சொல்ல வராங்கன்னு கூட கேட்க மாட்டேங்குறா..' ப்ரிதீவ்வுக்கு எரிச்சல் வர... பேச வாய் எடுத்தவனை தடுத்தபடி..

"ப்ரிதீவ், எங்க வீட்டுக்கு போனீங்களா.. எல்லாரும் எப்படி இருக்காங்க.. என்னைப் பற்றி ஏதாவது.." என்று ஷைலு எதிர்ப்பார்போடு கேட்க..

சட்டென முகப்பாவத்தை மாற்றியவன் "நேரம் இருக்கும் போதெல்லாம் அங்கே போயிட்டு தான் வரேன் ஷைலு.., நேத்து கூட உன்னைப் பத்தி பேச்சு எடுத்தேன்.. அவங்களுக்கு உன்னைப்பத்திப் பேச சுத்தமா விருப்பம் இல்லை.. என்ன செய்றது... கொஞ்ச நாள் போகட்டும், நீ நல்லா வாழ்ந்தாலே அவங்க மனசு குளிர்ந்து உன்னை ஏத்துக்குவாங்க"

"நான் நல்லா வாழ்ந்தா தான், அவங்க என்னை ஏத்துக்கணுமா..? வாழலைன்னா என்னை ஏத்துக்க மாட்டாங்களா.? அப்போ அவங்களுக்கு நான் முக்கியம் இல்லையா...? என்னோட வேதனை பெரிசு இல்லையா...? இப்போ ஜனா தான் முக்கியமா.?. யாருக்கும் என் மனசை பத்திய கவலைகள் இல்லையா...? எல்லோரும் ஏன் ஜனாவை வைத்தே என்னை பார்க்குறீங்க...? நீங்க இப்படின்னா...

என்னைப் பெத்தவங்களும் ஜனாவோடு நான் வாழுற வாழ்க்கையை வச்சு தான் நான் வேணுமா வேண்டாமான்னு முடிவு பண்ணுவாங்களா...?. அப்படி ஒண்ணும்.. அவங்க எனக்கு தேவையில்லை.." என்று வெடுக்கென சொல்லி விட்டு, வெளியே இருக்கும் மீன் தொட்டியை பார்ப்பது போல விலகிச் சென்றவளை கோபம் பொங்க பார்த்தான் பிரிதீவ்.

'என்ன பொண்ணு இவ' என்ற எண்ணம் கடுமையாக தாக்கியது.. மெச்சூரிட்டி இல்லாம இருக்கான்னு பார்த்தா, இப்போ இப்படி பேசுறாளே' என்று மனதுக்குள் வெம்பினான்.. மினியோ அதிர்ந்து போய் ஷைலுவை பின் தொடர..

"ஏய்.. நீ எங்க போற...? உட்கார்.."

"இல்ல... அவ என்ன பேசுறா.."

"அதுக்கு... நீ அட்வைஸ் பண்ணப் போறியா..., அப்படியே கேட்டுக்குவா பாரு அவளுக்கு புருஷனை பத்தியும் கவலை இல்லை, பெத்தவங்களை பத்தியும் கவலை இல்லை... அவளுக்கு, தனக்கு என்ன வேணும்னே தெரியாம, தன் வாழ்க்கையை இடியாப்ப சிக்கலா

சுத்திக்கறா.. அவளே சிக்கலை விடுவிச்சுக்கட்டும்.. நீ சும்மா இரு... நீயும் கூட சேர்ந்து எரியுற கொள்ளியில எண்ணெயை ஊத்தாதே.

அவளை அப்படியே விட்டுடு, அது போதும்.. அவ சொல்லி கேக்கற ஆள் இல்லை, அவளே பட்டுத் திருந்தட்டும்... அப்போ தான் புத்தி வரும்.. தயவுசெஞ்சு அறிவுரை சொல்லுறேன்னு நினைச்சுக்கிட்டு, நீ இன்னும் குழப்பி விட்டுடாதே.. கூலா கண்டுக்காம இரு, அது போதும்" என்று சுள்ளென சொன்னான் .

அவன் பேசிய விதம் மனதை சுருங்க வைக்க "ப்ளீஸ்..., போதும் ப்ரிதீவ், எப்பவுமே என்னை தப்பா புரிஞ்சுக்கிட்டு பேசுறதே உங்களுக்கு வேலையா போச்சு. கஷ்டமா இருக்கு.." என்ற மினி கலங்கிய கண்களோடு தலை குனிய.. அவன் மனதில் மின்னல் அடித்தது. . சிந்தனையோடு அவளை அளவெடுத்தவன்..

ஆழ்ந்த குரலில் "நான் தப்பா நினைச்சா, உனக்கு ஏன் கஷ்டமா இருக்கு பீரோ..?"

குழப்பம் நிறைந்த விழிகளுடன் "ஏன் யாருக்கா இருந்தாலும் கஷ்டமா தானே இருக்கும்..?"

சிரித்தபடியே அவள் புறம் சாய்ந்தவன் "பீரோ..., இப்போல்லாம் நீ ரொம்ப அழகா இருக்குற மாதிரி ஒரு ஃபீல்.. ஒருவேளை பார்க்க பார்க்க அழகா இருக்குற பெண்ணோ நீ..!" என குறும்பு தெறிக்கும் குரலில் கேட்டவனை திகைப்பாக பார்த்தவள்... அவன் விழிகளில் மின்னிய குறும்பைக் கண்டதும், சூழ்நிலையை இலகுவாக்க விளையாடுகிறான் என்று நினைத்து ரிலாக்ஸ்டாக சாய்ந்தவள்..

நக்கல் நிறைந்த குரலில் "என்ன பண்ணுறது பன்னு... நானாவது பார்க்க பார்க்க அழகா இருக்கேன்.. நீ எப்படி பார்த்தாலும் தேற மாட்டேங்குறியே..."

"அப்படியா..? அதுக்கு எல்லாம் கண்ணுல கொஞ்சம் காதல் விட்டமின் வேணும். பீரோ." என்றான் கண்களில் காதல் வழிய

அவன் பேச்சும், தோரணையும், பார்வையும், அதிர்வை கொடுக்க "ஹலோ..., என்ன...? ரூட்டு மாறுது...! ஜாக்கிரதை...! உங்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் ஜஸ்ட் ஷைலுவுக்கு துணையா தான் வந்திருக்கேன்.

கொஞ்சம் இடம் கொடுத்தா, மடத்தைப் பிடிக்குற கதையெல்லாம் என்

கிட்டே நடக்காது. நீங்க என் ஃபிரெண்ட் லிஸ்ட்ல கூட இல்லை... உங்க விளையாட்ட வேறு எங்கயாவது வச்சுக்கோங்க. உங்க மதிப்பை நீங்களே கெடுத்துக்க வேண்டாம்..” என்று பல்லை கடித்தபடி மினி சொல்ல

“ஹே.. இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு... வாயில க்ரைண்டரை ஓட விடுற.. திடுதிப்புன்னு ஃபிரெண்டு கூட இல்லைன்னு சொல்லிட்டியே ஓ காட்..” என்று சொன்னவன், எதிரில் இருந்த பூக்கூடையில் இருந்த பூவை எடுத்து அவள் புறம் நீட்டியபடி பாட ஆரம்பித்தான்...

கனவிலும் நீ தான் புள்ள
நெனவிலும் நீ தான் புள்ள
ஐயோ உன் தொல்ல தாங்கவில்ல
தேவை இல்ல உன் வரலாறு
என்ன லவ் பண்ணவே முடியாது என்றே சொன்னாலும் கூட பரவ இல்ல
பழகிக்கலாம் வாட்ஸ் யுவர் நேம் அன்ட் யுவர் நம்பர் கேர்ள்
பழகிக்கலாம் வாட்ஸ் யுவர் நேம் அன்ட் யுவர் நம்பர் கேர்ள்
பழகிக்கலாம் ஹே பழகிக்கலாம் ஆ.....ஹே.... ஆ.....

ஆஆஆஆஆ சனியனே ஏண்டி காலை மிதிச்ச...?”

மேஜையில் இருந்த முள் கரண்டியை எடுத்து அவன் தொண்டையில் அழுத்தியவள் “மவனே வாயை மூடு, இல்ல அப்படியே தொண்டையில் இறக்கிடுவேன். என்னைப் பார்த்தா கேனைச் சிறுக்கி மாதிரி இருக்கா...? உன்னை கவனிச்சிட்டு தான் இருக்கேன், நீ சரி இல்லை... இதை எல்லாம் வேற எங்கேயாவது வச்சுக்கோ.. விளையாடுறதுக்கும் ஒரு அளவு இருக்கு”

“ஹேய்.. ஹே நிறுத்து. சும்மா கிண்டல் பண்ணினேன் பீரோ.. எங்க அம்மாவுக்கு நான் ஒரே பையன் .” என்றான் பதறிப் போய்

“இங்க என்ன நடக்குது?” என்ற குரல் அவர்களை பதற வைத்து விலக வைக்க, அவர்களை கேள்வியாக பார்த்தபடி வந்தாள் ஷைலு.

“அது.. வேற ஒண்ணும் இல்லை.. இந்த மரமண்டைக்கு அடிக்கடி நட்டு கழண்டு போகுது.. நாம கிளம்புவோம் வா..” என்று மினி கடுகடுப்புடன் அவள் கையை பிடித்து இழுக்க...

ப்ரிதீவ்வை சற்றுநேரம் குழப்பமாக பார்த்த ஷைலு "ம்ம்ம் ... நாம கிளம்பலாம்.." என்றவர்கள் கிளம்ப, ப்ரிதீவ்வோ

"மினி.."

அவன் அழைப்பு தடுக்க "என்ன..?" என்றாள் எரிச்சலாக.

"கொடுக்காமலே போற.....!"

திகைப்பாக "என்ன கொடுக்கணும்.?"

சிரிப்பை வாயில் அடக்கியபடி "அதான்ப்பா உன் போன் நம்பர்.."

சிரித்தபடி "வர வர உங்க விளையாட்டு எல்லையை தாண்டுது பிச்சுபிச்சு.." என்று கைகாட்டி சொல்லியவாறே கிளம்பிவிட்டாள்.

அன்றைய நிகழ்வுகள் மனதில் பதிந்தாலும், ஷைலுவின் மனநிலை அதை கவனத்தில் கொள்ளவில்லை... தன் போக்கில் தன் கவலையில் உழன்றவளின் மனதில், ஜனாவை பிரிய வேண்டும் என்ற எண்ணம் மட்டும் மேலும் மேலும் வலுவாக தோன்றியது... இருவருக்குள்ளும் தீவிரமான சண்டைஉருவாக என்ன வலுவான காரணம் கிடைக்கும் என்று தேடிக் கொண்டு இருந்தாள்.

காற்று அசைந்து பூ கீழே விழுந்தாலும் கூட அதற்கு காரணம் ஜனா தான்.. என்று நடக்கும் அத்தனைக்கும் அவனையே காரணகர்த்தா ஆக்கினாள். தன்னையறியாமல் அதற்கு துணை போனான் ஜனா... அவனுக்கு தான் தரப்போகும் அடி.. தான் இதுநாள் வரை அனுபவித்த வலியை விட பல மடங்கு அதிகமாக இருக்க வேண்டும் என்று தீவிரமாக நினைத்தாள் ஷைலு.

மினியோ ப்ரிதீவ்வை சமாளிக்கும் வழி தெரியாமல் திண்டாடினாள்.. அவனை பாம்பு என்று மிதிக்கவும் முடியாமல், கயிறு என்று ஒதுக்கவும் முடியாமல்.. அவன் விளையாடுகிறானா.. இல்லை உண்மையிலேயே செய்கிறானா என்று அலசுகையில், நாட்கள் தான் ஓட்ட பந்தயத்தில் ஓடுவது போல ஓடியதே தவிர, மனதில் சிறிதளவும் தெளிவு கிடைக்கவில்லை.

அன்று ஞாயிறு, வீட்டை சுத்தம் செய்யும் வேலையில் கவனமாக இருந்தவளை பின் புறம் இருந்து அணைத்தபடி நின்ற ஜனா.. அவள் கூந்தலில் முகம் புதைத்து

“ஷைலஜா... கிச்சனை விட்டு வெளியவே வர மாட்டியா... நானும் எவ்வளோ நேரமா காத்திட்டிருக்கேன்.. ஒரு வீக்கெண்டு கூட ஜாலியா டைம் ஸ்பென்ட் பண்ண முடியலையே..” என்றான் தாபம் நிறைந்த குரலில்.

உடல் இறுக “உங்களுக்கு காஃபி, டீ ஏதாவது வேணுமா...? இல்லை டிபன் வேணுமா..?”

“இதென்ன ஹோட்டலா...? என்னைப் பார்த்தாலே மெனுவை சொல்ல ஆரம்பிக்குற.. ஷைலஜா கிளம்பு, எங்கேயாவது வெளியே போயிட்டு வரலாம்.. வேணும்னா நாம மாலுக்கு போகலாமா..?”

எரிச்சலாக “நான் எங்கேயும் வரலை...”

“ஏன்.. நமக்கு கல்யாணம் ஆகி, இதுவரைக்கும் எங்கேயும் வெளியே போகலை.. ப்ளீஸ் ஷைலஜா..”

அவன் அணைப்பில் இருந்து திமிறி வெளிப்பட்டவள் “நான் வரலை.. எனக்கு பிடிக்கலைன்னு சொன்னா, உங்களுக்கு புரியாதா..?”

“ஷைலஜா.., நீ ஏன் இப்படி என்னைப் பார்த்தாலே வெடுக்வெடுக்குன்னே பேசுற... நீ ரொம்ப மாறிட்ட... நீ இப்போல்லாம் என்னை மாமான்னு கூட கூப்பிடுறது இல்லை... எனக்கு எவ்ளோ கஷ்டமா இருக்கும்னு யோசிச்சியா..?”

“அன்னைக்கு நீங்க என்னைப் பத்தி யோசிச்சீங்களா...? எப்படியெல்லாம் கெஞ்சினேன்... என்னோட குடும்பத்தை கண்ணு முன்னாடி நிக்க வச்சு, கல்யாணத்தை கட்டாயப்படுத்தி முடிச்சீங்க இல்ல... இன்னும் எந்த முகத்தை வச்சுக்கிட்டு, என்கிட்டேருந்து உங்கமேலே பாசத்தை எதிர்பார்க்குறீங்க..? மாமான்னு கூப்பிடணுமாம் மாமான்னு.. எந்த உரிமையில் கூப்பிட..? அதெல்லாம் நிறைவா அன்னியோன்யமா இருக்குறவங்களுக்கு.. உங்களுக்கு இல்ல..”

“மனைவி என்ற உரிமை ஒண்ணு போதுமே ஷைலஜா..”

“நீங்க அடிக்கடி கேட்பீங்க இல்ல, சேர்ந்து வாழ திருமணம் மட்டும் போதுமான்னு.. இப்போ சொல்லுறேன்... நிச்சயமாய் இது மட்டும் போதாது “ என்றவள் வேகமாக அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொள்ள...

கடுப்பான ஜனா ‘இவ எப்பத்தான் திருந்துவாளோ...! இவளுக்காக

தான் இந்த கல்யாணத்தை முடிவு பண்ணினேன்.. என்னவோ என்னோட ஒருத்தன் சுயநலத்துக்காக செய்தது போல பேசுறா...! எந்த உரிமையில் கூப்பிடுறதுன்னு கேக்குறா.. நிமிஷத்துக்கு ஒரு பேச்சு பேசுறா.. இவ மனசுல என்ன இருக்குன்னு இவளுக்கே தெரியலை...

நான் இல்லாம இவ வாழ்ந்துடுவாளா.., நல்லா கோபம் மட்டும் வருது' என்று வழக்கம்போல் தன் நிலையிலிருந்து மட்டுமே யோசித்தான் ஜனா.

அறைக்குள் சென்றவள் விழிகளில் கண்ணீர் ஆறாக பொங்கி வழிய.. எண்ணங்களோ தாய் தந்தை என்று சுற்றி மினி..., ப்ரிதீவ்.., ஜனாவில் வந்து நின்று.. 'உரிமையாம் உரிமை' என்று புலம்பியவளின் மனதில், சமீப காலமாக மினியும் ப்ரிதீவ்வும் பேசிக் கொள்ளும் முறை நினைவில் வர... அதுவரை கவனத்தில் பதியாத விஷயங்கள் மனதில் ஓடத் துவங்கின. இப்போதைய அவர்களின் உரிமையான நெருக்கம் புதியதாய் தெரிந்தது.

அதைப்பற்றியே சிந்தித்தவளுக்கு.. 'ப்ரிதீவ்வுக்கு மினியிடம் ஈர்ப்பு இருக்கோ...? அப்படி இருந்தால் நல்லது தானே...? அவன் நல்லவன் ஆயிற்றே...!' அவன் மீது இருந்த நல்ல எண்ணம் அவனை மினிக்கு பொருத்தமானவனே...! என்று சொன்னது.

ஆனா மினி... அவகிட்டேயும் மாற்றம் இருக்கே...! பிடிக்கலைன்னா தினமும் என் கூட வருவாளா...? அதுவும் ப்ரிதீவ் அப்படி பேசியும் வராளே.. அப்போ அவ கிட்டேயும் ஏதோ சலனம் இருக்குன்னு தானே அர்த்தம்... எப்படியோ அவர்கள் சேர்ந்தால் நன்றாக தான் இருக்கும், அதற்கு தன்னால் முடிந்ததை செய்வோம் என்று எண்ணியவள்.. 'இதுப்பற்றி ப்ரிதீவிடம் பேச வேண்டும்'... என்று முடிவு செய்தவளாக அதற்கான சரியான நேரத்திற்காக காத்திருந்தாள்.

அடுத்து வந்த நாட்களில் ப்ரிதீவிடம் பேச முயற்சித்தும் மினி கூடவே இருந்ததால் பேச இயலாமல், அவர்கள் உரிமையாக பேசிக்கொள்வதை புதிதாக பார்ப்பது போல பார்க்க ஆரம்பித்தாள். 'எப்போதிலிருந்து இவங்க இவ்வளவு உரிமையாக பேசுறாங்க...? இதை எப்படி கவனிக்காம போனோம்' என்று தனக்குள்ளே யோசித்தாள்.

வழக்கமான அவர்களின் கலகலப்பு அன்றைய தினம் அவளுக்கு சுவாரசியத்தை கூட்டி, 'அது காதலே' என்று உறுதியாக எண்ண வைத்து, அவர்களின் பேச்சை தொடர்ந்து கவனிக்க வைத்தது.

“நான் சொன்னா மட்டும் கோபம் வருது பீரோ உனக்கு... இப்போ பார், நான் ஒரு பீஸ் பீட்ஸாவை சாப்பிடுறதுக்குள்ள நீ ஒரு முழு பீட்ஸாவையே உள்ளே தள்ளிட்டே.. உங்க அப்பா உனக்கு மாச சம்பளக்காரனை கட்டி வச்சா கட்டுப்படி ஆகுமா சொல்லு.. இதே பிசினஸ்மேன், அதுவும் ஹோட்டல் பிசினஸ் செய்யுறவரா இருந்தா.. நீயும் நிறைய சாப்பிடலாம்.... செலவும் கையைக் கடிக்காது....” என்றவனைப் பார்த்து ‘பக்’ என்று சிரித்த ஷைலு, அமைதியாக அவர்கள் பேசுவதை கவனிக்க ஆரம்பித்தாள்.

“பன்னு... ஓங்கி ஒண்ணு விட்டேன் முகரைக்கட்டை நார்த் போலை பார்த்துட்டு திரும்ப சௌத்துக்கு வரும் ஜாக்கிரதை... நான் சாப்பிடுறதைப் பற்றி பேசாதேன்னு சொல்லி இருக்கேன்.., இன்னொரு தடவை பேசின மவனே.. நாக்கை இழுத்து வச்சு அறுத்துடுவேன்..”

“நோ.. நோ.. மாமனை இப்படியெல்லாம் பேசக் கூடாது.. பீரோ”

“தோடா... யாருக்கு யார் மாமன்..! போதும் பன்னு, சும்மா விளையாட்டுக்கு கூட இப்படியே பேசிக்கிட்டு இருக்காதே, எரிச்சல் வருது..”

“என்னது எரிச்சலா.. முகத்தைப் பார்த்தா அப்படி தெரியலையே பீரோ...! இரு..இரு... ஒண்ணு செய்யலாமா.., அது என்ன பன்னு... மண்ணுன்னு கூப்பிடுற.. இனி நான் உன்னை ‘பீரோ’ன்னு கூப்பிட மாட்டேன்.. நீயும் என்னை ‘பன்னு’ன்னு கூப்பிட வேண்டாம்.. ஓகே வா...”

“ம்ம்ம்...குட் அப்படி வாங்க வழிக்கு..”

“நீ வா என் வழிக்கு... நான் உன்னை ‘கண்ணு’ன்னு கூப்பிடுவேனாம், பதிலுக்கு நீ என்னை ஹீரோன்னு கூப்பிடுவியாம்... செம ரொமான்ட்டிக்கா இல்ல..”

“ஹீரோவா... போடா ஜீரோ... தெரியாம தான் கேக்குறேன்.., உன்னை எல்லாம் பெத்தாங்களா இல்லை செஞ்சாங்களாடா...”

“ஹே... என்னை செஞ்சாங்கன்னு..எப்படி கண்டுப்பிடிச்சே...? ”

“செஞ்சாங்களா...! கடவுளே..! கொஞ்சம் புரியற மாதிரி பேசவே மாட்டியா..”

“அதான்.. நான் டெஸ்ட் ட்யூப் பேபின்ற விஷயம் உனக்கு எப்படி

தெரியும் கண்ணு…? மாமன் மேல அம்ம்புட்டு லவ்வா...”

“ஆங்... இங்கப் பாருங்க ப்ரீதீவ்... திரும்ப திரும்ப நீங்க இப்படி பேசுறது சரி இல்லை, எல்லாத்துக்கும் ஒரு அளவு இருக்கு… அது சரி உங்களுக்கு தான் என்னை பிடிக்காதே... எப்பவும் மோதிக்கிட்டு இல்ல இருப்பீங்க, இப்போ என்ன புதுசா…?” என்றாள் அலுப்பாக

கிண்டல் குரலில் “மோதலுக்கு அப்புறம் வரும் காதல் ரொம்ப ஸ்ட்ராங்காமே.”

“தோடா.. யார் சொன்னா.?.”

“ப்ரித்வானந்தான்னு ஒரு சாமியார்..”

“நிஜம் தான்.. நீ கண்டிப்பா சாமியாரா தான் போவ..:!”

“எஸ்ஸ்ஸ்.. புள்ளக்குட்டி சாமியாரா போகப் போறேன்.. நான் முடிவு பண்ணிட்டேன்.. நீ ஜோடியா வரியா.. .”

சட்டேன எழுந்த கோப உணர்வில் “ஏய் நிறுத்து… இதான் உன் லிமிட்.. இதுக்கு மேல பேசுனா...”

“என்ன லிமிட்.. காதல் என்ன அப்படி தப்பான விஷயமா...”

“என்னைப் பொறுத்தவரை அப்படித்தான்..”

கிண்டலாக “ஏன் எவனையாவது காதலிச்சு புட்டுக்கிச்சா என்ன…?”

“கடவுளே... செத்தா சுரணை இருக்காதுன்னு சொன்னா, செத்து பார்த்தியான்னு கேட்பீங்களா..? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்... என் அக்கா அஞ்சு வருஷம் காதலிச்சு, திடீர்னு ஒருநாள் ஓடிப்போய் கல்யாணம் செய்தா... ஒரு வருஷம் கூட நிலைக்கலை.. வயித்துல 20 நாள் பிள்ளையோட வந்தவ, இன்னும் மோட்டுவளையைப் பார்த்துட்டு எங்க வீட்டுல தான் இருக்கா.. அவ்வளோ ஏன்..? தோ இந்த அம்மா... சிரிப்பையே மறந்துட்டு சுத்துறாங்க... இந்த லிஸ்ட்ல நானும் சேரணுமா? எங்க அப்பா யாரைக் காட்டுறாரோ, அவனைத் தான் கண்ணை மூடிட்டு கட்டுவேன்..”

‘பக்கி தெளிவா இருக்கே... லேசுல அசர மாட்டேங்குறா.. ’ என்று மனதுக்குள் வெம்பியவன்

“அப்போ லவ் பண்ணுற பசங்க எல்லாம் கெட்டவங்க, வீட்டுல

பார்த்து வைக்கும் மாப்பிள்ளை மட்டும் நல்லவன்னு சொல்லுறியா..?”

“நான் அப்படி சொல்லலை... நல்லவனோ கெட்டவனோ, அது நம்மோட தலையெழுத்தை பொறுத்த விஷயம்... பெத்தவங்க பார்த்து செஞ்சு வச்சா.. கடைசி வரைக்கும் அவங்க ஆதரவு இருக்கும்... அது இல்லாம, அவங்க விருப்பத்தை மீறி நாம எது செய்தாலும் தப்பு தான்.”

“புரியாம பேசாதே... இது உன்னோட வாழ்க்கை... பிள்ளைகளுக்குன்னு ஒரு கனவு இருக்காதா... அதை பெத்தவங்களுக்காக விட்டுடுணுமா...?”

“பிள்ளைங்க கனவா...! அப்படி ஒண்ணு இருக்கா.. என்ன? இப்போ என்னையே எடுத்துக்கோங்க, ஆறு வயசுல துண்டை புடவை போல சுத்திக்கிட்டு.. நான் டீச்சர் ஆவேன்னு சொல்லிட்டு இருந்தேன்.. பத்து வயசுல டாக்டர்..., அப்புறம் என்ஜினியர்.., ஆகணும்னு ஆசை.. ஹையர் செகண்டரி வரும்போது தெருவுக்கு ரெண்டு என்ஜினியர்.. சரின்னு ஹோம் சயின்ஸ் எடுத்தேன். இப்போ அதைப் பத்தி தான் என்னோட கனவு.

ஆனா என்னைப் பெத்தவங்க, நான் பிறந்தப்போ கையில வாங்கும்போது, என்னை நல்லா வாழ வச்சுப் பார்க்கணும்னு கனவை ஆரம்பிச்சவங்க.. இன்னைக்கு வரைக்கும் மாறாம இருக்காங்க... பிறந்ததில் இருந்து மாறிக்கிட்டே இருக்குற என் கனவை விட... இருபத்திரெண்டு வருடம் மாறாமா ஒரே கனவை கண்டுக்கிட்டு இருக்கும் அவங்க கனவு உயர்ந்தது ஆச்சே.. அதை கெடுக்கும் உரிமையை பிள்ளைகளுக்கு யார் கொடுத்தா...?” என்றவளை பேச்சே வராமல் வியந்துப் பார்த்துக் கொண்டு இருக்க...

“மினி..” என்று குரல் நடுங்க அழைத்த ஷைலுவைப் பார்த்தவள்...

“ச்சு இப்போ நீ என்னத்துக்கு கண்ணு கலங்குற..?” என ஆதரவாக அவளை தோளில் சாய்க்க..

“நான் ஏண்டி இதை எதையும் யோசிக்காம.. என்னை நினைச்சா எனக்கே பிடிக்கலை..”

“லூசு.. உன்னை ஏன் தப்பா நினைக்கணும்? எனக்கு ஒத்து வரலைன்னா... யாருக்கும் வரக் கூடாதா...? காதல் ஒண்ணும் தப்பு இல்லை ஷைலு, பெத்தவங்களை பத்தியும் கொஞ்சம் யோசிக்க சொல்லுறேன் அவ்ளோ தான்... உன்னோட விஷயத்துல கூட உங்க

அப்பா அம்மாவுக்கு... தேவையில்லாத அவமானத்தை தேடிக் கொடுத்துட்ட.. நானும் அதுக்கு ஒரு வகையில் காரணமா போயிட்டேன். அந்த வருத்தம் தான்... மத்தப்படி உனக்கு, ஜனா சரியான சாய்ஸ் தான்"

தலைகுனித்து அமர்ந்திருந்தவளின் மனதில் மினியின் பேச்சு, வேறுவிதமாய் ஜனாவின் மீது வன்மத்தை கூடியது...

"ஏதேது பீரோ.. காதல் பிடிக்காது.. சரி.. ஜனாவையும் தானே உனக்கு பிடிக்காது... அப்புறம் என்ன இந்த திடீர் மாற்றம்...?"

"யார் சொன்னா, எனக்கு அவரைப் பிடிக்காதுன்னு.. ரொம்ப பிடிக்கும்.. உரிமை இருக்குற இடத்தில தான் கோபம் வரும்.. என் அண்ணன் அவர்.. அதனாலே அவர் மேல நிறைய கோபம் வரும்.. நிறைய சண்டை போட்டிருக்கேன்.. நிறைய திட்டியும் இருக்கேன்... அதே நேரத்துல அவர் காதலை நினைச்சு பல முறை வியந்தும் இருக்கேன்... அது என்ன அப்படி ஒரு வெறித்தனமான காதல்னு சில நேரங்களில் கடுப்பா இருந்தாலும்...

சில நேரங்களில் ஷைலு மேல பொறாமை கூட வரும்... ஜனா போல ஒரு காதலன் கிடைச்சா, காதல் தப்பு இல்லைன்னு தோணும்.. ஷைலுவை தவிர வேற எந்த எண்ணமும் இல்லாம..., எப்படி..?? அப்படி இவக்கிட்ட என்ன இருக்குன்னு அவர் இப்படி இருக்கார்னு யோசிச்சிருக்கேன்

அவர்கிட்டே இருக்கும் ஒரே குறை, காதலை எப்படி வெளிப்படுத்துறதுன்னு புரியாம.. ஷைலுவை வாட்டுறது தான்..." என அவள் பேசிக்கொண்டே போக... பிரிதீவ்வின் முகம் பிரகாசத்தை குத்தகைக்கு எடுத்தது .

மனமோ 'சே ஒரு விசயத்தை நாம ஒரு கண்ணோட்டத்தில் பார்த்தா, இவ வேற ஒரு கண்ணோட்டத்தில் பார்த்து இருக்கிறா.. இதுதான் ஒரு நாணயத்துக்கு இரு பக்கம்னு சொல்லுவாங்களோ..' என்று மினிக்கு சாதகமாக முதல் முறையாக யோசித்தான்.. அதுவே அவனை கரைய வைக்க.. அவன் பார்வையில் மையல் கூடியது.

"அப்போ காதல் தப்பு இல்லைன்ற எண்ணம் உன் மனசில் வந்துடுச்சா மினி..?" என அவளை கூர்ந்துப் பார்த்தபடி ப்ரிதீவ் கேட்க

"ச்சே..நா .. போய்.." என்று மறுத்து பேசத் துவங்கியவளை தடுத்த

ப்ரிதீவ்.., குரல் கரகரக்க “மினி..” என்றான்.

“ஷைலஜா..” என்ற ஜனாவின் குரல், மூவரின் கவனத்தையும் கலைக்க.. ப்ரிதீவின் முகம் பதட்டத்துக்கு போக.. தடுமாற்றத்துடன் “வா.. வாங்க... ஜனா..” என்றான்.

எப்பொழுதும் வெளியே இருந்து மெசேஜ் அனுப்புபவன்.. கூப்பிட்டாலும் நேரம் இல்லை என்று உள்ளே வராதவன்... இன்று உள்ளே வரவும்.. கேள்வியாக அனைவரும் அவனைப் பார்க்க.. “ஷைலஜா.. வா வீட்டுக்கு போவோம்.. யாமினி நீயும் கிளம்பு” என்றவன்

ப்ரிதீவிடம்.. “ப்ரிதீவ்... நாளையில இருந்து அவங்க இங்கே வர மாட்டாங்க... இது வரைக்கும் நீங்க செய்த உதவிக்கு தாங்க்ஸ்..”

ஷைலுவிடம் “நீங்க நாளையில இருந்து பக்கத்து தெருவுல இருக்குற லைப்ரரியில இருங்க... நான் வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்..வா ” என்று அவளை எழுப்ப... அந்த இடத்தை விட்டு அசையாத ஷைலு... “ஏன்..” என்றாள் ஒரே கேள்வியாக...

“என்ன கேள்வி... இது சரி வராதுன்னு தோணுச்சு ... அதான்..”

“இத்தனை நாள் சரி வந்தது.., இப்போ ஏன் சரி வராது...? காரணத்தை சொல்லுங்க... நீங்க என்னை சந்தேகப் படுறீங்களா..” என்று நக்கலாக கேட்டவள், மனதில்

‘ஒருவேளை இவனுக்கு பிரிதீவ் யாருன்னு தெரிஞ்சிடுச்சோ.. சூப்பர்... ஆமா அப்படித்தான் என்று சொல்லு ராசா.. அந்த ஒரு வார்த்தையே போதும், அதையே பெரிசா ஆக்கி, உன் நிம்மதியை அழிக்கணும்’... என்று பலநாள் திட்டத்தில் முதல் படியில் இருப்பதாக நினைத்தவள், அவனை உறுத்துப் பார்க்க...

“சீ.. சீ.. பைத்தியம் மாதிரி உளறாதே... நான் உன்னை சந்தேகப்பட்டா, என்னை நானே சந்தேகப்படுறது போல... நான் உன்னையும் நம்புறேன், ப்ரிதீவையும் நம்புறேன்... ஆனா இனி நீ இங்கே வரது சரி வராது..”

‘என்னடா இது இப்படி புஸ்ஸுன்னு போகுது... நான் மட்டும் நிம்மதி இல்லாம தவிக்க, இவன் இப்படி அசால்ட்டா இருக்கானே.. ஒருவேளை பிரிதீவ் யாருன்னு தெரிஞ்சா, காண்டாவானோ’ என் நினைத்தவள் அடுத்தபடியாக

“இங்கப் பாருங்க... நாங்க ஏன் இங்க வரக் கூடாதுன்னு சொல்லுறீங்கன்னு தெரியும்... பிரித்தீவ் யாருன்னு தெரிஞ்சிடுச்சு அதானே.....” என்றவள் ‘மவனே யாருன்னு கேளுடா... நான் சொல்ல சொல்ல... உன் முகம் பேயறைஞ்சது போல மாறுறதைப் பார்க்கணும்..’ என தவிக்க..

“ஜனா நான் சொல்லுறதை..” என்று பிரிதீவ் இடையில் வர..

‘நீ..நில்’ என்பது போல கை காட்டியவன்.. “ஷைலஜா, நீ என்ன சொல்ல வரேன்னு எனக்குத் தெரியும்... உங்களுக்கும் தான் ப்ரிதீவ்.. இவர் தான் உனக்கு நிச்சயம் பண்ணியவர்னு இப்போ இல்ல, நீ பத்திரிக்கை கொடுக்க வந்த அன்னிக்கே தெரியும்...” என்றான்.

அத்தியாயம் - 17

சில நேரங்களில் உன் நியாபகம் கண்ணீராய் என் கன்னத்தில் உன் தடம் பதிக்கும் விந்தையை நீ அறிவாயா..

அங்கே ஒரு அதிர்வான அமைதி நிலவியது.. ப்ரிதீவ் யார் என்று தெரிந்தே தான் இதுவரை பழகினானா என்ற கேள்வி அனைவர் பார்வையிலும் இருந்தது. இது எதையும் பொருட்படுத்தாத ஜனா, தன் போக்கில் பேச்சைத் தொடந்தான்.

“நீ போனதுக்கு அப்புறம், நீ கொண்டுவந்த கல்யாணப் பத்திரிக்கையில்.. மாப்பிள்ளையைப் பற்றி போட்டு இருக்குறதைப் பார்த்து தெரிஞ்சுக்கிட்டேன்.. நீ நம்ம வீட்டுக்கு வந்த அன்னிக்கு தான், எதேச்சையா இவரும் எனக்கு அறிமுகம் ஆனார்.. ஏனோ என்னால இவர் அவமானப்படக் கூடாதுன்னு தோணுச்சு... சரி இவர்கிட்டேயே பேசிடலாம்னு தான் இங்கே வந்தேன்.. அப்போதான் நீயும் யாமினியும் இவர்கிட்ட பேசிட்டு வெளியே வந்தீங்க..

யாமினி கூட உன்னைத் திட்டிக்கிட்டு இருந்தா.. அதுலேர்ந்து, நீயே நம்ம காதலைப் பற்றி ப்ரிதீவ் கிட்ட சொல்லி இருப்பேன்னு புரிஞ்சுக்கிட்டேன். சோ நான் சொல்ல எதுவும் இல்லைன்னு திரும்பி போயிட்டேன்... அதுக்கு அப்புறமும்.. உன் குடும்பத்துக்கு இன்னைக்கு வரைக்கும் பிரிதீவ் உதவி செய்றதும் தெரியும்... போதுமா..” என்றவனை இமைக்காமல் திகைத்துப் போய் பார்க்க

“ப்ரிதீவ்வை தெரியுமா...? அப்புறமும் எப்படி அவர் கூட இத்தனை

நாளா ஃபிரெண்டா இருந்தீங்க...? இப்போ என்ன பிரச்சனைன்னு இங்கே வரக் கூடாதுன்னு சொல்லுறீங்க அண்ணா..,." என மினி படப்படக்க

"சில விஷயங்கள் அப்படித்தான்... உங்க நட்பையும் நான் மதிக்கிறேன்... பிரிதீவ் எனக்கும் ஃபிரெண்ட் தான்... ஆனா இனிமே நீங்க இங்கே வரதும்... உங்க நட்பிலும் இப்போ எனக்கு விருப்பம் இல்லை..."

'அதை சொல்ல நீ யார்..?' என்பது போல பாம்பின் சீறலுடன் அவனைப் பார்த்த ஷைலு

"அதை நீங்க சொல்லக் கூடாது... அவர் எங்க ஃபேமிலி ஃபிரெண்ட். கடைசி வரைக்கும் இந்த நட்பு தொடரும்..." என்றாள் அவனை நோகடிக்கும் எண்ணம் ஒன்றே குறியாய்..

அவள் மனதில் இருப்பது ஒன்று தான்... ஜனாவுக்கு ப்ரிதீவ் நட்பு பிடிக்கவில்லை.. எனக்கு அவன் நட்பு வேண்டும், அவ்வளவே.. என்ற மனநிலையில் இருந்தாள்.

"தத்துப்பித்துன்னு உளறாதே ஷைலஜா.. நான் தான் உன்னோட ஃபேமிலி.. நான் சொல்லுறேன் கிளம்பு.."

"முடியாது நான் ஒண்ணும் உளறலை... எனக்கு மினி முக்கியம்.."

"ஷைலஜா.., தேவையில்லாம யாமினியை இதுல இழுக்காதே.. நான் யாமினியோட ஃபிரெண்ட்ஷிப்பை விட சொல்லலையே.."

"ப்ரிதீவும் யாமினியும் லவ் பண்ணுறாங்க, அப்படி இருக்கும்போது, இந்த நேரத்துல நான் எப்படி அவளை விட முடியும்..?" என்று ஜனாவிடம் கேட்டாள் ஷைலு.

'மினி மீது இவனுக்கு ஏற்கனவே வருத்தம் இருக்கு, இப்போ ப்ரிதீவை பிடிக்கலைன்னு வேற ஆகிடுச்சே.. இந்த சமயத்துல அவங்க ரெண்டு பேரும் லவ் பண்ணுறாங்கன்னு சொன்னா, நொந்து தானே போவான்' என அவனை வெறுப்பேற்ற தான் அப்படி கேட்டாள். ஆனால் சொல்லிய பின்பே தான் சொன்ன வார்த்தையின் வீரியம் புரிய, மனம் அதிர மினியைப் பார்க்க...

அவளது முகமோ 'ஏண்டி இப்படி சொன்னாய்..?' என்பது போல அதிர்ந்தது. அதற்கு எதிர்மறையாக ப்ரிதீவின் முகத்தில் சந்தோசம்

வாணவேடிக்கை நிகழ்த்தியது... மூவரையும் சற்றுநேரம் உற்றுப்பார்த்த ஜனா.., ப்ரிதீவை தனியாக பேச அழைத்து செல்ல.. அதுவரை அமைதியை இழுத்துப்பிடித்த மினி

“ஏண்டி, ஏன் அப்படி சொன்னே...?”

“அது... நான்... மினி நான் ஏதோ ஒரு வேகத்தில்... ஜனாவை வெறுப்பேற்ற.. அதுவுமில்லமாம ... ப்ரிதீவ்வுக்கும் உன் மேல.. விருப்பம் இருக்கு போல..நீயும்.”

“அறிவு இருக்கா..? நீ யோசிக்காம வம்புல மாட்டுனா.. என்னையும் ஏண்டி எப்பவும் எல்லாத்திலும் இழுத்து விடுற..?”

“மினி உனக்கும் ப்ரிதீவ்வை பிடிக்கும்னு நினைச்சேன்... ஏன்னா அவர் உன்னிடம் பேசுற விதமே அவரோட மனசை சொல்லுது... நீயும் அவரை தவிர்க்கல, அதனால உன்னோட மனசிலும் ஆசை இருக்குன்னு நினைச்சேன்.. அதான்..”

“லூசா நீ.. பிரிதீவ் எனக்கு நல்ல ஃபிரெண்ட்.. நான் அப்படிதான் நினைக்கிறேன்.. அவரை தவிர்க்காததற்கு ரீசன், அவர் ஒரு நல்ல மனுஷன், இவ்வளவுக்கு பிறகும், நீயும் நல்லா இருக்கணும்னு நினைக்கிறார். , உன்னோட குடும்பத்தையும் பாத்துக்குறார், அந்த நல்ல மனசை மட்டும் தான் நான் பார்க்குறேன். அது மட்டுமே தான் காரணம்.. அவரோட மனசுல எந்த சலனமும் இல்லை. என் மனசிலும் எதுவும் இல்லை... அவர் விளையாட்டுத்தனமா செய்யுறதைப் போய்..! அப்படியே அவருக்கு என்மேல சலனம் இருந்தாலும், வேண்டாம்னு சொன்னா புரிஞ்சுக்குவார்... அதுக்குள்ளே நீ ஏண்டி இப்படி ஏழரையை கூட்டுற...?

முக்கால்வாசி காதல்கள், உன்னைப் போல கூட இருக்குற லூசுங்க, ‘அவன் உன்னைப் பார்க்கிறான்’ என்பதில் தான் ஆரம்பிக்குது... இப்போ நான் ஜனா அண்ணன்கிட்ட என்ன சொல்லுவேன்..” என புலம்பும் போதே ப்ரிதீவுடன் வந்த ஜனா..

“ஓகே பாய் ப்ரீதீவ்.. வாழ்த்துக்கள் யாமினி...” என்றவன், அதற்கு மேல் பேசாமல் ஷைலுவுடன் கிளம்ப..

ப்ரிதீவின் முகம் பார்க்க முடியாமல் தவித்த மினி.., “சாரி சாரி.. அவ ஏதோ.. புரியாம..”

“மினி, நான் கொஞ்சம் யோசிக்கணும், அதுக்குள்ளே இப்பவே எதுவும்

நெகட்டிவா பேசிடாதே.. ப்ளீஸ்... இப்போ நீ கிளம்பு" என்றவனை புரியாதப் பார்வை பார்த்தபடி கிளம்பினாள் மினி..

அடுத்த நாள் வழக்கமாக ஷைலுவும், மினியும் வரும் நேரத்திற்காக காத்திருந்த ப்ரிதீவ், நேற்றைய நிகழ்வுக்கு பின் தெளிவற்ற மனநிலையில் இருந்தான்... ஜனாவுடனான சந்திப்பு அவனுக்குள் ஒரு தெளிவைக் கொடுத்து, ஜனாவின் மீது பெரும் மதிப்பை ஏற்படுத்தி இருந்தது.. அவனுக்காக.. அவன் நட்புக்காக எதையும் செய்யலாம் என்ற மனோபாவத்தை கொடுத்திருந்தது... ஷைலுவிடம் மன வருத்தம் இருந்தாலும், அவள் ஜனாவுடன் நல்லபடியாக வாழ தன்னால் இயன்றதைச் செய்து, ஜனாவின் நட்பை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் நினைத்தான்.

ஆனால் மினி மீதான தனது முடிவுகளில் பலவிதத்தில் குழப்பம் வந்தது... மினி விஷயத்தில் தான் செய்வது தவறா சரியா என்று அலசி ஆராய்ந்தான்... கிடைக்கும் பதில் அவனை மேலும் குழப்பியது.. ஆனால் மினியுடன் காதல் என்ற எண்ணத்தைக் கைவிட முடியாமல், அது ஏன் என்றும் யோசிக்காமல்.. இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்தான்.

'இப்படித்தான் ஷைலு பேசியதை வைத்து அவளை நம்பினேன்... இப்போ மினி பேசுறதை எப்படி நம்புறது...? அவ சரியான சுயநலவாதி.. அந்த மூஞ்சியை எவனும் பிராக்கெட் போட்டிருக்க மாட்டான்.. அதான் இது குப்புற விழுந்தாலும், மீசையில மண் ஒட்டலைன்னு பூசி மொழுகுது... அப்படியே அவ நல்லவளா இருந்தாலும், எனக்கு கெடுதல் தானே செய்தா,.. விருப்பம் இல்லாத பெண்ணை எப்படி என் தலையில் கட்டப் பார்க்கலாம்..? என் வாழ்க்கையில் முடிவெடுக்கும் உரிமையை அவளுக்கு யார் கொடுத்தா...? அந்த ஒண்ணுக்காகவே பிளானை டிராப் பண்ண முடியாது...' என்று தன் எண்ணத்திலேயே மீண்டும் மீண்டும் உழன்றான்.

அடுத்தமுறை மினியை எப்படி சமாளிப்பது..? கேட்கும் கேள்விக்கு எப்படி பதில் சொல்வது... என்று யோசித்துக் கொண்டு இருக்கையில்., அவன் செல்லுக்கு புதிய எண்ணில் இருந்து அழைப்பு வர... 'யாராக இருக்கும்..?' என்று எண்ணியவாறே அதைக் காதுக்கு கொடுத்தான்.

"ஹலோ.. ப்ரிதீவ் ஹியர்..." என்றதும் எதிர்புறம் மௌனமாகவே இருக்க..

“ஹலோ போன் பண்ணினா பேசணும், இப்படி அமைதியா இருந்தா எப்படி...? உங்களுக்கு யார் வேணும்..?” என்று கேட்டும் எதிர்புறம் அமைதியாகவே இருக்க.. “சே.. இம்சைங்க வெறுப்பேற்றவே போன் பண்ணுறானுங்க..” என்றவன் கட் செய்யப் போக... ஒரு மெல்லிய குரல் “போனை வைச்சுடாதீங்க, நான்தான்..”

ஒரு நொடி உறைந்து நின்றவன்... முகம் மலர உதடுகள் ஓசை இல்லாமல் ‘பீரோ’ என்றது... இப்போது இவன் அமைதியாக இருக்க... மறுபுறம் “ஹலோ.. ஹலோ..” என்றது படபடப்புடன்.

உதட்டுக்குள் சிரித்தபடியே “ஹலோ மேடம், ஏன் இப்படி லோ... லோ...லோன்னு செவிப்பறையைக் கிழிக்கிறீங்க ...? ஃபார் யுவர் கைண்ட் இன்ஃபர்மேஷன், நீங்க ஒண்ணும் ஸ்கைப்ல பேசலை, உங்க முகத்தைப் பார்த்து ஆளைக் கண்டுப்பிடிக்க... பேரை சொல்லிட்டு கத்துறது...”

“இடியட்..” என அவன் காதுபட திட்டிவிட்டு “நான் மினி... இன்னைக்கு ஷைலு காலேஜுக்கு வரலை.. சோ இன்னைக்கு அவ அங்கே வர மாட்டா... அதை சொல்லத்தான் போன் பண்ணேன்...”

“அப்படியா...! ஓகே அதை ஏன் என்கிட்டே சொல்லணும்..?”

“நீங்க காத்திருப்பீங்களேன்னு சொன்னேன்.. அப்புறம்.”

“உனக்காக காத்திருப்பேன்னு சொல்லுறியா..”

“ப்ளீஸ்.. பேச்சை மாத்தாதீங்க... நான் உங்ககிட்ட பேசணும்.. நேர்ல வேண்டாம் இப்போ நீங்க ஃப்ரீயா...? போனில் பேசலாமா..?”

“என்ன சொல்லு..”

“நேத்து ஜனா அண்ணா உங்களை தனியாக கூட்டிட்டுப் போய் என்ன சொன்னார்..?”

நேற்றைய தினம் அவன் முன் விரிய..

பேசுகிறேன் என்று கூட்டி வந்த ஜனா சிறிது நேரம் அமைதியாகவே இருந்தவன், பின் மெல்ல “ப்ரிதீவ், நீங்க மினியை விரும்புறது உண்மையா..? ஏன் கேட்கிறேன்னா இன்னைக்கு எவனோ ஒருத்தன் எனக்கே போன் பண்ணி, உங்களையும் ஷைலுவையும் பத்தி தப்பா பேசுறான்...

அதனால் தான் அவ இங்கே வர வேண்டாம்னு நினைச்சேன். எனக்கு சந்தேகமெல்லாம் இல்லை.. ஷைலுவுக்கு என் மேல கோபம் இருக்கு.. அதே அளவு காதலும் இருக்கு.. எந்த கணத்திலும் அவ வழி தவற மாட்டா.. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு.. இந்த விஷயம் தெரிஞ்சா அதை தாங்கிக்கிற சக்தி அவளுக்கு இல்லை..” என்று நிறுத்தியவன், பின் தானே தொடர்ந்தான்.

“அவ குழந்தை மாதிரி... தேவையில்லாத பிரச்சனை வரும்னு தான் இங்கே வர வேண்டாம்னு சொன்னேன்... நீங்களும் மினியும் லவ் பண்ணுற பட்சத்துல .. இது அனாவசிய பயம்... என்ன ஒண்ணு.. நீங்களும் மினியும் தெளிவா இருக்கணும்.. எதுக்காகவும் ஷைலஜா வருத்தப்பட கூடாது.. எனக்கு அது போதும்” என்று அவன் பதிலை எதிர்பாராமல் பேசியவன், வெளியே போக கதவில் கை வைத்தவன், திரும்பவும் கிட்டே வந்து.

“ப்ரிதீவ், நா பேசிட்டே இருக்கேன், நீங்க ஏன் பதிலே சொல்லலை..? உண்மையிலேயே மினியை காதலிக்கிறீங்க தானே..! உங்க முகத்தைப் பார்த்தா, ஏதோ சரியில்லைன்னு தோணுது. வெளியே மினியோட முகமும் சரி இல்லை.. ஆனா நான் ஷைலு சொல்லுறதை நம்புறேன்..” என்றவன் முகம் இறுக

“ப்ரிதீவ், உங்களால் மினிக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆச்சு, நீங்க நிக்கிற இடத்திலேயே குழி தோண்டிப் புதைச்சுடுவேன்... ” என்றதற்கு ப்ரிதீவ் பதில் சொல்ல இயலாத நிலையில், மிரண்டு போய் தலையை மட்டும் அசைக்க.. அதை பார்த்தவனின் மனம் இளக

“கோவிச்சுக்காதீங்க ப்ரிதீவ்.. நீங்க எனக்கு நண்பன் மட்டும் தான். ஆனா மினி எனக்கு தங்கச்சி.. எனக்கு உங்களை விட அவ முக்கியம். அவ வருந்தினாலும் எனக்குப் பிடிக்காது. அதான் அப்படி பேசிட்டேன். மனசுல எதுவும் வைச்சுக்காதீங்க” என்றவன் ப்ரிதீவை அணைத்தபடியே வெளியேறினான்.

‘தனக்கு கெடுதல் செய்த பெண் மேல் கூட இவ்வளவு பிரியம் வருமா.? நியாயமா ஜனாவுக்கு தான் மினி மேல அதிகம் கோபம் இருக்கணும், அவனே அவ செய்தது தப்பு இல்லை, அவளைப் பிடிக்கும்னு சொல்லுறான்னா, மினிகிட்ட தப்பு இல்லையோ...!’ என்ற குழப்பமே நேற்றிலிருந்து தன்னை தடுமாற வைக்கிறது என்பதை உணர்ந்தவனாக

“ம்ம்ம் உன்னை நிஜமா லவ் பண்ணுறேனா என்று கேட்டார்.. உன்னை ஏமாற்றினாலோ இல்லே உன்னை கஷ்டப்படுத்தினாலோ, நிக்கிற

இடத்திலேயே என்னைக் குழி தோண்டிப் புதைச்சிடுவேன்னு சொன்னார்.. போதுமா”

“நிஜமாவா.. அவர் ஏன் உங்களை மிரட்டணும்..? அப்போ நீங்க என்னை லவ் பண்ணுறேன்னு ஒத்துக்கிட்டீங்களா..அப்படின்னா ஏன்..? இது தப்பு இல்லையா.. நான் உங்களை..” என்று அவள் தயங்கி தயங்கி பேசிய விதமே, அவள் என்ன பேச போகிறாள் என்று உணர்த்த... உடனே சுதாரித்தவன்..

“என்னோட போன் நம்பர் உனக்கு ஏது மினி..?”

“ஷைலுகிட்ட வாங்கினேன் ஏன்..?”

“எப்போ.?.”

“ப்ச்.. எப்பவோ.. இப்போ அது ரொம்ப முக்கியமா...? இங்கப் பாருங்க, நீங்க நடந்துக்குற முறை சரியில்லை.. அது தான் மத்தவங்களையும் தப்பா நினைக்க வைக்குது... நான் விளையாட்டுன்னு தான் இத்தனை நாளா நினைச்சேன்.. இப்போ எனக்கே நீங்க ஏதோ தப்பா எண்ணம் வளர்த்துக்குறீங்களோன்னு தோணுது.. அதை பத்தி நான்.. பே...”

“ஸ்டாப்.. ஸ்டாப்.. நான்-ஸ்டாப்பா பேசுறே.. ரிலாக்ஸ்... தேங்க்ஸ்... மினி தேங்க்ஸ்...” என்று அப்படியே நிறுத்த

“தேங்க்ஸா.. இப்போ அது எதுக்கு..?” என்ற குழப்பத்தில், தான் என்ன பேச நினைத்தோம் என்பதையே மறந்தவளாய்..

“அதான்... நான் கேட்டவுடனே போன் நம்பர் கொடுத்துட்ட இல்ல அதுக்கு..”

அவன் அவளின் போன் நம்பர் கேட்ட விதம் நினைவுக்கு வரவும், உடலின் ரத்தம் முழுவதும் முகத்திற்குப் பாய.. நடந்தவை அத்தனையும் மறந்து, மண்டை வெற்றிடமாக இருப்பது போல தோன்ற... பேசவே தெரியாதவள் போல... “நீங்க ஏ..ஏன் குழப்புறீங்க... நான்... நான் பேச.... வந்து.. அப்புறம் பேசுறேன்..” என பூசி மொழுகி போனை கட் செய்தாள்.

ஒலியிழந்த செல்லை சிரித்தபடி கொஞ்ச நேரம் பார்த்தவன், அவள் நம்பரை ‘மினிம்மா’ என்ற பெயரில் பதிவு செய்துவிட்டு, அதைப்பார்த்து சிரித்துக் கொண்டே

“பக்கி.. நானே மண்டை சூடாகி இருக்கேன்... இப்போ உன்கிட்டே

பேசினேன், அவ்வளவு தான்... எல்லாம் சொதப்பலில் தான் முடியும் பீரோ... உன் ஹீரோவுக்கு யோசிக்க கொஞ்சம் டைம் கொடுடி.. அய்யாவுக்கு கொஞ்சமே கொஞ்சம் தான் மூளை இருக்கு." என்று வாய்விட்டே சொல்லியபடி தன் வேலையை கவனிக்கத் துவங்கினான்.

புரியாத ஒரு பரவசமான மனநிலை இரவு வரை நீடித்தது... நேரம் ஒன்பதை நெருங்குகையில் அன்றைய கணக்குகளில் ஆழ்ந்து இருந்தவனை செல் ஓசை கலைக்க... போன் 'மினிம்மா' என்று ஒளிர.. "விடாக்கண்டி விட மாட்டாளே..." என முணுமுணுத்துக் கொண்டே காதுக்கு கொடுத்தவன்

"பீரோ.. என்ன.. ஹீரோ நெனைப்பு வாட்டுது போல.."

"இடியட்.. நினைப்பு தான் பொழப்பைக் கெடுக்குது.. ப்ரிதீவ்.. கொஞ்சம் பேசுறதைக் கேளுங்க.. ஷைலுவை தேவகி நர்சிங்ஹோம்ல சேர்த்து இருக்காங்களாம்.. இப்போ தான் ஜனா அண்ணா போன் பண்ணார்.."

"ஹே... என்ன சொல்லுற...? நல்லாதானே இருந்தா.. என்னாச்சு.. ஜனா என்ன சொன்னார் ?" என்றான் பரபரப்புடன்...

"தெரியலை. விவரம் எதுவும் சொல்லலை.. நான் அப்பா கூட அங்கே வரதுக்காக, அப்பாவுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கேன்... நீங்க இப்போ அங்கே போக முடியுமா..? ப்ளீஸ்.. ஜனா அண்ணாவால தனியா சமாளிக்க முடியாது.."

"மினி.. நான் போறேன்.. நேத்து நடந்ததுல ஜனா ஏதாவது தப்பா..."

"சீ.. என்ன உளறுறீங்க.. போய் அண்ணனுக்கு துணைக்கு இருங்கன்னு சொன்னா, தேவையில்லாம பேசிட்டு... நானே அண்ணன் எப்படி தவிக்கிறாரோன்னு பதறிப் போய் இருக்கேன், சீக்கிரம் போங்க.."

"ஏய் அங்க உடம்பு சரியில்லாம இருக்குறது உன்னோட ஃபிரெண்டு.. அதை பத்தி கொஞ்சம் கவலைப்படு... சும்மா அண்ணன் நொண்ணன்னு.. நான் கிளம்புறேன்.." போனை வைத்தவனின் மனம் தவித்தது.

'ஜனா நேற்று நம்மகிட்ட நல்லா தானே பேசினார்... அது நடிப்பா... ஷைலுவை ஏதாவது செஞ்சிருப்பாரோ..? ஒரு வேளை, தப்பு ஜனாகிட்ட தான் இருக்கோ... கடவுளே.. என்னிக்கு இந்த ஷைலுவைப் பார்த்தேனோ, அன்னையில் இருந்து யாரையும் நம்ப முடியல... யாரைப் பார்த்தாலும் சந்தேகமாவே இருக்கே.. தெளிவா எந்த முடிவையும் எடுக்க

விடாமல், பயபுள்ளைக தெளிவா குழப்புதுங்க...' என்று புலம்பியபடி காரை எடுத்தவன், டிராபிக் கடலில் நீந்தி ஹாஸ்பிட்டலை அடைவதற்குள் திணறிப் போனான்.

ரிசப்ஷனில் விவரம் சொல்லி, அறை எண்ணையும் மற்ற தகவல்களையும் கேட்டுக் கொண்டு திரும்ப... மினி அவனை நோக்கி பதட்டமாக ஓடி வந்தாள் "ப்ரிதீவ், அவளுக்கு என்ன ஆச்சு...? ரூம் நம்பர் என்ன..?"

"இரு இரு பொறுமையா இரு.... நானே இப்போதான் வந்தேன்... ஜனா டாக்டர் ரூமுல இருக்கிறார் போல, அங்கே போவோம்..." என்று அங்கே போனவர்கள் கண்டது... 'தன் வாழ்வே முடிந்து விட்டது' என்ற பாவனையில்... மற்றவர் பேசுவதைக் கூட கேட்க இயலாத நிலையில் இருந்த ஜனாவையும்.. அவனைத் தேற்ற முயற்சித்து களைப்படைந்த டாக்டரையும் தான்..! அந்த சூழ்நிலை மேலும் பீதியைக் கொடுக்க.. விரைந்து ஓடிய ப்ரிதீவ் "ஜனா" என்று அவன் தோளை உலுக்க... அவனோ தன் நினைவில் இருந்து கொஞ்சமும் மீளவில்லை.

அதற்குள் இருவரையும் மாறி மாறிப் பார்த்த டாக்டர், மினியிடம் "நீங்க யாரும்மா.. இவருக்கு உறவா..?"

"இல்லை டாக்டர்... நாங்க ஃபிரெண்ட்ஸ்.. ஷைலுவுக்கு என்ன ஆச்சு..?" என்றவளின் முகத்தில் தெரிந்த பயமே, அவள் மனநிலையை சொல்ல, கனிவாக சிரித்தவர்..

"ஒண்ணும் பெரிய ப்ராப்ளம் இல்லை. வழக்கமான லேடீஸ் பிராப்ளம் தான் கர்ப்பப்பையில் நீர்கட்டி இருக்கு... அவங்களுக்கு ரொம்ப நாளா அதிக வலியும் இருந்திருக்கு.. டாக்டர்கிட்டேயும் போயிருக்காங்க... ஸ்கேன் பண்ணச் சொல்லியிருப்பாங்க போல.. இவங்க மேரேஜ் பிஸியில அதை எடுக்கலையாம்... இன்னைக்கு பெயின் அதிகமாகிடுச்சு.. கட்டி பிளாஸ்ட் ஆகுற ஸ்டேஜ்.. சோ ஹெவி பெயின்... வலி தாங்க முடியாம, மயக்கமாகிட்டாங்க... அதைப்பார்த்து சார் ரொம்ப பயந்துட்டார்..."

"இப்போ அவங்க கண் முழிச்சுட்டாங்க.. தூங்க வச்சிருக்கிறோம்.. காலையில் லேப்ராஸ்கோப்பிக் ஆபரேஷன்.. ஜஸ்ட் ஒரு ஹோல் தான் போடுவோம்... அடுத்தநாள் வீட்டுக்கு போய்டலாம்.. ஒரு வாரம் ரெஸ்ட் எடுத்தா போதும்.. ஆனா சார் தான், நான் சொல்லுறது எதையுமே காது கொடுத்து கேட்க மாட்டேங்குறார்... இவருக்கு (bp) பிபி ரொம்ப ரெயிஸ் ஆகுது.. எவ்வளோவோ பேசி பார்த்துட்டேன்.. நான் மத்த

பேஷண்ட்களையும் பார்க்கணும், கொஞ்சம் அவருக்கு எடுத்துச் சொல்லுங்க...” என ஜனாவை நோக்கி கண்ணைக் காட்ட...

“அண்ணா.. அண்ணா.” என்று மினி அவனை உலுக்க... கனவில் இருந்து விடுபட்டவன் போல

“யாமினி வந்துட்டியா.. பாரு... நான் சரியான மடையன்.. யோசிக்காம அவளைக் கொல்லப் பார்த்துட்டேன்... அவ வலிக்குதுன்னு சொன்னா.. நான் புரிஞ்சிக்காம திட்டிட்டேன்... அவளுக்கு ஏதாவது ஆகிடுச்சுன்னா நான் உயிரோடவே இருக்க மாட்டேன்.. அவ சொல்லுறது சரி தான்... அவ மனசைப் புரிஞ்சிக்காத ஜடம்தான் நான்.. அனாதையா பொறந்து அனாதையாவே சாக வேண்டியவன்... ஏதோ ஆசையில அவளைக் கட்டிக்கிட்டு, இப்போ அவளை அழிச்சுட்டேன்...

எனக்குத் தெரியலை.. லேடீசுக்கு இவ்வளோ பிரச்னை இருக்கும்னு எனக்கு தெரியல... அவ இல்லாம நான் என்ன பண்ணுவேன்..? அப்படியே துணி போல துவண்டு கிடந்தா, இப்படி.. இப்படி கையில தூக்கிட்டு வந்தேன்.. அந்த நிமிஷமே நான் செத்துட்டேன்... நானே அவளைக் கொன்னுட்டேன்..” என்று பைத்தியம் போல உளறுபவனைப் பிரமிப்புடன் பார்த்து... இவனை எப்படி தேற்றுவது என்று ஒரு நொடி சிந்தித்தவள்...

“அண்ணா.. இது இயற்கையா நடக்குறது.. அப்படி நடந்ததுக்கு நீங்க என்ன பண்ண முடியும்..? அதான் டாக்டர் பிரச்னை எதுவும் இல்லைன்னு சொல்லிட்டாங்களே..”

“இல்ல இந்த கல்யாணம் நடக்காம இருந்திருந்தா, அவ டாக்டர்கிட்ட போயிருப்பாதானே... அவ ஏன் என்கிட்ட சொல்லலை..?.” என்று தொலைந்து போன குழந்தையின் பாவனையில் கேக்க..

டாக்டர் ப்ரிதீவிடம் வெளியே வருமாறு சைகை செய்துவிட்டு வெளியேற... அவரை பின் தொடர்ந்தான் ப்ரிதீவ்.

“மிஸ்டர்....”

“ஐ ஆம் ப்ரிதீவ்..”

“ம்ம் ப்ரிதீவ்.. ஐ ஆம் டாக்டர் ரேவதி.. இங்கப் பாருங்க, அவர் ரொம்ப டிப்ரஸ்டா இருக்கார்.. பர்ஸ்ட் ஹீ நீட்ஸ் எ குட் ஸ்லீப், இந்த டேப்லெட்டைக் கொடுத்து தூங்க வைங்க..” என்று ஒரு மாத்திரையை அவனிடம் கொடுக்க...

“டாக்டர்.. நாங்க எப்படி..? ஜனா இதைப் போட்டுக்குவாரா..?”

“அவரைப் போட வைங்க.. ” என்று சொல்லிவிட்டு அவர் விலக... சிறிது யோசித்து விட்டு.. கான்டீன் சென்று ஒரு காபி வாங்கியவன், அதில் மாத்திரையைக் கலந்து, ஷைலு அறையில் இருந்த ஜனாவிடம் அதைக் கொடுக்க... மறுத்த அவனை.. விடியும் வரை ஷைலுவுக்கு துணையாக இருக்க வேண்டும் என்று ஏதேதோ சொல்லி அவனை குடிக்க வைப்பதற்குள் இருவரும் களைத்து விட்டனர்.

சற்று நேரத்தில் மாத்திரை வேலை செய்ய ஆரம்பிக்க.. ஜனாவின் அரற்றல் குறைந்து நிதானத்துக்கு வந்தவன்.. ஷைலுவின் மீது பார்வையை மீது படிய விட்டவாறே,அமர்ந்திருந்த திண்டிலேயே சாய்ந்து கொண்டான்.. மனமோ காலையில் நடந்த நிகழ்வுக்கு சென்றது.

வழக்கம் போல அன்றும் விழித்தவன்... ஷைலு எழும்பாததைக் கண்டு, நேற்று ப்ரிதீவ்வின் கஃபேயில் இருந்து வந்ததிலிருந்தே கோபத்துடன் பேசாமல் இருப்பவள், இன்னும் அதை இழுத்துப் பிடிக்கிறாள்.. என்ன கோபம் என்று கேட்டாலும் சொல்ல மாட்டாள் என்ற எண்ணத்தில், அவளுக்கு ஒரு குரல் கொடுத்துவிட்டு குளிக்க சென்றான்.

குளித்துவிட்டு வந்தும் அவள் அப்படியே படுத்திருக்க... கடுப்பானவனாக “ஷைலஜா.. எழுந்திரு..” என்று உலுக்கி எழுப்ப, கண்களை மட்டும் திறந்து என்ன என்பதைப் போல பார்க்க.. எரிச்சல் கொண்டவனாக..

“இன்னைக்கு காலேஜ் இல்லையா..? எனக்கும் வேலைக்கு நேரம் ஆகுது.. நீ இன்னும் டிஃபன் கூட செய்யலை... எழுந்திரு..”

“எனக்கு உடம்பு முடியலை.. நீங்க வெளியே சாப்பிட்டுக்கோங்க..” என்று முனகலாக சொன்னவள், கண்களை மீண்டும் மூடிக்கொள்ள..

பிறந்ததில் இருந்து உணவின் ருசி என்பதை அறியாதவன்... ஷைலுவின் வரவிற்கு பிறகு... ருசிக்காக என்பதை விட.. எனக்காக சமைக்கப்பட்ட உணவு என்ற பெருமிதம்... ஷைலு கையால் சாப்பிடும் போது கிடைக்கும் அந்த நிறைவான உணர்வு.. என அவள் கை உணவிற்கு ஆட்பட்டு இருந்தான்... இன்று அது கிடைக்காது என்பதே ஏமாற்றமாக தோன்ற.. தன் உணர்வை வெளிக்காட்டாமல்...

அவளை நெருங்கி “ஏன், என்ன செய்யுது ஜுரமா..” என்று தொட்டுப்

பார்த்தவன் 'சில்' என்று இருக்கவும்.. "ஜுரம் ஏதும் இல்லையே.. உனக்கு என்ன செய்யுது....." என பிடிவாதமாக எழுப்ப..

"ஏன் உயிரை வாங்குறீங்க..? என்னை விடுங்க. எனக்கு வயிற்றை வலிக்குது..."..

"இவ்ளோ தானா...! இதுக்கா இப்படி சுருண்டுப் படுத்து இருக்க, நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்.. ஒரு மாத்திரை போட்டா சரியா போய் இருக்கும்.. சாப்பாடு ஏதாவது ஒத்துக்காம இருந்திருக்கும்.. பெயின் கில்லர் போட்டுட்டு லைட்டா உப்புமா மட்டும் கிண்டிடு போதும்.." என்றவன் சட்டையை அயர்ன் பண்ணத் துவங்க..

கோபத்தில் பல்லைக் கடித்தவள்.. "இங்கப் பாருங்க.. என்னால முடியல.. இது லேடீஸ் பிராப்ளம். உங்களுக்கு சொன்னாலும் புரியாது.. இன்னைக்கு வெளியே சாப்பிட்டுக்கோங்க..." என்றவள் மீண்டும் சுருண்டு விட..

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதை சிறிய யோசனைக்குப் பின் புரிந்துக் கொண்டவனுக்கு மிஞ்சியது கோபமே... "வெளியே சாப்பிட நான் ஏன் உன்னை கல்யாணம் பண்ணனும்..? நானும் பார்த்துட்டே இருக்கேன்.. உன் குழந்தைத் தனத்துக்கு அளவே இல்லாமல் போகுது.. ஊர் உலகத்தில் நீ மட்டும் தான் பெண்ணா.. இல்லை உனக்கு மட்டும் தான் இப்படி அதிசயமா நடக்குதா..? எதுக்கு இப்படி ஓவர் ஆக்ட் பண்ணுறே...? வர வர என்னைக் கண்டாலே உனக்கு ரொம்ப அசட்டையா போச்சு இல்ல..."

"சின்ன விஷயத்தை கூட பெருசு பண்ணி பார்க்கறதே உனக்கு வேலையா போச்சு... இந்த லட்சணத்துலதான் உன்னை வளர்த்து விட்டிருக்காங்க உன் அப்பா அம்மா... எல்லாம் என் தலையெழுத்து.." என்று திட்டிவிட்டு ஹோட்டலுக்கு சென்றவன், தான் மட்டும் சாப்பிட மனம் இல்லாமல், நாலு இட்லியை பார்சல் வாங்கிக் கொண்டு வந்து, அழுதுக்கொண்டு இருந்த ஷைலுவின் பக்கத்தில் வைத்துவிட்டு.. சிறிது நேரம் தயங்கியவன்...

"ஷைலஜா.. இட்லியும் மாத்திரையும் வச்சு இருக்கிறேன்.. சாப்பிட்டுத் தூங்கு மதியமா வரேன்.. ரசம் மட்டும் வச்சிடு.." என்றவன் அவள் பதிலை எதிர்ப்பார்க்காமல் வேலைக்கு சென்று விட.. மற்றதை மறந்துவிட்டு வேலையில் ஆழ்ந்தவனுக்கு.. ஒரு மணி ஆனதை வயிறு சொல்ல, ஷைலுவின் நினைவும் வந்தது. உடனே வீடு வந்தவனுக்கு ஷைலு அதே இடத்தில் அப்படியே படுத்து இருக்கவும்.. மேலும்,

வைத்துவிட்டு போன இட்லியும் சீண்டப்படாததோடு கெடவும் ஆரம்பித்திருந்தது... 'என்ன இவள் இப்படி இருக்கிறாளே' என அலுப்பாக இருந்தது... இருந்தும் அவள் அருகே அமர்ந்து தன்மையாகவே.. அவளை எழுப்பினான்.

"ஷைலஜா.. சாப்பிட்டு மாத்திரைப் போட சொன்னா, அப்படியே வச்சிருக்குற.. நீ என்ன குழந்தையா..? இப்போ பார் இட்லி கெட்டுப் போக ஆரம்பிச்சுடுச்சு..." என பேச்சின் தொடக்கத்தில் இருந்த இலகு தன்மை போய் கோபத்தில் முடிக்க.. ஷைலு பதில் பேசாமல் அவனை முறைத்துவிட்டு மறுபுறம் திரும்பி படுக்க.. அதுவே மேலும் அவன் கோபத்தை கிளறியது.. அவளை தன் புறம் திருப்பியவன்

"ஏய் நான் பேசிட்டு இருக்கிறேன்.. கொஞ்சம் கூட சட்டை பண்ணாம திமிரா இருக்கே... இப்படி சாப்பாட்டையும் வீணாக்கி இருக்க... உனக்கு பிடிக்கலேன்னா யாருக்காவது கொடுத்து இருக்கலாமே.. உனக்கெல்லாம் மூணு வேளையும் சோறு கிடைக்குற திமிர்..."

"ஆமா எனக்கு திமிர் தான்.. இப்போ என்ன... உங்க கப்பி புத்தி உங்களை விட்டு போகவே போகாதா..? எப்போ பார்த்தாலும் சோத்து குண்டான் நினைப்பு தானா.. இப்போ கூட இட்லி பத்தி கவலைப்படுறீங்களே தவிர என்னைப் பத்தி நினைக்கல இல்ல.." என்று கேட்டுவிட்டு அழத் தொடங்கினாள்.

அவள் அழுகை மனதை கனக்க வைக்க.. எதுவும் பேச இயலாமல் அவளையே சற்று நேரம் வெறித்துவிட்டு, கெட ஆரம்பித்து இருந்த உணவை கடகடவென சாப்பிட்டான்.. பின் அவளுக்கு தயிர் சோறு வாங்கி வந்தவன்.. ஷைலு எவ்வளவு மறுத்தும் கேளாமல், அதை கட்டாயப்படுத்தி உண்ண வைக்க.. இரண்டு வாய் வாங்கியவள் முடியாமல் அவன் மேலேயே வாந்தி எடுக்க... அவன் கோபத்தின் உச்சிக்கே போனான்.... அவள் வீம்புக்கு வேண்டுமென்றே அவ்வாறு செய்கிறாள்.. என்று அழுத்தமாக மனதில் பதிய.. வழக்கம் போல வார்த்தைகளை அதிகமாக சிதற விட்டவன்... மீண்டும் வேலைக்கு வந்தும் நிம்மதி இல்லாமல் தவித்தான்.

வழக்கம் போல மாலையில் கிளம்ப நினைத்து., 'இப்போ போனா பிரச்சனை செய்வா' என்று தயங்கி கிளம்பாமல் இருந்தவன்.. ஏழு மணிக்கு மேல் பொறுக்க இயலாமல்... காலையில் இருந்து சாப்பிடவில்லையே... என்ன பண்ணுறாளோ என்ற தவிப்பும் சேர, உடனே கிளம்பினான்... வந்தவனை இருண்டுக் கிடந்த வீடே

வரவேற்றது.

அதுவே மேலும் எரிச்சலைக் கூட்ட.. வேகமாக அறைக்குள் நுழைந்தவன்.. போகும் போது பார்த்த அதே நிலையில் ஷைலு படுத்திருப்பதைப் பார்க்கவும், கோபம் தலைக்கேறி, வேகமாக அவளை உருட்டி விட... அவளோ கொடி போல தன் சுயநினைவு இல்லாமல் உருள...அதைக் கண்டு அதிர்ச்சியில் உடல் நடுங்க, பயத்தோடு அவளை உலுக்கத் தொடங்கினான்... பலன் பூஜ்ஜியமே. அதன்பிறகு நிகழ்ந்தவை அத்தனையும் கனவு போல இருந்தது... நினைவுகள் அலைக்கழிக்க... கண்கள் சொருக உறக்கத்துக்குள் சென்றான் ஜனா.

கண் கலங்க அவன் அருகே இருந்த மினி.. வெளியே அமர்ந்திருந்த ப்ரிதீவ் அருகே வந்தவள்.. கண்மூடி அமர்ந்திருந்தவனை எழுப்ப..

பதட்டமாக "என்ன.. என்னாச்சு..?"

தயங்கியபடியே.. "ஒண்ணும் இல்லை... அண்ணன் நல்லா தூங்கிட்டார், இனிமே நர்ஸ் பார்த்துப்பாங்க.. நாம காலையில வரலாம், நீங்க கிளம்புங்க.. நானும் கிளம்புறேன்... அப்புறம் ஷைலுவோட வீட்டுக்குப் போய் பார்த்தேன், அவங்க வீட்டைக் காலி பண்ணிட்டாங்களா, என்ன...? இப்போ எங்கே இருக்காங்க..? அவங்க அம்மாவை வரச் சொல்லுங்க... அவ பாவம்.."

முகம் இறுக "பொண்ணு இப்படி செஞ்சா.. அப்புறம் என்ன பண்ணுவாங்க...? இங்கப் பாரு மினி.. ஏற்கனவே அவங்க நொடிச்சுப் போய் இருக்காங்க.. ரொம்ப கோபத்துல வேற இருக்காங்க... இப்போ இதைக் கேட்டா, இன்னும் நொடிஞ்சு போய்டுவாங்க, சொல்ல முடியாது, கோபம் அதிகம் ஆனாலும் ஆகலாம்.. நல்ல நிலையில் இருக்கும்போது பெத்தவங்க வீட்டைத் தேடிப் போனாதான் மதிப்பு... இப்போ நாமே சமாளிச்சுக்கலாம்.. ஜனா மருந்து எடுத்து இருக்கிறார், சோ யாராவது இங்கே இருக்கணும். நான் பார்த்துக்கிறேன் நீ கிளம்பு.." என்றவன் அவளை வழியனுப்பி வைத்துவிட்டு.. பழைய இடத்திலேயே அமர்ந்து.. விடியலுக்காக காத்திருக்க ஆரம்பித்தான்.

ஆபரேஷன் நல்லபடியாக முடிய... ஷைலுவுக்கு மயக்கம் தெளிய காத்திருந்தார்கள்.. ஜனா அவளை விட்டு சிறிதும் விலகாமல்... துடித்துப் பிரிய தவிக்கும் இமைகளை பார்த்தபடியே நின்று இருந்தான்.

மெல்ல சிரமப்பட்டு விழிகளைப் பிரிக்க.. நினைவுகளை கொண்டு வர முயன்றவளாக விழிகளை சுழற்றியவளின் பார்வை ஜனா மேல்

நிலைக்க.. அதுதான் தாமதம் என மகிழ்ச்சியில் அவள் கையைப் பிடித்த ஜனா.. “ஷைலஜா... ரொம்ப பயந்துட்டேன்.. எனக்கு தெரியலைம்மா.. உனக்கு இப்படி இருக்கும்னு தெரியாம முட்டாள்தனமா உன்னை நோகடிச்சுட்டேன்..” என்று அவள் கைகளில் முகம் பதிக்க.. கைகளை உருவியவள்..

உணர்வில்லாத முகத்துடன் வார்த்தைகள் நடுங்க “இப்போ எதுக்கு சீன் போடுற... மரியாதையா இங்கே இருந்து போய்டு.. உன்னைப் பார்த்தாலே பத்திக்கிட்டு எரியுது.. உன் நடிப்பைப் பார்க்க முடியல போ..” என்றவள் வெறுப்பில் முகத்தை திருப்ப

ஒன்றும் பேச இயலாதவனாய் வெளியேறினான்.. “ஏய்.. நீ திருந்தவே மாட்டியா.. இதுல அவர் தப்பு என்ன இருக்கு..? அவர் தெரிஞ்சா இப்படி செஞ்சார்..? நேற்றிலிருந்து அவர் தவிச்ச தவிப்பு என்னன்னு தெரியுமா...? அது தெரியாம வாய்க்கு வந்ததை எல்லாம் பேசுறே...! சே..” என்ற மினி, ஜனாவை தேடிப் போக...

ஷைலஜாவின் விழிகள் ஆதரவுக்கு தவிக்க... அவளை நெருங்கிய ப்ரிதீவ் “ஷைலு, உனக்கு இன்னும் சரியா மயக்கம் தெளியல.. இப்போ எதுவும் பேசாதே.... ரெஸ்ட் எடு, கொஞ்சம் தூங்கு..”

“ப்ரிதீவ்.. நான்....”

“ஷைலு.. இப்போ எதையும் யோசிக்காதே... உடம்பு சரியில்லைன்னா கோபம் அதிகமாத்தான் வரும்.. உரிமை இருக்குற இடத்துலதான் கோபத்தை காட்ட தோணும் இது சகஜம்.. விடு..” என்றவன், டாக்டர் சொன்ன மருந்தையும் ஜூஸையும் நர்ஸின் உதவியுடன் கொடுத்து, அவளை தூங்க வைத்துவிட்டு ஜனாவை தேடிப் போனான்.

ஜனாவை தேடி வந்த மினி.. அவன் ஆஸ்பத்திரி கார்டனில் இருப்பதைக் கண்டு அங்கே வந்தவள்.. அவனிடம் “அண்ணா, என்ன ஆச்சு...? அவ ஏன் இன்னும் உங்க மேல கோபமா இருக்குறா... இப்படி பேசுறா”

“யாமினி.., அவ மேல ஒரு தப்பும் இல்லை....எல்லாம் நான்.. நேத்து விவரம் புரியாம, அவளை நிறைய பேசிட்டேன்.. அதான்..”

“அண்ணா சொல்லுறேன்னு தப்பா நினைக்காதீங்க, உங்க கோபம் தான் உங்க சத்ரு... கல்யாணப்பத்திரிகை அடிச்சும் கூட.. உங்களை மறக்க முடியாம, உங்ககிட்ட சொல்லி கல்யாணத்தை நிறுத்தப் போறேன்னு சொல்லிட்டு உங்க வீட்டுக்கு வந்தவ அவ.. உங்க மேல

அவ்ளோ அன்பு.. ரெண்டு பேரும் ஒருத்தர் மேல ஒருத்தர் இவ்வளோ பாசத்தை வைச்சுக்கிட்டு எலியும் பூனையுமா இருக்கீங்களே..! ஏன் இப்படி உங்களை நீங்களே நோகடிச்சுக்குறீங்க..?"

"இரு.. இரு.. ப்ரிதீவ் கூட நடக்க இருந்த கல்யாணத்தை நிறுத்தணும்னு சொல்லியா, அவ என்னை பார்க்க வந்தா..?"

விளங்காத பார்வையுடன் "உங்களுக்கு தெரியாதா..? பத்திரிகையைப் பார்த்ததும்.. இந்த கல்யாணம் வேண்டாம்... எனக்கு ஜனா தான் வேணும்னு சொன்னாளே.. உங்ககிட்ட சொல்லலையா....? நான் எவ்வளோ சொல்லியும் அவ கேக்கலை... அதைப் பத்தி பேச தானே உங்க வீட்டுக்கு வந்தா.."

'பட்' என தலையில் அடித்துக் கொண்டவன்.. "யாமினி, அவ என்னை ஒதுக்கிட்டான்னு நினைச்சு எவ்வளோ வருத்தப்பட்டேன் தெரியுமா.. எனக்கு தெரியும், என் ஷைலு என்னை வெறுக்க மாட்டா... நான் இல்லாம அவ இருக்க மாட்டா.. அவளுக்கு கோபம் அதிகம் வரும்.. என்னை மாதிரியே... பாரேன் இதை சொல்லாம இத்தனை நாள் என்னைக் கடுப்படிச்சா தெரியுமா..? எல்லாத்திலும் விளையாட்டுப் புத்தி.. ஏதோ பெரிய பாரம் குறைஞ்ச ஒரு ஃபீல்" என்றவன் தன்னை மீறி முகம் மலர சிரிக்க ஆரம்பித்தான்.

கடுப்பாக அவனைப் பார்த்தவள் "அன்னிக்கு என்ன அண்ணா ஆச்சு.. வழக்கம்போல் ஏதாவது சொதப்பிட்டீங்களா..?"

புன்னகையுடன் "சொதப்பலா....! படு பயங்கரமா சொதப்பிட்டேன்.. அதான் இன்னும் கோபமா இருக்கா.. என்ன, கொஞ்ச நாள் முறுக்கிட்டு இருப்பா. ஆனா சீக்கிரமே கோபம் போயிடும். அவளைப் பற்றி எனக்கு தெரியாதா...? கொஞ்ச நாள் அப்படித்தான் பிகு பண்ணுவா, அவளுக்குப் பிடிக்காததை செஞ்சுட்டேன் இல்ல.."

"அண்ணா, இதுக்கு நானும் ஒரு வகையில் காரணம்.. நான் தான் அவளை ப்ரிதீவ்வோடான கல்யாணத்துக்கு சம்மதிக்க வச்சேன்... அவ லவ்ல ஸ்ட்ராங்கா இல்லைன்னு நினைத்தேன்.. தேவையில்லாம நானும் குழம்பி அவளையும் குழப்பி விட்டுட்டேன் சாரி..."

"நீ என்ன செய்வே...? விடு நானும் அப்படித்தானே பேசுவேன்..."

"அண்ணா... நான் உங்களுக்கு நிறைய தொல்லைக் கொடுத்திருக்கேன். மெச்சூரிட்டி இல்லாம ஷைலுவையும் குழப்பி விட்டு இருக்கிறேன்...

என்னை உங்களால் ஏத்துக்க முடியுது.. ப்ரிதீவ்.. அவர் ஷைலுவுக்கு நிச்சயம் பண்ணியவர், அப்படியிருந்தும் அவரை உங்க நண்பரா நினைக்குறீங்க.. ஏன் ஷைலு கூட அவர் ஃபிரெண்டா இருப்பதை கூட வெறுக்கல... ஆனா ஷைலுவோட அப்பா அம்மா, அவ குடும்பம் உங்களுக்கு என்ன பண்ணுச்சு...? அவங்களை ஏன் ஒதுக்குறீங்க...? நீங்க அவங்களை ஏத்துக்கிட்டாலே பிரச்சனைகள் தீர்ந்துடும்.. நீங்க ஏன் அண்ணா இதை நினைச்சுப் பார்க்கக் கூடாது ?"

சற்றுநேரம் தூரத்தில் விளையாடிய பிள்ளைகளைப் பார்த்தவன் "யாமினி... எப்பவும் உன் மேல எனக்கு கோபம் வராது.. வருத்தம் மட்டும் தான்.. காரணம் ஷைலுவை என்னோட உறவா ஆக்கிக்கணும்னு நினைச்சேன்.. ஆனா எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல், என்னை அண்ணன் என்ற உறவுக்குள் முதலில் அழைத்துச் சென்ற பெண் நீ... ஒவ்வொரு தடவையும் நீ என்னை அண்ணான்னு கூப்பிடும்போது.. உன் அண்ணனாக பிறந்தது போலவே இருக்கும்.. அப்படி இருக்கும்போது உன் மேல எப்படி கோபம் வரும்,சொல்லு.. நாளைக்கே எனக்குப் பிள்ளை பிறந்து அது என்னை அப்பான்னு கூப்பிட்டாலும், நீ கூப்பிடுற இந்த அண்ணான்ற அழைப்பு எனக்கு ஸ்பெஷல் தான்.. என்ன.. என்னை நீ சாரியாவே புரிஞ்சுக்கலை என்ற ஆதங்கம் மட்டும் இருக்கு..

ப்ரிதீவ்.. அவர் ப்ரிதீவா எனக்கு தெரியுறதுக்கு முன்னாடியே.. யாரோ எப்படியோ கெட்டுப் போறாங்கன்னு நினைக்குற உலகத்துல, முகம் பார்த்தே சக மனிதனின் வேதனையைப் புரிந்து ஆறுதல் சொன்ன நல்ல மனசுக்கு சொந்தகாரரா தான் அறிமுகம் ஆனார்... தன் நட்புக்காக பதறியவர்.. அப்போ நம்மையும் அப்படித் தானே நினைப்பார்... அவரை எப்படி வெறுக்க முடியும்..?

ஷைலுவோட அப்பா அம்மாவை என்னால ஏத்துக்க முடியாது.. அவங்க மேல எனக்கு வெறுப்பு இல்லை.. அதே நேரத்தில் பாசமும் இல்லை... அவங்க எனக்கு தேவையில்லை.. ஷைலுவுக்கு எனக்கு சமமாக அவங்களையும் பிடிக்குது.. ஏன் என்னை விட அதிகமா பிடிக்குது... அதை என்னால் எப்படி தாங்க முடியும்...? உனக்கும் ப்ரிதீவுக்கும்... ஷைலுவிடம் நட்பு மட்டும் தான் இருக்கு.. இருக்க முடியும். மத்தபடி அவகிட்ட உங்களுக்கு வேற எந்த உரிமையும் கிடையாது.

எனக்கு மட்டும் தான் அவகிட்ட எல்லா உரிமையும் இருக்கு... நான் ஏற்றுக்கொள்ளலை என்றாலும், எனக்கு சமமா ஷைலு மேல அவ

அப்பா அம்மாவுக்கும் எல்லா உரிமையும் இருக்கு.. ஷைலு எனக்குத் தான்... எனக்கு மட்டும் தான்... அவளை உரிமை கொண்டாடுற யாரையும் அவளை நெருங்க விட மாட்டேன்... என் உரிமையை விட்டுக் கொடுக்கவும் மாட்டேன்" என்றவன் வெளியே போக.. உறைந்து நின்ற மினியின் தோளில் ஆதரவாய் தன் கரத்தைப் பதித்தான் ப்ரிதீவ்.

என் உணர்வுகளை வார்த்தையால் வெளிபடுத்துவதை விட
கண்ணீரால் வெளிப்படுவதை கூட விரும்புகிறேன்...

மருத்துவமனையிலிருந்து ஷைலஜா வீடு வந்து பல நாட்கள் கடந்தும்.. உயிர்ப்பே இல்லாமல் இருந்தாள்... உடம்பை விட அவள் மனநிலை தான் அதிக பாதிப்புக்கு உள்ளாகி இருந்தது... மனதளவில் ரொம்பவும் உடைந்துப் போய் தாயின் அரவணைப்புக்கு ஏங்கித் தவித்தது.. இப்போதே அவர்களைப் பார்க்க வேண்டும்.., பார்கவியின் மடியில் படுத்துக் கதற வேண்டும் என்ற ஆசை நிராசையானதில்.. ஜனாவின் முகத்தைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது.

அதிக அழுகை ஜுரத்தில் கொண்டு விட்டது.. மருந்துகள் உடம்புக்கு சரி வரும். மனதை எந்த மருந்து கொண்டு தேற்றுவது...? இதில் ஜனாவின் நிலையோ இன்னும் மோசம்... அவள் உடல்நிலை அவனை உயிரோடுக் கொன்றது... தான் என்னதான் பார்த்து பார்த்து செய்தும்.. அவளை ஏன் திருப்திபடுத்த முடியவில்லை என்று... தனியாக புலம்பும் நிலைக்கு ஆளானான்.

கடையிலிருந்து உணவை வாங்கி வந்துவிட்டு அவள் முகம் பார்த்துக் காத்திருப்பதும்... அவளோ தடுமாற்றத்துடன் எழுந்து வந்து, தான் மட்டும் உண்டு விட்டு.. திரும்பவும் படுக்கையிலேயே சுருண்டு விடுவதுமாக இருக்க.. ஜனாவோ.. 'நான் அவளை சமைக்க சொல்லவில்லையே.. அவளுக்கு போட்டு சாப்பிடுறா இல்ல.. அப்படியே அவள் கையால் எனக்கும் பரிமாறி வைக்கலாமே.., அதற்கு கூடவா மனம் இல்லை...?

எப்பவும் தூங்கிக்கிட்டே இருந்தா எப்படி உடம்பு தேறும்..? கொஞ்சம் வெளியே வந்து சின்னச்சின்ன வேலையெல்லாம் செய்யலாமே...' என்று எரிச்சலில் இருந்தான். ஒரு வேளை உணவாக இருந்தாலும் அதை மனைவி கையால் சாப்பிட வேண்டும் என்று நினைப்பது கூட காதல் தான்.. அவள் உடல்நலம் தேற வேண்டும் என்று நினைப்பதும் காதல்

தான்... ஆனால் அதை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதில் தான் எதிராளியின் பிரதிபலிப்பும் இருக்கிறது என்பதை எப்பவும் போல இப்போதும் மறந்து விட்டான். உள்ளத்தில் இருக்கும் குமுறல் வெடிக்கும் நிலையில் நாட்களை கடத்தினான்.

ஷைலுவுக்கு ஓரளவு உடம்பும் தேறி... உறக்கம் குறைந்து கொஞ்சம் இயல்பாக இருந்தாள்... ஜனா வரும் சத்தம் கேட்கவும்... மருந்துகளால் பசிக்கும் வயிற்றை அடக்க... உணவு மேஜைக்கு வந்தவள்... எதிரே இருக்கும் ஜனாவை ஒரு பார்வைக் கூட பார்க்காமல்.. தன் வேலையில் கவனமாக உணவை முடித்துவிட்டு எழ.. அவள் எழும்வரை அவளையே முறைத்தபடி அமர்ந்து இருந்தவன்... மீண்டும் அவள் அறைக்குள் செல்ல முயல்வதை காணவும் கடுப்பாக..

“ஷைலஜா.., உன் மனசுல என்ன தான் நினைச்சுக்கிட்டு இருக்க..?”

‘இப்போ நாம் என்ன செய்தோம்..? ஏன் இப்படி ஒரு கேள்வி’ என்று யோசித்தவாறே.. “உங்களுக்கு இப்போ என்ன வேணும்..?”

“என்ன வேணுமா..! நான் அவ்வளோ வேண்டாதவனா போயிட்டேனா...? இந்த வீட்டுலதான் நானும் இருக்கேன்... நீ என்னோட முகத்தைப் பார்த்து, எத்தனை நாள் ஆச்சுன்னு தெரியுமா...? என்கிட்டே பேசி எத்தனை நாள் ஆகுது..? ஏன்.. என்கிட்ட பேசக் கூட உனக்கு கஷ்டமா இருக்கா...?”

பல்லைக் கடித்தபடி “நான் அப்படி சொன்னேனா..?”

“இதை நீ வாயால வேற சொல்லணுமா... இல்ல தெரியாம தான் கேக்குறேன், உன்கிட்ட நான் தொங்கிட்டு நிக்கணும்னு நினைக்கிறியா...? அதுக்கு வேற ஆளைப் பாரு.. இனி இப்படி முகத்தை திருப்பிக்கிட்டு போற வேலையெல்லாம் இனி என்கிட்டே வேண்டாம்.... புரியுதா..”

“இங்கப் பாருங்க.. நான் ஏற்கனவே முடியாம இருக்கேன்.. சும்மா தொணதொணன்னு பேசாம, உங்களுக்கு என்னதான் பிரச்சனைன்னு சொல்லித் தொலைங்க..”

“சொல்லித் தொலைக்கணுமா... முதல்ல மரியாதையா பேசக் கத்துக்கோ.. நீ என்னவோ மகாராணி போல வேளாவேளைக்கு உன்னோட வயித்துப்பாட்டை மட்டும் பார்க்குற.. எனக்கு யார் சாப்பாடு போடுவான்னு யோசிச்சியா...? நானே போட்டு நானே

சாப்பிடணும்னா, நீ எதுக்கு எனக்கு...? அதுக்கு அனாதையா மோட்டுவளையைப் பார்த்துட்டு இருந்திருப்பேனே.. உடம்பு சரியில்லைன்னா சின்னச் சின்ன வேலை கூட செய்ய முடியாதா..? தின்னுட்டு தின்னுட்டு தூங்கினா, எல்லாம் சரியா போய்டுமா...? ஏதாவது கேட்டா தூக்கியெறிஞ்சுப் பேசுற.. இது சரியில்லை ஷைலஜா..”

அவன் பேசப்பேச மலைத்து நின்றவள், அவனுடன் வார்த்தைப் போரில் இறங்க தெம்பில்லாமல், கடகடவென உணவைப் பரிமாறிவிட்டு தன் அறைக்குள் செல்ல... அவன் முகத்தில் வெற்றி பெருமிதம்... ‘காலை எழுந்துக்குறதுல இருந்து படுக்கப் போற வரைக்கும் ஒவ்வொண்ணும் குழந்தைக்கு சொல்றது போல சொல்லித் தரணும்... இதுல பச்சைப்பிள்ளை போல முகத்தை வேறு திருப்பிக்கிட்டு போறா....’ என்று புலம்பியபடியே உணவை முடித்துவிட்டு திருப்தியாக வேலைக்கு சென்றான்.

ஷைலுவோ, ஏதாவது வேலை கிடைக்குமா..? என்று பத்திரிக்கைகளை புரட்டத் தொடங்கினாள்..

ஷைலு மீண்டும் கல்லூரிக்கு வரத் தொடங்கி ஒரு மாதம் ஆனாலும்.. அவள் முகத்தில்.. மருந்துக்கும் மலர்ச்சி இல்லை.. அவள் பேச்சு, சிரிப்பு அத்தனையும் குறைந்தது விட்டது.. கேட்கும் கேள்விக்கு பதில், இல்லையென்றால் வெறும் தலையசைப்பு என்று தன் வட்டத்துக்குள் சுருங்கி விட்டாள்... அவளது மாற்றம் தோழிகள் மூவரையும் வருத்தத்தில் ஆழ்த்தினாலும்...

அவள் பிரச்சனை.. அவளே மீண்டு வரட்டும்.. இதில் யாரும் இறங்க வேண்டாம் என்ற ப்ரிதீவின் கருத்தோடு ஒத்துப் போயினர்... அதற்கும், தோழிகள் தன்னை ஒதுக்குகிறார்கள் என்று எண்ணி, மேலும் தனக்குள் நத்தையாக சுருங்கினாள்... ப்ரிதீவ் மட்டும் அவளோடு போராடி பேசி அவளை இயல்பாக்க முயன்றான். எனவே அவனோடு அவள் நட்பு பலப்பட்டது.. அவன் மீதான நம்பிக்கையும் அதிகரித்தது.

ஜனாவும் ஷைலு ப்ரிதீவிடம் பேசுவதை இப்போது தடை செய்யவில்லை .இப்படியாவது அவள் மனதில் ஆறுதலும் மாற்றமும் வரட்டும் என்றே எண்ணினான் .

இந்த ஒரு மாதம் ப்ரிதீவிடம் பல மாற்றங்களை கொண்டு வந்தது. என்ன தான் ஷைலுவிடம் கலகலப்பாக பேசினாலும், மனதளவில் அவள் மேல் நிறைய வருத்தம் இருந்தது... அவளால் யாருக்குமே நிம்மதி

இல்லை.. சுயநலவாதியாக இருக்கிறாள். சின்னப் பிரச்சனைகளையும் ஊதிப் பெருசாக்கி ஜனாவின் நிம்மதியைக் கெடுக்கிறாள் என்று நினைத்தான்.. காரணம்.. இப்போது ஜனா இவனுடன் தினமும் பேசி பழகும் நல்ல நண்பன்.. நேரம் கிடைத்தால் ஷைலுவைக் கூப்பிட வரும்போது.. கொஞ்ச நேரம் ப்ரிதீவுடன் பேசிவிட்டு செல்வான்.

அப்படியில்லை என்றாலும்.. அரைமணி நேரமாவது போனில் பேசிவிடும் அளவிற்கு அவர்கள் நட்பு இறுகியது... பழகும் முன்பே அவனுக்கு ஜனாவை ரொம்பப் பிடிக்கும். இப்போதோ பழகப்பழக ஜனாவைப் பற்றி ஒரு பெரிய அபிமானம் அவன் மனதில் உருவாகி இருந்தது... ஷைலுவின் மாற்றம் ஜனாவை ரொம்பவே பாதித்து இருந்தது என்பதை உணர்ந்துக் கொண்டான். அவன் பேச்சின் பெரும் பகுதி ஷைலுவைப் பற்றியே இருந்ததில்... தன்னால் ஜனாவுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று ப்ரிதீவ் முயற்சித்தான்.

ஜனாவுக்கு உதவி செய்யவே... ஷைலுவிடம் பேசி அவள் மனதில் இருப்பதைக் கொண்டு வர முயன்றான்... அதில் கிடைத்தது தோல்வியே...! ஷைலுவோ, ஜனா தும்மினாலும் குற்றம் என்ற மனோநிலையிலேயே இருந்து, அவனை வெறுப்பேற்றினாள்... மினி விஷயத்திலும் ப்ரிதீவுக்கு ஒரு புரிதல் வந்து இருந்தது... அவளை ரொம்பவும் சீண்டாமல் அடக்கி வாசித்தான்.. ஆனால் அவளை விட்டு பார்வையை சிறிதும் விலக்குவது இல்லை.

மினியின் நட்பு.. அவளைப்பற்றி அவன் உருவாக்கி வைத்திருந்த பிம்பம் முழுவதையும் நொறுக்கியது... தான் அவளை தவறாக நினைத்துவிட்டோம் என்று உறுதியாக நம்பினான்... தோழிக்காக என்று யோசித்ததில் மற்றவர்களை மறந்து விட்டாள்... தனக்கு நல்லது என்று தோன்றியதை பின் விளைவு அறியாமல் செய்துவிட்டு இப்போது தவிக்கிறாள்.. தானும் தன் பங்குக்கு அவளை வதைப்பது தவறு என்ற முடிவுக்கு வந்தான்... அவன் மனதில் அவள் மீதான காதல் ஓங்கி வளர ஆரம்பித்தது.. அதில் துளியும் அவனுக்கு வருத்தமோ பழிவாங்கும் எண்ணமோ இருக்கவில்லை.

அன்று ஷைலு ஏதோ பத்திரிக்கையில் மும்முரமாக எதையோ தேடவும்... மினி ப்ரிதீவ் லாப்டாப்பில் தன் ப்ராஜெக்ட் வொர்குக்காக நெட்டை அலசிக்கொண்டு இருந்தாள்.. தன் வேலையை முடித்துவிட்டு வந்து, அவர்களின் அருகில் அமர்ந்த ப்ரிதீவை ஒருவரும் கவனத்தில் கொள்ளவில்லை.. சற்றுநேரம் இமைக்காமல் மினியை ரசித்தவனுக்கு எப்படியாவது காதலை சொல்லிவிட வேண்டும் என்ற பேராசை

அலைக்கழித்தது.. அவளது பாராமுகம் வாட்ட... இது சரி வராது என்ற நினைப்பில்...

“அம்மாடி தேவதைங்களா..., கொஞ்சம் உங்க பக்கத்துல விழுந்த இடியைப் பார்க்கிறது..” என்றான் கிண்டலாக...

“இடியா..! எங்கே..?” என்றாள் மினி கொஞ்சமும் கவனத்தைக் கலைக்காமல்..

“எல்லாம் என் நெஞ்சுல தான்... உங்க பக்கத்துல ஒருத்தன் வந்து உட்காருறது கூட தெரியாம, அப்படியே லேப்டாப்புக்குள்ளே புதைஞ்சுப் போய் இருக்கீங்க..”

லேப்டாப்பை அவன்புறம் நகர்த்தியவள்... “நீங்க ஓசியில லேப்டாப் கொடுக்கறீங்க.. இது இல்லைன்னா சென்டர்ல போய் ப்ரெளஸ் பண்ணனும்.. செலவு, டைம் ரெண்டும் வேஸ்ட் தானே.. அதான் வெட்டியா போகும் நேரத்தை இப்படி யூஸ் பண்ணிக்கிறோம்.. அதுக்குப்போய் ரொம்ப தான் அலுத்துக்குறீங்க..”

“ஏன் பீரோ.. என் கூட பேசிக்கிட்டு இருக்குற நேரம், உனக்கு வெட்டியா...? டூ மச்... இவ்வளவு பேசுறே, ஒரு லேப்டாப் வாங்கிக்கலாம்ல..”

“என்ன தேவைக்கு..? இன்ஜினியரிங் படிச்சா தேவைப்படும்.. எங்களுக்கு எப்பவாவது தானே தேவைப்படுது... அதுவுமில்லாம இது தேவையில்லாத இம்சை... தண்டச் செலவு...”

“அஹஹா.. பீரோ... ஏகப்பட்ட ‘கண்டிஷன்ஸ் டூ பீ அப்ளைட்’ வச்சிருக்கப் போல.. ஓகே உனக்கு மட்டும் தான் பிராஜெக்டா..? ஷைலு வேற எதையோ பார்க்குற மாதிரி இருக்கு, மேடம் என்ன தேடுறாங்க..?”

“அவளுக்கும் சேர்த்து தான் நான் தேடுறேன்” என்று பார்வையை அவள் மீது வீச... அவளோ இவர்கள் பேச்சில் கொஞ்சமும் கவனம் இல்லாமல்.. செய்தித்தாளைப் படிப்பதும், பின் தன் கையில் இருந்த நோட்டில் எழுதுவதுமாக இருக்க...

“ஏய் என்னடி உன்னைப்பத்தி தானே பேசிட்டு இருக்கோம்... நீ அங்க என்ன ஆணியா பிடுங்கிட்டு இருக்கே..” என்றவாறு அவள் கையிலிருந்த நோட்டைப் பிடுங்கி, அதில் பார்வையை வீசியவளின்

விழிகள் உறைய.. அந்த நோட்டை ப்ரிதீவ்விடம் கொடுத்துவிட்டு...

“உன் மனசுல என்ன தான் நினைச்சுக்கிட்டு இருக்குற ஷைலு... இப்போ இப்படி அவசியமா வேலைக்குப் போக வேண்டிய தேவை என்ன வந்துச்சு..?”

“தேவை இருந்தா தான் போகணுமா..? படிப்பு முடியப் போகுதே, வேலை தேடுறதுல என்ன தப்பு..?” என்றாள் நறுக்குத் தெறித்தது போல.

“வேலைக்குப் போறதுல எந்த தப்பும் இல்லை... ஆனா ஆயா வேலையாக இருந்தாலும் பரவாயில்லைன்னு தேடிப்போற அளவுக்கு, என்ன கட்டாயம் வந்துச்சுன்னு தான் புரியலை..”

“எந்த வேலையும் மட்டம்னு, நான் நினைக்கலைன்னு அர்த்தம்..”

“நானும் மட்டம்னு சொல்லலை.. நீ வேலைக்குப் போய் தான் ஆகணும்ன்ற கட்டயத்துல ஜனா அண்ணா உன்னை வைக்கலை... உன்னோட படிப்பும் இன்னும் முடியல... இன்னும் கொஞ்சம் ட்ரை பண்ணினா, படிச்ச படிப்புக்கே நல்ல வேலை கிடைக்கும்ன்ற பட்சத்துல.., இப்போவே என்ன அவசரம்னு தான் கேக்குறேன். அதுவும் இப்படி கண்ணுல படுற வேலைக்கு எல்லாம் அப்ளை செய்யணுமா...? இது அண்ணனுக்கு தெரியுமா..?”

கோபத்தில் முகம் கருக்க “நான் எதையும் உனக்கு சொல்ல வேண்டிய தேவையில்லை மினி... உன்னோட அண்ணனுக்கும் சேர்த்து தான் சொல்லுறேன்... என்னோட விஷயத்துல தலையிடாதே”

“பார்த்தீங்களா ப்ரிதீவ்..., இவ எப்படி பேசுறா பார்த்தீங்களா...? ஏண்டி... ஏன்..? இப்படி கிறுக்குத்தனமாவே ஏதாவது செஞ்சு அந்த மனுஷனோட உயிரை வாங்குறே... முன்னவாவது உன் மேல கொஞ்சம் நியாயம் இருந்துச்சு.. இப்போ.... பாவம்டி ஜனா... இதை தாங்க மாட்டார்... அவரை ரொம்ப வேதனைப் படுத்துற ஷைலு..”

பல்லைக் கடித்தபடி “போதும் மினி.. உன் அண்ணனுக்காக ரொம்ப உருகாதே.. என்னோட உணர்வுகளைக் கொன்னு என்னை நடைப்பிணமா அலைய விட்டவன் அவன்.. உனக்கு நான் வேணுமா... ஜனா வேணுமான்னு நீயே முடிவு பண்ணிக்கோ.. இனி அவரைப்பத்தி என்கிட்ட எதுவும் பேச வேண்டாம்...”

“ஆமா... அவரைப் பிடிக்கலைன்னு சொல்லிட்டு அவரை மாதிரியே

பேசு... உன் பிரச்சனை என்னன்னு தெரிஞ்சா தானே முடிவு சொல்ல முடியும்.. எதையாவது வாயைத் திறந்து சொல்லித்தொலை..."

"மினி.., ஷைலுவை விடு.. அவ என்ன குழந்தையா... இது அவளோட வாழ்க்கை, அவளே முடிவு பண்ணட்டும்."

"ப்ரிதீவ்.. என்ன இப்படி சொல்லுறீங்க.... இவளை எந்த அளவுக்கு ஜனா விரும்புறார்னு உங்களுக்கு தெரியுமில்ல..."

"மினி..., உனக்கு மட்டும் இல்ல, ஜனாவுக்கும் சேர்த்து தான் சொல்லுறேன்... வெளியே இருந்து அவங்க பிரச்சனைக்கு.. நாம எந்த தீர்வும் சொல்ல முடியாது. எது சரி, எது தப்புன்னு அவங்களே உணரட்டும்... நம்மகிட்டே ஏதாவது உதவி கேட்டா, அதை மட்டும் செய்யலாம்... ஷைலுவுக்கு என்ன பிரச்சனைன்னு அனுபவிக்குற அவளுக்கு மட்டுமே தெரியும்... ஜனாவுக்கு என்ன பிரச்சனைன்னு அவருக்குத் தான் புரியும்... நாம மூணாவது ஆளா இருந்துக்கிட்டு, அதுல என்ன கருத்து சொல்ல முடியும்..?" என்றவன் ஷைலுவின் பக்கம் திரும்பி

"ஷைலு, நீ வேலைக்குப் போறதுன்னு முடிவு செஞ்சுட்ட.. ஓகே உன் இஷ்டம்.. ஆனா கொஞ்சம் பொறுமையா இரு.. இப்போவே என்ன அவசரம்..? படிப்பு முடியட்டும்.. கேட்டரிங் கோர்ஸ் பேக்கரில சிக்ஸ் மன்த்ஸ் கோர்ஸ் ஒண்ணு பண்ணு.. நான் ஹெல்ப் பண்ணுறேன். வேலை தேடும்போது, அது இன்னும் யூஸ்புல்லா இருக்கும்... அப்புறம் . நானே ஒரு நல்ல வேலையா தேடித் தரேன்.. சரியா."

"மேல படிக்குற அளவுக்கு எனக்கு டைம் இல்ல ப்ரிதீவ். அதை அப்புறம் பார்த்துக்கலாம்.. இப்போ எனக்கு உடனடி தேவை ஒரு வேலை.." என்று சொன்னவளை எரிப்பது போல் முறைத்த மினியை தன் பார்வையால் அடக்கியவன்..

"சரி வேலை தானே வேணும், நானே ஏற்பாடு பண்ணுறேன்.. படிப்பு முடியட்டும். அடுத்தநாளே உன் கையில வேலை இருக்கும்.. அதுவரைக்கும் இந்த லூசுத்தனமான விஷயங்களை விடு. உனக்கு ஃபிரெண்ட்ஸ் இத்தனை பேர் இருக்கும்போது, இப்படி செய்றது கொஞ்சம் கூட சரியில்லை." என்று சொல்லவும், தனக்கு சாய்ந்துக்கொள்ள ஒரு தோள் கிடைத்த மகிழ்ச்சியில்... ஷைலுவின் முகம் ஒரு நொடியில் மலர்ந்தது.

"தேங்க்ஸ் ப்ரிதீவ். நீங்களும் முயற்சிப் பண்ணுங்க... நானும் தெரியுற

இடங்களுக்கு அப்ளிகேஷன் போட்டு வைக்கிறேன்.. ப்ளீஸ்.”

“நீங்க ரெண்டு பேரும் என்ன தான் நினைக்கிறீங்க...? ப்ரிதீவ்.. இது சரியில்லை. இவளுக்கு புத்தி சொல்லுவீங்கன்னு பார்த்தா, நீங்களும் ஒத்து ஊதுறீங்க... ஜனா அண்ணாவுக்கு என்ன பதில் சொல்வீங்க...?”

ப்ரிதீவ் மினியிடம் கடுமையாக “மினி, சும்மா ஜனா... ஜனான்னு புலம்பாதே. ஜனா கிட்ட நான் பேசிக்கிறேன்..”

ஷைலுவோ “ப்ரிதீவ், நீங்க இதைப்பத்தி அவர்கிட்ட எதுவும் பேச வேணாம், நானே..”

“என்னடி நீயே.. உன்னை விரும்பினதை தவிர, அந்த மனுஷன் என்ன தப்பு செஞ்சார்....? அப்படியொரு காதல் கிடைக்க நீ அதிர்ஷ்டம் பண்ணி இருக்கணும்.. அதை விட்டுட்டு... ச்சு போடி... நீ செய்யுற எதுவும் எனக்குப் பிடிக்கலை”

“மினி..., அது என்ன ஜனாவோட காதல் மட்டும் தான் ஒஸ்தியா..? உலகத்துல எத்தனையோ லட்சம் கோடி பேர் காதலிக்கிறாங்க அதையெல்லாம் பார்த்தா, உனக்கு ஒஸ்தியா தோணலையா..” என்ற ப்ரிதீவின் கண்கள் எதிர்பார்ப்பில் மின்னியது.

அவன் எதிர்பார்ப்பை ஒரு நொடியில் உணர்ந்தவள், நக்கலாக “எப்படித் தோணும்...? ஜனா அண்ணா அளவுக்கு வேற யாரும் காதல்ல சின்சியரா இருந்து நான் பார்த்தது இல்லையே..!”

அவளை தீர்க்கமாகப் பார்த்தவன் “காதல்னு வந்தா எல்லோரும் சின்சியரா தான் இருப்பாங்க... என்னையும் சேர்த்து தான் சொல்லுறேன்....”

அவனது நேரடி பதிலில் முதலில் திணறியவள், பின்பு சமாளித்துக்கொண்டு “நீங்களா...! வெளியே சொல்லிடாதீங்க.. ஜோக் ஆஃப் தி இயர்னு சொல்லிட போறாங்க... உங்களுக்கும் சின்சியருக்கும் என்ன சம்பந்தம்...? எந்த ஒரு பொண்ணும் உங்களை துணிந்து காதலிக்க மாட்டா..”

“ஏன்...? என்கிட்ட என்ன குறை..?”

“ஹார்ட் ஃபேஷண்டை எந்தப் பொண்ணு விரும்புவா..?”

“ஹே.. நான் ஹார்ட் ஃபேஷண்ட்ன்னு உனக்கு யார் சொன்னா..??”

“ஓ... இல்லையா.. பொண்ணுங்களைப் பார்த்தா டக்கு டக்குன்னு ஹார்ட்டை ட்ரான்ஸ்ஃபர் பண்ணுறவங்கள ஹார்ட் பேஷண்ட்ன்னு தானே சொல்லுவாங்க... உங்களை மாதிரி ஆளை லவ் பண்ண, எந்த பொண்ணுக்கு தில் இருக்கும்...” என்றபடி தன் உடைமைகளை எடுத்தவள்,

“ஷைலு, நான் கிளம்புறேன்... நீ எது செய்வதா இருந்தாலும் யோசிச்சு செய்... இந்த அரைவேக்காட்டோட பேச்சைக் கேக்காதே.. இப்போ நான் என்ன பேசினாலும், உனக்கும் எனக்கும் நடுவுல பிரச்சனை தான் வரும்.. பை..” என்றவள் வேகமாக கிளம்ப, ப்ரிதீவ் அவளை பின்தொடர போனான்.

“ப்ரிதீவ்..., கொஞ்சம் உக்காருங்க. நான் உங்ககிட்ட பேசணும்..” என்ற ஷைலுவை தயங்கியபடி பார்த்தவன்.. திரும்பி... போகும் மினியை பார்த்தவாறே..

“இன்னைக்கே பேசணுமா..?”

“ம்ம் மினியைப் பத்தி பேசணும்.. இன்னைக்கு பேசலாமா. இல்லே நாளைக்கு பேசலாமா..?”

பதில் பேசாமல் அவள் எதிரே வந்து அமர்ந்தான்.

சற்றுநேரம் மௌனத்தில் கரைய.. ஷைலுவே மெல்லிய குரலில் ஆரம்பித்தாள்.

“ப்ரிதீவ், நீங்க மினியை விரும்புறீங்களா..?”

முடிவெடுத்தவனாக “ம்ம்ம்..” என்றான் தலையசைவாக

“நிஜமாத்தான் சொல்லுறீங்களா...? அவ இப்போ சொல்லிட்டு போனதுல ஏதும் தப்பு இருப்பதாக எனக்கு தெரியலை...” என்றாள் தயங்கியவாறே

“காதல்னாலே நிஜம் தானே ஷைலு.., அப்புறம் நிஜமான்னு கேட்குறே... இந்த நிமிஷம் மினியை நான் விரும்புறேன்னு சொல்லுற வார்த்தையில எந்த பொய்யும் இல்லை... நான் நல்லா உணர்ந்து தான் சொல்லுறேன்...

உன்னை கல்யாணம் செய்துக்கலாம்னு நான் முடிவு எடுத்தப்போ ... சத்தியமா அதுல காதல் இல்லை.. சுயநலம் மட்டும் தான் இருந்துச்சு.. நீ எங்க அம்மாவுக்கு அடங்கி இருப்ப..

அதனால வீட்டுல எந்த பிரச்னையும் வராது, வீடு அமைதியா இருந்தா தானே நானும் நிம்மதியா இருப்பேன்.. நிம்மதி இருந்தா காதல் தன்னாலே வரும்னு நினைச்சேன்... உன்னை என்பதை விட உன்னோட குடும்பம் மொத்தத்தையும் எனக்கு ரொம்ப பிடிச்சுது.."

"ஆனா... நிம்மதி மட்டுமே காதலை தராதுன்னு இப்போ புரியுது... மினி விஷயத்துல எனக்கு எந்த சுயநலமும் இல்லை... இன்ஃபேக்ட் மினியோட கேரக்டர் நிச்சயமா எங்க அம்மா கூட ஒத்துப் போகாது... அது எனக்கு நல்லாவே தெரியும்... ஆனாலும் ஆசையா இருக்கு.., இவளும், எங்க அம்மாவும் நிறைய சண்டை போடணும்.. நானும் அப்பாவும் யார் பக்கம் பேசுறதுன்னு தெரியாம திண்டாடணும்.. யார் முக்கியம்னு ஒரு நிலைமை வந்தா.. யோசிக்காம இவ தான்னு சொல்லணும்னு எனக்கு ஆசையா இருக்கு..

அவளை யாருமே இல்லாத தீவுக்கு கடத்திட்டுப் போகணும்னு தோணுது.. அவ வாயால ஜனாவை விட ப்ரிதீவ் தான் சிறந்த காதலன்னு சொல்ல வைக்கணும்னு தோணுது... அப்போ இது காதல் தானே...!

இந்த நிமிஷம் என் மனசுல என்னோட அம்மாவை விட இவளே நிறைஞ்சு இருக்கா... இது கூட சுயநலம் தானே.. இந்த சுயநலம் கூட காதல் தானே... இப்போ கூட பாரு, நான் சொன்னது எதுவுமே எனக்கு திருப்தியா இல்லை.. என்னோட காதலை வார்த்தைகளால சொல்ல முடியாதுன்னு தோணுது... மனசுல இருக்குற காதல்ல ஒரு துளியைக் கூட வெளிப்படுத்த முடியலையேன்னு தவிப்பா இருக்கு.. என்ன சொன்னா என்னோட காதலை முழுமையா சொல்ல முடியும்னு புரியாம நெஞ்சுத் துடிக்குது..

நான் மினியைக் காதலிக்கிறேன்னு சொல்லுறது சரியில்லை.. ஒரு பெண்ணை நிச்சயம் பண்ணி,அது கைகூடாமல்,அவள் ஃபிரெண்ட்டையே காதலிக்கிறேன்னு சொல்லுறது, கேட்குறவங்களால முடியாதுன்னு எனக்கும் புரியுது.. ஆனா உன்னால என் மனசைப் புரிஞ்சுக்க முடிஞ்சா, மினியும் புரிஞ்சுப்பான்னு தோணுது.. என்னோட காதலுக்கு உன்னோட ஆதரவு வேணும் ஷைலு, அதுவும் உன்னோட மனசுல எந்த நெருடலும் இல்லாம. "

கண்கலங்க இமைக்காமல் அவனைப் பார்த்தவள் "போதும் ப்ரிதீவ். எனக்குப் புரியுது, மினி ரொம்ப லக்கி... நான் உங்களை நம்புறேன்...

ஆனா மினி இதை ஏத்துக்குவான்னு தோணலை..”

“அப்படி சொல்லாதே ஷைலு.., என்னால அவ மனசை மாத்த முடியும்னு நம்புறேன்... அவளுக்கும் என்னைப் பிடிச்சு இருக்கு.. பிடிக்கலைன்னா இங்கே வரவே மாட்டாளே.. என்னை தவிர்க்கத் தானே பார்ப்பா..! ”

“எனக்கும் அந்த சந்தேகம் இருக்கு.. எனிவே உங்க காதல் வெற்றியடைய வாழ்த்துக்கள் ப்ரிதீவ்.. உங்களுக்கு ஒண்ணு மட்டும் சொல்லுறேன்.. எக்காரணம் கொண்டும் காதலைக் காட்டி அவளை நோகடிச்சுடாதீங்க..”

“நீ பேசுறது தான் வேதனையா இருக்கு ஷைலு.. விருப்பம் இல்லைன்னா மயிலிறகு கூட பாரமாய் தான் இருக்கும்... உன்னைப்பத்தி மட்டுமே நினைக்குறதை விட்டு, கொஞ்சம் ஜனாவோட இடத்துல இருந்தும் யோசிச்சு பாரேன்... ”

கண்களை இறுக மூடித் திறந்தவள் “மயிலிறகுன்னாலும் வண்டியோட அச்சு முறியுற வரைக்கும், அந்த இறகையே பாரமாய் சேர்க்க முடியும்னு ஜனாவுக்கு தெரியலையே ...”

“ஷைலு..., நான் வெளிப்படையாவே சொல்லுறேன்.. பிரச்சனை இல்லாத வாழ்க்கை யாருக்கும் கிடைக்காது... எல்லாருடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒரு பிராப்ளம் இருந்துக்கிட்டு தான் இருக்கும். ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுக்குறதுல தான் குடும்பத்தின் சந்தோஷமே இருக்கு. நீ கொஞ்சம்..”

“ப்ச்... என்னை விடுங்க. மினிகிட்ட எப்போ பேச போறீங்க..?”

சற்றுநேரம் கவலையாக அவளைப் பார்த்தவன் ‘அவளை மாற்றுவது கடினம்’ என்ற பாவனையில் பெருமூச்சுடன் “எங்கே.. தனியா மாட்ட மாட்டேங்குறாளே..!”

“அடுத்த வாரம் பிரதோஷம்.. சிவன் கோவிலுக்கு போகலாம்னு பிளான் பண்ணியிருக்கோம்... நான் நேரா கோவிலுக்கு வரேன், அங்க மீட் பண்ணலாம்னு சொல்லி இருக்கேன்... ஆனா இப்போ நான் வரலை... அன்னைக்கு நீங்க போய் அவகிட்ட பேசுங்க.. நானும் அவகிட்ட பேசி, அவ மனசுல இருக்குறதை தெரிஞ்சுக்க ட்ரை பண்ணுறேன் ”

“ஹே ஷைலு, நிஜமாவா சொல்லுற..! நான் மினியை விரும்புறதுல

உனக்கு ஒரு பிரச்னையும் இல்லையே.. உனக்கு பிடிக்காது, நீ தடுப்பேன்னு நினைச்சேன்"

"நான் ஏன் தடுக்கணும்...? உங்களைப் போல ஒரு நல்லவர் மினிக்கு கிடைக்குறதுல எனக்கு என்ன வருத்தம் வரப் போகுது..." என்றவள் போனில் மெசேஜ் டோன் கேட்க... "ப்ரிதீவ், அவர் வந்துட்டார், நான் கிளம்புறேன்..." என்றவள் சிரித்தவாறே "ஆல் தி பெஸ்ட்.." என்றபடி கிளம்பினாள்.

எதிர்பாராமல் கோவிலில் ப்ரிதீவைக் கண்டதும் மினியின் முகம், மகிழ்ச்சி, வியப்பு, எச்சரிக்கை என்று பல பாவங்களைக் காட்டிவிட்டு... முடிவாக ஒரு புன்னகையுடன் அவனைக் கடந்து கோவிலினுள் நுழைந்தவளை நிழலாய் பின் தொடர்ந்தான் ப்ரிதீவ்.

அவன் தன்னை தொடர்வதை நன்கு உணர்ந்திருந்தும் அதை கவனத்தில் கொள்ளாதவளாய்.. அர்ச்சனையை முடித்து, கர்மசிரத்தையுடன் நவக்கிரகங்களையும் சுற்றி முடித்து... ஒவ்வொரு சன்னிதானத்திலும் நிதானமான வேண்டுதல்களை வைத்து, அவன் பொறுமையை ரொம்பவே சோதித்தவள்...

அவனைக் கண்டுக் கொள்ளாமலே வீட்டுக்கு கிளம்ப.. அதற்குமேல் பொறுக்காமல்... "மினி, நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்..." என்று சொல்லியும், கண்டுக் கொள்ளாமல் அவனைக் கடந்துப் போக..

"பீரோ... உன்கிட்ட பேசணும்னு சொல்லிட்டே இருக்கேன், நீ பாட்டுக்கு போய்கிட்டே இருக்கே.."

நின்று கேள்வியாக அவனைப் பார்த்தவள் "ஷைலு இன்னைக்கு வரேன்னு சொல்லியிருந்தா... அவ வராம நீங்க வந்து இருக்கீங்க.. இதுலேயே தெரியலையா.., நீங்க என்ன பேசப் போறீங்கன்னு... ப்ளீஸ் ப்ரிதீவ்... தெரிஞ்சவங்க யாராவது பார்த்தா, வீண் பிரச்சனை வரும்.. கிளம்புங்க.."

"அதைப்பத்தி எனக்கு கவலை இல்லை.. அப்போ வா.. கோவில் மண்டபத்துக்கு பின்னாடி இருக்குற குளத்துப் படிக்கட்டுல உக்காந்து பேசலாம்.." என்று அவள் பதிலை எதிர்ப்பார்க்காமல் மண்டபம் நோக்கிப் போனான்.

மினியும் ஒரு முடிவெடுத்தவளாக அவன் பின்னே சென்றாள்.

பிரச்சனையை தள்ளிப் போடுவதை விட எதிர் நோக்குவதே மேல்.. அதுவுமில்லாமல் அவளும் ப்ரிதீவிடம் பேச வேண்டியவைகள் இருக்க, அவனை தேடிப் போனவளின் மனதில், கடந்த வாரத்தில் ஷைலுவுக்கும் அவளுக்கும் இடையே நடந்த பேச்சு நினைவுக்கு வந்தது.

ப்ரீதிவ் பற்றியும், அவன் மினியை காதலிப்பதையும், அதற்கான அவன் விளக்கத்தையும் மினியிடம் சொன்ன ஷைலு, "மினி..., ப்ரிதீவ் ரொம்ப நல்லவர்... உன்னை உண்மையா விரும்புறார்.. அவர் சொல்லுற விளக்கமும் நியாயமா தானே இருக்கு... என்னை நிச்சயம் பண்ணுனதை நினைச்சு குழப்பிக்காதே.. ஒரு வேளை அவர் உன்கிட்ட காதலை நேரில் சொன்னா, உன்னோட பதில் என்னவா இருக்கும்..?"

ஜிவ்வென்று முகத்துக்கு கோபம் ஏற "தெரிஞ்சுக்கிட்டே என்னடி கேள்வி இது...? திரும்ப திரும்ப உன்னோட நிச்சய விஷயத்தை சொல்லாதே, எரிச்சலா இருக்கு... நான் அதை மறந்துட்டேன்.. நீயும் மறந்துடு.. அவரையும் மறக்கச் சொல்லு.. அது தான் எல்லோருக்கும் நல்லது... அவர் நல்லவரா இல்லையான்றது எனக்கு பிரச்சனை இல்லை...

எனக்கு ஒத்து வராத விஷயம் இந்த காதல்.. அதுவுமில்லாம நான் இல்லைன்னா அவன் ஒண்ணும் ஒடிஞ்சுப் போய்ட மாட்டான்.. அவனை சமாளிக்க என்னால முடியாது.. அவன் கவுன்ட்டருக்கு பதில் கூட கொடுக்க முடியாம திணற விடுறான்.. எங்கயாவது அவன் வாய்க்கும் மூளைக்கும் சம்பந்தம் இருக்கா..? மூளையோட கண்ட்ரோல் இல்லாம தனியா வாய் பாட்டுக்கு பேசிட்டு இருக்கு...

சரியான அராத்துப் பையன்.... காதல்.. கல்யாணம் எல்லாமே அவனுக்கு விளையாட்டுத் தான்.. எனக்கு எல்லாமே சீரியஸ் மேட்டர்... எங்க ரெண்டு பேருக்கும் எப்படி ஒத்து வரும்...? விட்டுடு ஷைலு.. இவ்வளோ பட்டும் இன்னும் உனக்கு காதல்ல நம்பிக்கை இருக்கா.. என்ன."

"நம்பிக்கை இல்லாம என்ன..? காதலிக்கிறவங்க தப்பா இருந்தா, அது காதலோட தப்பு இல்லையே.., காதலிக்கிறவங்க தப்புத்தானே...! அப்புறம் எப்படி நம்பிக்கை இல்லாம போகும்... உனக்கு நிஜமாவே ப்ரிதீவ்வை பிடிக்காதா...? அப்புறம் ஏன், என்னோட நிச்சயம் மேட்டரைப் பத்தி பேசினா உனக்கு இவ்வளவு கோவம் வருது..?" என்றவள் யோசனையாக மேலே பார்ப்பது போல பார்த்து விட்டு தன்

பேச்சை தொடர்ந்தாள்.

“எனக்கு தெரிஞ்சு நீ யார்கிட்டேயும் இப்படி பழகினது இல்லை.. அவர் மூச்சுக்கு முன்னூறு தரம் உன்னை பீரோன்னு கூப்பிடுறார், அதுக்கு உனக்கு கோபமே வர மாட்டேங்குது.. அவரை மாதிரி, நாங்களும் பீரோன்னு கூப்பிட்டா ஒத்துக்குவியா...? அவரளவுக்கு வேற யாரவது உன்கிட்ட நெருக்கமா நடந்துக்க முடியுமா..? இல்ல அப்படி நடந்தா, நீ தான் அவங்க முகத்துல முழிப்பியா...? உங்க ரெண்டு பேருக்கு நடுவுல இருக்குறது, வெறும் நட்புன்னு சொல்லி உன்னை நீயே ஏமாத்திக்கப் போறியா...?”

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தவள்.. “ஷைலு..., நிச்சயம் எனக்கும் ப்ரிதீவ்வுக்கும் இடையில நட்பு இல்லை.. ஒத்துக்குறேன். என் மனசுல ப்ரிதீவ் மேல ஒரு ஈர்ப்பு இருக்கு... ஆனா அது என்னன்னு நான் ஆராய விரும்பலை... எனக்கு சரி வராத ஒரு விஷயத்தைப் பத்தி நான் யோசிக்க விரும்பலை. இத்தோட இதை விட்டுடு..”

“அப்போ ப்ரிதீவ் கேட்டாலும் இதைத்தான் சொல்லுவியா..?”

“கேட்கும்போது பார்த்துக்கலாம்..” என்று அன்று பேச்சை முடித்தவள்... இதை இவ்வளவு விரைவில் எதிர்பார்த்து இருக்க வேண்டும் என்று யோசிக்க தவறியவளாக.. ப்ரிதீவ் குளத்தில் எரியும் கற்களின் அலைவட்டங்களை வெறித்தபடி அமர்ந்து இருந்தாள் .

“மினி.., எவ்வளவு நேரம் தான் இப்படி என் முகத்தைப் பார்க்காமல் உக்காந்து இருக்கப் போற.. என்கிட்ட அவ்வளோ பயமா..?”

“பயமா..! தோடா.. நீங்க என்ன பேசணுமோ, அதைப் பேசுங்க. அதுக்கு முன்னே நான் ஷைலுப் பத்தி உங்ககிட்ட பேசணும்..”

“நான் அவங்களைப் பத்தி பேச இங்க வரலை. நம்மைப்பத்தி பேச தான் வந்தேன்..”

“நான் ஷைலுவைப் பத்தி பேசணும்..”

முகம் இறுக யோசித்தவன் “என்ன.., சீக்கிரம் சொல்லு..”

“ப்ரிதீவ், ஷைலு வழக்கம்போல இப்பவும் அவசரமா முடிவெடுத்து தப்புத்தப்பா ஏதோ செய்யுறா... நீங்க என்னை அவளுக்கு அட்வைஸ் பண்ண வேண்டாம்னு சொன்னீங்க, சரி இப்போ.. எடுத்து சொல்ல வேண்டிய நீங்களே அவளுக்கு வேலை வாங்கித் தரேன்னு சொல்லுறது

நியாயமா...? அவ எதுக்கு வேலை தேடுறான்னு யோசிச்சாலே பயமா இருக்கு... நீங்க அவளுக்கு ஆதரவா பேசுறது நெருடலா இருக்கு. அவ செய்றது சரின்றது போல ஏன் நடந்துக்குறீங்க..?"

"வேற என்ன செய்ய சொல்லுற...? அப்படியே நாம சொல்றதை கேட்டுட்டு தான் மறு வேலை பார்ப்பா...! இப்போதைக்கு நான் வேலை வாங்கித் தரேன்னு சொல்லி கொஞ்ச நாட்களை இழுப்போம்னு நினைச்சேன்... அப்படி சொன்னதால் தான் அவ அடுத்து என்ன செய்யப் போறான்னு தெரியுது... இல்லைன்னா நம்மகிட்டேயே எல்லாத்தையும் மறைச்சு செய்வா..

அவளுக்கு சொல் புத்தியும் இல்லை, சுயபுத்தியும் இல்லை... மனுஷங்கள்ல ரெண்டு வகை, ஒண்ணு சொல்லித் திருந்துறவங்க..., இன்னொண்ணு பட்டுத் திருந்துறவங்க... ஷைலு ரெண்டாவது வகை. பட்டுத்தான் திருந்தணும்... எல்லாத்தையும் இழந்து நடுத்தெருவுல நின்னா தான், அவளுக்கு ஜனாவோட அருமை தெரியும்.." என கோபம் கொப்பளிக்க சொன்னவனை மிரண்டுப் போய் பார்த்தவள்...

"ப்ரிதீவ்.., ஷைலு மேல நீங்க ஏன் இவ்வளோ கோபமா இருக்கீங்க..?"

"பின்ன... நான் என்ன புத்தனா...? அவ எடுத்த அவசர முடிவால எவ்ளோ அசிங்கப்பட்டேன் தெரியுமா.. அதைக்கூட நான் பெரிசு பண்ணலை.. அவ சூழ்நிலை என்னவோன்னு நினைச்சேன்.. ஆனா இப்போ வெறுத்துப் போகுது.. ஜனாவை நினைச்சா பாவமா இருக்கு... நமக்கு இயல்பா கிடைச்ச அத்தனையும் அவருக்கு மறுக்கப்பட்டு இருக்கு... சக மனுஷங்க கூட சகஜமா கூட பழக தெரியலை.. அவரோட உலகமே வேற..

அன்னிக்கு ஒரு நாள் கஃபேலே ஒரு பார்ட்டி நடந்துச்சு, அதை அவர் அவ்ளோ ஆச்சரியமா பார்த்துக்கிட்டு இருந்தார்... ஒரு காஃபி நூத்தியம்பது ரூபாயா...! இதுல எங்க யூனிட்ல இருக்குற அத்தனை பேரும் காஃபி சாப்பிட்டுட்டுவோம்னு அப்பாவியா சொல்லுறார்...

சின்ன சந்தோஷத்தைக் கூட அவர் அனுபவிச்சதில்ல, அது என்னன்னு கூட தெரியாம இருக்கார்... அப்படிப்பட்ட மனுஷன்.. இங்கே ஷைலுவும், நீங்க எல்லாரும் எவ்வளோ சாப்பிடுறீங்களோ, அந்தப் பணத்தைக் கட்டாயப் படுத்தியாவது கொடுத்திடுறார். கேட்டா ஷைலுவோட சந்தோஷத்துக்காக லட்சக் கணக்குல செலவு பண்ணுவேன்னு சொல்லுறார்.. ஷைலு கோபமா இருக்குறா, அவளை எப்படி சந்தோஷப்படுத்துறதுன்னு சொல்லி தா.. அவ சொல்லுற மாதிரி

எனக்கு ரொமான்ஸ் பண்ணத் தெரியலையோன்னு புலம்புறார்.. அப்படிப்பட்ட மனுஷனுக்கு ஷைலு பதிலுக்கு என்ன செய்யுறா..?..”

“ப்ரிதீவ்.., நீங்களும் ஒரு ஆண் தானேன்னு ஒரு பக்கமா பேசாதீங்க.. அவளோட அப்பா அம்மாவை அவக்கிட்ட சேர்த்தாலே அவ மாறிடுவா.. ஜனா அண்ணா அதை செய்ய மாட்டேங்குறாரே..”

“மினி.., அதற்கான பதிலை ஜனா சொல்லிட்டார்... அவர் பயம் நியாயம் தானே.. அதை சரிப்பண்ண வேண்டியது ஷைலு. அவ ஏன் அதை செய்யலை..?”

“ஜனா அண்ணாவுக்கு கோபம் வந்தா, எப்படி பேசுவார்னு உங்களுக்கு தெரியலை.. முன்னாடியெல்லாம் அவர் எவ்வளோவோ பேசியும், ஷைலுவோட மனசுல அவர் மேல இருந்த காதல் கொஞ்சம் கூட குறையவே இல்லையே.. ஆனா இப்போ குறைஞ்சுடுச்சுன்னா ஏன்...? இப்போ ஏன் இந்த கோபம்னு தெரிஞ்சு, அதை சரி பண்ணனும்”

“அவரை நல்லா தெரிஞ்சு, நிறைகுறையோட தானே அவரை விரும்பினா.. இப்போ மட்டும் என்ன கேடு..?”

“என்ன நீங்க.. இப்படி பேசுறீங்க...? அப்போ அவங்க பிரிஞ்சா நல்லதுன்னு நினைக்குறீங்களா..? அப்போ ஷைலுக்கிட்ட நான் உன்னோட பெஸ்ட் ஃபிரெண்டுன்னு சொல்றதெல்லாம் பொய்யா..”

“அய்யோ பீரோ... நான் சொல்லுறது உனக்குப் புரியலை... எனக்கு ஷைலு நல்ல ஃபிரெண்ட், அவ நல்லா வாழணும்னு தான் நினைக்கிறேன்... அந்த எண்ணம் அவளுக்கும் இருக்கணும்.. அவ சுயநலமா இருக்குறா... அவளைப்பத்தி மட்டும் தான் நினைக்குறா.. பிடிக்காத ரெண்டு பேரும் ஒண்ணா இருந்து, அவங்க லைஃபை நரகமாக்கி தினம் அழுவுறதை விட பிரிவது நல்லது... என்ன ஒண்ணு, ஜனா கொஞ்ச நாள் கஷ்டப்படுவார்... போகப் போக சரியாகிடும்.

அப்படியாவது அவருக்கு நிம்மதியான லைஃப் கிடைக்கட்டும்..... இப்போதைக்கு உன்னைப் போல நானும் அவங்க பிரச்சனை தீரணும்னு தான் நினைக்கிறேன். மத்தது ஷைலுவோட கையில இருக்கு.. இப்போ நான் இங்கே வந்தது, நம்மைப் பத்தி பேச... அவங்களைப் பத்தி பேச இல்லை..”

“இங்கப் பாருங்க, அவங்க பிரியக்கூடாது.. ஷைலு கொஞ்சம்

அவசரப்பட்டாலும், நல்லவ.. நாம அவளுக்கு உதவி செய்யணும்... என்ன சொல்லுறீங்க..?"

"பீரோ, பேச்சை மாத்தாதே... ஷைலு மேல உனக்கு இருக்குற அக்கறையை விட எனக்கு அதிகமாவே இருக்கு... நானும் அவ ஃபிரெண்ட் தான்.. நீ சொல்லித் திருத்தணும்னு நினைக்கிற.. நான் அவ போக்கில் போய் திருத்தணும், முடியலைன்னா திருத்துற விதத்தில் திருத்தணும்னு நினைக்கிறன்... சோ இனி அவளைப் பத்தி பேசாதே... இப்போ நான்... நம்மைப்பத்தி பேச வந்தேன்.. அதைப் பேசு " என்றான் பிடிவாதமாக.

உதட்டைக் கடித்தபடி அமர்ந்திருந்தவள்.. அவனைப் பார்க்காமல் மெல்லிய குரலில் "ஏன்..? ஏன் பேசணும்...? நீங்க என்ன கேட்கப் போறீங்கன்னு எனக்கு தெரியும்... நான் என்ன பதில் சொல்லப் போறேன்னு உங்களுக்கு தெரியும்... இது தான் பதில்னு தெரிஞ்ச ஒண்ணை கேட்டே தான் ஆகணுமா...?"

"ம்ம்ம்... நான் உன்கிட்ட கேட்க வரல பீரோ... சொல்ல வந்தேன்.. அதான் அது என்னன்னு உனக்கே தெரியுதே..." என்றவன் சற்றுநேரம் அமைதியை ஓட விட்டவன், அவள் உணர்வுகளை எடைபோடுவது போல பார்த்துவிட்டு

"ஐ லவ் யூ.. பீரோ" என்றான்.

அவனின் வார்த்தை சரியாக காதில் விழாதது போல "வாட்.?." என்றாள் அதிர்வாக

"ஐ.... லவ்.... யூ...." என்று நிறுத்தி நிறுத்தி சொன்னவன்

"இப்போ சொல்லு, எனக்குத் தெரிந்த அந்த உன்னோட பதிலை.." என்றவனை திகைத்துப் போய் பார்த்தாள்.

19

சில நேரங்களில் புன்னகை கூட சிறந்த பழிவாங்கும் ஆயுதமே...

பனிப்போர்வை போர்த்தியது போன்ற குளிர்... எரிமலையாய் தகிக்கும் அனல்.. சந்தோஷத்தில் பொங்கும் உள்ளம்.. துயரத்தில் அழும் மனது.. குதித்து கும்மாளமிடும் ஆசை... அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் கதறி அழ வேண்டும் என்ற உணர்வு... என பல வகையான

உணர்வுகள் அடுக்கடுக்காக மாறி மாறி அலைக்கழிக்க... கண்கள் பனிக்க அமர்ந்திருந்தாள் மினி.

ப்ரிதீவ் அவளை விரும்புகிறான் என்பதை இவளும் உணர்ந்தே இருந்தாள்.. ஆனால் அவன் அதை வெளிப்படுத்தும்போது அதன் தாக்கம் இந்தளவுக்கு இருக்கும் என்பதை அறியாதவளாக இருந்து விட்டாள்.. குப்பென்று வியர்த்து வடிய, அவனை எப்படி எதிர்கொள்வது என்று புரியாமல்... பதில் பேச இயலாதவளாக... படிக்கட்டின் இடுக்குகளில் இருந்த புற்களை பதம் பார்த்தாள்.

சற்றுநேரம் அவளின் பதிலுக்காக அவளையே பார்த்துக்கொண்டு இருந்தவன்... பொறுமை இழந்தவனாக.. "பீரோ... நானும் காதலை எப்படியெல்லாம் சொல்லலாம்னு நிறைய யோசிச்சேன்.. இந்த மூணு வார்த்தையை விட பெட்டரா எதுவும் கிடைக்கல... நீ என்னன்னா பதிலே சொல்லாம இப்படி வாயடைச்சுப் போய் இருக்க.. அவ்ளோ மொக்கையாவா ப்ரபோஸ் பண்ணி இருக்கேன்..?

எனக்கு தெரிஞ்ச அந்த பதிலைக் கூட சொல்ல மாட்டேங்குறே... எவ்ளோ நேரமா காத்துக்கிட்டு இருக்கேன்..... நீயும் என்னை லவ் பண்ணுறேன்னா, லவ் பண்ணுறேன்னு சொல்லு.. இல்லேன்னாலும் லவ் பண்ணுறேன்னே சொல்லு.. நான் தப்பா நினைக்க மாட்டேன்... நீ கூட ஷைலுகிட்டே, ப்ரிதீவ் மேல ஈர்ப்பு இருக்கு, ஆனா அதை பத்தி யோசிக்க மாட்டேன்னு சொன்ன இல்ல... இப்போ அந்த ஈர்ப்பை கொஞ்சம் பரிசீலனைக்கு எடுத்துக்கிட்டு எனக்கு ஒரு நல்ல பதிலா சொல்லேன்..."

அவன் பேச்சு புன்னகையை வரவைக்க... 'அந்த லூசு இதையும் உளறிட்டாளா..' என நினைத்தபடி தயக்கமான குரலில் "ப்ரிதீவ், எனக்கு உங்களை ரொம்ப பிடிக்கும்.. உங்க நல்ல மனசு... கலகலப்பான குணம்... உங்க ஹ்யூமர் ... எதிலேயாவது ஜெயிச்சா, அதை தலைக்கு ஏத்திக்காம... தோல்வியை மனசுக்கு கொண்டு போகாத உங்க பாஸிடிவ் அப்ரோச், இதெல்லாமே எனக்கு ரொம்ப பிடிக்கும்.. உங்க கூட இருந்த பொழுதுகளை நான் ரொம்பவுமே ரசிச்சிருக்கேன்.. நீங்க என்னைத் திட்டுறதும் பிடிக்கும்.. கிண்டல் பண்ணுறதும் பிடிக்கும்... பீரோன்னு கூப்பிடுறது கூட பிடிக்கும்.. ஆனா அதுக்கு மேல அதைப்பத்தி யோசிக்க முடியல... ஏன்னா பயம்தான் காரணம் .

இப்போ கூட உங்களை பிடிக்கலைன்னு சொன்னா கோபிச்சிக்குவீங்களோன்னு பயமா இருக்கு... உங்க நட்பு வேணும்னு

மனசு சொல்லுது... ஆனா அதை காதல்னு சொல்ல பிடிக்கலை... என்னோட வாழ்க்கையை எங்க அப்பா அம்மா தான் முடிவு பண்ணனும்னு இப்பவும் உறுதியா நினைக்கிறேன்... அதனால தான் உங்களுக்கு தெரிஞ்ச அந்த பதிலையும் என்னால சொல்ல முடியலை.. உங்களுக்கு பிடிச்ச பதிலையும் சொல்ல முடியலை.. என்னை விட்டுடுங்களேன்... இப்படியே ஃபிரெண்ட்ஸாவே இருந்துடலாம்..”

தன் முகம் பார்க்காமல் பேசுபவளை என்ன செய்வது என்பது போல பார்த்தவன் “பீரோ... உங்க அப்பா பார்க்குற மாப்பிள்ளை மட்டும் நல்லவனா இருப்பானா...? அது மட்டும் தான் நல்ல வாழ்க்கையை தருமா..? ஏன், காதல் கல்யாணம் தராதா...? உங்க அப்பா பார்க்குற பையன் கெட்டவனா இருந்தா என்ன செய்வ..?”

“நான் காதல் திருமணம் தப்புன்னு சொல்லலை... எனக்கு வேணாம்னு தான் சொல்லுறேன்... எங்க அப்பா பார்க்கிறவன் நல்லவனா இருக்கணும்னு அவசியம் இல்லை.. அவன் எங்க அப்பா பார்த்தவனா இருக்கணும், அது தான் முக்கியம்.. அப்படி அவர் பார்த்தவன்... நல்லவனா இருந்தா, நல்லபடியா வாழ்ந்துட்டு போறேன்.. கெட்டவனா இருந்தா நானும் கெட்டவளா மாறி எக்கேடோ கெட்டுப் போறேன்... ஆனா எங்க அப்பாவுக்கு எதிரா நடக்க மாட்டேன்..”

கோபத்தில் பற்களை இறுக கடித்தவன்.. “ஏய்.. உலகத்துல வேற யாருக்கும் அப்பனே இல்லையா.. ஓவரா சீன் காட்டுறே... அப்படி என்ன காதல் மேல் வெறுப்பு உனக்கு..”

“ப்ரிதீவ், தயவுசெஞ்சு புரிஞ்சுக்கோங்க... மிடில்கிளாஸ் மக்களோட வேதனை உங்களுக்கு புரியாது... எங்க அக்காவோட காதலை அப்பா எதிர்த்தார் தான்.. ஆனாலும் அவ காதலுக்காக போராடி இருக்கணும்.. அதை விட்டுட்டு ஓடிப்போனா.. எங்க தெருவுல நான் எல்லாருக்குமே செல்லப்பிள்ளை... எல்லாருடைய வீட்டுக்கும் போவேன்.. ஆனா ஒரே நாளுல எல்லாமே மாறிடுச்சு... எங்களுக்காக பாவப்பட்டவங்களை விட, அடுத்து நீயான்னு கிண்டல் செஞ்சவங்க தான் அதிகம்... எனக்கு எங்க அப்பா தான் ஹீரோ... ஆனா எங்கக்கா இப்படி செஞ்சதால அவர் கம்பீரம் குறைஞ்சு உடைஞ்சு போய் நின்னார்...

அது கூட காலப்போக்குல சரியா போயிருக்கும்..எங்க அக்கா நல்லா வாழ்ந்திருந்தா...! கல்யாணம் செஞ்சுக்கிட்டு ஒரு வருஷம் கூட ஆகலை..., கையில இருபது நாள் பிள்ளையோட திரும்ப மொத்தமா எங்க வீட்டுக்கே வந்துட்டா.. அவங்களுக்குள்ளே என்ன

பிரச்சனைன்னே தெரியலை. ஆச்சு, இதோட மூணு வருஷம் ஓடிடுச்சு. தினம் தினம் அப்பாவும் அம்மாவும் அவளைப் பார்த்து பார்த்தே நொந்து போறாங்க.

இதே பெரியவங்க பார்த்து பண்ணி வச்ச கல்யாணமா இருந்தா, ரெண்டு பேர்கிட்டேயும் பேசி சேர்த்து வைத்து இருக்கலாம்.. இப்போ அவ வாழ்க்கை வீணாப் போனது தான் மிச்சம்.. அதனால,என்னோட பங்குக்கு நானும் அவங்க வேதனையை கூட்ட மாட்டேன்... அதே தப்பை நானும் செய்ய மாட்டேன்... என்னை விட்டுடுங்க.."

"ஏன்... உங்க அக்கா காதல் கல்யாணம் செய்துக்கிட்டா.., உங்கப்பா அப்படியே விட்டுடுவாரா..? அவரோட பொண்ணு தானே.. அவங்க வாழ்க்கைக்கு அவர் எதுவும் செய்யக் கூடாதா..? இதுல கூட வீம்பு பார்க்கணுமா..?"

"எங்க அப்பாவைப் பத்தி தெரியாம பேசாதீங்க... அவ என்ன பிரச்சனைன்னே சொல்லலை... நாங்களும் ஒரு மூணு மாசம், மாமாவா தேடி வருவாருன்னு காத்திருந்தோம், ஆனா அவர் வரலை.. அப்பா விசாரிக்கப் போனப்போ, அவர் வீட்டையே காலி பண்ணிட்டு பெங்களூர் போயிட்டார்னு தெரிஞ்சுது.. அப்பப்போ அவங்க அம்மா வீட்டுக்கு மட்டும் வந்துட்டு போறார்னு தெரிஞ்சுது.. இதுக்கு மேல நாங்க வேற என்ன செய்றது..?"

"நிறைய செஞ்சிருக்கலாம்... பெங்களூருக்குப் போய் மருமகனைப் பார்த்து பேசி இருக்கலாம்.. அவரோட அப்பா அம்மாவை பார்த்துப் பேசி சேர்த்து வைத்து இருக்கலாம்.. இதுல உங்க அப்பா என்ன செஞ்சுட்டார்..?"

"ம்ம்ம்... வீட்டை விட்டுப் போன மனைவியைப் பற்றிக் கொஞ்சம் கூட கவலைப்படாமல் வீட்டைக் காலி பண்ணிட்டு, வேற ஊருக்கு போயிட்ட மனுஷன்கிட்ட என்ன பேசுறது..?"

"கவலைப்படாத மனுஷன்கிட்ட என்ன பேசுறதுன்னு கவலைப்பட்டுக்கிட்டு உங்க அப்பா கம்முன்னு இருந்துட்டார் அப்படித்தானே..? ஏன் அவரோட அப்பா அம்மாக்கிட்ட பேசி இருக்கலாமே..."

"என்ன நீ.. அவங்க அப்பா அம்மாவுக்கும் இஷ்டம் இல்லாமல் நடந்த கல்யாணம் அது.. அவங்ககிட்ட என்ன பேச முடியும்...? யாரைக் கேட்டு உங்கப் பொண்ணு ஓடி வந்தான்னு அவங்க கேட்டா...

முகத்தை எங்கே கொண்டு போய் வச்சுக்குறது...? ஏன், இவ்ளோ பேசுறீங்களே, அவங்களுக்கும்... அவங்க பிள்ளையோட வாழ்க்கை தானே, அவங்க வந்து பேசி சேர்த்து வச்சு இருக்கலாமே..! ஏன் செய்யலை..? பேசலை...?"

அவள் கேள்வி அவனை யோசிக்க வைக்க... யோசனையாக இருந்தவன், சட்டென "மினி, உங்க அப்பனை கொஞ்சம் மீசையை டிரிம் பண்ண சொல்லேன்.. எனக்கென்னவோ அவங்க உங்க அப்பனோட மீசையைப் பார்த்து பயந்துபோனதால கூட பேச வராம இருப்பாங்கன்னு தோணுது.."

அதிர்ச்சியாக
"என்னது..! என்ன சொன்னீங்க.. என்ன சொன்னீங்க..? கிண்டலா... நீங்க எப்போ எங்க அப்பாவைப் பார்த்தீங்க..?"

"பீரோ... ஏன் டென்சன் ஆகுற..? ரஸ்க் திருடுறதுன்னு முடிவாகிடுச்சு.. அதுவும் போலீஸ்காரன் வீடு வேற..!! எந்தளவுக்கு உதை தாங்க முடியும்னு தெரிஞ்சுக்க வேண்டாமா..? அதான் மாமனை தேடிப்போய் பார்த்தேன்.. மனுஷன், மீசையிலேயே ஃபிலிம் காட்டுறார்... உண்மையைச் சொல்லவா, அவரைப் பார்த்ததிலிருந்து அடிவயிறு கலங்கிடுச்சு... இப்போ உன்கிட்டே பேசினதுக்கு அப்புறம் தான் அவர் சரியான சிரிப்பு போலீஸ்னு தெரியுது.. இப்போதான் அப்பாடான்னு இருக்கு."

"பன்னு.., வேண்டாம்... அவர் டெரர் தான்.. பொண்ணு விஷயம்னு கொஞ்சம் அடக்கி வாசிக்கிறார்... சும்மா கிண்டல் செய்தா.. போலீஸ் அடி எப்படி இருக்கும்னு தெரிஞ்சிடும்.. ஜாக்கிரதை."

"அய்யய்யோ.. அம்மா... பயந்துட்டேன் பாரேன்.. அது கிடக்கட்டும். நீ முதல்ல உங்க அக்கா, மாமா பெயர்... உங்க மாமா எங்கே வேலை பார்க்கிறார்னு கொஞ்சம் இந்த டீடைல்ஸ் எல்லாத்தையும் சொல்லு.."

"அது எதுக்கு உனக்கு...?"

"இப்போ சொல்லப் போறியா இல்லையா..?"

"மாமா பேர் ரவிதேவ்.. இங்க இருந்தப்போ இன்ஃபோஸிஸ்ல வேலை பார்த்தார்.. இப்போ பெங்களூருக்கு மாறி இருக்கிறார் போல... எங்க அக்கா பெயர் யாழினி.. போதுமா.."

"ம்ம்ம் மாமன் ரசனையான ஆளு தான். பேரெல்லாம் அழகா தான்

வச்சு இருக்கார்.. யாழினி.. யாமினி.. பேராவது அழகா இருக்கட்டும்னு நினைச்சுட்டார் போல..” என சிரிப்பை அடக்கியபடி சொன்னவனை கோபமாக முறைத்து, அது முடியாமல் தானும் சிரிக்கத் தொடங்கினாள் மினி.

“போதும் பன்னு.., உனக்கு எல்லாமே விளையாட்டுத்தான் .”

“சரி.. இப்போ ஒண்ணு கேக்குறேன், அதுக்கு பதில் சொல்லு.. உங்க அப்பா பார்க்கிற மாப்பிளையைத் தானே கட்டுவே... உங்க அப்பா பார்க்குற பையன் நானா இருந்தா, அப்போ உன்னோட பதில் என்ன..?”

“வாய்ப்பே இல்லை... ஷைலு கூட உங்களுக்கு நடந்த நிச்சயத்துக்கு, எங்க அப்பாவும் அம்மாவும் வந்திருந்தாங்க... அப்புறம் எப்படி ஒத்துப்பாங்க..?” என்றாள் குழப்பமாக...

“அது என்னோட கவலை. உங்க அப்பா என்னை மாப்பிள்ளைன்னு செலெக்ட் பண்ணினா, உன்னோட பதில் என்ன..?”

“சற்றுநேரம் தீவிரமாக யோசித்தவள், அர்ச்சனைக் கூடையுடன் எழுந்து ஆடையில் இருந்த தூசியை தட்டியபடி.. “சித்திக்கு மீசை முளைக்கட்டும், சித்தப்பான்னு கூப்பிடுறேன்.. இப்போ கிளம்புறேன்..” என்றவள் ஒரு தலையசைவில் விடைபெற...

“மினி..., நான் மீசை வளர்க்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்... நீ என்னை மாமான்னே கூப்பிடலாம்” என்றவனின் முகம் பார்க்காமல் நடந்தவளின் நடையில் இருந்த துள்ளலே அவள் உணர்வை வெளிப்படுத்தியது.

வழக்கமாக சுவாரஸ்யத்தை கூட்டும் பாட்டனி வகுப்பு.. அந்த மூவருக்கு மட்டும்... முள் மேல் அமர வைத்த உணர்வைக் கொடுத்தது.. அவர்களின் எண்ணம் முழுவதையும் கடைசி பெஞ்சில் சோர்ந்து படுத்திருந்த ஷைலுவே ஆக்கிரமித்து இருந்தாள்... சரிவர சாப்பிடாமல்... யாரிடமும் பேசாமல் தன்னைத் தானே வருத்திக் கொள்ளும் அவளை என்ன செய்வது என்ற ஆதங்கம் தோழிகள் மூவருக்கும் இருந்த போதும்...

இப்போது உடல் இளைத்து கறுத்துப் போய்.. நிற்கவே இயலாத அளவுக்கு சோர்வுடன் அவளை கண்டவர்கள், இவள் ஏன் தன்னையும் வதைத்து பிறரையும் வதைக்கிறாள் என்று கோபம் கூட வந்தது.. இன்று மயக்கமே போட்டு விழவும் மனம் பதைத்து போனார்கள்... வகுப்பு

முடிந்து ஆசிரியர் கிளம்பவும், மின்னலாக ஷைலுவிடம் சென்றார்கள் .

நிலா அவளை உலுக்கியெழுப்பி அமர வைத்தவள் "ஷைலு, நீ செய்றது நியாயமா...?ஏண்டி இப்படி பண்ணுற..?உனக்கு கோபம் இருந்தா அண்ணாக்கிட்டே நேரடியா சண்டை போடு.. இப்படி பட்டினிக் கிடந்து உடம்பை கெடுத்துக்குறதுல என்ன லாபம்.." என்றவள், மினியிடம்

"இவளை இந்த நிலைமையில விட்டுட்டு, அண்ணா என்ன தாண்டி பண்ணுறார்.."

எரிச்சலாக "அவர் என்ன பண்ணுவார்...? அவரும் என்ன காரணம்னே புரியாம என்கிட்டேயும், ப்ரிதீவ்கிட்டேயும் புலம்பிக்கிட்டே இருக்கார்... காலையில கூட இவளை வீட்டுலேயே இருக்க சொல்லி கெஞ்சி இருக்கார்.. இவ கேட்டாதானே.. என்கிட்ட போன் செய்து பார்த்துக்க சொன்னார்... இவளுக்கு இவ்வளோ பிடிவாதம் ஆகாது, என்ன செய்றது.."

அவர்கள் பேசுவதை கூட கவனிக்க இயலாமல் சோர்ந்த ஷைலுவைப் பார்த்தவள்.. "மினி, இது சரி வராது.. நீ தான் வண்டி வச்சு இருக்கிற... இவளை கேன்டீன் கூட்டிட்டு போய், ஏதாவது சாப்பிட வச்சுட்டு, அப்புறமா டாக்டர் கிட்டே கூட்டிட்டு போ.. நாங்க HODகிட்டே இன்ஃபார்ம் பண்ணிட்டு பிராக்டிகல் கிளாஸுக்குப் போறோம்... எல்லாரும் லீவ் எடுத்தா சரி வராது.." என்றவர்கள் கிளம்பிவிட

ஷைலுவுடன் கேன்டீன் வந்தவள், வாங்கிய பாலைக் குடிக்க வைக்க.. அதுவும் வாந்தியாக வெளியேற... பயந்து போனவள்... தெரிந்த இடம் என்று அவளை தேவகி நர்சிங்ஹோமுக்கே அழைத்து சென்றாள்... முன்னர் ஷைலுவைப் பார்த்த அதே டாக்டர் ரேவதி இருக்க.. ஷைலுவிடம் சில கேள்விகளை கேட்டு விட்டு..

"நாள் தள்ளிப் போய் இருக்கா...? எத்தனை நாள்...?" என்று கேட்கவும், சந்தோஷப் புயல் தாக்கியதை போல உணர்ந்த மினி, அந்த மகிழ்வைப் பகிர்ந்துக் கொள்ள ஷைலுவின் கரங்களை அழுத்திப் பிடித்தபடி "ஷைலு.."என்று அவள் முகம் பார்க்க... அவளோ இதை எதிர்பார்த்தவள் போல, எந்த உணர்வும் இல்லாமல் மரத்த குரலில்.. "பன்னிரெண்டு நாள்.." என்றாள்.

"உடனே கன்ஃபார்ம் பண்ண முடியாது. ப்ளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட் எடுக்கணும்.. அதுக்கு முன்னே இதுல பார்த்துடலாம்" என்று..

பிரக்னன்ஸி கிட்டை அவளிடம் நீட்ட, அந்த சோதனையின் முடிவு நல்ல விஷயத்தை உறுதியாக சொல்ல..

மலர்ந்த முகத்துடன் "கங்கிராட்ஸ் ஷைலஜா.. இது பாஸிடிவ் ரிசல்ட்டை தான் சொல்லுது.. மத்த டெஸ்ட்டும் எடுத்து பார்த்துடலாம்... இங்கேயே லேப் இருக்கு, போய் எடுத்துட்டு வந்துடுங்க... இப்போ நான் ஜனாவைப் பார்க்கணுமே..." என்று சிரித்தபடி லேப் டெஸ்ட் எடுப்பதற்கான பேப்பரை நீட்டினார்.

அசையாமல் அமர்ந்திருந்த ஷைலு, கண்களில் நீர் வடிய "டாக்டர்.., எனக்கு இந்த குழந்தை வேண்டாம்... ஏதாவது மாத்திரை கொடுங்க, இல்லைன்னா கலைச்சுடுங்க ப்ளீஸ்.."

அதிர்ந்த மினி "ஏய் உளறாதே.." என்று கத்த... டாக்டர் அவளை அமைதியாக இருக்கும்படி சைகை செய்தவர்.

"ஷைலஜா.., உனக்கு என்ன பயம்...? குழந்தை பிறப்பு ஒண்ணும் அவ்ளோ பயமான விஷயம் இல்லை... நாங்கல்லாம் இருக்கோம் இல்ல... முதன்முதல்ல கன்சீவ் ஆகுற எல்லா பொண்ணுங்களுக்கும் வரும் பயம் தான் இது..."

"இல்லை... இல்லை டாக்டர்.. இந்த குழந்தை எனக்கு வேண்டாம்.. ப்ளீஸ்.."

முகம் இறுக "ஷைலஜா.., உங்களுக்கு என்ன பிரச்சனை...? நீங்க புரியாம பேசிக்கிட்டு இருக்கீங்க.. நீங்க கேட்டவுடனே எந்த டாக்டரும் கலைக்க மாட்டாங்க. அதிலயும் உனக்கு யூட்ரஸ் பிராப்ளம் இருந்து சரி பண்ணினதுக்கு, உடனே குழந்தை செட் ஆகி இருக்கு... நீ என்னன்னா சுலபமா கலைச்சுடுங்கன்னு சொல்லுற... இதுக்கு ஜனா ஒத்துக்குவாரா..? கருவைக் கலைக்கிறது ஒண்ணும் சாதாரண விஷயமில்லை., எவ்ளோ வேதனையா இருக்கும் தெரியுமா....? இதுவும் ஒரு உயிர் தானே... ஒரு கருக்கலைப்புன்றது பத்து பிரசவத்துக்கு சமம்... கையில இருக்குறதை தவற விட்டுட்டு அப்புறம் தவிக்காதே.. இப்போ கலைக்கணும்னு என்ன அவசியம்...?."

"ப்ளீஸ் டாக்டர்.. நான் படிக்கணும்.. இப்போவே குழந்தைன்னா.."

"இதையெல்லாம் முன்னாடியே யோசிச்சு இருக்கணும்... உன்னோட படிப்பு முடியறதுக்கு, இன்னும் ஒன்றரை மாசம் கூட இல்லையே, அப்புறம் என்ன..?"

“இல்லை டாக்டர்.. நான் மேற்கொண்டு படிக்கணும்..”

“இதுக்கு ஜனா ஒத்துக்குவாரா...? அப்படியே இருந்தாலும்.. குழந்தையைப் பெத்துக்கிட்டு படி... யார் வேண்டாம்னா..! அதுக்கு மேல உன்னோட இஷ்டம். ஆனா நான் கலைக்க மாட்டேன்... நீ வேற இடம் பார்த்துக்கோ.. எது செய்றதா இருந்தாலும் யோசிச்சே செய்... போய் இந்த டெஸ்ட்டுகளை எடுத்துட்டு வா..” என்று கடுப்புடன் சொன்னவர், அடுத்த பேஷண்டுக்கான பெல்லை அழுத்த... ஷைலு, மினி இருவரும் லேப்பை நோக்கி போனார்கள்.

“ஷைலு.. உனக்கு என்னடி ஆச்சு...? ஏன் இப்படி நடந்துக்குறே..? உன்னோட கோபத்தை குழந்தை வரைக்கும் கொண்டு போவியா...? யோசிக்கவே மாட்டியா..? அண்ணனை பழி வாங்குறதா நினைச்சுக்கிட்டு உன்னை நீயே பழி வாங்கிக்கிறியே” என்று கண்களில் நீர் வடிய பேசியவளை வெறுமையாக பார்த்தவள், அவள் கைகளை விலக்கி விட்டு லேபினுள் நுழைந்து விட... என்ன செய்வது என்று நொடி நேரம் திகைத்தவளின் கரங்கள் தன்னியல்பாய் ப்ரிதீவின் செல்லுக்கு அழைப்பை விட்டு காத்திருக்க.. எடுத்தவனோ

“மினி.. ஹலோ. மினி.. என்ன இந்த நேரத்துல கூப்பிட்டு இருக்குற...? காலேஜ் இல்லையா..? ஹலோ.. ஹலோ..” என்றவனை எதிர்முனையின் அமைதி குழப்பத்தில் ஆழ்த்த... மீண்டும் “ஹலோ.. பீரோ... என்ன ஆச்சு..? ஏதாவது பேசு..” என்பதற்கு பதிலாய் ஒரு கேவல் வெளிப்பட பதறியவனாக..

“மினி.. என்ன ஆச்சு..? எதுக்கு அழுவுறே..? மினி பேசு.. சொல்லுடி... என்ன நடந்துச்சு..? ஒண்ணுமே சொல்லாம நீ பாட்டுக்கு இப்படி அழுதா, நான் என்னன்னு நினைக்கிறது.. பேசுடி..”

கேவலுடன் “ப்ரிதீவ்... நான்.. தேவகி நர்சிங்ஹோம்ல... இருக்கேன்..”

“மினி என்ன ஆச்சு...? கொஞ்சம் புரியுற மாதிரி சொல்லு.. உடம்பு சரியில்லையா...? அழாம என்னன்னு சொல்லேன்..”

“ஷைலு.. ஷைலு... கன்சீவ்வாகி இருக்கா ...”

“கன்சீ... ஹே.. முட்டாள்... நல்ல செய்தி தானே...! எதுக்கு இதை அழுதுக்கிட்டே.. லூசு..லூசு..”

“இல்லை... ப்ரிதீவ்.. இந்த பேபி அவளுக்கு வேண்டாமாம்... டாக்டர்கிட்ட கலைக்க சொல்லி கேக்குறா..”

“வாட்...முட்டாளா அவ..?”

“ப்ரிதீவ்.. குட்டிக் குழந்தை.. குட்டி.. குட்டி.. கை காலோட.. அவளுக்கு எப்படி மனசு வந்துச்சு..? இவ்ளோ வன்மம் அவளுக்கு எப்படி வந்தது...?” என மினியின் குரல் உடைய... அழுகை பெரியதாக ஆகியது.

சற்றுநேரம் யோசித்தவன் “மினி, முதல்ல அழுகையை நிறுத்து.. கண்ணைத் துடை.. நான் சொல்லுறதை அப்படியே செய்.. இப்போ சிரிச்சுக்கிட்டே ஜனாவுக்கு போன் செய்து... அவருக்கு குழந்தை விஷயத்தை சொல்லி வாழ்த்து சொல்லு.. கவனம் சிரிப்போட சொல்லு. மீதியை அவர் பார்த்துப்பார், புரியதா..?”

முகம் பளிச்சிட “ஆனா அவர்... இதை எப்படி... ஷைலு மனசை மாத்த முடியுமா..?”

“அவராள மட்டும் தான் முடியும்... அவர் குழந்தை.. அதை காப்பாத்திக்க அவர் தான் போராடணும்.. நீ அவருக்கு போன் பண்ணு...” என்றவன் போனை கட் செய்ய

சற்று யோசித்தவள் மலர்ந்த முகத்துடன் ஜனாவை அழைத்தாள்... எடுத்தவுடன் எதிர்முனை படப்படப்பாக.“ஹலோ.. யாமினி.. ஷைலுவுக்கு என்ன..? காலையிலேயே முடியாம இருந்தா, நீ வேற இந்த நேரத்துல போன் பண்ணுற, என்ன.. என்ன ஆச்சு...?” என்று பதற..

ஏனோ அவனின் பதட்டம் அவள் மனதுக்கு ஆறுதலை கொடுத்து... “அமைதி அமைதி அண்ணா... செய்யுறதையும் செஞ்சுட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி பதறுறீங்க..? ம்ம்..”

மேலும் டென்ஷன் ஏற “யாமினி, என்னாச்சு.. நான் ஒண்ணும் செய்யலையே.. என்னை பயமுறுத்தாதே , என்னாச்சுன்னு சொல்லு...”

“என்ன சொல்லு சொல்லுன்னு...! அதான் இந்த சின்ன வயசுலேயே என்னை அத்தை ஆக்கிட்டீங்களே...! போதாதா... பிள்ளையே வந்தப்புறம் ஒண்ணும் தெரியாத பச்சைப்பிள்ளை போல... என்ன நடிப்பு...” என அதட்டலாக சொல்ல..

“நீ அத்தையா..! நான்.. என்ன.. செய்தேன்.. பிள்ளை...” என்றவன் குரல் நடுங்க “மினி... நிஜமாவா.. உண்மையாவா..?”

“சாரே.. நிஜம்... உண்மை எல்லாம் ஒண்ணுதான்.. சந்தோஷத்துல மறந்து போய் எங்க அப்பா வச்ச பேரையே சுருக்கிட்டீங்க.. இப்போ தான் காதுக்கு இதமா இருக்கு. சீக்கிரம் தேவகி நர்சிங்ஹோமுக்கு வாங்க அண்ணா..” என்றவள் அவன் வரவிற்காக காத்திருக்க.. ஷைலு சற்று நேரத்தில் சோர்வாக வெளியில் வந்தவள்..

“ப்ளட் டெஸ்ட் ரிசல்ட் நாளைக்கு தான் வருமாம்.. ஸ்கேன் ரிசல்ட் மட்டும் இப்போ கொடுத்து இருக்காங்க... வா டாக்டர்கிட்டே போவோம்..” என்றவர்கள் அங்கே போனதும், அடுத்தபடியாக அவர்களையே கூப்பிட...

டாக்டர் அவளுடைய ரிப்போர்ட்டை பார்த்தவர் “ம்ம் நார்மல் குரோத் இருக்கு. மீதியை நாளைக்கு வர ரிப்போர்ட்டைப் பார்த்து முடிவு செய்யலாம்... அந்த ரூமுக்கு போம்மா செக் பண்ணனும்” என்றவர் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே போகவும்..

பரபரப்பாக உள்ளே வந்த ஜனாவைப் பார்த்த மினி, உதட்டில் விரல் வைத்து அமைதியாக இருக்க சொல்லி.. செக்கப் ரூமை கைகாட்ட... புரிந்ததாக தலையாட்டியவன், அவள் பக்கத்து இருக்கையில் அமர்ந்தாலும், பார்வை செக்கப் ரூம் ஸ்க்ரீனை விட்டு நகராமல் வெறித்தது.. ஒரு நிலையில் இல்லாமல் கால்களை டென்ஷனில் ஆட்டிக்கொண்டே இருந்தவனை புன்னகையோடு பார்த்தவளின் பார்வை, அவன் முகத்தில் படிய...

சந்தோஷம், பூரிப்பு, பயம், படபடப்பு என்று கலவையான உணர்வுகளை ஜனாவின் முகம் காட்டினாலும், அதையும் தாண்டி ஏதோ ஒரு தேஜஸ் தெரிந்தது... ‘தாய்மை பெண்களுக்கு மட்டும் அழகு தரும் என்று யார் சொன்னது...’ ‘தந்தை’ என்ற வார்த்தை ஆண்களையும் அழகாக மாற்றும் என்று அந்த நொடி மினிக்கு புரிந்தது.

டாக்டர் வரும் ஓசை கேட்க.. ஜனா நிமிர்ந்து அமர்ந்தவன்..பார்வையில் ஷைலு படவும்... தாவி அவள் அருகில் போனவன் “ஷைலஜா..” என்று அவளை அவன் தோள் வளைவுக்குள் கொண்டு வர..

அவள் பின்னே வந்த டாக்டர் ரேவதியின் முகம் மலர, அவனைக் கண்டவர் மெச்சுதலாக மினியை பார்த்துவிட்டு... சிரித்தபடி “ஜனா.. இங்க நாங்களும் இருக்கோம்... வாங்க” என்றவர் இறுகி நின்ற ஷைலுவை பார்த்தபடி..

“எல்லாம் நார்மல்... ஷைலஜா இரண்டு மாசத்துக்கு ரொம்ப கவனமா

இருக்கணும்.. கடினமான வேலைகள் செய்ய வேண்டாம்.. மருந்து தரேன், அதை கரெக்ட்டா ஃபாலோ பண்ணுங்க.. அடுத்த அப்பாயின்ட்மென்ட், ரிப்போர்ட் வந்ததும் பார்த்துக்கலாம்... மனசை சந்தோஷமா வச்சுக்கோங்க.. நம்ம விருப்பு வெறுப்புகள் குழந்தையையும் அதிகம் பாதிக்கும்...” என்று பூடகமாக சொல்லி அவர்களை வழியனுப்பி வைக்க.. வெளியே வந்தும் ஷைலுவின் கரங்களை விடாமல் பிடித்து இருந்தவன்..

“மினி, நீ கிளம்பு. நான் ஷைலஜாவை வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்... “ என்றவன் அதற்கு மேல் அவளைப் பார்க்காமல் வண்டியை ஸ்டார்ட் பண்ணிவிட்டு, ஷைலு அமர்வதில் கவனத்தை திருப்ப..

“அண்ணா..”

“என்ன மினி.. நீ கிளம்பலையா..?”

கடுப்பாக “அடப்பாவி.. உங்க பொண்டாட்டிக்கு இவ்ளோ செஞ்சிருக்கேன்.. ஒரு குட்டி தேங்க்ஸ் கூட கிடையாதா..? இப்படி அம்போன்னு கழட்டி விடுறீங்க..”

ஷைலுவின் கரங்களை தன் தோளின் மீது எடுத்து போட்டவன், தலைசாய்த்து முகம் பெருமையில் மின்ன “ஒரு குட்டி தேங்க்ஸ்..” என்றுவிட்டு வண்டியை மின்னலாக பறக்க விட.. இது ஜனா தானா என்ற பாவனையில் விழிகள் இரண்டும் தெறித்து வெளியே விழுந்து விடுவது போல திகைத்து, காற்றில் கலையும் புகையை பார்த்தபடி நின்றாள் மினி.

வீடு வந்ததும் வாயிற்கதவை வேகமாக மூடிவிட்டு இரண்டே எட்டில் ஷைலுவை தன் இறுக்கிய அணைப்பில் கொண்டு வந்தவன், அவள் முகம் முழுவதும் முத்தங்களை அடுக்க... இறுகி நின்றவளோ எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்ற யோசனையில், பிடிவாதமாக அவனை விலக்கி விட...

அதை கண்டுக் கொள்ளாதவனாய் மீண்டும் அவளை இறுக்கி அணைத்தவன், அவள் கழுத்து வளைவில் முகம் புதைக்க... பேச்சே இல்லாமல் நிமிடங்கள் கடந்தன.. கழுத்து வளைவில் ஈரத்தையும்.. குலுங்கும் அவனின் உடல், அழுகிறான் என்பதையும் சொல்ல... மெல்ல அவனை விலக்கி விட்டு சோர்வாக சோஃபாவில் அமர்ந்தவள்.

‘இதுக்கே அழுகிறானே..., நான் சொல்லப் போறதைக் கேட்டால் என்ன ஆவான்...?’ என்று வன்மமாக நினைக்க... அவள் மனதை அறியாதவனாக.. தரையில் அமர்ந்து அவள் மடியில் தலையை சாய்த்தவன்.. எதிரில் இருந்த வால் போஸ்டரில் இருக்கும் ஷைலுவை பார்த்து கண்களை துடைத்தவாறே...

“தேங்க்ஸ் ஷைலஜா.. தேங்க்ஸ்.. நான் எவ்ளோ சந்தோஷமா இருக்கேன் தெரியுமா.. நான் அனாதை இல்லை.. எனக்குன்னு ஒரு வீடு... எனக்குன்னு ஒரு மனைவி.. இப்போ எனக்குன்னு ஒரு குழந்தை..! எல்லாம் உன்னால தான்... எல்லாம் நீ கொடுத்தது.. என்னோட குடும்பம்.. என் கனவு எல்லாமே கை கூடிடுச்சு இல்ல... சந்தோஷத்துல என் நெஞ்சு வெடிச்சிடும் போல இருக்கு ஷைலஜா..

என்னோட குழந்தை யாரை மாதிரி இருக்கும்.. தெரியுமா...? உன்னை மாதிரியே.. இது கன்ஃபர்மா பொண்ணு தான்.. என்னோட கனவெல்லாம் பலிக்குது... குழந்தைக்கு நான் பேர் கூட முடிவு பண்ணி வச்சிருக்கேன்.. ரெண்டு வருஷமா கனவுலேயே வாழ்ந்த வாழ்க்கை.. இப்போ நிஜமா என் கையில இருக்கு...” என்றவனை வியப்பாக பார்த்து

“அது என்ன பெண் குழந்தை... பையனா இருந்தா என்ன பண்ணுவீங்க..?”

இல்லை என்பது போல இடம்வலமாக தலை அசைத்தவன், அவள் வயிற்றில் கை வைத்து “இது பொண்ணு தான்.., நான் பேர் கூட செலக்ட் செய்துட்டேன்.. உன்னோட பேர் ஷைலஜா.. உன் முடிவின் தொடக்கமா நான் ஜனார்த்... நம்மோட தொடக்கமா நம்ம பொண்ணு ஜனனி.. பேர் எப்படி இருக்கு..?” என்றவனை ஆச்சரியமாக பார்த்தவள்

“ஒரு வேளை ஆண் பிள்ளையா இருந்தா, வேண்டாமா..?”

“நான் அப்படி சொன்னேனா...? ஆண் பிள்ளையா இருந்தா, ஜானவ்.. ஆனா இது பெண் பிள்ளை தான். எனக்குத் தெரியும்... என்னோட ரெண்டு வருஷ கனவு இவ... நான் கற்பனையில வாழ்ந்த வாழ்க்கைக்கு உயிர் கிடைச்சா மாதிரி இருக்கு” என்று கண்கள் ஜொலிக்க சொன்னவனை வெறுமையாக பார்த்துக் கொண்டு இருந்தாள்.

“ஷைலஜா.., என் பொண்ணு ஆசைப்பட்ட எதுவுமே கிடைக்கலைன்னு இருக்க கூடாது. அவ படிப்பு.. அவ வாழ்க்கை எல்லாமே, தி பெஸ்டா இருக்கணும்.. என் பொண்ணு எதுக்குமே கண்ணு கலங்கவே கூடாது.

எப்போதும் சிரிப்போட இருக்கணும்... இந்த உலகத்துல சிறந்த அப்பாவா நான் இருக்கணும்.. எனக்கு கிடைக்காத அத்தனையும் அவளுக்கு கிடைக்கணும்...

என் குட்டிம்மாவுக்கு உன்னை விட நான் தான் உயிரா இருக்கணும்.. உனக்கு நான் தான் உயிரா இருக்கணும்.. உங்க பாசத்தில் நான் மூச்சு முட்டிப் போகணும்..” என்று பைத்தியம் போல் பேசிக்கொண்டு இருக்க... இப்போது ஜனாவின் கண்களில் இருந்த ஜொலிப்பு, ஷைலுவின் கண்களுக்கு இடம் மாறியது.

பேசிக்கொண்டு இருந்தவனின் வாயில் கரங்களை வைத்து அவன் பேச்சை நிறுத்தியவள், அவன் முகத்தை உற்றுப் பார்த்து அவன் விழிகளில் எதையோ தேடியவள், தன்னை மீறி அவன் உதட்டில் அழுந்த ஒரு முத்தத்தை பதிக்க... நீண்ட நாட்களுக்கு பின் தெரிந்த ஷைலுவின் இந்த மாற்றம், ஜனாவை சிலையாக மாற்ற... கண்களை மூடி விகசித்த முகத்துடன் அமர்ந்திருந்தான்.

அதை கண்டுக் கொள்ளாமல் ஷைலஜா வேகமாக அறைக்குள் சென்று கதவை சாத்தியவள், பெருமூச்சுக்களோடு.. அதிலே சாய்ந்து, முகம் தாமரையாக மலர மனம் விட்டு சிரிக்க துவங்கினாள். “சும்மாவா சொன்னாங்க, ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்னு” என வாய்விட்டு புலம்பலாக சொன்னவளின் வார்த்தைகளில் பழி உணர்வு மட்டுமே மேலோங்கி இருந்தது.

புன்னகையை விட கண்ணிரே சிறந்து... புன்னைகை எல்லோருக்கும் சாத்தியம்... கண்ணீர் உண்மை காதலுக்கு மட்டுமே சாத்தியம்...

வாழ்க்கை ஒரு விசித்திரமான புதிர்... அடுத்து என்ன நிகழும் என்ற எதிர்பார்ப்பை கூட்டுவதே சுவாரசியம் தான்... அதிலும் மனித மனம் விளங்கிக் கொள்ள முடியாத புதிர்... சாத்தியமே இல்லாத ஒன்றை சுலபமாக நம்புவதும்.. நம்பக்கூடிய ஒன்றை சந்தேகப்படுவதுமே அதன் இயல்பு. ஷைலுவிடம் தெரிந்த மாற்றம்.. ஜனாவை தரையில் கால் படாமல் மிதக்க வைத்து.. சிறிது கூட யோசிக்காமல் அவளை நம்பவும் வைத்தது.

மந்திரக்காரியின் கையிலிருக்கும் கண்ணாடிக் குடுவை கொண்டு வந்த மாற்றம் போல அடியோடு மாறித்தான் போனாள் ஷைலு... மலர்ந்த

முகம்.. அவன் முகமறிந்து நடக்கும் விதம்.. கலகல பேச்சு.. சில நேரங்களில் பேச்சே இல்லை என்றாலும், அவன் தோளில் சாய்ந்து அமர்ந்து, ஆறுதல் தேடிக் கொள்ளும் பாங்கு என்று.. மாற்றத்தின் ஊற்றாய் மாறிப் போனாள்.

ஜனாவிற்கு, தன் கனவில் கண்ட வாழ்க்கை கை வந்து சேர்ந்து விட்டது.. குழந்தையென்ற ஒன்று தங்கள் வாழ்வில் உருவானதும், ஷைலு தன் மனக் குழப்பங்களை நீக்கி, தன்னோடு ஒன்றி விட்டாள் என்ற நிம்மதி ஒன்றே அவனை வேறெதுவும் நினைக்க விடாமல் நிம்மதியாக இருக்க வைத்தது.

தோழிகளுக்கோ 'அப்பாடா இது போதும். இப்படியே இவள் குழப்பிக் கொள்ளாமல் இருந்தாலே போதும்' என்று பெருமூச்சோடு தங்கள் சந்தோஷங்களை பரிமாறிக்கொண்டனர்.. இத்தனையில் இருந்தும் மாறுபட்ட கருத்தைக் கொண்டவன் ப்ரிதீவ் மட்டுமே... 'இதென்ன சினிமாவா.. சொல்லாம கொள்ளாம சட்டுன்னு திருந்த.. அதுவும் கருவை கலைக்குற வரைக்கும் போனவள்.., இப்படி திடீர்னு மாறியிருக்குறது நம்ப முடியலையே...! இந்த மாற்றம் குழப்புதே' என்று மினியிடம் சொல்லி வாங்கி கட்டிக் கொண்டான், பின் அவனும் ஒரு தோள் குலுக்கலோடு விட்டு விட்டான்.

பரீட்சைக்கு ஒரு மாதம் கூட இல்லை என்பதால் தோழிகள் நால்வரும் படிப்பில் கவனத்தை செலுத்த.... எல்லோருக்கும் ஷைலுவின் மீதான கவனம் பின் சென்று, படிப்பு முன்னே வந்து விட்டது.

வழக்கம்போல ப்ரிதீவின் கஃபேயில் அன்றும் நடந்த சந்திப்பின் போது.. சுவாரசியமான பேச்சில்.. ப்ரிதீவ்வும் மினியும் நேரத்தை கடத்த.. ஷைலுவோ எதையோ கேட்க வந்து கேட்க முடியாமல் தவிக்க.. அதை கொஞ்ச நேரத்தில் உணர்ந்து கொண்ட ப்ரிதீவ் அவள் புறம் திரும்பி...

"ஷைலு, என்கிட்ட ஏதாவது கேக்கணுமா..? இல்ல எனி ஹெல்ப்.." என்று நிறுத்த.

தயக்கமாக 'ஆம்' என்பது போல தலையசைத்தவளை புருவங்கள் இடுங்க கேள்வியாக பார்த்தவன்... "என்ன ஷைலு, என்ன வேணும் உனக்கு..?"

"ப்ரிதீவ், அது.. வந்து... ஒரு தடவை, சிக்ஸ் மந்த்ஸ் கோர்ஸ் ஏதோ இருக்குன்னு சொன்னீங்கல்ல..."

‘நான் எப்போ சொன்னேன்...?’ என்று யோசித்தவன் “ஆமா நீ வேலை தேடும் போது சொன்னேன், அதுக்கு இப்போ என்ன..?”

“அந்த கோர்ஸ் டீடைல்ஸ் தர முடியுமா..?”

அதுவரை அமைதியாக இருந்த மினி கோபமாக “யேய்... திரும்பவும் ஆரம்பிச்சுட்டியா...? ஒரு பத்து நாள் ஒழுங்கா இருந்தேன்னு நினைச்சேன்... திரும்பவும் என்னடி இது குழப்பம்..”

“ப்ச்.. படிக்கணும்னு நினைக்கிறது தப்பா..”

“ஷைலு..., படிக்கிறது ஒண்ணும் தப்பு இல்லை.. ஆனா இந்த நிலைமையில இப்போ எதுக்கு படிக்கணும்...?”

“நீ என்னடி பேசுறே.. டெலிவரிக்கு இன்னும் எட்டு மாசம் இருக்கு, அதுவரைக்கும் வீட்டுல போர் அடிக்குமே.. எவ்ளோ நேரம் தான் தனியாவே இருக்குறது..?” என்று குரல் உடைய சொன்னவளை பார்த்ததும் மினியின் மனம் பதறியது ‘இந்த நேரத்துல மனசு அம்மாவை தேடும்னு சொல்வாங்களே.. ஆனா இவளோட தவிப்பை கூட வெளியில சொல்ல முடியாதே.. இவளும் என்னதான் செய்வா..? அப்படின்னா படிக்கணும்கிற இவளோட ஆசை நியாயம் தானே’ என்று நினைத்தவள்.

“ஆமா ப்ரிதீவ்... இவ சொல்லுறதும் சரி தான்.. நானும் படிக்கிறேன்... நீங்க டீடைல்ஸ் கொடுங்க. ஆறு மாசம் தானே... படிச்சு வைப்போம்..”

யோசனையாக ஷைலுவை பார்த்தபடி “உங்க எக்ஸாம் முடியட்டும்... லீவையும் முடிங்க. அப்புறம் தான் கிளாஸ் ஆரம்பிக்கும்.. அதுக்கு என்னென்ன தேவைன்னு பார்த்துட்டு.. நானே சேர்த்தும் விடுறேன்.. ஷைலு, நீ ஜனாகிட்ட சொல்லிட்டியா...?”

தடுமாறியபடியே “இன்னும் இல்லை. நீங்க பேசுறீங்களா..” ஜனாவை நானே பார்த்துக்குவேன் என்று திமிராக சொல்லுபவளின் தயக்கமே, அவளது மாற்றத்தை காட்டுவதாக உணர்த்த...

மினியோ “ஹே ஷைலு நானே அண்ணன்கிட்ட பேசுறேன்.. நான் போறேன்னு சொன்னாலே.. உன்னையும் அண்ணன் அனுப்புவார்..” என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே ஜனா உள்ளே வர, அவனைக் கண்டதும் முகம் மலர

“வாங்க... வாங்க... அண்ணா உங்களை பத்தி தான் பேசிட்டு இருந்தோம், நூறு ஆயுசு..” என்றவளை கனிவாக பார்த்தவன், ஏதோ சொல்ல வர ‘ஆனந்த குயிலின் ஓசை தினம் எங்களின் வீட்டுக்குள்ளே’ என்ற செல்லின் ஓசை கவனத்தை கலைத்தது.

‘இது என்ன அதிசயம்’ என்பது போன்ற பார்வையை ப்ரிதீவ் பக்கம் மினி செலுத்த.. நான் தான் காரணம் என்பது போல ஒரு காலரை தூக்கி விட்டவனை பார்வையாலேயே தட்டிக் கொடுத்தவளின் கவனம் ஜனா மீது பதிய..

“இல்லை தேவா அண்ணா..., நான் இன்னைக்கு வர மாட்டேன்.. நீங்களே எல்லாருக்கும் சம்பளம் கொடுத்துடுங்க..”

“பரவாயில்லை அண்ணா, நீங்க சரியா செய்வீங்க..”

“மீதி பணத்தை நீங்களே பேங்க்ல கட்டிடுங்க..”

“இல்லேண்ணா... நாளைக்கு எனக்கு வேற வேலை இருக்கு.. நீங்களே பணத்தைக் கட்டுங்க.. உங்க மேல நிறைய நம்பிக்கை இருக்கு..” என்று சொன்னவனை பார்த்து மூவரும் ஆச்சரிய பார்வையை பரிமாறிக் கொண்டனர்.. எப்படி இந்த மாற்றம் என்று திகைப்பாய் இருந்தது.

பேசிவிட்டு போனை வைத்த ஜனா..., ஷைலுவிடம் “ஷைலஜா, கொஞ்சம் வெளியே வாயேன்..”

குழப்பத்துடன் “வீட்டுக்கு தானே, கிளம்பலாமே..” என்றவள் கிளம்ப தயாராக..

“இல்லேல்லே உனக்கு ஒரு சர்ப்ரைஸ்.. ப்ரிதீவ், மினி, நீங்களும் வாங்க..” என்றவன் ஷைலுவை கைப்பிடித்து அழைத்து செல்ல.. அவனை பின் தொடர்ந்தவர்களை பார்க்கிங் வரை அழைத்து சென்றவன்.., ஒரு புத்தம்புதிய குங்கும நிற மாருதி கார், ஃபார் ரெஜிஸ்ட்ரேஷன் என்ற போர்டுடன் ரிப்பன் கட்டி நிற்க, அதன் அருகே வந்தவன்.. காரின் சாவியை முகம் மலர ஷைலுவிடம் கொடுத்தான்.

“கங்க்ராட்ஸ் ஜனா.. கார் சூப்பரா இருக்கு. ஆனா இது ரேர் கலராச்சே..” என தன் மனம் நிறைந்த வாழ்த்தை தெரிவித்தான் ப்ரிதீவ்.

“ம்ம்ம்... சொல்லி வச்சு வாங்கினேன்.. ஷைலுவுக்கு இந்த கலர் ரொம்ப பிடிக்கும்..”

“ஹே அண்ணா கலக்குறீங்க” என்று மினி காரை சுற்றி வர.... ஷைலு

அமைதியாக புன்னகையுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

“ஆமா.. இன்னும் கொஞ்ச நாள் ஆச்சுன்னா ஷைலுவுக்கு பைக்கில உக்கார கஷ்டமா இருக்குமே” என்றவனின் பார்வை ஷைலுவை விட்டு விலகவில்லை.

இருவரையும் மாறி மாறிப் பார்த்தவள்.. “அண்ணா... இப்போதான் ஏரியை திறந்து விட்டு சென்னை மூழ்கிப் போச்சாம்.. சோ உங்க வாட்டர் ஃபால்சை கொஞ்சம் மூடுங்க. இப்போ திரும்பவும் நம்ம ஊர் மூழ்கிடுச்சுன்னா, தன்னார்வலர்கள் கூட வர மாட்டாங்க, எல்லோரும் ரொம்ப டயர்டா இருக்காங்களாம்.. ஓகே ஓகே இப்போ இந்த கார்ல என்னை ஒரு ரவுண்டு கூட்டிட்டு போங்க..” என்றவள் கார் கதவின் அருகே போக..

“மினி..., ஃபர்ஸ்ட் ஷைலஜாவை தான் கூட்டிட்டு போகணும்னு ஆசைப்பட்டேன்.. நாங்க போயிட்டு வந்து.. உன்னை கூட்டிட்டு போறோம் என்றவன் ஷைலுவுடன் கிளம்ப.. கையாட்டி விடை கொடுத்தார்கள் ப்ரிதீவும் மினியும்..

“அண்ணாவுக்கு தான் அவ மேல எவ்ளோ பாசம்...!” என்றவள் ப்ரிதீவை பார்க்க அவன் வேறு ஏதோ யோசனையில் இருக்கவும்.

“ஹே என்ன, நான் பேசிட்டே இருக்கேன், உங்க கவனம் வேறு எங்கேயோ இருக்கு..”

“இல்லை, ஜனா ஒவ்வொண்ணையும் ஆசையா பார்த்து பார்த்து செய்யுறார்.. ஆனா இப்போ கூட ஷைலு, சந்தோஷமே இல்லாம, அமைதியா இருக்குறா... நாலு நல்ல வார்த்தை சொன்னா, அவர் மனசும் சந்தோஷப்படுமே..!”

“ப்ரிதீவ்.. ஆம்பளைன்ற கண்ணோட்டத்துல பேசாதீங்க.. ஷைலுவோட வருத்தம் உங்களுக்கு புரியலை.. இதே காரை, அவளையும் கூட்டிக்கிட்டு போய் வாங்கியிருந்தா.. அது அவளுக்கு இன்னும் சந்தோசத்தைக் கொடுக்காதா..?”

அலுப்பாக “ஹே... அவர் சர்ப்ரைஸா கொடுக்க நினைச்சு, அவளுக்கு பிடிச்ச கலருல கார் வாங்கி வந்தா, அதைக்கூட குறையா தான் பார்ப்பீங்களா..? பொண்ணுங்களை திருப்தி பண்ணுறது ரொம்பக் கஷ்டம்டா...”

“இதென்ன புடவையா.. பிடிச்ச கலர்னு வாங்கி கட்டிக்கிறதுக்கு..

கார்னாலே ப்யூர் ஒயிட் தான் லுக்கா இருக்கும்னு அவ சொல்லுவா.. இதை அவர், அவகிட்ட பேசி இருந்தா தெரியும்.. உங்களுக்கு இன்னும் ஜனாவை பத்தி புரியலை. இருங்க உங்களுக்கு இன்னைக்கு ஒரு எக்ஸாம்பிள் காட்டுறேன்..” என்றவள் பேச்சை முடித்தாள்.

எதிரே நீளும் தெருவில் கவனத்தை வைத்தவாறே ஷைலு மெல்லிய குரலில் “என்ன திடீர்னு.. இப்போ கார் வாங்க என்ன தேவை.. ஏற்கனவே வீட்டு லோன் இருக்கும்போது, இப்போ இந்த செலவு வேற தேவையா..?”

வாய்விட்டு சிரித்தபடி “ரெடி கேஷ் கொடுத்து வாங்கினேன்..”

“ரெடி கேஷா..! ஏது அவ்ளோ பணம்..? எப்படி..?”

“நான், நம்மோட பிளாஸ்டிக் எக்ஸ்ட்ரூடெரை வித்துட்டேன்...”

“வித்துட்டீங்களா... ஏன்..? அப்புறம் எப்படி..”

“உனக்கு எப்படியும் அந்த தொழில் பிடிக்கலை தானே... அதான்.. அதுவுமில்லாம இப்போ பேப்பர் ப்ளேட் யூனிட்.. ஜூட் யூனிட்... ஏஜென்சி... எல்லாம் நல்லா போகுது... சோ உனக்கு பிடிக்காததை வித்துட்டேன். கிளாஸ் யூனிட் தான் ஆரம்பிக்க நினைச்சேன், இந்த பணம் பத்தலை... தவிர இப்போ ரிஸ்க் எடுக்க முடியாது... அதான் தேவா அண்ணன், செங்கல் சூளையை குத்தகை எடுக்க சொன்னார்.. அது எடுத்தது போக மீதியிருந்த பணத்துல தான் கார் வாங்கினேன்..” என்று தன்னியல்பாய் பேசிக்கொண்டு இருந்தவனை வெறித்து பார்த்தபடி அமர்ந்து இருந்தாள் மினி.

“ஷைலஜா... என்ன ஒண்ணுமே சொல்ல மாட்டேங்குறே...?”

“இதெல்லாம் எப்போ ஆரம்பிச்சீங்க...? ஏன் என் கிட்ட சொல்லவே இல்லை.”

“எப்போ நீ என் தன்மானம் முக்கியம்னு சொன்னியோ, அப்போலேர்ந்து ஒவ்வொண்ணா ஆரம்பிச்சேன்... உனக்கு சர்ப்ரைஸா இருக்கணும்னு நினைச்சேன்... கல்யாணத்துக்கு அப்புறம் தினமும் லேட்டா தானே வந்தேன்.. ஒரு நாள் கூட உனக்கு ஏன்னு கேக்கணும்னு தோணலை.. எனக்கும், நானா வந்து உன்கிட்ட சொல்லத் தோணலை..” என்றவனின் உருவத்தை மறைத்து விழிகளில் தேங்கி நின்றது கண்ணீர்.

“கஃபே வந்துடுச்சு, இறங்கும்மா” என்றவன் இறங்கி கதவை மூட... அவர்களுக்காக காத்திருந்த மினி, அவனருகே ஓடி வந்து “அண்ணா, இது போங்கு ஆட்டம். என்னை கூட்டிட்டு போறேன்னு சொல்லிட்டு ஏமாத்துறீங்க..” என்றவள்... ஷைலு காரில் இருந்து இறங்காததைக் கண்டு..

ஓரப்பார்வையால் ப்ரிதீவை அளந்தபடி... “மேடம், இறங்கி வாங்க.. அண்ணா, அவளுக்கு கார் வாங்கி கொடுத்தீங்களே, அப்படியே கொஞ்சம் பூவும் வாங்கி கொடுத்து இருக்கலாமே..”

தயங்கிய ஜனா.. “நீ.. ப்ரிதீவ் கூட போயிட்டு வாயேன்..” என்றவனுக்கு பதிலாக..

“ம்ம்ஹூம் நான் எங்க அண்ணன் கூட தான் போவேன்..” என்றவள், காரின் கதவை சாத்தும் ஷைலுவிடம் “ஷைலு, அந்த பூ உனக்கு கூட ரொம்ப பிடிக்குமே.. ஆ கலர் கலரா இருக்குமே...பெயர் நியாபகம் வர மாட்டேங்குது, கல்லறை திருநாளுக்கு அதிகம் கிடைக்குமே...” என்று இழுக்க...

ஜனா “டேரா பூவா..?” என்றான்.

“டேரா பூவா...! இப்போ ஏன் அந்த பேச்சு வந்தது மினி...?”

குறும்பு நிறைந்த குரலில் ப்ரிதீவை பார்த்தவாறே “அது... பிடிச்ச பூவைப்பத்தி பேச்சு வந்துச்சு.. அதான் உனக்கு பிடிச்ச பூவை பத்தி சொன்னேன்.. அண்ணா, வாங்க நாம போகலாம்..” என்றவர்கள் கிளம்பிவிட... அவர்கள் திரும்பி வர அரைமணி நேரம் எடுத்தது.

முகம் முழுவதும் புன்னகையுடன் வந்த ஜனா, கையில் சூரியகாந்தி பூ சைஸுக்கு குங்கும நிற டேரா பூவுடனும்.. மினி முகத்தில் அடக்கப்பட்ட சிரிப்புமாக வர... ஜனா ஷைலுவிடம் பூவைக் கொடுத்து, தலையில் வைத்து கொள்ளும்படி சொல்ல... மிரண்டு போய் பார்த்தாள் ஷைலு.

ப்ரிதீவ் மினியை முறைத்தபடி “ஜனா..., இந்த பூ ரொம்ப பெருசா இருக்கு. தலையில வைக்க முடியாது. மத்தவங்க கிண்டல் பண்ணுவாங்க..” என தயக்கமாக சொல்ல.

“நாம மத்தவங்களுக்காக வாழலை ப்ரிதீவ்.. நமக்கு பிடிச்ச ஒண்ணை செய்ய எதுக்கு பயப்படணும்..?” என்றவனுக்கு பதில் சொல்லும் முன்பே.. பூவை தலையில் வைத்த ஷைலு, தன் கைப்பையை எடுத்துக்கொண்டு வெளியேற... அவளை பின் தொடர்ந்தான் ஜனா.

போய் கொண்டிருக்கும் அவர்களின் முதுகை பார்த்தபடி "இப்போ புரியதா.., ஜனாவை சமாளிப்பது கஷ்டம்னு.."

கோபத்தை அடக்கிய குரலில் "ஏன் மினி, உங்களுக்கு உங்க தப்பு புரியலையா...? ஜனா மத்த மனுஷங்களோட சகஜமாக பழகினவர் இல்லை, அப்படியிருக்கும் போது அவருக்கு என்ன தெரியும்...? இப்போ நடந்த விஷயத்தையே எடுத்துக்கோ.. ஷைலுவுக்கு பூ வாங்கணும்னு நீ தான் மறைமுகமா அவரை தூண்டின.. அப்புறம், டேரா பூ பிடிக்கும்னு நீ தான் அவர் மனசுல பதிய வச்ச..

பூ வாங்கும்போது நீயும் கூட இருந்த... கூடவே மல்லிப்பூ வாங்க சொல்லி இருக்கலாம்... ஒரு ஃப்ளவர் வாஸ் வாங்க சொல்லி, இந்த டேரா பூவை அதுல வைக்க சொல்லி இருக்கலாம்.. ஏன் இது எதையும் செய்யலை..? ஜனான்னா நீங்க கிண்டல் பண்ணி ரசிக்குற பொம்மையா..? உங்களோட உணர்வையும் அவருக்கு புரிய வைக்க தெரியலை.. அவரோட உணர்வையும் உங்களால புரிஞ்சிக்க முடியலை... எப்பவுமே நீங்க இதை தான் அவருக்கு செய்றீங்க.. அப்புறம் அவரையே குறை சொல்லுறீங்க.. சே.. இதை உன்கிட்ட எதிர்ப்பார்க்கலை மினி.."

"ஆரம்பத்திலிருந்தே நீ செய்றது எதுவும் எனக்கு பிடிக்கலை. ஆனா தடுக்கவும் தோணலை... கோபமும் வரலை. வருத்தம் மட்டும் தான்.. எதுவரைக்கும் போறியோ போன்னு தான் விட்டேன்... பேச்சுல கூட உன்னை நோகடிக்க தோணலை.. காரணம் யோசிச்சா.., உன்கிட்ட உள்ள நிறைகுறைகளோட தான் உன்னை விரும்புறேண்டி.. நானும் கொஞ்சம் கொஞ்சமா ஜனா வழி தான் சரின்னு அவரோட வழிக்கு போயிட்டு இருக்கேன். நீயும் ஷைலு போல மாறிடாதே..." என கோபமாக கத்திவிட்டு செல்பவனை, கன்னத்தில் அறை வாங்கிய உணர்வுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள் மினி.

பரிட்சை முடிந்து ஒன்றரை மாதங்களை கடந்தாலும்.. ப்ரிதீவை பார்க்காத இந்த நாட்கள் வறட்சியாக போகும் மாயம் புரியவில்லை.. ஓடிக்கொண்டு இருந்த டிவியில் கவனம் பதியாமல், ப்ரிதீவின் பக்கம் மனம் அலைபாய்ந்துக் கொண்டு இருந்தது.. அன்றைய அந்த நிகழ்வுக்கு பிறகு அவன் மினியிடம் சகஜமாக பழகினாலும் அதில் பழைய துள்ளல் இல்லை.

அவனை பார்க்காதது, பேசாதது எல்லாம் மனதில் பெரும் பள்ளத்தை தோற்றுவித்தது. காதலா...!! நட்பா..!! என்று குழம்பித் தவிக்கும்

மனதுக்கு என்ன தீர்வைச் சொல்வது என்ற குழப்பம், பேரலை சுழற்றியடிக்கும் கடற்கரையாக மாற்றியது.. எந்தளவுக்கு என்றால் தாய் தேவகி அருகில் வந்து நிற்பது கூட தெரியாமல், தன் நினைவுகளில் மூழ்கி முத்து குளித்தாள்..

சற்றுநேரம் அவள் அருகே நின்ற தேவகி, அவள் கவனம் கலைவதாய் இல்லை என்றதும் ஓடிக்கொண்டு இருந்த டிவியை கடுப்போடு நிறுத்தியும் மினியிடம் அசைவில்லை என்றதும் அவளை பார்வையால் அளந்தவர்...

குருவிக்கூடு போல உச்சியில் சுருட்டிக் கட்டிய கூந்தல்.. அழுக்கு நைட்டி.. அதை வேட்டி போல மடித்துக் கட்டிக்கொண்டு.. நகத்தை கடித்தபடி யோசனையாக அமர்ந்திருப்பவளை பார்வையால் கூறு போட்டவர்....

“சோம்பேறிக் கழுதை.. பத்து மணிக்கு எழுந்த.. இப்போ மணியைப் பாரு.. இன்னும் குளிக்காம, அப்படி எந்த கோட்டையைப் பிடிக்க யோசிச்சுக்கிட்டு இருக்க?” என்று கையில் இருந்த டிவி ரிமோட்டால் அவள் தலையில் தட்ட...

வலியில் தன் நினைவுக்கு வந்தவள் “ஸ்ஸ்.. அப்பா.. இப்போ எதுக்கும்மா அடிச்ச..? அதான் குளிக்கலைன்னா காபி கூட கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்ட இல்ல... அப்புறம் நான் எப்படி போனா என்ன..”

“குளிக்கலேன்னா மதியம் சோத்துக்கு வந்துடாதே... வயசுப்பொண்ணா லட்சணமா இருக்கியா.. விடியாமூஞ்சி வேலைக்குப் போனாலும் கூலி கிடைக்காதுன்னு உன்னைப் போல ஆளைப் பார்த்து தான் சொல்லி வச்சாங்க போல... போடி போ.. முகத்தையாவது அலம்பிட்டு துணியை மாத்திட்டு வந்து இந்த பருப்பு சாதத்தை யது குட்டிக்கு ஊட்டி விடு..”

“அம்மா.. ஆளை விடு, என்னால அவனுக்கு சோறு ஊட்ட முடியாது... அக்கா கிட்ட சொல்லு..”

“வாயிலேயே போடுவேன் சோம்பேறி.. அவ வேலையா இருக்கா.. போ போய் சொன்னதை செஞ்சுட்டு... பிள்ளையை எழுப்பி சாப்பாட்டைக் கொடு..” என்றவர் தன் வேலையைப் பார்க்க போக..

முகத்தை மட்டும் கழுவியவள், துணியை மாற்றலாம் என அலமாரியில் கை வைக்க... அதிலிருந்த கண்ணாடியில் அவள் உருவத்தை அப்படியும்

இப்படியும் பார்த்தவள்... 'ரொம்ப அழுக்காவா இருக்கேன்.. இல்லையே... டேய் உனக்கு இது போதும்... இது தான் மினி... நிறைகுறையோட பிடிக்குதுன்னு சொன்ன இல்ல.. சொல்லு, இப்போ இந்த மினியை பிடிக்குதா.' என்று அங்கு இல்லாத ப்ரிதீவிடம் கேட்டவள்... சிரித்துக்கொண்டே... தன் அக்கா மகன் மூணு வயது யாதவை எழுப்பினாள்.

தூக்கம் கலைய கொஞ்சம் அவனுடன் விளையாடியவள்.. சோறு ஊட்டுகையில் சோர்ந்து போனாள்.. ஒரு வாய் வாங்கிய அந்த மூன்று வயது வாண்டு, வாயில் இருந்ததை முழுங்காமல்.. மினியை தலையால் தண்ணீர் குடிக்க வைக்க.. ஒரு கட்டத்தில் யாதவுடன் ஒரு உடன்படிக்கைக்கு வந்தாள். இருவரும் ஒருவருக்கொருவர் மாறி மாறி ஊட்டுவது என்று.. அந்த இடம் முழுவதும் சாதம் இறைந்ததும்... மினியின் வயிறு நிரம்பியதும் தான் மிச்சம்...! கையிலிருந்த கிண்ணம் காலியாகவும்... நாக்கை கடித்தவள்.. சத்தமாக..

"அம்மா.. குட்டிக்கு இன்னும் கொஞ்சம் சாப்பாடு.." என்று உரக்க குரல் கொடுக்க..

சற்று நேரத்தில் "ஏதேது குட்டி கண்ணா.. இன்னைக்கு சமத்தா சாப்பிட்டாச்சா..?" என்றபடி வந்தவர், அந்த இடத்தைப் பார்த்து பீதி அடைந்தவராக அவள் தலையில் கொட்டியவர்....

"எருமை... இந்த இடத்தை என்ன அலங்கோலம் பண்ணியிருக்குற... இப்படித்தான் ஒண்ணுக்கு ரெண்டு வேலை இழுத்து வைப்பியா..?"

தலையை தடவியபடி "அம்மா..., சும்மா தலையில அடிக்காதே.. இந்த குட்டிப் பிசாசு எனக்கு ஊட்டி விடுறேன்னு சொல்லி எல்லாத்தையும் இறைச்சுட்டான்.." என்றவளின் சாதம் அப்பிய முகத்தைப் பார்த்தவர்..

"அடிப்பாவி பிள்ளைக்கு சோறு ஊட்டச் சொன்னா, பச்சைப்பிள்ளையோட சாப்பாட்டை நீ தின்னுவியா...?"

"யாரு பச்சைப்பிள்ளை..? இவனா.. இவனுக்கு சோறு ஊட்டியே நான் காஞ்ச பிள்ளையா போயிட்டு இருக்கேன்.."

"போதும்டி..., இதையாவது பிள்ளைக்கு ஊட்டு.., நீ முழுங்கிடாதே.. இன்னைக்கு மத்தியானம் உனக்கு சோறு கட்.." என்றவர் சாதம் இருந்த கிண்ணத்தை நீட்ட..

நக்கலாக "தேங்க்ஸ்.. 'ஏவ்'.." என்று சப்தமாக ஏப்பம் விட... அவளிடம்

பேசிய தன்னையே நொந்துக் கொண்டு போனார் தேவகி.

திரும்பவும் யாதவிடம் மல்லுக்கட்ட தொடங்கியவள் சோர்ந்தே போனாள். அந்நேரம் வாயில்மணி அடிக்க.. “அம்மா..., அப்பா வந்துட்டார் பார், கதவை திற..” என்பதற்குள் மீண்டும் அழைப்பு மணியோசை கேட்க...

கிச்சனில் இருந்து வெளியே வராமல் “எரும... அதான் அப்பா வந்திருக்கார்னு தெரியுதே.. போய் கதவை திறடி.. உனக்குத்தான் உடம்பு வளையாதே..” என்றவர் தன் பாட்டை படிக்க... சோகமாக யாதவை பார்த்தவளுக்கு பதிலாக மழலையின் புன்னகை கிடைக்க.. அதில் மனதைப் பறிகொடுத்தவளாக “வாடா கண்ணா..” என்று அவனைத் தூக்கி இடுப்பில் அமர்த்தியவள்....

“குட்டிக் குழந்தைக்கும் மினி வேணும்.. பெரிய கதவை திறக்கவும் மினி வேணும்.. மினி இல்லைன்னா இந்த வீடு என்ன ஆகுமோ..!!” என புலம்பியபடி .

“ஏம்ம்பா வெளியே போறப்போ சாவியை எடுத்துட்டு போக மாட்டியா?” என்றவாறே கதவை திறக்க.... முகம் நிறைந்த புன்னகையுடன் இவளை மேலிருந்து கீழ் வரை பார்த்தபடி ரவிதேவ், யாழினியின் கணவன் நின்றிருக்க ...

எதிர்பாராத ஆளைப் பார்த்த அதிர்வில் வார்த்தை தடுமாற “அத்.. அத்.. நீங்களா..?”

குறும்பாக “நான் தான்... ஏன் வீட்டுக்குள்ளே கூப்பிட மாட்டீங்களா..?”

படபடப்பில் “அது.. அம்மா இங்கே வாயேன்.. அத்தான் வந்..” என்றவளின் பேச்சை பாதியில் தடை செய்தது.. ரவியின் பின்னிருந்து வந்த ப்ரிதீவின் உருவம். பேச்சு மறந்தது போல விழி விரித்துப் பார்த்தவள் அப்படியே நிற்க..

“மினி, இது என்னோட ஃபிரெண்ட் ப்ரிதீவ்.. இன்ஃபேக்ட் எனக்கு முன்னாடியே உனக்கு ஃபிரெண்ட் ஆச்சே..”என்றவன் மினியின் கையில் இருந்த யாதவை வாங்க... அதை கூட உணராமல்..

“அது.. இவர்...” என திகைப்பில் இருந்து மீள முடியாமல் தவிக்க..

“ஏண்டி வாசலில் நின்னு கூப்பாடு போடுற, யார் வந்திருக்காங்க..?” என்றபடி வந்தவர், ரவியை பார்த்தும் முகத்தில் பதட்டம்

தொற்றிக்கொள்ள..

“வாங்க.. வாங்க தம்பி... உள்ளே வாங்க..” என்றவர் யோசனையாக ப்ரிதீவை பார்த்துவிட்டு “நீங்களும் வாங்க தம்பி..” என்றபடியே பதட்டமாக உள்ளே போனார்.. அவரை ரவி தொடர..

ப்ரிதீவ் மினியிடம் “பீரோ, வழியை விடு, நான் உள்ளே போகணும்...” என்றவன் அவளை உள் நோக்கி தள்ளிவிட...

“இங்கே என்ன நடக்குது..? இவர்... அத்தானை உங்களுக்கு... எப்படி.?.” என்றாள் அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படி கிசுகிசுப்பாக..

அவளை பார்வையால் அளந்தபடி “நடப்பது எல்லாம் சரியாய் தான் நடக்குது.. அது சரி , இதென்னடி கோலம்..?”

தான் சற்றுமுன் நினைத்தது நியாபகம் வர... முகத்தை கெத்தாக நிமிர்த்தியவள் “இது தான் ஒரிஜினல் மினி.. பார்க்கவே பிடிக்கலை இல்ல..?” என்றவள் அவனை தாண்டி போக.

“இல்லை... இந்த மினி தான் எந்த வெளிப்பூச்சும் இல்லாம என் மனசை முழுவதும் அள்ளுறா” என்றவனின் வார்த்தை, அவளை நின்ற இடத்திலே உறைப்பனியாக உறைய வைத்தது.

21

இதயத்தில் வேதனை இடியாய் தாக்குவதின் வெளிப்பாடே மழையாய் பொழியும் கண்ணீர்..

‘குழப்பம்’ இந்த ஒரு வார்த்தை அனைவரையும் ஆட்டி வைக்கும் வித்தை தான் என்ன..? இது என்ன தொற்று வியாதியா..? ஷைலுவை விட்டுவிட்டு என்னை பிடித்து ஆட்டுகிறது...! காலையில் இருந்து இவனைப்பற்றிய நினைவு பேயாக ஆட்டி வைக்கிறதே என்று பார்த்தால், இப்போது நேரிலேயே வந்து கொல்லுறானே’.

‘மனதுக்குள் நான் எதிர்பார்த்ததை அப்படியே சொல்லுறானே.. இதை நட்புன்னு சொன்னால் என்னை நானே ஏமாற்றிக் கொள்வது போல தானே ஆகும். அப்படியானால் இதை காதல்ன்னும் ஏற்றுக்கொள்ள முடியலையே...! இப்போ இவன் எப்படி அத்தானை பிடிச்சான்..?

கள்ளப்பையன்... மனசுக்குள்ளே என்ன திட்டம் வச்சு இருக்கானோ.. தெரியலையே..!' என்று சுற்றுப்புறத்தை மறந்து ப்ரிதீவ்வையே வெறித்தபடி தன் எண்ணங்களுக்குள் உழன்றவளை.. தேவகி 'நறுக்' கென்று கிள்ளினார்.

தன் நினைவுக்கு வந்தவள் 'ஸ்ஸ்' என்ற சத்தத்துடன் தன்னை சுற்றியிருந்த சங்கடமான அமைதியை பார்த்தவள்.. சிணுங்கலாக "அம்மா... இதென்ன சும்மா சும்மா கொட்டுற இல்லைன்னா கிள்ளி வைக்குற..?"

பற்களை கடித்தபடி முணுமுணுப்பாக "அறிவு கெட்டவளே.. போய் குளிச்சிட்டு துணியை மாத்து.. ஆளும் முகரையும்.. போடி" என்றவர், கணவர் இல்லாத போது ரவியிடம் எப்படி பேச்சை துவங்குவது என்று தவிக்கலானார்.

சாதம் அப்பியிருந்த தன் முகத்தை தடவியவள்.. 'அய்யோ இதை மறந்துட்டு, இவன் முன்னாடி இவ்ளோ கேவலமா நின்னுட்டேனே..!' என புலம்பியபடி அவன் முகத்தைப் பார்க்க, ப்ரிதீவ்வின் முகத்தில் ரசனையான பாவனையையும்... கண்களில் தெரிந்த மாறுதலும், ரத்த ஓட்டத்தை எகிற வைக்க... அவனை எச்சரிக்கை பார்வை பார்த்தவள்.. தந்தை வரும் ஓசை கேட்டதும்.. சிட்டாக தன் அறைக்குள் ஓடி மறைந்தாள்.

மாற்றுத் துணியுடன் குளியல் அறைக்குள் நுழைந்தவளின் மனம், வெளியே என்ன பேசுகிறார்களோ.. என்ற தவிப்பில், பத்தே நிமிடத்தில் குளியலை முடித்து, ஆடை மாற்றி.. நீர் வடியும் முகத்துடன்.. வேகமாக ஹாலுக்கு வர.. கிடைத்தது ஏமாற்றமே..! அங்கே இன்னமும் மௌனம் தான் தன் ஆட்சியை பலமாக நடத்திக் கொண்டு இருந்தது.

'அடப் பக்கிங்களா, இன்னுமாடா பஞ்சாயத்தை ஆரம்பிக்கலை... நான் வேற அவசர அவசரமா வந்தேனே, ஆளுக்கு ஒரு திசையைப் பார்த்துக்கிட்டு இருக்குங்க' என்றவள்... அக்காவை தேட.. யாழினியோ கண்களில் நீர் தாரை தாரையாக வழிய, வைத்த கண் வாங்காமல் கணவனை கண்களில் நிறைத்தபடி அவள் அறையின் வாயிலிலேயே நின்றாள்.

ரவியோ.., நானும் உனக்கு சளைத்தவன் இல்லை என்ற பாவனையில்.. மகனை அணைத்தவாறே மனைவிக்கு கண்களால் சமாதான தூதை அனுப்பிக் கொண்டு இருக்க, மினியின் அப்பாவோ.. 'எனக்கு கோபம் வந்துச்சுன்னா..' என்ற பாவனையில் விறைப்பாக விட்டத்தை பார்த்துக்

கொண்டு இருந்தார். என்னடா இது.. என்பது போல ப்ரிதீவ்வை பார்த்தாள்.

அவனோ அவளின் பார்வைக்காக காத்திருந்தது போல உதட்டை குவித்தவன்.. கண்களால் அவன் செல்லை ஜாடையாக பார்த்து.. நீயும் பார் என்று குறிப்பைக் காட்ட.. 'என்ன' என்ற கேள்வியுடன் மொபைலை எடுத்துப் பார்த்தவள்.. 'அடடே.. ஒரு காக்கையே காக்கை குளியல் போடுகிறதே மூணு புள்ளி மூணு ஆச்சரிய குறி' என்று அவன் அனுப்பியிருந்த மெசேஜ், அவள் கண்களில் கோப ரேகையை தகதகவென ஏற்றியது.

பதிலுக்கு 'அடடே தர்மமே தர்மஅடி வாங்க தவிக்குதே.. உன் முகரக்கட்டைக்கு ஒரு புள்ளி ஒரு ஆச்சரிய குறி போதும். மரியாதையா வந்த வேலையைப் பாரு..' என்ற செய்தியை பார்த்தவனின் முகத்தில் அசட்டுக்களை தோன்ற, ரவியின் காதில்..

"சகலை, இப்படியே லுக்கோட மட்டுமே திருப்தி பட்டுட்டு கிளம்ப போறோமா.. சீக்கிரம் ஆரம்பிங்க பாஸ்.."

"உனக்கென்னப்பா... ஈஸியா சொல்லிட்ட. அவரைப் பாரு மீசையை தடவிக்கிட்டு வெறைப்பா இருக்கார்.. இதுல நான் எப்படி பேச்சை ஆரம்பிக்குறது..?"

"இவ்ளோ தூரம் வந்துட்டோம், இன்னும் என்ன ரவி.. நான் சொல்றேன் இல்ல.. அவருக்கு குழந்தை மனசு... தைரியமா ஆரம்பிங்க... நான் இருக்கேன்.."

"நீ இருப்பே.. நான் இருப்பேனா." என்றவன் தயக்கமாக "மா...." என தொடங்கி முடிக்க முடியாமல் சிக்கித் தவிக்க.. பதிலுக்கு மினியின் தந்தை ராமநாதன் உறுமலாக "ம்ம்ம்" என்று உறும..

பயத்தில் முகம் வெளுத்த ரவி பதட்டமாக "சா....ர்"

கோபத்தில் மீசையை நீவியபடி "தேவகி... பொண்ணைக் கூட்டிட்டு போய் கல்யாணமும் பண்ணி.. பிள்ளையையும் கொடுத்துட்டு, இன்னும் நான் சாரா...?"

கடுப்பான ப்ரிதீவ் "யோவ் சகலை... ஏன்யா சொதப்புற.. மாமான்னு பட்டுன்னு காலுல விழுவியா.." என்றான் முணுமுணுப்பாக .

அதே தொணியில் "உனக்கென்ன.. உன்னோட காதலுக்கு ரோடு

போட, என்னை தார் டின்னுல தள்ளி விட்டுட்டியே.. உன்னை நம்பி வந்தேன் பாரு, உதை வாங்காம போக மாட்டேன் போலவே..”

“உதைக்கு பயந்து காலம் பூரா சன்னியாசியா இருக்கப் போறீங்களா..? இதுக்கு மேல லேட் பண்ணுனீங்க.., முதல் அடி.. உங்கப் பொண்டாட்டி கிட்டே இருந்து தான் வரும்.. அங்கிட்டு பாருங்க, கோபம் சும்மா ஜிவ்வுன்னு ஏறுது..”

முணுமுணுப்பாக “உன்னோட ஆள் மட்டும் சாந்தமாவா இருக்கு.. உனக்கும் இருக்குடி..” என்றவன் எச்சிலைக் கூட்டி விழுங்கி.. “என்னை... மன்னிச்சிடுங்க... மாமா..”

“தேவகி, யாருக்கு யார் மாமா..? நான் பெத்த பொண்ண மூணு வருஷம் கண்ணு கலங்க விட்டுட்டு.. இப்போ எதுக்கு வந்தாராம்..? இவ்ளோ நாள் எங்கே போயிருந்தாராம்..?”

‘அட என்னடா இழவு இது... மாமான்னு சொல்லைன்னாலும் திட்டுறார், சொன்னாலும் திட்டுறாரு.. இப்போ நான் என்னதான் சொல்லுறது...?’ என்று உள்ளுக்குள் புலம்பிக்கொண்டே பரிதாபமாக முழித்தவன்...

“மாமா, நான் செய்தது தப்பு தான்.. அது..”

“தேவகி.., எதுவும் பேச வேண்டாம்னு சொல்லு... என் பொண்ணுக்கு என்ன பதில்னு மட்டும் கேளு..”

ப்ரிதீவ் சிரிப்பை அடக்கியபடி “இப்போ உங்களை பேசுங்கன்னு சொல்லுறாரா.. பேச வேண்டாம்னு சொல்லுறாரா.. இவரை எப்படிப்பா போலீஸ்ல வச்சு இருக்காங்க.?.” என்றவனை முறைத்து விட்டு..

“மாமா... நான் ஒண்ணும் பண்ணலை. அவதான் தப்பா புரிஞ்சுக்கிட்டு... கடைசியில எல்லாமே தப்பா...”

“தேவகி... தப்புதான்னு சொல்லிட்டா சரியா போச்சா..? இனிமே அதுக்கு என்ன செய்ய போறாருன்னு கேளு.. கைப்புள்ளையோட
பொண்டாட்டியை துரத்தின மனுஷனை பார்க்கவே பிடிக்கலைன்னு சொல்லு..” என்றார் கடுப்பாக.

ரவி தலைகுனிய... இப்படியே விட்டால் சரி வராது என்று நினைத்தவன் “சார்.. நான் ப்ரிதீவ்.. ரவியோட ஃபிரெண்டு.. பிரச்சனை

என்னன்னா..”

“உங்களை நல்லா தெரியுமே... நீங்க இவருக்கு ஃபிரெண்டா தம்பி.. ஆனாலும் அந்த ஷைலு பொண்ணு இப்படி செஞ்சிருக்க கூடாது.. என்னத்தை சொல்ல...! என் வீட்டுலையும் ஒண்ணு அப்படித்தானே பண்ணிட்டு அவதி படுது.. பாவம் கோபி, இப்போ வீட்டைக் காலி பண்ணிட்டு குடும்பத்தோட எங்கேயோ போயிட்டாங்க.. இப்போ எங்கே இருக்காங்க..? நல்லா இருக்காங்களா..?”

“ம்ம் நல்லா இருக்காங்க அங்கிள்..”

“ம்ம்.. அவர்கிட்ட பேச முடியாம கூட போய்டுச்சு... கூட இருந்தது நம்ப பொண்ணாச்சே.. எந்த முகத்தை வைச்சுக்கிட்டு பேச..” என்றவர் மினியை முறைத்து விட்டு.. “இதுக்கு தான் முன் ஏர் போற மாதிரி தான் பின் ஏர் போகும்னு சும்மாவா சொன்னாங்க...” என்றவர் யாழினியை முறைக்க ஆரம்பித்தார்.. கடுப்பான ப்ரீதிவ் “சார்“ என்று அவர் கவனத்தை கலைக்க..

“அப்புறம் பாருங்க தம்பி.. வாழ்க்கை ஒரு வட்டம்ன்றது ரொம்ப சரி.. எப்படியோ அறிமுகம் ஆகி கடைசில இவருக்கே நண்பனா போயிட்டீங்க... சரி சொல்ல வந்தத சொல்லுங்க தம்பி..” தொடங்க

முணுமுணுப்பாக ரவியிடம்.. “அப்படியே நான் சொல்லுறதை கேட்டுட்டாலும்...! அடுத்தவங்களை பேச விடாம... கிடைக்கிற கேப்பில் எல்லாம் பேசுறாரே... சகலை நம்ம நிலைமை இப்படியா போகணும்..!”

அதே தொனியில் “வெறுப்பு ஏத்தாதே.. என்னிடம் பேச பிடிக்கலயாம். பெண்ணை கட்டம் கட்ட வந்த உன்னிடம் வட்டம் பட்டம்னு கதை விடுறாரு.. மூக்குக்கு கீழே வளர்த்த முடியை சொட்டையில் வளர்த்திருந்தா.. என்னிக்கோ என் பொண்டாட்டிய தேடி வந்து இருப்பேன்.. இப்போ நீ நல்லவன் ஆகிட்ட..” என்று கடிக்க

சமாளிப்பாக “சகல நீங்களாவது என்னை பேச விடுங்க ..” என்றவன்

ராமநாதனிடம் எப்படியும் பேசிவிடுவது என “அது அங்கிள்.. நீங்க நினைக்கிற மாதிரி, உங்க பொண்ணை ரவி வீட்டைவிட்டு துரத்தலை.. ஒரு சின்ன மிஸ் அண்டர்ஸ்டான்டிங் ஆகிடுச்சு.. நான் விளக்கமா சொல்லுறேனே..”

சமாதானப்படுத்தும் நோக்கில் “ஆமா மாமா, யாழினியை எனக்கு

ரொம்ப பிடிக்கும்... நீங்க வேணா அவகிட்டயே கேட்டுப் பாருங்களேன்.."

"தம்பி..., இவரை பேச வேண்டாம்னு சொல்லுங்க.. நீங்க பேசுங்க.. நான் கேட்டுக்குறேன்.. நீங்க பக்குவமான புள்ள.. ஒருவகையில நீங்களும் பாதிக்கப்பட்டு இருக்கீங்க. உங்க பேச்சுல ஒரு நியாயம் இருக்கும்.. நீங்க சொல்லுங்க.."

கடுப்பாகிய ரவி "மவனே என்ன அநியாயம்டா இது . நீயாடா நல்லவன்! பொண்ணை ஆட்டையை போட வந்த உன்கிட்டே நியாயம் கேக்குறார் பாரு, எல்லாம் என் நேரம்.." என்று முறைப்பாக ப்ரித்வியிடம் முணுமுணுக்க.. 'எப்படி' என்பது போல மினியிடம் புருவத்தை உயர்த்தியவன்..

"அங்கிள், ரவிக்கு யாழினின்னா ரொம்ப இஷ்டம். வீட்டை எதுத்துக்கிட்டு கல்யாணம் பண்ணினாலும்.., ரெண்டு பேருமே சந்தோஷமா இல்லை. பெத்தவங்களை பிரிஞ்சதும் பெரிய கவலையாவே இருந்திருக்கு. அதுலயும் உங்கப் பொண்ணு, உங்க குடும்பத்தை ரொம்ப மிஸ் பண்ணி இருக்காங்க" என்றதும்

கண்களில் நீர் திரள தன் மகளை பார்த்தவரின் விழிகளில் இருந்த உணர்வு... எவ்வளவு உயரத்தில் இருந்தாலும்.. தந்தை என்று வந்தால் அவரும் சராசரி மனிதனே என்பதை சொல்லுவது போல இருந்தது. என் மகளின் அன்புக்கு எதுவும் நிகர் இல்லை என்ற பெருமிதம் பொங்கி வழிந்தது.

"அங்கிள்.. அப்போ குழந்தை உண்டாகவும்.. குழந்தை பிறந்தா எல்லோரும் சேர்ந்துடுவாங்கன்னு ரெண்டு பேருக்கும் ரொம்ப சந்தோசம்... ஆனா சமாளிக்க தெரியலை.. ஒவ்வொரு கட்டத்திலையும்.. பெரியவங்க உதவி ரொம்ப தேவைப் பட்டு இருக்கு.."

"பின்ன குடும்பம்னா என்ன.., பிள்ளைங்க விளையாடுற சொப்பு விளையாட்டா..? அதுக்கு தான் பெரியவங்க படிச்சு படிச்சு சொல்லுறோம்.."

அசடு வழிய சிரித்தபடி.. "ஆமா அங்கிள்.. நீங்க சொல்லுறது சரிதான்... இவங்களுக்கே பாருங்க, டெலிவரிக்கு ஒரு வாரம் முன்னாடியிருந்தே ரொம்ப கஷ்டப்பட்டு இருக்காங்க.. உக்கார முடியாம, படுக்க முடியாமன்னு.. இவருக்கும் ஆபீசுல டைட் வொர்க்..., அதனால இவங்க பக்கத்துல இருக்க முடியலை... உங்களுக்கே ஐடி பத்தி

தெரியும்..இவருக்கும் வொர்க் லோட் அதிகம்..., குழந்தை பிறந்தவுடனே ரொம்ப கஷ்டப்பட்டு இருக்காங்க.. ராத்திரி சரியா தூக்கம் இல்லாம, பகல்லயும் தூங்க முடியாம... குழந்தை வேற எந்நேரமும் ஏன் அழுகுதுன்னே தெரியாம அழுதுட்டே இருந்திருக்கு.. அது வேற ரொம்ப ஸ்ட்ரெஸ் ஆகியிருக்கு.

யாழினிக்கு என்னன்னா, ரவி எந்த உதவியுமே செய்யலைன்னு கோபம்.. அவருக்கு.. விடிய விடிய பிள்ளை அழுததால தூக்கம் கெட்டு போய், ஆபீஸ்ல ஒழுங்கா வேலை செய்ய முடியலை, வேலையில பெயர் கெடுதுன்னு ரவிக்கு கோபம்.. சரியான சாப்பாடும் இல்ல... ரெண்டு பேருமே ஸ்ட்ரெஸ்ல இருந்ததுல... ரவியும் கொஞ்சம் கோபத்துல வார்த்தையை விட்டுட்டார்... இவங்களும் கோபிச்சுக்கிட்டு இங்க வந்துட்டாங்க.."

"சரிப்பா, குடும்பம்னா சண்டை சச்சரவு இருக்கும்தான், இல்லேன்னு சொல்லலை... ஆனா அந்த சின்ன விஷயத்துக்காகவா மூணு வருஷமா பொண்டாட்டியும், புள்ளையும், இருக்காங்களா இல்லையான்னு கூட கண்டுக்காம இருந்தார்..?"

"இல்லை மாமா.., அவ பிரிஞ்சு வந்த ஒரு வாரத்திலேயே, அவ செல்லுக்கு கூப்பிட்டேன். அவதான் சுவிட்ச்ஆஃப் பண்ணிட்டா.."

"அப்படியா... என்னம்மா இது...? இதை நீ சொல்லவே இல்லையே.. இந்தச் சின்ன பிரச்சனைக்கு வீட்டை விட்டு வந்துடுவியா..? மூணு வருஷமா எப்படியெல்லாம் கேட்டு பார்த்தேன், ஒரு வார்த்தை கூட சொல்லாம அழுத்தமா இருந்தே.. ஏம்பா நீயாவது நேர்ல வந்து பேசி இருக்கலாமே.."

"இல்லேப்பா.., அன்னைக்கு நைட் யாதவுக்கு பால் கொடுக்கணும்னு அலாரம் வச்சுருந்தேன்.. எப்படியோ கண் அசந்துட்டேன்... அலாரம் அடிச்சப்போ, அவரோட தூக்கம் கெட்டுடுச்சுன்னு கோபத்துல அவர் தான் போனை தூக்கி அடிச்சு உடைச்சுட்டார்.. அப்புறம் எப்படி பேச முடியும்..? அதுவும் இல்லாம.. வரதட்சணைக்கு பயந்து பொண்ணை ஓட்டி விட்டுட்டார்னு உங்களையும், நம்ம குடும்பத்தையும் ரொம்ப பேசிட்டார்.. அதான்.." என்றவள் ரவியை குற்றம் சாட்டும் பார்வை பார்க்க....

"'கிழிஞ்சிது.. சகலை, காசிக்கு ரெடி ஆகுங்க.." என்று புலம்பிய ப்ரிதீவ் சோர்ந்து போக... சட்டென எழுந்த ரவி ராமநாதன் காலடியில் அமர்ந்து, அவர் கையை பிடித்தபடி "மாமா, தப்புதான்.. சரியான சாப்பாடு, தூக்கம்

இல்லாம, வேலையிலும் ரொம்ப பிரஷர். எல்லாம் சேர்ந்து படுத்துனதுல, என்னையும் அறியாம வாயை விட்டுட்டேன். தப்புதான். நான் வேணும்னே தெரிஞ்சு பேசலை... இவ இங்க வந்ததுக்கு அப்புறம், லேண்ட்லைன் நம்பருக்கு பல தடவை கூப்பிட்டேன்.. எப்பவும் நீங்க தான் எடுத்தீங்க, அதனால பயத்துல பேசாம வச்சுடுவேன்..”

மனம் நெகிழ்ந்தவராக “பொண்ணை கூட்டிட்டு போகும் போது இல்லாத பயம்.. பேசும்போது என்னப்பா..? அதுக்குன்னு நீயும் என்னென்ன பேசியிருக்கே...?” என்றார் கடுமையாக..

“தப்புதான் மாமா, யாழ் என்னோட உயிர்... நான் வீட்டுப் பக்கம் கூட பலமுறை வந்தேன், இங்கே வர பயம்.. நீங்க போலீஸ் வேற.. என்ன ஆகுமோன்ற பயம் வேற... அந்த நேரத்துல வேலையும் பெங்களூருக்கு மாறிடுச்சு... எங்க வீட்டுலயும், பொண்ணை பெத்தவர் வரட்டுமே, நீயா போய் ஏன் மாட்டுறன்னு என்னை பயமுறுத்தி விட்டுட்டாங்க... அப்படியும் விடாம பல தடவை இங்க வந்து பேசுறதுக்கு ட்ரை பண்ணினேன். ஆனா தைரியம் வரலை... உங்களை பார்த்ததும் பயத்துல அப்படியே திரும்பி போய்டுவேன்.. இந்த தடவை ப்ரிதீவ் தான் தைரியம் கொடுத்தது.. ப்ளீஸ் மாமா யாழினியையும், யாதவையும் என்கிட்டேயே கொடுத்திடுங்க.. என் கூட அனுப்புங்க மாமா, ப்ளீஸ். நான் பத்திரமா பார்த்துக்குறேன்.. இன்னொரு வாட்டி இப்படி நடக்காம பார்த்துக்குறேன்.” என்று உருக்கமாக பேசியவனை பார்த்த ப்ரிதீவ்..

பொங்கிய சிரிப்பை மறைப்பது போல, மினியிடம் பார்வையால் ‘நான் சொல்லலை, உன் அப்பனை மீசையை டிரிம் பண்ண சொல்லு...’ என்ற செய்தியை அனுப்ப.. அவளுமே சிரிப்பை அடக்க பாடுப்பட்டவளாக அவனை முறைத்தாள்.

சற்றுநேரம் அமைதியாக இருந்த ராமநாதன் “சரி மாப்பிள்ளை எழுந்திரிங்க... பொண்ணு விஷயத்துல எந்த அப்பனும் போலீஸா இருக்க மாட்டான், தேவையில்லாத பயத்தினால வாழ்க்கையை தொலைக்கிறீங்க.. கல்யாணத்துல காட்டுற அவசரத்தை, அதை காப்பாத்துறதுல காட்டுறது இல்லை.. சரி முடிஞ்சதை பத்தி பேச என்ன இருக்கு.. போங்க போய் உங்க யாழினியை சமாதானம் செய்யுங்க..”

என்றவர் மனைவியிடம்... “விருந்து ரெடி பண்ணு. நான் கடைக்கு போயிட்டு வரேன் என்று திரும்ப.. ப்ரிதீவ் மட்டும் தனியே இருக்கக் கண்டு.. “தம்பி, கடைக்கு போயிட்டு வரேன்... வந்து பேசலாம்.. நீங்க

இருந்து சாப்பிட்டு தான் போகணும்...”

“இல்லை.. நான்..”

“அதெல்லாம் ஒண்ணும் இல்ல தம்பி.. நீங்க எதுவும் பேசக் கூடாது.. உங்ககிட்ட நான் நிறைய பேசணும். கோபி உங்களை பத்தி அவ்ளோ பெருமையா பேசுவார்..” என்றவர் “தேவகி, தம்பிக்கு குடிக்க ஏதாவது கொடு..” என சொல்லிவிட்டு கிளம்பினார்.

யாருமில்லாமல் அந்த ஹாலில் தனித்து இருந்தான் ப்ரிதீவ்.. ‘சே.. ரவி ‘எஸ்’ ஆனார் ஓகே.. இந்த பீரோ கூட என்னை அம்போன்னு விட்டுட்டாளே’ என்று புலம்பியவனாக.. வீட்டின் முன்புறம் இருந்த தோட்டத்துக்கு வந்து நின்றான்.

கொஞ்ச நேரத்தில் காபி வாசனையும், பஜ்ஜி வாசனையும் மூக்கை துளைக்க.. தட்டுகளுடன் வந்தாள் மினி. அவளை பார்வையால் அளந்தவன்.. “ம்ம்ம்ம் பஜ்ஜியா.. சூப்பர்... பொண்ணு பார்க்குற எஃபக்ட்டை கொடுக்குற பீரோ..”

“அடிங்.. வாயை மூடிட்டு சாப்பிடுங்க..”

“ஹே பீரோ.. உண்மையா சொல்லு, காஃபியில உப்பு, பஜ்ஜியில புளியங்கொட்டை இப்படி ஏதாவது ட்ரை பண்ணி இருக்கியா...?”

“இதெல்லாம் செய்ய... என்னைப் பார்த்தா குழந்தைப்புள்ள மாதிரியா இருக்கு... அது சரி, இதுக்கு தான் அன்னிக்கு ஒருநாள் அத்தானோட டீடைல்ஸ் கேட்டீங்களா... வெரி ஸ்மார்ட்..!”

“ம்ம்ம் கடைசியா நான் சொன்ன மாதிரி தான் நடந்திருக்கு.. ஒரு மாசம் அவரை பார்த்து பழகி.. நம்ம விஷயத்தை சொல்லி உதவிக் கேட்டு.. உங்க அக்கா, உங்கப்பாவை பத்தி கொடுத்திருந்த பில்டப்ல.. ரவிக்கு உங்கப்பான்னாலே அவ்ளோ பயம். அதுலயும் உங்கப்பாவோட மீசை மேல இருந்த பயத்தை குறைக்குறதுக்குள்ளே எனக்கு போதும் போதும்னு ஆகிடுச்சு... அது சரி ரவியை அத்தான்னு தான் கூப்பிடுவியா..? பேர் சொல்லி கூப்பிடலாமே.. ‘அத்தான்'ன்னு சொன்னா எரிச்சலா இருக்கு.”

சிரிப்போடு “ஓ... பொறாமையா..?”

“லைட்டா... இப்போ சொல்லேன்..”

“என்னன்னு..?”

“எனக்கு பிடிச்ச அந்த பதிலை..”

இடமிருந்து வலமாக தலையை ஆட்டியவள் “எங்கப்பா சொல்றவனை தான் கட்டுவேன்..” என்றாள் அழுத்தமாக

கடுப்பாக.. “ச்சை.. அப்போ ஃபிரெண்டுன்னு சொல்லி ஏமாத்த போறியா..” என்றவனுக்கு இல்லை என்பதை போல தலையாட்ட..

“லூசு.. லவ்வும் இல்லை, ஃபிரெண்டும் இல்லைன்னா.. என்ன அர்த்தம்..”

சிரித்தபடி “ரெண்டுக்கும் நடுவுல இருக்கோம்.. வாங்க உள்ளே போவோம்.. அம்மாவுக்கு சந்தேகம் வந்துச்சுன்னா அவ்ளோதான்..” என சொல்லிக்கொண்டு இருக்கும் போதே ரவி வர..

“சகலை, மச்சக்காரன்யா.. இப்பவே மாமனாரை கைக்குள்ள போட்டுக்கிட்ட.. தேங்க்ஸ்ப்பா” என்று அணைக்க

“என்ன புண்ணியம்.. முக்கியமானவங்க அல்வா கொடுக்குறாங்களே.. மினி, சாயங்காலம் ஷைலு வீட்டுக்கு வா.. கேடரிங் கோர்ஸ் அப்ளிகேஷன் வாங்கிட்டேன்.. ஃபில் பண்ணி கொடுத்துட்டா அப்ளை பண்ணிடலாம்”

“இன்னைக்கு சாயங்காலமா...? உங்களால வர முடியுமா.. எதுக்கும் யோசிச்சு சொல்லுங்க. என்னை வரச் சொல்லிட்டு நீங்க வரலைன்னா அப்புறம் கோவிச்சுக்குவேன்..”என்றாள் சிரிப்பை அடக்கியபடி

“ஏன்... சகலை நல்லாத்தானே இருக்கார்...? வேற வேலையெதுவும் இருக்கா என்ன..?” என்றவாறே ரவி ஒரு பஜ்ஜியை எடுக்க

“அய்யய்யோ அத்தான்... அது அவருக்கு கொடுத்தது.. உங்களுக்கு ஹாலுல இருக்கு.. அது வேண்டாம்” என்று மினி பதறியபடி சொல்ல

“பீரோ.. என்ன இது..? எடுத்தா என்ன..?”

“உங்க தட்டுல கடைசியா ஒண்ணு தானே இருக்கு..”

“அதனால் என்ன...?”

“அது உங்களுக்குன்னு ஸ்பெஷலா செஞ்சேன் பன்னு..”

திடுக்கிட்டவனாக “பீரோ, இதுல ஒண்ணும் கலக்கலைன்னு தானே சொன்னே..”

“நல்லா ரீவைண்ட் பண்ணிப் பாருங்க. நான் என்ன குழந்தையான்னு மட்டும் தான் கேட்டேன்..”

வேர்த்து வடிய “ஏய் பேதி மருந்து ஏதாவது கலந்து இருக்கியா..?”

நக்கலாக “சே சே அதுக்கும் மேல...”

“பீரோ... ஐ வைரஸ் மாதிரி ஏதாவது கலந்துட்டியா..?” என்று ப்ரிதீவ் அலற

“சே சே.. அதுக்கும் கீழே..” என்றாள் சிரிப்பை அடக்கியபடி..

ரவி “யப்பா இங்கே என்னப்பா நடக்குது... இந்த வீட்டுல பச்சைத்தண்ணி கூட குடிக்க முடியாது போல.. என்ன செஞ்சு தொலைச்ச யாமினி..?”

“அத்தான், ‘உம்னுன்னு இருக்குற பொண்ணுங்க உப்புமாவுக்கு கூட போற மாட்டாங்க...’ ‘ஓயாம பேசுற ஆம்பிளைங்க உதை வாங்காம போக மாட்டாங்க..’ வாயாடுறது பொம்பளைங்க வேலை.. ரொம்ப பேசுற இந்த வாய்.., ஒரு மூணு நாளைக்கு அமைதியா இருந்தா எப்படி இருக்கும்னு பார்க்க ரொம்ப ஆசை... அதான் ஒரு சின்ன வேலை செஞ்சேன்.

ஏன் ப்ரிதீவ்..., இந்த கதையில வர மாதிரி, இறுகிய முகம், சிரிக்க தெரியாத உதடுகள்.. விஷயத்தை பார்வையில உணர்த்துறது.. நீங்க இப்படி இருந்தா எப்படி இருக்கும்...? அப்படி நான் உங்களை பார்க்கணும்.. ஈவ்னிங் கண்டிப்பா ஷைலு வீட்டுக்கு வரணும் பன்னு.. ஐ யாம் வெயிட்டிங்..” என்றவள் சிட்டாக ஓடிப்போக.

“அம்மாடியோ பஞ்ச் பேசியே காதை பஞ்சர் பண்ணுவா போலிருக்கே.. சகலை, உங்க நிலைமை கொஞ்சம் பாவம் தான்” என்றவனை பீதியுடன் பார்த்தான் ப்ரிதீவ்.

யாமினிக்கு கொஞ்சம் படபடப்பாக தான் இருந்தது.. செய்யும் போது இருந்த விளையாட்டுத்தனம் இப்போது அதிகப்படியாக தெரிந்தது. ப்ரிதீவ்வை பார்க்கவேண்டும் என்ற தவிப்பு மேலோங்க.. ஷைலுவின் அப்பார்ட்மெண்ட்டுக்குள் வண்டியை திருப்ப.. அங்கே ப்ரிதீவ் ஏற்கனவே அவளுக்காக காத்திருந்தான்.

அவன் அருகே வண்டியை பார்க் பண்ணியவள், வாடியிருந்த முகமும் நன்கு சிவந்திருந்த உதடும் வருத்தத்தை கொடுக்க... “சாரி ப்ரிதீவ்..

விளையாட்டா செய்யப் போய்.. ஸாரி. ரொம்ப நேரமா வெயிட் பண்ணுறீங்களா..? வீட்டுக்கு போய் இருக்கலாமே..”

பரவாயில்லை என்பதை போல தலையசைத்தவன்.. “என்ன செய்தே..? வாயெல்லாம் வெந்து போக ஆரம்பிக்குது..” மெல்லிய குரலில் கேட்டான் .

குற்றப் பார்வையுடன் “சோடா மாவு கொஞ்சம் அதிகமா கலந்துட்டேன்.. இப்படி செய்தா, எப்படியும் சாப்பிடும் போது டேஸ்ட்ல மாறுதல் தெரியுமே.. அந்த டேஸ்ட் பிடிக்காம போய் அதை சாப்பிட மாட்டீங்கன்னு நினைச்சேன்..”

“ப்ச்.. உனக்கு சமைக்கவே தெரியலை.. அதான் பஜ்ஜி மோசமான டேஸ்ட்ல இருக்கு.. அதை சொல்லி உன் மனசை நோகடிக்க கூடாதுன்னு நினைச்சேன்... இப்பவே இப்படின்னா, நாளைக்கு இன்னும் என்னல்லாம் ஆகுமோ..”

“சாரி பன்னு.. மூணு நாளுல சரியாகிடும். நிறைய தேங்காய்பால் சாப்பிடுங்க..” என்றவளை முறைத்தவன் வேகமாக ஷைலு வீட்டை அடைந்தான்.

ஷைலு வீட்டின் பெல்லை அடிக்கவும்.. கதவை திறந்த ஜனா “ஹே என்ன ரெண்டு பேரும் ஒண்ணா வந்திருக்கீங்க, வாங்க..” என்று அவர்களை உள்ளே விட..

சோபாவில் படுத்திருந்த ஷைலு வேகமாக எழுந்திரிக்க... அவசரமாக அவள் அருகே போன ஜனா. “ஷைலஜா, பேசாம படு.. அதான் முடியலை இல்ல.. வேணும்னா ரூமுல போய் ரெஸ்ட் எடு...” என ஆதரவாக அவளை தடவிக்கொடுத்தவனின் தோளில் சாய்ந்து அமர்ந்தபடி..

சோர்வாக “இப்போ பரவாயில்லை மாமா...” என்றுவிட்டு “வாங்க” என்று இருவரையும் வரவேற்றாள்.

“என்னடி ஆச்சு...? ரொம்ப டல்லா இருக்க..” என்றவாறே ஷைலுவின் அருகில் அமர்ந்தாள் மினி.

“ஒரே வாந்தி மயக்கமா இருக்கு... சாப்பிடுற எதுவும் நிக்க மாட்டேங்குது..” என்றவாறே.. ஜனா ஜூசை அவள் வாயருகே வைக்க.. “ப்ளீஸ் வேண்டாம் மாமா.. வாந்தி வரும் ” என்று சோர்வுடன் மறுத்தாள்.

“என்கிட்ட கொடுங்க அண்ணா, நான் கொடுக்குறேன்.. டாக்டர்கிட்டே போனீங்களா..?”

“ம்ம் போனோம்.. ஒரு நாலு மாசம் அப்படிதான் இருக்குமாம்.. மருந்து கொடுத்து இருக்காங்க..”

ப்ரிதீவ் கையிலிருந்த அப்ளிகேஷன்களை ஜனாவிடம் கொடுக்க, ‘என்ன’ என்பது வாங்கி பார்த்தவன்.. “இப்படி இருக்காளே.. கண்டிப்பா படிக்கணுமா..?” எப்படி அவள் ஆசையை தடை சொல்வது என்ற யோசனையுடன் கேட்டான்.

கெஞ்சலாக “நான் படிக்கிறேனே மாமா.. நாலு மாசம் நெருங்க போகுது தானே.. இனிமே சரியா போய்டும்.. வீட்டிலேயே இருந்தா ரொம்ப போர் அடிக்கும், அதான் மினி கூட இருக்காளே..”

“அப்படியா... உன்னால முடியுமா..? முடியும்னா ஓகே...” என்றான் தயக்கமாக..

“ப்ரிதீவ், காபி ஜூஸ் ஏதாவது..” அவன் பதில் சொல்லும்முன்.. மினி பதட்டமாக

“இல்லை.. ஒண்ணும் வேண்டாம். அவருக்கு வாய் வெந்து இருக்கு...”

ஜனா யோசனையாக “ஏன் என்ன ஆச்சு..? அதான் வந்ததுல இருந்து பேசவே இல்லையா..?”

பல்லைக் கடித்தபடி.. மினியை பார்த்துக்கொண்டே “ஒரு ஆயாகிட்ட பஜ்ஜி வாங்கி சாப்பிட்டேன்.. நிறைய சோடாமாவு போட்டிருந்தாங்க போல.. வாய் வெந்துடுச்சு”

“என்ன ப்ரிதீவ் இது.. கண்ட இடத்துல ஏன் சாப்பிடுறீங்க.. இப்போ பாருங்க..”

“என்ன பண்ணுறது ஜனா.., அந்த ஆயா என்னோட மினி மாதிரி அழகா இருந்தாங்களே..” என்ற அவன் ஜொள்ளில் ஏதோ புரியவும்.

“மினி, கொஞ்சம் ஷைலஜாவை பார்த்துக்குறியா..? நான் மருந்து கடைக்கு போயிட்டு வரேன்..”

“என்ன அண்ணா, இதை போய் கேட்கணுமா..” என்றவள் அவனை அனுப்பி வைக்க..

ஷைலு சோர்வாக.. “மினி, நீ ஏதாவது குடிக்கிறியா..?”

“ம்ம்ம்.. தேங்காய் இருக்கா.. தேங்காய்பால் ப்ரிதீவ்வுக்கு நல்லது.. உனக்கும் கொஞ்சம் சூப் எடுத்துட்டு வரேன். நைட்டுக்கு நானே சமைச்சு வச்சுடுறேன். நீ ரெஸ்ட் எடு..” என்றவள், அவள் பதிலை எதிர்பாராமல் கிச்சனில் நுழைந்தாள்.

சற்றுநேரம் ஹாலில் அமைதி நிலவ “பஜ்ஜி கொடுத்தது மினியா..? என்ன விளையாட்டு இது..?”

முகம் மலர “அவ என்கிட்ட விளையாடாம, பின்ன வேற யார்கிட்ட விளையாடுவா..?” என்றான் பெருமையாக.

கொஞ்சம் தயங்கிய ஷைலு.. “ப்ரிதீவ், எனக்கு ஒரு ஹெல்ப் வேணும்... வேறு யார்கிட்ட நம்பிக்கையோட கேட்குறதுன்னு தெரியலை... எந்த கேள்வியும் கேட்காம செய்வீங்களா.?”

சந்தேகமாக பார்த்தவாறே தலையசைக்க... அதுவே போதும் என்பது போல.. “ப்ரிதீவ், எனக்கு குழந்தை பொறந்ததுக்கு அப்புறமா ஒரு வேலை வேணும்... கூடவே ஒரு வீடும்.. முன்னாடின்னா நானே வேலை தேடியிருந்து இருப்பேன் ஹாஸ்டல் போதும்.. இப்போ குழந்தையை வச்சுக்கிட்டு.. தனியா... எப்படி மேனேஜ் பண்ணுறதுன்னு தெரியலை. ப்ளீஸ் நீங்க எனக்கு ஹெல்ப் பண்ணுவீங்களா...?”

இதை நான் எதிர்பார்த்தேன் என்பது போல இமைக்காமல் அவளையே பார்த்தவன்... இறுகிய குரலில் “நாங்க வரும்போது கூட ஜனா கூட அன்யோன்யமா தானே இருந்த ஷைலு.. அத்தனையும் நடிப்பா..?”

கண்கலங்க “கடைசி வரைக்கும் இப்படி நடிச்சுக்கிட்டே இருக்க முடியாதுன்னு தான் உங்க உதவியை கேக்குறேன்..”

“இதை விட பெரிய துரோகத்தை ஜனாவுக்கு நீ செய்ய முடியாது ஷைலு..”

கண்ணீரை அழுந்த துடைத்தவள் “நான் ஒரு சரசாரி பொண்ணு... ப்ரிதீவ். துரோகத்துக்கு துரோகம் தான் பதில்னு நினைக்கிறவ.. ப்ளீஸ், எந்த கேள்வியும் கேட்காம உதவி செய்வீங்களான்னு தானே கேட்டேன்.”

சற்றுநேரம் யோசித்தபடி அமைதியாக நேரத்தை கடத்தியவன் முடிவெடுத்தவனாக.. “சரி ஷைலு, கண்டிப்பா நான் உதவி

செய்யுறேன், அதுக்கு நீ ரெண்டு வாக்கு கொடுக்கணும் ஓகேவா..” என்றவனை, என்ன என்பதுபோல கேள்வியாக பார்த்தாள் ஷைலு.

தொண்டையை செருமியவன் “நான் தான் இந்த உதவியை உனக்கு செய்யுறேன்ற விஷயம் மினிக்கு தெரியக் கூடாது.. அடுத்து, நீ ஜனாவை பிரிந்த பின்னாடி, எக்காரணம் கொண்டும் அவர் லைஃப்ல திரும்ப வரக் கூடாது.. இதுக்கு சம்மதமா..?” என்றான் அழுத்தமாக.

என் கண்ணீரை என்னால மறைக்க இயலும்... என் இதயத்தின் வேதனையை எப்படி மறைப்பேன்..

எதையோ ஒன்றை எதிர்பார்த்து அது நடக்காமல், அதற்கு நேரெதிராக, நினையாத ஒன்று நடந்தால் எப்படியிருக்கும்..? அப்படிதான் இருந்தது ஷைலுவிற்கு.. ப்ரிதீவ் தன்னை திட்டுவான்.. தன்னோடு வாதாடுவான்.. அவனை சம்மதிக்க வைப்பது கடினம் என்று நினைத்தவளுக்கு...

அவன் சுலபமாக இது நான் எதிர்பார்த்த விஷயமே என்பது போல ஏற்றுக் கொண்டதே பெருத்த அதிர்ச்சி. அதுமட்டுமில்லாமல் அவன் பேசிய விதம்... அவளை திகைக்கவும் வைத்து அதை “ப்ரிதீவ்..” என்ற ஓசையாக வெளியிட்டாள்.

அவள் அழைப்புக்கு எந்த பிரதிபலிப்பும் இல்லாமல்... பார்வையை விலக்காமல் கிச்சனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மெல்ல தயக்கத்தை ஒழித்து.. “ப்ரிதீவ் நீ... நீங்க சொல்லுறது எனக்கு புரியலை... என்ன.. சொல்லுறீங்க..?”

“இதுல புரியறதுக்கு என்ன இருக்கு...? நீ கேட்குற மாதிரி ஒரு வேலையும், வீடும், ரெடி பண்ணி தாரேன்... நீ கேட்குறது எல்லாம் கிடைச்சதுக்கு அப்புறம், நீ ஜனாவோட வாழ்க்கையை விட்டு போயிடணும்..திரும்பவும் அவர் வாழ்க்கையில வரக்கூடாது.”

கண்கலங்க “ஏன்..?”

“என்ன ஏன்..? பிரியணும்னு நீதானே முடிவெடுத்தே.. நீங்க ரெண்டு பேருமே எனக்கு ஃபிரெண்ட்ஸ். அப்படியிருக்கும் பொது, உனக்கு நல்லதுன்னு நீ கேட்டதை செய்யுற மாதிரி... ஜனா கேட்கலைன்னாலும்.. அவனுக்கும் செய்ய வேண்டிய கடமை எனக்கு

இருக்கு... சொல்ல கஷ்டமா இருந்தாலும் சொல்லுறேன்.. ஜனா வாழ்க்கையில அன்பையே பார்க்காதவன்.. இப்போ அவனுக்கு கிடைச்சுக்கிட்டு இருக்குறது வெறும் நடிப்புன்னா.. அது எவ்ளோ பெரிய கொடுமை.. உங்களுக்குள்ளே என்ன பிரச்சனைன்னு நான் கேட்க போறதில்லை.. விருப்பமே இல்லாம இப்படி நரகத்துல வாழுற மாதிரி நீங்க ரெண்டு பேரும் உழல்வதை விட.. பிரியறதே மேல்... ஆனா அதுக்கு அப்புறமாவது தெளிவா இரு..., வாழ்க்கையை குழப்பிக்கிட்டே இருக்காதே... ஜனாவை விட்டுடு." என்றான் கடுமையாக.

"ப்ரிதீவ்.. ஜனாவுக்காக அவ்ளோ யோசிச்சீங்களே.. என் பக்கமும் கொஞ்சமாவது நியாயம் இருக்கும்னு தோணலையா.."

தலையசைத்து அவளை பார்த்தவன் "அதனால் தான் உனக்கு உதவி செய்றேன்.." என்றவன் ரிமோட்டை எடுத்து டிவியில் சேனலை மாற்ற ஆரம்பித்தான்.

கொஞ்ச நேரம் கழித்து "ஷைலஜா, உன்னோட பயோடேட்டாவைக் கொடு.. உனக்கு எப்படியும், குழந்தை பிறந்து அதுக்கப்புறம் மத்ததை செயல்படுத்த இன்னும் ஒரு வருஷம் டைம் இருக்கு.. அதுக்குள்ளே நல்லா யோசிச்சுக்கோ..."

"யோசிக்க ஒண்ணும் இல்லை ப்ரிதீவ்.. போதும் இந்த பொய்யான வாழ்க்கை.. இன்னும் ஏழு மாசத்துல குழந்தை பிறந்திடும்...அதுக்கு அப்புறம் ஒரு ரெண்டு மாசத்துல வேலை கிடைச்சிட்டா நல்லா இருக்கும்.. ப்ளீஸ் ஏமாத்திட மாட்டீங்களே..."

"நான் வாக்கு மாற மாட்டேன்... நீயும் மாறாதே.." என்றவனின் பேச்சை ஜனாவின் வரவு தடை செய்தது.

காலங்கள் ஓடும் வேகம் மின்னலுடன் போட்டி போட்டதில் அடுத்த மூன்று மாதம் வேகமாக நழுவியது... ஷைலுவுக்கு ஆறாம் மாதம்... ஷைலுவும் மினியும் தற்போது படிக்கும் கல்லூரி வேறு திசையில் என்பதால்.. ப்ரிதீவ்வுடனான சந்திப்பு.. வாரம் ஒரு முறை கஃபேயில்.. இல்லையென்றால் ஷைலுவின் வீட்டில் கூடுவது என்று ஆனது.

ஷைலு என்னதான் தன்னை கலகலப்பாக காட்டிக் கொண்டாலும், அவளின் வாட்டம் மினிக்கு புரிந்தே இருந்தது... ஷைலுவின் மனது பார்கவியை பலவகையிலும் தேடி தவித்தது. ப்ரிதீவ்விடம் ஷைலுவின் நிலையை பற்றி சொல்லி அவர்களை பற்றி கேட்க, மினியின்

தொணதொணப்பு தாங்காமல் பார்கவியிடம் தூது போனவன், தோல்வியுடனே திரும்பி வந்தான். பார்கவியின் கோபம் சற்றும் குறையாமல் இருந்தது.

ஷைலுவிற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற தவிப்பு மினியை பேயாய் உலுக்கியது... பார்கவியை, கண்டிப்பாக ஜனாவால் சரி செய்ய முடியும் என்று நினைத்தாள்... எனவே அவனிடம் பேசிவிடுவது என்று முடிவு செய்தவள், அதை ஷைலுவிடம் தெரிவிக்கவில்லை.

அன்று சனிக்கிழமை, ஜனா எங்கே இருக்கிறான் என்று கேட்டுவிட்டு அவனை பார்க்க சென்றாள். அவன் யூனிட்டின் உள்ளே நுழைகையில் மினியின் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. ஜனாவின் இந்த வளர்ச்சி, அவனின் காதலால் வந்தது அல்லவா...!

யூனிட் வாயிலிலேயே நின்றபடி முகம் பூரிக்க பார்வையால் அளந்தாள்.

“அடடே என்ன யாமினிம்மா இங்கே நிக்குறீங்க...?” என்று பின்னே இருந்து வந்த குரலுக்கு திரும்பியவளின் முகம் தேவா அண்ணனை கண்டதும் மேலும் மலர்ந்தது.

“எப்படி இருக்கீங்க தேவா அங்கிள்...? இந்நேரத்துல எங்கே வெளியே..?”

“நம்மளோட மளிகை ஏஜென்சிக்கு போய் இன்னைய கணக்கை முடிச்சிட்டு வரேன்.. நீ ஏம்மா இங்கே நிக்குற..? ஜனா தம்பி உள்ளே தான் இருக்கு.. எங்கே ஷைலு பொண்ணு வரலையா..? இதுவரைக்கும் ஒரு தடவை கூட இங்கே வரலையேம்மா.. ஏன்..? ஆயுதபூஜைக்கு ரொம்ப எதிர்பார்த்தோம், அப்போ கூட வரலை.. பாவம் ஜனா தம்பியும் ஒண்டியா அலையுது, ஷைலஜாம்மா வந்தா உதவியா இருக்குமே..!” என்றார் ஆதங்கமாக.

“எங்கே அண்ணா.. இந்த நிலைமையிலும் படிக்கணும்னு ஓடுறா... எங்க போயிட போறா... குழந்தை பிறந்ததும், ஜனா அண்ணா கூடவே வந்து யூனிட்டை பார்த்துப்பா..”

“ம்ம்ம்.. வரணும்மா.. ஜூட் யூனிட்ல வேலைக்கு பொண்ணுங்க தேவைப் படுறாங்க.. வெறும் ஆம்பிளைங்க இருக்குற இடத்துல பொண்ணுங்களை வேலைக்கு எடுத்தா பிரச்சனை வரும்னு தம்பி பயப்படுறாப்பல.. டீ கூட நாங்களே போட்டுக்குறோம்... ஷைலு

பொண்ணு வந்தா நிறைய உதவியா இருக்கும்.. ஜூட் பேக் நல்லா போகுது.. அதை இன்னும் எக்ஸ்டெண்ட் பண்ணலாம். இப்போ அதுல நிறைய பொருட்கள் செய்ய முடியுது.. ஒவ்வொண்ணா ட்ரை பண்ணலாம்.. நீயும் சொல்லி வைம்மா..” என்றபடியே யூனிட்டுக்குள் நுழைந்தார்கள்.

இவளை கண்டதும்.. சிரிப்போடு வந்த ஜனா.. “வா மினி..” என்று அமர வைத்துவிட்டு ஜூஸை கொடுத்தவன்.. தேவாவுடன் கணக்குகளை கவனிக்க ஆரம்பித்தான்.

ஜனாவையே உற்றுக் கவனித்தவளுக்கு, அவனிடம் பல மாற்றங்கள் தெரிந்தன. இது அத்தனையையும் ஷைலு உணர்ந்திருப்பாளா என்ற யோசனையும் கூடவே வந்தது.. ஜனாவின் இந்த மாற்றம், தான் நினைத்ததை சுலபமாக்கும் என்று நினைத்தாள்.

தேவாவை அனுப்பிவிட்டு “ம்ம் அப்புறம் மினி.. ஆச்சரியமா இருக்கு...”

வியப்பாக “என்ன ஆச்சரியம்..?”

“லீவ் நாளும் அதுவுமா.. ப்ரிதீவ்வை பார்க்க போகாம என்னை பார்க்க வந்திருக்க, என்ன விஷயம்..?”

“நான் ஏன் அவரை பார்க்க போகணும்..?”

“அப்படியா... இதை ப்ரிதீவ் கேட்டிருக்கணுமே.. இந்நேரம் அவன் இதயம் வெடிச்சு இருக்கும்..” என்றான் கேலிச் சிரிப்போடு.

“அண்ணா.., கிண்டல் போதுமே”

“ஓகே அப்போ விஷயத்துக்கு வா.. என்னோட உதவி ஏதாவது தேவைப்படுதா..?”

“ம்ம்ம் எது கேட்டலும் செய்வீங்களா..?”

“நீ கேட்டு இல்லைன்னு சொல்லவா போறேன்..”

“அப்போ ஷைலுவுக்கு மட்டும் ஏன் இல்லை என்ற ஒரு வார்த்தையை மட்டும் சொல்லுறீங்க..?”

அதிர்வாக “யார் நானா...? ஷைலுவுக்கா...! உளறாதே மினி.. அவ ஆசைப்படுற அத்தனையும் அவளுக்கு கிடைக்கணும்னு நினைக்கிறேன்.. நீ என்ன இப்படி சொல்லுற..?”

“அப்போ ஏன் அண்ணா.. அவ ஆசைப்படுற அவ குடும்பத்தை மட்டும் கொடுக்க மாட்டேங்குறீங்க..? இந்த நேரத்துல பொண்ணுங்க மனசு அம்மாவை ரொம்பவே தேடும்னு சொல்வாங்க... ஷைலுவும் அப்படித்தானே நினைப்பா..., அதை அவளுக்கு கொடுத்தாலே போதும்.. என்ன சொல்லுறீங்க..?”

சற்றுநேரம் அமைதியாக இருந்தவன் “மினி.., அவளோட அம்மாவை விட அவ மேல நான் பலமடங்கு பாசம் வச்சு இருக்கேனே.., அப்புறம் ஏன் அவ அம்மாவை தேடப் போறா.. அவளே மறந்தாலும் நீ ஏன் கிளறுறே.?.”

சலிப்புடன் “கடவுளே வந்தாலும் அம்மாவோட அன்பை வேற யாராலையும் ஈடு செய்ய முடியாது அண்ணா... இப்போ அவ அம்மாவை மறந்துட்டான்னு உங்களுக்கு யார் சொன்னா... உங்களுக்கு பிடிக்கலைன்னு அவளும் மறந்த மாதிரி காட்டிக்கிறா.. சந்தோஷமா இருக்குற மாதிரி நடிக்கிறா.. ஏன் இதையெல்லாம் புரிஞ்சுக்க மாட்டேங்குறீங்க..?”

“வேண்டாம் மினி.. நீ திரும்பவும் குழப்பாதே.. இப்போ நாங்க நிம்மதியா இருக்கோம்.. இப்படியே எங்களை விட்டுடேன்..”

“அண்ணா.. பழசையே பேசாதீங்க. இப்போ உண்மையாவே அவ அம்மாவை நினைச்சு ஏங்குறா.. திரும்பவும் உங்களுக்குள்ள பிரச்சனை வந்துட கூடாதுன்னு தான் அமைதியா இருக்குறா... முன்னாடி உங்களுக்கு புரியலை சரி, இப்போ உங்களுக்கே ஒரு குழந்தை வந்தப்புறமும் பெத்தவங்க பாசம் புரியலையா...? நீங்க தப்பு பண்ணுறீங்கன்னு தோணலையா..” என்றாள் எரிச்சலாக.

தடுமாறும் குரலில் “மினி.. எனக்கு புரியாம இல்லை.. அதிலும் இப்போ குழந்தை பிறக்க நாலு மாசம் இருக்கு.. ஆனா என்னால காத்திருக்க முடியலை... உடனே பார்க்கணும்னு தவிப்பா இருக்கு. பிறக்காத பிள்ளை மேலயே இப்படியொரு பிடிப்பு இருந்தா.. இப்படி தானே ஷைலஜாவோட அப்பாவுக்கும் இருந்திருக்கும்னு எனக்கு புரியுது... ஆனா இப்போ பயமும் அதிகமா இருக்கு.. ஷைலஜா கூட பழகின இந்த மூணு வருஷத்துல, இந்த ஆறு மாசமா தான் மத்த யாரோட நினைப்பும் இல்லாம, என்னை மட்டும் சுத்தி சுத்தி வந்துக்கிட்டு இருக்கா.. அதை இழக்குறதுக்கு எனக்கு மனசு இல்லை... இப்போ அவ அம்மா வந்தாங்கன்னா என்னை கண்டுக்க மாட்டா.. அதை என்னால தாங்க முடியாது.. அவளோட கவனம் முழுக்க என்னை தாண்டி வேற

யார் மேலேயும் திரும்புறதை நான் விரும்பல...”

“அண்ணா, நாளைக்கு பிள்ளை பிறந்தா, அவ குழந்தையை தான் கவனிப்பா. அப்போ பிள்ளை கூட சண்டைக்கு போவீங்களா..?”

“அவ எதுக்கு பிள்ளையை பார்க்கணும்...? நான் வீட்டுல இருக்குற நேரத்துல என்னோட பிள்ளையை நான் பார்த்துப்பேன்.. மத்த நேரத்துல வேணும்னா அவ கவனிச்சுக்கட்டும்..”

“ம்ம்கும் நீங்க பிள்ளையை கவனிச்சுக்கிட்டா, அவளுக்கு என்னதான் வேலை..?”

“என்னை கவனிக்கிறது மட்டும் தான் அவ வேலை...”

“இப்படி சொல்லுறது சுயநலமா தெரியலையா..? அவளோட அம்மா மனசையும் கொஞ்சம் நினைச்சு பாருங்க..”

“மினி... இந்த ஒரு விஷயத்துல நான் சுயநலவாதி தான்... காரணம், பொண்ணுங்க நீங்க பெத்தவங்க விஷயத்துல சுயநலவாதிகளா இருக்கீங்களே... என்னால ஷைலுவுக்கு கொடுக்க முடியாத ஒண்ணு இது..”

“என்ன அண்ணா இது... பெத்தவங்க மேல பாசமா இருக்குறது சுயநலமா..?”

“ஆமா.. சுயநலம் தான்.. அவ்ளோ ஏன்.. நீ கூட சுயநலமா தானே இருக்க.”

“நானா.. நான் என்ன செய்தேன்..?”

“மனசு முழுக்க ப்ரிதீவ்வை வச்சுக்கிட்டு.. எங்க அப்பா பார்க்கிறவனை மட்டும் தான் கட்டுவேன்னு சொல்லி அவனை அலைக்கழிக்கிறியே.. அது சுயநலம் தானே.. காதல்னு வரும் போது ஆம்பளைங்க நாங்க காதல், காதலி.. இது ரெண்டை மட்டும் தான் பார்ப்போம்.. ஆனா பொண்ணுங்க நீங்க.. இது ரெண்டை தவிர மத்த எல்லாத்தையும் தானே பார்க்குறீங்க.. உங்க அப்பாவுக்கு நீ பயப்படுறது தப்பு இல்லை, என் பயம் மட்டும் தப்பா...” என்றவனின் கேள்விக்கு பதில் தெரியாமல் விழித்த மினி, கலங்கிய கண்களுடன் விடைபெறாமலே கிளம்பினாள்.

மனம் முழுவதும் போராட்டம், மினியை ஆட்டி வைத்தது... தன் மனதின் எங்கோ ஒரு மூலையில் இருந்த குற்ற உணர்வை ஜனா கிளறி விட்டதாகவே நினைத்தாள்... ப்ரிதீவ் தன் மனதினுள் மிக

ஆர்ப்பாட்டத்துடன் நுழைந்துவிட்டான் என்று மினி நன்கு உணர்ந்தே இருந்தாள்.. அதை வெளிப்படையாக ஒத்துகொள்ளாமல் இருந்த அவளின் பயம் என்ற பெரிய பலவீனத்தை, ஜனா சரியாக தாக்கி விட்டான்.

தொடந்து வந்த நாட்களில் அவள் மனமே அவளுக்கு எதிரியாக மாறி கேள்விக் கணைகளை கோபமாக தொடுத்தது. கோபம்.. கட்டுக்கடங்காத கோபம்.. ப்ரிதீவ்வை பார்க்க முடியாத கோபம்.

அவன் ஏன் என்னை பார்க்க வரவில்லை என்ற கோபம். கடந்து போன நாட்களை எரிச்சலாக மாற்றியிருந்தது.. தானே போய் பார்க்க முடியாத இயலாமை... எங்கே பலவீனமான மனம் காதலை ஒத்துக்கொண்டுவிடுமோ.. என்று தன் மீதே எழுந்த கோபம் என்று.. நெருப்பாய் கனன்று கொண்டிருந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. தன் மனக்குழப்பத்தை கடவுளிடம் விட்டு விடுவோம் என்று எண்ணி கோவிலுக்கு போனவள், வீடு திரும்புகையில் தன்னை உரசிக்கொண்டு வரும் காரை கண்டு கோபத்தோடு திட்ட வாய் திறந்தவள், டிரைவிங் சீட்டில் இருந்த ப்ரிதீவ்வை கண்டதும், குதித்த உள்ளத்தை அடக்கியபடி, மேலெழுந்தவாரியான கோபத்தோடு 'நீ எங்கே இங்கே' என்பது போல ஒரு பார்வையை மட்டும் வீசினாள்.

"பீரோ.. என்ன ஃப்ரீஸ் ஆகி நிக்குற.. வண்டியில ஏறு.."

"நான் வரலை.. எனக்கு ஆண்டவன் கொடுத்த கால் இருக்கு. அதுவுமில்லாம எனக்கு நல்லா நடக்கவும் தெரியும்.. அது சரி நீங்க எங்க இந்த பக்கம்..?"

"ம்ம்ம் என்னோட பீரோ என்னை ரொம்ப தேடுறாளாமே..!"

"தோடா... ரொம்பத்தான்.. அப்படின்னு யார் சொன்னா..?"

"ம்ம் உங்க அக்கா.. நீ இப்போ கோவிலுக்கு வந்ததை கூட அவங்க தான் சொன்னாங்க, போதுமா.. வா வந்து வண்டியில ஏறு.. உன்கிட்ட பேசணும்"

'ராஸ்கல்...எல்லாரையும் கைக்குள்ள வச்சு இருக்கான்..' என்று உள்ளூர கடித்தபடி.." நான் வரலைன்னு ஏற்கனவே சொல்லிட்டேன்.. இப்போ என்ன பேசணும்..?"

"என்ன பேசணுமா...? இன்னைக்காவது என் பீரோ எனக்கு பிடிச்ச

அந்த பதிலை சொல்ல மாட்டாளான்ற ஆசைதான்..” என்றவனின் வார்த்தைகளில் குறும்பு இருந்தாலும், அதையும் தாண்டி அவன் பார்வையில் இருந்த ஏக்கம் மனதை வாட்ட.. அதுவும் அவளை கோபம் கொள்ள வைத்தது. அந்த கோபம் தன்னையும் மறந்து பேச வைத்தது .

“யோவ்.. என்ன சும்மா சும்மா பிடிச்ச பதிலை சொல்லு.. பிடிச்ச பதிலை சொல்லுன்னு உயிரை வாங்குற.. ஏன் என் மனசு என்னன்னு உனக்கு தெரியாதா..? எல்லாத்தையும் படம் போட்டு சொன்னாத்தான் உனக்கு புரியுமா..? நீ ஆடுற ஆட்டம் அத்தனைக்கும் வாயை மூடிட்டு ரசிச்சுக்கிட்டு இருக்கேனே, அது சொல்லலையா என் மனசை..?

என் கண்ணு சொல்லாத காதலையா வாய் சொல்லப் போகுது..? அறிவு இல்ல உனக்கு..? உனக்கெல்லாம் நடுரோட்டுல நின்னு வாய்விட்டு கத்தி சொன்னாதான் புரியுமா..? வந்துட்டான் லவ்வை சொல்லு.. மண்ணை சொல்லுன்னு..” என்று கத்தினாள்.

திகைப்பிலிருந்து மீளாதவனாய் “ஏய்... ஏய்... நிறுத்துடி., உண்மையிலேயே நீ நடுரோட்டுல நின்னு தான் கத்துற..”

தன்னை சுற்றிப் பார்த்தவள்.. கடுப்பாக “ஏ இங்க பாரு, இன்னொரு தடவை பிடிச்ச பதிலை சொல்லு.. அத சொல்லு இத சொல்லுன்னு பின்னாடி வந்தே மரியாதை கெட்டுடும்.. இருபத்திநாலு மணி நேரமும் மனசுக்குள்ள பூந்து வண்டா குடைஞ்சுட்டு இருக்க ...” என்றவள்

“வந்துட்டான் காதல் சொல்லியே உயிரை வாங்குறதுக்கு..” என்று புலம்பியபடி அவனை தாண்டி வேகவேகமாக போனாள்.

போகும் அவளையே இமைக்க மறந்தவனாய் பார்த்தவன் “ஹுர்ரே பீரோ.. கேலக்ஸியிலேயே காதலை இப்படி வெளிப்படுத்திய முதல் ஆள் நீயாக தான் இருப்பே.. செல்லம்டி நீ..” என்றவன் மீண்டும் காரை கிளப்பி அவளருகில் கொண்டு நிறுத்தியவன்...

வாய்க்குள் சிரிப்பை புதைத்தவாறே “பீரோ.. இனிமே உன்கிட்ட எனக்கு பிடிச்ச அந்த பதிலை கேக்கவே மாட்டேன் வா.. வந்து வண்டியில ஏறு.. வா”

கடுப்பாக “நல்லா வந்துரும் வாயில.. உனக்கு ஒரு தடவை சொன்னா புரியாதா..? எரிச்சலை கிளப்பாம மரியாதையா போய்டு... சும்மா பின்னாடியே வராதே..”

“ஹேய்.. ஓகே ஓகே கூல்.. என்ன மேடம் இப்படி காய்ஞ்சு விழுறீங்க..?

இப்போ நான் கிளம்புறேன். அப்புறம் பார்க்கலாம்..” என்றவன் காரை கிளப்பிக்கொண்டு போக..

‘அடப்பாவி’ என்று வாய்விட்டு சொன்னவள், ப்ரிதீவ்வின் எண்ணை அழுத்தி விட்டு செல்லை காதுக்கு வைத்தவள், அவன் எடுக்க காத்திருக்க

ப்ரிதீவ்வின் செல் ‘மினிம்மா’ என்று ஒளிர... சந்தோஷத்தில் முகம் மேலும் மலர ‘அம்மாடியோ பீரோ ஒரு மார்க்கமான மூடுல தான் இருக்கா போல’ என்று போனை காதில் வைத்தவன் “ஹே.. பீரோ, மாமனை போ.. போன்னு தூரத்தினே, அதுக்குள்ளே திரும்ப கூப்பிடுற..”

“ஓ.. போன்னு சொன்னா அப்படியே அம்போன்னு விட்டுட்டு போயிடுவியா... உனக்கெல்லாம் எதுக்குடா லவ்வு.. உனக்கு தேவையான பதில் கிடைக்குற வரைக்கும் தொங்குவே, அப்புறம் அப்படியே தொங்கல்ல விட்டுட்டு போயிடுவியா..?”

பரிதாபமாக “என்ன பீரோ.. இப்படி மாத்தி மாத்தி பேசினா, நான் என்னதான் பண்ணுவேன்..?”

“நான் அப்படிதான் மாத்தி மாத்தி பேசுவேன்... பொண்ணுங்க எது சொன்னாலும் அதுக்கு ஆப்போசிட்டா தான் அர்த்தத்தை எடுக்கணும்.. இந்த பேசிக் ஃபார்முலா கூட தெரியாம.. என்ன மண்ணாங்கட்டி லவ்.. உன்னோட லவ்..”

பேசிக்கொண்டு இருக்கும்போதே அவளின் மறுபுறம் காரை கொண்டு வந்து நிறுத்திய ப்ரிதீவ், கார் கதவை திறந்து மினியை உள்ளே இழுத்து போட்டு, கதவை அறைந்து சாத்திவிட்டு காரை எடுக்க..

“டேய் என்னடா பண்ணுறே....? மரியாதையா காரை நிறுத்து, கதவை திற..” என்று கத்த

சிரித்தபடி “பீரோ, கார் ஸ்லோவா போகுது.. நான் சென்டர் லாக் கூட போடலை.. இறங்கணும்னு நினைக்கிறவ என்னை கேக்காமலே இறங்கலாமே..”

“யூ.. யூ.. போடா முட்டாள்..” என்றவள் இறங்க முற்பட... காரின் வேகத்தை கூட்டியவன், திரும்ப அவளை இழுத்து அமரவைத்து சென்டர் லாக்கை போட்டு விட்டு சத்தமாக சிரித்தான்.

கோபமாக அவனை முறைத்தபடி “வேணாம், மரியாதையா என்னை கீழே இறக்கி விடு..”

“என்னது கீழே... இறக்கி... விடணுமா..?” என்று வார்த்தைகளை இழுத்தபடியே பக்கத்தில் இருந்த ஒரு ஆளில்லாத சந்தில் காரை நிறுத்திவிட்டு, அவளை தன்புறம் இழுத்தவன்.. அவளை தன் மடியில் அமர்த்தி தன் அணைப்பினுள் கொண்டு வந்தான்.

திடுக்கிட்டவள் “எஎஎயேயே.. என்ன.. என்ன.. பண்ணுறீங்க.. விடுங்க”

அவள் கன்னத்தோடு கன்னத்தை பதித்தவன்.. “பலே பலே மரியாதை எல்லாம் கொடுக்குற.. நான் காதலிக்குற முட்டாள் பொண்ணு தான், அவ எது சொன்னாலும் ஆப்போசிட்டா செய்யணும்னு சொன்னா.. இப்போ கீழே இறக்கி விடுன்னு சொன்னா..., அதான் நான்..”

சட்டென வெட்கம் சூழ.. “சீ.. என்ன இது... விடுப்பா..”

கிண்டலாக “‘அடடே வெட்கம் தாங்காமல் சீ என்றாள்...’

“பன்னு , மனசுக்குள்ளே பெரிய மௌனராகம் கார்த்திக்குன்னு நினைப்பா.. ப்ளீஸ் விடுப்பா. எனக்கு சங்கடமா இருக்கு” என்றவளின் முகம் வெட்கத்தில் தத்தளித்தது.

“ஓ காட்... என் பீரோவுக்கு வெக்கமா... நம்பவே முடியலை.. என்னத்தை சொல்வேன்” என்றவன் கிறங்கிய கண்களோடு, அவனின் உதடுகள் தன் துணையை தேட முயற்சிக்க... அவன் முயற்சி புரிந்தது போல, இணைய இருந்த இருவர் இதழ்களுக்கும் நடுவில் கையை கொண்டு வந்தவள், தலையை சாய்த்தபடி .

“பன்னு, உதட்டை கடிக்கும் காதலை விட, உள்ளத்தை கடிக்கும் காதல் தான் ஸ்ட்ராங்கா இருக்குமாம், உனக்கு தெரியுமா..?

கண்களில் இருந்த மயக்கம் குரலுக்கு பரவ “அப்படின்னு யார்டி சொன்னா..?”

“மினியானந்தான்னு ஒரு தேவதை..”

ஹா ஹா என்று சிரித்தவன் “ஆனா எங்க ப்ரிதீவ்வானந்தா சாமியார் சொல்லுறார்.. காதல்னு வந்துட்டா எல்லாரும் மிருதனா மாறிடணும், கடிக்க சந்தர்ப்பம் கிடைச்சா மிஸ் பண்ணக் கூடாதுன்னு. அதுவுமில்லாம உள்ளத்தை கடிக்க உதடு தான் ஷார்ட் கட்டாமே, சோ கடிச்சி கடிச்சி விளையாடலாம் வா” என்றவனின் உதடுகளை ஒரு

கையால் மூடியவள், மறுகையால் அவனின் நெஞ்சில் குத்தியபடியே.. வெட்கம் தாங்காமல் அவன் மார்பிலேயே முகம் புதைத்தாள்.

ஒரு பொய்யான புன்னகை ஆயிரம் துளி கண்ணீரை மறைக்கும் வல்லமை கொண்டது...

விடியும் நாட்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அமையும் ... ஜனாவிற்கோ அந்த நாளின் விடியல் மிகமிக அழகாய் அமைந்து விட்டது.. ஜனாவின் அந்த சிறிய வீடு கூட்டத்தால் நிரம்பி இருந்தது.. காரணம்.., அன்று ஷைலுவுக்கு வளைகாப்பு.

மினியும் ஷைலுவும் தங்கள் கேட்டரிங் படிப்பை முடித்திருந்தனர்.. இடையில் ஷைலுவுக்கு.. ப்ரிதீவ் மூலமாக இரு வேலை வாய்ப்புகள் வந்து, இவளின் உடல்நிலையால் அது தட்டியும் போனது. எனவே வேலை தேடுதலை குழந்தைப் பிறப்புக்கு பின் பார்த்துக் கொள்ளலாம் என்று ப்ரிதீவ் சொல்லி விட்டான்.

ஷைலுவுக்கு இது ஒன்பதாவது மாதம். மருத்துவர் கொடுத்திருந்த பிரசவ தேதி..., அதாவது குழந்தை பிறக்கும் நாளுக்கு இன்னும் பத்து நாட்கள் கூட இல்லாத நிலையில், மினியின் பிடிவாதத்தினால் இந்த வளைகாப்பு ஏற்பாடு... நிலா, சஞ்சனா என்று தோழிகள் ஒருபுறம்.. ஜனாவிடம் வேலை செய்பவர்களின் குடும்பம் ஒருபுறம்.. அவர்கள் அப்பார்ட்மெண்ட் வாசிகள் ஒருபுறம் என்று அவர்கள் வீடு களைக்கட்டியது.

நிறைமாதம் என்பதால் மிகவும் சோர்வாக காணப்பட்ட ஷைலு.. அந்த சோர்வையும் தாண்டி.. பச்சை நிறப் பட்டுப்புடவையில் தாய்மையின் அழகில் கண்ணைப் பறித்தாள்.

“யே.. யாராவது பாடுங்கப்பா.. வளைகாப்புன்னா கண்டிப்பா பாட்டு இருக்கணும்.. மினி, நீயாவது ஒரு பாட்டு பாடேன்..” என்றாள் சஞ்சனா.

“அட.. நீங்க பேசுறதே பாடுறது மாதிரி ரொம்ப இனிமையா இருக்கே, நீங்களே பாடுங்களேன்..” என்று வழிசலாக சொன்ன ப்ரிதீவ்வின் தலையில் ‘நங்’ என்று கொட்டு விழுந்தது.

மினி பல்லைக் கடித்தபடி முணுமுணுப்பாக “பன்னு, இங்கேயும் உன் ஜொள்ளு டேமை திறந்துட்டியா...? மானம் போகுது. உன்னை போய் காதலிச்சேன் பாரு.. இம்சை..” என்றவள் சத்தமாக

“நிலா, நீ தானே அடுத்த கல்யாணப் பொண்ணு , நீ நல்லா பாடுவியே... நீயே பாடேன்..” என்று திருமணம் நிச்சயம் ஆகியிருந்த நிலாவை பாட சொன்னாள்.

அவளோ வெட்கத்தோடு “என்னடி நீ வேற.. ஏதோ சர்ச்சுல பிரேயர் சாங் பாடுவேன்... அவ்ளோ தான் எனக்கு தெரியும். இது சம்பந்தமா பாடுறதுக்கெல்லாம் எனக்கு தெரியாதே..”

“அட என்னங்க நீங்க... எல்லா படத்திலயும் வர மாதிரி ‘அலைபாயுதே கண்ணா’ன்னு எடுத்து வீஈஈஈ...” என்றவனின் வார்த்தை, மினியின் முறைப்புக்கு பயந்து பாதியிலேயே தந்தி அடித்தது.

மினி கோபமாக “உனக்கு எல்லாமே அலைபாயும்... வாயை மூடிக்கிட்டு கம்முனு இருக்க மாட்டியா..?”

அருகிலிருந்த ஜனா “ஏன் ப்ரிதீவ், மினியை கோபப்படுத்துற..? நான் கூட பார்த்துக்கிட்டு தான் இருந்தேன்.. எதிர்வீட்டு ஆன்ட்டியோட பொண்ணைக் கூட வச்ச கண்ணு வாங்காம பார்த்துக்கிட்டு இருந்த.. இதெல்லாம் தப்புல்ல.. இப்போ பார் மினி வருத்தப்படுது” என கனகச்சிதமாக போட்டுக் கொடுத்துவிட்டு ஷைலுவின் பக்கத்தில் போய் நிற்க..

முறைக்கும் மினியிடம் இருந்து தப்பித்து, ஜனாவின் அருகில் போய் நின்றவன் “பாஸ்..., மாறுங்கன்னு சொன்னா, அந்த மாற்றத்தை எனக்கு ஆப்பு வைக்குறதுல தான் ஆரம்பிப்பீங்களா..? இவளும் எங்க அம்மாவும் சண்டை போடுவாங்க.. அதுல நாம குளிர் காயலாம்னு நினைச்சா.. அவங்க ரெண்டு பேரும் ஃபிரெண்ட்ஸ் ஆகி ஒருபக்கம் ஆப்பு அடிக்கிறாங்க.. இந்த பக்கம் என்னடான்னா நீங்க.. என்னவோ போங்க பாஸ்.., பொதுவா ஆம்பளைங்களுக்கு பாதுகாப்பு இல்லை..” என்று புலம்பும் ப்ரிதீவ்வை கண்டு வாய் விட்டு சிரித்தான் ஜனா.

“யாரும் பாட வேணாம், நானே பாடுறேன்..” என்று தேவராஜ் அண்ணனின் மனைவி கல்யாணி பாட ஆரம்பிக்க.. அப்படியே ஒவ்வொருத்தராக அதில் சேர்ந்துக்கொள்ள.. பாட்டுக்கு பாட்டு வரை போனது.. வளைகாப்பு வைபவம், ஷைலுவின் பெற்றோர்களும், உறவினர்களும் இல்லை என்ற குறையை தவிர மிக சிறப்பாக நடந்தது.

எல்லோரும் சென்றதும் வெறுமையாய் இருந்த வீட்டை சுத்தம் செய்த ஜனா.., உணவோடு ஷைலுவின் அருகில் வர... அவளோ மிகவும் சோர்வாக, வியர்த்து வடிந்தவளாக இருந்தவள் உணவையும் மறுக்க..

கொஞ்சம் ஹார்லிக்ஸ் கலந்து வந்து கொடுத்தான்.. இரண்டு வாய் பருகியவள்.. நடக்க சிரமப்பட்டவளாக.. இரு முறை கழிப்பறைக்குச் சென்று வர..

“ஷைலு, என்ன செய்யுது..? ஏன் இப்படி வேர்த்துக் கொட்டுது..? முடியலையா...என்ன பண்ணுது...? முடியலைன்னா சொல்லும்மா, ஹாஸ்பிட்டலுக்கு போவோமா..?”பதட்டமாக ஜனா கேட்க,

அவன் தோளில் சாய்ந்தவள் “இடுப்பெல்லாம் கடுக்குது.. விட்டு விட்டு வலிக்குது மாமா.. டாக்டர் சொன்ன நாளுக்கு இன்னும் டைம் இருக்கே... இந்த நேரத்துல டெலிவரி பெயின் மாதிரியே பொய் வலி வரும்னு டாக்டர் சொன்னாங்க.. ஆனா எனக்கு வேற என்னவோ செய்யுது.. என்னன்னு சொல்ல தெரியலை மாமா..” என்றவள் வாய் விட்டு அழ..

“இரு.. நான் எதுக்கும் எதிர்வீட்டு ராணி ஆன்ட்டியை அழைச்சுக்கிட்டு வரேன்..” என்றவன் விரைவாக அவரை அழைத்து வர..

“நான் காலையிலேயே நினைச்சேன் வயிறு ரொம்ப இறங்கி இருக்கேன்னு... இரு கஷாயம் போட்டுத் தரேன்.. கொஞ்ச நேரம் பார்க்கலாம்.. பொய் வலியா இருந்தா நின்னுடும்..” என்றார் ஆறுதலாக.

ஜனா தயக்கமாக.. “டெலிவரி ஆகுறதுக்கு இன்னும் பத்து நாளைக்கு மேல இருக்குன்னு சொன்னாங்களே...”

“என்னப்பா.. நீ.. எப்பவுமே டெலிவரி ஆகுறது கொஞ்சம் முன்னே பின்னே தான் இருக்கும்.. டாக்டர் சொல்லுற தேதியில தான் ஆகணும்னு இல்ல... இங்க பாரு, ஷைலஜாவுக்கு பாத்ரூம் போகணும் போல.. கூட்டிக்கிட்டு போ. அதுக்குள்ளே நான் கஷாயம் போட்டு வைச்சுடுறேன்..” என்றவரின் பார்வை ஷைலஜாவின் மேல் படிய, அதிர்ந்து போனவராய்...

“தம்பி.. உடனே அவளை தூக்கு, சீக்கிரம் ஹாஸ்பிட்டலுக்கு கூட்டிக்கிட்டு போ.. எடுத்துட்டு போக வேண்டிய சாமான் பையெல்லாம் ரெடி பண்ணி வச்சுருக்கீங்களா..?” என்றார் பதட்டமாக..

குரல் நடுங்க ஜனா “ஆன்ட்டி ஏன்..? என்னாச்சு..? என்ன பை..?”

எரிச்சலாக “என்ன தம்பி..., இதுக்குத்தான் பெரியவங்க வேணும்னு சொல்லுறது.. பனிக்குடம் உடைஞ்சுடுச்சு, இது கூட தெரியாம.. என்ன பிள்ளைங்க நீங்க..? சீக்கிரம் கிளம்புங்க, ஆஸ்பத்திரிக்கு தேவையானது எல்லாம் எடுத்து வைக்கணுமே, பேக் இருக்கா..?”

பயத்தில் வெளுத்திருந்த ஷைலஜாவை கையில் ஏந்தியபடி “என்ன பேக்...? எதுக்கு.. நாங்க எந்த பையும் ரெடி பண்ணலையே..” என்றவனை கோபம் பொங்க பார்த்தவர்...

“சரிப்பா.. ஷைலஜா கூடவே இருக்குமே, அந்தப் பொண்ணோட போன் நம்பர் தந்துட்டு போ, நான் அவகிட்ட சொல்லுறேன்.. அர்ஜென்ட்டா வேணும்கிற டவல் டிரஸ்.. இதெல்லாம் நான் ரெடி பண்ணி எடுத்துட்டு வரேன், நீ காருக்கு போ” என்றவர்.. மினியின் எண்ணை வாங்கிக்கொண்டு., தானே ஒரு பையைத் தேடி தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு போய் ஜனாவிடம் கொடுத்தார்.

அறிமுகம் இல்லாத எண்ணைப் பார்த்ததும் புருவங்கள் இடுங்க நேரத்தை பார்த்த மினி ‘பன்னிரெண்டு ஆகப் போகுது இந்த நேரத்துல யாரு போன் பண்ணுறா...?’ என்று யோசனையாக “ஹலோ யாரு..” என்றாள்.

“இது ஷைலஜாவோட ஃபிரெண்டு மினியா..?”

“ஆமா.. நான் தான். நீங்க யாரு..?”

“ஷைலுவோட வீட்டுக்கு எதிர் வீட்டுல இருக்குற ராணி பேசுறேன்.. அந்தப் பொண்ணுக்கு வலி எடுத்துடுச்சு, ஜனா தம்பி டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டு போயிருக்கார்.. உங்கம்மா கிட்ட கொஞ்சம் போனை கொடு..”

எதற்கு கொடுக்க சொல்கிறார் என யோசித்தபடியே போனை தேவகியிடம் கொடுத்து விட்டு, ஆஸ்பத்திரிக்கு செல்வதற்காக கிளம்பினாள்.. பேசி முடித்த தேவகியும் பரபரப்பாக குழந்தைக்கு தேவையானவைகளை எடுத்துக்கொண்டு, அதுவரை ஷைலுவின் மேல் இருந்த கோபத்தை கைவிட்டு அவரும் மினி கூடவே கிளம்பினார். இவர்களை தனியே அனுப்ப மனமில்லாமல், ராமநாதனும் வருவதாக சொல்ல, பரபரப்புடன் ஆஸ்பத்திரி வந்து சேர்ந்தார்கள்.

ஓய்ந்துப் போய் அமர்ந்திருந்த ஜனாவை உலுக்கிய மினி.. “அண்ணா.. அண்ணா என்ன ஆச்சு..?”

பரிதாபமாக கண் கலங்க “தெரியலை. யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டேங்குறாங்க.. ஒரு மணி நேரத்துக்கும் மேலே ஆகுது...”

ராமநாதன் ஆதரவாக “டெலிவரின்னா அப்படிதான்.. எல்லாம் நல்லபடியாவே நடக்கும்... கவலையை விடுங்க தம்பி..” என்றவர்

மனைவியிடம்.. “நீயும் மினியும் இங்க இருங்க.. யாழினி தனியா இருக்கா.. மாப்பிள்ளை வேற ஊர்ல இல்லை... நான் கிளம்புறேன். குழந்தை பிறந்ததும் போன் பண்ணு.. காலையில வரேன்..” என்றவர் கிளம்பினார்.

ப்ரிதீவ்வுக்கு தகவல் அனுப்பிவிட்டு காத்திருக்க துவங்கினாள் மினி.. அரைமணி நேரத்தில் பதட்டமாக வந்தவன், ஜனாவை நெருங்கி “ஜனா..., குழந்தை பிறந்துடுச்சா.. என்ன குழந்தை..?” படபடப்புடன் கேட்டான்.

“இன்னும் இல்லை..”

வருத்தமாக “இன்னும் இல்லையா...? பதினோரு மணி போல இங்க கூட்டிக்கிட்டு வந்ததா மினி சொன்னா.. இப்போ மூணு மணி ஆகப் போகுது.. இன்னும் பிறக்கலையா..! என்ன சொல்லுறாங்க...?”

“தெரியலை ப்ரிதீவ். யாருமே எதுவுமே சொல்ல மாட்டேங்குறாங்க.. எனக்கு ரொம்ப பயமா இருக்கு...” என ஜனா குரல் உடைய சொல்ல.

“என்ன ஜனா இது.. பயப்படாதீங்க, ஒண்ணும் ஆகாது.. எல்லாம் நல்லதா தான் நடக்கும். சரி நீங்க ஷைலஜா கூட இல்லாம, இங்கே என்ன பண்ணுறீங்க..?”

முகத்தில் புதிய ஒளி வெள்ளம் தோன்ற “நிஜமாவா...! நான் அவ கூட இருக்கலாமா...? அந்த நர்ஸ், நான் கேட்குற கேள்விக்கு கூட சரியா பதில் சொல்ல மாட்டேங்குறாங்களே.. நீ அவங்ககிட்ட பேசேன், எனக்கு ஷைலஜாவை பார்க்கணும் போல இருக்கு...”

“ஜனா., டெலிவரியப்போ ஒய்ஃப் கூட ஹஸ்பண்ட் இருக்கலாம்கிறது இப்போ நடக்குது. நீங்க போய் ஷைலஜா கூட இருங்க. நான் போய் கேட்டா நல்லா இருக்காது, நீங்களே கேளுங்க ஜனா. எவ்ளோ நேரம் தான் இப்படியே தவிச்சுக்கிட்டு இருப்பீங்க..?”

தயக்கமாக “நானே போய் கேட்குறேன்” என்றவன் நர்சிடம் அனுமதி கேட்க... அவர் இண்டர்காம் மூலம் டாக்டரின் அனுமதியைப் பெற்று, அவனை உள்ளே அனுப்பினார்.

அதுவரையில் ஷைலுவை காண வேண்டும் என்ற தவிப்பில் மட்டுமே இருந்தவனுக்கு.. உள்ளே அவன் கண்ட காட்சி, அவன் கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. கண்ணை இருட்டிக்கொண்டு வருவது போல் இருக்க.. இங்கே வந்ததே தவறோ என்ற நடுக்கத்தோடு..

வெளியேற நினைத்து கதவில் கை வைத்தவனை “மாமா” என்ற அழைப்பு தடுக்க...

அவனுக்காக நடுங்கும் கரங்களை நீட்டியபடி ‘என் ஆதரவு நீ தான்’ என்பது போல கதறலாக அழைத்தாள் ஷைலு. மறுநொடியே ஓடிச்சென்று அவள் கரங்களை பற்றியவனின் கண்களிலிருந்து கண்ணீர் சரம்சரமாக இறங்கியது.

டாக்டரோ.. “சியர் அப் ஜனா.. பேபி கொஞ்சம் வெயிட் கூட இருக்கு, அதான் டைம் எடுக்குது.. நீங்களே சோர்ந்து போனா எப்படி? உங்க ஒய்ஃபுக்கு தைரியம் சொல்லுங்க.”

முகம் சிவந்து வலியில் துடித்தவளாக “மாமா, என்னால முடியல... ரொம்ப வலிக்குது, தாங்க முடியலை மாமா” என்றவள் வலியில் பற்களை கடிக்க.. அவள் தலையை தன் மீது சாய்த்துக் கொண்டவன், கண்ணீர் குரலில் “ஷைலஜா..” என்றதும் வீல் என்ற ஷைலஜாவின் அலறலோடு குழந்தையின் அலறலும் சேர்த்துக் கேட்டது.

சிறிது நேரமே என்றாலும், ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க ஷைலு அனுபவித்த வலியையும், வெளி வந்த குழந்தையையும் பார்த்தவனுக்கு... தான் பிறக்கும் போதும் தன்னுடைய அம்மாவும் இப்படித்தானே துடித்திருப்பார்கள் என்ற நினைவு மின்னலாய் வந்து போனது.

டாக்டர் “கங்க்ராட்ஸ் ஜனா.. பெண் குழந்தை” என்றதும் அவன் பார்வை ஷைலுவிடம் திரும்ப... அவளோ அதுவரை அனுபவித்த வலியின் சுவடே இல்லாமல் பூரிப்பாக “நம்ம ஜனனி மாமா..” என்றவள் மயக்கத்துக்கு போனாள்.

குழந்தையை ஜனாவின் கையில் டாக்டர் கொடுக்க.. அதை கைகளில் ஏந்தியவன் கதறி அழ ஆரம்பித்தான்.. தன் பிறப்பை பற்றி யோசித்தானோ என்னவோ.. குழந்தை பிறப்பு என்பது குழந்தைக்கு மட்டுமல்ல, அதை பெற்றெடுக்கும் தாயும் அன்று தான் மீண்டும் பிறக்கிறாள் என்பதை கண்கூடாக பார்த்துவிட்டான். வார்த்தை வராமல் கண்ணீரும் நிற்காமல்.. சந்தோஷத்தில் சிரிக்கவும் ஆரம்பித்தான். அவன் நிலை புரிந்தார் போல..

“ஜனா.., இனி நீங்க வெளியே போகலாம்.. அம்மாவையும், பிள்ளையையும் சுத்தம் செய்துட்டு, அவங்களை பெட்டுக்கு மாத்தினவுடனே எல்லாரும் பார்க்கலாம். இப்போ நீங்கே வெளியே

போங்க.” என்றார் டாக்டர் ரேவதி சிரிப்புடன்.

சந்தோஷம் முகத்தில் நிலைக்க வெளியே வந்தவன், ப்ரிதீவ்விடம் “பொண்ணு.. எனக்கு பொண்ணு பொறந்து இருக்கா.. ப்ரிதீவ்..” என்றவன்

சற்றுநேரம் தயங்கிவிட்டு ப்ரிதீவ்வின் கைகளை வேண்டுதலுடன் பிடித்தவன் “ஷைலஜாவோட அம்மாவை வரச் சொல்லுங்க ப்ரிதீவ், அவங்களை அவளோட சேர்த்து வச்சுடுங்க..” என்றவன் அருகிலிருந்த சேரில் ஆஸ்வாசத்துடன்அமர.. மினிக்கும் அவனின் மாற்றம் வியப்பைத்தர... ஆர்வமாக ப்ரிதீவ்வை பார்த்தாள்.

அவனோ தயக்கமாக “ஜனா.., இங்கே வரதுக்கு முன்னாடி கூட பேசி பார்த்துட்டு தான் வந்தேன்.. அவங்களோட கோபம் கொஞ்சம் கூட குறையலை... ஷைலு செய்த துரோகத்தை மன்னிக்குறதுக்கு அவங்க ரெடியா இல்ல..”

சட்டென எழுந்தவன் “ஷைலு எந்த தப்பும் பண்ணலை, நான் தான் எல்லா தப்பும் செய்தேன்.. நீ வா ப்ரிதீவ், அவங்ககிட்ட நானே பேசுறேன்...”

“இல்லை ஜனா.. குழந்தை பொறந்ததும் தான் அவங்க நினைப்பு வந்துச்சுன்னு தப்பா நினைக்க தோணும்.. ஒரு ரெண்டு மாசம் போகட்டும்.. குழந்தையோட போனா.. அவங்க கோபம் பறந்துடும்..”

“ஆமாப்பா தம்பி சொல்றதும் சரிதான்.. கொஞ்ச நாள் பொறுங்க...” என்று அதுவரை அமைதியாக இருந்த தேவகியும் சொன்னார்.

சற்றுநேரம் அமைதியாக இருந்தவன் “ஓகே நீங்க சொல்லுறதும் சரிதான். பாப்பாவோட பெயர் வைக்குற ஃபங்ஷனுக்கு எல்லாரையும் கூப்பிடலாம்.. என்றவன் தேவகியிடம் திரும்பி.. அம்மா டைம் ஆச்சு, நீங்க கிளம்புங்க.. ப்ரிதீவ், இவங்களை கொஞ்சம் கொண்டு விட்டுடுறீங்களா..?”

ப்ரிதீவ் சம்மதமாக தலையசைக்க “நான் இன்னும் பாப்பாவை பார்க்கலையே” என்று மினி சொல்லவும், நர்ஸ் குழந்தையுடன் வரவும் சரியாக இருக்க... கொஞ்ச நேரம் கொஞ்சியவர்கள் “சரிப்பா நாங்க கிளம்புறோம்.. காலையில மினிகிட்ட சாப்பாடு கொடுத்து அனுப்புறேன்.” என்று சொல்லிவிட்டு கிளம்பினார்கள்.

நீண்ட நேரம் காரில் நிலவிய அமைதியை கலைக்கும் வண்ணம்.. “ஹே..

குட்டி அப்படியே ஷைலு மாதிரி. கண்ணு மட்டும் அண்ணன் மாதிரியிருக்கு.. சோ ஸ்வீட்.. ஏம்மா நீ ஒண்ணும் சொல்ல மாட்டேங்குற..” என மினி கொஞ்சலாக கேட்க,

தீர்க்கமான பார்வையுடன் “ப்ரிதீவ் தம்பியும் ஜனாவும் ஃபிரெண்ட்ஸ்னு உனக்கு முன்னாடியே தெரியுமா யாமினி? தெரியும்னா ஏன் என்கிட்ட சொல்லலை.? இன்னைக்கு இந்த தம்பியை நீதான் வர சொன்னியா..? உங்களுக்குள்ளே அவ்வளவு பழக்கம் இருக்கா..?” என்று கேட்டவர் முகத்தில் மருந்துக்கும் சந்தோஷமில்லை.

சமாளிக்கும் விதமாக “அது ஆன்ட்டி..” என்ற ப்ரிதீவ்வை கையைக் காட்டி தடுத்தவர் “இவளுக்காக தான் யாழினி வாழ்க்கையை சரி பண்ணுனீங்களா..?”

தயங்கிய மினி “அம்மா நான்..” என்ற மகளை தடுத்தவர்...

“இப்போ எதுவும் சொல்ல வேண்டாம். என்ன சொல்லுறதுன்னு ரெண்டு பேரும் பேசி முடிவெடுத்துட்டு, அப்புறமா சொல்லுங்க.. ஆனா உண்மையை சொல்லுங்க..” என்றவர், வீட்டின் முன் கார் நிற்கவும், இறங்கியபடியே...

“எனக்குத் தெரிஞ்சு, பார்கவி அவ்ளோ அழுத்தமான ஆள் கிடையாது. பொண்ணு மேல பாசம் அதிகம். ஆனா இன்னைக்கு ஏன் ஷைலு விஷயத்துல அப்படி சொன்னா..? அப்புறமா அவ போன் நம்பர் தரீங்களா.. அவங்க தான் வீடு, போன் நம்பர் எல்லாத்தையும் மாத்திட்டங்களே.. இந்த நிலையில் அந்த புள்ளைய பார்க்க மனசு தாங்கலை...

எதுக்கும் நான் பேசி பார்க்குறேன். பாவம் அந்த பிள்ளைங்க..., ஒண்ணும் புரியாம கிடந்து தவிக்குதுங்க. இப்போ காட்டுற கோபத்தை அப்போவே அவ கிட்ட காட்டி வளர்த்திருந்தா, இன்னைக்கு இந்த நிலைமை வந்திருக்காது.. பிள்ளைங்களை சொல்லி என்ன இருக்கு...? எல்லாம் அப்பனுங்க கொடுக்கிற செல்லம்” என்று மினியை முறைத்தார்.

தடுமாற்றமாக..“நெக்ஸ்ட் டைம் வரும்போது, பார்கவி ஆன்ட்டியோட நம்பரை எடுத்து தரேன் ஆன்ட்டி..” என்றவன் ‘ஆத்தி அத்தை, நீ இம்ம்புட்டு அழுத்தமா.. பாவம் என்னோட மாமன், அவரை டெரர்னு சொல்லுறோம்.. ஆனா நீங்க இந்த போடு போடுறீங்களே..’ என்று நினைத்தவன் திகைப்பிலிருந்து மீளாதவனாக.. மின்னலாய் காரோடு

மறைந்தான்.

தேவகியை ரவியும், யாழினியும் சமாளித்து விட்டலும், யாமினி விஷயத்தில் கொஞ்சம் கெடுபிடியாகவே இருந்தார்.. ப்ரிதீவ்வின் தாய் தந்தை இருவரும் அவன் அக்காவை பார்க்க போய் இருப்பதால்.. இரண்டு மாதத்தில் அவர்கள் வந்ததும் மினியின் தந்தையிடம் பேசுவதாக சொல்லி மினியை சமாதானம் செய்திருந்தான்.

குழந்தை பிறந்த பதினைந்து நாட்களிலேயே ஷைலு திரும்பவும் தான் ப்ரிதீவிடம் வேண்டியவற்றை செய்யும்படி கேட்க.. யோசித்து செயல்படும்படி எவ்வளவோ எடுத்து சொல்லியும் அவள் பிடிவாதமாக இருந்தாள். அவன் சொன்ன படியே அடுத்து வந்த இரண்டு மாதத்தில். வேலை, வீடு இரண்டையும் ஏற்பாடு செய்தான். அதை ஷைலுவிடமும் தெரியப்படுத்தினான்.

ஜனாவிற்கு ஏற்கனவே ஷைலுவின் மீதிருந்த அன்பு.. குழந்தை பிறந்ததும் பல மடங்கு உயர்ந்து விட்டது. சிறிது நேரம் கூட அவளை விட்டுப் பிரிய மனம் இல்லாதவனாய், கூடுமான வரை ஷைலு மற்றும் குழந்தையின் அருகிலேயே இருந்தான். தன் கையில் இருக்கும் குழந்தையை பசியாற்ற கூட, அவளிடம் கொடுக்க மனம் இல்லாமல் தவித்தான்.

அவன் வாழ்வு வண்ணமயமாகியது.. குழந்தைக்கு பெயர் சூட்டும் நாளை முடிவு செய்ய வேண்டும் என்று நினைத்தவனின் மனதில் இருந்த ஒரே தயக்கம்.. அன்று உணர்ச்சி வேகத்தில் ஷைலுவின் அம்மாவை பார்க்க வேண்டும், ஷைலுவை அவர்களோடு சேர்த்து வைக்க வேண்டும் என்று நினைத்தாலும், இப்போது திரும்பவும் பயம் வந்து ஆட்டி வைத்தது.

அவன் மனதில் இருந்தது ஒரு குழப்பம் மட்டுமே.. 'வாழ்க்கை இப்போ நிம்மதியா போகுது.. இந்த நேரத்தில் ஷைலுவின் பெற்றோர்களை ஏன் வர வைக்கணும்...? ஷைலு திரும்ப பழையபடி மாறிட்டான்னா, என்ன செய்றது? இப்படியே விட்டுடலாமா..?' என்று தனக்குள் பட்டிமன்றம் நடத்திக்கொண்டு இருந்தான்.

ஷைலுவிற்கோ, தான் எடுத்த முடிவு சரியா என்ற எண்ணம் பிடித்து ஆட்டியது.. ஒரு மனது அவன் மீதிருந்த காதலில்.. எல்லாவற்றையும் மறந்து அவனோடு வாழச் சொன்னது.. மற்றொரு மனதோ பத்திரிகை

கொடுக்கப் போன அன்று நிகழ்ந்த நிகழ்வையே எண்ணி மறுகியது.. அந்த நாளை மறக்கவும் முடியாமல்.. அந்த நாளின் சுமையோடு வாழவும் முடியாமல் தவித்தாள்.

மனதின் குற்றவுணர்வோ.. இல்லை தான் செய்யப் போகும் விஷயத்தின் வீரியம் புரிந்தோ, அவன் முகத்தைப் பார்க்காமலேயே தவிர்த்து வந்தாள். ஜனாவிற்கு மனதிலிருந்த நிறைவு, இது எதையும் கவனத்தில் எடுக்க வைக்கவில்லை. அவன் தன் மகிழ்ச்சியான கனவிலேயே ஆழ்ந்திருந்தான்.

ஒரு வேளை ஜனா தன் தவறை உணர்ந்திருந்தாலோ.. இல்லை, அவன் உணர்வதாக இவள் கண்டுக்கொண்டு இருந்தாலோ... அவனிடமிருந்து பிரிவு என்ற ஒன்றை நிச்சயம் யோசித்து இருக்க மாட்டாள்.. தான் செய்தது எவ்வித துரோகம் என்பதைக் கூட அறியாதவனாய்.. அவன் சந்தோஷத்துடன் இருப்பதே அவளை அவனை விட்டு தூர துரத்தியது. இவர்களுக்குள்ளே இவர்கள் குழம்பிக் கொண்டு இருக்க.. காலம் அதன் போக்கில் போனது.

அன்று காலை ஷைலு வீட்டை விட்டுக் கிளம்ப வேண்டும்.. எப்படி தன்னுடைய பிரிவை அவனிடம் சொல்வது என்ற தயக்கத்துடன் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டவள், தயங்கியபடியே பிள்ளையுடன் ஜனா எதிரே வந்து நின்றாள்.

கேள்வியாக அவளையும் பெட்டி படுக்கைகளையும் மாறி மாறிப் பார்த்தவன்.. "எங்கேயாவது வெளியே போறோமா ஷைலஜா.. என்கிட்ட சொல்லவே இல்லையே.." என்றவனுக்கு பதில் சொல்ல இயலாமல் உதட்டைக் கடித்தபடி நின்றிருந்தாள்.

புருவம் சுருங்க "எங்கேயாவது கோயிலுக்கு வேண்டுதலா..? எங்கே...? எப்போ திரும்ப வருவோம்..? ஏன் என்கிட்டே சொல்லலை..?"

அவன் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போவதை கண்டு பெருமூச்சு விட்டவள் "நானும் பாப்பாவும் மட்டும் தான் போறோம்..."

"எங்கே போறீங்க...? எப்போ வருவீங்க..?"

இல்லை என்பதுபோல தலை அசைத்தவள் "திரும்ப வரமாட்டோம் மாமா.."

புரியாத பாவனையில் "என்ன சொல்லுற...? எனக்கு புரியலை, எங்க போற..? ஏன் வரமாட்ட..?"

“இந்த வீட்டை விட்டு போறேன்.. உங்களை விட்டு போறேன்... என்னை விட்டுடுங்க..” என்றாள் நறுக்குத் தெரித்தாற் போல

சந்தேகத்தோடு “ஷைலஜா.., என்ன உளறுற...? இப்போ என்ன ஆயிடுச்சுன்னு இப்படி சொல்லுற..? நமக்குள்ளே எந்த பிரச்னையும் இல்லையே.. நாம சந்தோஷமா தானே இருக்கோம்.. அப்புறம் ஏன்..?”

“நமக்குள்ள எப்போ பிரச்னை தீர்ந்துச்சு மாமா... நாம எங்க சந்தோஷமா இருந்தோம்..? சந்தோஷமா இருக்குற மாதிரி நான் நடிச்சுக்கிட்டு இருக்கேன்.. ஒருத்தரையொருத்தர் ஏமாத்திக்கிட்டு என்ன வாழ்க்கை இது..? போதும் மாமா, என்னை விட்டுடுங்க..”

திகைப்பும் பயமும் கண்களில் பரவ “எனக்கு புரியலை.. நீ என்னன்னவோ பேசுற.. உனக்கு என்ன ஆச்சு..?”

“அதான் எனக்கு தெரியுமே, உங்களுக்கு புரிஞ்சிக்க தெரியாது, எனக்கு புரிய வைக்க தெரியாது.. என்னைக்கு நான் கல்யாண பத்திரிக்கையோட வந்தேனோ, அன்னைக்கே இதை நான் பட்டு தெரிஞ்சுக்கிட்டேன்.. எனக்கு அந்த நாளை கடந்து வரவும் தெரியலை.. மறக்கவும் முடியலை.. மாமா.. இந்த மன உளைச்சலை என்னால தாங்க முடியலை.”

“ஷைலஜா.., அன்னைக்கு நடந்ததை நீ இன்னும் மறக்கலையா..? நா நம்மோட நல்லதை நினைச்சுத் தான் அப்படி..”

“போதும் மாமா.. என்னோட உணர்வுகளைக் கொன்னு.. குடும்பத்தைப் பிரிச்சு... ஆசைகளை குழி தோண்டிப் புதைச்சுட்டு... என்னோட நல்லதுக்குன்னு சொல்லாதீங்க.. விடுங்க.. நான் கிளம்புறேன் ”

வழிமறித்து “வேண்டாம் ஷைலஜா.. தேவையில்லாம பழசை கிளறாதே... நான் வேணும்னா, நானே போய் உங்க அப்பா அம்மாவை கூட்டிக்கிட்டு வரேன்... உனக்கு அதானே வேணும், அதுக்காக என்னை பயமுறுத்தாதே..”

வெறுமையான விழிகளால் அவனை வெறித்தவள் “அப்பா அம்மாவை பிரிச்சதா என் கோபம்..? இல்லையே..! எங்க அப்பா அம்மா கூட என்னை சேர்த்து வைக்க நீங்க யாரு மாமா..? அப்பா வேலை செய்யுற இடம் எனக்கு தெரியாதா..? இல்ல சிந்துவும் ஸ்ரீஜாவும் படிக்குற ஸ்கூல் தெரியாதா...? வாழ்க்கையில தோத்தவளாக அவங்களைப் பார்க்க பிடிக்கல. இது கூட வாழ்க்கை எனக்கு கொடுத்த அனுபவம்

தான்.

அவங்க கூட சேரணும்னு ஒரு காலத்துல பெருசா ஆசை இருந்துச்சு, இப்போ இல்லை.. ஏன்னா நமக்கு அப்போ தான் கல்யாணம் முடிஞ்சிருந்தது.. பெருசா அனுபவம் இல்லை.. உங்களை விட்டுப் போனா அவங்ககிட்ட தானே போகணும்னு நினைச்சேன்.. காரணம் அன்னைக்கு நான் செஞ்ச தப்பு பெருசா தெரிஞ்சுது.. தனியா போய் அவங்களை பார்க்க பயம்., அதனால ஒரு துணை தேவைப்பட்டுச்சு.. அதான் ப்ரிதீவ்கிட்ட உதவி கேட்டேன். ஆனா இப்போ அந்த தப்புக்கு நான் காரணம் இல்லைன்ற தெளிவு இருக்கு. அதனால யாரையும் கஷ்டப்படுத்தாம... யாரையும் அண்டி வாழாம தனியா வாழ்ந்து பார்க்கணும்னு நினைக்கிறேன்.. என்னை விட்டுடுங்க"

'அப்பா அம்மாவைப் பிரிஞ்சது வருத்தம் இல்லைன்னா, அப்புறம் அவளுக்கு என்ன கோபம்..?' என்று யோசித்து, பேச்சே இல்லாமல் இருந்தவன், கண்டுக் கொண்டது போல "ஷைலஜா.. அன்னிக்கு.. நான் உன்னை சும்மா மிரட்டினேன்.. இங்கப் பாரு, என் போன்ல ஒண்ணுமே இல்ல.." என்று தொடங்கியவனை பேச விடாமல் தடுத்தவள்.

"தெரியும் மாமா.. அப்போவே தெரியும்.. அதுவும் என் கோபம் இல்லை.. என் கோபம் என்னன்னு சொன்னாலும் உங்களுக்கு புரியாது.. அன்னைக்கு என்னோட பலவீனம் என்னன்னு உங்களுக்கு நல்லா தெரிஞ்சுது.. அதையே காரணமா வச்சு என்னை மிரட்டுனீங்க.. நானும் எங்க அப்பா அம்மாவை நினைச்சு கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்.. ஆனா அப்போ இருந்த ஷைலஜாவுக்கு உங்க பலமும் தெரியாது.. உங்க பலவீனமும் தெரியாது.. இப்போ இருக்குற ஷைலஜாவுக்கு அது ரெண்டுமே நான்தான்னு நல்லாவே தெரியும்... கூடவே ஜனனியும் சேர்ந்துட்டா.."

"ஷைலு, நீ என்ன சொல்லுறேன்னு எனக்கு புரியுது.. அது உன்னை இந்தளவுக்கு பாதிக்கும்னு நான் நினைக்கல.. நான் அதை நல்லதுக்கு.."

"போதும் மாமா.. விடுங்க.. எனக்கு ஒண்ணே ஒண்ணு தான் கேட்கணும்னு ஆசையா இருக்கு மாமா.. நீங்க அனாதையாக பொறந்தது உங்க விதி... அதுக்கு நா.... என்ன பண்ணுவேன்..? என்னை ஏன் அனாதையாக்குனீங்க..? யோசிக்காம உங்களை காதலிச்ச குற்றத்திற்காகவா..?"

கண்ணீர் பொங்க "ஷைலஜா, பழசு எல்லாத்தையும் மறந்து இப்போ

சந்தோஷமா தானே இருந்த, அப்புறம் என்னடி.?.”

“இல்லை மாமா, உங்களை விட்டு பிரியணும்கிற முடிவை நான் இப்போ எடுக்கலை.. நம்ம கல்யாணத்தப்பவே எடுத்துட்டேன்.. பிரியறதுக்குள்ளே எப்படியாவது என் வலியை உங்களுக்குப் புரிய வைக்கணும்னு நினைச்சேன்.. உங்களுக்கு புரியாது.. புரிய வைக்கவும் முடியாதுன்னு நல்லாவே தெரிஞ்சுடுச்சு.. பாப்பா வந்த அப்புறம் தான்.. என்னோட வலியை தான் உங்களுக்குப் புரிய வைக்க முடியாது, என்னை பெத்தவங்க வலியையாவது புரிய வைக்கணும்னு நினைச்சேன்.

தெரியாம தான் கேட்குறேன் மாமா.., பிறக்காத பிள்ளைய பத்தி அவ்ளோ ஆசை வச்சுருந்தீங்களே..! இதே இத்தனை ஆசையும் கனவும் என்னைப் பெத்தவங்களுக்கும் இருந்திருக்கும் தானே.. இந்த பொய்யான ஒரு வருஷ நடிப்பு.. உங்களுக்கு குடும்பம், பிள்ளைன்னு எத்தனை கனவுகளை கொடுத்துச்சு.. அப்படி இருக்குறப்போ என்னோட கனவுகளையும் கலைச்சு, என்னைவிட்டு என் குடும்பத்தை பிரிக்குற உரிமையை உங்களுக்கு யார் கொடுத்தா..?”

தவிப்பாக, தன் நிலையை புரிய வைத்துவிடும் நோக்கில் “ஷைலு... வேண்டாம் தப்பு தான், அத்தனையும் தப்பு தான். என்னை மன்னிச்சுடு.. ஆனா என்னை விட்டுட்டு மட்டும் போயிடாதே, நான் தாங்கவே மாட்டேன்..”

“அன்னைக்கு நான் கூட இதே இடத்துல உங்க காலைப் பிடிச்சு கெஞ்சினேனே மாமா, உங்க மனசு இறங்கலையே... முதல் தடவை இங்கே வந்தப்போ, திலகா அம்மா சொன்னாங்க.. ‘உன் கையில இருக்குற களிமண்ணு மாதிரி ஜனா.. அதைவச்சு சிலை செய்யப்போறியா இல்ல கரைச்சு சேறாக்க போறியான்றது உன்னோட கையில தான் இருக்குன்னு’ சொன்னாங்க..

ஆனா இப்போ கூட உங்களை அதே களிமண்ணா தான் வச்சுருக்கேன், அவங்க சொன்ன மாதிரி, சிலையும் செய்யலை... சேறாக்கவும் இல்லை. என்ன செய்றதுன்னே எனக்கு தெரியலை மாமா.. ஒண்ணு மட்டும் தான் தெரியுது, என்னால இந்த வாழ்க்கையை, தொடர்ந்து உங்களோட வாழ முடியாதுன்னு மட்டும் தெரியுது. அதனால நான் விலகிப் போறேன்..” என்று விலகினாள்.

போக விடாமல் அவளை குழந்தையோடு சேர்த்து இறுக்கி அணைத்தவன் “நான் உன்னை விட மாட்டேன்.. விட மாட்டேன்..

முட்டாள்.. நான் இல்லாம உன்னால வாழ முடியாதுடி..” என்றான் கண்ணீருடன்.

“விடுங்க மாமா... பாப்பாவை நசுக்குறீங்க“ என்று அவனை விலக்கியவள் “உண்மைதான் மாமா, நீங்க இல்லாம என்னால வாழ முடியாதுன்னு தெரியும் .. அதேநேரத்துல உங்க கூடவும் என்னால வாழ முடியாதுன்னும் தோணுது.. நீங்க இல்லாம வாழ பழகிக்க முடியும்னு நம்புறேன். வழியை விடுங்க..”

தன்னை ஒரு நிலைக்கு கொண்டு வந்து சுதாரித்தவனாக “முடியாது.. உன்னை விட மாட்டேன்.. நீ என்ன சொன்னாலும் சரி.. உங்க அப்பா அம்மாகிட்டேர்ந்து உன்னைப் பிரிச்சது தப்பு தான், அதை மட்டும் ஒத்துக்குறேன்.. நானே அவங்களை இங்கே கூட்டிக்கிட்டு வரேன்.. மத்தபடி அன்னைக்கு நடந்தது எதுவும் எனக்கு தப்பா தெரியலை.. சும்மா உணர்வைக் கொன்னுட்டேன்.. அது இதுன்னு உளறாதே, மரியாதையா உள்ளே போ.. இவ என் குழந்தை, என்னோட ஜனனியை கொடுக்க மாட்டேன்..” என்று பிள்ளையை பிடுங்க போனவனை தடுத்தவள்...

“மாமா.., இங்கே தானே இருக்கணும், சரி இருக்கேன்.. இப்போ நான் வெளியில போனா, உங்க மனைவியும் பிள்ளையும் இந்த உலகத்துல ஏதோ ஒரு மூலையில உயிரோடவாவது இருப்பாங்க.. ஆனா தடுத்தீங்கன்னா, நாங்க பிணமா தான் போவோம்.. உங்க வசதி எப்படி..?

இதுவும் நான் வழக்கமா எடுக்குற மாதிரி, குழப்பத்துல எடுத்த முடிவு இல்லை, தீர்க்கமா யோசிச்சு எடுத்த முடிவு..” என்றவளின் முகத்தில் தெரிந்த கோபமும் உறுதியும் அவனை நிலைகுலைய வைக்க, இடிந்துப்போய் சோபாவில் அமர்ந்தவனை சட்டை செய்யாதவளாக.. ஒரு கையில் பிள்ளையையும், மறுகையில் பெட்டியுடனும், அழைத்திருந்த கால்டாக்ஸியில் ஏறியவளின் கண்கள் கரையை உடைத்தது.

அதுவரை இருந்த தைரியம் போய் தனிமை சூழ.. போனை எடுத்து மினியை அழைத்தாள்.. எடுத்த எதிர்முனை “யே என்னடி.. திடீர் போன், என்ன பண்ணிட்டு இருக்கா என் செல்ல குட்டி..?.” என்று படபடவென பொரிய.

“மினி.. நான் சொல்லுறதைக் கேளு.. நான் ஜனாவை பிரிஞ்சு வீட்டை விட்டு வெளியே வந்துட்டேன்..” என்றாள் களைத்த குரலில்.

அவள் சொல்வதை மனதிற்குள்ளாக ஓட்டிப் பார்த்தவள் “ஏய்...முட்டாள்.. முட்டாள்.. திரும்பவும் உன்னோட குழப்பத்தை ஆரம்பிச்சுட்டியா...? இப்போ என்னடி சண்டை, அதுவும் வீட்டை விட்டு வெளியே போற அளவுக்கு..? என்னவோ ஐஸ்கிரீம் வாங்க வந்தேன்னு சொல்லுற மாதிரி ஈசியா சொல்லுற.”

“மினி, நான் சீரியஸா தான் சொல்லுறேன். என்னோட கல்யாணமே சண்டையில ஆரம்பிச்சது தானே.. அதற்கான முடிவு தான் இது..”

“ஷைலஜா.., நடுவுல கொஞ்சநாள் நீ நல்லாதானே இருந்த.. அப்புறம் என்ன.. உண்மையை சொல்லு, பத்திரிக்கை கொடுக்கப் போன அன்னைக்கு என்ன நடந்துச்சு..?” என்று பிரச்சனையின் வேரை சரியாக பிடித்தாள் மினி.

சற்றுநேரம் மௌனமாக இருந்தவள்.. துவண்ட குரலில் “இனியும் எதையும் மறைக்குற எண்ணம் இல்லை மினி.. யார்கிட்டயாவது மனசுவிட்டு சொல்லணும்னு தவிப்பா இருக்கு. மனசு மலையளவு பாரமா கனக்குது.. இப்போ ப்ரிதீவ் கஃபேக்கு போறேன்.. அவர் தான் வீடும், வேலையும் பார்த்து வச்சு இருக்கார்.. நீயும் அங்கே வந்துடு. அப்புறமா என் வீட்டுக்கு போய் பேசலாம்”

அதிர்ந்தவளாக “ஷைலு.. ப்ரிதீவ் வீடு பார்த்துக் கொடுத்தாரா...? வேலையுமா..! என்னைச் சுத்தி என்னடி நடக்குது.. அவர் எப்படி இதை செய்தார்..?”

“மினி, நான்தான் கட்டாயப்படுத்தி உதவியா கேட்டேன்.. அவரும் வேற வழியில்லாம தான் செஞ்சார். உன்கிட்ட சொல்லக் கூடாதுன்னு கேட்டுக்கிட்டாரு. ஆனா புது வீடு, தனிமை.. இதெல்லாம் நினைச்சா, என்னவோ போல இருக்கு. நீ கூட இருந்தா நல்லா இருக்கும்னு தோணுச்சு மினி..”

கோபம் பொங்க “நீ ஒரு முட்டாள், அவன் ஒரு முட்டாள்.. ஜனா அண்ணா உன்னை எப்படி விட்டார்..? ரெண்டு மாச கைக்குழந்தையோட.. எப்படி வேலைக்கு போவே..? எதையும் யேசிக்க மாட்டியா...?”

“இனிமே ஜனாவைப் பத்தி பேசாதே.. இன்னும் ரெண்டு வாரம் கழிச்சுத்தான் வேலையில சேரணும்.. குழந்தையைப் பார்த்துக்க ஆள் ஏற்பாடு பண்ணிட்டேன்னு ப்ரிதீவ் சொன்னார்.. என்னோட மீதி சாமானையெல்லாம் பேக் பண்ணி வீட்டுல வச்சு இருக்கேன், நீ

தான் எடுத்துக்கிட்டு வரணும் மினி.”

சற்றுநேரம் அமைதியாக இருந்தவள் “நான் வரேன்..’ என்று போனை வைத்துவிட.. அவர்கள் கல்யாணம் நடந்த அங்காளம்மன் கோவிலை கார் கடக்கும்போது... “டிரைவர் அண்ணா, காரை கொஞ்சம் நிறுத்துங்க, கோவிலுக்கு போயிட்டு வந்துடுறேன்.. வெயிட்டிங் சார்ஜ் போட்டுக்குங்க..”

பாவம் என்ன பிரச்சனையோ என்பது போல அவளைப் பார்த்தவர்.. “ பொறுமையா கும்பிட்டு வா தாயி, நான் வெயிட் பண்ணுறேன்” என்றவரை ஒரு வெறுமையான புன்னகையோடு கடந்து கோவிலுக்கு வந்தவள், ஒரு அர்ச்சனையை முடித்துவிட்டு.. சற்றுநேரம் கலங்கிப் போய் அமர்ந்திருந்துவிட்டு கிளம்பினாள்.

தன் அறைக்குள் குழந்தையோடும் பெட்டியோடும் நுழைந்த ஷைலுவை விழிகள் பளபளக்க பார்த்தான் ப்ரிதீவ். அவன் பார்வையே வித்தியாசமாக பட.. நிலவிய அமைதி சங்கடத்தைக் கொடுக்க தானே பேச ஆரம்பித்தாள் “ப்ரிதீவ்.., எங்கே வேலைன்னு டீடைல்ஸ் தாங்க.. வீடு எங்க இருக்கு..? வாடகை, அட்வான்ஸ் பத்தியெல்லாம் பேசிட்டீங்களா..” என்று கேட்டுவிட்டு தளர்வாக நாற்காலியில் அமர போக...

“என்ன வீடு, என்ன வாடகை, என்ன அட்வான்ஸ்.. என்ன வேலை?” என்று புரியாத பார்வையுடன் கேட்டவனை பார்த்து திடுக்கிட்டவளாக எழுந்து நின்றவள்....

குரல் நடுங்க “ப்ரிதீவ்.. நீங்க தானே.. வேலை, வீடு எல்லாம் ரெடின்னு சொன்னீங்க..!”

காலை ஆட்டியபடி நாற்காலியில் அமர்ந்திருந்தவன் திமிராக பின்னே சாய்ந்து, கைகளை தலைக்குப் பின் கொடுத்து கழுத்தை ஆட்டி நெட்டி முறித்தவன், நக்கலாக “நானா.. நானா சொன்னேன்..? ஒருவேளை சொன்னேனோ.? அப்படி தெரியலையே.. வீட்டை விட்டே வந்துட்டியா..? இப்போ நீ கேர் ஆஃப் பிளாட்ஃபார்மா...? ச்சச்ச்சோ சோ பிட்டி. எதுவுமே இல்லாம எப்படி..! நடுத்தெருவுல நிக்கப் போறியா.. ஷை...ல...ஜா.. .” என்றான் .

‘கேட்பவன் கேனையாக இருந்தால், எறும்பு கூட ஏபிசிடி சொல்லுமாம்’ முதலில் உண்டான படபடப்புக்கு பிறகு வந்த நிதானம், ஷைலுவுக்கு சொன்னது இதைத்தான்.

ஷைலுவிற்கு ப்ரிதீவ் மேல் துளியளவு கூட சந்தேகம் வரவில்லை. தன் காதுகளின் மேல் தான் பலமான சந்தேகம் வந்தது.. பின்பு யோசித்து ‘சே வழக்கம் போல ப்ரிதீவ் இதிலும் விளையாடுகிறான்’ என மனதில் முடிவெடுத்து பெருமூச்சு ஒன்றை பலமாக விட்டவள்....

பதட்டத்தை மறைத்துக்கொண்டு “போதும் ப்ரிதீவ்.. மினி உங்களைப்பத்தி சொல்லுறது சரி தான், நான் ஏற்கனவே நொந்து போய் வந்துருக்கேன். இப்போ கூட விளையாட்டா..?”

“விளையாடுறேனா...! நானா..? யார் நீ..? உன் கூட நான் எதுக்கு விளையாடணும்..?”

திணறலாக “ப்ரிதீவ் வேணாம்... எனக்கு பயமா இருக்கு, இப்படி பேசாதீங்க.. எனக்காகப் பார்த்து வச்சுருக்குற வீட்டு அட்ரசை மட்டும் கொடுங்க, நான் கிளம்புறேன்..” என்றாள் குரல் நடுங்க.

“பார்டா... பயமாமே..! உனக்கா..? உனக்கு அந்த ஃபீலிங் கூட இருக்கா..? நீ வழக்கமா அடுத்தவங்களை தானே பயப்பட வைப்பே..!”

“ப்ரிதீவ்..???”

“ப்ரிதீவ் தான்.. ஆனா உன் ஃபிரெண்ட் ப்ரிதீவ் இல்ல.. உன் மேல மனசு முழுக்க வன்மம் வச்சிருக்குற ப்ரிதீவ்..”

பேச்சே வராமல் “ஏன்...?”

“ஏன்னா.. என்ன சொல்லுறது...? என்ன நெஞ்சழுத்தம் உனக்கு.. உன்னைச் சுத்தி இருக்குறவங்களையெல்லாம் முட்டாப்பயலுகன்னு நினைச்சியா..?”

“ப்ரிதீவ்..”

“என்னைப்பத்தி என்னன்னு நினைச்சே? நீ பாட்டுக்க செல்லாக்காசு மாதிரி என்னைத் தூக்கிப் போட்டுட்டு போவ.. நாங்க உனக்கு சாமரம் வீசணுமோ...! நான் உன்னோட கல்யாணத்துக்கு வந்தேனே, எதுக்குன்னு நினைச்ச? உன்னோட கல்யாணத்தை நிறுத்தி.. அங்கேர்ந்து உன்னை இழுத்துக்கிட்டு வந்து, உங்கப் பொண்ணோட லட்சணத்தை பாருங்கன்னு, உன்னைப் பெத்தவங்ககிட்ட

ஒப்படைக்கணும்னு பிளான் பண்ணித்தான் வந்தேன்.

உனக்கு அட்சதை தூவி வாழ்த்த வரலை.. ஆனா அதையும் செஞ்சேன்..! ஏன் தெரியுமா..? ஜனாவுக்காக.. உங்க கல்யாணத்துக்கு முதல் நாள், அவரோட முகத்துல மரண வேதனையை பார்த்தேன். அவர் தவிச்ச தவிப்பையும் பார்த்தேன். முதல்ல அதுக்கு காரணம் தெரியலை. ஆனா நானே கெஸ் பண்ணினேன். அவர்கிட்ட, தான் வாழ நினைச்ச வாழ்க்கை கைவிட்டு போன தவிப்பை பார்த்தேன்.. ஆனா அடுத்தநாள் அவர்தான் மாப்பிள்ளைன்னு தெரிஞ்சதுக்கு அப்புறமா, நான் யோசிச்ச எதையும் செய்ய மனசு வரலை.

வாழ்க்கையில எதுவுமே கிடைக்காம அனாதையா வாழ்ந்த மனுஷனுக்கு கிடைக்குற ஒரு நிம்மதியையும் தட்டிப் பறிக்க தோணலை..! என்னோட பங்குக்கு நானும் அவர் வாழ்க்கையை கெடுக்கணுமான்னு நினைச்சு தான் உன்னை எதுவும் செய்யாம விட்டேன்.. உன்னோட அப்பா அம்மாவை நினைச்சு உன்னை மன்னிக்கவும் செஞ்சேன்.. ஆனா பழகப்பழக,உனக்கெல்லாம் நல்லவிதமா சொன்னா புரியாதுன்னு தெளிவா புரிய வச்சிட்ட இல்ல.. உன்னோட குழப்பத்துக்கு எத்தனை பேரை பலி கொடுப்ப?"

"ப்...ப்...ப்ரிதீவ்.."

"ஏய் என்ன பேச்சு திக்குது... உன்மேல எழுந்த வன்மம் எதுவரைக்கும் போச்சு தெரியுமா..? நான் மினியைக் காதலிக்கிறேன்னு சொல்லி அவளைப் பழிவாங்குற அளவுக்கு.. உன் மேல கண்மூடித்தனமான கோபம் இருந்துச்சு.."

அவன் சொன்ன செய்தியை உள்வாங்கியவளுக்கு மினியின் நினைவு தாக்க "அய்யோ.. அப்போ நீங்க மினியை ஏமாத்துனீங்களா.. நான் செஞ்ச தப்புக்கு அவ என்ன பண்ணுவா..? அவ யாருக்கு என்ன தூரோகம் செஞ்சான்னு இப்படி பண்ணுனீங்க..? அப்படியென்ன வன்மம் இது ?"

"வன்மமா... ஆமாம் வன்மம் தான். நீ ஜனா மேல வைக்கல! அதேவித வன்மம் தான் இது.. மினி எனக்கு என்ன துரோகம் செய்தான்னா கேட்கிற.. உன்னைப் போல மூளையில்லாத ஒருத்திக்கு தோழியா இருந்ததே, அவ செஞ்ச துரோகம் தான்.. அந்த பாவத்துக்கு பழி வாங்கத் தான் அவளை காதலிக்கணும்னு முடிவு செய்தேன்.." என்றவன் உணர்ச்சி வசப்பட்டவனாக முகத்தை அழுந்த துடைத்து விட்டு...

“ஆனா காதல்னா என்னன்னு அவளை காதலிக்க ஆரம்பிச்சதுக்கு அப்புறம் தான் புரிஞ்சுக்கிட்டேன்... அவ புரிய வச்சா. ஒருவேளை உன்னைப் போல நானும் முட்டாளா இருந்திருந்தா, உன்னை மாதிரியே கையில கிடைச்ச சொர்க்கத்தை நழுவ விட்டுருப்பேன்..”

“ப்ரிதீவ்.., ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க.. நீங்க என்னை தப்பா புரிஞ்சிக்கிட்டு இருக்கீங்க... எனக்கும் ஜனாவுக்கும் நடுவுல நடக்குற பிரச்சனையின் ஆழம் புரியாம... ப்ச்..என்னால எதையும் வெளிப்படையா சொல்ல முடியல.. அதுக்காக நான் குற்றவாளியாகிட மாட்டேன். உங்களை நல்ல ஃபிரெண்டா நம்பினதுக்கு .. நீங்க இப்படி எனக்கு செய்யலாமா ?”

கோபம் பொங்க “ஏய் நம்பிக்கையை பத்தி நீ பேசாதே.. நம்பிக்கைன்னா எப்படி இருக்கணும் தெரியுமா...? ஜனா மாதிரி இருக்கணும்..உங்க கல்யாணத்துக்கப்புறம்.. உன்கிட்ட நான் சுயநலத்தை மட்டும் தான் பார்த்தேன்.. அது எனக்கு எரிச்சலா இருந்துச்சு.. அடுத்தவங்களோட உணர்வு புரியாம.. உன்னைப்போல.. ச்சீ ..”

“ப்ரிதீவ்..”

“உனக்கெல்லாம், புருஷன் தாங்கு தாங்குன்னு தாங்குறான்ல அந்த கொழுப்பு.. அதான் ஒரு ஆளை செட்டப் பண்ணி, உனக்கு நிச்சயம் பண்ண மாப்பிள்ளை நான்தான்னு ஜனாகிட்ட போன் பண்ணி சொல்ல வச்சேன்.. அவர் உன்னை தப்பா நினைக்கணும்.. உன் நிம்மதியைக் கெடுக்கணும்னு திட்டம் போட்டேன்.. ஆனா அவர் எல்லா விஷயமும் தெரிஞ்சே தான் என் கூட பழகி இருக்கார்னு அப்புறம்தான் தெரிஞ்சுது.

அந்த மனுஷன் உன்னை துளி கூட சந்தேகப்படலை தெரியுமா.? என்னை தனியா ரூமுக்கு கூட்டிக்கிட்டு போய் என்ன சொன்னார்னு தெரியுமா.? ‘நான் ஷைலஜாவை நம்புறேன்.. ஆனா வெளியே தவறா பேச்சு பரவுது.. எனக்கே இது பத்தி கால் வருது.. நீங்க மினியை காதலிக்கிறீங்கன்ற பட்சத்துல.. இதனால மினி மனசு நோகாம பார்த்துக்கோங்க.. ஷைலுவுக்கும் எந்த பிரச்சனையும் வரக் கூடாது’ன்னு சொன்னார்.

உங்க நட்புல எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அதே தெளிவு உங்க கிட்டேயும் மினிகிட்டேயும் இருக்கணும்..’னு எனக்கு அட்வைஸ் பண்ணினாரு. எங்க மூணு பேரையும் பத்தி சொன்ன மனுஷன், உன்னைப்பத்தி ஒரு வார்த்தை பேசலை... உன் மேல சின்ன சந்தேகம்

கூட அவருக்கு வரலை. அப்படிப்பட்ட அவருக்கு, நீ பதிலுக்கு என்ன செய்தே..? ஜனா மாதிரியான மனுஷனுக்காக கடவுளையே வேணாம்னு தூக்கிப் போடலாம்.. ஆனா உனக்கு..., உன்னோட வீண் பிடிவாதத்தை தூக்கிப் போட முடியலை இல்ல..”

“ப்ரீதிவ்.. நான்”

“கொஞ்சம் நிறுத்து. நான் இன்னும் பேசி முடிக்கலை... அந்தளவுக்கு உன் மேல கோபம் இருக்கு.. ஆனா ஜனாவுக்காகவாவது நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழணும்னு ஆசைப் பட்டேன்.. அது நடக்காதுன்னு எப்போ புரிஞ்சுது தெரியுமா? உன் குழந்தையை அழிக்கணும்னு சொன்னே பாரு, அப்போ தெரிஞ்சுது உன் பிடிவாதத்தோட அளவு.. நான் எதிர்பார்த்த மாதிரியே, நீ திருந்தலை.. என்கிட்ட தான் ஹெல்ப் கேட்டு வருவேன்னு நினைச்சேன்.. வந்த இல்ல.. நல்லா அனுபவி.. இப்போ புரியும் ஜனாவோட அருமை..”

ஒடிந்த மனதும் நடுங்கும் குரலோடும் “ப்ரிதீவ்.. உங்களை நல்ல ஃபிரெண்டா தானே நினைச்சேன், ஜனாவுக்கு உண்மையா இருக்கணும்னு நினைச்சீங்களே, அதேமாதிரி ஒரு நிமிஷம் கூட நான் உங்களுக்கு நல்ல ஃபிரெண்டாகவோ, எனக்கு உண்மையா இருக்கணும்னோ உங்களுக்கு தோணலையா..?”

“ஹா... ஹா... நல்ல, உண்மை, குட்.. இந்த வார்த்தைக்கெல்லாம் உனக்கு அர்த்தம் தெரியுமா..? தெரியாம தான் கேக்குறேன்.., உன்னைப் பெத்தவங்களுக்கு ஒரு நல்ல மகளா இருந்துருக்கியா..? கூடப் பிறந்தவங்களுக்கு நல்ல அக்காவா இருந்துருக்குறியா..? நல்ல ஃபிரெண்டா இருந்துருக்குறியா..? நல்ல காதலியா இருந்துருக்குறியா..? நல்ல மனைவியா இருந்துருக்குறியா..? இல்ல இப்போ உன் கையில இருக்குற குழந்தைக்கு நல்ல அம்மாவா இருந்துருக்கியா..? சொல்லு யாருக்கு உண்மையா இருந்து இருக்கிற..?”

“ப்ரிதீவ்..”

“ஏய் என் பேரை சொல்லாதே.. கடுப்பா இருக்கு.. வேலை, வீடு, ம்ஹூம் அசாத்திய தைரியம் தான்.. உனக்காக நான் எதையும் தேடி வைக்கலை. பொய் சொன்னேன். இப்போ என்ன செய்வ.? நீதான் தன்மான ராணி ஆச்சே, பெத்தவங்களை தேடியும் போக மாட்டே..

ஜனாவை தேடியும் போக மாட்டே.. என்ன மேடம் பண்ணப் போறீங்க...? உன்னை தாங்குறதுக்கு ஜனாவை தவிர, வேற யாரும்

இப்போ வர மாட்டாங்க.. போ.. போய் பிள்ளையோட நடுத்தெருவுல நில்லு.. பிச்சை எடுத்துப்பாரு.. அப்போ புரியும்.. வாழ்க்கைன்னா என்னன்னு..!" என்றவன் வாசலை கைக்காட்ட

"நான் இருக்கும்போது அவ ஏன் பிச்சை எடுக்கணும்...? ஏன் நடுத்தெருவில் நிற்கணும்..?" என்ற கோபக் குரல் வாசல் பக்கம் கேட்கவும்..

ப்ரிதீவ் அதிர்ச்சியோடு "ஆன்ட்டி!" என்று வாயசைக்க ..

தெய்வமே நேரில் வந்தது போல "அம்மா" என்று கதறலுடன் பிள்ளையோடு பார்கவியிடம் ஓடினாள் ஷைலு. பார்கவியின் பின்னால் நின்றிருந்த மினியின் முகம் உயிர்ப்பைத் தொலைத்து வெளுத்திருந்தது.

வீட்டைவிட்டு வெளியேறி விட்டேன் என்று ஷைலு சொன்னதும் முதலில் எரிச்சல் வந்தாலும்.. அதற்கு ப்ரிதீவ்வும் துணை என்ற செய்தி மினிக்கு கோபத்தை ஏற்படுத்தியது. கொஞ்சம் நிதானாமாக யோசித்தவளுக்கு ஷைலுவின் விஷயத்தில் பெரிதாக ஏதோ இருக்கிறது, அதை சரிசெய்ய கண்டிப்பாக பெரியவர்கள் துணை வேண்டும்.. அது பார்கவியால் மட்டுமே முடியும் என்று நினைத்தவள்..

சற்றும் யோசிக்காமல் ப்ரிதீவ்வின் தாய் சகுந்தலாவுக்கு போன் செய்து விஷயத்தை முழுவதும் சொல்லாமல்.. பார்கவியின் உதவி அவசியம் தேவை என்று சொல்லி, அவரிடம் விலாசத்தை வாங்கிக்கொண்டு பயத்தோடு அங்கே போக..

அவரோ மினியை பார்த்ததும் முகம் மலர, ஷைலுவைப் பற்றி விசாரிக்க ஆரம்பிக்க.. மனதுக்குள் முதல் நெருடல் வந்தது மினிக்கு. 'இவருக்கு ஷைலஜா மீது ஏதும் கோபம் இருப்பதாக தெரியவில்லையே' என்ற குழப்பத்தோடு ஷைலுவின் காதலில் ஆரம்பித்து இன்றைய நிலை வரை, தனக்கு தெரிந்த அனைத்தையும் சொல்ல.. சற்றுநேரம் சிலையாய் அமர்ந்திருந்தவர்.. உடனே கிளம்பி அவளோடு ப்ரிதீவ்வின் கஃபேக்கு வந்தார்.

அவர்கள் கேட்ட முதல் வார்த்தையே 'பயமா.. உனக்கா..? உனக்கு அந்த ஃபீலிங் எல்லாம் உண்டா..?' என்ற ப்ரிதீவ்வின் நக்கல் வார்த்தையே.' அதன்பின் வார்த்தைகளை நெருப்பு கங்குகளாய் அவன் கக்க.. பார்கவி கண்ணீரில் கரைய... மினியின் இதயமோ கருகியது.. இருவரும் சமைந்து நின்றார்கள். பேசும் வேகத்தில் திகைத்து நின்றவர்களை

ப்ரித்தீவ்வோ ஷைலுவோ கவனத்தில் கொள்ளவில்லை என்பது விதியோ.. என்னவோ... மினி உணர்வற்று போய் விட்டாள்.

ஷைலுவின் சத்தத்தில் குழந்தை வீரிட்டு அழ ஆரம்பிக்க.. பார்கவி அவள் கையிலிருந்த குழந்தையை பார்த்தபடியே கண்கலங்க அதை வாங்கியவர்.. குழந்தையை மினியிடம் கொடுக்க.. அவளோ ஜடம் போல, இமைக்காமல் ப்ரிதீவ்வை விட்டு அகலாத பார்வையுடன் பிள்ளையை வாங்கினாள்.

ஷைலுவின் கைப்பிடித்து இழுத்துச் சென்று ப்ரிதீவ்வின் முன் நிறுத்தியவர் "இப்போ சொல்லுப்பா... பெத்தவ நான் இருக்கும்போது அவ ஏன் நடுத்தெருவுல நிக்கணும்.. சொல்லு..?"

"ஆன்ட்டி... நான்.."

"நீ அவளைப் பார்த்து கேட்ட அதே கேள்வியை, நான் உன்னை கேட்கட்டுமா.. ?உன்னை மகனா நினைச்ச எனக்கு, நீ உண்மையா இருந்தியா...? உன்னை நினைச்சு பெருமைப்பட்டுக்கிட்டு இருக்காங்களே சகுந்தலா அக்கா, அவங்களுக்கு நல்ல மகனா இருந்தியா..? உன்னை நல்லவன்னு நினைச்சு உதவி கேட்டாளே, இவளுக்கு நல்லவனா இருந்தியா..?

ஜனாவுக்கு நல்ல நண்பனா இருந்தியா..? இல்லை தோ இந்தப் பொண்ணு" என்று மினியை இழுத்து அவன் முன் நிறுத்தியவர்

"இவளுக்கு நல்ல காதலனா இருந்தியா...? சொல்லுப்பா. இவளை நிக்க வச்சு கேள்வி கேக்க நீ யாரு..?"

"ஆன்ட்டி.. அது.."

"ஏன்.. இப்போ உனக்கு பேச்சு வரலையா..? இவளை பாயிண்ட் பாயிண்டா கேள்வி கேட்டியே, இப்போ கேளு..? ஹப்பாடி..எத்தனை பொய்..எத்தனைப் பொய் ! ஏம்பா, எங்களுக்கு அவ மேல இருந்த கோபம் குறைஞ்சு, நாங்க அவளை பார்க்கணும்னு தவிச்சப்பல்லாம்.. 'செத்தாலும் முகத்துல முழிக்க கூடாதுன்னு நான் சொன்னதுல அவ கோபமா இருக்கா, எங்களை மொத்தமா வெறுத்துட்டான்னு' நீ தானே சொன்ன.... ஆனா இப்போ இங்க அப்படியே மாத்தி சொல்லியிருக்கே.. நான் இவங்க கூட பேச்சுவார்த்தைல இருந்திருந்தா, என் பொண்ணோட வாழ்க்கையை இப்படி சீரழிய விட்டிருக்க மாட்டேனே.. இப்போ நீ செஞ்சதுக்கு பேரு என்னப்பா?"

“அது ஆன்ட்டி... ஷைலு எல்லா முடிவையும் தப்புத்தப்பா... ஜனா பாவம்னு நினைச்சு..”

“ஷைலு செய்த தப்புக்கு தண்டனை கொடுக்க முடிவு பண்ணினியே.. நீ அதை விட அதிகமா தப்பு பண்ணி இருக்கியே, உனக்கு யாரு தண்டனை கொடுக்குறது..? ஜனாவை நினைச்சு செஞ்சேன்னு சொன்னியே, ஒரு நிமிஷம் மினியை நினைச்சியா..? ஒரு தப்புக்கு இன்னொரு தப்பு எப்படி பரிகாரம் ஆகும்..? எனக்கு தண்டனை கொடுத்திருக்கே.. ஜனாவுக்கு கொடுத்திருக்கே.. ஷைலுவோட ஒரு தப்புக்கு பதிலா நீ முப்பது தப்பு செஞ்சு இருக்கியே, உனக்கு என்ன தண்டனை, அதை யார் கொடுக்கறது..? நீயே சொல்லு” என்று கோபம் பொங்க கேட்டவருக்கு பதில் சொல்லத் தெரியாதவனாக நின்றான் ப்ரிதீவ்.

“ஷைலுவோட வாழ்க்கைக்கு ‘இவ ஏன் இப்படி பண்ணுறா..? இவ வாழ்க்கையை சரி பண்ண ஆயிரம் வழி இருக்குன்னு’ யோசிச்சியே... சம்பந்தப்பட்ட அவ, தன்னோட வாழ்க்கையை காப்பாத்திக்க, ஒரு வழி கூடவா யோசிச்சு இருக்க மாட்டா..? சொல்லுப்பா.. ஒருத்தர் இன்னொருத்தர்கிட்ட உதவின்னு கேட்குறது எப்போ தெரியுமா.? வேற வழியே தெரியலை.. என்ன பண்ணுறதுன்னே தெரியாம, இயலாமைன்ற நிலை வரும்போது தான். அதை பழி தீர்த்துக்க பயன்படுத்துவியா நீ..?”

“ஆன்ட்டி, நான் ஷைலுவுக்கு அவ தப்பை புரிய வைக்க நினைச்சேன்.. அது தப்புத்தப்பா..” பேச இயலாமல் தவித்தான்.

கொஞ்சநேரம் அவனையே உற்றுப் பார்த்தவர்.. வெறுப்புடன் “இந்த காலத்து பிள்ளைங்க எவ்ளோ பொறுப்பா இருக்கீங்களோ, அதே அளவுக்கு உங்களுக்கெல்லாம் அவசர புத்தியும் இருக்குன்னு நீங்க நாலு பேரும் நல்லா புரிய வச்சுட்டீங்க..” என்றவர் ஷைலுவிடம்

“எல்லாத்திலும் அவசரப்பட்டு இப்போ என்ன கதியில வந்து நிக்கற பார்த்தியா ..? இன்னும் ஏன் மரம் போல நிக்குற..? வா.. உன்னைப் பெத்த பாவத்துக்கு.. இன்னும் என்ன என்னத்தையெல்லாம் பார்க்க போறேனோ..”

அசையாமல் அங்கேயே நின்றவள் “இப்போ எங்கேம்மா கூப்பிடுற..?. நான் அவன் வீட்டுக்கு வர மாட்டேன்” என்றாள் பிடிவாதமாக.

அவள் சொன்ன அடுத்த வினாடியே யோசிக்கக்கூட இடம்

கொடுக்காமல் கன்னம் பழுக்கும் அளவிற்கு ஓங்கி ஒரு அரை விட்டார் பார்கவி.. கன்னத்தில் கை வைத்தபடி அதிர்ந்து நின்றாள் ஷைலு.

வாழ்விலேயே முதன்முறையாக பார்கவியிடம் வாங்கிய முதல் அறை.., ஷைலஜாவை அதிர்ச்சிக் கொள்ள வைத்தது.. 'நீயா அடித்தது' என்பது போல விழி விரியப் பார்த்தவளை...

"பிச்சிடுவேன்.. சின்னதிலிருந்தே நாலு போட்டு வளர்த்துருந்தா ஒழுங்கா இருந்திருப்ப.. மரியாதையா என் பின்னாடி வா. இதுக்கும் மேல ஒரு வார்த்தை பேசுனே.. கொன்னுடுவேன்.." என்றவர் மினியிடம்

"நீ என்னடி பண்ணப் போற...? எங்க கூட வரியா? இல்லை, இவன்கிட்ட ஏதாவது பேசணுமா..?"

ப்ரிதீவ்வை வெறுமையாக பார்த்தவள்.. "நான் என்ன பேசப் போறேன்..? இங்கே எனக்குன்னு யார் இருக்கா..? பேச என்ன இருக்கு..? நானும் உங்க கூடவே வரேன், வாங்க போவோம் என்றவள், அவருக்கு முன்பே விடுவிடுவென வெளியேறினாள்.

போகுபவர்களை தடுக்கும் வழி தெரியாமல் தலையில் கைவைத்தபடி அமர்ந்து விட்டான் ப்ரிதீவ்.

மதியம் ஷைலு போகும் போது எப்படி இருந்தானோ, அதே இடத்தில் சற்றும் அசையாமல் இருந்தான் ஜனா. பூட்டாமல் இருந்த கதவை திறந்துக் கொண்டு உள்ளே வந்த பார்கவிக்கு, ஜனாவைக் கண்டதும் அதுவரை இருந்த பாரம் விலகிய உணர்வு வந்தது. ஷைலு செய்த காரியத்தை மினியின் வாயிலாக அறிந்து இருந்தவருக்கு, ஜனா என்ன செய்வானோ என்ற பதைப்பு இருந்தது. அவர்களின் முதல் சந்திப்பும் சரியான சூழ்நிலையில் அமையவில்லையே..! அன்றே ஜனாவின் திமிர் பேச்சை பார்த்தவர் ஆயிற்றே.

ஆனால் ஜனாவோ.. ஷைலுவின் புகைப்படத்தில் பதித்த பார்வையை விலக்காமல் அமர்ந்திருந்தான்.. அவன் முகம் காட்டிய வேதனை.. ஷைலு தன்னிடம் திரும்ப வந்தாலே போதும் என்ற உணர்வும், அவன் கண்களில் தெரிந்த காதலும், தன் மகளின் தேர்வு சரியானதே, அவள் வாழ்ந்து விடுவாள் என்ற நம்பிக்கையை பார்கவிக்குக் கொடுத்தது.

அவனை கூப்பிடும்படி மினிக்கு கண் காட்ட.. அவளோ "அண்ணா.. அண்ணா.." என்று மூன்று முறை அழைத்தும், அசைவில்லாமல் இருக்க.. என்ன செய்வது என்பது போல பார்கவியை பார்த்தாள்.

அந்நேரம் குழந்தை மெல்ல சிணுங்க..

அந்த சின்ன ஓசைக்கு பதறி திரும்பியவனின் பார்வை வேறு யாரையும் கவனத்தில் கொள்ளாது.. ஷைலுவின் மேல் படிய.. அந்த வேகத்திலேயே புதையலைக் கண்டவன் போல் சிரிப்புடன் அவளை நெருங்கியவன்..

“ஷைலஜா.., வந்துட்டியா? எனக்கு தெரியும்டி.. நீ உன் மாமாவை விட்டு இருக்க மாட்டேன்னு எனக்கு தெரியும்” என்றவன்.. சுற்றுப்புறதிலுள்ள யாரையும் கவனத்தில் எடுக்காமல் அவளை இறுக்கி அணைக்க.. பதறிபோய் சுவற்றின் பக்கம் திரும்பி நின்றார்கள் மினியும் பார்கவியும்.

பதட்டமாக அவனை தள்ளிவிட்டு.. “அம்மா வந்திருக்காங்க..” என்றவள் விறைப்பாக அவனை தாண்டிப் போக.. அப்போது தான் அவன் கவனம் பார்கவி மேல் திரும்ப... முகத்தில் பயரேகையுடன் அவரை எதிர் நோக்கினான் ஜனா.

கொஞ்ச நேர அமைதிக்குப் பின் “தம்பி, நான் ஷைலுவோட அம்மா..” என்றவருக்கு, தெரியும் என்பது போல தலையை மட்டும் அசைத்தான்.

“உங்க மனைவியை உங்ககிட்ட கூட்டிக்கிட்டு வந்துட்டேன்.. உங்ககிட்ட நான் எதுவும் பேச போறது இல்லை.. எதுவும் கேட்க போறதும் இல்லை.. உங்க பிரச்சனையை நீங்களே பேசி தீர்த்துக்கோங்க.. என்ன பேசினாலும் சரி.. முடிவை மட்டும், எப்பவும் நீங்க ரெண்டுபேரும் சேர்ந்தே வாழணும்னு எடுங்க..”

அவர் சொன்ன செய்தியே.. அவர் பிரிக்க வரவில்லை என்னும் தைரியத்தை கொடுக்க.. அவன் முகத்தில் பயம் நீங்கி புன்னகை தோன்ற தொடங்கியது. அவன் முக பாவனைகளையே பார்த்துக் கொண்டு இருந்தவர்...

“தம்பி.., நான் ஒண்ணே ஒண்ணு தான் சொல்லணும்.. மினி சொன்னா.., உங்களுக்கு சமமா ஷைலு மேல எங்களுக்கும் உரிமை இருக்குறதால தான் எங்களை ஏத்துக்க முடியலைன்னு... எங்க கல்யாணத்துல ஒரு சடங்கு இருக்கு, தாரை வார்த்து கொடுக்குறதுன்னு சொல்லுவாங்க..

பொண்ணை மட்டும் இல்ல, அவமேல இருக்குற உரிமையைக் கூட தான் தாரை வார்த்து தரோம்... எப்போ அவளுக்கு கல்யாணம் ஆகிடுச்சோ, அப்போவே எங்களுக்கு அவமேல இருந்த உரிமையும் போய்டுச்சு.. அதிலயும் இவ, நாங்க வேண்டாம்னு தூக்கிப்

போட்டுட்டு, உங்களை மட்டுமே நம்பி வந்தவ.. இப்போ இருக்குறது எங்க பொண்ணு இல்லை.. உங்க மனைவி" என்று கண்கலங்க சொன்னவர்..

"சண்டை போடாத கணவன் மனைவி இந்த உலகத்தில இல்லை... அப்படியிருந்தா அவங்க பொய்யான வாழ்க்கை வாழுறாங்கன்னு அர்த்தம்.. அதனால, எவ்ளோ வேணா சண்டை போடுங்க.. ஆனா சேர்ந்தே இருந்து போடுங்க. இப்போ மனசு விட்டு பேசுங்க.. நாங்க கிளம்புறோம்" என்றவர் மினியிடம் இருந்து குழந்தையை வாங்கியபடி.. "வா நாம கிளம்புவோம்.." என்று கிளம்ப

ஷைலு பதட்டமாக "அம்மா.., பாப்பா.."

நின்று "என்னடி பாப்பா.. நானும் மூணு பிள்ளை பெத்தவ தான்.. உன் பிள்ளையை பார்த்துக்க எனக்கு தெரியும்.. நீ என் பிள்ளையை பார்த்துக்கோ.." என்று ஜனாவை பார்த்தவாறே சொல்ல..

அந்த ஒரு வார்த்தை ஜனாவின் முகத்தில் கோடி பிரகாசத்தையும், தெளிவையும் கொண்டு வந்தாலும்.. அவர் கையிலிருந்த ஜனனி தவிப்பைக் கொடுக்க..

"அம்மா.., ஜனனி.." என்றான்.

அவர்கள் அதிகம் பேசிக்கொள்ளவில்லை.. அவரின் மகன் என்ற ஒற்றை சொல்லும், அவனின் அம்மா என்ற ஒற்றை அழைப்பும், அத்தனை பூசல்களையும் ஒரு நொடியில் சரி செய்து விட்டது.. பார்கவி முகம் நிறைந்த புன்னகையுடன்...

"தம்பி, எனக்கு என் பொண்ணு மேல தான் எந்த உரிமையும் இல்லைன்னு சொன்னேன்.. என் பேத்தி மேல எந்த உரிமையும் இல்லைன்னு சொல்ல மாட்டேன், உனக்கு இருக்குற அதே அளவுக்கு உரிமை எனக்கும் இருக்கு.. உன்னை மாதிரியே தான் நானும்.. என் உரிமையையும் யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டேன்.. நாங்க நாளைக்கு வரோம்" என்று சொல்லியவர் பேத்தியை அணைத்தவாறே... அவன் பதிலை எதிர்பார்க்காமல் மினியுடன் கிளம்பினார்.

ஷைலுவின் அப்பார்ட்மெண்ட் வாயிலில் நின்றிருந்தார்கள் மினியும்

பார்கவியும்.. பார்கவி அங்கிருந்து கிளம்ப மனம் இல்லாதவர் போல, நிமிர்ந்து ஷைலு வீட்டை பார்ப்பதும், பின் தெருவை பார்ப்பதுமாக இருந்தார். மினிக்கும் தவிப்பாக இருந்தது.

ஷைலு ஏதோ ஒரு விதத்தில் ஜனாவால் பெரிதாக பாதிக்கப்பட்டு இருக்கிறாள் என்பது தெளிவாகவே புரிந்தது. முதலில், ஏதாவது சின்ன பிரச்சனையாக இருக்கும்.. ஷைலு தான் தேவையில்லாமல் பெரிதாக்குகிறாள், அவள் இயல்பே இதுதானே என்று அசட்டையாக நினைத்த விஷயம், இப்போது பூதாகரமாக தெரிந்தது.

எனவே தான் துணிந்து பார்கவியை சந்தித்தாள். 'ஷைலுவிடம் பேசி பிரச்சனையை தீர்ப்பார்ன்னு பார்த்தா.., இவர் என்னடான்னா அவங்களுக்குள்ளையே பேசி பிரச்சனையைத் தீர்த்துக்க சொல்லிட்டாரே.. இதுவரைக்கும் செய்யாததையா இனி செய்யப் போறாங்க...!' என்று தனக்குள் நொந்தவள் பார்கவியை பார்க்க..

அவரோ கலங்கிய கண்களோடு ஜனனியை அணைத்தபடி, அடுத்து என்ன என்ற தவிப்புடன் நின்றிருந்தார். மனம் தாங்காமல் "அம்மா, என்ன பிரச்சனைன்னு அவகிட்ட பேசி சரி பண்ணுவீங்கன்னு நினைச்சேன்.. இப்படி விட்டுட்டு வந்துட்டீங்களே.." என்றாள் ஆதங்கம் நிறைந்த குரலில்.

"எனக்கு வேற வழி தெரியலை மினி.., நான் ஷைலஜாவை அவசரக்காரியா தான் வளர்த்துட்டேனே ஒழிய ஆங்காரியா வளர்க்கலை.. நல்ல கணவன், அழகான குழந்தை, அழகான குடும்பம்னு எல்லாம் அமைஞ்சும்.. எதுவும் வேண்டாம், நான் போராடி வாழ்ந்துக்குறேன்னு பச்சை உடம்போட வெளியே வரான்னா.. அது உனக்கு சின்ன பிரச்னைன்னு தோணுதா..?"

திடுக்கிட்டவளாக "அம்மா.. அப்போ ஏன் அவளை விட்டுட்டு வந்தீங்க.? வாங்க போவோம்.. என்ன ஏதுன்னு கேப்போம்.."

"வேண்டாம்.. எனக்கு கேட்க விருப்பம் இல்லை.."

"என்னம்மா இது, நீங்களே இப்படி பேசுறீங்க..? அந்த அளவுக்கா அவ மேல வெறுப்பா இருக்கீங்க..?"

கண்ணீர் வடிய "வெறுப்பா..? அவ மேலயா...? என்னால முடியுமா மினி..? அவ மேல இருக்குற பாசம் தான் என்னை இப்படி பேச வைக்குது... என்னால அவகிட்ட பேச முடியாது.. பிரச்சனை

பெருசுன்னு தெரியுது, என்னன்னு நான் கேட்க போய், அவ சொல்லுற விஷயத்தை என்னால தாங்க முடியுமான்னு தெரியலை..

எல்லாத்தையும் கேட்டுட்டு நானே தப்பா முடிவெடுத்துட்டா..! நானும் ஒரு சராசரி அம்மா தானே.. என் பொண்ணு நல்லா வாழணும்.. காலம் முழுக்க ஜனாவை நான் மரியாதையோடு பார்க்கணும்.. அதான் என்னோட ஆசை.. அந்த நினைப்பு தான் அவளை அங்கேயே விட்டுட்டு வந்துச்சு.. இப்போ, பெத்த பாசம், அப்படியே விட்டுட்டு போகவும் மனசு இல்லாம, வாசலிலேயே நின்னு தவிக்குது.."

"எனக்கு புரியலை அம்மா.. உங்களாலேயே தாங்க முடியாதுன்னா.. அவ எப்படி தாங்குவா...? எப்படி சமாதானம் ஆவான்னு சொல்லுறீங்க.."

"நம்பிக்கை தான், ஜனாவோட கண்ணுல தெரிஞ்ச காதல் மேல தோன்றின நம்பிக்கை.. என் பொண்ணுக்கும் அவர் மேல காதல் இருக்கு.. அந்த காதல் அவங்களை வாழ வச்சுடும்... வாழ்ந்துடுவாங்க..."

"என்னம்மா இப்படி பேசுறீங்க...? உண்மை காதலா இருந்தா, இப்படியெல்லாம் நடந்தே இருக்காதே..!"

"எனக்கு என்னவோ நீ முன்னாடியே சொன்ன மாதிரி, அவங்களோட அதீதமான காதலேதான் அவங்களுக்கு பிரச்சனையாகி இருக்கோன்னு தோணுது.. பெண்ணை கட்டிக் கொடுத்த கையோடு.. பிறந்த வீட்டுக்கு வந்தா, தனியா வராதே, புருஷனோட வான்னு பெத்தவங்க ஏன் சொல்லுறாங்க.., பொண்ணை பிடிக்காமலா.. இல்லையே..! எவ்ளோ கஷ்டம் இருந்தாலும், புருஷனை விட்டுக் கொடுக்காம, சமாளிச்சு வாழணும்ன்ற தவிப்பு தான்.. எல்லா அம்மாவும் இப்படித்தானே நினைப்பாங்க, நானும் அப்படிப்பட்ட ஒருத்திதான்.. என் பொண்ணும் எந்த ஒரு பிரச்சினையையும் சமாளிச்சு வாழ்ந்துட்டு போகட்டுமே.."

"அம்மா, ஒரு வேளை ஜனா அண்ணா மன்னிக்க முடியாத தப்பை செஞ்சிருந்தா, அப்போ ஷைலுவோட நிலைமை..?"

"எல்லாத்தையும் மன்னிக்க வைக்குற சக்தி காதலுக்கு இருக்கு மினி.. ஜனாவை விட்டுட்டு ஷைலு வாழுவான்னு நினைக்குறியா? அவளால முடியாது.. அவ கண்ணுல இருக்குற தவிப்பைப் பாரு.. தனியா வாழணும்னு முடிவு செய்தவ, உன்னை எதுக்கு துணைக்கு கூப்பிடுறா..? கோபம் தான் அவ கண்ணை மறைக்குது.. வாழ்க்கைன்னா என்னன்னு முதல்ல அவ தான் புரிஞ்சிக்கணும்.

இன்னைக்கு இருக்குற நிறைய குடும்பங்கல்ல, மன்னிப்பு என்ற நியாபக மறதியில் தான் வாழ்க்கை வெற்றிகரமாக போகுது.. அதுவே என் பெண்ணுக்கும் நடக்கட்டும்.. மன்னிப்பு கேக்குறது மனுஷ குணம்னா.., ஜனா மனுஷனா இருக்கட்டும்... மன்னிக்குறது தெய்வ குணம்னா.. ஷைலு ஜனாவுக்கு தெய்வமா இருக்கட்டுமே.. ஏன் பிடிவாதக்காரியா இருந்து வாழ்க்கையை நாசமாக்கிக்கணும்..?"

"அம்மா.." என்று திகைப்பாக பார்த்தாள் மினி.

அவளை ஆதரவாக பார்த்தவர்.. "மினி, குடும்பத்துக்குள்ளே எதுக்கு ஈகோ..? ஷைலு ஆரம்பத்துல விட்டுக் கொடுத்திருந்தா.. இப்போ ஜனாவே, அவரையும் அறியாம விட்டுக் கொடுக்க ஆரம்பிச்சு இருப்பார்.. இது புரியாம, இரண்டு பேரும் போட்டி போட்டுக்கிட்டு சிக்கலை உண்டாக்கி இருக்காங்க.."

"இல்லம்மா.. ஷைலு நிறையவே விட்டுக் கொடுத்து இருக்கா.. ஒரு காலத்துல அவ நிலைமை எனக்கு புரியலை.. ஆனா இப்போ புரியுது. சில தப்புகளை மன்னிக்க முடியும், சில தப்புகளை மறக்கவே முடியாது.. மன்னிப்புன்ற ஒரு வார்த்தை இருக்குறதால, என்ன தப்பு வேணும்னாலும் செய்யலாமா...?

இது என்ன.., காலை மிதிச்சாலும் சாரி...! காதலை மிதிச்சாலும் சாரி..! எதுக்கெடுத்தாலும் சுலபமா இந்த ஒரு வார்த்தையை சொல்லிட்டு போறது.. அப்போ எங்களுக்கு மனசுன்னு ஒண்ணு இல்லையா..?" என கண்களின் ஓரம் வழியும் கண்ணீரை துடைத்தபடி கேட்டாள் மினி.

அவளை பரிதாபமாக பார்த்தார் பார்கவி. ஒரு வகையில் மினியின் தற்போதைய நிலைக்கும் அவரது பெண் தானே காரணம்.. அதுவே மனதை வறுத்த "மினி, தவறு செய்யாத மனுஷன்னு யாருமே இல்லை.. முக்கால்வாசி ஆண்கள் தவறு செய்துட்டு தவிப்பவங்க தான்..

பெரும்பாலும் பெண்களோட சுயநலம் என்ன தெரியுமா.., தவறு செய்யுற ஆண்களை விரும்புறது தான்.. சினிமாவுல கூட பார்ப்பீங்களே, ரௌடியையா தேடிப் பிடிச்சு லவ் பண்ணுறது.. காரணம் என்ன தெரியுமா..? ஒவ்வொரு பெண்ணோட ஆழ்மனசுல இருக்குற ஆசையோட வெளிப்பாடு தான்.. புருஷன்கிட்ட இருக்குற தப்புகளை திருத்தி, அவனை தன் கைக்குள்ளே வச்சுக்கணும்கிறதுல இருக்குற அலாதி ஆர்வம் தான்... தவறு செய்யாத பெர்ஃபக்ட்டான ஆள் வாழ்க்கைக்கு சரி வரமாட்டான்.

அவனுக்கு, நாம பண்ணுற தப்பை சரி பார்க்கவே நேரம் சரியா இருக்கும்.. இதே, தவறு செய்யுற ஆளாய் இருந்து, அவன் தப்பையும் நாம மன்னிச்சோம்னா, அவனுக்கு நாம கொடுக்குற மன்னிப்பே ஆயுசுக்கும் வாட்டி வதைக்கும், அப்புறம் எங்கே பொண்டாட்டியோட தப்பை பார்க்குறது..? அப்படியிருந்தா ஒரு வகையில குடும்பமும் சுமுகமா போகும்..” என்றவரை ‘ரௌடியை விரும்புவதற்கு இப்படியொரு கோணம் இருக்கா!?’ என கண்கள் விரிய பார்த்தாள் மினி .

இருந்தாலும் அவளின் ஆதங்கம் கேள்வியாக வந்து விழுந்தது “அப்போ எல்லா பெத்தவங்களையும் போல, ஜனா அண்ணா எப்படியிருந்தாலும், விட்டுக் கொடுத்து வாழு, அதுதான் உன்னோட தலையெழுத்துன்னு சொல்லுறீங்களா..?”

“நான் எப்போ அப்படி சொன்னேன்..? இங்கப்பாரு மினி, குடிகாரனோடக் கூட வாழ்ந்திடலாம்... ஆனா, சந்தேகப்படுறவன் கூட வாழவே முடியாதுன்னு சொல்லுவாங்க..நீயே சொல்லு, ஜனா குடிக்கிறாரா.. இல்லை சந்தேகப்படுறாரா..? அப்படியிருந்தா, வா.. இப்பவே போய் ஷைலஜாவை நம்மோட கூட்டிட்டு போய்டலாம்.

ஜனாவை பத்தி நீங்கல்லாம் சொல்லுறதை வச்சுப் பார்த்தா.., ஷைலஜா மேல அளவுக்கு மீறி அன்பை வச்சிருக்கார்.. அன்பு காட்டியே டார்ச்சர் பண்ணுறார்..., அதானே..! அவளை யார் விட்டுக் கொடுக்க சொன்னது..? பதிலுக்கு இவளும் அதையே செய்யட்டுமே.. யார் வேண்டாம்னு சொன்னா..?” என்றவர் புன்னகையோடு

“இதெல்லாம் கல்யாணம் ஆனவங்களுக்காகச் சொல்லுறேன் மினி.. நடந்த திருமணத்தை காப்பாத்திக்கணுமே, அதுக்கான சப்பைக்கட்டுகள் இது எல்லாம்..! ஆனா இது எதையும் நான் காதலிப்பவங்களுக்கு சொல்லலை.. அதைப்பத்தி எனக்கு தெரியவும் தெரியாது.. அவங்கவங்க காதலை பத்தி அவங்கவங்க தான் யோசிக்கணும்.. கூடவே பெத்தவங்க நினைப்பும் இருக்கட்டும்.. புரியுதா.. ? சரி வா போகலாம், பாப்பா வேற சிணுங்க ஆரம்பிச்சுட்டா..” என்று சொல்லிவிட்டு ஆட்டோவில் ஏறியவரை பின்தொடந்தவளின் மனம்

‘இவங்களையும், என்னோட அம்மாவையும், வீட்டுலேயே இருந்துக்கிட்டு குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுறவங்கன்னு நானும் ஷைலுவும் எத்தனை முறை கிண்டல் பண்ணியிருப்போம்.., ஆனா

குடும்பமும் பிள்ளைகளும் நல்லா இருக்கணும்னு தங்களோட டேலன்ட் எல்லாத்தையும் மறைச்சு, ஒண்ணும் தெரியாதவங்க மாதிரி இருக்காங்கன்னு புரியாம, நாங்க தான் முட்டாள்களாய் இருந்து இருக்கோமோ..!

எதையும் யோசிக்காமல் செய்யறது ஷைலு மட்டும் இல்ல, நானும் தானே.. இன்னைக்கு இவங்க கவனத்துக்கு கொண்டு வந்த இந்த விஷயத்தை சில மாசங்களுக்கு முன்னாடியே செய்திருந்தா, இவ்ளோ விபரீதங்கள் நடந்தே இருக்காதே' என உள்ளுக்குள்ளே புலம்பினாள் .

பார்கவி ஷைலுவை விட்டு சென்றதும் 'திரும்பவும் இந்த நரகத்திலா..?' என்ற தவிப்பு சூழ... ஜனாவின் முகத்தை பார்க்க பிடிக்காமல்.. அடுக்களைக்குள் நுழையப் போனவளை தடுத்து நிறுத்தியவன்...

"இந்த ஒரு வருஷமா என் கூட நீ வாழ்ந்தது வெறும் நடிப்பா ஷைலஜா..?" என்றவனின் விழிகளில் வேதனை நிரம்பியிருந்தது.

பதில் சொல்ல பிடிக்காதவளை போல அவன் கையை விலக்கிவிட்டு நகர முயன்றவளை.. இரு கைகளையும் பிடித்து நிறுத்தியவன், கைகளை விலக்காமல்..

"சொல்லு ஷைலு, இதுவரைக்கும் நான் உன் காதலை சந்தேகப்பட்டது இல்லை... உனக்கு ப்ரிதீவ் கூட நிச்சயம் நடந்தப்போ கூட.. அது என் மேல இருக்குற கோபத்துலதான்னு நினைச்சேன்...

நீ, என் மேலே உள்ள கோபத்துல தப்பா முடிவெடுத்து, அவனை கல்யாணம் பண்ணியிருந்தா கூட, அவன் கூட நீ வாழ்ந்து இருக்க மாட்டே.. செத்துருப்பேடி.. அந்தளவுக்கு என் மேல உனக்கு காதல் இருக்கு.. அதை நீதான் உணரலை.. என் மேலே உள்ள காதல் உனக்கு சரியா புரியலையேன்னு வருத்தப்பட்டு இருக்கேன்.. இப்போ அதெல்லாமே தப்புன்னு நினைக்க வச்சுட்டியே ! ஏண்டி.. உன்னை என் கையில வச்சு தாங்கினதுக்கா இந்த தண்டனை..? என்னை விட்டுப் பிரியணும்னு நினைச்சு, என்னை உசுரோட கொன்னுட்டியே ஏண்டி.. சொல்லு." என்று அவளை உலுக்க.

கோபமாக அவனை உதறியவள் "முதல்ல 'காதல்'ன்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமா..? நீங்க வாயால சொன்ன காதலை, நான் மனசால உணர்ந்திருக்கேன். அந்த உணர்வை நீ எப்போவோ கொன்னுட்ட.. கையில வச்சு தாங்குறதுன்னா என்ன அர்த்தம்..? உங்களுக்கு

வேணும்னா.., கிளியை தங்க கூண்டுல வச்சு வளர்க்குறதை பெருமையா சொல்லிக்கலாம்.. ஆனா கூண்டுல இருக்குற கிளிக்கு.. கூண்டு தங்கமா இருந்தா என்ன..? தகரமா இருந்தா என்ன..? கூண்டு கூண்டு தானே.. தாங்குறானாம்.. தாங்கு.. ம்ம்ஹூம்"

அடிப்பட்ட குரலில் "அப்போ இது ஜெயில்னு சொல்லுறியா ஷைலஜா.? என்னோட அன்பு உனக்கு விலங்கா இருக்கா..? நான் உனக்கு தடையா இருக்கேனா..?"

"நிச்சயமா அப்படித்தான்.. என்னோட உணர்வுகளை புரிஞ்சுக்காம.. எப்பவும் நான் நான்னு சொல்லிட்டிருந்தா அலுப்பா இருக்கு.. அந்த நானை விட்டு வெளியே வந்து யோசிங்க, நீங்க எனக்கு செஞ்ச கொடுமை புரியும்.."

"நான் ஏன் வெளியே வரணும்..? அந்த நானுக்குள்ளே தானே நீயும் இருக்க.. நீ வேற நான் வேறன்னு நான் எப்பவும் நினைக்கலை.. எனக்கு அன்பையோ, காதலையோ வெளிப்படுத்த தெரியல.. இப்பவும் உனக்கு நான் என்ன கொடுமை செய்தேன்னு எனக்கு புரியலை.. நாம காதலிக்குற பொண்ணு, அவளே சகலமும்னு நாம நம்பிக்கிட்டு இருக்குறப்போ.., திடீர்னு அவ நம்மை விட்டுட்டு இன்னொரு கல்யாணத்துக்கு தயாராகிட்டான்னு தெரிஞ்சா, எந்த ஒரு ஆம்பளைக்கும் வர கோபம் தான்.. எனக்கும் அப்போ வந்துச்சு.

அதை வெளிப்படுத்திய விதம் வேணும்னா தப்பா இருக்கலாம்... அதுக்கு நீ என் கூட சண்டை போட்டிருக்கலாமே...? காலம் பூரா பேசாம ஒதுக்கி வச்சு இருக்கலாம்... எதுவா இருந்தாலும்.. இதுதான் என்னோட பிரச்னைன்னு சொல்லிட்டு.. என் கூடவே இருந்து போராடி இருக்கலாமே.. அதை விட்டுட்டு, ஏண்டி நடிச்ச..? ஏன் பிரிஞ்சே..?"

"ஓ.. எப்படி.. எப்படி.. சொன்னா உடனே உனக்கு புரிஞ்சிடுமோ...? உங்களுக்கு புரிய வைக்குற திராணி எனக்கு இல்லை.. ஆளை விடுங்க" என்றவள் வெறுப்பாக முகம் திருப்ப

அதே வெறுப்பை முகத்தில் காட்டியவன் "இப்பவும் நீ சொல்லுற எதுவுமே எனக்கு புரியலைடி.. தெரிஞ்சு நான் தப்பு செய்திருந்தா, ஆயிரம் தண்டனை கொடு, சந்தோஷமா ஏத்துக்குறேன். ஆனா தப்புன்னு புரியாம, நான் செய்த தப்புக்கு.. என்னை விட்டுட்டு போவியா..? என்னடி.. புரிஞ்சுக்கலை புரிஞ்சுக்கலைன்னே சொல்லிட்டிருக்க ... புரிஞ்சுக்க முடியாதது என்னோட தப்பு தான்..

ஒத்துக்குறேன்.. நீ ஏன் புரிய வைக்க முயற்சிக்கலை..? புரிஞ்சுக்க முடியாதது என் தப்புன்னா.. புரிய வைக்க முடியாதது உன்னோட தப்பு தானே... அதனால என்னை மட்டும் குத்தம் சொல்லாதே..” என்று அவளை தள்ளி விட்டவன், அறைக்குள் சென்று கதவை அடைத்துவிட..

அங்கேயே அமர்ந்து, அடுத்து என்ன என்பது போல கதறி அழ ஆரம்பித்தவள்... அப்படியே உறங்கிவிட... சங்கடமான அந்த இரவு.. அவர்கள் நிலையை பார்க்க சகிக்காமல்.. இவர்களின் நல்வாழ்வுக்கு தேவை விடியலே என்று விரைந்து சென்று, சூரியனை அழைத்து வந்தது.

விடிந்து நீண்டநேரம் சென்றே அறையை விட்டு வெளியே வந்தான் ஜனா.. இரவு முழுவதும் தூங்காத சிவந்த கண்களோடு வந்தவனின் பார்வையில்.. இருந்த வாக்கிலேயே உறங்கும் ஷைலஜா பட... அவளை எழுப்ப மனமில்லாமல் தன் வேலைகளை பார்த்தான்.

அவன் அசைவுகள் கொடுத்த சத்தத்தில் கண் விழித்தவள், தன் காலைக் கடன்களை முடித்துவிட்டு.. அவன் முகம் பார்க்காமல் அறைக்குள் நுழைந்தவளை “ஷைலஜா” என்று கூப்பிட...

எதுவும் பேசாமல் அவன் எதிரே அமைதியாக வந்து அமர்ந்தாள்.. அவளுக்காக போட்டு வைத்த காஃபியை கொடுக்க.. சொல்வதை செய்யும் பொம்மை போல வாங்கி பருகினாள்.

அவள் குடிக்கும் வரையில் காத்திருந்தவன் “ஷைலஜா.., நான் ஃபாதரை பார்த்துட்டு வரேன்.. அதுக்கு அப்புறம் நம்ம எதிர்காலம் என்னன்னு பேசிக்கலாம்..” என்றவன் மறு பேச்சு இல்லாமல் கார் சாவியுடன் வெளியேற.. அதே இடத்தில் உணர்வற்றவள் போல அமர்ந்து இருந்தாள்.

சர்ச்சில் தபஸ் காலத்தை முன்னிட்டு வெள்ளையடிக்கும் வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த அடைக்கலம் ஃபாதருக்கு ஜனாவின் அந்நேரத்து வருகை ஆச்சரியத்தை கொடுக்க..

“வா.. வா ஜனா.. என்ன இந்த நேரத்துல வந்து இருக்குற..? உன்னோட யூனிட்ல வேலை இல்லையா..?” என்றவருக்கு ஒரு புன்னகையை கொடுத்தவன், அவர் கைப்பற்றி பாவமன்னிப்பு கூண்டு (confession box) வரை அழைத்து சென்றான், என்பதை விட இழுத்துச் சென்றான் என்றே சொல்லலாம்.

ஜனாவின் அந்த செயல் அவனின் சிறுவயதை நியாபகத்துக்கு கொண்டு வர சிரித்தபடி "என்ன ஜனா, என்ன தப்பு செய்த..?" என்றவருக்கு அவனின் கலங்கிய விழிகளே பதிலாக கிடைக்க.. அவனை உற்றுப் பார்த்தவர்.. பெட்டிக்குள் சென்று அமர்ந்தார்.

நிகழ்ந்தவைகளை ஜனா சொல்ல சொல்ல.. ஃபாதரின் முகம் இருளடைந்தது. அவன் சொல்லி முடிக்கவும்.. வழக்கம் போல பரிகாரமாக இந்திந்த ஜபம் சொல்லு.. பூசை வை என்று ஏதும் சொல்லாமல், எழுந்து வெளியே வருபவரை கேள்வியாக பார்த்தான் ஜனா.

"ஜனா, நீ போய் என்னோட ரூமில் இரு, நான் வரேன் .."

"ஃபாதர்.. ஒண்ணும் சொல்லாம போறீங்க..!" என்றவனுக்கு பதிலளிக்கும் வகையில் நின்றவர்..

"எப்படி ஜனா.. நீ சொல்ல போற மூன்று அருள் நிறைந்த மரியே ஜெபமும்.. நீ வைக்கும் ஒரு மாஸும் உன் பாவத்தை போக்கிடுமா..? சொல்லு" என்று கண் கலங்க கேட்டவரை புரியாமல் பார்த்தான். அவன் பார்வையே வேதனையை கொடுக்க...

"போ ஜனா.. உன்னோட பாவத்தை என்கிட்டே இறக்கி வச்சுட்ட இல்ல.. இப்போ நான் செய்த பாவத்தை கடவுள்கிட்டே ஒப்புக் கொடுத்துட்டு வரேன்" என்றவர்.. சிலுவையின் முன் முழங்காலிட்டு வேண்ட ஆரம்பித்தார்.

மனம் முழுவதும் நெருடல்களும் சந்தேகங்களும் போட்டி போட தவிப்புடன் காத்திருந்தான் ஜனா.. கொஞ்ச நேரத்திலேயே வந்த ஃபாதர்.. அவர் எதிரே இருந்த ஃபைலில் எதையோ தேடியெடுத்து, ஜனாவிடம் நீட்ட.. அவன் திடுக்கிட்டான்.

அது அந்த மாதம், இவன் ஃபாதருக்கு கொடுத்த செக்.. "ஃபாதர், இதை ஏன் திரும்ப கொடுக்குறீங்க..? நீங்களும் என்னை வெறுத்துட்டீங்களா..? அப்போ நான் செய்ததெல்லாம் தப்பா...? ஷைலு எனக்கே வேணும்னு தானே அப்படி செய்தேன்!"

"ஜனா.., உன்னை நினைச்சு எப்பவுமே நான் ரொம்ப பெருமை படுவேன்.. உனக்கு சில விஷயங்களை வார்த்தையால சொல்ல முடியாது.. எனக்கு தேவையான பணம் நிறைய கிடைக்குது,

இங்கிருந்து வெளியில போற என்னோட பிள்ளைங்க யாருமே என்னை மறக்குறது இல்லை... இந்த செக்கை கொண்டு போய் லிட்டில் ஏஞ்சல்ஸ் சிஸ்டர் அன்னிகிட்ட, நான் சொன்னேன்னு சொல்லிக் கொடு..”

லிட்டில் ஏஞ்சல்ஸ் இல்லம் பெண்களுக்கானது... அதை நடத்தி வருவது சிஸ்டர் மரிஅன்னி.. பொதுவாக ஆண்கள் இல்லத்தில் இருந்து யாரையும் அங்கே அனுப்ப மாட்டார்.. ‘இது என்ன புதிதாக..!’ என்று சிந்தித்தவன்.. அப்படியே அமர்ந்து இருக்க...

“ஜனா, உன்னோட வாழ்க்கை சரியாகணும்னா, ஷைலு சொல்லுற மாதிரி, உன்னோட தவறு என்னன்னு நீ உணரணும்... நிச்சயமா அதை, ஒரு ஆணான என்னால புரிய வைக்க முடியாது.. தயவுசெய்து என்கிட்ட சொன்னதை, அப்படியே சிஸ்டர் கிட்ட சொல்லு. ஒரு பெண்ணோட வேதனையை அவங்களால தான் உனக்கு சரியா புரிய வைக்க முடியும்.. இதுபத்தி சிஸ்டர்கிட்ட நான் பேச முடியது.. கன்ஃபெஷன் பாக்சுல நீ சொன்னதை, நான் வெளியே சொல்லவும் முடியாது..”

“ஃபாதர்.. நான் எப்படி சிஸ்டர் கிட்ட..”

“ஏன் ஜனா.. உன்னை பொறுத்தவரைக்கும் நீ செஞ்ச எதுவுமே தப்பு இல்லையே.. அப்புறம் ஏன் தயங்குறே...? உன்னோட வாழ்க்கையை சரிபண்ண இந்த ஒரு வழி தான் இருக்கு, போய்தான் பாரேன்..”

என்றவர் எழுந்தபடியே “நேரம் ஆகுது ஜனா கிளம்பு.. நான் ஷைலஜாவை பார்க்க போறேன்..” என்றவர் அவனை தாண்டிப் போக.

“ஃபாதர் நீங்க ஏன்..?”

“நான் இப்போ ஃபாதரா போகலை... என் மகனுக்கு அப்பாவா, அவனோட மனைவியை பார்க்கப் போறேன்.. நீயும் கிளம்பு.. சரி செய்ய முடியாத பாவத்திற்கு தான் மன்னிப்பு தேவை.. உன்னோடது சரி செய்ய முடியும்னு நான் நம்புறேன்.. அதுக்கு முதல்ல, ஷைலு சொல்லுற மாதிரி, உன்னை நீ உணரனும்.. போ..” என்றவர் அங்கிருந்து வெளியேறினார்.

ஜனா சென்ற பிறகும் இடத்தை விட்டு அசையாமல் இருந்தவளை, கொஞ்ச நேரத்திலே வந்த அழைப்பு மணி ஓசை அசைக்க... ‘’அம்மா தான் ஜனனியோட வந்துட்டாங்களோ’ என்று விரைந்து சென்று

கதவை திறந்தாள்.

வெளியே நின்றிருந்த நிலாவையும் மினியையும் பார்த்தவள், அவர்களின் பின்னே பார்கவியை தேடி ஏமாந்து, மினியிடம்.. "மினி, அம்மா வரலையா...? பாப்பா எப்படி இருக்காளோ.. நீ ஏன் கூட்டிக்கிட்டு வரலை..?"

"போதும் வா உள்ளே போவோம்.. உன் பொண்ணை, உன்னைவிட பத்திரமா அம்மா பார்த்துக்குவாங்க... முதல்ல உன்னோட பிரச்சனையை தீர்த்துக்கோ... அப்புறம் அவங்க, பிள்ளையை எடுத்துட்டு வருவாங்க.." என்றவள் அவளை நகர்த்திவிட்டு நேரே அடுக்களைக்குள் போனாள்.

ஷைலுவும், நிலாவும் உள்ளே வந்து அமர "ஏய்.. நேத்துலேர்ந்து எதுவும் சாப்பிடலையா..? நான் நினைச்சேன்.. அதான் காலையிலேயே ஓடி வந்தேன்.. பட்டினி கிடந்தா பிரச்சனை தீர்ந்திடுமா..?" என திட்டியபடியே, அங்கிருந்த ஓட்ஸை வைத்து கஞ்சி காய்ச்சியவள்.. அவளுக்கும் நிலாவுக்கும் காபி போட்டு எடுத்து வந்தாள். ஷைலு மறுத்தும் கட்டாயப்படுத்தி கஞ்சியை குடிக்க வைக்க.. அவள் பாதி குடிக்கையில்..

"நானும் நேத்துல இருந்து ஒண்ணும் சாப்பிடலை, எனக்கும் கொஞ்சம் மீதி வை" என்ற மினி அவளிடமிருந்து கொஞ்சம் வாங்கி பருக.. அவர்களை கண்கள் கலங்க வேடிக்கை பார்த்தாள் நிலா.

கொஞ்ச நேரம் சங்கடமான அமைதி நிலவியது... "ஷைலு, எத்தனையோ தடவை நான் ரொம்ப செல்ஃபிஷா இருக்கேன்னு, நானே ஃபீல் பண்ணியிருக்கேன் ... மினி மாதிரி, எது நடந்தாலும் உன் கூடவே இருப்பேன்னு சொல்ல முடியாம, பெத்தவங்களுக்கு பயந்து ஃபிரெண்ட்ஷிப்புக்கு நம்பிக்கையா இல்லைன்னு நினைச்சிருக்கேன்.. இப்போ மினியை பார்க்கும்போது, நல்லவேளை நாம தப்பிச்சோம்னு நினைக்க வச்சுட்டியேடி.. ஆனா பாரு, இவ இப்பவும் உன் கூடவே.. எப்படி மினி..?" என்று கேட்ட நிலாவிற்கு பதில் சொல்லாமல்... அவள் கேட்ட கேள்வியின் உஷ்ணம் தாக்க... சங்கடமாக மினியை நோக்கி...

"மினி சாரிடி.. உன் முகத்துல முழிக்க கூட அசிங்கமா இருக்கு... சத்தியமா நான் செய்யுறது உன்னையும் பாதிக்கும்னு நினைச்சே பார்க்கலைடி.. நான் எதிர் பார்க்கவே இல்ல.. சாரிடி.. ப்ரிதீவ் மனசுல என் மேல இவ்வளவு கோபம் இருக்கும்னு நான் நினைக்கலை மினி.."

நிலா கடுப்பாக “நினைச்சிருக்கணும், நான் அப்போவே படிச்சுப்படிச்சு சொன்னேனே.. எனக்கு அவன் மேல சந்தேகமா இருக்குன்னு.. தனக்கு நிச்சயம் பண்ணின பொண்ணு தன்னை ,வேண்டாம்னு சொன்னா, அவகிட்ட நட்பு வராது... கோபம் தான் வரும். அவங்க முகத்துல முழிக்கவே மாட்டாங்க, அதுதான் மனுஷங்களோட குணம்.. ஆனா அவனுக்கு...! அவன் முகத்துல இளிப்பு மட்டும் தான் இருந்துச்சு..” என்று பல்லைக் கடித்தாள்.

இவர்கள் பேச்சில் இடையிட்ட மினி “தயவுசெஞ்சு ரெண்டு பேரும் கொஞ்சம் வாயை மூடுறீங்களா..? இப்போ என்ன நடந்துடுச்சு..?

எப்பவும் ப்ரிதீவ் சொல்லுற மாதிரி.. ‘நீங்க காதலிக்குறப்போ, காதல்னா என்னன்னு எனக்கு தெரியலை ஷைலு..., அதோட வலி எப்படி இருக்கும்னு நான் உணரலை.. ஜனா உனக்கு பொருத்தம் இல்லைன்னு உன்னை குழப்பி விடுற வேலையை தான் தெளிவா செய்தேன்..

நான் அப்படி செய்யலைன்னா.. நீ இன்னைக்கு வரைக்கும் இப்படி இரண்டு மனசா இருந்துருக்க மாட்டே.. மத்த எந்த குழப்பமும் வந்திருக்காது.. எல்லாத்துக்கும் எதிர்வினை இருக்கும் தானே.. அதான் இப்படி நடக்குது.. இன்னும் எத்தனை நாள் தான் நாம நாலு பேரும் இப்படியே ஒருத்தரையொருத்தர் மாத்தி மாத்தி கை காட்டுறது..?

இப்போ ஒண்ணு மட்டும் புரியுது, நாம நாலு பேருமே சிக்கலோட நாலு முனையை பிடிச்சுக்கிட்டு தொங்கிட்டு இருக்கோம். அவங்கவங்களுக்கு சரின்னு பட்டதை செஞ்சுட்டு, கடைசியில திருத்திக்க வழி தேடுறோம்..

காதலோட வலி என்னன்னு எனக்கு புரிய வைக்க நினைச்சார் ப்ரிதீவ், புரிய வச்சுட்டார்.. அதுக்கு அப்புறமும் அவருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்கு..? இதுக்கு மேல அவனைப் பத்தி எதுவும் பேச வேண்டாம் ” என்றவள் நிறுத்தி

“இப்பவும் நான் அவனை பத்தியே தான் பேசுறேன் இல்ல..” என்றாள் கண்களில் நீர் வடிய.

மனம் தாங்காத நிலா “மினி, ஷைலு தான் ஒரு ரெண்டுங்கெட்டான்.. நீ எப்படிடி அவனை நம்புனே..? இது தான், காதல்னாலே பிடிக்காதுன்னு நீ சொன்ன லட்சணமா...?”

“எனக்கு காதல் பிடிக்காது தான் நிலா.. ஜனா அண்ணா கூட பழக... பழக... அவரை மாதிரியே காதல்ல உறுதியா இருந்தா, காதலிக்கறது தப்பு இல்லன்னு நினைச்சு இருக்கேன்.. எனக்கு புருஷனா வரப் போறவன், இப்படி இருப்பானான்னு ஒரு சின்ன ஆசை.. சலனப்பட்டு இருக்கேன்.. அதே அளவு காதலை.. இல்லை அதை விட பலமடங்கு அதிக காதலை என்கிட்ட ஒருவன் காட்டுறப்போ மறுக்க தோணலை நிலா... காதல் தப்புன்னு சொன்ன அறிவை, மனசு மழுங்க பண்ணிடுச்சு.. கூடவே சபலம் வேற, நான் என்ன பண்ண..?

ஷைலு சொல்லும் போதெல்லாம் புரியாத எனக்கு, என்னோட உணர்வு அடிபடும் போது தான் அவளோட வேதனை புரியுது.. இப்போ நானும் ப்ரிதீவ் வழிக்கு போறேன்.. வாழ்க்கை, குடும்ப நிம்மதியை சார்ந்தது.. குடும்பம் நிம்மதியா இருந்தா, கண்டிப்பா வாழ்க்கையும் நிம்மதியா இருக்கும்.. என்னோட வாழ்க்கையை என் குடும்பமே பார்த்துக்கட்டும்..” என்றாள் கண்ணீர் வடிய. அவளை நெருங்கிய ஷைலு...,

“மினி, உன்னால உன்னோட ப்ரிதீவ்வை மறக்க முடியுமா..? உங்க காதலை..”

“நிறுத்து ஷைலு... எது காதல்..? ப்ரிதீவ்வோட எரிச்சல் உணர்வா.. அதுக்கு பேர் காதலா...? அவனோட கோபம், பொய், எல்லாத்துக்கும் மேல பழிவாங்குற எண்ணம், இதான் காதலா...? சொல்லு..”

“அவனை உன்னால மறக்க முடியுமா மினி..? அவன் என்னை பழிவாங்க தானே அப்படி செஞ்சான்.!. அவனே சொன்னானே.. ஆரம்பத்துல அப்படி நினைச்சாலும்..”

“ஏய் நிறுத்துடி..” என்றாள் நிலா.. உன்னோட காதல் உன்னை எந்த நிலைமையில கொண்டு வந்து நிறுத்தியிருக்கு..? அது புரியாம.. அடுத்தவளுக்கு பஞ்சாயத்து பண்ண வந்துட்டா.. முதல்ல உன்னோட லைஃபை சரி பண்ணுற வழியை பாரு, அது சரியாச்சுன்னா, தன்னால அவ பிரச்னையும் சரியாகும்.. இப்போவாது சொல்லித் தொலை, உனக்கும் ஜனாவுக்கும் என்ன தான் பிரச்னை..? எதையாவது சரி பண்ண முடியுமான்னு பார்ப்போம்..”

“என் விஷயத்துல எதையும் சரி பண்ண முடியாது நிலா.. விட்டுடு..”

“அதை நாங்க பார்த்துக்குறோம். இவ்ளோ தூரத்துக்கு நீ வந்துருக்கேன்னா, பிரச்னை ஏதோ பெருசுன்னு தெரியுது ஷைலு.. நீ

சொல்லு.. என்ன தான் நடந்துச்சு..? உன்னோட வேதனையை அவருக்கு புரிய வைக்க உனக்கு தெரியலை.. அதனால நாங்க அவரோட பேசி பார்க்குறோம். புரிய வைக்கிறோம்.. உன் லைஃபை சரி பண்ண, கடைசியா ஒரு முயற்சி பண்ணுறோம்.. சொல்லு ”

“ப்ளீஸ் நிலா.. அவருக்கு புரிய வைக்க முடியாது.. எனக்கு அசிங்கமா இருக்கு.. என்னால எதையும் சொல்லவும் முடியலை.. சொல்லணும்னு நினைச்சாலே அவமானமா இருக்கு.. விட்டுடுங்க.. என் தலையெழுத்து போல ஆகட்டும்..”

கடுப்பான மினி “என்னடி.. உன் வாழ்க்கைக்காகதான் நாங்க பேசிட்டு இருக்கோம் .. ஆனா நீ என்னடான்னா, சரி பண்ண முடியாது.. அவமானமா இருக்கு, அசிங்கமா இருக்கு, சொல்ல முடியாதுன்னு கதை விட்டுட்டு இருக்கே.. அப்படி என்ன, அவர் உன்னை ரேப்பா பண்ணிட்டாரு..? ரொம்பதான் வித்தை காட்டிட்டு இருக்கே..” என்றவள் கத்தி ஓய..

“சீ என்ன பேசுற மினி.. ஜனா அண்ணாவை போய்...! ஏய் லூசு நீ சொல்லித்தான் தொலையேன், எங்க கற்பனை எல்லைத் தாண்டி போகுது” என்ற நிலா, ஷைலஜாவின் பதிலை எதிர்ப்பார்க்க.. அவளோ பேச வார்த்தையை தேடுபவள் போல இருக்க..கடிகாரத்தின் டிக் டிக் என்ற ஓசை,ஷைலுவின் எண்ணத்திற்கேற்ப பின்னோக்கி காலத்தை கடக்க நினைத்தது.

தலைகுனிந்தபடி அங்கு நிலவிய அமைதியை கிழித்தெறிந்தாள் ஷைலஜா “ஆமா அதை தான் செஞ்சார் போதுமா..?” என்று மின்னாமல் முழங்காமல் மொத்தமாய் இடியை இறக்கினாள் ஷைலஜா.. பேச்சே இல்லாமல் திகைத்துப் போய் நின்றார்கள் நிலாவும் மினியும்...!

கண்ணீரை யாரும் கவனிப்பது இல்லை..
சோகத்தை யாரும் கவனிப்பது இல்லை..
வலியை யாரும் கவனிப்பது இல்லை..
தவறுகளை மட்டும் எல்லோருமே கவனிப்பது ஏன்..?

சர்ச் வாசலை வந்தடைந்த ஜனாவின் மனது குழம்பிய குட்டையாக தவித்தது. கோவில் வளாகத்தில் நிலவிய அமைதி.. அவன் நிம்மதியை கேள்விகளால் அலைக்கழித்தது. ஃபாதர் சொன்னபடி சிஸ்டரை போய் பார்க்க மனம் இல்லாதவனாய் தவித்தான்.

இதுவரை தான் செய்தது எதுவும் தவறு இல்லை என்ற எண்ணம் அழுத்தமாக நிலைக்கொண்டு இருந்தது.., இப்போது அது கொஞ்சம் ஆட்டங்காண துவங்கியது. ‘ஃபாதரே தவறு என்று அர்த்தம் வருவது போல தானே பேசுறார்.. அப்போ நான் செய்தது தப்பா..? ஷைலு என் மனைவி தானே.. அவளை நான் அடைந்தது எந்த விதத்தில் தப்பாகும்...?அன்னிக்கு அவளுக்கும் அதில் விருப்பம் இருந்த மாதிரி தானே இருந்தா..!’

என்று நினைக்கும்போதே கூடவே தான் செய்ததும் நினைவு வர.. ’நான் என்ன பண்ணுவேன்..? அவளுக்கு என் மேல இருந்த கோபத்துல, அவ பாட்டுக்க, என்ன செய்யுறோம், என்ன பேசுறோம்னே தெரியாம, என்னை வெறுப்பேத்துற மனநிலையில, அறிவிழந்தவ போல நடந்துக்கிட்டாளே..! அதெல்லாத்தையும் பொறுத்துக்கிட்டு , முதல்ல பேசி பார்க்கலாம்னு தானே நானும் நினைச்சேன்..!

ஆனா அவ கொஞ்சம் கூட குற்ற உணர்ச்சியே இல்லாம, ஏறுக்குமாறா பேசுனதால தானே நான் தப்பா முடிவெடுத்தேன்.. எனக்கு சமமா அவளும் தானே தப்பு செய்திருக்கா.! நான் யாரையுமே குற்றம்சாட்டலையே..? அப்படியிருந்தும்.. ஃபாதர் என்னைத்தானே தப்பா நினைக்கிறார்.. ஏன்..?’ என்று தனக்குள்ளேயே யோசித்து களைத்தவன், மாதா கெபி முன் முழந்தால் இட்டான்.

அவனின் கண்கள் மாதாவின் சொரூபத்தை வெறித்தாலும், நேரம் செல்ல செல்ல உள்ளம் தெளிவு பெற ஆரம்பித்தது. ‘சரி, ஃபாதர் சொன்னது மாதிரி சிஸ்டரை போய் பார்ப்போம்.அவங்ககிட்டேர்ந்து, ஃபாதர் நமக்கு என்ன சொல்ல வருகிறார்னு புரிஞ்சுக்கப் பார்ப்போம்.’ என்று முடிவெடுத்து சிஸ்டரை பார்க்க கிளம்பினான்.

லிட்டில் ஏஞ்சல்ஸ் வளாகத்தை அடைந்தவனுக்கு, சிஸ்டர், ஹோலி ஏஞ்சல்ஸ் கான்வென்டில் இருக்கிறார் என்ற தகவலும், இவனை அங்கே வர சொன்னார் என்ற செய்தியும் தெரிவிக்கப்பட.. ஹோலி ஏஞ்சல்ஸ் கான்வென்ட் நோக்கி நடந்தான்.

அது பெண்கள் மறுவாழ்வு இல்லம். தன்னை ஏன் அங்கே வர சொன்னார் என்ற கேள்வியுடன் அங்கே சென்றவன்.. அனுமதி கேட்டு உள்ளே நுழைந்தவுடன்..

“டாடி..” என்று காலை கட்டிக்கொண்ட மழலையின் செயலில் திகைத்து நின்றான்.

“கெவின்.. அது உன்னோட டாடி இல்லை.. நீங்க போய் விளையாடுங்க.” என்று சிஸ்டர் அன்னி அந்த குழந்தையிடம் கனிவாக சொல்லிவிட்டு “ஜனா, உள்ளே வாப்பா” என்றவரின் முகம் புன்னகையை குடியமர்த்தி இருந்தது.

சிரிப்புடன் அவர் எதிரே அமர்ந்தாலும், அவன் பார்வையோ கெவின் ஓடி மறைந்த திசையையே பார்த்துக்கொண்டு இருந்தது. அவன் கவனத்தை கலைக்கும் விதமாக...

“ஜனா, உன் லைஃப் எப்படி போகுது.. உன் வைஃப் நலமா..? இங்கே கூட்டிக்கிட்டு வரணும்னு உனக்கு தோணவே இல்லைல்ல..” என்று ஆதங்கத்துடன் கேட்டவரை சங்கடமாக பார்த்தான்.

“இட்ஸ் ஓகே.. சொல்லுப்பா என்ன விஷயம்?” என்றவரின் பார்வையே பல கேள்விகளைக் கேட்க.. குழப்பத்துடனே, ஃபாதர் கொடுக்க சொன்ன செக்கை கொடுத்தவனின் பார்வை, மீண்டும் கெவின் போன திசையை பார்த்துவிட்டு...

“சிஸ்டர்.., அந்த பையன் யாரு.. என்னை ஏன் அப்பான்னு கூப்பிட்டான்...?”

“அவனா.. உன்னை மாதிரி தான் அவனும், கடவுளின் குழந்தை.. இப்போ நாலு வயசு ஆகுது.. ஆறு வயசு ஆனதும் உங்க கான்வென்ட்டுக்கு வந்துடுவான்...”

“ஆனா ஏன் என்னை..”

சோகமாக அவனை பார்த்தவர் “அதுவா.. விவரம் புரியாத வயசு... இங்கே நிறைய பெண்கள் இருக்கோம்.. சோ அவனுக்கு அம்மா தேவைப்படலை... இப்போ கொஞ்ச நாளா ஏனோ அப்பா மேல ஆர்வம்.. ரொம்ப அரிக்க ஆரம்பிச்சான். அவனை சமாளிக்குறதுக்காக, இன்னைக்கு வருவார்னு யாராவது சொல்லி இருப்பாங்க.. சரியா நீ வரவும், நீதான்னு நினைச்சு இருப்பான்.. தனக்குன்னு அப்பா, அம்மா.. குடும்பம் எதுவும் இல்லைன்னு போக போக புரியும்.. ஏன் நீ கூட அப்படி தானே இருந்த..!”

அவர் சொன்னதும், அவனது சிறுவயது மங்கலாக கண்களில் தெரிய.. முகம் இறுக “இப்படியொரு பிள்ளையை அனாதையாக விட, இவனை பெத்தவங்களுக்கு எப்படி மனசு வந்துச்சு..?”

“ஜனா., அவன் அனாதைன்னு யார் சொன்னது..? அவனுக்குன்னு ஒரு

குடும்பம் இருக்கு.”

சிரிப்புடன் “அது நம்ம இல்லம் தானே சிஸ்டர்..? இந்த உலகத்திலேயே பெரிய குடும்பம் அதுதான்..!”

கனிவாக அவனை பார்த்தவர் “இல்லை ஜனா, அவனுக்கு நிஜமாவே குடும்பம் இருக்கு.”

திடுக்கிட்டவனாக “அப்புறம் ஏன்... அவன் இங்க..?”

“ஹூம்.. விதி. வேற என்ன சொல்ல.. இவன் அம்மா இருக்காளே.., அவளோட அப்பாதான் அவங்க ஊரிலேயே பெரிய மனுஷர். இவ ஒரே பொண்ணு.. ரொம்ப செல்லம்.. கெவினோட அப்பா ஏதோ கவர்ன்மென்ட் வொர்க்கர் போல.. அவர் அந்த ஊருக்கு போனப்போ, இவ வீட்டுல கொஞ்ச நாள் தங்கி இருந்துருக்கார்... காதல் வந்துடுச்சு..

காதல் தான் எதையும் யோசிக்காதே.. விளைவு கர்ப்பம்.. விஷயம் தெரிஞ்சவன்.. வீட்டுக்கு வந்து முறைப்படி பொண்ணு கேட்குறேன்னு சொல்லிட்டு, கம்பியை நீட்டிட்டான்.. இவனோட அம்மா காத்திருந்து பார்த்துருக்கா, ஆள் வரலை. கர்ப்பத்தையும் முடிஞ்ச வரைக்கும் மறைச்சு, இனி முடியாது என்ற நிலைமையில.. கெவின் அப்பாவை தேடி கிளம்பி, இங்கே வந்துட்டா.

அவளுக்கு அவன் கொடுத்தது ஏமாற்றமே.. பிள்ளைக்கு நான் அப்பா இல்லைன்னு ஒரே வார்த்தையில சொல்லிட்டான்.. தற்கொலை பண்ணிக்க போனவளை காப்பாற்றி இங்கே கொண்டு வந்தாங்க.. பிள்ளைக்காக வாழ சொன்னோம்.. சொன்னதை தப்பா புரிஞ்சிக்கிட்டா போல.. குழந்தை பிறக்குற வரைக்கும் ஜடம் போல இருந்தா.. பிள்ளை பிறந்ததும் தூக்குல தொங்கிட்டா..” என்றவரின் கண்களில் கண்ணீர் கரை தட்டி நின்றது.

அவர் சொன்ன விஷயத்தின் அதிர்வு தாங்காமல் “ஏன் அப்படி செஞ்சாங்க...? கெவினை பத்தி ஒரு நிமிஷம் கூட நினைச்சுப் பார்க்கலையா..? இவனை விட்டுட்டு சாகுறதுக்கு எப்படி மனசு வந்துச்சு..?”

“ம்ம்ம்.. அவதான் எப்பவோ செத்துட்டாளே ஜனா.. கெவினோட அப்பா எப்போ அவ மனசை கொன்னாரோ, அப்போவே அவ செத்துட்டா.. அவ உடல் எப்போ செத்தா என்ன.. சொல்லு.. பாதிக்கப்பட்ட மனசு எதையும் நினைக்காது.. பிள்ளையை மட்டும் எப்படி நினைக்கும்...?”

“சிஸ்டர்...”

“ஜனா... காதல் உணர்வு பூர்வமானதுன்னு ஏன் சொல்லுறாங்க.? உணர்வு அடிபட கூடாதுன்னு தான்.. சரி வா, ஃபாதர் இந்த இல்லத்தை உனக்குச் சுற்றி காட்ட சொன்னார்..” என்றவருக்கு மறுப்பாக தலையசைத்தான். அவனுக்கு தான் செய்த செயலின் வீரியம் கொஞ்சம் கொஞ்சமாக புரிய துவங்கியிருந்தது. நிஜத்தை எதிர்நோக்க பயந்தவனாக மறுக்க..

அவன் முகத்தை உற்றுப் பார்த்தவர் “சொல்லு ஜனா, என்ன விஷயம்..? நீயே சொல்லுவேன்னு ஃபாதர் சொன்னார், உன்னைப்பத்தி பேசுறப்போ, அவரோட குரல்ல நடுக்கம் இருந்துச்சு, என்ன விஷயம்..?”

“சிஸ்டர் அது வந்து..” என்று தயங்கியவனை பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க.. மெல்ல தன்னை திடப்படுத்திக்கொண்டு நடந்ததை சொல்ல ஆரம்பித்தான்.. தனக்கும் ஷைலுவுக்கும் உருவான காதலும், அவளது முதிர்ச்சியில்லாத மனது தனக்கு தந்த பயத்தையும்... அவள் எடுத்த திடீர் கல்யாண முடிவும், அதனால் ஏற்பட்ட குழப்பமும்.. அச்சமயத்தில் அவள் தன்னுடையவள் ஆகிவிட்டால், அதற்குப்பிறகு தன்னையே மணந்து கொண்டு, குழப்பங்களிலிருந்தும் தெளிந்து விடுவாள் என்ற எண்ணத்தில்.. தான் அவளை அடைந்ததையும் சுருக்கமாக.. தேவையானதை மட்டும் சொல்ல... அவன் சொல்லி முடிக்கும்வரையில் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்த சிஸ்டர், சிறிதுநேரம் அப்படியே பேச்சே வராமல் இருந்துவிட்டு, மெல்ல

“ஜனா, சில விசயங்களை அனுபவம் புரிய வைக்கும் அளவுக்கு வார்த்தைகள் புரிய வைப்பது இல்லை. வா..” என்று கூப்பிட்டவருக்கு பதில் சொல்ல தெரியாமல் அவரை பின் தொடர்ந்தான்.

அந்த இல்லத்தில் இருப்பவர்கள் பெரும்பாலும், வாழ்க்கையில் கைவிடப்பட்டவர்களே. அவர்கள் சுயதொழில் செய்யும் இடத்திற்கு கூட்டிப் போய், அவர்கள் செய்த கைவினைப் பொருட்களையும், அவர்களின் வாழ்க்கை நிலையையும், அவர்களுக்கு நேர்ந்த பாதிப்பையும் ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டே வர.. மனம் வாட பார்த்துக்கொண்டு இருந்தவனுக்கு, ஒரு பெண்ணின் அலறல், வயிற்றில் ஈட்டியை பாய்ச்சும் உணர்வைக் கொடுத்தது.. மரணஓலம் போல அது மனதை பிசைந்தது.

“சி...சிஸ்டர் யார் அது..? இப்படி கத்துறாங்களே, என்ன ஆச்சு..?”

என்றவனுக்கு பதில் சொல்லாமல்..

அங்கே இருந்த பெண்ணிடம் “கவிதா.., மேனகா எழுந்துட்டான்னு நர்ஸ் கிட்ட சொல்லி அவங்களை அங்கே கூட்டிக்கிட்டு போ, நான் டாக்டருக்கு போன் பண்ணுறேன்” என்றவர் ஜனாவிடம்

“ஜனா, வா ஆபீஸ் ரூமுக்குப் போவோம்..” என்றவர்.. அவன் பதிலை எதிர்பாராமல்.. அவசரமாக போனவர், டாக்டருக்கு போன் செய்து வர சொல்லிவிட்டு, அவனை கூர்மையாக பார்த்தபடி...

“அந்த பொண்ணை பத்தி தெரியணுமா ஜனா..? என்ன தெரியணும்..? ஆண்களின் வக்கிரபுத்தியோட அளவு தெரியணுமா..? அவளுக்கு நேர்ந்தது கேங் ரேப்.. அதான் மனநலம் பாதிக்கப்பட்டு இருக்குறா. அவளோட பொழுதுகள் எல்லாமே தூக்கத்துல தான் போகுது, மீறி எழுந்தா இப்படித்தான் அலறிக்கிட்டே இருப்பா..” என்று அவர் சொல்லி முடிக்கும் முன் உள்ளே வந்த கவிதா..

“சிஸ்டர்.., நர்ஸ்கிட்ட சொல்லிட்டேன்.. அவங்க போறேன்னு சொன்னாங்க. உங்களையும் வர சொன்னாங்க..” என்றவள் ஜனாவிடம் திரும்பி...

“அண்ணா.., உங்களுக்கு காஃபி வேணுமா..” என்று கேட்டவளுக்கு மிஞ்சி மிஞ்சி போனால் பதினாறு வயசு கூட இருக்காது. அவளது புன்னகை நிறைந்த முகமே மனசை பறிக்க.. ம்ம்ம் என்பது போல தலையசைத்துவிட்டு, பேச்சை மாற்றும் விதமாக சிஸ்டரிடம்

“இவ சின்னப் பொண்ணா இருக்குறாளே.. அப்படின்னா லிட்டில் ஏஞ்சல்ஸ்ல தானே இருக்கணும்..?” யோசனையாக கேட்டான். காரணம், அங்கே அவள் வேலை செய்துக் கொண்டு இருந்ததை பார்த்ததால் இந்த கேள்வி எழும்பியது.

“அவளும் பாதிக்கப்பட்ட பெண் தான்.. இங்கே வந்து எட்டு மாசம் தான் ஆகுது. படிக்குற பொண்ணு.. மழைக்குன்னு ஒரு வீட்டுல ஒதுங்கினா, அந்த வீட்டிலிருந்த அறுபத்தியைந்து வயசு வெறி பிடிச்ச மிருகம் இவளை சீரழிச்சிடுச்சு.. போலீசுக்கு போயும் நீதி கிடைக்கலை.. இவ தப்பான பொண்ணுன்னு, பணம் பேசிடுச்சு.. அப்புறம் என்ன.. மானம் தான் பெருசுன்னு, குடும்பமும் இவளை ஒதுக்கிடுச்சு.. போக்கிடம் இல்லாம இங்கே வந்துட்டா.. சின்ன பொண்ணுல்ல.. அதனால பாதிப்புலேர்ந்து சீக்கிரமே தேறிட்டா..”

வேதனையில் மனம் வலிக்க... குரல் கரகரக்க "இவங்கல்லாம் நார்மல் லைஃபுக்கு வர முடியாதா .. சிஸ்டர்?"

"ஏன் வராம.. அதுக்குத்தானே நாங்க இருக்கோம்.. அந்த மேனகா இங்கேயே, எனக்கு அடுத்து, இந்த இடத்திற்கு வரலாம்.. ஏன் என்னை விட, இந்த இல்லத்தை சிறப்பா நிர்வகிக்கலாம்.. இவங்களுக்கு காலம் தான் சிறந்த மருந்து ஜனா.."

"சிஸ்டர்.., இவங்களுக்கு கல்யாணம்.. குடும்பம்..?"

"கடவுள் அருள் இருந்தா.. கவிதா மாதிரி பெண்களுக்கு கல்யாணம் நடக்கலாம்.. ஆனா பாதிக்கப்பட்ட இது போன்ற பெண்களை ஏத்துக்குறதுக்கு, எத்தனை ஆண்கள் தயாரா இருக்காங்க சொல்லு? கதையில தான் அது சாத்தியம்.. இந்த இல்லத்தோடயே முடிந்துப்போன பெண்களோட வாழ்க்கை தான் இங்கே அதிகம், ஜனா..

அதிலும் மேனகா.. ரொம்ப கஷ்டம். என்ன தான் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினாலும், இனி வரப் போற நாட்களில் ஒரே ஒரு நாள்.. ஒரு நிமிஷமாவது தனக்கு நடந்த கொடுமையை மறக்க முடியுமா..? இல்ல நிம்மதியா தூங்க தான் முடியுமா? அவளால எல்லாத்தையும் மறைச்சுட்டு வாழ முடியுமே தவிர.. மறந்து வாழுறது ரொம்ப கஷ்டம்.. பொண்ணுங்க மனசு அப்படி..

அதனால தான் மனைவியை கூட, அவளோட விருப்பம் இல்லாம அவளை அடைஞ்சா, அதை கற்பழிப்புன்னு சொல்லுறாங்க.. ஆண்களுக்கு தாம்பத்யமா தெரியுறது, பெண்களுக்கு வேதனையா போகுது.. ஆண்களுக்கு அது பத்து நிமிஷ தேவை.. ஆனா பெண்களுக்கு, அது ஆயுள் கால தண்டனையா மாறிடுது." என்று நிறுத்தியவர்...

அவனை கடுமையாக பார்த்து "அதைத்தான் நீ தாம்பத்யம் என்ற பேருல ஷைலுவுக்கு கொடுத்துக்கிட்டு இருக்க ஜனா.. இப்போ சொல்லு.. ஃபாதரால இதை எப்படி உனக்கு புரிய வைக்க முடியும்..? எங்க எல்லோருடைய மனசையும் நொறுங்க வச்சுட்டியே ஜனா..!

இயேசு சொன்ன கதையில வருவது போல, வழி தவறிய இளைய மகனை அரவணைக்குற தந்தையோட நிலைமையில தான் ஃபாதர் இப்போ இருக்கார்...
அதனால தான் உனக்காக பேச ஷைலுகிட்ட போய் இருக்கார். இதை

உங்கிட்ட சொல்ல தெரியாம தான், உன்னை இங்கே அனுப்பியிருக்கார்..

போ ஜனா.. ஷைலுவோட வேதனை என்னன்னு இப்போ கொஞ்சமாவது புரிஞ்சு இருக்குமே.. நீ பாவமன்னிப்பு கேட்க வேண்டியது இறைவன்கிட்ட இல்ல.. ஷைலுகிட்ட.. போ..” என்றவர், அந்த இடத்தை விட்டு விலகி வெளியே போனார்.

பேச வார்த்தை இல்லாமல், தான் செய்த தவறின் விஸ்வரூபம் இடியாய் இறங்க.. தளர்ந்த நடையுடன் இல்லத்தை விட்டு வெளியேறினான்.

பெண் மனதை போல புதிரானது வேறெதுவும் இல்லை. எப்போது எப்படி மாறும் என்று படைத்தவனாலேயே கணிக்க முடியாது.. புதிரானது மட்டுமல்ல குழப்பம் நிறைந்ததும் கூட.. ஜனாவுடனான திருமணத்திற்கு முன்னர் தனக்கு நடந்தவைகளை தன் தோழிகளிடம் தொடர்ந்து பகிர்ந்த ஷைலுவின் நிலை அன்றும் இன்றும் இப்படித்தான் இருந்தது .

தான் சொன்ன ஒரு வாக்கியத்தால் அதிர்ச்சியில் உறைந்த தோழிகளிடம், நடந்தவைகளை ஆதியோடந்தமாக நினைவுகூர்ந்து சொல்லத் தொடங்கினாள் ஷைலஜா .

ஜனாவை வேண்டாம் என்று நினைத்து.. ப்ரிதீவ்வுடன் நிச்சயம் நடந்தது. எல்லாமே நியாயம் என்று நினைத்து, அதையே தனக்கு நல்லது என்றும் நம்பிய ஷைலுவின் மனது.. இப்போது கல்யாண பத்திரிக்கையை பார்த்ததும் நிலையில்லாமல் தவித்தது.

தன்னைச்சுற்றி தங்கைகளின் ஆர்ப்பாட்டமும்.. பெற்றவர்களின் சந்தோஷமும் அன்னியமாக தெரிந்தது. அதுவரை உறுத்தாத ப்ரிதீவ்வுடன் நடந்த நிச்சயம்.. பத்திரிக்கையை கையில் வாங்கியதும்.. தன் மேலேயே அருவருப்பான உணர்வாக மாறியது.

அங்கே இருக்க பிடிக்காமல்.. தன் அறைக்கு வந்தவள், மேஜை முன் அமர்ந்து பத்திரிக்கையை பார்த்தவளின் முகம் சுருங்க... ‘ப்ரிதீவ்’ என்ற பெயரை பார்த்தவள்.. பேனாவால் அந்த பெயர் தெரியாதபடி கிறுக்கிவிட்டு.. அதையே பார்த்தபடி இருந்தவளின் கைகள் தன்னிச்சையாய் ஏதோ கிறுக்க ஆரம்பித்தது.

தாயின் அழைப்பு கவனத்தைக் கலைக்க.. பத்திரிக்கை முழுவதும் ‘ஷைலஜா- ஜனார்த்’ என்று கிறுக்கி இருப்பதை பார்த்தவளின் முகம்

வெட்கத்தையும் புன்னகையையும் அப்பிக்கொள்ள.. போனை எடுத்துக்கொண்டு மாடிக்கு வந்தவள்.. மினியை அழைக்க..

“ஏய் என்னடி.. இந்த நேரத்துல போன் பண்ணுறே..? என்ன கல்யாண கனவா..” என்றாள் மினி விளையாட்டு தொனியில்.

“மினி.., நான் தப்பு பண்ணிட்டேன்..”

“என்னடி தப்பு பண்ணினே..? நீ தப்பு பண்ணலைன்னா தான் ஆச்சரியம். இப்போ என்ன செஞ்சு தொலைச்ச..?” மினி சலிப்புடன் கேட்டாள்.

“போடி.. எல்லாத்துக்கும் நீதான் காரணம். எல்லாமே தப்புதான்.. இந்த நிச்சயம்.. கல்யாணம், எல்லாம் தப்பு.. நீ என்னை ரொம்ப குழப்பி விட்டுட்ட.. இன்னொருத்தன் கூட நான் எப்படி..? இங்க பாரு மினி, இது சரி வராது..”

மினி கடுப்பாக “சரிதான்.. அடங்கவே மாட்டியா.. உனக்கு என்னதாண்டி கேடு...? படுத்துற.. இப்போ போய் தூங்கு.. எதுவா இருந்தாலும் காலையில பேசிக்கலாம்..”

“இல்ல.. நாளைக்கு அவரை பார்க்க போறேன்..”

“எவரை.. வேணாம் ஷைலு.. கடுப்பேத்தாதே.. ஏதாவது லூசுத்தனமா செஞ்சே.. உங்க வீட்டுல சொல்லிடுவேன்.. இனி உன்கூட மாரடிக்க என்னால முடியாது..”

மினியின் மிரட்டலை கேட்டதும் ‘சே இவகிட்ட ஏன் சொன்னேன்..? இவளுக்கு காதலும் பிடிக்காது, என்னோட ஜனாவையும் பிடிக்காது.. இவ சொல்லி சொல்லியே தப்புத்தப்பா எல்லா முடிவையும் எடுக்குறேன்.. இப்போ ஏன் தான் இவளுக்கு போன் பண்ணினேனோ..? நாளைக்கு மாமாவை பார்த்துட்டு வந்து அப்புறமா இவகிட்ட பேசிக்கலாம்’ என்று தன் மனதுக்குள் திட்டம் போட... ஷைலுவின் அமைதி மினிக்கு குழப்பத்தை கொடுக்க

“இங்க பாருடி.. நான் சொன்னது புரிஞ்சுதா.. நாளைக்கு ஈவ்னிங் மீட் பண்ணலாம், இப்போ எதையும் யோசிக்காம தூங்கு..” என்றவளை சமாளித்து போனை வைத்த ஷைலு, தன் திட்டத்திலிருந்து சிறிதும் பின் வாங்கவில்லை.

மறுநாளே முடிவு செய்தது போல ப்ரிதீவ்வுக்கு போன் செய்து, அன்று

சந்திக்க வருவதாக சொன்னவள், ஜனாவுக்கும் போன் செய்ய.. அவன் காட்டிய கோபம் சிரிப்பையே வரவைத்தது. அவன் செய்த தவறை அப்படியே மன்னிக்கும் மனம் இல்லாமல், கொஞ்சம் விளையாடி பார்ப்போம் என்ற எண்ணத்துடன், அவனுக்காக அவன் அப்பார்ட்மென்ட் வாசலில் காத்திருக்க..

முகம் இறுக வந்தவன்.. பார்வையில் எவ்வித சந்தோஷமும் இல்லாமல்.. இன்னதென புரியாத உணர்வில் 'வா' என்றும் சொல்லாமல் சென்றவனை பின் தொடர்ந்தாள். மனமோ 'சரிதான், கோவிச்சுக்க வேண்டியது நான் தானே.. ஆனா இவன் முறுக்கிக்கிட்டு நிக்குறான் பார்' என்று நினைத்தபடி வீட்டினுள் நுழைந்தவள்..

அதுவரை இருந்த எண்ணம் மாறி, ஏதோவொன்று அவன் முகத்தை பார்க்க விடாமல் செய்ய.. ஜனாவோ.. சோபாவில் அமர்ந்தபடி அவளையே இமைக்காமல் வெறித்தான்.

"நிஜமாவே என்னை மறந்துட்டியா ஷைலஜா..?" என்று குரல் அடைக்க கேட்டவனை வியப்பாக பார்த்தவள்.. வந்த சிரிப்பை அடக்கியபடி..

"இங்க பாருங்க.. உங்களுக்கோ என்னோட குடும்பத்தை பிடிக்கலை.. ஆனா எனக்கோ அவங்க இல்லாமல் எதுவும் இல்லை, அதான் வேற வழியில்லாம.." என்று பையில் இருந்த பத்திரிக்கையை எடுத்து அவன் முன்னே நீட்ட...

மனதின் வலி முகத்தில் தெரிய.. அதை கையில் வாங்காமல் "நிஜமாவே என்னை வேண்டாம்னு முடிவு பண்ணிட்டியா..? உன்னால இன்னொருத்தனை கல்யாணம் பண்ணிக்க முடியுமா..? அதுவும் பத்திரிக்கை வரைக்கும் வந்தாச்சு. எப்படி ஷைலஜா..?"

"நான் என்ன பண்ண..? என்னோட முடிவு தான் தப்பா போய்டுச்சு.. அதான் பெத்தவங்க சொல்றதையாவது கேட்போம்னு முடிவு பண்ணிட்டேன்.."

"அப்போ என்னை விரும்பினது தப்பான முடிவுன்னு சொல்லுறியா..?"

'அய்யோ பாவம்.. என்ன இப்படி கேட்கிறான்? பேசாம உண்மையை சொல்லிடுவோமா.. இல்லை.. இல்லை என்னை அழ விட்டதுக்கு.. இன்னும் கொஞ்சம் ஓட்டுவோம்..!' என்று நினைத்தவளாக

"என் விஷயத்துல நீங்க அப்படித்தானே நடந்துக்கிட்டீங்க.. அதான்.."

“அதுக்கு..! இன்னொருத்தனை கல்யாணம் பண்ணிக்க முடிவு செய்வியா..?”

“ஏன் செஞ்சா என்ன..? என்னை அந்த முடிவை எடுக்க வைத்தது நீங்க தானே..?”

சட்டென எழுந்து அவள் அருகே வந்தவன், அவளை, சுவர்புறமிருந்த அவர்களின் போட்டோவின் பக்கம் திருப்பி.. “என்னடி, சும்மா நான் செஞ்சேன்... நான் செஞ்சேன்னு சொல்லுற.. இந்த போட்டோவை பாரு.. இன்னொருத்தன் கூட இப்படி நெருக்கமா உன்னால இருக்க முடியுமா..?” என்றவனின் கண்கள் கலங்க ஆரம்பிக்க...

‘காலம் முழுக்க எனக்கு நீதானேடா... அப்புறம் நெருக்கத்துக்கு என்ன குறை’ என்று மனதுக்குள் ஓடவிட்டவள்... கிண்டலாக

“அதான் தாலி செண்டிமென்ட் இருக்கே.. புருஷன்கிட்டே நெருக்கம் தன்னால வரப் போகுது..!”

“அப்போ நாளைக்கே என் விஷயம் தெரிஞ்சா..?”

சிரிக்காமல் இருக்க பாடுபட்டவள் “தெரியட்டுமே.. இந்த காலத்துல இதெல்லாம் சின்னச்சின்ன தப்புகள்தான்.. அதெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டார்... அவரை எப்படி சமாளிக்கணும்னு எனக்கு தெரியும்..”

அவள் பேசியது தாங்க மாட்டாதவன் போல தலையை பிடித்துக்கொண்டு அமர்ந்தவன்.. மெல்ல எழுந்து அடுக்களைக்குள் சென்று இரு ஜூஸ் டம்ளர்களுடன் வந்தவன், அவளிடம் ஒன்றை நீட்டி.. “தயவுசெய்து இதை குடிச்சிட்டு கிளம்பு.. உன்கிட்ட பேச எனக்கு விருப்பம் இல்லை..” என்றவன்.. தன் கையில் இருந்ததை ஒரே மடக்கில் குடித்துவிட்டு அப்படியே அமர..

“மா..” என்று ஆரம்பித்தவளை “நிறுத்து” என்று சிவந்த விழிகளால் முறைத்தபடி வெறுப்பாக சொன்னவனை கண்டதும், பயப்பந்து நெஞ்சையடைக்க.. தொண்டை வறண்டு விட, கையில் இருந்ததை கடகடவென குடித்தவள்... எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியாமல், சுவற்றிலிருந்த ஜனாவின் படத்தின் மேல் சாய்ந்து நின்று, கண்நிறைய தேக்கிய காதலுடன் ஒற்றை வார்த்தையாக “ஜனா..” என்றாள்.

அவளையும் படத்தையும் மாறி மாறி பார்த்தவன்.. மெல்ல அவள் அருகே

வந்து.. மூச்சுக்காற்று படும் தூரத்தில் நின்றபடி.. படத்தைக் காட்டி "என் கூட இப்படி நெருக்கமா இருந்துருக்கியே ஷைலஜா, முத்தம் கூட கொடுத்து இருக்குற.. இதெல்லாம் உனக்கு சின்ன தப்பா..? உன்னை கட்டிக்கிறவன் இதையும் சின்ன தப்பா எடுத்துப்பானா..?"

அவனின் வலி நிறைந்த விழிகள் சொன்ன கதை அவளுக்கும் வலிக்க... போதும் விளையாட்டு என்ற எண்ணத்தில்.. 'கல்யாணத்துக்கு அப்புறம் இதைவிட பெரிய பெரிய தப்பு செஞ்சு அவரை சரி கட்டிடுவேன்.. ஏன்னா என் புருஷன் நீதானே..' என்று சொல்ல நினைத்தவள்...

புன்னகையுடன் தன் விழிகளை அவன் விழிகளுடன் கலக்கவிட்டு "இந்த சின்னச்சின்ன தப்பு கூட இல்லைன்னா அது எப்படி காதல் ஆகும்..? கல்யாணத்துக்கு அப்புறம் பெரிய பெரிய தப்பு செஞ்சு.. இந்த சின்னச்சின்ன தப்புகளை மறக்க வச்சுடுவேன்.. ஏன்னா.." என்றவளின் வாயை பொத்தியவன்.. அடுத்த நொடியே அவளை தன் அணைப்பில் கொண்டு வர..

திடுக்கிட்டு அவனை பார்க்க.. அவன் கண்கள் சொன்ன செய்தியில் கட்டுண்டவளாக நிற்க.. தன் முகத்தை அவன் முகம் நெருங்குகிறது என்று உணர்ந்தும்.. மறுக்காமல், நெருங்கிய அவன் இதழ்களுக்கு வழி அமைத்துக் கொடுத்தாள்.

தன்னையும் மீறி அவன் அணைப்பில் புதைந்தவளை இறுக அணைத்தவன், அவளை முத்தத்தில் மூழ்க வைத்து.. அவளை முழுமையாக தன் ஆளுமைக்குள் கொண்டு வந்தவன், அவள் காதோரம் "இதுவும் உனக்கு சின்ன தப்பா..?" என்றவாறே மேலும் முன்னேறினான். அவன் கரங்கள் அத்து மீறுகின்றன என்று உணர்ந்தும்.. அதை தடுக்கத் தோன்றாமல்.. ஏன் என்று யோசிக்காமலேயே அவனுள் கரைந்துவிட துடித்தாள்.

அணைப்பு மேலும் மேலும் இறுக.. அவள் இதழ்களுக்கு விடுதலை கொடுத்துவிட்டு, தன் இரு கைகளாலும் அவள் தலையை தாங்கிப் பிடித்தபடி முகம் முழுவதும் முத்தத்தால் ஊர்வலம் நடத்தினான். கண்களை மூடி மயங்கிய நிலையில் நின்றவளை இமைக்காமல் பார்த்தவன், அவள் முகத்தில் தெரிந்த காதலில் உருகி, மேற்கொண்டு தொடர விருப்பம் இல்லாமல்....
'

'இவளால எப்படி இன்னொருத்தனை கல்யாணம் செய்ய முடியும்..? என்னை தவிர வேற யாரையுமே இவளால ஏத்துக்கவே முடியாதுன்னு

இந்த முகமே சொல்லுதே. உன் மனசை உனக்கு புரிய வைப்பேன்டி' என்று தனக்குள் முணுமுணுத்தவனாக,

"ஷைலஜா..இப்போ புரியுதா, என்னைத்தவிர வேற யாரோட அணைப்புக்குள்ளும் உன்னால இருக்க முடியாதுன்னு.. இது போதும்டி எனக்கு.. நீ போ.. உன்னால என்னை மறக்க முடியாது" என்றான் குரல் கரகரக்க.

மெல்ல கண்களை திறந்தவள், அவன் விழிகளில் தன் வாழ்வை தேடினாளோ என்னவோ.. இமைக்காமல் அவனையே பார்த்தவளின் மனதில் தோன்றியது ஒன்று தான், வார்த்தையால் சொல்ல முடியாத தன் காதலை அவனோடு வாழும் இந்த நொடி சொல்லுமே.. அது போதுமே என்று தோன்ற.. அவன் கைகளை எடுத்து தன் இடையினில் பதித்தாள்.

அவன் கொடுத்த முத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியுமா என்று அவள் முயற்சி செய்ய... அவன் அதை தொடர்புள்ளியாக்க தன்னால் ஆனதை செய்தான்.. அவளை இரு கரங்களால் அள்ளியவன், படுக்கையறையினுள் நுழைய.. அவள் கைகளால் அவன் கழுத்தை சுற்றி மாலையாக மாட்டி தன்னருகே இழுத்தாள்.

போதும் நீ சொன்னது என்ற பாவனையில் "சீ.. என்னடி சொல்லுற..! அண்ணாவுக்கு தான் அறிவு இல்ல.. உனக்கு எங்கேடி போச்சு.?. அவரை மட்டும் ஏன் குத்தம் சொல்லுற.. நீயும் சேர்ந்து தானே.. போடி, உன்கிட்ட நான் இதை எதிர் பார்க்கல.." என்றாள் மினி வெறுப்பாக. நிலாவோ கோபத்தில் முகம் சுளித்து, 'நீயா இப்படி.?.' என்பது போல பார்த்தாள் .

அவர்களின் கோபம் தவிப்பைக் கொடுக்க தலை குனிந்தபடி மெல்ல "நான் குடிச்ச அந்த ஜூஸ்ல போதை மாத்திரை கலந்திருந்தார்.." என்றாள் குற்ற உணர்வில் குரல் அடங்க..

அவள் சொன்ன செய்தி அதிர்வைக் கொடுக்க "வாட் என்ன சொன்ன..? போதை மாத்திரையா..? ஜனா அண்ணாவா..? என்னடி சொல்லுற.. நிஜமாவா?"

அதிர்வு நீங்காமல் திகைத்து போய் கேட்ட மினிக்கு 'ஆமாம்' என்பது போல தலையசைத்தவளை எரிச்சலாக பார்த்தவள்

திகைப்போடு கோபமும் பொங்க "சே என்ன மனுஷன் இவர்..

லோக்கல் ரௌடி மாதிரி.. நான் அன்னிக்கே உன்கிட்ட கேட்டேனே.. எப்படி அவனை கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சேன்னு.. என்கிட்ட அப்போவே சொல்லியிருந்தா, செருப்பை கழட்டி நாலு வாங்கு வாங்கி இருப்பேன்.. இப்போ புரியுது உன் கோபம்.. என்னடி நீ" என்று கோபத்தில் பொங்கினாள் மினி.

ஜனாவை அவள் திட்டுகிறாள் என்றதுமே ஷைலுவுக்கு கோபம் வர.. சீறலாக "போதும் நிறுத்துறியா..? வார்த்தையை யோசிச்சு பேசு.. ரொம்ப பேசிக்கிட்டே போற.. அவர் செஞ்சது தப்புதான்... ஆனா . நான் அவரோட பொண்டாட்டிதானே.. அப்படி பார்த்தா, அதுல என்ன தப்பு இருக்கு..? அவர் போதை மருந்து கொடுத்து என்னை அடைய நினைத்தாலும்... அது ஒண்ணும் என் விருப்பம் இல்லாம நடக்கலையே.. ஒருவகையில நானும் தானே உடன்பட்டேன். அப்புறமும் எதுக்கு அவரை திட்டுற ?"

"அடிப்பாவி.. என்னடி இப்படி பேசுற.. பிளான் பண்ணி போதைமருந்து கொடுத்து உன்னை மழுங்க வச்சு.. கிட்டத்தட்ட ரேப் பண்ணி இருக்கார்.. நீ அவருக்கு ஆதரவா பேசுற..!"

"அவர் என்னோட ஜனா, மினி. என்னைத்தவிர அவரை கோபிச்சுக்குற உரிமை வேற யாருக்கும் இல்லை.. அவர் நடந்துக்கிட்ட விதத்துல எனக்கு கோவம் தான்.. அது மாறாது.. ஆனா என்னால அதை மன்னிக்க முடியும்..., ஏன்னா அந்த தப்புக்கு நானும் துணை போயிருக்கேன்.. ஆனா அவர் என்னோட உணர்வை காயப்படுத்தியதை தான் மறக்கவும் முடியாம.. மன்னிக்கவும் முடியாம தவிக்கிறேன்."

"என்னடி இது... இவ்ளோ நடந்தும் அவருக்கு ஆதரவா பேசுற..? அவரை திட்டுற இவகிட்ட எரிஞ்சு விழுற.. உனக்கு அதைப்பத்தி கோபம் இல்லைன்னா.. இதைவிட கோபம் வர அளவுக்கு என்ன தாண்டி செஞ்சார்..? " நிலா திகைப்புடன் கேட்டாள் .

"ஷைலு.. நான் உனக்காக தான் கோபப்படுறேன்.. நிலா சொல்லுற மாதிரி, இந்த விஷயத்துனால உனக்கு கோபம் இல்லைன்னா.., இதுக்கும் மேல வேற என்ன தான் நடந்துச்சு...? இதுவே எனக்கு தலை வெடிக்கிற மாதிரி இருக்கு.." என்றாள் மினி தவிப்பாக.

இது என்ன வகையான காதல் என்ற மலைப்பு, மினியையும் நிலாவையும் திகைக்க வைத்தது. ஒரு ஆணால் தன் காதலியை இதைவிட பெரிதாக என்ன அசிங்கப்படுத்தி விட முடியும்..? அதுவரையில் சிறந்த காதலனாய் தெரிந்த ஜனா, ஒரே நொடியில் நல்ல மனிதன் என்ற தன்மையை கூட இழந்து விட்டானே என்ற ஆற்றாமை பொங்கிக்கொண்டு வந்தது மினிக்கு.

ஷைலுவின் குழப்பமான மனநிலை வாட்டியது..ஒரு பக்கம் ஜனாவின் தவறை எண்ணியெண்ணி தன்னையும் நோகடித்து கொள்கிறாள், ஆனால் அதே சமயம், அது தவறே இல்லை என்று ஜனா சார்பாகவும் பேசுகிறாள்.. இது என்ன பைத்தியக்காரத்தனம்..! இப்படி தவிக்க வைப்பதுதான் காதலா...! இதையே கேட்க சகிக்கலையே.. மேற்கொண்டு என்ன நடந்ததோ என்ற பயமும், முதல் நாள் பார்கவி பேசிய பேச்சும் நியாபகம் வர.. மனதிற்குள்ளேயே போராடினாள் மினி.

“ஷைலு.., போதும்டி.. நீ எதுவும் சொல்ல வேண்டாம்.. என்னால இதையெல்லாம் தாங்கிக்கவே முடியலை” என்றாள் தவிப்பாக

நிலாவோ ஷைலுவை ஆறுதலாக அணைத்தவள் “ஷைலு.., உனக்கு எப்படி ஆறுதல் சொல்றதுன்னு தெரியலை.. இதுவரைக்கும் நீ சொன்னதே ஜனா அண்ணா மேல கோபத்தை வர வைக்குது, ஆனா உன்னோட கோபத்துக்கு இது மட்டுமே காரணம் இல்லைன்னா.., அடுத்து என்னவா இருக்கும்னு யோசிக்கவே முடியலை.. இப்போ, நீ செய்தது அத்தனையும் நியாயம்னு தோணுது.. உங்க அம்மா சொன்னது சரிதான்... நீயே தான் இந்த பிரச்சனையை தீர்க்கணும். நானோ.. மினியோ.. எது சொன்னாலும் அது தப்பா தான் போகும்டி..”

பேசிக்கொண்டு இருந்த நிலாவை கண்கலங்க பார்த்தவள் “எனக்கே அது புரிஞ்சுது, அதான் யார்கிட்டேயும் ஷேர் பண்ணிக்க முடியாம இருந்தேன்.. என்னோட ஜனாவை மத்தவங்க தப்பா நினைக்க கூடாதுன்னு நினைச்சேன்.., ஆனா இப்போ.. எனக்கே மன அழுத்தம் தாங்கலை, மனசு ரொம்ப பாரமா இருக்கு, உங்ககிட்டயாவது சொன்னா தேவலைன்னு தோணுது நிலா..” என்றாள் பரிதாபமாக

“ஷைலு.., எங்ககிட்ட சொல்லுறதுனால உன்னோட பாரம் குறையும்னா சொல்லு.. ஆனா இதுல நாங்க ஏதும் செய்யுறதுக்கு இல்லன்றதையும் நியாபகத்துல வச்சுக்கோ.. நாங்க வெறும் ஆறுதல் தான் சொல்ல முடியும்டி..”

“ம்ம்ம்..” என்று தலையசைப்பை மட்டும் கொடுத்தவளின் மனம்..,

மீண்டும் அன்றைய நாளுக்கு போக.. வாய் மெல்லிய குரலில் தன் பாரத்தை இறக்கி வைத்தது.

மென்மையான பஞ்சுப்பொதியை போன்ற மெத்தை.. தன் மென்மையால் ஷைலுவின் உடல் அமைப்புக்கு ஏற்றார்போல் உள்வாங்கி அணைத்துக்கொள்ள.. மென்மையை ரசித்தவளாக புரண்டு படுத்தவளுக்கு ஏதுவாக அந்த மெத்தையும் வளைந்து கொடுத்தது.

கலையும் தூக்கத்தை கலைக்க மனம் இல்லாதவளாக.. அருகிலிருந்த தலையணையை அணைத்து முகம் புரட்டியவளுக்கு.. ஏதோ ஒன்று உறுத்த.. மெல்ல கண்களை திறந்து பார்த்தவளின் கண்கள் அறையை முழுவதுமாக வலம் வர, தான் இருந்த இடமும் உறைக்க... திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள்.

நேரத்தை பார்க்க அது நான்கு என்று காட்டியது.. 'சே எப்படி இப்படித் தூங்கினோம்' என்று குழம்பியவளுக்கு, தான் இருந்த நிலையும், நடந்தவைகளும் ஒவ்வொன்றாக நியாபகம் வர.. முதலில் தன்னையறியாமல் கண்களில் கண்ணீரை வடிய விட்டவளின் முகம், பின் கொஞ்சம் கொஞ்சமாக வெட்கத்தை கடன் வாங்கியது.

மனமோ 'இதுல என்ன தப்பு, என் புருஷன் தானே.. அவர் சொல்லுவது போல, கல்யாணம்கிறது இந்த உலகத்துக்கு ஒரு அறிவிப்பு தானே.. இப்போ நான் மிசஸ் ஜனாவாக்கும்' என்று முணுமுணுப்பாக சொன்னவளுக்கு, நடந்த எதுவும் தப்பாகவே தோன்றவில்லை.. 'இதுவும் காதலை வெளிப்படுத்துவதில் ஒரு வழி, அவ்வளவுதானே' என அந்த நொடியில் அவள் தன்னை ஜனாவின் மனைவியாக தான் உணர்ந்தாள்.

அவளை பொறுத்த வரைக்கும்.. அவர்களின் நீண்ட நெடிய குடும்ப வாழ்க்கைக்கான இனிய தாம்பத்யம் அன்று தொடங்கி விட்டது. இனி, தான் சொல்லாமலே ஜனாவின் மனதில் இருக்கும் சஞ்சலமெல்லாம் விலகி இருக்கும்.. என்ற நினைப்பில், பாடலை முணுமுணுத்தவாறே குளியலை முடித்து, மாற்றுடை இல்லாததால் , பழைய உடையையே அணிந்து வந்தவளுக்கு..

அறையை விட்டு வெளியே வர முடியாமல் வெட்கம் பிடுங்கி தின்றது.. தடுமாறி வெளியே வந்தவள்.. அவனுடைய முகத்தைப் பார்க்கும் திராணி இல்லாமல், சுவற்றில் சாய்ந்து பார்வையை வேறு பக்கம் ஓட விட.. ஜனாவோ அவளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

‘பேப்பர் கிழிபடும் சத்தம் கேட்க.. ஜனாவின் புறம் பார்வையை திருப்பினாள்.. ஷைலு வைத்திருந்த பத்திரிக்கையை கண்கள் இடுங்க பார்த்தவாறே.. ஒவ்வொன்றாக எடுத்து கிழிக்க தொடங்கியிருந்தான்.

ஷைலுவோ முகம் மலர “மாமா” என்று அழைக்க வாய் எடுத்தவளுக்கு, வெட்கத்தில் வார்த்தை வராமல், வெறும் காற்று வெளிப்படும் ஓசையாக வெளிவர.. கவனத்தை அவள் புறம் திருப்பியவன்..

“என்ன, பத்திரிக்கையை கிழிக்கிறேன்னு பார்க்குறியா...? இதுக்கு மேல இந்த இன்விடேஷனுக்கு ஏதாவது தேவை இருக்கா.. என்ன?” என்று முகம் இறுக கேட்டவனின் முகத்தை கூட பார்க்காமல்.. தலையை அப்படியும் இப்படியுமாக ஆட்டியவள், வெட்கத்தில், முழுவதுமாக சுவர் பக்கம் திரும்பி நிற்க...

அது அவனுக்கு, இன்னமும் அவள் தன்னை உதாசீனப்படுத்துகிறாள் என்ற உணர்வைக் கொடுக்க “ஓ இப்போ கூட கல்யாணத்தை நிறுத்த தோணலையா..? இல்ல, கொஞ்சம் முன்னே நடந்ததே, அதுவும் கூட உனக்கு சின்ன தப்பா..?” என்றவனின் வார்த்தைகளில் இருந்த வெறுப்பு அதிர்வைக் கொடுக்க, அதுவரை இருந்த வெட்க போர்வை விலகி முகம் மாற திரும்பி அவனை கேள்வியாக பார்த்தாள்.

“என்னடி பார்க்குற.. கோவம் வந்தா யோசிக்க கூட மாட்டியா..? என்ன முடிவு வேணா எடுப்பியா..? என்ன தைரியம் இருந்தா, பத்திரிக்கையோட என்னை தேடி வருவ..? என்னை பார்த்தா.. உனக்கு கையாலாகாத நாய் மாதிரி இருக்கா? ஓ..இப்போ புரியுது. உன்னையே சுத்தி சுத்தி வந்ததால, என்னை நாய்னு நினைச்சுட்ட போல..”

“இங்க பாருங்க மா..”

“ஏய் நிறுத்து.. எதுவும் பேசாத... அடிச்சு பல்லைக் கழட்டிடுவேன்..என்னவெல்லாம் பேசிட்ட நீ... எப்படி.. எப்படி.. என்னை காதலிச்சது உனக்கு சின்ன தப்பா.. போ... இப்போ போய் சொல்லு.. என் கூட படுத்து எழுந்துட்டேன்னு.. இதையும் சின்ன தப்புன்னு சொன்னாலும் சொல்லுவ” என்று நக்கலாக சொன்னவனை அதிர்வுடன் பார்த்தவள்..

குரல் நடுங்க “எ..எ..ஏன் இப்படி அசிங்கமா பேசுறீங்க..?”

“நான் பேசுறது அசிங்கமா..? அப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நடந்தது, அசிங்கம் இல்லையா...? உன்னையெல்லாம் இந்த ரெண்டு

வருஷம் விட்டு வச்சேன் பாரு, அதுதான்டி நான் செஞ்ச தப்பு.. பொண்டாட்டி பொண்டாட்டின்னு நான் வாயால சொன்னது உன் மனசுல பதியல.. அதான் சுலபமா கழட்டி விட பார்த்துட்ட.. இல்ல"

"வேண்டாம் ஜனா.. ரொம்ப தப்பா பேசுறீங்க கொஞ்சம் நான் சொல்லுறதை பொறுமையா கேளுங்க.."

"என்னத்த கேக்குறது...? மனசு முழுக்க காதலோட, என் மனைவியா வாழ வான்னு சொன்னா,ஆயிரம் சட்டம் நட்டமா பேசுவே இல்ல.. இப்போ தம்மாத்துண்டு பாதி போதை மாத்திரையை கொடுத்தவுடனே, என் கையைப் பிடிச்சு உன் இடுப்புல வச்சு படுக்கைக்கு இழுத்துட்டு போவியா...? என்னவோ லிவிங் டு கெதரான்னு அன்னைக்கு அப்படி கத்தினே.. இன்னிக்கு எப்படிடி தாலி இல்லாம என் கூட வாழ்ந்தே..? இப்போ மட்டும் அறிவு என்ன புல்லு மேய போயிருந்துதா...?"

தன் போக்கில் பேசிக்கொண்டு இருப்பவனை வெறித்துப் பார்த்தவளுக்கு, தன் துக்கத்திற்கான காரணம் புரிய.. சுள்ளென கோபம் தலைக்கேற.. அவன் சட்டையை கொத்தாக பிடித்தவள்...

"சொல்லுடா.. எனக்கு போதை மருந்து கொடுத்தியா..?".

"ஆமா கொடுத்தேன்.., என்னடி பண்ணுவ..? நீ இன்னொருத்தனை கல்யாணம் பண்ண போறேன்னு பத்திரிக்கையை எடுத்துட்டு வருவ... அதை வைச்சுக்கிட்டு, என்னை சாம்பிராணி போட்டுட்டு இருக்க சொல்லுறியா...? அதுக்கு வேற ஆளைப் பாரு.. இப்போ என்ன செய்வ..? என்னை விட்டா உனக்கு வேற என்ன கதி இருக்கு..? இப்போ நான் கட்டப் போற தாலிக்கு, என்கிட்ட தொங்கிக்கிட்டு தானே நிக்கணும்.. உனக்கு வேற வழி இருக்கா என்ன?" திமிராக கேட்டான்.

இனிய தாம்பத்யமாக,தான் அதுவரை உணர்ந்த விஷயம், இப்போது வயிற்றை பிரட்டி வாந்தியெடுக்கும் உணர்வை கொடுக்க.. முகம் அருவருப்பை காட்டியது. மனமோ...

'தான் காதல்னு நினைச்சு ரசித்த ஒரு நிகழ்வு, அவனுக்கு காமத்தை தணிக்கும் செயலா..? இப்படி பேசுறவன், அந்த நேரத்துல காதலையா உணர்ந்திருப்பான்...?' என்ற எண்ணமே மனதை நொறுங்க செய்துவிட.. கோபத்தோடு நிமிர்ந்தவள்....

"உன் மனசுல இருக்குற வக்கிரத்துக்கு எல்லாம் நான் பலியாக

முடியாது.. என்னை என்னன்னுடா நினைச்ச.? நான் ஏன் உன்னை தொங்கிட்டு நிக்கணும்..? அப்படி நிப்பேன்னு நினைச்சா, அது உன் முட்டாள் தனம்.. அது இந்த ஜென்மத்துல நடக்காது... நீ கட்டப்போற தாலி ஒண்ணும் எனக்கு தேவையில்லை.. அதைவிட தூக்கு கயிறு பெட்டர்.. அதனால நீ கட்டப்போற தாலியை நீயே வச்சு அழகு பாரு.. நான் வரேன்..”

“ஏய்.. எங்க போறே...? உன் வீட்டுக்கு தானே.. நானும் உன் கூட வரேன்.. வா.. ரெண்டுபேருமா உன் வீட்டுக்கு போவோம்... உன்னைப் பெத்தவங்ககிட்டேயே நான் நியாயம் கேட்கிறேன்.., உங்க பொண்ணு என் கூட பொண்டாட்டியா வாழ்ந்துட்டு.. இப்போ என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு ஏமாத்துறா.. இது தான் நீ பொண்ணு வளர்த்த லட்சணமான்னு உன் அப்பனை பார்த்து கேட்கிறேன்.. அதுக்கப்புறம் பாரு..அவனே உன் கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளுவான்..”

எரிமலையாக கோபம் பொங்க.. ஒருநொடி அதிர்ந்து நின்றவள், தலையை சிலுப்பி “சீ போடா.. அவங்க என் அம்மா அப்பா.. நான் சொல்றதை தான் நம்புவாங்க.. ரோட்டில் போற நாய் அடிக்கிற சேற்றுக்கு என்ன மரியாதையோ, அதே தான் உனக்கும் அங்கே கிடைக்கும்..” என்றவள் பையை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட ..

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல், திகைப்புடன் யோசித்தவன்.. மின்னலெனத் தோன்றிய யோசனையில் “போ ஷைலஜா போ. நான் நாய் தான்.. சேறு தான்.. அந்த சேத்துல என் கூட உருண்டவ தானே நீ.! நாய்க்கு நாய் தான் ஜோடியாக முடியும்.. நான் வாயால சொன்னா, உன் அப்பன் நம்ப மாட்டான்.. ஆனா இந்த விடியோவை பார்த்தா நம்புவான் இல்ல..?” என்றபடி எழுந்து சென்று, டிவியின் அருகிலிருந்த செல்போனை எடுத்து ஆட்டிக்காட்ட.. அதிர்ச்சியுடன் அவனை பார்த்த ஷைலு..

“ஜனா.., என்ன சொல்லுறீங்க..?” என்றாள் குரலே எழும்பாமல்..

“பின்ன.. உன் நெஞ்ஜாழம் எந்த அளவுன்னு தெரிஞ்சவன் ஆச்சே.., அதான் எல்லாத்தையும் ரெக்கார்ட் பண்ணினேன்” என்று கோணல் சிரிப்போடு சொல்ல

அருவருப்பில் உதடு பிதுங்க.. கண்ணீர் ஆறாக வடிய “போதும் ஜனா.., இதைவிட பெருசா என்னை அசிங்கப்படுத்த முடியாது.. உங்களை காதலிச்சதுக்கு, எனக்கு இந்த தண்டனை ரொம்ப அதிகம்.. ப்ளீஸ் அதை

கலைச்சுடுங்க..” என்றாள் கெஞ்சலாக.

“சரி கலைச்சுடுறேன்.. அப்போ நாளைக்கே நம்ம கல்யாணம்.. அது முடியட்டும், அடுத்த நிமிஷமே கலைச்சுடுறேன்.. என்ன சொல்லுற..?”

“ஜனா.., இவ்ளோ நடந்ததுக்கு அப்புறமும் நமக்கு கல்யாணம் நடந்தா, நம்மளால நிம்மதியா வாழ முடியுமா..?” இயலாமையுடன் கேட்டாள்.

“கல்யாணம் முடிஞ்சா எல்லா பிரச்சனையும் தன்னால சரியாகிடும்.. எனக்கு நீ வேணும்.. இந்த கல்யாணம் நடந்தே ஆகணும்.. உனக்கு டைம் கொடுக்க என்னால முடியாது..”

“என்னாலயும் இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்க முடியாது..” என்றாள் தீர்மானமாக

“உன் திமிர் அடங்கவே அடங்காதா..? முதல்ல குழந்தை மாதிரி பேசுறதை நிறுத்து, இல்ல, எந்த அப்பனுக்கும் கிடைக்காத பாக்கியம், உன் அப்பனுக்கு கிடைக்கட்டும். பெண்ணோட லட்சணத்தை கண் குளிர பார்க்கட்டும்.. வா போவோம்” என்றவன் எழும்ப.. பயத்தில்.. யோசிக்க வழியில்லாமல் பட்டென அவன் காலில் விழுந்தவள்...

“வேண்டாம் ஜனா.. அவங்க தாங்க மாட்டாங்க..செத்துடுவாங்க.அப்படி செஞ்சுடாதீங்க... ப்ளீஸ்” என்று கெஞ்சத் துவங்கினாள்.

“சாகட்டுமே.. நானும் தாண்டி செத்துக்கிட்டு இருக்கேன்.., உனக்கு அது தெரியலையா..? நீ என் வாழ்க்கையில இல்லன்னா செத்துடுவேண்டி. அதனாலதான் இப்படி தரம் தாழ்ந்து போய்க்கிட்டு இருக்கேன்.” என்று வெறுப்பாக சொன்னவன், காலைப் பிடித்திருந்தவளை உதற முயல.. அவன் காலோடு இழுபட்டு நகர்ந்தவள்..

“ப்ளீஸ் ஜனா.. போகாதீங்க.. அப்படி செஞ்சீங்கன்னா நான் செத்துடுவேன்.. உயிரோடவே இருக்க மாட்டேன்” என்று கதறி அழுதவளை மனம் வலிக்க பார்த்தவன்...

“என்ன மிரட்டுறியா...? அப்போ வா, நான் ரெடி.. சேர்ந்தே சாகலாம்..” என்றான் பிடிவாதமாக.

அப்படியே அவன் காலை கட்டியபடி “ப்ளீஸ் ஜனா.. ப்ளீஸ்” என்று கதற.. கொஞ்சமும் அசையாமல் நின்றவனின் கண்களில் இருந்தும்

சரம்சரமாக நீர் வடிந்தது.

அழுவதால் பலன் இல்லை என்று உணர்ந்தவள் “சரி ஜனா.. நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்.. கொஞ்சம் டைம் கொடுங்க, விஷயத்தை வீட்டுல சொல்லி.. இந்த பத்திரிக்கை அடிச்ச நாளிலேயே நம்ம கல்யாணத்தை வச்சுக்கலாம்.. இன்னைக்கு நீங்க வீட்டுக்கு வர வேண்டாம்.. ப்ளீஸ்ப்பா” என்று அவன் காலிலே தலையை பதித்து அழ ஆரம்பிக்க.. குனிந்து அவளை தூக்கியவன்.. அவளை அணைத்தபடி

“என்னால காத்திருக்க முடியாது ஷைலஜா., எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன். நாளைக்கு நமக்கு கல்யாணம்.. நீ வந்துடு” என்று அறிவிப்பு போல சொல்ல...

திடுக்கிட்டு “இல்லை இல்லை.. ப்ளீஸ் ஜனா.., நாளைக்கேன்னா வீட்டுல என்ன சொல்ல முடியும்...? எப்படி சம்மதிப்பாங்க..?”

“அவங்க சம்மதத்தை யார் கேட்டாங்க..?எப்படி எப்படி...உன்னை என்கிட்டேயிருந்து பிரிக்க பார்ப்பாங்களா அவங்க..?என்ன தைரியம்..? இப்போ அதையே நான் அவங்களுக்கு செய்யுறேன்.. நீ நாளைக்கு வர.. இல்ல இந்த வீடியோவை உன் அப்பன் பார்ப்பான்..” என்று சொல்லி முடிக்கவும்.. மீண்டும் அவன் காலில் விழுந்தவள்..

“ஜனா.., எல்லா தப்பும் நான் தான் செஞ்சேன். அவங்க என்ன பண்ணினாங்க...? வேண்டாம்.. ப்ளீஸ்.. என் தங்கச்சிங்களை கொஞ்சம் நினைச்சு பாருங்க. எங்க அம்மா இதையெல்லாம் தாங்க மாட்டாங்க. ப்ளீஸ் ஜனா, அவங்க என்னை ரொம்ப நம்புறாங்க..” என்று கதற

அவளை உதறி தள்ளியவன் “போதும் ஷைலஜா.., நானும் தான் உன்னை நம்பினேன், அதுக்கு நீ என்ன பரிசு கொடுத்த..? இந்த பத்திரிக்கையா..? இந்த விஷயத்துல.. என் முடிவுல எந்த மாற்றமும் இல்லை.. அதனால அழுது டைம் வேஸ்ட் பண்ணாதே. ஒண்ணு, நாளைக்கு நம்ம கல்யாணம் நடக்கணும்.. இல்ல உன் மொத்த குடும்பமும்... அதை என் வாயால சொல்ல விரும்பலை. எது நடக்கணும்னு நீயே முடிவு பண்ணு..” என்றவன், அவள் மேல் ஒரு பையை தூக்கிப்போட

அங்கேயே கொஞ்ச நேரம் கதறி அழுதவள்.. பின்பு ஒரு முடிவெடுத்தவளாய் கண்களை துடைத்துவிட்டு.. “நான் உங்களை கல்யாணம் பண்ணிக்கிறேன்..” என்று உணர்வே இல்லாமல்

சொல்லிவிட்டு, அவன் முகத்தைக் கூடப் பார்க்க விரும்பாதவளாய் கிளம்ப...

“நில்லு ஷைலஜா.., அந்த பையை எடுத்துட்டு போ. அதுல உனக்கு புடவை நகை எல்லாம் இருக்கு.. நாளைக்கு வீட்டை விட்டு கிளம்பி வரும்போது, நீ மட்டும் வந்தா போதும்.. உன் வீட்டுலேர்ந்து வேற எந்தப் பொருளையும் எடுத்துட்டு வரக் கூடாது, உன் செல் கூட வேண்டாம்..” என்றவன் கொஞ்சம் யோசித்துவிட்டு.. “வேணும்னா உன் புக்ஸை மட்டும் எடுத்துக்கோ..” என்றவனை பார்வையால் வெறித்துவிட்டு.. பையோடு வாசல் கதவை நெருங்க...

“ஷைலஜா..” என்றவனை நின்று கேள்வியாக பார்க்க... விரைந்து அவள் அருகே வந்தவன் “சாரி, எனக்கு வேற வழி தெரியலை.. அதான் இப்படி செஞ்சுட்டேன்” என்றவன்.. அதே வேகத்தில் அவளை அணைக்க.. மரம் போல எந்த உணர்வும் இல்லாமல் நின்றிருந்தவளின் கன்னத்தில் முத்தத்தை பதித்தவன், விலக மனசில்லாமல் விலகி “நாளைக்கு ஃபிரெஷ்ஷா வா.. பை” என்று வழியனுப்பி வைத்தான்.

மேற்கொண்டு பேச வார்த்தை வராமல் விக்கி விக்கி அழுபவளுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியாமல்... திகைத்துப்போய் இருந்தாள் நிலா.

மினியோ “சே என்ன மனுஷன்..! இவ்ளோ கீழ்த்தரமா வீடியோ எடுத்து மிரட்டுற அளவுக்கு கேவலமா போவாரா..? என்னால நம்பவே முடியலை.. ஜனா அண்ணாவான்னு இருக்கு... நான் அப்பவே,அவர் உன்னை மிரட்டுறாரான்னு கேட்டேனே.. சொல்லியிருந்தா இந்த கல்யாணத்தை நடக்கவே விட்டிருக்க மாட்டேன்.. என்ன ஒரு பொறுக்கித்தனம்?” என் பொங்கினாள்.

“மினி.., ஜனா அப்படி எந்த வீடியோவும் எடுக்கலை. அவர் சொன்னப்போ என்னால யோசிக்க முடியலை. எனக்கிருந்த குழப்பத்துல பயந்துட்டேன்.. அப்புறம் யோசிக்கும்போதுதான்,அவர் பொய் சொல்லுறார்னு புரிஞ்சிக்கிட்டேன்.. ஏன்னா அவர் வீட்டுக்குள்ளே வந்ததும், போனை டிவி பக்கத்துல தான் வச்சார். அது அப்படியே வச்ச மாதிரியே தான் இருந்துச்சு.. என்னை மிரட்டுறப்போ தான் திரும்ப அதை எடுத்தார்... அதுவும் இல்லாம.. ஜனாவுக்கு பொய் சொல்லி பழக்கம் இல்லை, அதை சொல்லும்போது இருந்த அவரோட தடுமாற்றம்.. இது எதுவுமே அந்த நேர பயத்துல, என் கவனத்துல பதியலை.. கொஞ்சம் யோசிக்கவும், எல்லாமே புரிஞ்சிடுச்சு..”

“அப்புறமும் ஏன் ஷைலு கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்ட..?”

“என்னை வேற என்ன செய்ய சொல்லுற..? பொண்ணு ஓடி போயிட்டான்ற ஒரு அசிங்கம், எங்க வீட்டுக்கு போதும்னு நினைச்சேன். நான் மறுத்திருந்தா, ஜனா அப்படியே விட்டுடுவாரா..? அவர் எந்த எல்லைக்கும் போவார்னு புரிஞ்சிடுச்சு... என்னை பெத்த பாவத்துக்கு அவங்களும் ஏன் வதைப்படணும்..? எந்த ஒரு தண்டனையும் என்னோடவே முடியட்டும்னுதான் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்..”

நிலா யோசனையாக “எனக்கு புரியலை ஷைலு.. முன்னாடி நடந்த விஷயத்துக்கும் கோபம் இல்லைன்னு சொன்ன.. சரி.. வீடியோ மிரட்டலும் பொய், அப்போ அண்ணா பேசிய பேச்சுன்னாலதான் உனக்குக் கோபம்னா... ஜனா அண்ணா அப்படி பேசலைன்னா தானே ஆச்சரியம்.. உனக்கு தான் அவர் கோபத்தைப் பத்தி தெரியுமே, அப்படியும் நீ இந்த அளவுக்கு போக காரணம் என்னன்னு சொல்லுடி”

“நிலா.. நான் எப்பவும் என் காதலை சீரியசா யோசிச்சு உணர்ந்தது இல்லை.. ஜனா மாதிரி, பார்த்த உடனே இவர் என் வாழ்க்கைன்னு ஆணி அடிச்சது போல சொன்னது இல்லை.. குறிப்பிட்ட நாள் அன்னிக்கு ஜனா வீட்டுக்கு போனப்போ.. ஜனா தான் என் வாழ்க்கை.. இது தான் காதல்னு முழுசா உணர்ந்து போனேன்..”

“என்ன தான் ஒரு பொண்ணுக்கு போதை மருந்து கொடுத்தாலும்.. அவ உலகத்தை மறக்கலாம்.. ஆனா உள்ளத்தை மறக்க முடியாது.. விருப்பம் இல்லாத கூடல்னா.. உடலால மறுக்க முடியாது, ஒத்துக்குறேன்.. உள்ளம்.. கொஞ்சம் கூடவா எதிர்ப்பு காட்டாது..? முகத்துல சின்ன சுளிப்பு கூடவா காட்ட முடியாது..?

அப்போ நான் நினைச்சது, இன்னும் என் நினைவில இருக்கு நிலா.. ‘நான் அவரோட மனைவி.. வார்த்தையால சொல்ல முடியாத காதலை.. வாழ்ந்து சொல்லுறேன்னு’ நினைச்சேன்.. பதிலுக்கு அவர் கொடுத்தது என்ன? காமமா?அப்போ என்னைப்பத்தி என்ன நினைச்சார்..? எங்க முதல் கூடலே பழி வாங்குறதுக்காகவா..?

மூச்சுக்கு முன்னூறு தடவை காதல்னு சொல்லி, காதலை சாகடிச்ச ஜனாவை விட.. முதல்ல காதலை முழுசா உணராமல், அதை உணர்ந்த அந்த நிமிஷமே.. காதலுக்காக என்னையே கொடுத்திருக்கேன்.. அப்போ என் காதல் தானே ஒசத்தி.. காதலுக்கும் காமத்துக்கும் வித்தியாசம் தெரியாதவனோட காதல் எனக்கு வேண்டாம்னு நான் நினைக்குறதுல

என்ன தப்பு..?

ஜனா அவரோட காதல்ல தோத்துட்டார் தானே.. ரெண்டு பேருமே ஜெயிச்சா தானே காதல்.. இந்தளவுக்கு என் மனசை நோகடிச்சிட்டு, அதை கொஞ்சமும் உணராம இருந்தா, எப்படி பொறுத்துக்க முடியும்..? எப்படி மறந்துட்டு மன்னிக்க தோணும்..?

செஞ்ச தப்பை உணராம.. ஒவ்வொரு நாளும் அவர், உனக்காக உனக்காகன்னு சொல்லும்போது, அய்யோன்னு கத்தலாமான்னு தோணியிருக்கு.. ஒவ்வொரு நாளும் வாழ்க்கை நரகமா தான் போயிருக்கு... இந்த நிலைமையில இதை தவிர வேற என்ன முடிவு எடுத்திருக்க முடியும்..?

இத்தனை நாளுல ஒரே ஒரு நிமிஷமாவது, ஜனா எனக்கு செய்ததை உணர்ந்திருந்தா போதுமே.! உண்மையான மன்னிப்பை வேண்டி, வாய் வார்த்தையால கூட வேண்டாம்.. ஒரு பார்வை பார்த்திருந்தா கூட.. கண்டிப்பா மன்னிச்சிருப்பேன்.. என் காதல் அவரை மன்னிக்க வச்சிருக்கும்.. ஆனா இதுவரைக்கும் அவர் தன் தவறை உணரலையே..!

இப்படியே தவிப்போட இன்னும் எத்தனை நாள் தான் எனக்குள்ளே நானே போராடி..போராடி... முடியலைடி. ஒரு மனுஷனுக்கு எதை வேணும்னாலும் புரிய வைக்கலாம், ஏன் காதலை கூட புரிய வைக்கலாம். ஆனா இந்த என் உணர்வை எப்படி புரிய வைப்பேன்...? அவர் காதலே பொய்யோன்னு தோணுது.. அந்த பொய்யான காதல் எனக்கு வேண்டாம்னு தான் அவரைப் பிரிய நினைச்சேன்...” என்று குமுறி அழுதவள், தன்னை தேற்றிக்கொண்டு,

“சாரிடி மினி... என் வாழ்க்கை... என் குழப்பம்னு..அதிலேயே மூழ்கி, என்னை சுத்தி நடக்குற எதையுமே பார்க்காம போயிட்டேன்.. எப்பவும் நீ என் கூடவே இருக்கணும்னு நினைச்சிருக்கேன்.. பாரேன்..இப்போ என்னோட வேதனையிலும் கூட உன்னை இழுத்து விட்டுட்டேன்..” என்றாள் பரிதாபமாக.

“ஷைலு.., இதுல உன்னோட தப்பு என்ன இருக்கு..? உன் இடத்துல நான் இருந்தாலும், இப்படித்தான் இருந்திருப்பேன் போல.. ப்ரிதீவ்வை காதலிச்சது, நான் யோசிச்சு எடுத்த முடிவுதான்.. இதுல உன்னை குறை சொல்ல என்ன இருக்கு..? என் அறிவு எங்கே போச்சு சொல்லு..”

“மினி.., எங்களுக்குள்ள நடந்த எந்த விவரமும் ப்ரிதீவ்வுக்கு தெரியாம..

நான் ஜனாவை புரிஞ்சிக்கணும்ன்ற கோபத்துல தான் அப்படி செஞ்சுட்டார்.. அது கூட நாங்க நல்லா வாழணும்ன்ற ஆதங்கத்துனால மட்டும்தானே.. அதனால நீ ஏன் அவரை தப்பா நினைக்கணும்..? மன்னிச்சுடேன்.."

"ஷைலு, இப்பவும் உனக்கு ஜனாவை மன்னிக்கிற மனசு இருக்கு, காரணம் யாரைக் கொன்னாவது உன்னை அடையணும்ன்ற அளவுக்கு வெறித்தனமான காதலால உன்னோட உணர்வை கொன்னு.. அது கூட புரியாம.. முட்டாள்தனமா அதை தான் காதல்னு நினைச்சு சுத்திக்கிட்டு இருக்கார். இத்தனை பிரச்சனையும் ஆரம்பிச்ச இடம், மடத்தனமா இருந்தாலும்.. அவரோடது உண்மையான காதல் தான்.. அதை இல்லைன்னு யாராலையும் சொல்ல முடியாது..

ஆனா ப்ரிதீவ்... காதல் ஆரம்பிச்சதே பழிவாங்குற மோட்டிவ்ல தானே... உனக்கும் ஜனாவுக்கும் நிகழ்ந்த முதல் உறவே பழிவாங்குற எண்ணத்திலான்றது தானே உன் வருத்தம்.. அதைக்கூட ஜனா பக்கத்துலேர்ந்து பார்த்தா, ஒரு நியாயத்தை சொல்ல முடியும்.

ஆனா, ப்ரிதீவ் என்னை பழிவாங்க நினைச்சதுல என்ன நியாயம் சொல்லுவ..? ஜனா, காதலை தான் உணரலை.. ப்ரிதீவ்கிட்டே காதலே இல்லை.. இல்லாத காதலை அவன்கிட்ட பிச்சை வாங்க சொல்லுறியா...? இனி இதைபத்தி பேசாதே.ஷைலஜா." என்று கடுமையாக சொல்ல

"மினி.." என்றவளை

"விட்டுடு ஷைலு. அவ வாழ்க்கைல அவ தான் முடிவு எடுக்கணும்" என்று நிலா சொல்லவும் அதே நேரத்தில் வாசல் மணி அழைக்க.. நிலா பதட்டமாக ஷைலுவிடம் "அண்ணா வந்துட்டாரா..?"

என்றவாறு கதவை திறந்தவள்.. ஃபாதரை பார்க்கவும்.. 'இவர் எங்கே இப்போ..?' என்ற யோசனையுடனே அவரை உபசரித்தவள்.. தபஸ் கால ஏற்பாடுகளை பற்றி பொதுப்படையாக பேசியவர்கள்.. பேச்சை வளர்க்க தெரியாமல்.. அப்புறம் அப்புறம் என்று இழுக்க.. தொண்டையை செருமியவர், "ஷைலஜா.., நான் ஜனா கிட்ட பேசிட்டு தான் வரேன், உன்கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்.." என்றதும்

நிலாவும் மினியும் கிளம்ப எத்தனிக்க "அவங்களும் இருக்கட்டும் ஃபாதர்"

“ஹோ சரி..” என்று தயங்கியவர் “ஷைலஜா.. ஜனா என்கிட்ட பாவ மன்னிப்பு கேட்க வந்தான்..” என்றார் நிறுத்தி நிதானமாக. அதை கேட்டதும், தன்னை மீறி அழத் தொடங்கினாள் ஷைலு.

அவளை கொஞ்ச நேரம் அழ விட்டவர் “போதும்மா.. இப்படி அழுதுக்கிட்டே இருந்தா பிரச்சனை தீர்ந்துடுமா..?”

“ஃபாதர்.. அவ... ஜனா அண்ணா..” என்று எப்படி சொல்வது என்று தெரியாமல் நிலா இழுக்க..

“நிலா.., நீங்க எதையும் சொல்ல வேண்டாம். ஜனா எல்லாத்தையும் சொல்லிட்டான்.. இப்போ அவனுக்காக தான் பேச வந்திருக்கேன்..

ஷைலு.., இது வெளியே சொல்லுற விஷயம் இல்ல.. ஆனா அவன் என்கிட்ட சொல்லும்போது கூட, எவ்ளோ பெரிய பாவத்தை செஞ்சிருக்கான்னு அவன் உணரலை.. அப்படி உணர்ந்திருந்தா வெளியே சொல்லியிருக்க மாட்டான்... சொல்ற விஷயமா இது..?

ஒண்ணு மட்டும் சொல்லுறேன்.., அவன் உன்னை திரும்ப பார்க்க வரும்போது, தவறுகளை உணர்ந்த மனுஷனாதான் வருவான்னு, என்னால உறுதியா சொல்ல முடியும்.. அப்போ அவனை வெறுத்துடாதேமா ”

மினி கோபமாக “என்ன ஃபாதர் நீங்க..அவர் என்ன மன்னிக்கிற தப்பையா செஞ்சிருக்கார்...?”

“தப்புதான். கோபப்படணும்னா முதல்ல என் மேல கோபப்படுங்க.. நான் தானே அவனை வளர்த்தேன்... தெரியலைம்மா.. எனக்கு தெரியலை... அவன் மனசுக்குள்ளே, அன்புக்காக.. பாசத்துக்காக.. இப்படி ஒரு ஏக்கம் இருக்கும்னு எனக்கு தெரியலை... அது இப்படி அவனை ஆட்டி வைக்கும்னு நான் நினைக்கலை... ஆசிரமத்துல, ஜனாவை விட கவனிப்பு தேவைப்பட்ட பிள்ளைகள் நிறைய இருக்காங்க..

எப்பவுமே ஜனா எனக்கு பிரச்சனையே இல்லாத பிள்ளை.. பார்க்கும்போது ‘சாப்பிட்டியா’ என்ற ஒரு வார்த்தையும், அதான் நல்லது கெட்டது போதிச்சிட்டோமே.. அதெல்லாம் மட்டுமே போதும்னு நினைச்சுட்டேன்.. அவன் மனசுல இப்படி ஒரு குறை இருக்கும்னு யோசிக்கலை..

அந்த பிள்ளைகளுக்கு செய்வது என் கடமைன்னு நினைச்சேன்.. இறை

ஊழியம் போதும்னு இருந்துட்டேன் போல.. அப்பாவா அன்பு காட்டலையோ.. ஏன் என் பிள்ளை மனசுல இருந்த ஏக்கம் எனக்கு தெரியல..?

அவன் சின்னதுல இருந்து கோவில் சார்ந்த பாய்ஸ் கான்வென்ட், காலேஜில் தான் படிச்சான்.. யார் கூடவும் ரொம்ப ஒட்டாம தான் இருந்தான், அப்போல்லாம் நான் அதை பெரிசு பண்ணலை.. ஏன்னா பணக்கார பிள்ளைகள் படிக்கிற இடம்.. அங்கே இவன் மட்டும் தனிச்சு இருந்திருப்பான்.

அவங்களும் இவனோட ஒட்டலை, இவனும் அவங்களோட சேரலை.. பொதுவா ஆஸ்ரமத்துல வளருற பிள்ளைகளுக்கு இருக்குற பிரச்சனை தானேன்னு, படிப்பு மட்டும் தான் முக்கியம்னு அறிவுரை சொல்லுவேன்.. அவன் மனசுல இருந்த வலி புரியலை...

படிப்பு முடிஞ்சவுடனே தெரிஞ்ச இடத்துல வேலை வாங்கித் தந்தேன். மூணு மாசம் வேலைக்கு போனவன், என்னால யார்கிட்டேயும் ஒட்ட முடியலைன்னு சோர்ந்து வந்தப்பவாவது,என்ன காரணம்ன்னு நான் யோசிச்சு இருக்கணும்.. கொஞ்ச நாள் வேலைக்கு போன்னு பிடிவாதமா சொல்லி இருக்கணுமோ? தெரியலைம்மா..

அவன் கம்பெனி ஆரம்பிக்குறேன்னு சொன்னதும், பேங்க் மூலமா லோன் கிடைக்க உதவி செஞ்சேன்.. அவனும் போராடி மேல வந்தான்.. அதுவே இப்படி தனித்தீவா.. தன்னைப்பத்தி மட்டும் யோசிக்கிற சுயநலவாதியா மாத்தி இருக்கும்னு யோசிக்காம போயிட்டேன்.. உன்னை காதலிக்கிறேன்னு சொன்னப்ப ரொம்ப சந்தோஷப்பட்டேன்.. அவன் வாழ்க்கையில் வந்த ஒரே பெண் நீ.. உன்னை தக்க வச்சுக்க இப்படி செய்வான்னு நான் நினைக்கவேயில்லை..” என்று நீளமாக பேசியவரின் கண்கள் தளும்ப..

பெண்கள் மூவருக்குமே கண்கள் கலங்கியது.. அதிலும் ஷைலுவுக்கு மனம் பதறியது.. ஜனா தன் சிறு வயது பற்றி ஒரு முறை கூட சொன்னது கிடையாது. எப்படி தனிமையிலே தவித்தானோ என்று நினைத்தவளுக்கு மேலும் அழுகை வர..

“ஷைலு.., ஜனா சுயம்பு மாதிரி.. தன்னைத்தானே செதுக்கியவன்.. இது நல்லது.. இது கெட்டதுன்னு அவனுக்கு கிடைச்ச அனுபவம் மூலமா தான், தன்னை வழி படுத்திக்கிட்டவன்.. என்னதான் அவன் அனாதையா இருந்தாலும்.. அவன் வளர்ந்த முறை கிறிஸ்துவம் தானே.. உன்னோட பழகினதுக்கு பின்னாடி, ஒரு முறையாவது தன்னை

அப்படி அடையாளம் காட்டியிருப்பானா..? அது கூட உன் மேல இருக்குற காதலால் தானே?

அவனுக்கு நல்லது கெட்டது சொல்லி தரக் கூட ஆள் இல்லை... உன்னோட விஷயத்துல அவன் செய்தது தப்புன்னு கூட அவனுக்கு தெரியலை.. என் மனைவி தானே, இதுல என்ன தப்புன்னு மட்டும் தான் யோசிக்கிறான்.. ” என்று சொல்ல

ஷைலுவின் கண்களில் ஒரு மின்னல் வந்து போனது.. “ஷைலுமா.., நான் கேட்குறேன்னு தப்பா நினைக்காதே.. அன்னிக்கு ஜனாவை அந்தளவுக்கு தூண்டிவிட்டது உன்னோட பேச்சு தானே.. அவனை பத்தி தெரிஞ்சும் ஏன் அப்படி செஞ்ச..?”

“அது நான் விளையாட்டா..”

“அவனோட ரெண்டு வருஷம் பழகியும்... அவனைப்பத்தி நல்லா தெரிஞ்சும், விளையாட்டுக்கு செய்தேன்னு சொன்னா எப்படிம்மா..?.”

அவளுக்கு ஆதரவாக மினி.. “ஃபாதர்.. அவளோட அந்த விளையாட்டுத்தனம் தான்., இதுவரை அண்ணா என்ன செய்தாலும் மன்னிச்சு ஏத்துக்க வச்சுது..”

“அந்த விளையாட்டு தாம்மா இவ்ளோ தூரம் கொண்டு வந்து விட்டிருக்கு.. இது தான் காதலா..? எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு.. எப்படி சொல்லுறதுன்னு தெரியலை.. கால மாற்றத்தை சுலபமா ஏத்துக்கிட்ட பொண்ணுங்க, எது நடந்தாலும் பாஸிங் க்ளவுட்னு சொல்லி, ஒரே வார்த்தையில எல்லாத்தையும் தூசியா ஊதிட்டு போயிடுறாங்க.. கட்டுப்பெட்டியா இருக்குற பொண்ணுகளுக்கும் இந்த மாதிரி பிரச்சனை இல்ல..

ஆனா வெளியே மாடர்ன் பொண்ணுன்னு சொல்லிக்கிட்டு.. மனசுக்குள்ள பண்பாடு, கலாச்சாரம்னு, ஒரே சமயத்துல ரெண்டு வண்டியில போற உன்னை மாதிரி பொண்ணுங்க தான் காலம் பூரா மறுகி சாகுறாங்க.. உங்க விளையாட்டுத் தனம்.. புரிதல் இல்லாத உங்க காதல்.. முதிர்ச்சி இல்லாத உங்க மனசு.. உங்க தனிமை.. இதெல்லாம் இன்னிக்கு உன்னை எங்கே கொண்டு வந்து விட்டு இருக்கு பார்த்தியா..?”

“ஃபாதர்.., நீங்க சொல்லுற அத்தனையும் ஒத்துக்குறேன்.. அவகிட்ட முதிர்ச்சி இல்லை தான்.. ஆனா அண்ணா மாதிரி, முன்னே வந்தா

முட்டுவேன், பின்னே வந்தா உதைப்பேன்னு இருக்கிற ஆளுக்கு, என்னத்த புரிய வைக்க முடியும்..? இப்போ கூட அவளோட துடிப்பை அவர் புரிஞ்சுக்கலை.. அவ மனசு, அவ உணர்வு, அவ காதல்.. இது எதையுமே அவர் புரிஞ்சுக்கலை. அன்பு காட்டுறேன்னு டார்ச்சர் பண்ணி, ஆளை கொன்னா எப்படி..?" மினி தன்மையாகவே கேட்டாள்.

"நீ என்னம்மா சொல்லுற.. மனசு வேற.. உணர்வு வேறயா..? இதுவரைக்கும் நான் ரெண்டும் ஒண்ணுதான்னு நினைச்சிருந்தேன்... ரெண்டும் ஒன்றுபட்டா தானே காதல். காதல்னா ஒருத்தரையொருத்தர் நோகடிப்பதா..? எல்லா முடிவுகளையும் அவசரத்துல எடுத்துட்டு, இப்படி சாவகாசமா உட்கார்ந்து அழுவுறதால என்ன லாபம்..? புரிதலே இல்லாத ஒண்ணை காதல்னு, தயவுசெஞ்சு சொல்லாதீங்க" என்றவருக்கு சொல்ல பதில் எதுவும் இல்லாமல் ஷைலு தலை குனிய..

"ஷைலுமா.. ஜனா செய்தது தப்பு தான், அதுக்காக போனதையே பேசி என்ன புண்ணியம்..? நான் உன்கிட்ட ஒண்ணே ஒண்ணு தான் சொல்லணும்.. உன்னால ஜனாவை மன்னிக்க முடியலைன்னாலும், தயவுசெய்து அவனை தண்டிச்சுடாதே..." என்றுவிட்டு எழுந்தவர்

"ஷைலஜா.., கேக்குறேன்னு தப்பா நினைக்காதேம்மா.. அன்பான குடும்பத்துல செல்லப்பொண்ணா பிறந்து.. பாசமான தங்கைகளுக்கு அக்காவா.. உணமையான தோழிகளோடு.. முழுக்க முழுக்க அன்பான சூழலில் வளர்ந்த உனக்கே.., ஜனாகிட்ட அன்பை பகிர்ந்துக்க தெரியலை..! அன்புன்ற வார்த்தையை.. வார்த்தையாக மட்டுமே கேட்ட ஜனா, அதை உனக்கு சரியா கொடுக்கலைன்னு நீ கோபப்படுறது நியாயமா..?" என பொட்டில் அடிப்பதை போல கேட்டுவிட்டு விடுவிடுவென நடந்தார்,

வாயில்வரை போய் அங்கேயே நின்றவர்.. "ஃபாதரா என் கடமைகளை ஒழுங்கா செஞ்சு இருக்கேன்னு எனக்கு ரொம்ப மனநிறைவு இருந்தது.. ஆனா இப்போ ஒரு தந்தையா தோற்று போயிட்டேன்னு நினைக்கும் போது ரொம்ப வருத்தமா இருக்கு" என்றவர், அதற்கு மேல் பேசாமல் கிளம்பினார்.

பேசினாலே தப்பாக போய்விடுமோ என்பது போல கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தவர்களை.. குழந்தையோடு வந்த பார்கவியின் வரவு, அவர்களின் அமைதியை கலைத்தது.. கொஞ்சநேரம் ஜனனியுடன் விளையாடிவிட்டு தோழிகள் கிளம்ப.. பார்கவி ஷைலுவிடம்

பிள்ளையை கொடுத்துவிட்டு.. நீண்ட நாள் பழக்கம் போல சமையலை ஆரம்பித்தார்.

பிள்ளை கையில் இருந்தாலும், அதன் மேலும் கவனம் பதியவில்லை... தன் தாய் தன்னுடன் பேசவில்லை என்பதும் உறைக்கவில்லை.. அப்படியே அமர்ந்து இருந்தாள் ஷைலு.. ஃபாதரின் பேச்சு மனசை உருக்கி இருந்தது.. அதையும் தாண்டி அவர் சொன்ன.., ஜனா தவறை உணர்ந்து வருவான் என்ற வார்த்தையையே வட்டமிட்டது மனம்.

அவள் மேல் ஒரு பார்வையை வைத்தபடி வேலை செய்தாலும், பார்கவியின் மனமும் அலைபாய்ந்துக் கொண்டிருந்தது.. பெண்ணின் வாழ்வு சரியாக வேண்டும் என்று மனம் ஈசனை துதித்தது.

ஏதோ ஒரு வகையில் பார்கவி, ஷைலு இருவரும் ஜனாவின் வரவை எதிர்நோக்கி இருந்தார்கள்.. நண்பகல் மூன்று மணிக்கு, பாறை போல இறுகிய முகத்துடன் வந்தவன்.. கதவை திறந்த பார்கவியை வியப்பாக பார்த்து திணறலாக "அத்.. அத்தை.. எப்போ வந்தீங்க..?"

"ம்ம்ம்.. அத்தையா..? என்ன புதுசா..? எல்லாம்... அந்த 'அம்மா'வே நல்லாத்தான் இருந்துச்சு.. அப்படியே கூப்பிடுங்க .. என் பிள்ளை வீட்டுக்கு வர, நான் யார்கிட்ட கேக்கணும்..? எப்ப வேணா வருவேன்.. எப்போ வேணா போவேன்.. நீங்க சாப்பிட வாங்க.." என்றவர் டைனிங் டேபிளை நோக்கி போக..

ஷைலுவோ ஆவலாக அவன் முகம் பார்க்க.. அவன் யாரையும் பார்க்காமல் "இல்லம்மா பசிக்கலை" என்றவன், வேகமாக அறைக்குள் சென்று.. அதே வேகத்தில் கதவையும் மூடிவிட.. மூடிய கதவை வெறித்து நோக்கினாள் ஷைலு.

28

ஆண்களின் புன்னகை ஆயிரம் வார்த்தை மறைத்தால்.. பெண்ணின் கண்ணீர் ஆயிரம் உணர்வுகளை மறைத்து வைக்கும்...

நாள்காட்டியின் வயிறு வேகமாக இளைத்ததே ஒழிய.. ஜனாவிடம் எந்த மாற்றமும் இல்லை. அவனுடைய குற்ற உணர்வு அவனை வாட்டி வதைத்தது. ஹோமுக்கு போய் வந்தபின் மனதிற்குள் நொறுங்கிவிட்டான்.. அங்கிருந்த பெண்களின் கண்களில், ஜீவனை தொலைத்த வலியை கண்டவனுக்கு.. இத்தனை நாட்களாக ஷைலுவின்

பார்வையிலிருந்த வலி என்னவென்று இப்போதுதான் புரிந்தது.

அவளை தன்னுடன் தக்கவைத்துக் கொள்ள, தான் செய்த செயல்கள்,அன்று நியாயமாக பட்டாலும், அவையே இன்று, அவன் எதிரே மாபெரும் குற்றமாக எழுந்து நின்று ஆயிரம் கேள்விகள் கேட்டது. என் மனைவி, என் உடைமை, என்று அவன் செய்த செயல்களின் பாரம் அவனை அழுத்தி எடுத்தது. அன்னி சிஸ்டர் சொன்ன மிருகத்துக்கும் தனக்கும் என்ன வித்தியாசம் என்று மறுகினான். தன்னைத் தானே மன்னிக்க இயலாதவனாய் குமுறினான்.

ஷைலுவை நேருக்குநேர் பார்க்கும் தைரியம் கூட இல்லாதவனாக தவித்தான். அவள் வாயால் கேட்கவில்லை என்றாலும்.. அவளது பார்வையே ஓராயிரம் கேள்விகளைக் கேட்குமே என்று மனம் புழுங்கியவன், அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான் இல்லை. தன் பேச்சை பார்கவியோடு மட்டுமே முடித்துக் கொண்டான். இத்தனைக்கும், அந்த வீட்டில் கலகலப்புக்கு கொஞ்சமும் பஞ்சம் இல்லை என்பதே உண்மை.

காரணம் சிந்துவும் ஸ்ரீஜாவும்.. 'மாமா' என்ற கூச்சலுடன் அதிரடியாக உள்ளே வந்தவர்கள்.. யோசிக்க ஒருநொடி கூட கொடுக்காமல், புயலாய் அவனை சுழற்றி அடித்தார்கள்.. அன்பைக் கொட்டி திணறடித்தார்கள்.. ஷைலுவிடம் சண்டைக்கு போனார்கள்.. ஜனனி யார் செல்லம் என்று சிண்டைப் பிடித்துக்கொண்டு சண்டை போட்டார்கள்..

ஒருத்தி 'இன்று பிட்சா வேண்டும்' என்றால் மற்றொருத்தி 'நோ மாமா, எனக்கு மெக்டோனால்ட்' என்று இவனை பிடுங்கி எடுத்து அலைக்கழிக்க...

அவர்கள் 'மாமா' என்று இழுத்தாலே, அலறும் நிலைமைக்கு போனான். இத்தனையும் தாண்டி.. அவைகளைனைத்தையும் ரசிக்கவும் ஆரம்பித்து இருந்தான்.. ஆனால் மனதின் குற்ற உணர்வு.. இது எதையும் வெளிப்படுத்த விடாமல், அவனை இறுக்கமாகவே இருக்க வைத்தது.

பார்கவிக்கும் மகளின் தவிப்பு புரிந்தே இருந்தது. ஜனாவின் முகத்தை பார்க்கும் போதெல்லாம்.. அவள் முகத்தில் தோன்றும் தவிப்பும், அதன் பின்னே வரும் இயலாமையும், என எல்லாமே வயிற்றை பிசைய வைத்தது. அதுவே, கணவனைப் பற்றி நினைக்காமல்,மற்ற இரு பெண்களோடு பெரிய மகளின் வீட்டிலயே தங்க வைத்தது. மகளின் வாழ்வு சரியாக வேண்டுமே என்ற தவிப்பு மேலும் மேலும் அவரை வாட்டியது..

அவரும் விடாமல் ஜனாவுடன் பேச்சு கொடுத்துக் கொண்டிருந்தார்.. அவரது முயற்சியின் பலனாக, அவருடன் சகஜமாக பேச ஆரம்பித்து இருந்தான். சிந்துவுக்கும், ஸ்ரீக்கும் பதில் கவுன்ட்டர் கொடுக்கும் அளவுக்கு வந்திருந்தான்.. அதையே காரணமாக வைத்து ஷைலுவையும் பேச தூண்டினார் பார்கவி. அவள் முயற்சித்தாலும் ஜனா ஒதுங்கியே போனான்.. எனவே ஷைலு விஷயத்தில், பலன் பூஜ்யமே.

அன்று விடுமுறை தினம். மதியம் சாப்பிட வந்த ஜனாவுடன், சிந்துவும், ஸ்ரீயும் மல்லுக்கட்ட.. ஜனாவும் அவர்களுக்கு பதில் கொடுத்துக் கொண்டிருந்தான்.. ஷைலுவுக்கோ, பொறாமையில் உள்ளம் பொசுங்க.. முகம் சுருங்க பார்த்தபடி இருந்தாள். சின்னவள் ஸ்ரீ எதையும் உணரவில்லை என்றாலும், பெரியவள் சிந்து.. கணவன் மனைவி இருவருக்குள்ளும் ஊடல் இருப்பதை உணர்ந்திருந்தாள்.. தாயின் முயற்சியையும் ஓரளவு அறிந்திருந்தாள்.

அவர்கள் அவனிடம் பேசப்பேச, சுருங்கும் ஷைலுவின் முகம், சிந்துவுக்கு சிரிப்பை வர வைக்க...ஷைலுவை மேலும் கடுப்பாக்கும் எண்ணத்தில் "மாமா.., இன்னைக்கு சினிமாவுக்கு கூட்டிக்கிட்டு போறீங்களா..? தல படத்துக்கு"

ஜனாவோ "தலையா? யாரோட தல..?"

ஹா ஹா என்று விழுந்து புரண்டு சிரித்த ஸ்ரீ "மாம்ஸ்.. செம நோஸ் கட்.. அவளுக்கு நல்லா வேணும்.. அதை விடுங்க, நாம நம்ம தளபதி படத்துக்கு போகலாம், அவர் தான் மாஸ்.."

"தளபதியா..?" என்று இழுத்தவனுக்கு "மாம்ஸ்.. எந்த போரில் சண்டை போட்டவர்னு கேட்டுடாதீங்க.. அவ தாங்க மாட்டா.. அப்புறம் நாலு நாளுக்கு தூங்க மாட்டா.." என்று சொல்லிவிட்டு, கண்ணில் நீர் வரும் வரை சிரித்த சிந்து..

"மாமா.. அக்கா தாலி கட்டிக்கிட்டு உங்ககிட்ட அவதிப்படுறா.. எங்களுக்கு ஏன் இந்த அவதி...? ரோட்டுல போறப்ப போஸ்டர் கூட பார்க்க மாட்டீங்களா..? தெய்வமே.."

"போஸ்டரா..? அதைத்தான் மூலைக்கு மூலை ஒட்டி இருக்காங்களே.. முகம் தெரிஞ்சுருக்கும்.. ஆனா அவங்க பேர் தெரியாது..."

கடுப்பாக, "கடவுளே..அப்போ என்ன தான் உங்க பொழுதுபோக்கு..? ஃப்ரீ டைம்ல என்ன பண்ணுவீங்க..?"

“அதுக்கெல்லாம் எங்க நேரம் இருக்கு..? காலையில போனா.. வீட்டுக்கு வரதுக்கு நைட் பத்து மணி ஆகிடுது.. சண்டே ஒரு நாள்தான் வீட்ல ரெஸ்டா இருப்பேன்.. தவிர ,எனக்கும் சினிமாவுல எல்லாம் அவ்ளோ இன்ட்ரெஸ்ட் இல்லம்மா..”

“அம்மாடியோ.. ஷைலு பாவம் மாமா.. முன்னல்லாம் ஒரு படம் விட மாட்டா.. இப்போ அவளுக்கு இப்படி ஒரு ஹஸ்..! அது சரி.. அப்புறம் இவ்ளோ பெரிய டிவியை என்னத்துக்கு வாங்கி வச்சு இருக்கீங்க..? டிவி பார்க்க மாட்டீங்களா.. வீட்டில் இருக்குறப்போ என்னதான் பண்ணுவீங்க..?”

என்ற சிந்துவின் கேள்வி, அவர்கள் தனிமையில் கழித்த நேரங்களின் நியாபக அடுக்கை வேகமாக கிளறி விட, தன்னையும் மீறி ஷைலுவின் பக்கம் பார்வை பதித்தவனுக்கு, அவளது சிவந்த முகமே.. அவளின் நினைவும் அவன் நினைவை ஒத்து இருப்பதை சொல்லாமல் சொல்லியது. நொடியில் சூழ்நிலையை உணர்ந்த பார்கவி..

கடுப்பாக “சிந்துஜா.. வாயை மூடு.. அதிகபிரசங்கித்தனமா பேசினா.. வாயிலேயே போடுவேன்.. அவரை தொல்லை பண்ணாதீங்க.. சாயங்காலம் கோவிலுக்கு கூட்டிக்கிட்டு போறேன்..”

“அய்யோ அம்மா.. உன் கூடவா.. ஆளை விடு.. எனக்கு வாயை மூடிக்கிட்டு வர தெரியாது.. உன்னால, வாயில போடுவேன்னு அதட்டாம இருக்க முடியாது.. நான் வரலை.. இதோ இருக்கா உன் ஜால்ரா.. இவளை கூட்டிக்கிட்டு போ..” என ஸ்ரீயை கைகாட்டி விட்டவள்.. ஜனாவிடம்..

“மாம்ஸ்.. ப்ளீஸ்.. பீச்சுக்காவது கூட்டிட்டு போங்க.. ரொம்ப போரடிக்குது..”

சமாதானமாக “அது.. வொர்க் கொஞ்சம் டைட்டா இருக்கும்மா.. அம்மா கூட கோவிலுக்கு போங்க.. முடிஞ்சா ஈவ்னிங் வந்து, உங்க ரெண்டு பேரையும் பீச்சுக்கு கூட்டிட்டு போறேன்.. ஓகேவா..?”

ஷைலு முகம் கடுக்க அவன் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தவள்.. “சிந்து.., அதான் அவர் பிஸின்னு சொல்லுறார்ல, ஏன் தொல்லை பண்ணுற..? நான் வரேன்.. நாம போயிட்டு வரலாம்..”

தான் பிஸி என்று சொல்லியதில் அவள் கடுப்பாகி விட்டாளோ என்ற எண்ணத்தில்.. “நான்தான் கூட்டிட்டு போறேன்னு சொன்னேனே..

வேணும்னா சீக்கிரம் வரேன்.. சிந்து..”

“நீங்க வேற மாமா.. அவ எப்பவும் இப்படி தான்..” என்றவள்..

“அக்கா.., பாப்பாவுக்கு பீச் காத்து ஒத்துக்காது...மாமா எங்களை கூட்டிட்டு போனா உனக்கென்ன..? நீ ஒண்ணும் எங்களை கூட்டிட்டு போக வேண்டாம்..” என்று ஷைலுவிடம் அதட்டலாக சொல்ல..

ஷைலு வேகமாக பார்கவியிடம் சென்றவள் “அம்மா.. என்னை வெறுப்பேத்த வேண்டாம்னு அவகிட்ட சொல்லு.. அவர் ரொம்ப பிஸி.. இவ கூப்பிடுற நேரத்துக்கு.. கூப்பிடுற இடத்துக்கெல்லாம் வர மாட்டார்..” என கத்திவிட்டு, அறைக்குள் நுழைந்தவள் கதவை அடித்து சாத்த.. அதிர்ந்து போய் பார்த்தான் ஜனா.

சிந்து, ஸ்ரீயிடம் நக்கலாக “ஸ்ரீ.. எனக்கு அந்த ரூம்ல இருந்து கருகுன வாசம் வருது.. உனக்கும் வருதா..?”

“வாசம் வருதோ இல்லையோ.. நீ அக்காகிட்ட மாட்டி நல்லா கருக போறேன்னு மட்டும் எனக்கு தெரியுது... இல்ல மாமா..” என்றவளுக்கு பதிலாக கையெடுத்து கும்பிட்டவன்...

“அம்மா வாலுங்களா.. எப்படிதான் உங்களை சமாளிக்கிறாங்களோ..? நீங்க பாவம்மா” என்றான் பார்கவியிடம்.

அவனுக்கு பதில் சொல்ல வாயெடுக்கும் முன், செல்லின் ஓசை அழைக்க.. கணவர் கோபியின் எண்ணை பார்த்தவர்.. அவரிடம் பேசிவிட்டு..

“சிந்துமா.. அப்பா வெளியே போறாராம், வீட்டு சாவியை நம்மகிட்ட கொடுக்கணுமாம்.. கீழே நிக்குறார்.. நான் போயிட்டு வரேன்..” என்று பிள்ளையை சிந்துவிடம் கொடுத்துவிட்டு கிளம்ப...

காதுகளை வெளிநடப்பிலேயே வைத்திருந்த ஷைலு ‘அப்பா’ என்ற ஒரு வார்த்தையைக் கேட்டு அறையை விட்டு வெளியே ஓடி வர..

கதவருகில் சென்றிருந்த பார்கவியை தடுத்து நிறுத்திய ஜனா .. திணறலாக “நான்.. போய் அப்பாவை கூட்டிட்டு வரேன்” என அவர் முகம் பார்க்காமல் சொல்லிவிட்டு செல்பவனை, விழி விரியப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஷைலஜா.

அப்பார்ட்மென்ட்டில் உள்ள பார்க்கில், பிள்ளைகள் விளையாடுவதை வேடிக்கை பார்த்தபடி அமர்ந்து இருந்தவரின் முக ஜாடையே, அவரை

யார் என்று உணர்த்த, நடை தடுமாற அவர் அருகே சென்று அமர்ந்தான். தன் அருகே அசைவை உணர்ந்தவர், கேள்வியோடு அவனை பார்த்துவிட்டு.. ஒரு புன்னகையை கொடுத்தவர்..

மீண்டும் வேடிக்கை பார்க்க.. ஏதோ நினைவுக்கு வந்தவராக திடுக்கிட்டு திரும்ப.. ஜனாவின் பார்வையே, அவனை யார் என்று சொல்லாமல் சொல்லியது.. பதட்டமாக எழ முற்பட்டவரின் கை மீது தனது கைகளை அழுத்தமாக பதித்தான் ஜனா. வேறுவழி இல்லாமல் அமர்ந்தவர், எதுவும் பேசவுமில்லை, கையை விலக்கிக்கொள்ளவும் முயற்சி செய்யவில்லை.

மனைவியை பிரித்து விடுவாரோ என்று கவலைப்பட்டவனும்... மகளை பிரித்துவிட்டானே என்று துக்கப்பட்டவரும் அருகருகே இருந்தும், பேசுவதற்காக முதல் வார்த்தையைத் தேடி கண்களை அலைய விட்டார்களே தவிர.. ஒருவரையொருவர் பார்க்க கூட இல்லை.

கரைந்த நிமிடங்களை வார்த்தையாக கோர்த்த கோபி "இப்படியொரு நிம்மதியில்லாத வாழ்க்கைக்குத்தான்..அவசரபட்டு என் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களா தம்பி..? என் பொண்ணு, அவ மனசுக்கு பிடிச்சவனோட நல்லா வாழுறான்னு மனசுல ஒரு ஓரத்துல சந்தோஷ பட்டுக்கிட்டு இருந்தேன், அதை பொய்யா ஆக்கிட்டீங்களே..! அவ என் உசுரு.. அவளை இப்படி கலங்க விட்டுட்டீங்களே.. ஏம்ப்பா ?" என மௌனத்தை விட்டு வெளியே வந்தவர்.. தன் மனக் குமுறலை கேள்வியாக கேட்டார்.

"அப்பா.. அவ எனக்கும் உசுருதான்.. பயம்.. அவளை தக்க வச்சுக்கணுமேன்ற பயத்துல, தப்புன்னு தெரியாமேலேயே நிறைய தப்பு பண்ணிட்டேன்.. என்னால அவகிட்ட மன்னிப்பு கேட்கக்கூட முடியலை.. நீங்களாவது என்னை மன்னிச்சுடுங்களேன்..." என்று அவர் கைகளை ஏந்தியபடி சொன்னவனை கண்ணீர் வடிய பார்த்தார்.

கொஞ்ச நேரத்தில் ஜனாவின் கையை பற்றியபடி, சங்கடத்துடன் வீட்டுக்குள் வந்துக் கொண்டிருந்த கோபியின் உருவத்தை கண்டதும், கண்களை கண்ணீர் மறைக்க.. மிகவும் ஒடுங்கி போயிருந்த அவரை கண்டதும்.. அவரின் இந்த நிலைக்கு தானே காரணம் என்ற எண்ணமும் வாட்ட.. அப்படியே அமர்ந்து அழ ஆரம்பித்தாள் ஷைலு.

மகள் அவ்விடத்தில் இருக்கிறாள் என்று தெரிந்தும், அவள் அழுகுரல் கேட்டும், அவள் புறம் பார்வையை திருப்பாமல், சுவற்றை வெறித்தபடி அமர்ந்து இருந்தவரின் கையில், ஜனனியை பார்கவி கொடுக்க..

வாங்கியவரின் கண்களும் கலங்கி விட்டது..

குரல் உடைய.. “சரிங்க மாப்பிள்ளை, நான் கிளம்புறேன்” என்று எழுந்தபடி.. சாவியை பார்கவியிடம் நீட்டினார்.

“அப்பா..” என்ற கதறலுடன் கத்திக்கொண்டே அவர் காலடியில் விழுந்து அழுத ஷைலு ..

“ப்ளீஸ்ப்பா.. என்னை மன்னிச்சுடுங்கப்பா.. நான் தப்பு பண்ணிட்டேன்..” என்று அழ.. அப்படியே அமர்ந்தவரின் கண்களில்.. கண்ணீர் ஓடை அமைத்து சரமாய் இறங்கியது.

அவள் தலையில் கோபியின் கரம் ஆதரவாய் படிய.. அந்த கரத்தை இறுக பிடித்தவள், அவர் மடியிலே தலை சாய்க்க.. அவள் தலையை தடவியபடி

“ஏம்மா இப்படி செஞ்ச..? அப்பாகிட்ட ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமே..! உனக்கு விருப்பம் இல்லாம, அப்பா எதையாவது செஞ்சிருக்கேனா..? நீ இப்படி பண்ணிட்டியேம்மா...?” என்றவர் விரக்தியாக

“நீங்க மூணு பேரும் பெண்ணாய் பிறந்துட்டீங்களேன்னு ஒரு நாளும் நான் வருத்தப்பட்டது இல்ல.. என் உலகமே நீங்க தான்.. என்னதான் நான் வேலைக்கு போனாலும், உங்க அம்மாவுக்கு இருக்குற உலக அனுபவம் எனக்கு இல்ல போல.. வீட்டுக்குள்ளேயே இருந்தவ கூட, நீ ஏதோ தப்பு பண்ணுறேன்னு கண்டுப்பிடிச்சுட்டா..

ஆனா நான் உன்னை முழுசா நம்பினேன்.. ரெண்டு வருஷமா இவரை காதலிச்சியே..! ஒரு நாள் கூடவா இந்த முட்டாள் அப்பாகிட்ட சொல்லணும்னு தோணலை..! ஏன்மா.. தங்கச்சிங்களை கூட நினைச்சு பார்க்கலையே.. நாங்க உன்னை அப்படியா வளர்த்தோம்...?” என்று அவர் வருந்த.. ஷைலு மேலும் கதறி அழ தொடங்கினாள்.

ஷைலு அழுவதை பொறுக்க முடியாமல், அவரின் இன்னொரு கால்புறம் அமர்ந்த ஜனா “அப்பா.. ஷைலு மேல எந்த தப்பும் இல்ல.. நான் தான் எல்லா தப்பும் பண்ணினேன்..என்னை மன்னிச்சுடுங்க..அவளை ஒண்ணும் சொல்லாதீங்க... அவ பாவம்” என்று சொன்னவனை ஆச்சரியமாக பார்த்தாள்.

மேலும் அவனே சங்கடத்துடன் “அப்பா.., நானே உங்க வீட்டுக்கு வந்து பேசி, மன்னிப்பு கேட்டு, உங்களை இங்க கூப்பிடுறதா இருந்தேன்..

அதுக்குள்ளே நீங்களே வந்துட்டீங்க..”

மென்மையாக சிரித்தவர்.. “பின்ன.. பெத்த பாசம்.. வேற என்ன செய்யும்..? அதிலயும், என்னோட நினைப்பே இல்லாம, எல்லாரும் இங்கேயே டேரா போட்டுடாங்க.. நான் மட்டும் எப்படி தனியா அங்கே தவிச்சுட்டு இருக்கறது..? எனக்கு மட்டும் என் பேத்தி கூட இருக்கணும்னு தோணாதா..?” என்று குற்றம் சாட்டும் குரலில் சொன்னவர்..

“விடுங்க மாப்ள.. யார் முதல்ல இறங்கி வந்தா என்ன..? என் பொண்ணுகிட்டே தானே இறங்கி வந்தேன்.. அதுல எனக்கு எந்த சங்கடமும் இல்ல... என் வாழ்க்கையே என் மூணு பொண்ணுங்களை சுத்தி தான். அதுக்காக, இவ இப்படி செஞ்சதுல வருத்தம் இல்லைன்னு சொல்ல மாட்டேன்... காலம் முழுக்க என் மனசுல அது ஒரு காயமா தான் இருக்கும்... ஆனா அதுக்கு தான் என் பேத்தி வந்து மருந்து போட்டுட்டாளே..!”

கையிலிருந்த குழந்தையை அணைத்துக்கொண்டு “ஒரு நாளிலேயே இந்த தாத்தாவை மயக்கிட்டாளே இந்த குட்டி தேவதை!” என்று கொஞ்ச ஆரம்பித்தார்.. அவர் கையிலிருந்த பிள்ளையை வாங்கிய ஷைலு, அதை அணைத்தபடியே கோபியின் தோளில் தலை சாய்க்க..

அதைக் கண்ட ஜனாவின் முகம் சுருங்கியது.. பார்கவியோ “ஆமாண்டி.. இத்தனை நாளா உன் கண்ணு முன்னாடியே சுத்திக்கிட்டு இருக்குற அம்மாவை தெரியலை.. அப்பனை பார்த்ததும் பாசம் அப்படியே பொங்குதோ..?” என்றார் கிண்டலாக

“போம்மா.. அப்பா மடியில படுத்து எவ்ளோ நாள் ஆகுது தெரியுமா..?” என்று உதடு பிதுங்க சொன்னவளின் கண்களில் கண்ணீர் வடிய.. “சாரிப்பா நான் சொல்லியிருக்கணும்.. உங்ககிட்ட,என் காதல் விஷயத்தை சொல்லுற தைரியம் வரலைப்பா..” என்றவள், நிறைவான முகத்தோடு தந்தையின் கைவளைவுக்குள் நுழைந்தவளுக்கு பழைய குறும்பு மீண்டு இருந்தது.

ஜனாவின் தோளை தட்டிய சிந்து.. கிண்டலாக “அம்மா.. கொஞ்சம் கடுகு கொடு.. மாம்ஸ் முகத்துல போட்டு வெடிக்குதான்னு பார்க்குறேன்.. போங்க மாம்ஸ்.. இதுக்கே இப்படி மிரண்டு போறீங்களே, மேடம் பயங்கர அப்பா செல்லம்.. இனிமே அடிக்கடி இந்த கொடுமையை பார்ப்பீங்க .. சோ, சியர் அப்”

என்ற அவளின் கிண்டலில் ஆரம்பித்த அந்த நாள், ஜனாவின் வேலையை மறக்கடிக்க..மாலை வரை அங்கே அவர்களுடன் இருந்த கோபி, சிந்து ஸ்ரீயுடன் கிளம்பி விட.. ஜனாவும் நிறைவுடன் வேலைக்கு கிளம்ப தயாராகியவன், பார்கவியிடம் சொல்லிவிட்டு வாசல் கதவை திறக்க.. அங்கே நின்றிருந்த ப்ரிதீவ்வை திகைப்புடன் பார்த்தவன்...

“ஹே ப்ரிதீவ்.. வா வா.. என்ன திடீர்னு..? போன் கூட பண்ணலை..” என்றவன் உட்புறம் திரும்பி...

“அம்மா.. யார் வந்திருக்காங்க பாருங்க..” என்றவனின் குரலுக்கு வந்த பார்கவி, ப்ரிதீவ்வை கண்டதும் முகம் சுருங்க.. வரவேற்பாக தலையை மட்டும் அசைத்தவர்.. ஜனாவிடம்..

“தம்பி, கோவிலுக்கு போயிட்டு வரேன்..” என்றவர் ஜனனியை தூக்கிக் கொண்டு ப்ரிதீவ்வை தாண்டி செல்ல..

“ஆன்ட்டி.. சாரி.. நான் நல்லது நினைச்சு..” என்றவன் அதற்கு மேல் பேசாமல் தலை குனிய..

“புரியுதுப்பா.. புத்தி சொல்லுறதுக்கு, ஒரு பொண்ணை நடுத்தெருவுல நிறுத்துறதுதான் வழியா..? அந்த வார்த்தை, பெத்தவளை எவ்ளோ வேதனை படுத்தும்னு உனக்கு புரியலை. சரி விடு, நடந்தது நடந்து போச்சு.., இனி பேசி என்ன ஆக போகுது..? ஆனா, என்னோட கோபம் குறைய கொஞ்ச நாள் டைம் கொடு..” என்றவர் அங்கிருந்து விலக, அவர்களை குழப்பமாக பார்த்துக் கொண்டிருந்தான் ஜனா.

“என்ன ப்ரிதீவ்.. அம்மா உன்மேல கோபமா இருக்காங்களா.. ஏன்..?” என்றவனை புரியாமல் பார்த்தவன்...

“உன்கிட்ட ஷைலு எதுவும் சொல்லலையா..?” என்றவனின் பார்வை.. அறை வாயிலில் நின்றிருந்த ஷைலுவின் மேல் பதியவும், விரைந்து அவளை நெருங்கி...

“ஷைலு, சாரி.. சாரிப்பா.. உன் மேல இருந்த கண்மூடித்தனமான கோபத்துல.. தப்புத் தப்பா.. என்ன இருந்தாலும், உங்க பர்சனல் விஷயங்களுக்குள்ள நான் தலையிட்டிருக்க கூடாதுதான்.. ரொம்ப சாரி..”மன்னிப்பை வேண்டியவனுக்கு பதில் சொல்ல இயலாமல்.. கண் கலங்க முகம் திருப்பினாள்.

“ப்ரிதீவ்.. இங்க வந்து உட்காரு.. எதுக்கு இத்தனை சாரி கேட்கிற..? என்ன நடந்துச்சுன்னு தயவுசெஞ்சு சொல்லுறியா..?”

ஜனாவின் கேள்வியே அவனுக்கு எதுவும் தெரியவில்லை என்பதை உணர்த்த.. ஷைலுவிடம், சொல்லவில்லையா என்பதுபோல ஜாடையில் கேட்க.. அவளும் இல்லை என்பதாக தலையசைக்க... மெல்ல ஜனாவின் அருகில் அமர்ந்தவன்...

அவன் கைகளை பிடித்தபடி.. உறுத்தலான மனநிலையோடு நடந்தவைகளை சொல்ல ஆரம்பித்தான். மினியின் இன்றைய ஒதுக்கம் வரை சொல்லி முடிக்க.. அவன் சொல்வதை கேட்க கேட்க ஜனாவின் முகம் மாறத் துவங்கியது. சொல்லி முடிக்கவும்.

“ஏன் ப்ரிதீவ்.. எங்களுக்குள்ள என்ன பிரச்சனைன்னு தெரியாம, நீ எதுக்கு மூக்கை நுழைக்குறே..? ஏற்கனவே செஞ்ச தப்பே பாரமாய் அழுத்த... அடுத்து என்ன செய்யுறதுன்னு புரியாம, நானே தவிச்சுட்டு இருக்கேன்.. உன் பங்குக்கு நீயும் ஏன் பாவ மூட்டையை என் தலையில ஏத்தி விடுற..?

நான் செஞ்ச தவறுகளுக்கு மன்னிப்பு கேக்குற அருகதை கூட எனக்கு இல்லயேன்னு, நானே மறுகிகிட்டு இருக்கேன்.. இதோ.. இந்த முட்டாள் இருக்காளே, இதோ.. இப்போ கூட, நான் மன்னிப்புன்னு ஒரு வார்த்தை கேட்டுட்டா, அடுத்த நிமிஷமே பூனைக் குட்டியா என்னை சுத்தி வருவா.. ஆனா அவளோட மன்னிப்பை தாங்குற பலம்தான் எனக்கு இல்ல..

நீயும் உன் பங்குக்கு ஏன் ப்ரிதீவ்..? நீயாவது அவகிட்ட மன்னிப்பு கேட்டுடு. மினி விஷயத்துல பேச எனக்கு எந்த தகுதியும் இல்ல.. நீயே அவகிட்ட பேசு.. அவ வாழ்க்கை.. அவ தான் முடிவு பண்ணனும்” என்றவன் அறைக்குள் சென்றுவிட ..

அதுவரை அவன் பேசுவதை கேட்டு சிலையாக நின்றவள்.. மனம் தவிக்க இன்னதென புரியாத உணர்வில், அறையை நோக்கி ஒரு எட்டு வைக்க.. “ஷைலு..” என்று ப்ரிதீவ்வின் குரல் தடுத்தது.. ‘என்ன’ என்பது போல அலுப்பாக அவனை பார்த்தவள்..

கோபமும் கடுப்பும் கலந்து “ப்ரிதீவ், நாம அப்புறமா பேசலாம்.. இப்போ கிளம்புங்க” என்றவளின் பார்வை அறையின் பக்கம் போய் போய் வர..

“ஷைலு.., நான் செய்தது தப்புதான்.. நீ என்னை மன்னிக்கவே மாட்டியா...? நீங்க நல்லா வாழணும்னு தானே.. நான்”

“ப்ரிதீவ்.. இன்னொரு நாள் பேசலாம்.. இப்போ கிளம்புங்க..”

ஜனாவின் பேச்சையும், ஷைலுவின் தவிப்பையும் பார்த்தவன்..

“ஷைலு.., ஜனா பேசுறதையும்.. உன்னோட தவிப்பையும்..நீ இப்போ என்னை விரட்டுறதையும் பார்த்தா.. ஜனா மேல உனக்கு எந்த கோபமும் இல்லைன்னு தோணுது.. அப்போ உங்க பிரச்னை சீக்கிரம் சரியாகிடும் தானே..? என்னால நல்லது தானே நடந்துருக்கு, நாரதர் கலகம் நன்மையில் தானே முடிஞ்சு இருக்குன்னு நினைச்சு... என்னை மன்னிக்க கூடாதா..?”

முகத்தில் மெல்ல புன்னகை எட்டிப்பார்க்க.. ஜனா இருந்த அறையை பார்த்தபடியே. “சரி.. நான் உங்களை மன்னிச்சுட்டேன்.. இப்போ கிளம்புங்க..” என்றவள் அறையை நோக்கி ஒரு எட்டு எடுத்து வைக்க.

“ஏன் ஷைலு என்னை விரட்டுற..? நான் செய்தது தப்பு தான்.. சின்னதுல இருந்து கூடவே வந்த பிடிவாதம்.. ஜனா மேல இருந்த பாசம்.. நீ வேற மெச்சூரிட்டி இல்லாம எல்லாரையும் தொல்லை பண்ணுற.. உன்னால மினி அப்செட் ஆகுறா.. நம்ப வேண்டிய ஜனாவை விட்டுட்டு, மத்தவங்களை நம்பினா.. என்ன நடக்கும்னு, உனக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தா, சரியா போகும்னு சொல்லுறதை விட, இதுல கிடைச்ச அனுபவம், உனக்கு நல்ல ஒரு பாடமா இருக்கும்னு நினைச்சேன்..”

“அய்யோ.. ப்ரிதீவ்.. எனக்கு புரியுது.. நாம நாளைக்கு..”

“இல்ல ஷைலு, ப்ளீஸ் கோவப்படாதே.. சத்தியமா அன்னிக்கு உன்னை அப்படியே விட்டுருக்க மாட்டேன், ஜனாகிட்ட ஒப்படைச்சு இருப்பேன்... ஆனா ரிசல்ட் இவ்ளோ சொதப்பலா போகும்னு நான் நினைக்கலை.. நான் உன் ஃபிரெண்ட் ஷைலு.. நீ நல்லா வாழ,வாழ்க்கைல ஒரு புரிதல் வேணும்னு.. உன் குழப்பம் தீரணும்னு நினைச்சேன்.. மத்தபடி உனக்கும் ஜனாவுக்கும் வேற பிராப்ளம் இருக்கும்னு நிஜமா எனக்கு தெரியாது.. அதனால தான்.. ஜனா பயப்படுறதுல நியாயம் இருக்குன்னு, உன் அம்மாகிட்ட கூட பொய் சொன்னேன்.. கொஞ்ச நாளைக்கு தான் உங்களைப் பிரிச்சு வைக்கணும்னு நினைச்சேன்.. ப்ளீஸ் ஷைலஜா... மினி வேற..”

“ப்ரிதீவ்.. நான் தான் புரிஞ்சுக்கிட்டேன்னு சொல்லுறேனே.. இப்படி மன்னிப்பு கேட்டே ஏன் கொல்லுறீங்க.. நான் ஜனாகிட்ட பேசணும்.. புரிஞ்சுக்கோங்க..” என்றவளின் முகம் வெட்கத்தில், ரத்த ஓட்டத்தை

கடன் வாங்க..

ஏதோ புரிந்த பாவனையில் “அடிப்பாவி.. நான் இவ்ளோ ஃபீல் பண்ணி, தொண்டை தண்ணி வத்த பேசுறேன்.. நீ என்னன்னா.. இரு.. இரு ..அப்போ நான் பூஜை வேளை கரடியா..? நான் இதை ஒத்துக்க மாட்டேன்.. உங்களை சேர்த்து வைக்க போய், இப்போ என் காதல் டேமேஜா போயிட்டு இருக்கு.. அதுக்கு ஒரு பதில் சொல்லு ”

சலிப்பாக “கடவுளே.. அதுக்கு நான் என்ன செய்ய முடியும்..?”

“என்ன செய்ய முடியுமா...? ஏதேது.. தப்பான வழியா இருந்தாலும், உங்களை சேர்த்து வைக்க நான் ஒரு முயற்சி செஞ்சேன் இல்ல..அதுக்காகவாவது, இப்போ நீ ஏதாவது செய்.. அவ போனை கூட எடுக்க மாட்டேங்குறா.. இதே ரேஞ்ச்சுல போனா, நான் பைத்தியமா ஆகிடுவேன்”

“இப்போ நான் என்ன செய்யணும்..?” என்று கையை பிசைந்தவள்.. யோசனை பிடிபட்ட உணர்வில் “சரி, நாளைக்கு இதே நேரம் இங்கே வாங்க, மினியையும் வர வைக்கிறேன், நீங்களே பேசிக்கோங்க.. இப்போ கிளம்புங்க..” என்று அவசரமாக சொன்னவளை முறைத்தவன்...

“புருஷன் பொண்டாட்டி சண்டையில தலையை கொடுத்தா, சேதாரம் தான் மிஞ்சும்னு நல்லா புரிய வச்சுட்டீங்க.. கூடவே செய்கூலியையும் கொடுத்துட்டீங்க.. சரி , நான் கிளம்புறேன்...” என்றவன் கிளம்பிவிட..

வேகமாக அறையின் கதவை தட்டியவள், அது வெறுமனே சாத்தி வைத்திருப்பதை உணர்ந்து உள்ளே வரவும்.. ஜனாவோ அவளுக்கு முகம் காட்டாமல் ஜன்னல் கம்பிகளை இறுக பற்றிக்கொண்டு நின்றிருந்தான்.

மெல்ல.. குரலே எழும்பாமல் “மாமா..”

திரும்பாமல் “இப்போ என்னை எதுவும் கேட்காதே ஷைலஜா.. என்னை கொஞ்சம் தனியா விடு..”

“மாமா.. நான் பேசுறதை..”

“ப்ளீஸ் பேசாதேன்னு சொல்லுறேன் இல்ல..” அவன் சொல்லியும்.. அவள் அந்த இடத்தை விட்டு நகர்வதாக இல்லை என்பது புரிய..

“நான் செஞ்சது எல்லாமே தப்பு தான் ஷைலஜா.. என்னால

மன்னிப்பெல்லாம் கேக்க முடியாது.. அதுக்கான தகுதி எனக்கு இல்லைன்னு புரிஞ்சுடுச்சு.. நீ என்னை பிரியணும்னு நினைச்சது நியாயம்தான் . நான் மனுஷனே இல்ல.. என் மனசு முழுக்க வக்கிரம் தான் இருக்கு..

என்னை போல ஒரு ஆளை சகிச்சுக்குறது கஷ்டம்தான்.. கொஞ்சம் டைம் கொடு.. நானே உன்னை விட்டு போயிடுறேன்..தயவுசெய்து,என்னை மன்னிச்சுட்டேன்னு சொல்லி,வாழ்நாள் பூரா குற்ற உணர்வோடவே வாழுற தண்டனையை மட்டும் எனக்குக் கொடுத்துடாதே..” என்று சொன்னவனை கடுப்பாக பார்த்தவள்...

‘கடவுளே.. இதை கேட்கத்தான் இவ்ளோ தவிச்சேனா’ என்று மனதுக்குள் திட்டியபடி..

“ஏன் மாமா.. என் உயிரை வாங்குறீங்க..? கடைசி வரைக்கும் நம்ம வாழ்க்கை இப்படி இழுபறி போராட்டமா தான் போகுமா..? நிம்மதியா வாழவே முடியாதா..? நீங்க எப்போ தான் சரியா யோசிப்பீங்க..?”

“என்னால யோசிக்க முடியலைம்மா.. உன் முகத்தை நிமிர்ந்து கூட பார்க்க முடியலை.. இதுல எப்படி நாம நிம்மதியா வாழ முடியும்..? அதான் சொல்லுறேன், நாம பிரிஞ்சிடலாம்.”

அதுவரை, அவனைப் பிரிய வேண்டும் என்று ஆயிரம் முறை நினைத்திருக்கிறாள் ஷைலு.. ஜனா அதை வார்த்தையாக கூட நினைக்க பிடிக்காதவன்.. தான் சொல்லும்போது பெரிதாக தெரியாத ஒன்று,அதே வார்த்தையை அவன் சொல்லும் போது எரிமலையாக கோபத்தைக் கிளப்ப,

“பிரிஞ்சிடலாமா..?அதெப்படி .. எப்படி அந்த வார்த்தையை சொல்லுவீங்க..? நான் ஒத்துக்க மாட்டேன்.. நீங்க சொல்லிட்டா, நான் அதை உடனே அப்படியே கேட்டுக்கணுமா.? முடியாது. என்ன பண்ணுவீங்க...?”

அதுவரை அவள் முகத்தை பார்க்காமலேயே பேசியவன், திகைப்புடன் அவள் புறம் திரும்பி.. “நீ தானே ஆசைப்பட்ட.! நீ தானே சொன்ன.. இப்போ அதையேதான் சரின்னு, நானும் ஒத்துக்குறேன். கஷ்டமா இருந்தாலும் இது தான் இறுதி முடிவு”

“வேணாம்.. எரிச்சலை கிளப்பாதீங்க.. நான் ஆயிரம்

சொல்வேன்..அதெல்லாம் வேற. ஆனா அதை நீங்க எப்படி சொல்லலாம்..? என்னவோ இதுவரை அப்படியே நான் சொன்னதையெல்லாம் நீங்க கேட்டுட்ட மாதிரி தான்.. இல்லை தானே... அதனால, நானும் இப்போ நீங்க சொல்லுற இந்த விஷயத்தை கேக்க மாட்டேன்.. வாழுறதோ இல்ல பிரியறதோ, எதையுமே நான் தான் முடிவு செய்வேன்..

இடியட்.. இப்போ கூட உங்களுக்கு என்னை கெஞ்சி கொஞ்சி சமாதானம் செய்ய தோணலை இல்ல..! நான் தான் உங்ககிட்ட இறங்கி போகணுமா..? அய்யா செய்யுறதை எல்லாம் செஞ்சுட்டு, நைசா தப்பிக்க பார்க்குறீங்களா..? நான் விட மாட்டேன்.. வாழ்நாள் முழுக்க என் தொல்லையை, நீங்க என் கூட இருந்தே அனுபவிச்சு தான் ஆகணும்" என்றவள், அதே வேகத்தில் வெளியே போனாள்.

அவளிடமிருந்து இப்படி ஒரு ரியாக்ஷனை எதிர்பாராதவன்.. இவளை புரிஞ்சுக்கவே முடியலையே என்பது போல முழித்தான். பின்னே சும்மாவா சொன்னாங்க, பெண் மனசு ஆழம் என்று..!

29

இரவுகளை சோகங்களால் கடக்காமல்...
உன் நினைவுகளால் கடக்க நினைக்கிறேன்..
வாழ்கையை கண்ணீரால் கடக்காமல்...
புன்னகையால் கடக்க நினைக்கிறேன்..

ஒரு பொருள் வேண்டாம் என்றால்.. அது தேவையில்லை என்று தூக்கியெறியும் மனசு, அதே பொருளை மற்றவர் விரும்பி கேட்டாலோ, அல்லது கை நழுவிப் போனாலோ, அதையே நினைத்து புலம்பும்.. தவிக்கும்.. சாதாரண ஜடப் பொருளுக்கே அந்த நிலை என்றால்.. தன்னில் பாதியாக நிறைந்தவனை.. எப்படி விட்டுக் கொடுக்கும்.? அதிலும் அவன் தவறை உணர்ந்துவிட்டான் என்ற பின்.

இப்போது தான் ஷைலுவுக்கு ஞானோதயம் வந்து, 'பிரிஞ்சு போறாராமே.. அம்மா அப்பா எவ்ளோ வருத்தப்படுவாங்க.. பாப்பாவை பத்தி கொஞ்சம் கூட யோசிக்கலையே..' என்று மனதுக்குள்ளே ஜனாவை திட்டித் தீர்த்தாள்.. இத்தனை நாட்களாக தான் அதே எண்ணத்தோடுதான் வாழ்ந்தோம் என்பதை வசதியாக.. சுத்தமாக மறந்து விட்டாள்.

‘ஜனா தவறை உணர்ந்து விட்டார்.. அது எப்படி..? என்ன நடந்தது..? இப்போ அவர் மனசுல என்ன இருக்கு..? அவரை எப்படி மனசு விட்டு பேச வைப்பது..?’ என்று பல வழிகளில் யோசிக்க ஆரம்பித்தவளுக்கு, வழக்கம் போல எந்த வழியும் புலப்படவில்லை.

தன் எதிரே இருந்த ப்ரிதீவ்வை பார்க்கவும், மனதுக்குள் எழுந்த கோபத்தை அடக்கிய மினி.. ஷைலுவிடம்.. “இதுக்காக தான் என்னை அவசரமா வர சொன்னியா..? எவ்ளோ பட்டாலும் நீ திருந்தவே மாட்டியா..? ஏண்டி இப்படி இருக்க..?”

ஆனால் எப்படியும் அவளிடம் பேசி விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த ப்ரிதீவ் “பீரோ... ப்ளீஸ்.. கோபப்படாம கொஞ்சம் நான் சொல்லுறதை கேளேன்..”

“ப்ரிதீவ்.., தயவுசெஞ்சு இனி அப்படி கூப்பிடாதீங்க.. உங்க மேல எனக்கு எந்த கோபமும் இல்லை.. அதெல்லாம் விருப்பம் இருக்குற இடத்துல தான் கோபம் கூட வரும்..! புரிஞ்சுதா....? ஷைலு.. நான் கிளம்புறேன்..” என்றவள் எழுந்துக்கொள்ள..

ஷைலு “மினி.. இப்போ ஏன் ஓடுற..? நாங்க செஞ்ச அதே தப்பை நீயும் செய்யாதே.. நீயாவது மனசுல இருக்குறதை ஓபனா பேசிடு.. பிரச்சனையை நேருக்கு நேரா ஃபேஸ் பண்ணு.. உன் முடிவு என்னன்னு அவர்கிட்ட சொல்லு.. நான் கீழே பார்க்குல வெயிட் பண்ணுறேன்..” என்றவள்.. அவர்களுக்கு தனிமை கொடுத்து கிளம்பிவிட..

ப்ரிதீவின் முகம் பார்க்க கூட விருப்பம் இல்லாதவளாக.. முகத்தை திருப்பிக்கொண்டு அமர்ந்திருந்தாள் மினி.

அவள் அருகே அமர்ந்த ப்ரிதீவ்.. “பீரோ.. நான், ஷைலு, ஜனா கூட சேரணும்ன்ற நல்ல எண்ணத்துல தான் இப்படியெல்லாம் செஞ்சேன்.. என்ன ஒண்ணு.. பின்னாடி வரப்போற விளைவை பத்தி யோசிக்காம செஞ்சுட்டேண்டி.. நிச்சயமா நான் செய்தது தப்புதான்... அதுக்கு ஏன் இவ்ளோ கோபம்..? என்னை மன்னிக்க கூடாதா..? இதுக்காக என் காதலை கூட சந்தேகப்படணுமா..? இத்தனை நாளும், நீ என்கிட்டே பேசாததால, நான் ரொம்பவே தவிச்சு போயிட்டேன்.. தெரியுமா..?” என்றான் கொஞ்சலாக.

“ப்ரிதீவ்.. ப்ளீஸ் என்னை புரிஞ்சுக்கோங்க... நீங்க செஞ்சது நல்ல எண்ணத்துல தான்.. எனக்கு அது நல்லாவே புரியுது.. நீங்க சொல்ற

மாதிரி, உங்க காதல் கூட உண்மைன்னே ஒத்துக்குறேன்.. ஆனா இனி நமக்குள்ளே இந்த உறவு சரி வராது.. ப்ளீஸ் கொஞ்சம் புரிஞ்சுக்கிட்டு என்னை விட்டு ஒதுங்கிடுங்க.."

எரிச்சலாக "ஏய் விளையாடுறியா.. கோபம் வந்தா பூரிக்கட்டையை எடுத்து, என்னை நாலு சாத்து சாத்திடு.. அதை விட்டுட்டு என்னென்னவோ உளறுறே.. உன் ஃபிரெண்டுக்கு தானேடி நல்லது நினைச்சேன்.."

"ப்ரிதீவ்.. இதுல தேவையில்லாம ஷைலுவை இழுக்காதீங்க.. திரும்பவும் அவ மேல எந்த வன்மத்தையும் வச்சுடாதீங்க.."

"அய்யய்யோ பீரோ.. நான் என்ன அதே பிழைப்பாவா இருக்கேன்..? அவ மேல நான் வன்மம் வச்சது தப்பு தான்.. ஆனா அவளே என்னை மன்னிச்சுட்டா.. நீ ஏண்டா..?"

"ஏன்னா, உங்களோடது என்ன தெய்வீக காதலா...? என்னை பழிவாங்கத் தானே காதலிக்க ஆரம்பிச்சீங்க.. ஒரு காதலுக்கு இது நல்ல ஆரம்பம் இல்லையே..!"

"என்ன பீரோ நீ.. அதெல்லாம் ஆரம்பகட்டத்துல நான் தெரியாத்தனமா யோசிச்சது .. உன்ன புரிஞ்சுக்குறதுக்கு முன்னாடி.. ஆனா இப்போ நான் உன்னோட அன்பை நல்லா புரிஞ்சுகிட்டு, சீரியஸா உன்னை லவ் பண்ணுறேன்டா.. உண்மையா சொல்லுறேன்...நீ இல்லாத வாழ்க்கையை என்னால நினைக்க கூட முடியாது.. வாழவும் முடியாது.. ப்ளீஸ்டி.."

"இங்க பாருங்க.. உங்க புலம்பலை நிறுத்துங்க.. வாழ்க்கைன்றது இன்னையோட முடிய போறது இல்ல.. நாளைக்கே நமக்கு கல்யாணம் ஆச்சுன்னா, அப்போ நீங்க என்னை கொஞ்சுனா கூட.. என் உள்மனசு..இவன் பொய் சொல்லுறானோன்னு சந்தேகப்படும்.. திட்டுனா, என்னை வெறுத்துட்டீங்களோன்னு தவிக்கும்..

அவ்ளோ ஏன்... லேட்டா வந்தா கூட உங்களை சந்தேகப்பட சொல்லும்.. இப்படி சந்தேகத்தோடவே கடைசி வரைக்கும் வாழ சொல்லுறீங்களா...? என்னால அப்படியெல்லாம் வாழ முடியாது.. வாழ்நாள் முழுக்க சந்தேகப்பட்டு சந்தேகப்பட்டு நிம்மதியை இழக்குறதை விட.. இப்போவே சந்தோஷமா ஒரு குட்பை சொல்லிட்டு பிரிஞ்சுடலாம்.."

“ஏண்டி.. நான் முட்டாள்தனமா ஏதோ நினைச்சேன் தான்.. உன்னை புரிஞ்சுக்கிட்டதுக்கு அப்புறம் ஒரு தடவை கூட அப்படி நினைக்கலை.. ஏதோ ஒரு வன்மம்.. நீ தப்பு செஞ்சதா நினைச்சு.. ப்ச் போறான் பைத்தியக்காரன்னு நினைச்சு விடுவியா.. தேவையில்லாம ஏதோதோ யோசிக்கிற.. பீரோம்மா இது நம்ம லைஃப்டா”

“எது தேவையில்லாம யோசிக்கிறது..? என் பயம் ஏன் உனக்கு புரியலை..? உன் குணமே எனக்கு பயமா இருக்கு... நீ எது செஞ்சாலும் எனக்கு சந்தேகம் வரும்.. ஆனா என் சந்தேகத்தை உரிமையா உன்கிட்ட சொல்ல முடியுமா, இல்ல அதை உன்கிட்ட சொல்லி சண்டை போட தான் முடியுமா..? சொல்லு..?

‘இவ எப்படி என்னை சந்தேகப்படலாம்’னு வன்மம் வச்சு பழிவாங்க மாட்டேன்னு என்ன நிச்சயம்...? காலம் பூரா இப்படி சந்தேகத்தோடயும் பயத்தோடையும் தவிக்கணுமா..? உரிமையாட பேச முடியாத வாழ்க்கை, என்ன வாழ்க்கை..?

எனக்கு கோபம் வந்தா கொட்டணும், சிரிப்பு வந்தா சிரிச்சிடணும்.. எரிச்சல் வந்தா உன் சட்டையை பிடிச்சு உலுக்கணும்.. அழுகை வந்தா அழுதுடணும்.. இது எதையுமே உங்கிட்ட நான் எதிர்பார்க்க முடியாது.. எதை சரியா நினைப்பே.. எதை தப்பா நினைப்பேன்னு எனக்குள்ளேயே நானே குழப்பிக்க.. நான் ஒண்ணும் ஷைலஜா இல்லை..

உங்க கேரக்டர் எனக்கு ஒத்துவராது.. ஆளை விடுங்க.. நீங்க தெளிவாதான் இருக்கீங்க.. இப்போ நான் தான் தெளிவா இல்லை ...”

மனம் வாட “மினி, இது உனக்கே நியாயமா இருக்கா..? நான் என்ன சைக்கோவா.. ஏன் என்னை இப்படி அசிங்கப்படுத்துற ?”

“ப்ளீஸ் ப்ரிதீவ்.. நீங்க சொல்லுவீங்க இல்ல.. வீடு நிம்மதியா இருந்தா வாழ்க்கை நிம்மதியா போகும்.. காதலும் தன்னால வரும்னு.. அதுதான் சரி.. நாம கல்யாணம் செய்துக்கிட்டா, இருக்குற காதலும், நிம்மதியை கூட்டிக்கிட்டு ஓடி போயிடும்.. என் மனசுல ஒரு ஓரத்துல நம்ம காதல் வாழ்ந்துட்டு போகட்டும்.. அதை கொன்னுடாதீங்க” என்றவள்.. அவன் பேச இடம் கொடுக்காமல் கிளம்பிவிட.. கண்கலங்க கைகளால் தலைக்கு முட்டுக் கொடுத்தபடி அமர்ந்து விட்டான் ப்ரிதீவ்.

மினியின் முடிவையறிந்த ஷைலு, அவளுடன் எவ்வளவோ பேசி பார்த்தும் பலன் பூஜ்யமே.. ஜனா, மினி, ப்ரிதீவ், எல்லோரும் வாடுவது

தன்னால் தானோ என்ற தவிப்பு வாட்ட.. மனம் தடுமாறி.. பார்கவியிடம் புலம்ப துவங்கினாள்.

“அம்மா.. மினி ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்குறா..? பாவம் ப்ரிதீவ்.. எல்லாத்துக்குமே நான் தான் காரணமாகிட்டேன், என்னால நிம்மதியாகவே இருக்க முடியலை.. தலை வெடிச்சிடுமோன்னு இருக்கு..” என்றாள் புலம்பலாக..

அவளே புலம்பி ஓயட்டும் என்று இருந்தவர், ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல் “கண்ணம்மா.. மினி பக்குவமான பொண்ணு.. எந்த முடிவு எடுத்தாலும் தெளிவா யோசிச்சு தான் எடுப்பா.. அவளை அவ போக்குல விட்டுடு.. அவ வாழ்க்கை.. அவளே முடிவு பண்ணட்டும்..”

“அம்மா.. அவ தன்னிச்சையா அந்த முடிவை எடுத்திருந்தா சரி.. என்னை வச்சு எடுக்குறதால தான் எனக்கு கஷ்டமா இருக்கு..”

“ஷைலஜா.. போதும்.. நீங்க நாலு பேரும் அடிக்கிற கூத்து.. ஜனாவை நினைச்சு நீ குழம்புவ.. உன்னை நினைச்சு மினி குழம்புவா.. அவளை நினைச்சு ப்ரிதீவ் குழம்புவார்.. இவரை பார்த்து ஜனா குழம்பி, அவர் ஒண்ணு செய்ய போக.. நீ புதுசா ஒண்ணை ஆரம்பிப்பே.. எப்போ தான் இந்த செயின் ரியாக்ஷனை நிறுத்துவீங்க..? இனியாவது உன் வாழ்க்கையை பாரு.. காதல் தோத்தா தப்பு இல்லை.. கல்யாணம் தான் தோற்க கூடாது.. மினியோட வாழ்க்கையை பார்த்துக்க பெத்தவங்க இருக்காங்க.. பெரியவங்க இருக்காங்க... அவளை பத்தி கவலைப்படுறதை நிறுத்திட்டு.. உன் பிள்ளையை பாரு.. போய் பிள்ளைக்கு பசியாத்து..”

‘ம்ம்ம்’ என்று யோசனையாக தலையசைத்தவள் “அம்மா.. காலையில இருந்து பாப்பா ரொம்ப டல்லா இருக்குறா.. சரியா பால் குடிக்கலை..” என்றாள் கவலையாக.

“வயிறு உப்புசமா இருக்கும்.. தூக்கிட்டு வா.., வசம்பு இழைச்சு வயித்துல பூசினா சரியாகிடும்.. கண்டதையும் யோசிச்சு, மனசை போட்டு உழப்பிக்கிட்டே இருக்காதே.. உன் கவனத்தை கொஞ்சம் புருஷன் பிள்ளைன்னு திருப்பு..” என்றார் கடுப்புடன் .

“ஆமா உன் மருமவன் தான் முகத்தை திருப்பிக்கிட்டு போறாரே.. என்கிட்ட சொன்னதை அங்கேயும் சொல்லுறது..” என்று முணுமுணுத்துக் கொண்டே போய் பிள்ளையை கையில் எடுத்தவளின் முகம் பதட்டத்துக்கு போக

“அம்மா.. பாப்பாவுக்கு உடம்பு ரொம்ப சுடுது..” என்று அலற

“யே.. கத்தாதே. கணச்சூடா இருக்கும்..” என்றவர் பிள்ளையை வாங்க.. அவர் முகமும் மாற்றத்துக்கு போனது “கண்ணு.. பிள்ளைக்கு உடம்பு காயுது தான்.. இரு நான் உன் அப்பாவை வரச் சொல்லுறேன்..” என்று அவர் சொல்லி முடிக்கும் முன், போனில் ஜனாவை அழைத்திருந்தவள்..

கேவலுடன் “மாமா.. பாப்பாவுக்கு உடம்பு நெருப்பா கொதிக்குது.. நீங்க சீக்கிரம் வாங்களேன்” என்றவள், பதிலை எதிர்பாராமல் அழத் துவங்க.. பதட்டமான ஜனாவும் விரைவாக வீடு வந்து சேர்ந்தான்.

அதன்பின் நிகழ்ந்தது எதுவும் ஷைலுவின் கவனத்தில் பதியவில்லை.. மருத்துவரிடம் சென்று வந்த பின்பும்... அவர் சாதாரண ஜுரம் என்று சொல்லியும்.. ஷைலு அமைதி அடையவில்லை.

அவள் மனம் முழுவதும் ஜனனியே.. ஒரு நிமிடம் கூட பிள்ளையை விட்டு அங்கே இங்கே நகர்ந்தாள் இல்லை.. இரவிலும் உறக்கம் இல்லாமல் பிள்ளையே கதியென்று மாறிவிட்டாள்.. அவ்வளவு ஏன்.. ஜனா இருக்கிறானா.. சாப்பிட்டானா என்று கூட அறிய முற்படாமல், பிள்ளையின் நினைவே அவளை ஆட்டி வைத்தது.

ஒவ்வொரு வேளையும் அவளை சாப்பிட வைக்க பார்கவி போராட வேண்டியிருந்தது. அப்போது கூட பிள்ளையை கீழே இறக்கி விட்டாள் இல்லை. ஜனாவின் நிலையோ அதனிலும் பரிதாபம். அவனும் வேலைக்கு போகாமல் வீட்டிலேயே இருந்தான். சற்று தள்ளி நின்றே தவித்தவன்.. உரிமையோடு ஷைலுவை நெருங்கி, பிள்ளையை கேட்கவோ பேசவோ பயந்தான்.

ஆனால் அவர்களை விட்டு சிறிதும் பார்வையை விலக்கவேயில்லை.. பார்க்க பார்க்க அவன் முகத்தில் பல மாறுதல்கள் வந்தன. முதலில் பிள்ளையை பற்றிய கவலை தெரிய.. பின்பு தவிப்பு தெரிய, பின்பு அதுவே ஏக்கமாக மாறி அவர்களை தவிப்போடு பார்த்துக்கொண்டு இருந்தான்.

பார்கவியோ.. ‘சே என்ன பொண்ணு இவ.. பிள்ளை பாசம் இருக்க வேண்டியது தான்.. ஆனா இது என்ன கண்மூடித்தனமா உலகத்தையே மறக்கும் அளவுக்கு..? இவளுக்கு பிள்ளை மேல இருக்குற பாசம், ஜனாவுக்கும் இருக்கும் தானே.. அவரையும் கொஞ்சம் கவனிக்கலாமே.. அவர் முகத்தை பார்த்தால் தானே அதுல இருக்குற ஏக்கம் தெரியும்.. இப்படி ஒரு அரைவேக்காட்டு பெண்ணை பெத்துட்டு அவதிபடணும்னு

என் தலையெழுத்து' என்று மனதிற்குள்ளேயே புலம்ப ஆரம்பித்தார்.

மூன்று நாட்கள் ஆனபிறகு, பிள்ளை கொஞ்சம் தேற ஆரம்பித்ததும்.. ஷைலுவின் முகத்தில் நிம்மதி வந்ததே ஒழிய.. கவனம் திசை திரும்பவில்லை.

மூன்று நாள் தாடியுடன் முகத்தில் ஏக்கம் வடிய.. மனைவி பிள்ளை இருவரையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் ஜனா. பார்கவி மதிய உணவு வேலையை முடித்துவிட்டு.. அவனை சாப்பிட கூப்பிட வந்தவர்.. அவன் கவனம் கலைவதாக இல்லை எனவும் கடுப்போடு ஷைலுவின் அருகே சென்றவர்.. அவள் கையிலிருந்த ஜனனியை வாங்கிக்கொள்ள எத்தனிக்க ..

கொடுக்க மறுத்தவள் "போம்மா.. இப்போதான் பாப்பா கொஞ்சம் தேறி வரா.. என் கையில இருந்தா தான்.. அவளுக்கு சரி வரும்.."

கடுப்பாக "இதெல்லாம் ரொம்ப அதிகம்டி.. ஊர் உலகத்துல யாரும் பிள்ளை பெத்துக்கலை.. அதை வளர்க்கலை.. நீ தான் எல்லாமே அதிசயமா செய்யுறியா..? பிள்ளையை கீழே விட்டுப் பழக்கு.. கைச்சூடு கண்டுக்கிட்டா, அப்புறம் உனக்கு தான் கஷ்டம்.. அவளை கீழே படுக்கப் போட்டுட்டு போய் தம்பிக்கு சாப்பாடு போடு..போ..." என்று அதட்டலாக சொல்ல..

"நீயே போட்டுடுமா.. பாப்பாவுக்கு மருந்து கொடுத்திருக்கேன்.. தூங்கிட்டு இருக்கா.. கீழே விட்டா.. தூக்கம் கலைஞ்சு அழுவா.. அப்புறம் வாந்தி எடுத்துடுவா.. சரி வராது.. நீயே அவருக்கு சாப்பாடு போடு.." என்று பிள்ளை மீதிருந்த பார்வையை கூட விலக்காமல் சொல்ல.

தனக்கு சாப்பாடு போட சொல்லி பார்கவி சொன்னதும் மலர்ந்த ஜனாவின் முகம், ஷைலுவின் பதிலில் முகம் வாடி வதங்கி போக "எனக்கு பசி இல்லைம்மா.. நான் அப்புறமா சாப்பிடுறேன்.." என்றான் அடங்கிய குரலில்.

அவனது பதில் மேலும் கடுப்பை கொடுக்க "கண்ணம்மா.. கைக்குழந்தைக்கு உடம்பு முடியாம போறது சகஜம்.. ஆனா இதுக்காக மூணு நாளா உன்னை சுத்தி என்ன நடக்குதுன்னு கூட தெரியாம, பைத்தியம் போல நடந்துக்குற.. பிள்ளையை என்கிட்ட கொடுத்துட்டு, தம்பியை கவனி.." என்று கண்டிப்பான குரலில் சொல்லிக்கொண்டே பிள்ளையை வாங்க கையை நீட்ட.. கொடுக்க மறுத்து அதை இறுக்கி

கட்டிக் கொண்டவள்..

“தரமாட்டேன்.. தரமாட்டேன்.. எனக்கு பயமா இருக்கும்மா.. அன்னிக்கு அவர் மேல இருந்த கோபத்துல.. இந்த பாப்பா வேண்டாம்னு நினைச்சேன்.. டாக்டர் கிட்ட குழந்தையை அழிக்க சொல்லிக் கேட்டேன்.. ஆனா அப்புறம் மனசை மாத்திக்கிட்டு, அப்போ கூட இவரை பழி வாங்கணும்னு தான் பாப்பாவை வச்சுக்கிட்டேன்..

இப்போ பயமா இருக்கு.. பாப்பாவுக்கு ஏதாவது ஆகிடுமோன்னு தவிப்பா இருக்கு.. நான் அன்னிக்கு அப்படி நினைச்சது தப்புதான்.. அதுக்கு கடவுள் என்னை பழி வாங்கிடுவாறோன்னு பயமா இருக்கு.. சத்தியமா.. எனக்கு பாப்பா மேல எந்த கோபமும் இல்லைம்மா... முட்டாள்தனமா நான் தப்பா நினைச்சுட்டேன்.. இப்போ பயமா இருக்கே..” என்றவள் பைத்தியம் போல புலம்ப.. அவளது முரண்பாடான நடவடிக்கைக்கு இதுதான் காரணமா என திகைத்து போய்.. அதிர்ச்சியுடன், விழிகள் தெறித்து விடுவது போல மகளை பார்த்தார் பார்கவி.

ஜனாவின் முகம் இருளடைந்து போய்.. அவளையே பார்த்துக்கொண்டு இருந்தவன்.. வேகமாக அவளை நெருங்கி.. வெடுக்கென பிள்ளையை பிடுங்கியவன், அதை பார்கவியிடம் கொடுத்துவிட்டு.. அவள் மடியில் படுத்தவன்..

“என்னை மன்னிச்சுடு ஷைலு.. எனக்கு தெரியலை.. நான் எந்தளவுக்கு உன்னை கொடுமைப்படுத்தி இருக்கேன்னு எனக்கு தெரியலைடி.. ஆனா இந்த மூணு நாளா.. நீ பாப்பாவை பார்த்துக்கிட்டே பாரு, அது.. அது.. அதைதான் உன்கிட்ட நான் எதிர்பார்த்தேன்.. அந்த மாதிரியே, உன்னோட கவனம் முழுக்க என்னை சுத்தியே இருக்கணும்..

உனக்கு வேற நினைப்பு எதுவும் இருக்க கூடாதுன்னு நினைச்சேன்.. அதை சொல்ல தெரியாம தப்பு பண்ணிட்டேன்.. என்னை மன்னிச்சுடு... இப்போ பிள்ளைக்கு கொடுக்குற கவனத்தை, இவ்வளோ நாளா எனக்கு ஏண்டி கொடுக்கலை? அது கிடைக்கலைன்னு தானே.. நான் இத்தனை தப்பும் செஞ்சேன்.. ஏண்டி என்னை ஒதுக்குற..?

நீ இல்லாம என்னால வாழவே முடியாதுடி.. என்னை மன்னிச்சுடு..” என்று கதறியவன்.. குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தான். சற்று நேரத்தில் தன்னையே தேற்றிக்கொண்டு.. கண்களை அழுந்த துடைத்தவன்...

தலைகுனிந்து “என்னை மன்னிச்சுடு ஷைலஜா.. நான் செஞ்சது எல்லாம் தப்பு தான்.. நானே உணர்ந்துட்டேன்.. என் பொண்டாட்டிக்கிட்ட மன்னிப்பு கேட்குறதுல எனக்கு எந்த அசிங்கமும் இல்லை.. உன்னையும் பாப்பாவையும் பிரிஞ்சு என்னால வாழ முடியாது.

இத்தனை நாளா.. நான் இதை சொல்லணும்னு தானே நீ போராடுனே.. சொல்லிட்டேண்டி சொல்லிட்டேன்.. என்னோட அத்தனை தப்பையும் உணர்ந்துட்டேன்..” என்றவன், நிற்காமல் அவர்கள் அறைக்குள் சென்றுவிட.. அதுவரை பனிச்சிலை போல உறைந்துபோய் அப்படியே அமர்ந்திருந்த ஷைலஜா

அவன் விலகி செல்லவும் தான்.. தன் நினைவு வந்தது போல தாயை கேள்வியாக பார்க்க.. அவரோ வடியும் கண்ணீரை கூட துடைக்க தோன்றாதவராய்.. “புரியலையா கண்ணம்மா..? ஜனா தம்பியோட எதிர்பார்ப்பு என்னன்னு புரியலையா..? அவர் உன்கிட்ட காதலியையோ,மனைவியையோ எதிர்பார்க்கலை.. அவருக்கு தேவை அம்மா.. உன்கிட்ட தாய்மையை தான் எதிர்பார்த்து இருக்கார்..!

அது புரியாம.. அதை கொடுக்க தெரியாம.. போடி.. உன்னை குழந்தை, குழந்தைன்னு சொல்லிட்டு, அவர் தான் குழந்தையா இருந்திருக்கார்... போ, போய் ஒரு அம்மாவா.. அவருக்குத் தேவையான அரவணைப்பை கொடு.. காலம் பூரா உன்னையே சுத்தி வருவார்.. நிறை குறையோட புருஷனை ஏத்துக்குற மனைவி கிடைச்சது அவரோட அதிர்ஷ்டம்னா... ஜனா உனக்கு கிடைச்ச வரம்.. போம்மா.. நான் பிள்ளையை தூக்கிட்டு போய், கீழே பார்க்குல செத்த காத்தாட வச்சிருந்துட்டு வரேன்.. நீ அவரை பாரு” என்றவர் பிள்ளையோடு கிளம்ப..

அப்படியே சிந்தனையாக இருந்தவளின் முகம்.. மெல்ல மெல்ல நிம்மதியை கடன் வாங்கியது.

அறைக்குள் நுழைந்தவள்.. குப்புற படுத்திருந்த ஜனாவின் அருகே மெல்ல அமர.. அவள் அசைவை உணர்ந்தவன்.. முகம் திருப்பாமல் அவளை விட்டு விலகி அப்படியே நகர்ந்து படுக்க.. முகம் நிறைந்த புன்னகையோடு மேலும் நெருங்கி அமர்ந்தாள். மீண்டும் அவன் நகர.. பிடிவாதமாக அவன் தலையை எடுத்து மடியில் வைக்க.. அவனோ மீண்டும் விலக பார்க்க.. அதற்கு இடமளிக்காமல் அவனை அணைத்தவள்.. அவன் தலையை கோதி விட ஆரம்பித்தாள்.

அப்படியே மெய்மறந்து இருந்தவன்.. கொஞ்ச நேரத்திலேயே அவளை இடுப்போடு சேர்த்து அணைத்தவாறே.. “என் மேல கோபம்

வரலையா..?" என்றான் சிறுபிள்ளை போல..

முகம் சிரிப்பை கடன் வாங்க.. சிரித்தபடியே அமைதியாக இருந்தாள். மெல்ல தலை நிமிர்ந்தவன்.. அவள் முகம் பார்த்து "நிஜமாவே என் மேல கோபமோ வெறுப்போ இல்லையா..?"

சிரித்தபடி 'இல்லை' என்பது போல தலையசைத்தவள் "பிள்ளை தப்பு செஞ்சா அம்மாவுக்கு வெறுக்க தோணாது.. கோபம் வரும், அதுவும் கொஞ்ச நேரம் தான் இருக்கும்.. வருத்தம் நிறைய இருக்கும்.. ஆனா..." என்று இழுத்தவள்.. "அதுவும் இந்த பிள்ளை வருத்தப்பட்டா, அதெல்லாம் வந்த சுவடு தெரியாம ஓடி போயிடும்" என்று அவன் மூக்கோடு மூக்கை உரசியபடி சொல்ல..

பிரகாசமான முகத்தோடு துள்ளியெழுந்து அமர்ந்தவன்.. அவள் இரு கன்னத்திலும் கை கொடுத்து, அவள் முகத்தை தாங்கியபடி "நிஜமாவா.." என்று ஒற்றை கேள்வியாக கேட்க.

கண்களில் ஆயிரம் மின்னலை கொண்டு வந்தவள் கிண்டலாக "என்ன நிஜமாவா..?"

"என்மேல கோபம் இல்லைன்னு சொன்னது.."

'ம்ம்' என்று யோசிப்பது போல மேலே பார்த்தவள், உதட்டை சுளித்தபடி "அப்படியா சொன்னேன்..? பாருங்களேன்.. அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி நடந்தது வரைக்கும் நான் மறந்துட்டேன் போல.. நான் கோபபடுற அளவுக்கு என்ன நடந்துச்சு மாமா..?"

சிரித்தபடி "எதுவரைக்கும் நியாபகம் இருக்குன்னு சொல்லு.. மீதி நடந்ததை நான் சொல்லுறேன்.."

தலையில் ஒற்றை விரலால் தட்டியபடி.. "அது அன்னிக்கு, உங்களைத் தவிர வேற யாரோடும் கல்யாணம் வேண்டாம், நீங்க தான் வேணும்னு நினைச்சு.. இங்கே பத்திரிக்கை எடுத்துட்டு வந்தேன்ல.. அன்னிக்கு.. சுவத்துல சாஞ்சு நின்னு உங்களை 'ஜனா'ன்னு கூப்பிட்டேனே, அது வரைக்கும் தான் நியாபகம் இருக்கு.." என்று முகம் சிவக்க சொல்ல..

அப்படியா என்று தாடையை தடவியவன்.. "அதுக்குமேல நடந்தது எதுவும் உனக்கு நியாபகம் வரவே வேண்டாம்.. ஏன்னா மறுபடியும் என்னால கதையை முதல்லேருந்து ஆரம்பிக்க முடியாது.." என்று சொல்லி சிரிக்க..

பல்லைக் கடித்தபடி “பொண்டாட்டி ரொமான்ட்டிக்கா ஹின்ட் கொடுத்தா.. இப்படி சொதப்புறியே மச்சான் ! ” என்று தலையணையை எடுத்து அவனை மொத்த.. சிரித்தபடி அதை வாங்கியவன்..

“எனக்கு எதுக்கு ஹின்ட் கொடுக்கணும்.., என் முட்டாள் பொண்டாட்டி.. நீ பார்க்குற ஒரு பார்வை போதுமே.. அய்யா தீயா வேலை செய்வேனே..!” என்று அவளை நெருங்க

“தோடா ரொம்பதான் வழியுது.. முதல்ல, ஐயாகிட்ட இந்த மாற்றம் எப்படி வந்துச்சுன்னு சொல்லுங்க, அப்புறம் உங்க ஜொள்ளு டாமை திறந்துவிட்டு என்னை மூழ்கடிக்கலாம்..” என்றவள்.. வெட்கத்தோடு அவனை விட்டு விலகி அமர்ந்து அவன் முகம் பார்க்க...

அதுவரை பிரகாசமாக இருந்தவனின் முகம் சோக ஆடைக்கு மாற “நிறைய சொல்லணுமே.. இப்போவேவா..?” என்றவனுக்கு பதிலாக தலையை மட்டும் அசைத்தவளை பார்த்து பெருமூச்சோடு..

“ஷைலு.. ஃபாதர் இங்கே வந்த அன்னிக்கு நான் பெண்கள் இல்லத்துக்கு போனேன்.. அங்கே எல்லோருமே பாதிக்கப்பட்டவங்கம்மா.. ஆனாலும் அவங்களுக்குள்ளே தனிமை இல்லை.. ஒருத்தருக்கொருத்தர் ஆதரவா.. ஒரு புரிதலோடு இருக்காங்க.. நானும் அதே போல இல்லத்துல வளர்ந்தவன் தான்.

ஆனா நாங்க எல்லோருமே தனித்தனி ஆளாய் தான் இருந்திருக்கோம்.. பொண்ணுங்க மாதிரி ஏன் எங்களால மனசு விட்டு பேசி கலகலன்னு இருக்க முடியலைன்னு தெரியலை.. நான் எப்பவும் தனிமையிலேயே இருந்தவன்.. என்னோட வாழ்க்கையில நான் மட்டும் தான்.. அதைத்தாண்டி உறவுன்னு பார்த்தா ஃபாதர் மட்டும் தான்” என்று நிறுத்த

“புரியுது மாமா.. பொண்ணுங்க இயல்பாவே அதிகம் பேசுவாங்க.. அதுவே அவங்களை சுத்தி ஒரு சர்க்கிள் கிரியேட் ஆகிடும்.. கூடவே பெரிய பொண்ணுங்க சின்ன பொண்ணுங்களை கவனிப்பாங்க.. அதுவும் பெண்கள்கிட்ட இயல்பாவே இருக்கிற அன்பு, கனிவு.. இது அத்தனையும் ஆண்கள்கிட்ட இல்லேன்னு சொல்லலை.. அவங்களுக்கு அதை வெளிப்படுத்திக்க தெரியாது..”

“உண்மை தான் ஷைலஜா.. இல்லத்துல என்னோட, பெரியவங்க சின்னவங்கன்னு நிறைய பேர் இருந்தாங்க.. பார்க்கும்போது ஒரு சிரிப்பு.. நேரம் கிடைச்சா கொஞ்ச நேரம் பேசுவோம், அதுவும்

வாழ்க்கையில எப்படி முன்னேறுவதுன்ற பேச்சா தான் இருக்கும்.. நான் பார்த்த வெளி உலகம் ஒண்ணும் சொல்லிக்குற மாதிரி இல்லை.. ஒண்ணு பரிதாபமா பார்க்கும்.. இல்ல முகம் சுளிக்கும்.. ரெண்டுமே எனக்கு எரிச்சலை கொடுத்துச்சு."

"நான் உண்டு.. என் வாழ்க்கை உண்டுன்னு இருந்தப்போ தான் உன்னை முதன் முதலா பார்த்தேன்.. பெண்கள்னா எனக்கு பெருசா எந்த மதிப்பும் இல்லை.. காரணம் என் பிறப்பா இருக்கலாம்.. ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலளவில் மட்டும் தான் வித்தியாசம் இருக்கு... மற்றபடி அவங்களும் நம்மை போலதான்னு அன்னி வரைக்கும் நினைச்சுட்டு இருந்தேன்..

உன்னை ஒரு பொண்ணா உணர்ந்ததை விட, சக மனுஷின்னு மட்டுமே நினைச்சேன்.. நீ என்னை அனாதைன்னு வெறுக்கவும் இல்லை.. பரிதாபப்படவும் இல்லை... அது தான் முதல் ஈர்ப்பைக் கொடுத்துச்சு.. அப்புறம் உன்னை நினைக்க நினைக்க, எப்பவும் நீ என் மனசுலேயேதான் இருக்கே என்கிறதை உணர்ந்தேன் .. உன்னை என் கைக்குள்ளே வச்சுக்கணும்னு ரொம்ப ஆசை.. இந்த உலகமே உன்னை என்கிட்ட இருந்து பிரிக்க பார்க்குதுன்னு ஒரே பயம்.. ஒரே வார்த்தையில சொன்னா தாழ்வு மனப்பான்மைதான்.." என்றவன்.. தயங்கி பின் தொடர்ந்தான்...

"அது தான் உன்கிட்ட தப்பாவே பேச வச்சுது.. அதுக்காக நீ என்னை வேண்டாம்னு உதறும் முடிவுக்கு வருவேன்னு நான் எதிர்பார்க்கலை.. உன் கோவம் புரிஞ்சுது, ஆனா அதை ஏத்துக்குற மனசு தான் வரலை.. என்ன செய்யுறதுன்னு தவிச்சப்போ, வழி கொடுத்தது ப்ரிதீவ் தான்.."

"ப்ரிதீவ்வா...! என்ன சொல்லுறீங்க மாமா..?" என்றாள் அதிர்ச்சியுடன்.

"ம்ம்ம் ஆமா ஷைலஜா.. அன்னிக்கு நீ இங்கே வரதுக்கு முன்னாடி.. உன்னை பார்க்க காலேஜுக்கு வந்தேன்.. அப்போ தான் உன்னோட என்கேஜ்மென்ட் பத்தி நிலா சொன்னா.. ரொம்ப டென்ஷன் ஆகிடுச்சு... தலைவலி வேற... சரின்னு அங்க பக்கத்துல இருந்த கஃபேக்கு போனேன்.."

யோசனையாக "அது எனக்கு தெரியுமே.."

"அங்க நான் மூட் அவுட்டா இருக்குறதை பார்த்துட்டு,ப்ரிதீவா வந்து ஆறுதல் சொன்னான்.. அப்போ அவனுக்கு ஒரு போன் வந்துச்சு.. அவன் ஃபிரெண்டை யாரோ ஒரு பொண்ணு ஏமாத்திட்டாங்கன்னு..

அதுக்கு அவன்.. இந்த மாதிரி பொண்ணுங்களை.. கதறிக்கிட்டு காலுல விழ வைக்கணும்னு சொன்னான்.. அந்த வாக்கியத்தை, கடவுளே எனக்கு சொன்ன மாதிரி பட்டுச்சு..”

கடுப்பாக “ஓ.. அதான் என்னை காலுல விழ வச்சீங்களா..? இது ஒண்ணுக்காகவே மினியை அவர் கூட சேர விடக் கூடாது.. எப்படி மாமா.. பழிவாங்குறதுக்காக என்ன வேணும்னாலும் செய்வீங்களா..?” என்றாள் ஆதங்கத்துடன்

மெல்லிய குரலில் “இல்லம்மா, அப்போ நான் இருந்த மனநிலைல அது தப்புன்னு தோணலை.. நீ என் மேல இருக்குற கோவத்துல, தப்புத்தப்பா யோசிக்கிற.. நீ என்னுடையவளா ஆகிட்டா எல்லா பிரச்னையும் சரியாகிடும்னு மட்டும் தான் நினைச்சேன்.. ஆனா அது எவ்ளோ பெரிய தப்புன்னு.. சாரிடி..”

“போங்க மாமா.. நீங்க ஆயிரம் சொன்னாலும், இப்போ நினைச்சா கூட கஷ்டமா இருக்கு.. அன்னிக்கு... அப்போ... அந்த நேரத்துல... ச்சு என்னை ரொம்ப கேவலமா நினைச்சிருப்பீங்க இல்ல.. பழிவாங்க உங்களுக்கு வேற வழியே தெரியலையா..?” என்றவளின் குரலில் ஆதங்கம் நிரம்பி வழிந்தது.

“ஹே முட்டாள்.. நான் எப்படி உன்னை தப்பா நினைப்பேன்..? அன்னிக்கு உன் முகமே உன்னோட காதலை சொல்லிடுச்சே.. அப்போ நான் கூட சொன்னேனே, வீட்டுக்கு போன்னு.. தப்பா நினைக்கிறவன் எப்படி அப்படி சொல்லுவான்..? அதுவுமில்லாம எனக்கு கோவம் வந்தா, கோவம் மட்டும் தான் வரும்.. ரொமான்ஸ் மூட் வராது..”

“அப்புறம் ஏன் மாமா அப்படி பேசுனீங்க..?”

“அது, ஆரம்பத்துல கோவம் இருந்துச்சு.. அப்புறம் இதுதான் வழின்னு முடிவு பண்ணினதுக்கு அப்புறம்.. ஓகேவா தான் இருந்தேன்.. நீ பேசின விதம் கொஞ்சம் கடுப்பை கிளப்புச்சு தான்.. அப்புறம் உன் முகமே எனக்கு நிறைய தெளிவையும் கொடுத்துச்சு.. அதான் தைரியமா, வேற எதையும் யோசிக்காம எல்லாம் நடந்து முடிஞ்சு... எல்லா குழப்பமும் சரியாகி.. தெளிவா மனசு நிறைய சந்தோஷத்தோட இருந்தேன்.

தூங்கி எழுந்ததுக்கப்புறம் கத்துவியே.. எப்படி சமாதானம் செய்யலாம்னு யோசிச்சிட்டே இருந்தேன்.. அப்போ பார்த்து அந்த பத்திரிக்கையை பார்த்தேனா.. அதிலே ப்ரிதீவ் பேரை பார்த்ததும், நொந்து போயிட்டேன்...போயும் போயும், இந்த மாதிரி நடந்து,உன்னை

என்கிட்டே தக்க வச்சுக்க ஐடியா கொடுத்த அவரா என் லைன்ல கிராஸ் ஆகணும்ன்ற ஆதங்கம்.. நீ வேற ரூமுல இருந்து வெளியே வந்ததும், முகத்தை திருப்பிக்கிட்டியா.. அதைப் பார்த்ததும் வழக்கம்போல கோபம் சுள்ளுன்னு ஏறிடுச்சு..”

“ஏறும்.. ஏறும்.. இருக்கு.. உங்களுக்கு இருக்கு.. அப்புறம் எப்படி உங்க தப்பை உணர்ந்தீங்க..? அதை சொல்லுங்க..” என எரிந்துவிழ..

“ஷைலு.. முதல்ல பெண்கள்னா மரியாதை வந்தது எப்போ தெரியுமா..? உனக்கு வயித்துல பிரச்சனை வந்து ஆஸ்பத்திரிக்கு போனியே, அப்போ... பெண்களுக்கு இருக்கிற சங்கடங்களை டாக்டர் சொல்லுறப்போ ஆச்சரியமா இருந்துச்சு.. அப்போதான் பொண்ணுங்க கிட்ட ஒரு மதிப்பு வந்துச்சு..

அடுத்ததா, நீ கர்ப்பமா இருக்கேன்னு தெரிஞ்சப்போ.. என் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் கிடைச்சுதுன்னு பூரிப்பு வந்துச்சு.. இதுக்கு காரணம் நீ தானேன்னு உன்மேல இருந்த காதல் அதிகமாச்சு.. ஜனனி வயித்துல இருக்குறப்போ, உன்னை பார்க்க பிரமிப்பா இருந்தது.. அவ பிறக்கும்போது நீ பட்ட பாடு.. அதுவரைக்கும் காதலும் காமமும் மட்டுமே தெரிஞ்ச எனக்கு, அந்த நிமிஷம்.. அது மட்டும் இல்லைடா வாழ்க்கைன்னு சொன்ன மாதிரி இருந்தது.. நீ என் சுவாசம் ஷைலு..

அதுவரை , இந்த கல்யாணம், சமுதாயம், கட்டுப்பாடு எல்லாம் முட்டாள்தனம்னு நினைச்ச எனக்கு.., ஒவ்வொண்ணுக்கும் அர்த்தம் இருக்குன்னு வாழ்க்கை சொல்லி கொடுத்துச்சு.. ஆனா நம்மோட பழசை நான் நினைச்சு பார்க்கலை.. நீ நல்லபடியா இருந்ததால, அதுக்கான தேவையும் எனக்கு இல்லை.. அதனால உன்னோட உணர்வுகளை பத்தியும் யோசிக்கலை.. பிரச்னை வந்ததுக்கு அப்புறம் அன்னி சிஸ்டரை பார்க்க போனேன் இல்ல” என்றவன்.. அன்று நடந்த நிகழ்வுகளை சொல்லிமுடிக்க..

“செத்துட்டேன் ஷைலு.. ஒவ்வொரு பொண்ணும் ஏதோ ஒருவகையில பாதிக்கப்பட்டு.. பார்க்கவே பரிதாபமா இருந்துச்சு...அவங்களை இந்த நிலைமைக்கு உள்ளாக்கினவங்களை கொல்லணும்னு தோணுச்சு.. ஆனா அதே தப்பை தானே நானும் செஞ்சு இருக்கேன்.. எனக்கு என்ன தண்டனை..? அவங்க மிருகம்னா.. நான் யார்..? நீ சொன்னப்போ புரியாத உணர்வு.., எனக்கு அங்கே புரிஞ்சுது..

சத்தியமா, எனக்கான வெறும் உடல் தேவையா மட்டுமே உன்னை பார்க்கலை ஷைலு.. வாழ்க்கை தேவையா தான் பார்த்தேன்.. உன்னை

கல்யாணம் பண்ணுறதுக்கு அதையும் ஒரு வழியா தான் நினைச்சேன்.. ஆனா உன்னோட உணர்வை கொன்னு இருப்பேன்னு நினைக்கவே இல்லை...” என்று நீளமாக பேசிக்கொண்டு போனவனின் வாயை மூடியவள்..

“போதும் மாமா.. நீங்க செஞ்ச தப்பு உங்களுக்கு புரிஞ்சுடுச்சு இல்ல.. அது போதும். இன்னையோட இதை மறந்துடுவோமே.. அன்னைக்கு நடந்ததுல எனக்கு வருத்தம் இருந்துச்சு.. இப்போ எதுவும் இல்லை.. இப்போ யோசிச்சா ஏன் கோவம் வந்துச்சுன்னு கூட தெரியலை.. அப்படியிருக்க இனிமே இதை பத்தி பேச வேண்டாம்”

தயக்கமாக “ஷைலு, அந்த பையன் கெவினை நாம தத்து எடுத்துக்கலாமா..?” என்று கேட்டவனை புன்னகையோடு பார்த்தவள்..

“என்கிட்ட கேக்கணுமா..? கண்டிப்பா செய்வோம் மாமா.. ஆனா அப்பாவுக்கு ஆண் பிள்ளை இல்லை.. எனக்கு அடுத்து ரெண்டும் ரெட்டைவாலா போய்டுச்சு.. அதனால கெவின் நம்ம முதல் பையனா இருக்கட்டும், நமக்கு மூணாவதா ஒரு பையன் வேண்டாமா...?” என்று வெட்கத்தோடு கேட்டுவிட்டு எழுந்துக்கொள்ள.. அவள் கையை விடாமல் பிடித்து இழுத்தான்.

‘என்ன இது’ என்பது போல “விடுங்க மாமா..”

“விடணுமா..? மூணாவதா, ஒரு பையன் மட்டும் போதுமா..? பேசாம அடுத்ததை ரெண்டா.. ரெட்டைவாலுங்களா பெத்துக்கலாமா..? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, நீ வேற ஹின்ட் எல்லாம் கொடுத்திருக்க.. அதை ஏன் வேஸ்ட் பண்ணனும்..?”என்றான் மையலுடன்.

“ஆத்தி.. ஐயாவுக்கு ரொம்ப தான் ஆசை.. விடுங்க..” என்று வெளியே ஓடியவளை பிடிக்க துரத்தியவனை தடுத்து நிறுத்தியது பார்கவியின் வரவு.

கண்ணாடியில் தெரிந்த மினியின் சோக முகத்தில் கண்ணீர் கரை கட்டி நின்றது. அவள் தலையில் பூவை வைத்துவிட்ட ஷைலுவின் முகத்திலும் டன் அளவுக்கு சோகம்..

“ஷைலு.. நீயாவது அப்பாகிட்ட சொல்லேன்.. எனக்கு இந்த நிச்சயம் வேண்டாம்..”

“என்னை என்னடி சொல்ல சொல்லுற..? ப்ரிதீவ்வையும் வேண்டாம்னு

ஒதுக்கிட்ட.. அப்பா பார்த்த பையனை தானே கட்டுவேன்னு சொன்ன.. அதான் இந்தப் பையனை அவர் ஏற்பாடு பண்ணியிருக்கார்.. அவர்கிட்ட எந்த காரணத்தை சொல்லி நிறுத்த சொல்லுவேன்..?"

"ப்ளீஸ் ஷைலு.. ப்ளீஸ் ஏதாவது சொல்லேன்.."

கடுப்பாக "மினி.. நீ இன்னும் ப்ரிதீவ்வை விரும்புறியா..?"

"சீ.. இல்ல.."

"அப்புறம் என்ன.. நான் பையனோட போட்டோவைப் பார்த்தேன், ப்ரிதீவ் அளவுக்கு இல்லைன்னாலும் நல்லா கெடா மீசையும்.... மூக்கும் முழியுமா ஓரளவுக்கு லட்சணமா தான் இருக்கார்.. மரியாதையா இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கோ.."

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த ஷைலு மனம் தாங்கலாமல் "மினி.. ப்ளீஸ்டி.. ஆனாலும் உனக்கு இவ்வளவு கோபம் இனிமேலும் வேண்டாம்.. நீ ம்ம்னு ஒரு வார்த்தை சொல்லு .. உங்க அப்பாகிட்ட நான் பேசுறேன்.. ப்ரிதீவ் பாவம்டி.."

தனக்காக பேசுபவளை ஒரு வெற்றுப்பார்வை பார்த்தவள்.. ஒற்றை வார்த்தையாக "வேண்டாம்" என்றாள்

30

என் மனதில் காதல் தோன்றும் ஒவ்வுவொரு முறையும் நீ மட்டும் என் இதயத்தில் நிற்கும் மாயம் என்ன...?

ஷைலுவுக்கு கோபம் கட்டுக்கடங்காமல் வந்தது.. இது என்ன வறட்டு பிடிவாதம் என்றும் தோன்றியது.. கோபத்தை மறைக்காமல் அப்படியே காட்டியவள்..

"ஓ அதான் அம்மணி ரொம்ப தெளிவா இருக்கீங்களே, அப்புறம் என்ன..? ஜோரா கிளம்ப வேண்டியது தானே.. உனக்கு மத்தவங்க யாருமே முக்கியமில்லை, அப்பா தானே முக்கியம்.. போ.. போய் உங்கப்பாவோட இஷ்டப்படியே செய்."

ஷைலுவின் கோபத்தை கண்டவளுக்கோ தவிப்பாக இருந்தது. ஏன் யாருமே தன்னை புரிந்துக் கொள்ளவில்லை என்ற வருத்தம் பொங்கியெழுந்தது. தனக்கு உதவி செய்வாள் என்று நினைத்த தன் தோழியே, தந்தையின் விருப்பபடி நடக்க சொல்லவும்.. அடுத்து என்ன..

என்பது போல் யோசனையாக அமர்ந்து இருந்தவளை பார்த்த ஷைலு, வருத்தமாக பெருமூச்சு ஒன்றை பலமாக விட்டவள்...

“மினி.., இப்படியே எவ்ளோ நேரம் இருப்பே..? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட போறாங்க.. சீக்கிரம் கிளம்புடி..”

தவிப்பாக “எப்படி ஷைலு உன்னால இப்படி சொல்ல முடியுது..? என் வேதனை உனக்கு கொஞ்சமும் புரியலையா.. இல்லே புரியாத மாதிரி நடிக்கிறியா..?”

எரிச்சலாக “ஏய் என்னடி திரும்ப திரும்ப ‘என் தங்கச்சியை நாய் கடிச்சிடுச்சுன்னு’ புலம்புற.. ப்ரீதீவ்வும் வேண்டாம்.. அப்பா சொல்லுற பையனும் வேண்டாம்னா.. நான் என்ன தான் செய்யுறது..? நீ என்ன நினைக்கிறேன்னு சொல்லித் தொலை.. ப்ரிதீவ் தான் வேணும்னா, வெளிப்படையா சொல்லிடு.. இப்பவே ஏதாவது செய்ய முடியுமான்னு பார்க்கலாம்.. அதை விட்டுட்டு இப்படி இம்சையை கூட்டுற..”

“என்ன ஷைலு.. என் முடிவு ஒரே முடிவு தான்.. அவன் எனக்கு வேண்டாம்.. நோ வே.. அவனை நினைச்சாலே எரிச்சல் வருது.. ஆனா அவனை மறக்குறதுக்கு கொஞ்சம் டைம் வேணும். என் மனசு என்ன ட்ரெஸ்ஸா...? நினைச்ச நேரத்துல மாத்திக்க..! இன்னொருத்தனை எப்படிடி..?”

அலுப்பாக “ஓ.. இதான் உன் பிரச்சனையா..? இங்க பார்.. ஒரு வகையில பார்த்தா இது தான் நல்லது.. இன்னும் கொஞ்சம் டைம் வேணும்னு நீ காத்திட்டு இருந்தா.. ப்ரிதீவ் திரும்ப தொல்லை பண்ணுவார்.. உன் மனசை மாத்த பார்ப்பார்.. சோ டைம் கேட்காதே... இப்போ உடனே கல்யாணம் நடந்தா எல்லாம் சரியா போயிடும்.. மனசை போட்டு குழப்பிக்காதே”

“ஏய் என்னடி.. நேரம் பார்த்து நான் சொன்னதை எனக்கே சொல்லுறியா...? என்னை பழி வாங்குறியா..?” என கண் கலங்க..

மலைப்பாக “பாரேன்.. அப்போ நீ.. எனக்கு இதை தான் செஞ்சியா..? உனக்கு நல்லது சொன்னா.. என் பக்கமே திருப்பி விடுற..”

“என்னடி.. என்ன திருப்பி விட்டேன்.. நீ எப்படியும் ஜனாவை தானே கல்யாணம் பண்ணிக்கிட்டே.. பெருசா பேசுற..”

கடுப்பாக “நீ என்ன நினைக்கிறேன்னு உனக்கே புரியலை.. லூசு போல பினாத்துற.. இப்போ என்ன.. நீ ப்ரிதீவ்வை கல்யாணம் பண்ணிக்க

போறேன்னு சொல்லுறியா.., எனக்கு நடக்குறது தானே உனக்கும் நடக்குது.. அப்படி பார்த்தா நான் ஒருத்தனை நிச்சயம் பண்ணி, இன்னொருத்தனை கல்யாணம் செய்துக்கிட்டேன்.. அப்போ நீயும் அப்படியே செஞ்சுடு..”

“சீ.. சீ.. வாயை மூடு.. அவனை நான்.. அது மட்டும் இந்த ஜென்மத்துல நடக்காது..” என்றவள் கண்ணாடியின் பக்கம் திரும்பி அமர்ந்து பவுடர் டப்பாவை எடுத்தவள்.. மனமில்லாமல் அதை திரும்ப விட்டெறிந்து விட்டு.. கன்னத்தில் கையை முட்டுக் கொடுக்க..

ஷைலு கிண்டலாக “மினி.. மேக்கப் சரியா இருக்கான்னு கண்ணாடியை பாரு.. இப்படி உன் அழகை நீயே உணராதவளா இருந்தா எப்படி..”

“ஏய்.. வேண்டாம் வெறுப்பேத்தாதே.. போடி வெளியே..” மினி கத்த துவங்க.. அந்த நேரம் உள்ளே வந்தனர் யாழினியும் ரவியும்..

யாழினி கடுப்பாக “ஏன் ஷைலு.. இவ ஏன் கத்துறா..? என்ன வேணுமாம் இந்த அம்மாவுக்கு..? யார் நாசமா போனா இவளுக்கு என்ன..? அதான் இவ நினைச்சது எல்லாம் நடக்குதே.. அப்புறம் என்ன.. ?”

“இல்ல அக்கா.. கொஞ்சம் கூல் பண்ணலாம்னு நினைச்சேன்.. அவளுக்கு கோபம் வருது..”

“இவளோட மல்லுக்கட்டணும்னு உனக்கென்ன தலையெழுத்து ஷைலு..,..! இந்த அம்மா தப்பே செய்யாத தேவதை.. இனிமே செய்யவும் மாட்டாங்க... சோ காலம் பூரா இப்படி டென்ஷன்ல கத்தணும்னு இருக்கு.. எல்லாம் இவ விதி.. தானே தன் தலையில மண்ணை வாரி போட்டுக்குறா.. என்னவோ செய்யட்டும்... நீ வா”

கோபமாக “அக்கா.. நீயும் என்னை புரிஞ்சுக்காம..”

“ஏய் நீ பேசாதே.. எரிச்சலா வருது.. பாவம் ப்ரிதீவ்.. அமெரிக்கா போறானாம்.. அவங்க அம்மா சொன்னாங்க... அப்படி என்னடி உனக்கு அவன்மேலே பொல்லாத கோவம்?”

“நீ என்னையே திட்டு.. அவங்க உன்கிட்ட விவரமா பேசுனாங்க இல்ல.. அதான் நீ என்னைப் பேசுறே... ஆனா இதுவரைக்கும் அந்த எலியும், எலிஃபென்ட்டும் என்கிட்ட ஒரு தடவை கூட பேச முயற்சி பண்ணலை தெரியுமா..” என்று குழந்தை போல குறை சொன்னவளை புரியாமல் பார்த்த யாழினி...

யோசனையாக “யாருடி அது .. எலியும் எலிஃபென்ட்டும்..?”

முகம் சுருங்க “எல்லாம் அவனோட அம்மா அப்பா தான்..”

திடுக்கிட்டவளாக “அதுல யார் எலி.. யார் எலிஃபென்ட்..?”

இடையில் நுழைந்த ரவி கெத்தாக “இது தெரியலையா.. பிள்ளை பெத்த அத்தனை பொண்ணுங்களும் எலிஃபென்ட் தான்..” என்று யாழினியை மேலிருந்து கீழ் வரை பார்த்து சிரிக்க..

பல்லை கடித்தபடி “ரவி.. பொண்ணுங்க நாங்க தானே கஷ்டப்பட்டு பிள்ளை பெத்துக்குறோம், அதனால கொஞ்சம் சதை விழும்தானே..”

“ஏன் ஆம்பளைங்க நாங்க கூட தான் பிள்ளை பெத்துக்குறோம்.. எங்களுக்கெல்லாம் சதை விழுதா என்ன..? நேத்து கூட என் ஃபிரெண்ட்.. அடுத்த பிள்ளை எப்போ மச்சான் பெத்துக்க போறேன்னு கேட்டான்..”

“மாமா.. நான் ஒருத்தி இங்க நொந்து போய் இருக்கேன்.. நீங்க கிண்டல் பண்ணி சிரிச்சுட்டு இருக்கீங்க..” என்று மினி பொங்க

“நான் என்ன செய்ய முடியும்..? ஏற்கனவே எனக்கு உங்க அப்பன் மீசையை கண்டா பயம்.. நீ வேற ‘எங்க அப்பா சொல்லுறதை தான் கேட்பேன்னு’ சொல்லிட்ட... உங்க அப்பா என்னடான்னா, அவரை மாதிரியே கெடா மீசையை வச்சுக்கிட்டு இருக்குற ஒருத்தனா பார்த்து புடிச்சு இருக்கார்.. பார்க்கவே டெரரா இருக்கு..” என்று உடலை குலுக்கி சொல்ல

அப்போது அங்கே வந்த பார்கவி “மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க.. நீங்க எல்லாரும் வெளியே போங்க, மினியை நான் கூட்டிக்கிட்டு வரேன்..” என்றதும்.. அனைவரும் மறுபேச்சு இல்லாமல் வெளியேறினர்.

மினியின் தாடையை பற்றியவர் “அழகா இருக்கேடா கண்ணு.. வா.. உனக்காக தான் எல்லாரும் காத்துக்கிட்டு இருக்காங்க..” என்று சொல்லியும், மினி நகராமல் கண்கலங்க நின்றிருக்க..

“அம்மாடி.. உன் அப்பா தேடிப் பிடிச்சு.. ஒரு குறையும் இல்லாம, அவர் மனசுக்கு ஏத்தாப்புல ஒரு மாப்பிள்ளையை கொண்டு வந்துருக்கார்.. நல்ல காரியம் நடக்குற நேரத்துல.. நீயேன் கண் கலங்குற..?”

குற்றம் சாட்டும் குரலில் “அம்மா.. ஃபெர்பெக்ட்டான ஆள் வாழ்க்கைக்கு

சரி வர மாட்டான்னு நீங்க தானே சொன்னீங்க..”

வியப்பாக “இதேதடி வம்பு..” என்று அதிர்ந்தவர்... கூடவே ‘அது நடந்த கல்யாணத்தை காப்பாத்திக்கிறதுக்கு சப்பைக்கட்டுன்னு சொன்னேனே.., அது உன் மண்டையில ஏறலையா..? வீணா மனசை போட்டு குழப்பிக்காதே.. நீயாவது பெத்தவங்க பேச்சை கேளு” என்று சொன்னவர்.. அவளை அழைத்துக்கொண்டு போய்.. அவளுக்கு என்று போடப்பட்டிருந்த இருக்கையில் அமர வைக்க.. அவளோ குனிந்த தலை நிமிராமல் அமர்ந்து இருந்தாள்.

“அட பொண்ணு என்ன குனிஞ்ச தலை நிமிராம இருக்கு... இந்த காலத்துல இப்படி ஒரு பொண்ணா..? என் தம்பிக்கு பெரிய இடமா பார்க்கணும்னு ஆசைப்பட்டேன்.. பரவாயில்லை.. தங்கமான பொண்ணு தான் அமைஞ்சு இருக்கு” என்று, நக்கலா.. கிண்டலா என்று புரியாத விதத்தில் ஒரு குரல் கேட்க..

“பொண்ணுக்கு மாப்பிள்ளை மோதிரம் போடட்டும்.. அப்புறம் லக்ன பத்திரிக்கை வாசிச்சிடலாம்” என அய்யர் உரக்க சொன்னார்.

அவள் அருகே நெருங்கிய ஒரு பெண்மணி.. நீண்ட ஆரத்தை அவள் கழுத்தில் போட்டுவிட்டு.. அவள் கன்னத்தில் இதழ் பதித்தவர் “நான் தான் உன் நாத்தனார்.. என் பேரு சங்கவி.. இப்போலேர்ந்து என்னை காக்கா பிடிச்சுக்கோ..” என்றவரை நிமிர்ந்து பார்த்தவள், மீண்டும் தலை குனிய.. அவள் கண்ணோரம் கண்ணீர் கரை கட்டியது.

“எழுந்திரு... என் தம்பி மோதிரம் போடணும்..” என்று அவர் அவளை நிற்க வைக்க.. அருகில் வந்த மாப்பிள்ளையிடமிருந்து பதட்டத்துடன் ஒரு அடி பின்னே விலகி நின்றவளின் பார்வை அவன் பாதத்தை விட்டு விலகவில்லை.. உடல் நடுங்க அப்படியே நின்றாள்.. மாப்பிள்ளை மோதிரத்தோடு கை நீட்டியும்.. அப்படியே கல் போல நிற்க..

அவனாகவே அவள் கையை பிடித்து மோதிரத்தை போட முயற்சி செய்தான்.. சட்டென முடிவெடுத்தவளாக ‘இந்த நிச்சயம் எனக்கு வேண்டாம்’ என்று சொல்லும் முடிவோடு..கரங்களை பின்னே இழுக்க.. அவனோ வலுக்கட்டாயமாக மோதிரத்தை போட்டுவிட்டு. “கேடு கெட்ட வாழ்க்கை வாழ வரியா பீரோ..?” என்று அவளின் காதோரத்தில் முணுமுணுக்க..

குப்பென முகம் மலர.. கண்ணீர் சிதற அவனை பார்க்க.. முகம் நிறைய மீசையுடன் சிரித்தபடி நின்றிருந்தான் ப்ரிதீவ்.. பக்கத்திலேயே மொத்த

குடும்பமும் புன்னகை முகத்துடன் இருக்க..

பதறியபடி “யே என்ன இது.. இ...இத நான் ஒத்துக்க மாட்டேன்..”

“பீரோ.. ஆனாலும் நீ ரொம்ப அழுத்தம்டி.. எல்லாரும் எவ்ளோ வெறுப்பேத்தியும் அசையலையே.. இங்க பாரு.. நல்ல வாழ்க்கை வாழலாம் வான்னு ஒழுங்கா கூப்பிட்டேன்.. ரொம்ப பிடிவாதம் பிடிச்சே..காதலிச்ச என்னைக் கெட்டவன்னு சொல்லி நீ வர மாட்டேனுட்டே.. ஆனா அதேசமயம், எங்கப்பா பாக்குறவன் கெட்டவனா இருந்தா, நானும் கெட்டவளா மாறி, கேடு கெட்டு வாழ்வேன்னு நீதானே சொன்ன.. இப்போ உங்க அப்பா பார்த்த அந்தக் கெட்டவன் நான் தான்.. மரியாதையா கேடு கெட்டு வாழ வா..!”

மெல்ல புன்னகை எட்டிப்பார்க்க “போடா..” என்றவள் “அப்பா.. இவர் உங்களை நல்லா ஏமாத்துறார்.. இந்த கல்யாணம் சரி வராது.. என்ன நடந்ததுன்னு தெரியாம இவனை போய்.. மாப்பிள்ளையா.... எப்படிப்பா..?”

மீசையை தடவியபடி “எல்லாம் தெரியும்மா.. மாப்ள எல்லாத்தையும் சொல்லிட்டார்.. இங்க பாரும்மா..பெரும்பாலான பெத்தவங்க யாரும் காதலுக்கு எதிர்ப்பு காட்டுறது இல்லை.. ஆனா எது காதல்னு தெரியாம அலைபாயுறீங்க பாருங்க, அதை தான் எதிர்க்குறோம்.. காதல் கல்யாணம் செஞ்சுக்கிட்டவங்க கூட காதலை எதிர்க்குறாங்க.. ஏன்..?

அவ்ளோ ஏன்.. நான் என் ஸ்டேஷன்ல எத்தனை காதல் கல்யாணம் செஞ்சு வச்சுருப்பேன்.. ஆனா நானே உன் அக்காவோட காதலை எதிர்த்தேன், ஏன்..? உங்க அக்கா.. அவ காதலை எனக்கு புரிய வச்சு இருக்கணும்.. அவ செய்யலையே.. வீட்டை விட்டு ஓடி போயிட்டா சரி ஆகிடுமா..?”

பார்கவியும் தன் பங்குக்கு, பிள்ளைகளுக்கு புரிய வைத்துவிடும் நோக்கில் “அதானே.. நீங்க காதல் என்ற ஒன்றை மட்டும் யோசிக்கிறிங்க.. ஆனா நாங்க அதை மட்டுமே பார்க்காம, கல்யாணத்துக்கு பிறகான வாழ்க்கை என்று பலதையும் யோசிச்சு, உங்களுக்கு எது சரின்னு பார்க்கிறோம்.. ஆனா அதை நீங்க எதிர்ப்புன்னு..” என்று பேசிக்கொண்டு இருந்தவரை தடுத்த ராமநாதன்...

பார்கவியிடம் கிண்டலாக “தங்கச்சி.. எனக்கும் பேச வாய்ப்பு கொடும்மா.. நீ மட்டும் ஸ்கோர் பண்ணினா எப்படி..?” என்றவர் மினியிடம்

“அம்மாடி.. அரேஞ்ட் மேரேஜ்னு வரும்போது, முன்னபின்ன தெரியாத ரெண்டு பேர் சேருறாங்க.. சோ.. அவங்களுக்கு பொறுப்பு அதிகம் ஆகுது.. பெத்தவங்க ஆசைப்பட்டு தேடித் தந்த வாழ்க்கை.. அதை நல்லபடியா தக்க வைச்சுக்க, எல்லார்கிட்டயும் நல்ல பேர் வாங்கணும் என்ற பதட்டம்.. இதெல்லாம் சேர்ந்து, கணவன் மனைவிக்குள்ள எழக்கூடிய ஈகோவை தொலைக்க வச்சுட்டு, ஒருத்தருக்குள்ள ஒருத்தரை காதலை தேட வைக்கும்.. அந்த தேடுதலுக்கு முடிவே இருக்காது. அதுவே வாழ்க்கையை சுவாரசியமா ஆக்கும்.. எங்களுக்குக் கிடைச்ச அதே சுவாரசியம் எங்கப் பிள்ளைகளுக்கும் கிடைக்கணும்னு நாங்க நினைக்கிறோம்.. அது தப்பா..?

பெரும்பாலான காதல் திருமணங்கள்ல என்ன நடக்குது..? முதல்ல காதலிக்கிறீங்க.. காதலை கண்டுப்பிடிச்சிட்டோம்ன்ற பெருமிதத்துல கல்யாணமும் பண்ணுறீங்க.. ஆனா சில மாசங்களிலேயே, ஏற்கனவே உண்டான காதலை தக்கவச்சுக்காம, தொலைச்சிட்டு.. உங்களுக்குள்ள ஈகோவை தேட ஆரம்பிக்கிறீங்க.. அது பின்னாலேயே ஓடி வாழ்க்கையை வீணடிக்கிறீங்க... ஆனா இப்படியெல்லாம் செய்யாம, உங்களோட உண்மை காதலை ப்ரூவ் பண்ணினா... பெத்தவங்க நாங்க வேண்டாம்னா சொல்ல போறோம்..?” என்றார் மென்மையாக.

“நீங்க சொல்லுறது உண்மைதான்ப்பா.. அது எனக்கு இப்போ புரிஞ்சதால தான் இவனை வேண்டாம்னு சொன்னேன்.. இப்போ நீங்களே இப்படி ஒரு முடிவு எடுத்துட்டீங்க.. ஏன்ப்பா?”

“இப்போ உன் கல்யாணத்துக்கு எப்படி ஒத்துக்கிட்டேன்னு தானே கேக்குற.... அதுக்கு ப்ரிதீவ் தான் காரணம். அவரோட குணம்.. அவர் இப்படித்தான்னு உனக்கு நல்லாவே தெரியும்.. சோ கல்யாணத்துக்குப் பின்னால உனக்கு ஏமாற்றம் வர வாய்ப்பு இல்லை.. அடுத்து உன் பிடிவாத குணம்.. உனக்கு எப்பவும் வளைஞ்சு கொடுக்க தெரியாது.. ப்ரீதிவ்வுக்கு உன்னை சமாளிக்கவும் தெரியும்., உனக்காக வளைஞ்சு கொடுக்கவும் தெரியும்.. இதைவிட வேற என்ன பொருத்தம் வேணும்..?

இந்த ஒரு மாசமா அப்பா உன்னை கவனிச்சிட்டே தான் இருந்தேன்.. உயிர்ப்பே இல்லாம.. ஜடம் மாதிரி இருந்தேடா..அதைப் பார்க்கப்பார்க்க என்னால தாங்கவே முடிலைடா. அதான் பழைய மினியை மீட்டுத் தரும்படி, உன்னை உயிராய் விரும்புற அவன்கிட்டயே உன்னை ஒப்படைச்சுட்டேன்..” என்றவர் நீளமாக பேசி முடிக்க..

கண் கலங்க கேட்டுக்கொண்டு இருந்த மினி.. ப்ரிதீவ்வை பார்க்க.. அந்த

நொடி அவன் கண்களில் இருந்த அன்பு மட்டுமே தெரிய.. மனம் மற்ற அனைத்தையும் மறந்து.. சில நொடி ஸ்தம்பித்து நின்றது.. பின் பார்வையை விலக்கியவள்.. அமைதியாக இருந்தாள்.

இதைத் தொடர்ந்து, நிச்சயதார்த்தம் இனிதே நடைபெற்றது.

பின் அவள் மெல்ல எழுந்து.. வீட்டின் பின் புறம் உள்ள தோட்டத்து திண்ணையில் அமர.. அவள் அருகே அமர்ந்து அவள் கூடவே அமைதியாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார் பார்கவி.

கொஞ்சநேரம் நிலவிய அமைதியை கலைத்தவள் "அம்மா.. ஒரே குழப்பமா இருக்கு...ஒரு மனசு ப்ரிதீவ் வேணும்னு சொல்லுது.. ஒரு மனசு வேண்டாம்னு சொல்லுது.. நான் என்ன செய்யட்டும்..? ப்ரிதீவ் செய்ததை என்னால மறக்க முடியுமா.. காலம் பூரா அது முள்ளா உறுத்துமே, அப்புறம் எப்படி சந்தோஷமா வாழுறது..?"

"மினி.., நிச்சயமா நீ சந்தோஷமா வாழுவ.. சந்தோஷமா இருக்கும் போது, ப்ரிதீவ் செய்தது எதுவும் நிச்சயம் உனக்கு நியாபகம் வராது.. ஆனா உங்களுக்குள்ளே சின்ன சண்டை வந்தா.. ப்ரிதீவ் தூக்கத்துல பினாத்தினது கூட நல்லா நியாபகம் வந்து தொலைக்கும்.. அதுக்கு ஒண்ணும் செய்ய முடியாது.. சண்டை போடும்போது சண்டை போடு.. சந்தோஷமா இருக்கும் போது சந்தோஷமா இரு..

ரெண்டையும் போட்டு குழப்பிக்காதே.. இந்த மனுஷ மனசு இருக்கு பாரு.., அது போல சுயநலமானது வேற எதுவும் இல்லை.. ப்ரிதீவ் உன் வாழ்க்கைல வேணும்னு மட்டும் யோசிச்சேன்னா.. உடனே உன்னோட மனசு,அந்த எண்ணத்துக்கு சாதகமா ஆயிரம் விஷயத்தை அள்ளிக் கொடுக்கும்.. நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா வாழுறதுக்கு அது போதும்.." என் சொல்லிவிட்டு சிரிக்க.. அவர் சிரிப்பு மினியையும் தொத்திக் கொண்டது.

இங்கே ஹாலில் அனைவரும் மினியின் வரவுக்காக காத்திருக்க.. கோபியும் ராமநாதனும் அவர்களுக்குள் பேசிக்கொண்டு இருக்க.. ஷைலஜா கோபியின் தோளில் சாய்ந்தபடி சிந்துவிடம் பேசிக்கொண்டு இருந்தாள்.

ப்ரிதீவ்வுடன் பேசிக்கொண்டு இருந்த ஜனா.. பார்வையால் ஷைலுவை விழுங்க.. அந்த நேரம் அவள் பார்வை ஜனாவை தாண்டிச்சென்று, பின் அவன் மேல் வந்து நிலைக்க.. "என்கிட்டேயும் தோள் இருக்கு.." என்றான் உதட்டசைவில்..

ஷைலு வெட்கத்தோடு.. அவனை அவள் அருகே அமரும்படி கண்ணை காட்ட... இருவரையும் மாறி மாறி பார்த்த ப்ரிதீவ்..

“பக்கிங்களா.. பிள்ளை பெத்த பின்னாடியும் கூட உங்க ரொமான்சை நிறுத்த மாட்டீங்களா..?” என்று பல்லை கடித்தான்.

அந்நேரம் சந்தோஷமாக உள்ளே வந்த பார்கவி.. அனைவரையும் சாப்பிட கூப்பிட.. பெரியவர்கள் சாப்பிட போனார்கள்.

மினி தோட்ட படிக்கட்டில் நின்று யாரிடமோ பேசிக்கொண்டு இருந்தாள்.. அவளை கண்டதும் ப்ரிதீவ் கண்களில் மின்னல் தெறிக்க.. தனது செல்லை ஜனாவிடம் கொடுத்தவன், ரவியிடமும் ஏதோ சொல்ல.. இருவரும் யோசனையுடன் தலையசைத்தனர்.. ப்ரிதீவ்வோ மினியை நோக்கி ஓடினான்.

தன்னை நோக்கி ஓடிவருபவனை “இந்த லூசு எதுக்கு இப்படி ஓடி வரான்..?“ என்று புரியாத பார்வை பார்க்க.. அவனோ அவளை நெருங்கி.. மூச்சு வாங்க நின்றவன், எதுவும் பேசாமல் திரும்பி ஜனாவுக்கும் ரவிக்கும் ஜாடை காட்ட.. ரவி, ‘அய்யையோ ஆனந்தமே.. நெஞ்சுக்குள்ளே ஆனந்தமே’ என்ற கும்கி படப்பாடலை ஓட விட.. ப்ரிதீவ் தலைகால் புரியாமல் குதிப்பது போல குதித்து ஆடியபடி ஜனாவை நோக்கி ஓடினான்.. ஜனாவோ அதை வீடியோ எடுத்தான்.

ஜனாவின் அருகே வந்தவன் “பாஸ்.. ஒழுங்கா எடுத்தியா..?” என்று கேட்டபடி போனை வாங்க..

புரியாதவனாக “நீ சொன்ன மாதிரி தான் எடுத்தேன்.. ஏன்..?” என்று ஜனா கேட்கவும்... மற்றவர்கள் அவர்களை சூழ்ந்துக்கொள்ள... மினியோ ஒன்றும் புரியாமல்.. ஆர்வம் தாங்காமல் “என்ன... ஏன் இவர் லூசு மாதிரி ஓடி வரார்.. திரும்ப ஓடுறார்.. இங்கே என்ன நடக்குது..?“

ப்ரிதீவ்வோ போனில் இருந்து கண்ணை விலக்காமல் “பீரோ.. வா வா.. ஒரு செம வீடியோ எடுத்து இருக்கேன் பாரேன்..” என்றவன் ரவியின் கையிலிருந்த போனை வாங்கி, கும்கி பாடலை ஓட விட.. அதில் விக்ரம் பிரபு யானைக்கு முன் தலைகால் புரியாமல் குதித்துக்கொண்டு வர..

ஷைலஜா “இது கேட்டு கேட்டு சலிச்சுப்போன பாட்டு.. இதுல என்ன இருக்கு..?” புரியாமல் கேட்க

“மக்கு.. மக்கு.. இந்த வீடியோவை பாரு.. எவ்ளோ பெர்ஃபெக்டா

வந்துருக்கு” என்று சொல்லி ஜனா எடுத்த வீடியோவை காட்ட.. அதில் ‘அய்யய்யோ ஆனந்தமே’ என்று பாடல் ஒலிக்க.. மினி பின்னே அசைந்து வர... ப்ரிதீவ் தலைகால் புரியாமல் சந்தோஷமாக குதித்து ஓடிவருவது போல இருக்க... பார்த்த அனைவரும்,முதலில் திகைத்து,பின்னர் அவனை முறைக்க ஆரம்பித்தனர்.

கேள்வியாக எல்லோரையும் பார்த்த ப்ரிதீவ்.. “என்னப்பா செமையா வந்துருக்கு.. யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டேங்குறீங்க..?”

“ம்ம் நீ யானை மிதிச்சு சாவியா.. இல்லை மினி மிதிச்சு சாவியான்னு யோசிக்கிறோம்.. சகலை, உனக்கு நாக்குல சனி.. எல்லாரும் வாயில வடை சுடுவாங்க.. நீ வடை சட்டியையே வாயில கவ்விட்டு இருக்க.. பார்த்துடி..!” என்று சொல்லிவிட்டு ரவி குலுங்கி குலுங்கி சிரிக்க..

“டேய்.. நான் உனக்கு கும்கி யானை மாதிரியா இருக்கேன்..? உன்னை போய் மன்னிச்சேன் பாரு.. நீயெல்லாம் திருந்தவே மாட்ட..” என்று மினி பொரிய ..

“பீரோ.. பீரோ.. உன்னை நீ ஏன் யானைன்னு நினைக்குற..? லஷ்மிமேனன்னு நினைச்சுக்கோ..” என்று அவளிடம் கெஞ்ச துவங்கினான்.

“என்ன நினைக்க..? பக்கி.. இருடி... நாளைக்கு ‘பீரோ விழுந்து நசுங்கிய பன்னு’ன்னு நியூஸ் வந்துடும் ஜாக்கிரதை.. “

ஹிஹி என்று அசடு வழிய சிரித்தவன்.. “ரொம்ப கோவமா மினி..?”

“செய்யுறதையும் செய்துட்டு, கேட்குறதை பாரு.. இருடா உன்னை அப்புறம் வச்சுக்குறேன்..”

வழிசலாக “அதுக்கு தானேடி மாமன் இவ்ளோ போராடுறேன்..” என்றவனிடம்.. “உனக்கு இன்னொரு சோடாமாவு பஜ்ஜி ரெடி பண்ணிட வேண்டியது தான் போல..” என்றாள்.

“ஐயோ மினி... பஜ்ஜியா.... வேண்டாம்டி... மாமன் பாவம்...”

தலையில் அடித்துக்கொண்டு அவனை கண்டு கொள்ளாதவளாக யாழினியிடம்..

“இவனைத்தான், பாவம்.. அமெரிக்கா போறான்னு வருத்தப்பட்டியா..?”

“ஆமா.. ஹனிமூனுக்கு அமெரிக்கா போறாராம்.. கூடவே உன்னையும்

கூட்டிட்டு போறேன்னு சொன்னார், அதான் பாவம்னு நினைச்சேன்.. இப்போ எனக்கு நீ தான் பாவம்னு தோணுது..” என்ற யாழினி ப்ரிதீவ்வை முறைக்க ..

“அய்யய்யோ தெய்வமே.. அவளை நல்லா ஏத்திவிட்டு, ஹனிமூன் போகணும்னு ஆசைப்பட்டவனை தனிமூன் போக வச்சுடாதீங்க..”

“அதையெல்லாம் இந்த மாதிரி லூசு வேலை பண்ணுறதுக்கு முன்ன யோசிச்சு இருக்கணும் பாஸ்” என்று சொல்லி சிரித்த ஜனாவை பார்த்து பல்லைக் கடித்தவன்....

“பாவிங்களா.. ஹனிமூனை சனிமூனா ஆக்காம விட மாட்டீங்களா..? இந்த ஏழரை, ஏற்கனவே பிரேக் டான்ஸ் ஆடுவா.. நீங்க வேற “ என்றவன் பார்வை மினி மீது பட.. “அய்யய்யோ” என்று தலையில் கை வைத்தவன்..

“மினி.. மினி செல்லம்..மினி குட்டி..மினிம்மா..டங் ஸ்லிப் ஆகிடுச்சு..இல்லேல்லே நானே ஸ்லிப் ஆகிட்டேன்.. மன்னிச்சுடேன்” என்று சோப் போட

“நீ என்னைப்பத்தி என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே..? உனக்கு எல்லாமே கிண்டலா..?” என்று மினி அவனை வறுக்க துவங்கினாள்.

“இப்போ தான் அவ சமாதானம் ஆனா.. அதுக்குள்ளே இவனுக்கு இந்த அலம்பல் தேவையா .?” என்று ஜனா புலம்பலாக சொல்ல

“நீ வேற.. பயபுள்ள அதுல எல்லாம் கில்லி.. பொத்துன்னு அவ காலுல விழுந்துடுவான்.. பாரேன்” என்று ரவி கிண்டலாக சொல்லவும்...

அப்போது குழந்தையின் அழுகுரல் கேட்க.. ஜனா வேகமாக உள்ளே போனான்.. பின்னாடியே ஷைலுவும் தொடர... அதற்குள் பார்கவி பிள்ளையை கவனித்துவிட..

ஜனா அப்படியே தோட்டத்தின் பக்கம் போனவன்.. மனம் நிறைந்த நிம்மதியுடன் விளையாடும் குருவிகளை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.. அவனை கேள்வியாக பார்த்தபடி வந்த ஷைலஜா...

“மாமா.. இங்கே என்ன பண்ணுறீங்க..? நேரம் ஆகுது.. இன்னைக்கு அன்னி சிஸ்டரை பார்க்க போகணும், கெவின் நமக்காக காத்துட்டு இருப்பான்..” என்றவளை

மனம் நிறைந்த காதலுடன் ஷைலுவைப் பார்த்தவன் “என்

மனசாட்சியோடு பேசிட்டு இருந்தேன்.அங்கே போக நேரம் இருக்கு.. சாயங்காலம் தானே வரோம்னு சொன்னேன்.. பொறுமையா போகலாம்" என்றவன் மையலுடன் அவளை படிக்கட்டின் மறைவுக்கு இழுக்க.. அவளோ "அய்யோ மாமா" வென வெட்கத்தில் சிவந்தாள்.

இங்கே ப்ரிதீவ்வின் மன்னிப்பு கேட்கும் படலம் முடியவில்லை "பீரோ.. விளையாட்டா செய்யுறதுக்கு எல்லாம் மூஞ்சியைத் தூக்கி வச்சுக்குற.. இங்க பாரு.. உன்கிட்ட சொன்ன மாதிரியே எல்லாம் செஞ்சுட்டேன்.. நமக்கு இப்போ நிச்சயம் கூட முடிஞ்சிடுச்சு..

நீ சொன்ன இல்ல 'சித்திக்கு மீசை முளைச்சா சித்தப்பான்னு' கூப்பிடுறேன்னு.. இப்போ பாரு மாமன் உனக்காக கிடா மீசை கூட வளர்த்து இருக்கேன்.. மாமான்னு ஒரு வார்த்தை கூப்பிட்டியா .?அதை விட்டுட்டு மூச்சு விடாம திட்டுற"

அவன் முகத்தை எரிச்சலாக பார்த்தவள் "போடா லூசு.. இந்த மீசை உன் முகத்துக்கு நல்லாவே இல்லை.. இதுல ஐயாவை மாமான்னு வேற கூப்பிடணுமாம்" என்றவள், கோபத்தில் மீசையை இழுக்க... அது அவள் கையோடு வந்தது. திகைப்பாக அவனை பார்த்தவள் "டேய்.. என்னதிது?"

அசடு வழிய மேலுதட்டை சொறிந்தபடி.. "அப்பாடா நல்லவேளை.. அதை எடுத்துட்டே... அரிப்பு தாங்கமுடியாம கஷ்டப்பட்டுட்டு இருந்தேன் .."

"ஃப்ராடு ஃப்ராடு.. உன் வாயில உண்மையே வராதா..?"

"என்னை என்ன பண்ண சொல்லுற..? நானும் எவ்ளோ ட்ரை பண்ணிட்டேன், மீசை வளரவே மாட்டேங்குது.. ஒண்ணு உங்க அப்பனை மீசையை ட்ரிம் பண்ண சொல்லு.. இல்ல, அதை இப்படி வளர்க்க, என்ன உரம் போடுறாருன்னு கேட்டு சொல்லு.." என்றவனை கோபத்தோடு அடிக்க துரத்த... எகிறி குதித்து பிரீதிவ் ஓட... மினி துரத்த.. அப்போது அங்கே வந்த ராமநாதன் மீசையை தடவியபடி..

"மினி.., உள்ளே போ... கல்யாணத்துக்கு முன்னே என்ன இதெல்லாம்..?" என்று கேட்கவும்.. ப்ரிதீவ்வை முறைத்தபடி உள்ளே போனாள் மினி.

சோம்பலாக வெளியே வந்த ப்ரிதீவின் பார்வையில் ஜனா ஷைலு பட "அடேய் பாவி.. கிழப்பயலே.. விறைப்பா இருந்துக்கிட்டு உன்

ரொமான்ஸ் தாங்கலை.. கிடைக்கிற கேப்ல எல்லாம் வெடியை கொளுத்துற.. இளம் கண்ணன்.. நானே ஒரு கிஸ்ஸுக்கு கூட வழியில்லாம தவிக்கிறேன்.. மரியாதையா இங்கே வாடா" என்று ஜனாவை தன்புறம் இழுக்க..

ஜனாவோ சிரிப்புடன் ஷைலுவின் கையை விடாமல் "அது என்னடா இளம் கண்ணன்..?"

மிரட்டலாக "கன்னிக்கு ஆண்பால்.. போதுமா..? ஷைலு.., நீ உள்ளே போ.. இனிமே என் கல்யாணம் முடியுற வரைக்கும் உங்களை ஒண்ணா பார்க்க கூடாது.."

"டேய்.. எள்ளு தான் எண்ணெய்க்கு காயணும்.. எலிப் புழுக்கை எதுக்கு காயணும்..?"

"ஹப்பாடா.. கதையில இன்னும் இந்த டையலாக்கை சொல்லலையேன்னு ரொம்ப தவிச்சுப்போய்ட்டேன்.. அது சரி...இந்த கேப்ல நீ பத்தாயிரம் கிஸ் கொடுத்துருப்ப.. அது போதும். ஷைலு, நீ உள்ளே போம்மா.." என்று சொல்ல..

"டேய் அதெல்லாம் ஒண்ணுமே நடக்கலை.. நாங்க புருஷன் பொண்டாட்டிடா.. உனக்கு ஏன் வேகுது?"

"அப்படியா..? இப்போ என்ன உனக்கு, கிஸ் வேணும் அதானே..? நானே தரேன் வா.. வா " என்றவன் உதட்டை குவித்தபடி ஜனாவை நெருங்க.

"சீ.. சீ.." என்றவாறே ஷைலு உள்ளே ஓடினாள்.. "டேய் அறிவு கெட்டவனே.. பக்கி அதை அந்த சுவத்துக்கு கொடு.." என்று கடுத்தபடி, ஷைலுவை ஜனா துரத்த..

"இவன் பெரிய பத்தனன்(பத்தினிக்கு ஆண் பாலாம்).. சரித்திரத்துல கண்ணகிக்கு அடுத்த இடத்தை பிடிச்சுடுவான் போலவே.. என்னையா வெறுப்பேத்துற.., இரு இரு உன்னை விட மாட்டேன்டி" என்றபடி ப்ரிதீவ் ஜனாவை துரத்த..

ஷைலு மினியிடம் நடந்ததை பத்தவைக்க.. "குத்துக்கல்லு மாதிரி நான் இங்க இருக்கேன்.. கிஸ்ஸடிக்க நீ வேற ஆள் தேடுறியா..? அதுவும்.. சே" என்று விட்ட கோபத்தோடு ப்ரிதீவ்வை துரத்த துவங்கினாள் மினி.

பெரியவர்கள் அனைவரும் ஹாலுக்கு வர.. பார்கவியோ "கடவுளே..

உங்க செயின் ரியாக்ஷனை நிறுத்தவே மாட்டடீங்களா..?" என்று புலம்ப..

ராமநாதனோ வழக்கம் போல மீசையை தடவிக்கொண்டே.."காலம் பூரா உங்களுக்கு பஞ்சாயத்து செய்யவே நேரம் போயிடும் போலவே.." என்று உறும...

அவரை நெருங்கிய ப்ரிதீவ்.. அவர் காலருகே மண்டி போட்டு, அவர் கைகளை பிடித்தவன் கண்கலங்க "மாமா.., மினியை எனக்கு தந்துட்டீங்க.. ரொம்ப தேங்க்ஸ்.. நீங்க எனக்கு இன்னொண்ணும் செய்யணும், செய்வீங்களா..?"

குரல் கரகரக்க "சொல்லுப்பா.. என்ன செய்யணும் சொல்லு.. நீ கேட்டு செய்யாம இருப்பேனா.."

"அப்போ இந்த மீசையை ட்ரிம் பண்ணிடுங்க.." என்றவனின் யாசிப்பைக் கேட்டு, சுற்றியிருந்தோரின் கொல்லென்ற சிரிப்பு சத்தம் அந்த வீட்டை அதிர வைக்க, அதில் ஆனந்தம் மட்டுமே இருந்தது.

எத்தனை நிறம் மாறினாலும்.. கடைசியில் என்றும் என் நிறம்.. மாறாத வெண்மையே என்றபடி.. மேற்கில் மெல்ல எட்டிப்பார்க்க ஆரம்பித்தது நிலவு. குளிர் காற்றும் மெல்ல வீசியது.

அப்போது கவனத்தை கலைப்பது போல தன்னை யாரோ கூப்பிடுவதை உணர்ந்த ஜனா.. யார் என்ற யோசனையுடன் வீட்டுக்கு வெளியே வந்து பார்க்கவும்.. அங்கே யாருமே இல்லாதிருக்கவும் குழம்பியவனாக மீண்டும் வீட்டுக்குள் செல்ல முற்பட.. "ஜனா" என்ற குரல் மீண்டும் ஒலித்தது.. யார் என்று தேடியவன் யாரையும் காணாமல் மெல்ல "யாரது..?" என வினவினான்.

சற்று வேகமான தென்றல் அவனை கடக்க... காற்றின் ஓசையாக.. "என்னை தெரியலையா...? நான் தான் காதல்.. ஆரம்பத்துல இருந்து உங்க எல்லார் கூடவும் நானும் தொடர்ந்து வந்துக்கிட்டு இருக்கேனே.. தெரியலையா...? உனக்கு காதல்னா என்னன்னு சொல்லிக்கொடுக்க வந்துருக்கேன்.. காதலைப் பத்தி நீங்க எல்லாரும் ஆளுக்கு ஒரு கருத்து சொன்னீங்க.. ஆனால் என்னைப்பத்தி, என்கிட்ட தானே முதல்ல கேட்டு இருக்கணும்..?" என்று கேட்க..

யோசனையாக 'ஆமாம்' என்பது போல தலையசைத்தான்.

“காதல் ஐந்தாவது பூதம்.. நான்கு பூதங்களின் குணங்கள் என்னென்ன தெரியுமா? நீரின் வளைந்துக்கொடுக்கும் தன்மை.. நெருப்பின் பரிசுத்தம், காற்றின் அரவணைப்பு, கெட்டதை தன்னுள் புதைத்து நன்மையை வெளிப்படுத்தும் நிலத்தின் குணம்.. இந்த நான்கு குணத்தையும் உள்ளடக்கியது தான் காதல்.. ஐந்தாவது பூதமாகிய வானம்.. அது தான் காதல்.. எட்டாத உயரத்துல இருந்தாலும்.. வானமும் கைக்கு எட்டும் தூரமே..!

இப்போ நீ தேடுற அன்பு உன்கிட்ட நிறைந்து இருக்கு.. என்கிட்ட இருந்த காதலை உன்கிட்ட ஒரு துளி விட்டு போகிறேன்.. விடைபெறுகிறேன் நண்பனே” என்றது காதல்.

தவிப்பாக “ஐய்யோ.. என்னை விட்டுட்டு போறியா.. ஏன்.. அப்புறம் நான் எப்படி...?”

“ஏன் ஜனா இந்தப் பதட்டம்...? நான் என்ன காசா.. பணமா... பொருளா.. குறைந்து போக..? உன்கிட்ட நான் கொடுத்த காதலை பெருக்கும் வித்தையை இப்போ நீ நல்லாவே கத்துக்கிட்ட.. அது உன்னை சுற்றி என்றென்றும் நிலைத்து இருக்கும்.. அன்பை உணராமல்... அதை பகிரவும் தெரியாமல் தேடியலைந்த உனக்கு.. இப்போ அதை அடையுற வழி தெரிஞ்சுடுச்சே.. அதுவே எனக்கு நிறைவை தருது... .

இப்போ எனக்கு அடுத்த காதல் ஜோடியை குழப்புற வேலை நிறைய இருக்கு நண்பனே.. சோ உன்னிடம் இருந்து விடைபெறுகிறேன்” என்று ஜனாவிடமிருந்து காதல் சந்தோஷமாக விடைபெற்றது.

ஆனந்த குயிலின் பாட்டு தினம் எங்களின் வீட்டுக்குள்ளே
ஆனந்த குயிலின் பாட்டு தினம் எங்களின் வீட்டுக்குள்ளே
பூக்களில் நனையும் காற்று தினம் எங்களின் தோட்டத்திலே
கிளிகளின் கூட்டுக்குள்ளே புது உலகம் பிறந்ததே
அன்பு கொண்ட நெஞ்சுக்குள்ளே ஒரு வானம் விரிந்ததே
கனிகள் தித்திப்பா கவிதை தித்திப்பா
அது அன்பைவிட தித்திப்பா

பூமி எங்கும் கண்டதில்லை பாசத்தை உன்போலே
வேறெதுவும் தேவை இல்லை அன்புக்கு முன்னாலே

நெஞ்சுக்குள்ளே பூ மலரும் வீட்டுக்குள் வந்தாலே
நிம்மதியில் கண்வளரும் பாட்டுக்கள் தந்தாலே
இந்த சொந்தங்கள் போதுமே எங்கள் இன்பங்கள் கூடுமே
அன்பென்னும் தீபம் ஏற்றிய வீடும் தெய்வதின் ஆலயம்தான்
வீடு என்றால் மோட்சம் என்றால் வீடு அன்றோ நேசத்திலே

நிறம் மாறாத நிலவு நிறைந்தது...!!!

நிறம் மாறும் நிலவே...

எழுத்தாளர்

Gloria – க்ளோரியா

eBook Published by MyAngadi

eBooks are available at
www.MyAngadi.com/ebooks/